கலைஞரின்
கடிதங்கள்



22

27.02.1992 - முதல்
02.10.1992 - வரை

சீதை பதிப்பகம்

தி.மு.க. அறக்கட்டளை
போராசிரியர்
அன்பழகன் நூல்
நிலையம்
அறிவாலயம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 22

27.02.1992 - 02.10.1992

தலைவர் கலைஞர்



சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
(சாய் பாபா கோவில் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
(SAI BABA TEMPLE BACK SIDE)
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்


KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
(கலைஞரின் செயலாளர்கள்)
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பொதுநிலையம்
அண்ணா நூலகம்
சேகரிப்பு
சென்னை-18



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

தி.மு.க. அறக்கட்டளை
பொருளாளர்
அண்ணா அறிவாலயம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்”
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். –

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் – மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
1883. பக்தியின் பெயரால் பகல் வேஷம்!	27-02-1992	23
1884. பாமா தோட்டத்துப் பாரிஜாத மரம்!	03-03-1992	27
1885. இவருக்கு நீதி கிடைக்குமா?	05-03-1992	32
1886. தென்னை மரத்தில் புல் பறித்த கதை!	11-03-1992	35
1887. தெளிவு எது? அழிவு எது?	12-03-1992	40
1888. தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை	13-03-1992	44
1889. தகாப் போக்கும் - ''தடா''ப் போக்கும்!	21-03-1992	55
1890. அறிவுபூர்வமான சிந்தனையும் ஆக்கபூர்வமான அணுகுமுறையும் தேவை!	22-03-1992	60
1891. ஊழல் ஆட்சியென ஊருக்கு உணர்த்துவோம்!	23-03-1992	64
1892. கவலை தெரிவிப்பதா? கண்டனக் குரல் எழுப்புவதா?	25-03-1992	71
1893. அந்த நாள் நினைவும் வந்ததே!	26-03-1992	74

1894. அந்தப் பெயரை வைத்துக்கொண்டா? அந்தோ! மிகப் பரிதாபம்!	27-03-1992	81
1895. அடுத்து தீர்ப்பு என்ன? அதையும் எதிர்பார்க்கிறது நாடு!	28-03-1992	86
1896. அவசரக் கோலம்; அலங்கோலமாகும்!	30-03-1992	100
1897. உண்மைகள் வெளிச்சத்திற்கு வரவேண்டும்!	02-04-1992	106
1898. மக்கள் பிரச்சினைகளை முன் வைப்போம்!	06-04-1992	109
1899. அன்பு இதயங்களின் வாசல்களின் முன்னால்!	07-04-1992	114
1900. பாவம்; வெளியில் சொல்லத்தான் தயக்கம்!	08-04-1992	118
1901. முத்துப் பல்லக்குதான் ஜோடிப்பார்களா?	09-04-1992	124
1902. நான் தயார்! நாடு தயாராகட்டும்!	11-04-1992	128
1903. தி.மு.க. வீட்டுக்கு விளக்கு - நாட்டுக்குத் தொண்டன்!	13-04-1992	135
1904. கல்கத்தா முதல் திருப்பதி வரையில்!	16-04-1992	143
1905. இரவில் வந்தது சுதந்திரம்; இன்னும் விடியவே இல்லை!	17-04-1992	146
1906. ‘‘குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை’’!	22-04-1992	149
1907. ஒரே நாளில் ஆயிரம் கூட்டங்கள்!	24-04-1992	153
1908. வஞ்சக வலை அறுபட வரட்டும் நீதி விசாரணை!	26-04-1992	157

1909. உட்பகையால் உள்ளதாம் கேடு!	28-04-1992	164
1910. கொடிய சட்டம்! கோமாளிச் சட்டம்!	29-04-1992	168
1911. இரட்டைக் குழல் துப்பாக்கி - இதுதானோ?	01-05-1992	172
1912. ஊழலோ ஊழல்! ஸ்பிக் ஊழல்!!	08-05-1992	177
1913. தீர்மானிப்பது யார்? அதுதான் தெரியவில்லை!	19-05-1992	181
1914. உடன்பிறப்பே, என் உயிரே! வருக! வருக!	31-05-1992	184
1915. பகிரங்க ஊழல் குற்றச்சாட்டு - பட்டியல் மேலும் நீளும்!	01-06-1992	190
1916. சரித்திரம் திரும்பாமலா போய்விடும்; திரும்பும்!	19-06-1992	194
1917. நமது பாசறைகள் தயாராக இருக்கட்டும்!	20-06-1992	199
1918. ஜூலை 3 முதல் தொடங்கிடுக தொண்டினை!	30-06-1992	203
1919. துளைக்கிறது நெஞ்சை; துரைராசாவின் கடிதம்!	11-07-1992	206
1920. இந்தியா எங்கே போய்க்கொண்டிருக்கிறது?	13-07-1992	211
1921. வேதனையின் விளிம்பில் விவசாயிகள்!	15-07-1992	216
1922. பாலைவனத்தில் ஒரு பேரீச்சை மர நிழல்!	16-07-1992	219
1923. இந்து கூட்டத்தாருக்கு எதிலே நாட்டம்?	18-07-1992	225

1924. கூட்டுறவுத் தேர்தலும் காட்டு தர்பாரும்!	20-07-1992	229
1925. ஆகஸ்டு 7 - அணிவகுப்பு! ஆர்ப்பாட்டம்!	05-08-1992	233
1926. சேரன் செங்குட்டுவன் தீட்டும் சிலப்பதிகாரம்!	07-08-1992	237
1927. நீரில் மிதந்த நீலோற்பலங்கள்!	14-08-1992	241
1928. காண இருக்கும் களங்களுக்கு இது பாசறை!	17-08-1992	246
1929. ஊழல் அத்தியாயம் (1) அலங்கோல ஆட்சியின் அநியாயக் கதை!	18-08-1992	251
1930. ஊழல் அத்தியாயம் (2) எம்.ஜி.ஆரின் பக்தனை; பழிவாங்கிய படலம்!	19-08-1992	258
1931. ஊழல் அத்தியாயம் (3) சொக்கலிங்க புராணம்	20-08-1992	265
1932. ஊழல் அத்தியாயம் (4) உடையாரிடம் ஒப்படைத்த காண்டம்!	21-08-1992	273
1933. ஊழல் அத்தியாயம் (5) அமைச்சரின் சாபவிமோசனம்	24-08-1992	281
1934. ஊழல் அத்தியாயம் (6) திராவக திருவிளையாடல் புராணம்!	25-08-1992	287
1935. ஊழல் அத்தியாயம் (7) ஆளுங்கட்சி ஆடிய ருத்ரதாண்டவம்	26-08-1992	293

1936. ஊழல் அத்தியாயம் (8) மதுவிலக்குச் சட்ட மகாத்மியம்	27-08-1992	298
1937. ஊழல் அத்தியாயம் (9) ஆம்னிபஸ் பேரம் ஆரம்ப காண்டம்!	28-08-1992	304
1938. வீரத் திருவிளக்கே! என் விழி நிறைந்த ஒளி விளக்கே! வெற்றிச் சுடர் விளக்கு ஏந்திடப் புறப்படு!	30-08-1992	308
1939. கடமையாற்றுவீர்! களம் காண்பீர்!	31-08-1992	313
1940. தீரர்களே! என் வீரவாழ்த்து ஏற்பீர்!	01-09-1992	316
1941. எழிலுக்கு எழில் சேர்க்க என் உயிரே! வா!	05-09-1992	318
1942. ஏழு கடல் இங்கே சங்கமமாகட்டும்!	09-09-1992	324
1943. பேரணியை மட்டுமா? இந்தப் பேரியக்கத்தைக் கூடத்தான்!	10-09-1992	329
1944. அழைக்கின்றார்; அழைக்கின்றார் அண்ணா!	11-09-1992	332
1945. அழைக்கின்றேன் உன்னை; புறப்படுக சென்னை!	12-09-1992	336
1946. கழகப் பேரணி; கட்டுப்பாடு காத்திடும் பேரணி!	13-09-1992	341
1947. விடைபெறும்போது கிடைத்திடும் முத்தம்!	15-09-1992	346
1948. மனிதச் சங்கிலி அறப் போராட்டம் ஏன்?	20-09-1992	350

1949. கூண்டு கண்டேன்; குதூகலம் கொண்டேன்!	23-09-1992	354
1950. அதாகப்பட்டது, அந்தக் காலத்திலே ஒரு ராஜா!	24-09-1992	358
1951. ஒரு பூதக்கண்ணாடியுடன் போய் வரவும்!	26-09-1992	363
1952. இதுதான் இன்றைய தமிழ்நாடு!	27-09-1992	369
1953. அறப்போருக்கான கொடி உயரும்!	28-09-1992	374
1954. தி.மு. கழகம் ஏந்திய தீபச் சுடர்!	30-09-1992	379
1955. முகமூடிகளும் - மொட்டைக் கடிதாசுகளும்!	01-10-1992	388
1956. இன்னும் இந்த ஆட்சி எத்தனை நாளைக்கு?	02-10-1992	394

1883. பக்தியின் பெயரால் பகல் வேஷம்!

உடன்பிறப்பே,

உண்மையிலேயே பக்தர்களாக இருப்பவர்களை விட, பக்திமான்களைப் போல நடிப்பவர்கள் ஆபத்தானவர்கள்! பக்தர்களாக இருப்போர் தங்களைத்தான் ஏமாற்றிக் கொள்கிறார்கள். ஆனால் பக்தர்கள் போல நடிப்போர், உலகத்தையே ஏமாற்றுகிறார்கள்.

இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள்தான் இன்றைக்குத் தமிழக ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருக்கிறார்கள்.

சுட்ட செங்கல்லைத் தாம்பாளத்தில் வைத்து, தூய வெள்ளைத் துணியால் மூடிக் கொஞ்சம் தண்ணீரையும் தெளித்தால் ஆவி எழும்! அந்த ஆவி எழும் தாம்பாளத்தை ஆண்டவனின் சிலைக்கு நேராகத் தூக்கிக் காட்டிவிட்டு சுடச் சுடச் சுவையான பொங்கல் செய்து படைத்தேன் என்று ஊர்மக்களை ஏமாற்றும் புரோகிதர்களைப் பற்றி, பூசாரிகளைப் பற்றிக் கிராமப் புறத்தில் சின்ன வயதிலேயே நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

அந்தப் புரோகிதர், பூசாரிகளை விடப் புத்திசாலித்தனமாக, ஆண்டவனை நம்பும் அடியார்களை, ஏமாற்றும் வித்தை கற்றவர்கள் தான் இன்று இந்தத் தமிழ்ப் புவியை ஆளவந்துள்ளவர்கள்!

குடந்தையில் மகாமகம் நடக்கிறதென்றால் பக்த கோடிகள் செல்லட்டும். பண்டார சன்னதிகள் தருமபுரத்தார், திருவாவடுதுறையார், திருப்பனந்தாள்காரர் செல்லட்டும். பல்வேறு மடங்களின் தலைவர்கள் செல்லட்டும். பெருங்கூட்டத்தைப் பாதுகாக்க அதிகாரிகள் காவல் துறையினர் சற்று அதிகமாகவே செல்லட்டும். இருபது வெள்ளிக் குடமெடுத்து அவற்றில் எங்கிருந்தோ கொணர்ந்த தண்ணீர் நிரப்பி, குளிப்பதற்கென்று தனியாக ஒரு கொற்றப் பந்தல் எழுப்பி, அதிலோர் திறந்த வெளிப் பீடத்தில் குந்திக்கொண்டு நீ பாதி நான் பாதி! எனத் தோழியர்

இருவர் ஆளுக்குப் பத்துக் குடம் பன்னீர் கலந்த ஜலத்தை(!) மாறிமாறி அபிஷேகித்துக் கொள்ளவும், அதனைக் காவல் காத்திடப் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட போலீசார் வேலி அமைத்து நின்றிடவும் ஒரு சர்க்காரே அங்கே போய் டேரா போட்டுக் கொண்டிருந்ததென்றால் - இதற்குப் பெயர்தான் பெரியார் வழி - அண்ணா வழியா? திராவிட இயக்கப் பரிணாம வளர்ச்சியின் தோற்றமா?

அரசாங்கம் அங்கு போட்ட ஆட்டத்தால் தானே நூற்றுக்கும் மேற்பட்டவர்களின் சுவாசக் குழாய்கள் கிழிந்து போயின! இருதயங்கள் நொறுங்கிப் போயின! ஒரு பெண்மணி அடித்த கூத்தால், முப்பதுக்கும் மேற்பட்ட பெண்மணிகளின் கண்ணின் கருமணிகள் அல்லவா மூடிப் போயின! மாமங்கக் குளத்தில் மிகுந்த மலர்களோடு சேர்ந்து பல மழலை மலர்களுமல்லவா மிதக்க நேர்ந்தது!

இந்த மகாமகக் கொடுமைகளுக்குக் காரணம், இந்த மாநிலத்துக் கோலேந்தியின் பக்திப் பரவச நாடகக் காட்சியின் பளபளப்பும் ஜிலுஜிலுப்புமதான் என்பதை எழுதாத பத்திரிகை கிடையாது! இயம்பாத பக்தர்கள் கிடையாது!

காலியான குடங்களைக் கோயில்களுக்கு அனுப்புவதில் பெரிய விளம்பரம்! போலியான பக்தியைக் காட்டி, புரோகிதர்கள் கைகளிலே அவைகளை ஏற்றிப் புகைப்படம் எடுத்துக் கொண்ட புதுமையே புதுமை!

குடங்களுடன் குருக்கள்மார், இருமருங்கிலும் - முன்னும் பின்னும் அணிவகுத்து நிற்கும் அற்புதத்தை, அய்யகோ! அண்ணாவும் அய்யாவும் இருந்து பார்த்திருந்தால் பதைத்திருப்பர்! பகுத்தறிவு என்ன ஆயிற்று என்று ஏற்படும் பதைப்பு அல்ல! எமது பெயரைப் பயன்படுத்திக் கொண்டு இப்படியொரு செப்படி வித்தையா? எனப் பதைத்திருப்பர்.

பேசாமல் அண்ணா பெயரையும், திராவிட என்ற பெயரையும் கட்சியிலிருந்து எடுத்து விட்டு, நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1986-ல் எந்தப் பேரவையைக் கலைக்கச் சொல்லி நீண்ட அறிக்கை விடுத்தாரோ, அந்த ஜெயலலிதா பேரவை என்ற பெயரையே வைத்துக் கொண்டால் யார் கேட்கப் போகிறார்கள்?

பேரவையே இன்று ஜெயலலிதா பேரவையாகத் தானே இருக்கிறது!

இதைப் படித்தவுடன்,

என் பக்தியும், பிரார்த்தனையும், வழிபாடும், குடமுழுக்கும் வெறும் நாடகமா? எனச் சீறக்கூடும்! சினங் கொப்பளிக்கக் கேட்கக் கூடும் அரியணையில் அமர்ந்துள்ள அரசியார்!

வேறென்னவாம்? என்று விழிநீர் தளும்ப, இன்று நாடே கேட்கிறது!

கோட்டைக்குள் நுழைந்ததுமே கோயில்களைப் பாதுகாக்கப் போகிறேன். கொண்டு வந்து கொட்டுக நிதியை! எனக் கேட்டு, கொத்தடிமைகளின் கப்பங்களாகக் குவிந்தது பெருநிதி! கோயில்கள்தான் பாதுகாக்கப்பட்டனவா அல்லது கோயில்களில் இருந்த கடவுள்கள்தான் காப்பாற்றப்பட்டனரா?

இதோ பட்டியல் ஒன்று! படித்துப் பார் உடன்பிறப்பே! யாராவது பக்தர் இருப்பின், அவருக்கும் படித்துக் காட்டு!

3.1.91 மேல முனைஞ்சிபட்டி வெங்கிடாசலபதிக் கோயில் - 10.1.91 சங்கரன் கோயில் காளியம்மன் கோயில் - 18.2.91 புளியங்குடி அம்மன் கோயில் - 21.2.91 சுரண்டை வீரபாண்டீஸ்வரர் கோயில் - 10.3.91 சங்கரன் கோயில் திக் நயினார் கோயில் - 22.3.91 சீவலப் பேரி அம்மன் கோயில் - 27.3.91 கங்கை கொண்டான் செண்பக அம்மன் கோயில் - 28.3.91 சீவலப்பேரி சுடலை மாடன் கோயில் - 23.4.91 கீழப்பாவூர் திருவாளீஸ்வரர் கோயில் - 9.5.91 சேரன்மாதேவி வெங்கடாசலபதி கோயில் - 21.5.91 மூலக்கரைபட்டி சுந்தர மூர்த்தி விநாயகர் கோயில் - 4.6.91 முன்னீர் பள்ளம் இக்னேஸ்வரர் கோயில் - 15.6.91 முன்னீர் பள்ளம் நந்தி விநாயகர் கோயில் - 18.6.91 கங்கை கொண்டான் ஆனந்தவல்லி அம்மன் கோயில் - 25.6.91 நாங்குனேரி நவநீத கிருஷ்ணன் கோயில் - 4.8.91 நாங்குனேரி கிருஷ்ண விநாயகர் கோயில் - 6.8.91 அழகியபாண்டியபுரம் பாலசுப்ரமணியர் கோயில் - 31.8.91 தேவர் குளம் சின்னதம்பி சேர்வலாயர் கோயில் - 29.10.91 அம்பை செல்வியம்மன் கோயில் - 7.11.91 பாலாமடை சிவகொழுந்தீஸ்வரர் கோயில் - 19.11.91 சிங்கிகுளம் அம்மன் கோயில் - 20.11.91 மூலக்கரைபட்டி செந்தூர் அம்மன் கோயில் - 4.2.92 கங்கை கொண்டான் கைலாசநாதசாமி கோயில் - 12.2.92

முன்னீர் பள்ளம் தாமரை செல்வி கோயில் - 15.2.92 சேரன்மாதேவி அம்மனாதசாமி கோயில் -

என்ன இது? இப்படி நெல்லை மாவட்டத்து கோயில், கோயில் என்று பட்டியல் போட்டுக் குவிக்கிறாய்! எனக் கேட்கிறாயா? வேறு பல மாவட்டங்களிலும் இந்தப் பட்டியல் உண்டு!

1991-ஆம் ஆண்டு மட்டும், அதாவது ஆலயங்களைப் பாதுகாக்க நிதி திரட்டுவதும் - ஆலய வாரியம் அமைத்ததுமான காரியங்கள் அறிவிக்கப்பட்டுள்ள ஆண்டில் மட்டும்- பட்டியலில் உள்ள இத்தனை ஆலயங்களிலும் ஆண்டவன் சிலைகள் தூள் தூளாக்கப்பட்டுள்ளன.

பக்தியைப் போற்றிட - பகவான் நாமம் ஜபித்திட - அவதாரம் எடுத்துள்ளதாகப் பறைசாற்றிக்கொண்டு, மாநிலப் பரிபாலனம் செய்ய வந்துள்ள இந்த மாதரசின் ஆட்சியிலேதான் கோயில்களில் கடவுள் சிலைகள் நொறுங்குகின்றன! மகாமக விழாவுக்கு குளிக்க வந்த பக்தர்கள் பல்லோர் பிணமாயினர்!

இதனை உண்மையான பக்தர்கள் உணர்ந்தால் சரி!

அப்படியெல்லாம் ஒன்றுமில்லையெனச் சொல்லி ஆளவந்தார்க்கு முட்டுக்கொடுப்போர் யாராயினும், அவர்கள் எவ்வளவு உயர்ந்த பீடத்தில் அமர்ந்திருப்பினும், அவர்கள் பக்தியின் பெயரால் பகல் வேஷம் போடுபவர்களே! ஆமாம்! இந்த ஆட்சியாளரைப் போல!

அன்புடன்,

மு. க.

(27-02-1992)

1884. பாமா தோட்டத்துப் பாரிஜாத மரம்!

உடன்பிறப்பே,

வரவு செலவு திட்ட அறிக்கை என்பது வறுமைக் கோட்டுக்குக் கீழே வாடிக் கிடக்கும் கோடிக்கணக்கான மக்களையும் - வேலையின்றிக் கால் நோக அலைந்து திரியும் பல லட்சக்கணக்கான வாலிபர்களையும் - வாங்குகிற ஊதியம், நாள்தோறும் வீங்கிப் பெருத்துக் கொண்டிருக்கும் விலைவாசி உயர்வைச் சந்திக்கவே முடியாமல் சந்தியில் நிற்கும் சாமானிய மக்களையும் - கருத்தில் கொண்டுதான் இந்தியா போன்ற ஓர் ஏழை நாட்டில் தயாரிக்கப்பட வேண்டுமேயல்லாமல் - உல்லாச கிளப்புகளில் மாலைப் பொழுதைக் கழிக்கும் சீமான்கள், தொலைக்காட்சி கருத்தரங்குகளில் கோட்டும் சூட்டுமாகத் தரிசனம் தந்து, நாட்டைப் பற்றிக் கரிசனம் கொண்டவர்களைப் போலப் பேசும் கனதனவான்கள், இவர்களைப் போன்றவர்களின் பாராட்டைப் பெறுவதற்காகத் தயாரிக்கப்படுவதில் எள் முனையளவு பயனுமில்லை.

அண்மையில் மன்மோகன் சிங் அவர்கள் வெளியிட்டுள்ள வரவு செலவுத் திட்டம் குறித்து, டெல்லித் தொலைக்காட்சியிலாவது இடையிடையே மாறுபட்ட கருத்துடையவர்களின் விமர்சனங்கள் இடம் பெறுகின்றன. ஆனால் சென்னைத் தொலைக்காட்சியிலோ, அதிகாரப் பூர்வமாக நியமிக்கப்படாத ஆஸ்தான வித்துவான்கள் சிலபேர் இருக்கிறார்கள் - அவர்களைச் சூழ உட்கார வைத்துக்கொண்டு பட்ஜெட்டைப் புகழோ புகழ் என்று புகழ்ந்து தள்ளுவதுதான் வேலை!

ஆயிரமோ, இரண்டாயிரமோ சம்பளம் வாங்குகிற ஒவ்வொரு குடும்பத்திலும் கூட மாதாந்திர பட்ஜெட் போட்டுக்கொண்டுதான் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்!

அதுபோன்ற குடும்பங்களையும், அந்தச் சம்பளம் கூட இல்லாமல் அவதிப்படும் குடும்பங்களையும் கோடிக்கணக்கான எண்ணிக்கையில் கணக்கெடுத்துதான் ஒரு நாட்டின் பட்ஜெட் போடப்பட வேண்டும்.

பல ஆயிரம் கோடி ரூபாய்க்குப் போடப்படுகிற பட்ஜெட், சாதாரணக் குடும்ப பட்ஜெட்டைப் போல அரிசிக்கு எவ்வளவு? பாலுக்கு எவ்வளவு? சலவைக் கூலி என்ன? மளிகை சாமான் எத்தனை ரூபாய்க்கு? வீட்டு வாடகைக்கு எப்படி? என்ற அளவோடு முடிந்து விடுவதில்லை!

நாட்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வரவு எவ்வளவு? செலவு எவ்வளவு? மிச்சமா? சொச்சமா? என்ற கேள்விகளுக்கு விடை காண்பது மட்டும் முக்கியமல்ல! அதைவிட, எந்தக் கொள்கையின் அடிப்படையில் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படுகிறதோ, அந்தக் கொள்கை அடிப்படையில்தான் வருங்காலத்தில் நாடே இயங்கும் அல்லது இயக்கப்படும் என்பதை மறந்து விடாமல் தயாரிப்பதுதான் முக்கியமாகும்!

அதிலும் குறிப்பாக, பொருளாதாரத்தில் அரசின் கொள்கை என்ன என்பதை வரையறுத்துக் கொண்டுதான், கடந்த காலத்தில் வரவு செலவு திட்டங்கள் வடிவமைக்கப்பட்டன.

பொதுத்துறை - தனியார் துறை - கூட்டுத் துறை என மூன்று முனைகள் தொழில் துறையில் கடைப் பிடிக்கப்பட்ட கொள்கைகளாக இருந்து அந்த அடிப்படையில் பட்ஜெட்கள் வெளி வந்தன.

எதிர்காலத்தில் தனியார் துறையின் ஆதிக்கம் குறைந்து, பிறகு மறைந்து - கூட்டுத்துறை, பொதுத்துறை என ஆகி, ஒரு காலக்கட்டத்தில் பொதுத்துறை மட்டுமே செம்மையாக இயங்கிடுவதற்கான வழிவகைகள் காணப்பட வேண்டுமென்பதே சோஷலிச கருத்தை மெய்யாகவே நெஞ்சில் பதித்திருப்போர் ஆசையாகும்!

ஆனால் அதற்கு நேர்மாறாக, இந்த நிதிநிலை அறிக்கை - பொதுத்துறையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, கூட்டுத் துறையையும் விரைவில் கூட்டுப் பெருக்கிக்

கூடையில் அள்ளிவிட்டு, தனியார் துறை சாம்ராஜ்யத்திற்கு வெண்சாமரசம் வீசி -ஆலவட்டம் சுழற்றுவதென முடிவெடுத்து வெளியிடப்பட்டிருக்கிறது.

உடன்பிறப்பே, ஆர்.கே. சண்முகம் செட்டியாரைப் பற்றி அறிந்திருப்பாய்! ஒருகாலத்தில் காங்கிரசைக் கடுமையாக எதிர்த்தவர்-நேருவின் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி டெல்லியில் அமைந்தவுடன், நிதியமைச்சராக இருக்குமாறு வேண்டிக்கொள்ளப்பட்டவர். அறிஞர் அண்ணா அவர்களுக்கு, ஆர்.கே. சண்முகம் அவர்களிடம் தனிப்பட்ட முறையில் நல்ல மதிப்பும் அன்பும் உண்டு.

அந்த ஆர்.கே. சண்முகம் நிதியமைச்சராக இருந்தபோது ஒரு மசோதாவை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்திப் பேசும்போது தனியார் துறையை ஊக்கப்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டு விட்டார் என்பதற்காக, அண்ணா அவர்கள் அந்தப் பேச்சைக் கண்டித்து எழுதிய வாசகங்கள் இதோ! - ஆம், பணத் தோட்டம் என்ற நூலில்!

“முதலாளித்துவ முறை பயனற்றது என்று கண்ட பிறகும் அந்த இடத்தில் வேறோர் நல்லமுறையை நிர்மாணிக்க, சமதர்மமே பிணிதீர்க்கும் மருந்து அதுவே தமது வாழ்வின் லட்சியம் என்று பேசி வந்தவர்கள் அந்த லட்சியப்பாதைக்கு மக்களை இட்டுச் செல்லும் கடமையிலிருந்து தவறி, முதலாளித்துவத்தை வளர விட்டு ததாஸ்து கூறிக்கொண்டிருப்பது இந்தப் புண்ணிய பூமி ஒன்றில்தான் நடக்கும். நமது காது செவிடுபடும்படிச் சமதர்மம் பேசி, தமது லட்சியம் இது தான் எனச் சுட்டிக்காட்டிய பண்டித நேருவின் முன்னிலையில், முதலாளித்துவத்தை உயிர்ப்பிக்க ஆர்வம் காட்டப்படுகிறது. சமதர்மப் பண்டிதரோ, சல்லடம் காட்டுவதற்குப் பதில் சண்முகத்தின் போக்கிற்கு ததாஸ்து கூறுகிறார்.”

இப்படி அன்றைக்கே எழுதிய அண்ணாவின் வழி நின்று கழகத்தை நடத்துகிற நம்மால், இன்றைக்கு மத்திய அரசின் பட்ஜெட்டுக்குப் பின்னணியாக உள்ள பிற்போக்குக் கொள்கையை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்?

பிற்போக்குக் கொள்கை மட்டுமல்ல! இந்த நாட்டை மீண்டும் சுதந்திரமற்றதாக ஆக்கிவிடும் தீய விளைவை ஏற்படுத்தக் கூடிய ஆபத்தும் இந்த பட்ஜெட்டுக்குள் பதுங்கிக் கிடக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

உலக வங்கியின் சுட்டு விரல் அசைவுக்கு ஏற்ப, மத்திய காங்கிரஸ் அரசின் நிதி அமைச்சரது பேனா எழுதி முடித்த அறிக்கைதான் இந்த நிதிநிலை அறிக்கை!

உலக வங்கியின் உதவி தேவை என்பதற்காக, நட்சத்திரய்யனிடம் பட்ட கடனை அடைப்பதற்காகத் தனது மனைவியையே நடுத்தெருவில் ஏலங்கூறி விற்ற அரிச்சந்திரனைப் போலவா நடந்துகொண்டு, இந்திய மக்களை உலக வங்கியிடம் அடிமையாக்குவது?

ஒரு நாட்டின் வாழ்வு, மற்றொரு நாட்டின் பொருளாதாரச் சக்கரத்தில் பிணைக்கப்பட்டு விடுவது சாதாரண விஷயமல்ல! கைதியின் நிலை!

என்பதாக அதே பணத்தோட்டம் நூலில் அறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டியிருப்பதை நாம் மறந்து விடாத காரணத்தினால்தான் - மத்திய காங்கிரஸ் அரசின் போக்கினால் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் விபத்தை முன்கூட்டியே தெரிவித்து எச்சரிக்கிறோம்.

வெளிநாட்டு முதலாளிகள், முதலீடுகள், அவர்களுக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு - என்பது எங்கே போய் முடியும்?

வியாபாரத்துக்கு வந்தவர்கள்தானே ஆங்கிலேயனும், பிரஞ்சுக்காரனும், டச்சுக்காரனும், போர்ச்சுகீசியனும்?

அந்நிய ஆதிக்கத்தை விரட்டியடிக்க எத்தனை ஆண்டுகள் பிடித்தன!

புதுவிதமான அடிமைத்தனம் இப்போது தோன்றக் கூடும்!

அரசு நம்மிடம் இருக்கும் - ஆதிக்கம் அந்நியரிடம் இருக்கும். அதாவது, பாமாவின் தோட்டத்திலே மரமும் - ருக்மணியின் தோட்டத்திலே பாரிஜாத மலரும் போல!

சமீபத்தில் ஒரு வார ஏட்டில் ஒரு செய்தி படித்தேன் - வரலாற்றுச் செய்தி - தஞ்சாவூரை ஆட்சி செலுத்திய சரபோஜி

மன்னன், கிழக்கிந்திய கம்பெனிக்கு செலுத்த வேண்டிய பாக்கிக்காக அவர்களிடம் மன்னார்குடியையும், தஞ்சாவூரையும் சில லட்ச ரூபாய்க்கு விற்று விட்டான் என்று!

சரித்திரம் திரும்பும். இயற்கை! ஆனால் இதுபோன்ற சரித்திரம், திரும்பாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமல்லவா?

அந்த முன்னேற்பாடான பாதுகாப்பு இந்த பட்ஜெட்டில் இல்லை என்பதுதான் நமது குற்றச்சாட்டு!

அன்புடன்,

மு. க.

(03-03-1992)

1885. இவருக்கு நீதி கிடைக்குமா?

உடன்பிறப்பே,

இதோ இந்தப் படத்தில் வலது கையில் உள்ளங்கை உட்பட, நான்கு விரல்களையும் இழந்து நிற்கும் இந்தப் பெண்மணியின் பெயர் கௌரி என்பதாகும். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த இவர் வழக்கறிஞருங்கூட!

அவரது கரத்தை, பிறவிலேயே இப்படி ஊனமுற்ற கரம் என எண்ண வேண்டாம்.

கடந்த 10.1.92 அன்று இரவு, பல்லாவரம் பாரத் நகரில் உள்ள அவரது வீட்டுக் கதவை தட்டி போலீஸ் அதிகாரி அழைப்பதாகக் கூறி, கௌரி வெளியே வந்து பார்த்தபோது அரிவாளால் கையை வெட்டிவிட்டு ஓடி விட்டார்கள்.

வெட்டியவர் யார் என்றும், மற்ற விபரங்களையும் போலீசில் புகார் செய்திருந்தும், இதுவரை அந்தக் குற்றவாளி பிடிபடவில்லை.

இது குறித்து கௌரியின் தாயார் திருமதி ராமாஞ்சம் துரைசாமி, முதல்வருக்கு கடிதம் எழுதி, அதன் நகலை தி.மு.க. தலைமை அலுவலகத்திற்கு, எனது பெயருக்கும் அனுப்பியுள்ளார். அந்தக் கடிதம் வருமாறு -

உயர்திரு முதல்வர் அவர்களுக்கு,

பாதிக்கப்பட்ட டி. கௌரி பி.ஏ.பி.எல். அவர்களின் தாயார் ஏ. ராமாஞ்சம் அம்மாள் மிக்க பணிவுடன் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால்,

23.12.86-ல் நடந்த நகரசபைத் தேர்தலில் நான் 1-வது வார்டு தி.மு.கழக வேட்பாளராக நின்றேன். அதில் சொற்ப ஓட்டு வித்தியாசத்தில் நான் தோல்வி அடைந்தேன். அதற்கு பொறாமையே காரணமாக இருந்தது.

13.12.91 அன்று எனது கிராமத்தில் (பாரத் நகர் - பல்லாவரம்) இரண்டு பையன்கள் சைக்கிளில் மோதிக் கொண்டார்கள். இதனால் தகராறு ஏற்பட்டது. என் மகள் கௌரி இதில் தலையிட்டு இரு சாராருக்குமிடையில், சமரசம் செய்து வைத்தார். இதே பையன்களுக் கிடையில் 8.1.92 அன்று மீண்டும் இதே மாதிரி சைக்கிள் மோதலும், சண்டையும் ஏற்பட்டது. இந்தத் தகராறிலும் எனது மகள் கௌரி வக்கீல் என்ற முறையில் தலையிட்டு - பல்லாவரம் காவல்நிலையத்தில் சமரசம் செய்து வைத்தார்.

இதிலே ஒரு பார்ட்டி அந்தோணிசாமி. இவரது குடும்பத்தினரும், வேறு பலரும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ராணுவத்திற்குச் சொந்தமான (புறம்போக்கு) இடத்தில் குடிசை போட்டுக் கொண்டார்கள். ஏறத்தாழ 70 குடிசைகள் இவ்வாறு போடப்பட்டன. இதன் பின்னர் ராணுவத்தினர் வந்து எல்லாக் குடிசைகளையும் அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தி விட்டார்கள். அதிலே ஒரே ஒரு குடும்பம் மட்டும் அதே இடத்தில் குடிசை போட்டு நீடித்தது. அது அந்தோணி சாமியின் குடும்பம்தான்!

இரண்டு பார்ட்டிகளுக்கும் இடையே நடந்த இரண்டாவது தகராறை 10.1.92 அன்று, பல்லாவரம் காவல் நிலையத்தில், சமாதானம் பேசித் தீர்த்து வைத்துவிட்டு எனது மகள் கௌரி வீடு திரும்பிய அன்று இரவு சுமார் 12 மணிக்கு, அந்தோணிசாமியின் மகன் ஏ. லூயிஸ் என்பவர் ஏழெட்டு பேர்களோடு வந்து எங்கள் வீட்டுக் கதவை தட்டினார்.

யார்? என்று கேட்டபோது, சப் இன்ஸ்பெக்டர் உங்களை அழைத்து வரச்சொன்னார் என்றார்கள். தூக்க கலக்கத்தில் அவர்கள் கூறியதை உண்மை என்று நம்பி என் மகள் வெளியே வந்தாள். உடனே அந்தோணி சாமியின் மகன் லூயிஸ், தனது கையில் வைத்திருந்த அரிவாளால் என் மகளை வெட்டப் பாய்ந்தான். தடுக்க முயன்ற போது, எனது மகளின் நான்கு விரல்களும் - உள்ளங்கையில் பாதியும் அரிவாள் வெட்டுக்கு இலக்காகி - துண்டாகக் கீழே விழுந்து விட்டன.

சம்பவம் நடந்த 10.1.92 முதல், லூயிஸ் தலைமறைவாகி விட்டார். பல்லாவரம் போலீசார் அவரைப் பிடிப்பதாகத் தெரியவில்லை. பலமுறை காவல் நிலையத்தில் கேட்டும் பயன் இல்லை.

ஆகவே, தாங்கள் எங்கள் மீது இரக்கம் வைத்து, முக்கிய குற்றவாளியான லூயிசைப் பிடித்து கோர்ட்டில் ஒப்படைத்து எங்களுக்கு நீதிவழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (ஏ. லூயிஸ் மீது Psc 35/92 செக்ஷன் 147, 148, 324, 452, 307 பிரிவுகளில் வழக்குப் பதிவாகியுள்ளது)

இங்ஙனம்
உண்மையுள்ள
ஏ. ராமாஞ்சம்மாள்

- என்று முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார் கௌரியின் தாயார்.

புகாரைப் பெற்றுக்கொண்டு, போலீசார் பல்வேறு சட்டப் பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்த போதிலும், இன்னமும் குற்றம் சாட்டப்பட்ட நபர் பிடிபடவில்லை.

வழக்கறிஞர் வேலைக்குப் படித்துவிட்டு இன்று, கொடியவர்களின் வெறியினால் வலது கரத்தை இழந்து நிற்கும் இந்தச் சகோதரிக்கு நீதி கிடைக்குமா?

அன்புடன்,

மு. க.

(05-03-1992)

1886. தென்னை மரத்தில் புல் பறித்த கதை!

உடன்பிறப்பே,

தேங்காய் திருட ஒருவன் மரத்தில் ஏறினான். காவல்காரன் அதை பார்த்துவிட்டுக் கூச்சல் போட்டுக்கொண்டே ஓடிவந்தான். தென்னை மரத்தில் முக்கால் பகுதி ஏறிவிட்ட திருடன் பயந்து போய் கீழே இறங்கத் தொடங்கினான்.

காவலன் கோபமாகக் கேட்டான், ஏண்டா எங்க தோப்பு மரத்திலே ஏறினே? என்று!

திருடன்சொன்னான், மாட்டுக்குப் புல்லு பறிக்க ஏறினேன்! என்று!

தென்னை மரத்திலியா புல்லு இருக்கும்? என்று காவலன் சீறினான்.

அதான்! இல்லை! அதனால்தான் இறங்கிட்டேன்! என்று திருடன் சமாளித்தான்.

காவலன் விடுவானா? நன்றாக அவனைக் கவனித்து அனுப்பினான்.

ஏனிந்தக் கதை என்றால், சமாளித்துத் தப்பித்துக் கொள்வதற்கும் ஓர் எல்லையுண்டு - மறைந்து வந்து மரம் ஏறிய மனிதனோ, சமாளிக்கும் விஷயத்திலும் மண்டுவாக இருந்திருக்கிறான் - அதைக் குறிப்பிடத்தான் இந்தக் கதை!

அதுபோகட்டும்! இப்போது நான் விஷயத்துக்கு வருவோம்.

ஜெயலலிதா அரசின் நிதிநிலை அறிக்கையை நிதி அமைச்சர் நாவலர் அவர்கள், முதலமைச்சருக்கான புகழாரங்களை முத்தாரங்களாகச் சூட்டி சுமார் இரண்டு மணி நேரம் பேரவையில் படித்திருக்கிறார்.

பொதுவாக நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் போது அமைச்சரவைக் கூட்டத்தில் முன்கூட்டியே விவாதம் நடைபெறும்.

அந்தக் கூட்டத்தில் பெறுகிற கருத்துகளின் அடிப்படையில் நிதி அமைச்சரும், நிதித்துறை செயலாளரும் அமர்ந்து நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பார்கள். நிதி அமைச்சரும், முதலமைச்சரும் ஒருவராகவே இருந்தால் பிரச்சினை இல்லை. அப்படி இல்லாவிடில் வரி விலக்கு, வரி விதிப்பு, புதிய திட்டங்கள், கொள்கை அறிவிப்புகள், நிதிநிலவரம் இவைபோன்ற முக்கியமானவற்றை நிதி அமைச்சர், முதலமைச்சருடன் கலந்து பேசி முடிவெடுத்து நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பார்.

அறிக்கை தயாரிக்கப்பட்டவுடன் அது அச்சுக்குச் செல்வதற்கு முன்பும் - சென்று வந்த பிறகும் அந்த அறிக்கையைப் பலமுறை நிதித் துறை செயலாளரும், நிதி அமைச்சரும் படித்துப் படித்துப் பார்த்து, எழுத்துத் தவறுகளோ, கருத்துத் தவறுகளோ இருப்பின், அதனைத் திருத்திடுவர். இறுதியாக அந்த அறிக்கை அவையில் வைக்கப்படும் நேரத்தில் கூட, யார் கண்ணிலும் படாமல் ஏதாவது பிழை நேர்ந்திருப்பின், அதனை எழுது கோல்கொண்டு திருத்தி அவைக்கு அறிவிப்பதும் உண்டு. இதுதான் வழக்கம்!

ஆனால் நிதியமைச்சர் நாவலர் அவர்கள், அத்தனையும் கடந்த நிலையில் மார்ச் 9-ஆம் தேதியன்று ஒரு தகவலை வெளியிட்டிருக்கிறார். அதுவும் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் பேசும்போது இவர் குறுக்கிட்டு, அந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார்.

என்ன தகவல்? ஏன் அந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார்? அதற்குக் காரணம் உண்டு!

விவசாயிகள் அனைவருக்கும் பம்ப்செட்டுகளுக்கு இலவச மின்சாரம் என்று, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைமுறைக்குக் கொண்டு வந்திருந்த திட்டத்தின் மீது, அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பு ஏற்ற நாளில் இருந்தே அமைச்சர்கள் தாக்குதல் நடத்தியே வந்திருக்கிறார்கள்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் என்ற கழக ஆட்சியின் திட்டத்தால், ஆண்டுக்கு ஐநூறு கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு என்று முதலமைச்சர் ஜெயலலிதாவும் அரசு நிகழ்ச்சிகளில் பேசியுள்ளார். நிதி அமைச்சர் நாவலரும் அரசு நிகழ்ச்சிகளிலும், அவர் கலந்துகொண்ட வேறு பல நிகழ்ச்சிகளிலும் பேசியுள்ளார். அப்போதே அதை நான் மறுத்து, எல்லா விவசாயிகளுக்கும் பம்ப்

செட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதால் முப்பது முதல் நாற்பது கோடி ரூபாய்க்குள்தான் இழப்பு இருக்கும். ஐநூறு கோடி ரூபாய் இழப்பு என்று அ.தி.மு.க. அமைச்சர்கள் கூறுவது தவறு! என்று அறிக்கை வெளியிட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகும், 1991 செப்டம்பர் 4-ஆம் தேதியன்று நாவலர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் 32-ஆம் பக்கம் 73-வது பாராவில் என்ன கூறியிருக்கிறார் தெரியுமா?

> "விவசாயிகள் அனைவருக்கும் மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறது என்பதை அவை உறுப்பினர்கள் அறிவர். இதனால், ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாடு மின்வாரியத்துக்கு சுமார் ரூபாய் 550 கோடி வருவாய் இழப்பு ஏற்படுகிறது, இந்த ஆண்டில் இந்த இழப்பை ஈடு செய்ய ரூபாய் 350 கோடி ஒதுக்கியுள்ளோம்."

இது 1991 பட்ஜெட்டில் நாவலர் படித்தது! அப்போதே நான் இது தவறான தகவல் என்பதை அறிக்கை வாயிலாகத் தெரிவித்தேன்.

ஆனால் அதன் பிறகும் நிதியமைச்சரும், முதலமைச்சரும், பல வெளி நிகழ்ச்சிகளில் விவசாயிகளுக்கான இலவச மின்சாரத்தினால் ஐநூறு கோடி இழப்பு என்பதையே திரும்பத் திரும்ப பேசி வந்திருக்கிறார்கள்.

இப்போது 1992-ஆம் ஆண்டு பட்ஜெட் 45 - 46-ஆம் பக்கங்களில் 108-வது பாராவில்,

> "உழவர்கள் அனைவருக்கும் இலவசமாக மின்சாரம் வழங்கப்படுவதால், ஓராண்டுக்கு உண்மையில் ரூபாய் 560 கோடி இழப்பு ஏற்படுகிறது. இந்த இழப்பின் ஒரு பகுதியை அரசு ஈடுசெய்கிறது. வரவு செலவுத் திட்டத்தில் இழப்பீட்டுக்கு ரூபாய் 350 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது"

என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப் பற்றியும் நான் மறுப்பு அறிக்கை வெளியிட்டு, திரும்பத் திரும்ப உண்மைக்கு மாறான தகவலையே புள்ளி விபரக் கணக்காகத் தருகிறீர்களே! இது முறையா? என்று கேட்டிருந்தேன்.

இப்போது நாவலர் விளக்கம் அளித்துள்ளார் சட்டப் பேரவையில்! அவராக முன்வந்து அளித்த விளக்கமல்ல! காங்கிரஸ்

உறுப்பினர் பேசும் போது நாவலர் குறுக்கிட்டு அளித்த விளக்கம்! என்ன விளக்கம் அது?

யூனிட் மின்சாரம் தயாரிக்க ஒரு ரூபாய் 47 பைசா செலவாகிறது. வீட்டு உபயோகத்துக்கு ஒரு யூனிட்டுக்கு 55 பைசா வீதம் தரப்படுகிறது. இத்தகைய சலுகைகளையெல்லாம் சேர்த்துத்தான் ரூபாய் 560 கோடி இழப்பு என்று கூறினேன். இந்த விளக்கத்தை பட்ஜெட் உரையில் சேர்க்குமாறு கூறியிருந்தேன். ஆனால் அது அச்சில் ஏறவில்லை. (தினமணி 10.3.92)

இப்படியொரு விளக்கத்தை நிதியமைச்சர் இப்போது தந்துள்ளார்.

என்ன வேடிக்கை பார்த்தாயா உடன் பிறப்பே!

1991 பட்ஜெட்டிலும் விவசாயிகளுக்கான இலவச மின்சாரத்தினால் அரசு இழப்பு சுமார் 550 கோடி ரூபாய் என்றே குறிப்பிடப்பட்டிருந்தது.

1992 பட்ஜெட்டிலும் விவசாயிகளுக்கான இலவச மின்சாரத்தினால் அரசுக்கு இழப்பு 560 கோடி ரூபாய் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. விவசாயிகளின் இலவச மின்சாரத்துக்கு முப்பது முதல் நாற்பது கோடி ரூபாய் வரையில்தான் அரசுக்கு இழப்பு ஏற்படும் என்பதற்கும், ஐநூற்றி அறுபது கோடி ரூபாய் இழப்பு ஏற்படுமென்பதற்கும் இடையே எவ்வளவு பெரிய வித்தியாசம்?

இதை நாவலர் திருத்தச் சொன்னாராம். நிதி துறை திருத்த வில்லையாம்!

இறுதியாக பட்ஜெட் அச்சாகி வந்த பிறகு நாவலர் சொன்னபடி திருத்தி எழுதப்பட்டுள்ளதா என்று ஏன் நாவலர் படித்துப் பார்க்கவில்லை?

விளக்கத்தை சேர்க்குமாறு கூறியிருந்தேன் - ஆனால் அது அச்சில் ஏறவில்லை என்கிறார் நாவலர்!

ஏன் ஏறவில்லை? ஏற்றிக் கொள்ள அச்சு இயந்திரம் மறுத்து விட்டதா?

நிதியமைச்சர் பொறுப்பில் இருப்பவர்கள், நிதிநிலை அறிக்கை அச்சாகிக் கொண்டிருக்கும் போதே அதனை ஒருமுறைக்கு

இருமுறை, ஏன்? மூன்று நான்கு முறை கூடப் படித்துப் பார்ப்பது உண்டே!

தான் சொன்ன விளக்கம் அச்சில் ஏறியதா இல்லையா என்று கூட கவனிக்க நேரமில்லையா நிதியமைச்சருக்கு? உடன்பிறப்பே! இது வேறொன்றுமில்லை - தென்னை மரத்தில் புல் பறிக்க ஏறினேன் என்று சொன்னவனின் கதைதான்!

விவசாயிகள் அனைவருக்கும் இலவச மின்சாரம் வழங்குவதால், ஐநூற்றி அறுபது கோடி அரசுக்கு இழப்பு ஏற்பட கருணாநிதி செய்துவிட்டார் - அந்த இழப்பைச் சரிக்கட்ட, விவசாயிகள் அனைவருக்கும் இலவச மின்சாரம் என்ற சலுகையைக் கைவிடப் போகிறோம் என்று கழக ஆட்சியின் மீது பழிபோடுவதற்காக, சுமார் முப்பது கோடி ரூபாய் இழப்பை ஐநூற்று அறுபது கோடி எனத் தவறான தகவலைக் கூறி, மக்களை திசை திருப்பப் பார்த்தார்கள்!

உழவர்களுக்கான இலவச மின்சாரம் - இதனால் இழப்பு ஐநூற்று அறுபது கோடி ரூபாய் என்று மிகத் தெளிவாகவே 1991 பட்ஜெட்டிலும் 1992 பட்ஜெட்டிலும் அச்சடித்துக் கொடுத்துவிட்டு,

இப்போது தனது விளக்கம் அச்சில் ஏறிவில்லை - என்று சமாளிப்பது,

தென்னை மரத்தில் புல் பறிப்பதற்காகத் தான் ஏறினேன்

என்று சொன்னானே - அவனுடைய சாமார்த்தியம் போன்றதுதான்!

சாமரம்வீசிகள் இருக்கும்போது என்ன குறை இந்த சர்க்காருக்கு! எதையும் செய்துவிட்டு, எதையும் பேசிவிட்டு, எப்படியும் சமாளிக்கலாம்!

அன்புடன்,

மு. க.

(11-03-1992)

1887. தெளிவு எது? அழிவு எது?

உடன்பிறப்பே,

கடந்த ஒன்பதாம் தேதி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் நரசிம்மராவ் அவர்களின் காங்கிரஸ் அரசு பிழைத்துக் கொண்டது! அது பிழைத்திடப் பிழை புரிந்தவர்கள் யார்? எந்தக் கட்சியினர்? என்ற விபரங்கள் வெளிப்படையாகவே ஏடுகளில் வெளிவந்துள்ளன.

நரசிம்மராவ் அரசு பிழைத்தது சரி! இப்போது முன்னுள்ள பிரச்சினை - இந்தியா பிழைக்குமா என்பதும், பிழைக்க வைக்க வேண்டும் என்பதும் தான்! அதை மறந்துவிட்டு வெற்றி விழா கொண்டாடுவதில் பயனேதுமில்லை!

உலக வங்கி, ஐ.எம்.எப்., ஆகிய அமைப்புகளில் ஏற்கெனவே இந்தியா கடன் பெறவில்லையா என்று கேட்பது பொருளற்ற வாதமாகும். இன்று ஏற்றுக் கொள்ளப்படும் பயங்கரமான நிபந்தனைகள் என்றுமே இருந்ததில்லை!

இந்த நிபந்தனைகளை ஏற்பதின் எதிர்கால விளைவு, அந்நிய நாடுகளின் அதிபர்களுக்கு இந்தியாவில் எந்தத் தடையுமின்றி ஆதிக்கக் காலூன்ற வழிவகுப்பதாகும்.

பொருளாதார உரிமைகளை மட்டுமல்ல, அரசுரிமையின் மீதும் அந்நிய முதலாளிகளின் ஏகாதிபத்தியம், தனது அழுத்தமான பாதங்களைப் பதிக்கும்!

சீப்பும், சோப்பும் விற்க வந்தவர்கள்தானே, இரு நூறு ஆண்டுக் காலம் இந்தியாவைக் கொடி கட்டி ஆண்டார்கள்!

இனிக் கொடி கட்டி ஆள நினைக்காவிடினும், வெளிநாட்டு முதலாளித்துவம் தனக்கு முன்னால் நம் நாட்டைக் கை கட்டி நிற்க வைத்து விடுமே என்ற அச்சம்தான் தொலை நோக்குப் பார்வையில் உருவாகிக் கொண்டிருக்கிறது.

விலைவாசி உயர்வு, வேலையின்மைக் கொடுமை பற்றிய திருத்தத் தீர்மானங்கள் மீது வாக்கெடுப்பு நடைபெற்று அந்தத் திருத்தம் தோல்வியுற்றிருக்கிறது!

விலை உயர்வு, வேலையில்லாக் கொடுமை இவைகள் எல்லாம், இன்று இந்திய அரசு கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ள பொருளாதாரக் கொள்கை, தொழில் கொள்கை, தொழிலாளர் விரோதக் கொள்கை என்பனபற்றின் விசுவரூபமாக ஆகி, இன்னும் பல அபாயகரமான ஆலகால விழுதுகளை இந்தியாவில் இறக்கிவிடக் கூடியவை என்பதற்கு இதோ ஓர் உதாரணம் :-

டாக்டர் மு. நாகநாதன் தமிழன் இதழில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் சுட்டிக் காட்டப்படும் செய்தியொன்று பின்வருமாறு :-

> "பன்னாட்டு நிதி நிறுவனமும், உலக வங்கியும் ஏற்கனவே பல நாடுகளுக்குப் பொருளாதாரப் பிணி தீர்ப்பதற்காக, இந்தியாவுக்குக் கொடுத்துள்ள இதே பொருளாதார மருந்தைக் கொடுத்துள்ளன. பெரு (Peru) என்பது லத்தின் அமெரிக்காவில் உள்ள ஒரு நாடாகும். இரண்டு கோடி மக்கள் தொகை கொண்ட இந்நாடு 250 கோடி டாலர் அந்நியக் கடனைப் பெற்றது. நமது நாட்டில் ஏற்பட்ட நிதி சிக்கலைப் போன்றே அந்நாட்டிலும் ஏற்பட்டது. 1990 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம், பன்னாட்டு நிதி நிறுவனமும், உலக வங்கியும் உதவிக்கரம் நீட்டி, தனது வலைக்குள் சிக்க வைத்துவிட்டது. இதனுடைய பலன்களைப் பற்றி அண்மையில் பம்பாயிலிருந்து வெளிவரும் பொருளாதாரம் மற்றும் அரசியல் (Economic and Political Weekly) வார ஏட்டில் 1992 பிப்ரவரி 15ல் வெளிவந்துள்ள சிறப்புக் கட்டுரையில், பொருளாதார இனப்படுகொலையே (Economic Genocide) பெரு நாட்டில் நடந்திருப்பதாக கூறப்பட்டுள்ளது. லத்தின் அமெரிக்க நாடுகளில் கடந்த 20 ஆண்டுகளில் பல ராணுவ ஆட்சிகளில் நடக்காத கொடுமை, இந்த 2 ஆண்டுகளில் பெரு நாட்டில் ஜனநாயக அமைப்பில் மக்கள் அனுபவித்துள்ளனர் என அக் கட்டுரை குறிப்பிடுகிறது. தாறுமாறான விலைவாசி உயர்வு, இந்த

அதிரடிப் பொருளாதார நடவடிக்கையால் ஏற்பட்டு சாதாரண மக்கள் பொருளாதார இனப் படுகொலைக்கு ஆளாகியுள்ளனர் என அந்த ஏடு எழுதியுள்ளது".

டாக்டர் நாகநாதன் சுட்டிக் காட்டியுள்ள பெரு நாட்டின் கதி, பெருமை மிகுந்த இந்தியாவுக்கும் வந்து விடக்கூடாது என எச்சரிப்பது எதிர்க்கட்சிகளின் கடமையல்லவா?

அப்படி எச்சரித்தால், எதிர்க்கட்சியென்றால் எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டுமென எதிர்க்கிறார்கள் என, ஏகடியம் புரிந்து கொண்டால் போதுமா?

தொலை நோக்கு வேண்டாமா?

நரசிம்மராவ் பெற்ற வெற்றியைப் பற்றி தலையங்கம் எழுத வந்த தினமணி எப்படிக் குழப்புகிறது பார்!

"மக்களவை வாக்கெடுப்பின் முடிவுகளைப் பார்க்கும் போது, அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு பலத்த ஆதரவு இருப்பது தெளிவாகிறது"

தினமணி தலையங்கத்தின் முடிவுரை இது!

ஆனால் அதே தலையங்கத்தில் தினமணி, வேறு விதமாகவும் எழுதுகிறது.

"அரசுத் தீர்மானம் தோல்வியுற்றால் மறு கணமே, குடியரசுத் தலைவர் மாளிகைக்குச் சென்று தமது பதவி விலகல் கடிதத்தை கொடுத்துவிட்டு, மறு தேர்தல் நடத்தப் போவதாக நரசிம்மராவ் அறிவித்திருந்தார். பத்து மாதங்களில் மீண்டும் ஒரு தேர்தலைச் சந்திக்க நேருமோ என்ற பயத்தில் எம்.பி.க்கள், அரசுக்கு ஆதரவு தெரிவித்தார்கள் என்பது தெளிவு."

தினமணி சொல்கிறது, அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு ஆதரவு இருப்பதை இந்த வாக்கெடுப்பு காட்டுகிறது என்பது தெளிவு என்று!

அதே தினமணி சொல்கிறது, மீண்டும் உடனடியாகத் தேர்தலை சந்திக்கப் பயந்துதான் அரசுக்கு எம்.பி.க்கள் ஆதரவு அளித்தார்கள் என்பது தெளிவு என்று!

இதில் எந்தத் தெளிவு

உண்மையான தெளிவு?

வேண்டுமானால் தேர்தல் பயத்தால், அரசை ஆதரித்தார்கள் என்பதை மட்டும் தெளிவு என ஏற்கலாம்.

அரசின் பொருளாதாரக் கொள்கை சரி என்று ஆதரித்தார்கள் எனக் கூறுவது, தெளிவு அல்ல என்பது மட்டுமல்ல - எதிர் காலத்தில் நாட்டை அழிவுக்குக் கொண்டு செல்லக் கூடியதுமாகும்.

அன்புடன்,

மு. க.

(12-03-1992)

1888. தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை

உடன்பிறப்பே,

என்ன விழா நடைபெறுகிறது என்பதை முகப்பிலே உள்ள தோரண வாயில் தெரிவிக்கும். எப்படி விழா நடைபெறுகிறது என்பதை விழாவுக்கென அமைக்கப்பட்டுள்ள மண்டபத்துக்குள் சென்றதும் கண்டு மகிழலாம்.

ஓர் அரசின் ஆளுநர் உரை என்பது, என்ன விழா என்பதை அறிவிக்கும் தோரண வாயில் போன்ற கொள்கைக் குறிப்பு!

அதில் நுழைந்தவுடன், அழகுற மிளிரும் ஆயிரங்கால் மண்டபம் போன்றதே, அந்தக் கொள்கையின் அடிப்படையில் அமைந்திடும் அரசின் நிதிநிலை அறிக்கை!

இந்த இரண்டு இலக்கணத்திற்கும் பொருந்தாத வகையில் தயாரிக்கப்பட்டு படிக்கப்பட்டவை தான் அ.தி.மு.க. அரசின் ஆளுநர் உரையும் - நிதிநிலை அறிக்கையும்.

ஆளுநர் உரையில் எந்த ஆட்சியிலும் எந்த ஆளுநர் உரையிலும் காணப்படாத வரலாற்றுச் சிறப்புமிக்கதாக, முதலமைச்சர் ஜெயலலிதாவின் திருநாமத்தை பக்கத்துக்குப் பக்கம் ஆளுநர் அவர்கள் படித்து மகிழ்ந்தார். ஆளுநர் உரை என்பது முதலமைச்சர் பார்வையுடன் அரசே தயாரிக்கும் உரை! அதில் முதலமைச்சரைப் பற்றியே சூடாமணித்தனமான புகதூரங்கள் - பாராட்டு மொழிகள்!

அதுதான் போகட்டுமென்றால், நாவலர் படித்துள்ள நிதிநிலை அறிக்கையில், வாதாபி கணபதி பாடிவிட்டுக் கச்சேரி தொடங்குவது போல - வெல்லத்தாலோ, சாணத்தாலோ பிள்ளையார் பிடித்து வைத்து விட்டுத்தான் விசேஷங்களை ஆரம்பிப்பது போல - முதல்வர் ஸ்துதியுடன், விபரங்கள் அடியெடுத்து வைக்கின்றன.

கடந்த ஆண்டு 1991-92 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் அவையில் வைத்தபோது;

"அஞ்சாமை ஈகை அறிவுக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு"

என்ற குறளை குறிப்பிட்டு, அதற்கு இலக்கணமாக அரசு திகழ்கிறது என எழுதியிருந்தார்.

ஆனால் இந்த ஆண்டு நாவலர் அவர்கள், அதனை மாற்றி விட்டார் அறிக்கையில்!

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு"

என வள்ளுவர் கூறியுள்ள பண்புகளைக் கொண்ட முதலமைச்சர் ஜெயலலிதாவின் தலைமையின் கீழ் இயங்கும் அரசு - என்று அறிக்கையைத் தொடங்குகிறார்.

ஆளுநர் உரைக்குத் தனது உரை இளைத்ததா என்று கேட்பது போல, இவரும் பக்கம் தவறாமல் ஜெயலலிதா பெயரை, அவருக்குரிய அடைமொழிகளுடன் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

எனவே இரு உரைகளின் மூலமும், கவர்னரும், நிதி அமைச்சரும் இந்த அரசின் தலையாய கொள்கை தலைவியைப் புகழ்வதுதான் என்பதை நிலை நாட்டிவிட்டனர்.

அரிசி விலையேற்றம், பால் விலையேற்றம், மின் கட்டண உயர்வு, ரயில் கட்டண உயர்வு, பஸ் கட்டண உயர்வு, அத்தியாவசியப் பண்டங்கள் அத்தனையும் விலை உயர்வு - இப்படிச் சாதாரண ஏழை எளிய நடுத்தர மக்களைக் கொடுமைப்படுத்தும் சூழலை ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே உருவாக்கி விட்டு, சந்தடி சாக்கில் வந்தது வரட்டும் என்ற பழமொழிக்கேற்ப, மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையும், மாநில அரசின் நிதிநிலை அறிக்கையும் வெளி வந்துள்ளன.

மத்திய அரசு நிதி நிலவரம் ஒரே கைவிரிப்பு! அதனால் மாநில ஒதுக்கீடுகள் மானிய உதவிகள் எல்லாமே குறைப்பு! இந்த உண்மையைத் திரை போட்டு மறைத்துக் கொண்டு, ஒரு போலிச் சித்திரத்தைத் தீட்டிக் காட்டுவதுதான் தமிழக அரசின் நிதி நிலை அறிக்கை என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியும்.

முதலில் சில குறிப்புகளைப் பார்ப்போம். நாமே சில கேள்விகளைக் கேட்டுக் கொண்டு, பிறகு நிதி அமைச்சரைப் பார்த்து விளக்கம் கேட்போம்!

1989-ல் தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்த போது நிதிநிலையில் ரொக்கத்தில் (Cash Balance) பற்றாக்குறை இருந்ததா? உபரித் தொகை இருந்ததா?

பற்றாக்குறைதான் இருந்தது - சுமார் அறுபது முதல் எழுபது கோடி ரூபாய் வரையில், ரொக்கத்தில் பற்றாக்குறை இருந்தது. அந்த நிலையில் தான், கழக ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டது. அதனால்தான், கஜானா காலி என அப்போது அறிவித்திட நேரிட்டது.

1991-ல் ஜனவரி இறுதியில் கழக ஆட்சி கலைக்கப்பட்ட போது, ரொக்கம் (Cash Balance) பற்றாக்குறையாக இருந்ததா? உபரியாக இருந்ததா?

கஜானாவைக் காலியாக விட்டு விட்டு கழக ஆட்சி வெளியேறவில்லை! (Cash Balance) ரொக்கத் தொகை சுமார் ஏழு கோடி முதல் பத்து கோடி ரூபாய்க்குள்ளாக உபரியாகவே இருந்தது.

அதனால்தான் அந்த நிதியாண்டின் இறுதி நாளான 31.3.91ல் கவர்னர் ஆட்சியில்; வரவு செலவு கணக்கு முடிக்கப்பட்டு ரொக்கத் தொகை (Cash Balance) இரண்டு கோடிக்கும் குறைவாகவே பற்றாக்குறையென அன்றைய பட்ஜெட்டில் காட்டப்பட்டது.

பின்னர் 1991-92 ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசின் நிதிநிலை அறிக்கையில், அந்த நிதியாண்டின் இறுதி நாளான 31.3.92 அன்றைக்கு ரூபாய் 785.35 கோடி பற்றாக்குறை இருக்குமென மதிப்பீடு செய்து அறிவிக்கப்பட்டது.

இந்த 1992-93 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், இந்த நிதியாண்டு முடிவில் அதாவது 31.3.92-ல் இறுதி நிலைப் பற்றாக்குறை ரூபாய் 401.47 கோடியாக இருக்குமென குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்படியானால் 785 கோடி என்பது 401 கோடியாக குறைக்கப்பட, இடையே உள்ள 384 கோடி ரூபாய் எந்த வகையில் வரவாக வந்தது?

கடந்த ஆண்டும் 70 கோடி ரூபாய்க்கு வரி போட்டோம் என்றால், அது போக ரூபாய் 314 கோடிக்கு மார்க்கமென்ன? சிக்கனமாகச் செலவு செய்தோம் என்று சொன்னால் கூட, அதற்காக அதிகபட்சமாகவே ஐம்பது கோடி ரூபாய் கழித்துக் கொண்டால்கூட, சுமார் 260 கோடி அளவுக்கு திட்டச் செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன என்பதே உண்மையாக இருக்க முடியும்.

இதற்குப் பிறகும் 401 கோடி ரூபாய் இந்த நிதியாண்டின் இறுதிப் பற்றாக்குறை என்றால், இந்த மார்ச் மாதம் 31-ந் தேதிக்குள் அதனை எப்படிச் சரி செய்யப் போகிறார்கள்?

மத்திய அரசிலிருந்து மானிய உதவிகள் வர ஏதாவது வழிவகை தெரிவிக்கப்பட்டுள்ளதா? அப்படி எதுவும் தொகை ஒதுக்கப்பட்டுள்ளதா?

அங்கு சட்டியிலேயே இல்லை என்கிறபோது, இங்கு அகப்பையில் எப்படி வரப்போகிறது?

மத்திய அரசிடமிருந்து மானிய உதவிகளைப் பெறுவதிலும், ஒதுக்கீடுகளைப் பெறுவதிலும் கழக ஆட்சி காட்டிய அக்கறையும், ஆர்வமும், அதனால் இந்த மாநிலம் பெற்ற பயனும் இந்த ஆட்சியில் உண்டா? இல்லை! இல்லவே இல்லை!

நிதிநிலை அறிக்கை என்பது வளர்ச்சி விகிதத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாக இருத்தல் வேண்டும்.

வருவாய்க் கணக்கிலும் சரி! செலவிலும் சரி! திட்ட மதிப்பீட்டை விடத் திருத்த மதிப்பீட்டில் உயர்வதுதான் வழக்கம்.

கழக ஆட்சியில் 1990-91-ல் வருவாய்க் கணக்கில் மத்திய அரசிடமிருந்து உதவி மானியங்கள் என்ற தலைப்பில் திட்ட மதிப்பீடு ரூபாய் 343.54 கோடியாகும். இது திருத்த மதிப்பீட்டில் 554.54 கோடி ரூபாயாக, அதாவது 211 கோடி ரூபாய் உயர்ந்தது.

ஆனால் கடந்த ஆண்டு 91-92-ல் நாவலர் படித்த நிதிநிலை அறிக்கையில், திட்ட மதிப்பீட்டில் மத்திய அரசிடமிருந்து உதவி மானியங்கள் என்ற தலைப்பில் 592.72 கோடி ரூபாய் என அறிவித்திருந்தார். இது திருத்த மதிப்பீட்டில் 626.43 கோடி ரூபாய் என்ற அளவுக்கு 33.71 கோடிதான் உயர்ந்துள்ளது.

கழக ஆட்சியில் இந்தத் தலைப்பின் கீழ் உயர்வு 61 சதவிகிதம்! தற்போது உயர்வு வெறும் 6 சதவிகிதம் மட்டுமே!

எனவே, ஏற்கெனவே சுமார் 260 கோடி ரூபாய்க்கு மேல் வளர்ச்சித் திட்ட செலவுகள் குறைக்கப்பட்டும்கூட, இறுதிப் பற்றாக்குறையாக 31.3.92 அன்று நின்று மிரட்டுகிற 401 கோடி ரூபாயை 92-93 ஆம் ஆண்டுடன் இணைத்து மொத்தப் பற்றாக்குறை 619.09 கோடி ரூபாய் எனக் காட்டப்படுகிறது. இந்தப் பற்றாக்குறை 92-93 ஆம் ஆண்டு முடிவில் இருக்குமென சுட்டிக் காட்டிவிட்டு, வரி விதிப்பு மூலம் 70 கோடியும், சிக்கன நடவடிக்கை மூலம் 55 கோடியும் இந்தப் பற்றாக்குறைவில் குறைக்கப்படுமெனக் கூறப்பட்டுள்ளது. அப்படியே சுமார் 125 கோடி குறைந்தாலும் சுமார் 500 கோடி ரூபாய் பற்றாக்குறையை ஈடு கட்ட என்ன வழி?

அதாவது கடந்த ஆண்டைப் போலவே, திட்டச் செலவுகள் குறைக்கப்பட்டு, வளர்ச்சித் திட்டங்கள் தலைகாட்டாமற் போகும்.

முறைப்படச் சூழ்ந்தாலும்கூட திறப்பாடு இலாதவர் முடிவிவே செய்வார்கள் என்றார் வள்ளுவர். ஆனால் இவர்கள் முறைப்படவே சூழாத போது, திறப்பாடும் இல்லாத நிலையில் உருப்படியான நிதி நிர்வாகத்தையோ, அல்லது வளர்ச்சித் திட்டங்களை வகுக்கும் நிர்வாகத்தையோ எப்படிச் செம்மையாகச் செயல்படுத்த முடியும்?

முதலில் நான் குறிப்பிட்டுள்ளது போல் எண்ணெய், பருப்பு, தேங்காய், அரிசி எனப் பண்டங்களின் விலை ஏறிக்கொண்டேயிருக்கும் போது, தாம்பூலத்தை மணக்க வைக்கும் கிராம்புக்கு வரி விலக்கு அளித்துத் தங்களைக் கேலிக்குரியவர்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நிலவரியை உயர்த்தியிருப்பதின் மூலம் ஒரு விவசாயி எவ்வளவு இனிமேல் கட்டவேண்டும் தெரியுமா?

தற்போது பத்து ரூபாய் நிலவரி கட்டுகிற விவசாயி என வைத்துக் கொண்டால், அந்த விவசாயி அந்த பத்து ரூபாயுடன், 4 ரூபாய் 50 காசு செஸ் கட்ட வேண்டும். அத்துடன் லோகல் செஸ் சார்ஜ் ரூபாய் பதினைந்து! ஆக மொத்தம் அந்த விவசாயி, தற்போது 29 ரூபாய் 50 காசு கட்டிக் கொண்டிருந்தால், இப்போது உயர்த்தப்பட்டுள்ள நிலவரிக்குப் பிறகு அதே விவசாயி, செஸ் ரூபாய் 50ம், அடிப்படை நிலவரி ரூபாய் பத்துமாக மொத்தம் 70 ரூபாய் கட்ட வேண்டும். 29 ரூபாய் எங்கே? 70 ரூபாய் எங்கே? இது குறைந்த பட்சக் கணக்கு! இதுவே அதிகபட்சமெனில், செஸ் சர்சார்ஜ் 100 ஆக உயர்ந்து மொத்தம் 120 ரூபாய்!

ஓட்டல் பண்டங்களில் விலையும் ஏறி, சாதாரண மக்களும், நடுத்தர மக்களும் இந்த நிதி நிலை அறிக்கையினால் பாதிக்கப்படுகிறார்கள்.

ஆம்னி பஸ்களுக்கு இருக்கை ஒன்றுக்கு 1500 ரூபாய் வரி கட்டுவதற்கு நீதிமன்றமே உத்தரவிட்ட பிறகும், அந்த வரியை 500 ரூபாயாகக் குறைத்து - அவர்கள் முதலில் 1500 ரூபாய் அளவுக்குக் கட்டியிருந்த தொகையையும் திருப்பிக் கொடுத்த ஏழை பங்காளர் ஆட்சியல்லவா இது?

எனவே எந்த முனையில் வரி விதிப்பது, எந்த முனையில் வரியை இலகுவாக்குவது என்ற இலக்கணத்தைக் கூட, இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரித்த நாவலர் அவர்கள், உணர்ந்ததாகத் தெரியவில்லை.

வளர்ச்சி விகிதம் ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்திடுவதுதானே, நிதியாதாரத்திற்குச் சிறப்பு! நிர்வாகத்துக்குப் பெருமை!

அந்த வளர்ச்சி விகிதமும் இந்த அரசின் நிர்வாகத்தில் வீழ்ச்சியடைந்து வருகிறது என்பதற்கு, நிதிநிலை அறிக்கையுடன் இணைத்துத் தரப்பட்டுள்ள நிதிநிலைக் குறிப்பு (Budget Memorandum) புத்தகத்தை ஆதாரமாகக் கொண்டு மேலும் சில விபரங்களைத் தர விரும்புகிறேன்.

* **வருவாய்க் கணக்கிலான செலவுகள்** என்ற அடிப்படையில் **பொதுக் கல்வி** என்ற தலைப்பில், கழக ஆட்சியில் 90-91-ல் திட்ட மதிப்பீடு 931.65 கோடி ரூபாய். இது திருத்த மதிப்பீட்டில் 1047.99 கோடியாக அதாவது, 116.34 கோடி அளவுக்கு உயர்ந்தது. சுமார் 12 சதவிகிதம் உயர்வு!

இதே பொதுக் கல்வி தலைப்பில் கடந்த ஆண்டு திட்ட மதிப்பீடு 1211.50 கோடி ரூபாய், இது திருத்த மதிப்பீட்டில் 1265.64 கோடி ரூபாயாகியுள்ளது. அதாவது 54.14 கோடிதான் உயர்வு. சுமார் 4 சதவிகித உயர்வு மட்டும்தான்!

*ஊரக வளர்ச்சிக்காக 90-91-ல் கழக ஆட்சியில் திட்டமதிப்பீடு 178 கோடி ரூபாய். இது திருத்த மதிப்பீட்டில் 324 கோடி ரூபாய் என்ற அளவில் உயர்ந்தது. ஆனால், ஊரக வளர்ச்சிக்காக 91-92-ல் திட்ட மதிப்பீடு 317 கோடி ரூபாய் என்றும் திருத்த மதிப்பீட்டில் குறைந்து 305 கோடி ரூபாய் என்றும், ஆகியுள்ளது.

இந்த ஆண்டிலும் திட்ட மதிப்பீடாக அறிவிக்கப்பட்டுள்ளது 320 கோடி ரூபாய்தான்!

* கழக ஆட்சியில் 90-91-ல் உள்ளாட்சி மன்றம், ஊராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பில் திட்ட ஒதுக்கீடு 42.76 கோடி ரூபாய். இது திருத்த மதிப்பீட்டில் 85.92 கோடியாக உயர்ந்தது. ஆனால் கடந்த ஆண்டு, இதே தலைப்பில் 90.27 கோடி ரூபாய் என அறிவிக்கப்பட்ட போதிலும், திருத்த மதிப்பீட்டில் 87.62 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது.

இந்த அழகில் நிதிநிலை அறிக்கையிலும், நிதிநிலைக் குறிப்பு (Budget Memorandum) புத்தகங்களிலும் புள்ளி விபர முரண்பாடுகள் வேறு! உண்மைக்கு மாறான தகவல்கள் வேறு!

விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தால், அரசுக்கு 30 கோடி முதல் 40 கோடி ரூபாய் வரைதான் இழப்பு ஏற்படுகிறது என்பது துல்லியமாகத் தெரிந்தும்கூட, சென்ற ஆண்டு அறிக்கையிலும், இந்த ஆண்டு அறிக்கையிலும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதால் 560 கோடி இழப்பு என்று வேண்டுமென்றே திட்டமிட்டு கூறியது தவறான தகவல்!

அதைச் சுட்டிக் காட்டினால் நிதி அமைச்சர் சொல்கிறார். அவர் கூறியவாறு அதிகாரிகள் அச்சியற்றவில்லை என்பதாக!

பிறகு இவர், எதற்காக நிதியமைச்சராக இருக்கிறார் என்பது புரியவில்லை.

இதோ, அரசு வழங்கியுள்ள நிதிநிலைக் குறிப்பு (Budget Memorandum) புத்தகத்தில் பக்கம் 92-ல் ஒரு தவறு! அதைக்கூட அதிகாரிகள் கவனிக்கமாட்டார்கள் போலும்!

நாட்டுச் சாராவி வகைகள் என்ற தலைப்பில் திட்ட மதிப்பீடு 46 கோடி ரூபாய் - திருத்த மதிப்பீடு 47 கோடி ரூபாய் என அச்சடிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதற்குக் கீழே விளக்கம் தரும் போது, (ஆங்கிலத்திலும், தமிழிலும்) ஏழு கோடி ரூபாய் உயர்ந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 46க்கும் 47க்கும் இடையே வித்தியாசம் ஒரு கோடியா? ஏழு கோடியா? நாவலர்தான் விளக்க வேண்டும்!

* மின்சாரத்தின் மீது வரிகளும் தீர்வைகளும் என்ற தலைப்பில் கடந்த ஆண்டு திட்ட மதிப்பீடு 6.50 கோடி ரூபாய், திருத்த மதிப்பீடு 30.79 கோடி ரூபாய். இந்த ஆண்டு திட்ட மதிப்பீடே 55.82 கோடியென குறிப்பிடப்பட்டுள்ளதால், வரிகளும், தீர்வைகளும் மின்சாரத்துக்கு உயரக் கூடுமோ என்ற ஐயம் எழுகிறது.

* வேளாண்மைத் துறைக்கும் 90-91 கழக ஆட்சியில் திட்ட மதிப்பீடு 435.47 கோடி ரூபாய் - திருத்த மதிப்பீடு 529.42 கோடி ரூபாய்! இது 21.57 சதவிகித உயர்வாகும்.

ஆனால், இந்த ஆட்சியில் வேளாண்மைத் துறைக்கு 91-92-ல் திட்ட மதிப்பீடு 607.52 கோடி ரூபாய்! திருத்த மதிப்பீடு 611.09 கோடி ரூபாய்! அதாவது 0.6 சதவிகிதம்தான் உயர்வு.

* கழக அட்சியில் மருத்துவத்துக்கான திட்ட மதிப்பீடு 4 சதவீதத்துக்கு குறையாமலே அமைந்தது.

ஆனால் கடந்த ஆண்டு 91-92-ல் இந்தத் தலைப்பின் கீழ் 3.99 சதவிகிதம் என்ற அளவிற்குத்தான் ஒதுக்கப்பட்டது - அதுவும் இந்த ஆண்டு 3.94 சதவிகிதம் என்ற அளவிற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டு - முறையே 249.40 கோடி ரூபாய் என்றும், 285.53 கோடி ரூபாய் என்றும் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

* மீன்வளம் என்ற தலைப்பில் 90-91-ல் கழக ஆட்சியில் திட்ட மதிப்பீடு 10.04 கோடி ரூபாய். ஆயினும் செலவு அதிகரிக்கப்பட்டதால், இது திருத்த மதிப்பீட்டில் 14.02 கோடி ரூபாய் என்ற அளவிற்கு அதாவது 39.64 சதவிகித அளவிற்கு உயர்ந்தது.

ஆனால் நாவலரின் நிதிநிலை அறிக்கையில், கடந்த ஆண்டு 91-92-ல் திட்ட மதிப்பீடு 14.11 கோடி ரூபாய் என்று போடப்பட்டு, திருத்த மதிப்பீட்டில் 14.78 கோடி ரூபாய் என்ற அளவிற்கு அதாவது 4.75 சதவிகிதம் என்ற அளவிற்கு மட்டுமே உயர்ந்துள்ளது.

* ஆதி திராவிடர் பழங்குடியினர் நலனுக்காக 90-91-ல் கழக ஆட்சியில் மொத்தச் செலவில் 1.74 சதவிகிதம் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டது. அதாவது 83.74 கோடி ரூபாய். இது கடந்த ஆண்டு 91-92-ல் 1.65 சதவிகிதம் என்ற அளவிலும், இந்த ஆண்டு 1.58 சதவிகிதம் என்ற அளவிலும் மட்டுமே திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

* பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் என்ற தலைப்பில் கழக ஆட்சியின் நிதிநிலை அறிக்கையில் ஒரு பகுதி வருவதுண்டு. இதில் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் என்ற வார்த்தைகள் தலைப்பிலிருந்தே நீக்கப்பட்டு விட்டன. நிதிநிலைக் குறிப்பேட்டில் இருப்பது நிதிநிலை அறிக்கையில் இடம் பெறாதது ஏனோ?

90-91-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை நான் அவையிலே வைத்தபோது இந்தத் துறைக்காக 19.57 கோடி ரூபாய் கடந்த ஆண்டு செய்த ஒதுக்கீட்டினை - 30.70 கோடியாக உயர்த்தி உள்ளதாக அறிவித்தேன். இது 56.87 சதவிகித உயர்வாகும்.

கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் படித்த நாவலர் - இந்த 30.70 கோடி ரூபாய் 41.35 கோடி ரூபாயாக உயர்த்தப்படும் என்று அறிவித்திருந்தார்.

கடந்த ஆண்டு அறிக்கையில் 41.35 கோடி ரூபாய் என்ற அளவிற்கு இந்தத் துறைக்காக ஒதுக்கப்படும் என்று நாவலர் படித்த போதிலும், நிதி நிலைக் குறிப்புப் புத்தகத்தில் திட்ட மதிப்பீடு 36.09 கோடி ரூபாய் என்ற அளவிற்குத்தான் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தத் திட்ட மதிப்பீடும் இந்த ஆண்டு நிதி நிலைக் குறிப்புப் புத்தகத்திலே திருத்த மதிப்பீட்டில் எவ்வளவு என்று பார்க்கும்போது 34.40 கோடி ரூபாய் என்று குறைந்துள்ளது.

மேலும் கடந்த ஆண்டு இந்தத் துறைக்காக திட்ட மதிப்பீடு 36.09 கோடி ரூபாய் என்பது இந்த ஆண்டு 36.93 கோடி ரூபாய் என்ற அளவிற்கு மட்டுமே உயர்ந்துள்ளது.

அதாவது கழக ஆட்சி ஒரே ஆண்டில் இந்தத் துறைக்காக உயர்த்தியது 56.87 சதவிகிதம்!

இந்த ஆட்சியில் உயர்த்தியிருப்பது வெறும் 2.33 சதவிகிதம்தான்!

* வீட்டு வசதி என்ற தலைப்பில் கடந்த ஆண்டுத் திட்ட மதிப்பீடு 22.02 கோடி ரூபாய். இந்த ஆண்டுத் திட்ட மதிப்பீடு 21.12 கோடி ரூபாய்.

* சுற்றுலா என்ற தலைப்பில் கடந்த ஆண்டுத் திட்ட மதிப்பீடு 1.12 கோடி ரூபாய். இந்த ஆண்டுத் திட்ட மதிப்பீடு 0.98 கோடி ரூபாய்.

எனவே உடன்பிறப்பே, நிதிநிலை அறிக்கை என்பது, உயரும் வருமானத்திற்கு ஏற்ப ஒதுக்கீடுகளின் சதவிகிதம் உயர்ந்துள்ளதா என்பதைக் காட்டும் கண்ணாடியாக விளங்க வேண்டும்.

அந்த அடிப்படையில் பார்க்கும்போது, இந்த நிதிநிலை அறிக்கை ரசம்பூசாத கண்ணாடியாக மட்டுமல்ல! உடைந்து சிதறிய கண்ணாடியாகவே காட்சி தருகிறது.

முதலமைச்சர் ஜெயலலிதாவின் திறமையான நிர்வாக நெறியில் நின்று, உறுதியான நடவடிக்கைகள் எடுத்து, நிதி சீர்குலைவு நிலைமையைத் தவிர்த்துள்ளோம்.

என்று நிதிநிலை அறிக்கையில் நாவலர் குறிப்பிட்டிருக்கும் நிலைமைக்கும் - இப்போதுள்ள நிலைமைக்கும் ஏதாவது பொருத்தமிருக்கிறதா?

என்ன உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

பற்றாக்குறை சரி செய்யப்பட்டு விட்டதா?

நோட்டு அடிக்கும் அதிகாரமில்லாத மாநில அரசுகள், அதுவும் இதைப் போன்ற அரசுகள் வளர்ச்சிப் பணிகளையும், திட்டச் செலவுகளையும் குறைத்துக் கொண்டு பற்றாக்குறையை சரிக்கட்டி விட்டோம் என்று பறைசாற்றிக் கொள்ள முடியுமே தவிர, எள்ளளவு உரிய பயனாவது இந்த மாநில மக்கள் அடைய முடியுமா?

ஒரு கோடிப் பேருக்கு - பத்து லட்சம் பேருக்கு - என்று அறிவிப்பு விளம்பரங்களை வேண்டுமானால் செய்து கொண்டிருக்கலாம்!

எத்தனை பேருக்குக் கிடைத்தது என்ற யதார்த்த உண்மை, பொதுமக்களுக்கு நன்றாகவே புரியும்!

ஒன்றியம் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் தருவோம் என்று அறிவித்துவிட்டு, ஏற்கெனவே அந்த ஒன்றியங்கள் பல்வேறு திட்டங்களின் மூலம் பெற்றிடும் தொகையைக் கூட்டிக் காட்டி, இதுதான் அந்த ஒரு கோடி ரூபாய் உதவி! என்று இந்த அரசு ஏமாற்றும் வேலை செய்யவில்லையா?

அதே போன்று பம்மாத்து காட்டுவதுதான் இந்த பட்ஜெட்!

அன்புடன்,

மு. க.

(13-03-1992)

1889. தகாப் போக்கும் - "தடா"ப் போக்கும்!

உடன்பிறப்பே,

மத்தியில் காங்கிரஸ் அரசினரின் செயல்களும், பொருளாதாரத்தில், தொழில் துறையில் கடைப் பிடிக்கத் தொடங்கியுள்ள கொள்கையால், நமது நாடே கொள்ளை போய்விடக்கூடிய அபாயகரமான நிலைமைகளும், அதேபோலவும் இன்னும் சொல்லப் போனால், அதைவிட மோசமாகவும் மாநிலத்தில் உள்ள அ.தி.மு.க. அரசு நடத்தும் அடாவடித்தனங்களும், அடக்குமுறைகளும், அளவிடமுடியாத ஊழல்களும், ஆணவப் பேச்சுக்களும், குரூரச் செய்கைகளும், நான் கோவை சிதம்பரனார் பூங்கா கூட்டத்தில் குறிப்பிட்டது போல மக்களை, ஓர் அமைதியான புரட்சிக்கு விரைவுபடுத்திக் கொண்டிருக்கிறது என்பதில் துளியும் ஐயமில்லை!

விலைவாசி ஏற்றம் சாதாரண மக்களின் கழுத்தைத் திருகிக் கொண்டிருக்கிறது. பஸ் கட்டண உயர்வு, ரயில் கட்டண உயர்வுகள் ஏழைகளின் கால்களை உடைத்துக் கொண்டிருக்கின்றன. அத்யாவசியப் பண்டங்கள் கிடைக்காமலும், கிடைத்தாலும் அதன் விலைகள் ஆகாயத்துக்கும், பூமிக்குமாக உயர்ந்து நின்று பயமுறுத்துவதும் எளியோரை மிரட்சி அடையச் செய்துள்ளது.

நாட்டு மதுக்கடைகளை மூடிவிட்டோம். வெற்றி! வெற்றி! எனக் காட்டுக் கூச்சல் போட்டுக்கொண்டே, கள்ளச் சாராய பேராறுகளில் ஆளுங்கட்சியினர் படகுகளில் சவாரி செய்து பரமானந்தம் காணுகின்றனர்.

பலரைப் பரலோகப் பயணம் நடத்தவும் விசா வழங்கிக் கொண்டிருக்கின்றனர். சேலத்தில், செங்கற்பட்டில், மயிலாடுதுறையில் என்று விஷச்சாராயம் அருந்தியோர் மாண்டு மறைந்த எண்ணிக்கை மறைக்கப்படினும், ஆங்காங்கு உயிரோடு இருப்போர், உண்மை எண்ணிக்கையை உணர்ந்தே இருக்கின்றனர்.

உதட்டில் உபதேசம்! உள்ளமோ படுமோசம்! என்பதுபோல, மாநில முதல்வர் பேசுவதெல்லாம் முற்றும் துறந்த தியாக சீலரைப் போலத்தான்!

அந்தப் பேச்சு, அரசாங்க நிலத்தை அதுவும் நாலு கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தை - இரண்டு கோடி ரூபாய்க்குச் சுருட்டி வாயில் போட்டுக் கொள்ளப் போடப்படும் திரையே தவிர வேறில்லை!

எவராவது, எந்த வீராதி வீரராவது - அதாவது பத்திரிகை நடத்துகிற உத்தம புத்திரர்கள் கேட்டனரா? அமைச்சர்களின் ஒழுங்குமுறை விதிகளை அரசாங்கமே வெளியிட்டிருக்கும்போது, அரசாங்கச் சொத்தினை ஒரு முதலமைச்சரே வாங்குவது என்ன நியாயம் என்று கேட்டதுண்டா?

நமது ஏடுகள் எழுதுகின்றன - இந்த அநியாயத்தைக் கண்டிக்கின்றன - நடுநிலை ஏடுகள் என்பவை என்ன ஆயின? பத்திரிகா தர்மம் எங்கு போய் ஒளிந்து கொண்டது?

பணபலத்தால் எல்லா நீதி நியாயங்களையும், நெற்றி அடி கொடுத்து நிர்மூலமாக்கி விடலாம் என்ற நெஞ்சழுத்தம் இருப்பதால்தான் பட்டப் பகலில் கொள்ளையடிப்பது போல, அரசு சொத்துக்கள் போயர்ஸ் தோட்டத்து உடைமைகளாக்கப்படுகின்றன.

கழக ஆட்சியில் அரசுடைமையாக்கப்பட்டு, அரசுக்கு நல்ல ஆதாயம் தந்து வந்த தொழிற்சாலைகளை, டெண்டர் விடாமலேதான் கொடுத்தேன் என்று பகிரங்கமாக முதலமைச்சர் முழங்குகிறார்.

அதிலே நடைபெற்ற கோடிக்கணக்கான ரூபாய் பேரம் தெரிந்தும் கூட, டெண்டர் விடாத முறைகேட்டைக் கூட தமிழ்நாட்டு ஏடுகள் பெரிதுபடுத்திடத் தயாராக இல்லை!

பிறகு எதனைப் பெரிதுபடுத்துகின்றன? மகாமகத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் செத்ததையும், மகாமகம் அ.தி.மு.க. மாநாடாக நடத்தப்பட்டதையும் கண்டித்து, உண்மைகளை வெளியிட்டவர்களுக்கெல்லாம் ஆண்டவன் கூலி கொடுப்பான் என்று அம்மையார் அவையில் இட்ட சாபத்தை, நியாயப்படுத்த ஒன்றையொன்று முந்துகின்றன!

தடாச் சட்டத்தை உயர்த்திக் காட்டி, எதிர்க் கட்சிகளை மிரட்டும் ஏனோ தானோ பேச்சு எல்லை மீறுகிறது!

மக்கள் அமைதியான புரட்சிக்குத் தயாராகாமல் இனியும் மதோன்மத்தர்களாக இருப்பர் என எதிர்பார்ப்பது, மகுடஞ்சூடிகளின் மமதைக்கு எடுத்துக்காட்டாக இருக்கலாமே தவிர, நாட்டு நிலைமை அதுவல்ல!

தடாவைத் தவறாகப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டுமென மத்திய உள்துறை அமைச்சரே உணர்ந்து அறிவித்திடும்போது, இதோ என் கையில் உள்ளது தடா எனும் கொடுவாள்! இதனால் என்னை எதிர்ப்போர் தலைகளை வெட்டுவேன்! என்று ஓங்காரக் கூச்சல் போடும் ஒரு முதலமைச்சரைத் தமிழகம் பார்த்து வியக்கிறது!

இந்த முதலமைச்சரின் பழி வாங்கும் தீய நெஞ்சுக்கு அடையாளமாகத்தான் இன்று பலர் தமிழகச் சிறைகளில் தடாக் கைதிகளாக அடைப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசனும், அவரது கணவரும் தடாக் கைதிகளாக சிறையில் அடைபட்டு, எழுபது நாட்களுக்கு மேலாகின்றன! தம்பி நெல்லை வை. ரவிச்சந்திரன் சிறையில் தள்ளப்பட்டு சில மாதங்களே கூட ஓடிவிட்டன!

ஆனால் அதே நேரம், தராசு அலுவலகத்தில் நுழைந்து இரு ஊழியர்களைக் கொலை செய்தவர்கள், அமைச்சர்களின் காரில் அமர்ந்து அழகாகப் பவனி வந்து கொண்டிருக்கின்றனர்!

கட் அவுட் இலாகாவுக்கு ஒரு மந்திரி, கார்கள் ஆயிரம் தயாரிக்க ஒரு மந்திரி, மேடை போட ஒரு மந்திரி, வரவேற்பு வளைவு கட்டும் இலாகாவுக்கு ஒரு மந்திரி, மலர்ப்பாதை இலாகாவுக்கு ஒரு மந்திரி, குட்டி விமானத்தில் பூமாரி பொழிய ஒரு மந்திரி, கோடி கோடியாகப் பெட்டியில் குவிக்கும் இலாகாவுக்கு ஒரு மந்திரி, என்பது போல அடியாட்களை வைத்து, எதிர்க்கட்சியோ அல்லது சொந்தக் கட்சியோ, எந்தக் கட்சியாயினும் அவர்களைத் தாக்கிட, தீர்த்துக் கட்ட ஓர் இலாக்கா - அதற்கோர் மந்திரி, இப்படியல்லவா நடைபெறுகிறது இந்த ராஜ்யம்!

இவற்றைத் தட்டிக் கேட்க பத்திரிகா தர்மம் பேசும் ஏடுகள் தயங்கும்போது அவற்றையும் புறக்கணித்து, அந்த

ஏடுகள் தாங்கிடும் இந்த அரசையும் கண்டித்து எழுச்சி முரசம் கொட்டிடத்தான் கழகத்தின் இளைஞர் அணியினர் பட்டி தொட்டியெல்லாம் சைக்கிள் பேரணிகள் நடத்தி - மக்கள் விரோத ஆட்சி குறித்த விளக்கங்களை அளித்து வருகின்றனர். அவர்களையும், அந்த இளஞ்சிங்கங்களை ஆங்காங்கு ஊக்கப்படுத்தி, ஒத்துழைப்பு நல்கிடும் கழகச் செயல்வீரர்களையும் பாராட்டுகிறேன்.

வரும் 23-ஆம் நாள் திங்கட்கிழமையன்று இளைஞர் அணியினரும், மகளிர் அணியினரும் இந்த அரசின் தகாப்போக்கையும், தடாப் போக்கையும் கண்டித்து மாநில முழுதும் (புதுவை மாநிலம் உட்பட) பல இடங்களில் ஒருநாள் அடையாள உண்ணா நோன்பு மேற்கொள்கிறார்கள்.

எந்த இடத்தில், எந்த நேரத்தில் இந்த உண்ணா நோன்புப் போராட்டம் நடைபெறும் என்பதை இளைஞர் அணி, மகளிர் அணி செயலாளர்களும் - மாவட்டங்களின் அமைப்பாளர்களும் ஒழுங்குப்படுத்தி அறிவிப்பார்கள்!

சகோதரியொருவர் சிறையில் அடைக்கப்பட்டு பழிவாங்கப்படுகிறார் - சகோதரர்கள் பழி வாங்கப்படுகிறார்கள் - இந்தச் சதித் திட்டத்தை முறியடிக்க கழக வீராங்கனைகள் புறப்படட்டும் 23-ஆம் நாள்!

அடலேறுகளாம் இளைஞரணித் தம்பிமார்கள் ஆர்த்தெழட்டும் 23-ஆம் நாள்!

ஆணவ ஆட்சியை எதிர்த்து -
அடக்குமுறை ஆட்சியை எதிர்த்து -
மக்கள் விரோத ஆட்சியை எதிர்த்து -
தேர்தல் நேர வாக்குறுதிகளை
நிறைவேற்றாத ஆட்சியை எதிர்த்து -
வெறும் வாய் வக்கணை பேசிக்
கொண்டிருக்கும் ஆட்சியை எதிர்த்து -

மார்ச் 23 நடைபெறும் மாநிலம் தழுவிய அறப்போர் - அமைதிப் போர் - அடையாள உண்ணா நோன்புப் போர் -

அடுத்து அறிவிக்க இருக்கும்
மகத்தான அறப் போராட்டத்திற்கான,
ஓர் முன்னோடிப் போராட்டம்!

களம்பல கண்ட கழகத்தின் வீறு கொண்ட இளைஞர்
அணிப் பட்டாளமே எழுக!

மகளிரின் மாபெரும் அணிவகுப்பே கடலெனத் திரளுக!

அன்புடன்,

மு. க.

(21-03-1992)

1890. அறிவுபூர்வமான சிந்தனையும் ஆக்கபூர்வமான அணுகுமுறையும் தேவை!

உடன்பிறப்பே,

தமிழகத்தில் உள்ள மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது அவர்களை இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியால் சுடுகிறார்கள் - கொல்லுகிறார்கள் - மீனவர்கள் செல்லும் படகைக் கைப்பற்றி மீனவர்களை கடலில் தூக்கி வீசுகிறார்கள் - வீசப்பட்டவர்களில் மாண்டவர்கள் போக எஞ்சியிருந்தவர்களை ஈழத்துப் போராளிகள் காப்பாற்றிப் பாதுகாத்து, உணவு, உடை வழங்கி திரும்பவும் தமிழகத்திற்கு அனுப்பி வைக்கிறார்கள் என்பவை எல்லா ஏடுகளிலும் படங்களுடன் செய்தியாகவே வெளிவந்தவைதான்!

ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் முதல்வர் ஜெயலலிதா கோட்டை கொத்தளத்தில் கொடியேற்றி வைத்துவிட்டு, கச்சத் தீவை மீட்போம் என்று கடுஞ்சபதம் செய்தார். அது மத்திய அரசு கவனிக்க வேண்டிய விவகாரம் என்று அருகிலிருந்தவர்கள் மெத்தப் பணிவுடன் மெல்லிய குரலில் சொன்ன பிறகும், கச்சத் தீவு ஒப்பந்தத்தை மீண்டும் கிளற முடியாது என மத்திய அரசும் தெரிவித்த பிறகும் அந்த சபதம் மெதுவாகக் காற்றில் கரைந்து போய் விட்டது.

கழக ஆட்சியின்போது, ஆட்சியின் சார்பாகக் கடுமையான முறையில் மறுப்பு தெரிவித்தும் - கழகத்தின் சார்பிலும் கழகமும் அனைத்துக் கட்சிகளும் கண்டனக் கூட்டங்கள் நடத்தி கச்சத் தீவு ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் கூட, அன்றிருந்த இந்திரா காந்தி அரசு அதனைக் காதிலே போட்டுக்கொள்ளாமல் இலங்கை அரசுடன் கச்சத் தீவு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது.

நமது எதிர்ப்பின் வலிமையினால், அந்த ஒப்பந்தத்தில் தமிழ்நாட்டு மீனவர்கள் கச்சத் தீவு அருகே மீன் பிடிப்பது போன்ற சில உரிமைகள், விட்டுக்கொடுக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டன.

ஆனால் கழக ஆட்சி 1976-ல் கலைக்கப்பட்ட பிறகு, கச்சத் தீவு ஒப்பந்தத்தில் இடம் பெற்றிருந்த அந்த உரிமைகளும் பறிக்கப்பட்டுவிட்டன. அதற்கு இந்தியாவின் மத்திய அரசும் சம்மதம் தெரிவித்து விட்டது. அதன் விளைவாகத்தான் நமது மீனவர்களின் பிழைப்பிலே மண்ணைப் போட்டு, அவர்கள் கடலில் மீன் பிடிப்பதைக் கண்டாலே சுட்டுத் தள்ள சிங்கள ராணுவத்தினர் துடியாய்த் துடிக்கிறார்கள்.

கச்சத் தீவை மீட்பது பிறகு இருக்கட்டும்! மச்சத் தொழிலை நம்பி வாழுகிற நமது மீனவர்களின் உரிமைகளையாவது மீட்டுத் தர மத்திய அரசு முன்வர வேண்டாமா?

இதுகுறித்து சட்டப் பேரவையில் காங்கிரஸ் உறுப்பினர், பிரச்சினை எழுப்பியபோது முதல்வர் ஜெயலலிதா, இது குறித்து பிரதமர் நரசிம்மராவுக்குக் கடிதம் எழுதிப் புகார் செய்திருக்கிறேன். இதற்கு நிரந்தரத் தீர்வு காண வற்புறுத்தியுள்ளேன் என்று விளக்கம் அளித்திருக்கிறார் சட்டப்பேரவையில்!

காங்கிரஸ் உறுப்பினர் அத்துடன் பிரச்சினையை நிறுத்தாமல், மேலும் தொடர்ந்து பேசும்போது,

கச்சத் தீவை மீட்போம் என்று சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். தமிழ்நாடு முழுதும் பல மீனவர் கிராமங்களில் பல நூறு விதவைகள் உருவாகி வருகிறார்கள். 1977-ஆம் ஆண்டு இந்திய வெளியுறவுத் துறைச் செயலாளர் இலங்கை அரசுக்கு அனுப்பி உள்ள கடிதத்தில் தமிழக மீனவர்கள் கச்சத் தீவு அருகே மீன்பிடிக்க வரமாட்டார்கள் என்று கூறியுள்ள விஷயம் இந்த அரசுக்குத் தெரியுமா? அந்தக் கடிதத்தை வாங்கி கிழித்தெறிய வேண்டாமா? என்று கேட்டுள்ளார்.

அதற்கு பதில் அளித்த ஜெயலலிதா அவர்கள்,

> முந்திய வெளியுறவு செயலாளர் இலங்கை அரசுக்கு கடிதம் எழுதியது பற்றி தெரியுமா, என்று உறுப்பினர் கேட்கிறார் 1977-ல் எழுதப்பட்ட கடிதம் இந்த அமைச்சரவைக்கு தெரியாது. மத்திய அரசிடம் கேட்டு தெரிவிக்கிறோம்.
>
> என்று கூறியுள்ளார்.

இந்தப் பிரச்சினை குறித்து இந்த மார்ச் மாதம் (10.3.92) தேதியில் மாநிலங்களவை அ.தி.மு.க. உறுப்பினரும், அ.தி.மு.க.

பொருளாளரும், முன்னாள் தமிழக அமைச்சர்களில் ஒருவருமான நண்பர் மாதவன், மாநிலங்களவையில் பேசியது வருமாறு -

> "28.6.1974-ல் இலங்கையும், இந்தியாவும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது. அப்போது தமிழ்நாட்டில் இருந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, அந்த ஒப்பந்தம் மூலம் நமது உரிமைகளை சரணாகதி செய்துவிட்டதாக எதிர்ப்பு தெரிவித்தது. நாடாளுமன்றத்தில் இருந்த அன்றைய தமிழக எம்.பி.க்கள் இந்த ஒப்பந்தம் நமது நாட்டின் நலன்களுக்கு குந்தகம் விளைவிக்கும், ஆயிரக்கணக்கான மீனவர் வாழ்வுக்கு ஆபத்து ஏற்படுத்தும். எதிர்காலத்தில் ஒரு யுத்தம் உருவாக இதுவே காரணமாக அமையக்கூடும் என்றெல்லாம் எச்சரித்தார்கள் என்று அவர்கள் தெரிவித்த அச்சம் இன்று உறுதியாகி விட்டது....."

தமிழ்நாட்டில் இருந்த தேர்ந்தெடுக்கப் பட்ட அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்ட 50 நாட்களுக்குப் பிறகு, அதாவது மார்ச் 23-1976ல், இந்திய அரசு இலங்கை அரசுடன் மற்றொரு ஒப்பந்தம் செய்து கொண்டது. இது குறித்து நாடாளுமன்றத்தில் எந்த விவாதமும் நடைபெறவில்லை. இந்த ஒப்பந்தத்திற்கு எந்த விளம்பரமும் செய்யப்படவில்லை.

இது குறித்து தமிழ்நாட்டு மக்களுக்கு எதுவுமே தெரியாது.... அதன் பிறகு இந்திய வெளியுறவுச் செயலாளர் மார்ச் 23-1976 அன்று இலங்கை அரசுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார் - அந்தக் கடிதத்தில் மீன்பிடிக்கும் படகுகளும், இந்திய மீனவர்களும் வரலாற்றுப்பூர்வமான தண்ணீர் பகுதியில், சம்பிரதாயமான கடல் பிரதேசத்தில், இலங்கைக்குச் சொந்தமான பிரத்தியேக பொருளாதார பகுதியில் மீன் பிடிக்க மாட்டார்கள் (The fishing vessels and fisherman of India shall out engage fishing the historical waters, the traditional sea and the exclusive economic zone of Sri Lanka)

- இதிலிருந்து 1976-ல் செய்து கொண்ட ஒப்பந்தம் 1974-ல் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கும், நாடாளுமன்றத்தில் இந்திய மீனவர்களுக்காக அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கும் முற்றிலும் முரணானது என்பது தெளிவாகத் தெரிகிறது. தேர்ந்தெடுக்கப் பட்டிருந்த தமிழக அரசுக்கு தெரியாமலும், வெளியிடப்படாமலும் 1976-ல் செய்து கொண்ட இந்திய இலங்கை ஒப்பந்தம் தமிழக

மக்களுக்கும், மீனவர்களுக்கும் தரப்பட்ட மரண அடியாகும். அவர்கள் ஏமாற்றப்பட்டு விட்டார்கள். - இவ்வாறு நண்பர் மாதவன் பேசியுள்ளார்.

மாதவன் அவர்களுக்கு இந்திய அரசின் கடிதம் பற்றி மார்ச் 10-ந் தேதியன்றே தெரிந்திருந்து அவர் மாநிலங்களவையில் பேசியது, மாண்புமிகு முதல்வர் ஜெயலலிதாவுக்கு மார்ச் 20-ந் தேதியன்று கூட தெரியவில்லை என்பது வியப்புக்குரிய ஒன்றேயாகும்.

நண்பர் மாதவன் அவர்கள் பத்து நாட்களுக்கு முன்பு டில்லி ராஜ்யசபையில் பேசியுள்ள பேச்சுக்கு பிறகாவது, தமிழக மீனவர் கஷ்டத்துக்கு தி.மு.க. ஆட்சி காரணமல்ல என்பதையும் - தி.மு.க. ஆட்சி எதிர்த்தும்கூட, மத்திய அரசு ஒப்பந்தத்தை செய்துகொண்டது என்பதையும் - அப்படிச் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் இருந்த மீனவர்க்கான உரிமைகளையும் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு 50 நாட்கள் கழித்து மத்திய அரசு இலங்கைக்கு விட்டுக் கொடுத்துவிட்டது என்பதையும் ஜெயலலிதா அவர்கள் புரிந்து கொண்டால் சரி!

எதற்கெடுத்தாலும் கழகத்தின் மீது அவதூறு கூறுவதை விட்டுவிட்டு, இதுபோன்ற முக்கிய பிரச்சினைகளில் ஆக்கபூர்வமாக செயல்பட முன்வருவதுதான் அறிவுபூர்வமாக ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அன்புடன்,

மு. க.

(22-03-1992)

குறிப்பு : இந்தக் கடிதம் எழுதி முடித்து அச்சான பிறகு, நாகப்பட்டினம் அருகே தமிழக மீனவர்கள் 7 பேரை சிங்கள இராணுவத்தினர் இழுத்துச் சென்று சுட்டுக் கொன்றுவிட்டார்கள் என்ற செய்தி வந்துள்ளது.

1891. ஊழல் ஆட்சியென ஊருக்கு உணர்த்துவோம்!

உடன்பிறப்பே,

தனக்குப் பிடிக்காதவர்களின் தொழிற்சாலைகள், இடங்கள், உடைமைகள் இவற்றையெல்லாம் தி.மு.க. ஆட்சியில் அரசாங்க உடைமைகளாக்கி விட்டார்கள். அவற்றை இப்போது நாங்கள் திருப்பிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று அமைச்சர்கள் தங்களாட்சியின் ஊழலுக்குப் புதிய வியாக்யானங்களைச் செய்து வருகிறார்கள்.

எத்தகைய உடைமைகளைத் தனியாரிடமிருந்து எடுத்து அரசுடைமை யாக்கினோம் என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

டி.வி.எஸ். அதிபர் தி.மு.க.வுக்கு தனிப்பட்ட முறையில் விரோதியா? அல்ல! அவர் மட்டுமல்ல! பொள்ளாச்சி மகாலிங்கமோ, குடந்தை காசிராமனோ தி.மு.க.வுக்கு தனிப்பட்ட முறையில் பிடிக்காதவர்கள் அல்ல!

ஆனால் கழக அரசு வகுத்த கொள்கை அடிப்படையில், உரிய நட்ட ஈடு கொடுத்து டி.வி.எஸ்., ஏ.பி.டி. ராமன் அண்ட் ராமன், எஸ்.ஆர்.வி.எஸ். ஆகிய பெரிய பஸ் கம்பெனிகளை அரசுடைமையாக்கி அவற்றைப் போக்குவரத்துக் கழகங்களாக்கினோம்.

ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி என்பது எம்.ஜி.ஆர். பெயரில் அமைக்கப்பட்ட தல்ல! அப்படி அமைத்திருந்தால் எம்.ஜி.ஆர். மருத்துவக் கல்லூரி என்று பிரபலமான பெயரையே சூட்டியிருப்பார்கள். அந்தக் கல்லூரி அரசு நிலம் ஆக்ரமிக்கப்பட்டு கட்டப்பட்டது மட்டுமல்ல. தேசிய நெடுஞ்சாலையையும் அனுமதியின்றி ஆக்ரமித்துக் கட்டப்பட்டதாகும். அதன் உரிமையாளர்கள் உடையார்

குழுவினரும் தி.மு.க.வுக்கு தனிப்பட்ட முறையில் பகைவர்கள் அல்ல! அவர்களின் குழுவிலேயே தீர்மானித்துத் தான் உரிய நட்ட ஈடு பெற்றுக்கொள்ளச் சம்மதித்து ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை அரசிடம் ஒப்படைத்தனர்.

சில பித்தலாட்டக்காரர்கள் பேசுவது போல, ஸ்ரீராமச்சந்திரா கல்லூரி என்ற பெயரை தி.மு.க. ஆட்சியில் மாற்றவே இல்லை. அந்தக் கல்லூரியின் விஸ்தாரமாக விரிந்து பரந்த சுற்றடைப்புக்குள் தனியாக ஒரு ஆராய்ச்சி நிலையம் தாமரை என்ற பெயரில் தொடங்கப்பட்டது. ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும் தாமரை என்ற பெயரை அகற்றிவிட்டார்.

லட்சக்கணக்கான ரூபாய் கட்டணம் செலுத்தி அந்த மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த மாணவர்கள், கழக ஆட்சி அந்தக் கல்லூரியை எடுத்துக் கொண்ட பிறகு, அந்தக் கட்டணக் கொள்ளையிலிருந்து தப்பித்துக் கொண்டனர்!

எம்.ஜி.ஆர். ஆட்சியில் மாமல்லபுரத்தில் லாபகரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த அரசின் சுற்றுலாத் துறை ஓட்டலை தனியாருக்குத் தாரை வார்த்தார்கள். தி.மு.க. ஆட்சியில் அதனை மீண்டும் அரசின் சுற்றுலாத் துறையே எடுத்துக் கொண்டது. அதை எதிர்த்து அந்தத் தனியார் தொடர்ந்த வழக்கில், சில நாட்களுக்கு முன்பு கழக ஆட்சியின் நடவடிக்கை சரிதான் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பழைய மிருகக் காட்சி சாலைக்கு அருகே அல்லிக்குளம் பகுதியில் 324 கிரவுண்ட் நிலத்தை - பழனி பெரியசாமி என்பவரின் பல்லவன் ஓட்டல் நிறுவனத்திற்கு,

நாற்பது கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தில் ஒரு கோடியே 76 லட்சம் என்று மதிப்பிட்டு - அந்தக் குறைந்த தொகையையும் பணமாகத் தர வேண்டாம் - தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தின் பங்குத் தொகையாக மாற்றிக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் தாரை வார்த்துத் தரப்பட்டிருந்தது. கழக அரசு - சம்பந்தப்பட்ட அரசாணைகளை ரத்துச் செய்து அந்த நிலத்தை மீண்டும் கைப்பற்றியது.

திருவான்மியூர் மாமல்லபுரம் கடற்கரை சாலையில் திருவிடந்தை என்று ஒரு கிராமம். இந்தக் கிராமத்திலுள்ள அருள்மிகு நித்திய கல்யாண பெருமாள் சுவாமி ஆலயத்திற்குச்

சொந்தமான 299 ஏக்கர் நிலத்தை மோகன்ராவ் தண்டமுடியின் கூட்டுத்துறைக்கு தாரை வார்த்துத் தரப்பட்டது. மாவட்ட கலெக்டர் - ஆலய நிலத்துக்கு - ஏக்கர் ஒன்று 10 ஆயிரம் ரூபாய் என்று குறைத்து மதிப்புத் தந்திருந்தார். ஆலயத்தின் தக்காரோ ஏக்கர் ஒன்றுக்கு 75 ஆயிரம் ரூபாய் தர வேண்டும் என்று வலியுறுத்தினார். அந்த நிலங்களின் அரசாங்க மதிப்பு ஏக்கர் ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய். மொத்த மதிப்பீடு 3 கோடி ரூபாய் ஆகிறது.

ஆலயத்திற்குச் சொந்தமான இந்த 3 கோடி ரூபாய் சொத்தை மோகன்ராவ் தண்டமுடிக்குத் தர ஆணையிடப்பட்டிருந்தது. கழக ஆட்சிக் காலத்தில் - இந்த நிலம் அருள்மிகு நித்திய கல்யாணப் பெருமாள் சுவாமியின் ஆலயத்தின் கையை விட்டுப் போகாமல் தடுக்கும் வகையில் - உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சென்னை வள்ளுவர் கோட்டத்துக்கு அருகே மோகன்ராவ் தண்டமுடியின் கூட்டுத் துறைத் திட்டத்தில், பேரால் - 83 கிரவுண்ட் நிலத்தை நட்சத்திர ஓட்டலும், வணிக வளாகமும் அமைத்திட தாரை வார்த்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவரால் - இந்த நிலம் கிரவுண்ட் ஒன்றுக்கு ரூ. 1.5 லட்சம் என்று மதிப்பிடப்பட்டிருந்தது. நில நிர்வாக ஆணையரே கிரவுண்ட் ரூ. 2.93 லட்சம் என்று நிர்ணயம் செய்திருந்தார். ஆனால் அரசு மதிப்பீடு, கிரவுண்ட் ஒன்றுக்கு ரூ. 3.5 இலட்சம் என்பதாகும். இதன்படி நிலத்தின் மொத்த மதிப்பு சுமார் 3 கோடி ரூபாயாகும்.

பொது நோக்கத்திற்காக - பூங்கா அமைப்பதற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட இந்த நிலத்தை தண்டமுடியிடமிருந்து மீட்கும்வகையில் கழக அரசு உத்தரவு பிறப்பித்தது.

இப்படி முறைப்படித்தான் தனியாரிடம் இருந்து தி.மு.க. ஆட்சியில் குறிப்பிட்ட சில தொழில் நிறுவனங்களும் - இடங்களும், உடைமைகளும் அரசுக்கு திரும்ப பெறப்பட்டன! ஆம்! நேர்மையான நிர்வாக அடிப்படையிலும், ஊழல்கள் களையப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும், அரசு வருவாய் பெருக வேண்டும் என்ற அடிப்படையிலும் அவ்வாறு செய்யப்பட்டது. அதன் தொடர்பாகத்தான் ஒரு தனியாரின் பீர் தொழிற்சாலையையும் அரசுத் துறையின் உடைமையாக்கப்பட்டது.

அதுகுறித்து நான் எதுவும் சொல்லாமலே, இதோ! 1992-93 மாநில ஆயத் தீர்வை கொள்கை விளக்கக் குறிப்பு என - இந்த ஆண்டு ஜெயலலிதா அரசு அவைமுன்,வைத்துள்ள புத்தகத்தில் உள்ளவைகளையே இங்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அந்தப் புத்தகத்தில் 10, 11, 12 - ஆம் பக்கங்களில் என்ன சொல்லப்படுகிறது. அவை பின்வருமாறு :-

1. தமிழ்நாடு சாராவிக் கழகம் நிறுவப்பட்டமை

இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் பீர் ஆகியவைகளைத் தயாரிக்கும் பணியை மேற்கொள்ளுவதற்கென அரசுத் துறையில் தமிழ்நாடு சாராவிக் கழகம் நிறுவப்பட்டது. இக்கழகம் ரூ. 6 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் 1989-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 10-ஆம் நாளன்று 1956-ஆம் ஆண்டைய கம்பெனிகள் சட்டத்தின்கீழ் முறையாக இணைக்கப்பட்டது.

2. பீர் தயாரித்தல்

தமிழ்நாடு சாராவிக் கழகம் திருவாளர்கள் எம்பீ வடிப்பாலை நிறுவனத்திடமிருந்து, பீர் வடிசாலையை ஈட்டுக்கடன் பொறுப்புகளை உள்ளிட்டு ரூ. 8.02 கோடிக்கு வாங்கி 1989-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பீர் தயாரித்து புட்டிகளில் அடைக்கும் பணியைத் தொடங்கியது.

3. நாட்டு மது தயாரித்தல்

பின்னர் 1990-ஆம் ஆண்டில் முந்தைய அரசால் நாட்டு மதுத்திட்டம் புகுத்தப் பட்டபோது, தமிழ் நாடு வாணிபக் கழகத்தின் வாயிலாக நாட்டு மது மொத்த விற்பனை செய்வதற்கென, நாட்டு மது தயாரிக்கும் பணி தமிழ்நாடு சாராவிக் கழகத்தின் வசம் விடப்பட்டது. தமிழ்நாடு சாராவிக் கழகம் தனது நாட்டு மது தயாரிக்கும் 11 பிரிவுகள் வாயிலாக 20.7.1990 முதற்கொண்டு நாட்டு மது தயாரிக்கத் தொடங்கியது.

4. நாட்டு மது தயாரிக்கும் தொழிற்சாலைகளை மூடுதல்

இம்மாநிலத்தில் 16.7.1991-இல் இருந்து நாட்டு மது விற்பனை நிறுத்தப்பட்டதன் விளைவாக, தமிழ்நாடு

சாராவிக் கழகத்தை கலைத்து விட்டு, அதன் பீர் வடிப்பாலையை தமிழ்நாடு வாணிபக் கழகத்துடன் இணைக்க தற்போதைய அரசு ஆணை பிறப்பித்தது. அதனால் தமிழ்நாடு சாராவிக் கழகம், அதன் நாட்டு மது தயாரிப்புப் பிரிவுகளில் நாட்டு மது உற்பத்தி செய்வதை நிறுத்தி விட்டது - நாட்டு மது தயாரிப்புப் பிரிவுகளில் பணியமர்த்தப் பட்டிருந்த பணியாளர்கள் அனைவரையும் பணிக் குறைப்புச் செய்ய நேரிட்டது. எனினும், புதிதாகப் பணியாளர்கள் எடுக்கும் போது, வேலை வாய்ப்பகங்கள் வாயிலாக தேர்ந்தெடுக்க வேண்டும் என விதிக்கப்பட்டுள்ள முறையைத் தளர்த்தி, தமிழ்நாடு சாராவிக் கழகத்திலிருந்து பணிக் குறைப்புச் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என எல்லா அரசுத் துறைத் தலைவர்களுக்கும், பொதுத்துறை நிறுவனங்களின் தலைமைச் செயலாட்சி அலுவலர்களுக்கும் அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

5. பீர் வடிப்பாலைப் பிரிவை விற்பனை செய்தமை

பீர் வடிப்பாலைப் பிரிவின் முந்தைய சொந்தக்காரர்களான திருவாளர்கள் எம்பீ வடிப்பாலை நிறுவனத்தினர், செய்து கொண்ட முறையீட்டின் பேரில் அரசு, பீர் வடிப்பாலைப் பிரிவை தமிழ்நாடு வாணிபக் கழகத்துடன் இணைக்கச் செய்திருந்த முடிவை மறுபரிசீலனை செய்து, பீர் வடிப்பாலைப் பிரிவை திருவாளர்கள் எம்பீ வடிப்பாலை நிறுவனத்தினருக்கு விற்றுவிட முடிவு செய்தது. அரசு (விற்பனை சம்பந்தப்பட்ட) மதிப்பீடு செய்தல் மற்றும் இதர வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து பரிந்துரைகள் செய்வதற்கென, உள் மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைச்செயலாளர் அவர்களைத் தலைவராகவும், பல முதுநிலை இந்திய ஆட்சிப் பணி (I.A.S.) அலுவலர்கள் மற்றும் நிபுணர்களை உள்ளடக்கிய ஒரு குழுவை நியமித்தது. அக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், எம்பீ வடிப்பாலை நிறுவனம் தமிழ்நாடு சாராவிக் கழகத்திற்கு 30.9.1991 நாளன்றைய விலை அடிப்படையில் ரூ. 10.44 கோடி செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்கும் மற்றும் வேறு சில வரையறைகள்

மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றுக்கும் உட்பட்டு திருவாளர்கள் எம்பீ வடிப்பாலை நிறுவனத்தினருக்கு பீர் வடிப்பாலை பிரிவை விற்பதற்கு தமிழ்நாடு சாராவிக் கழகத்திற்கு அரசு இசைவளித்தது. 31.1.1992 அன்று பீர் வடிப்பாலையின் பொறுப்பு, திருவாளர்கள் எம்பீ வடிப்பாலை நிறுவனத்தினர் வசம் தமிழ்நாடு சாராவிக் கழகத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே! ஒருமுறைக்கு இருமுறை இந்த 10, 11, 12 பக்கங்களைப் படித்துப் பார்!

* கடைகளில் பீர் விற்கலாம் என்று இந்த அரசு அனுமதித்து உரிமம் வழங்கும்போது, லாபம் தரக்கூடிய ஒரு பீர் தொழிற்சாலை அரசுத் துறையில் இருந்தால் என்ன?

* எட்டு கோடிக்கு வாங்கியதை 10 கோடிக்கு திருப்பிக் கொடுப்பதால் 2 கோடி அரசுக்கு லாபம் என்றால், அந்த லாபகரமான தொழிற்சாலையில் ஆண்டு தோறும் வரும் பெரும் லாபத்தை அரசு ஏன் இழக்க வேண்டும்?

* அரசு மது தொழிற்சாலை நடத்தக் கூடாது என்றால், மது விற்பனைக்காக ஏலத்தில் வரும் பணத்தை அரசு ஏற்பது கூட தவறுதானே?

*அரசாங்கத்துக்கு சொந்தமாகிவிட்ட ஒரு உடைமையை விற்பதென்றால் டெண்டர் கேட்டு விளம்பரம் செய்யாமல், பீர் தொழிற்சாலையை அதன் பழைய முதலாளி புருஷோத்தமன் கேட்டார் என்று அவருக்கே கொடுத்து விடுவது என்ன நியாயம்? அது விதிகளை மீறுவது ஆகாதா?

*31.1.92 பீர் வடிப்பாலையின் பொறுப்பை புருஷோத்தமனிடம் ஒப்படைத்தோம் என்றால் விலை பேசிய முழுப் பணமும் வந்துவிட்ட பிறகு, பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதா? அதற்கு முன்பே ஒப்படைக்கப்பட்டுவிட்டதா?

(அரசு தந்துள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளின்படி, தமிழ்நாடு சாராவிக் கழகத்தை கலைத்து விடவும், அதன் பீர் வடிப்பாலையை தமிழ்நாடு வாணிபக் கழகத்துடன் இணைக்கவும் ஆணை பிறப்பித்தாகிவிட்டது.

அதன்பிறகு ஏறத்தாழ ஆறு மாதங்களுக்குப் பிறகு தான், அந்த பீர் வடிப்பாலையை எம்பீ வடிப்பாலை நிறுவனத்திடமே ஒப்படைக்க முடிவு செய்து 31.1.1992 அன்று ஒப்படைக்கிறார்கள்.

இந்த பீர் வடிப்பாலைப் பிரிவை விற்பதற்கு தமிழ் நாடு சாராவிக் கழகத்திற்கு அரசு இசைவளித்தது - ஆலையின் பொறுப்பை எம்பீ வடிப்பாலை நிறுவனத்தினர் வசம் தமிழ்நாடு சாராவிக் கழகத்தால் ஒப்படைக்கப்பட்டது என்கிறது கொள்கைக் குறிப்பு. அப்படியானால் கொள்கை விளக்கக் குறிப்பின் 4-வது பிரிவில், சாராவிக் கழகத்தைக் கலைக்க அரசு ஆணை பிறப்பித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளதே! அதன்படி சாராவிக் கழகம் கலைக்கப்பட்டதா? இல்லையா? கலைக்கப்பட்டுவிட்டது என்றால் அது எப்படி - பொறுப்பை 31.1.92 அன்று தனியாரிடம் ஆலையை ஒப்படைக்க முடிந்திருக்கும்? விளக்கம் தேவை.)

இதையெல்லாம் சொன்னால், பிடிக்காதவர்களிடம் கழக ஆட்சியில் பிடுங்கிக்கொண்டார்கள் - நாங்கள் திரும்பத் தருகிறோம் என்பது நேர்மையா?

ஸ்பிக் தொழிற்சாலையில் தந்தை சேர்மனாகவும், மகன் எம்.டி. ஆகவும் இருக்க வேண்டாம் - ஒரு பதவிப் பொறுப்பு அரசுக்கு இருக்கட்டுமென்று தி.மு.க. ஆட்சியில் மாற்றி அமைத்தால், இப்போது இந்த ஆட்சியில் தந்தை, மகன் இருவருமே அந்த முக்கியப் பதவிகளில் இருக்கட்டுமென்று ஆக்கியிருப்பது என்ன கொள்கை? அந்த ஸ்பிக் தொழிற்சாலையில் அரசின் பங்கு 26 சதவீதம் - அதிபரின் பங்கு 13 சதவீதத்திற்கும் குறைவானது என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய கொள்கை வகுத்திருப்பதாகச் சொல்லிக்கொண்டு, கோடி கோடியாகத் தனிப்பட்ட முறையில் பேரம் பேசி குவித்துக்கொள்ளும் ஊழலின் முழு உருவத்தை நாட்டுக்கு உணர்த்துவதே நமது கடமையாக இருக்கட்டும்!

அன்புடன்,

மு. க.

(23-03-1992)

1892. கவலை தெரிவிப்பதா? கண்டனக் குரல் எழுப்புவதா?

உடன்பிறப்பே,

இதுவரை தமிழக மீனவர்கள், இலங்கை அரசின் கடற்படையினரால் ஐம்பது பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். இருநூறு பேர் காயமுற்றுள்ளார்கள். எழுபது லட்சம் மதிப்புள்ள உடைமைகளை அந்த மீனவர்கள் இலங்கை அரசுக் கடற்படையினால் இழந்திருக்கிறார்கள், என்ற புள்ளி விபரத்தைச் சொல்லும் முதலமைச்சர் ஜெயலலிதா, இது குறித்து மத்திய காங்கிரஸ் அரசுக்குக் கடிதம் எழுதியும், நேரில் சொல்லியும் இருப்பதாகக் குறிப்பிட்டு அவற்றுக்கு பிரதமர் எழுதிய பதில் கடிதத்தைப் பேரவையில் படித்துக் காட்டியிருக்கிறார்.

பிரதமரின் கடிதத்தில் இரண்டு பிரச்சினைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

(1) கச்சத் தீவு பிரச்சினை என்பது முக்கியமான கொள்கை முடிவு. இது குறித்து பரிசீலிக்கும்படி வெளியுறவுத்துறை அமைச்சகத்திடம் கேட்டுக் கொண்டுள்ளேன்.

(2) தமிழக மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படையினரால் ஏற்படுத்தப்படும் வேதனைகளுக்கு இலங்கை அரசுக்கு இந்தியா தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

இதுபற்றி நான் எழுப்பும் கேள்வி இதுதான் - கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களின் உடலை, நீரில் மிதக்க விடும் இலங்கை இராணுவத்தின் குரூரச் செயல் கண்டு பதறாமல், துடிக்காமல், இலங்கை அரசைக் கடுமையாகக் கண்டிக்காமல் - அந்தோ! நாங்கள் கவலைப்படுகிறோம், கண்ணீர் விடுகிறோம் என்று இந்திய அரசு, இலங்கை அரசுக்குத் தெரிவிக்கிறதென்றால் - நான் இந்தியாவின் வலிமையைச் சந்தேகிக்கவில்லை! இந்திய

நாடு பெற்றுள்ள படை பலத்திலும், அதன் திறனிலும் அபார நம்பிக்கை கொண்டவன் நான்! பிறகேன்? தலை தாழ்ந்து, கண் கலங்கி, கவலையைத் தெரிவிக்கிறோம் என்று சொன்னதோடு தனது கடமையை முடித்துக் கொள்கிறது இந்திய அரசு?

மீன் பிடிக்கச் சென்று கொல்லப்பட்டவர்கள், காயம்பட்டவர்கள், படகு போன்ற உடைமைகளை இழந்தவர்கள் தமிழ்நாட்டுக்காரர்கள்தானே!

அதனால்தான் மற்ற நாடுகள் தவறு செய்யும் போது, இங்குள்ள மத்திய அரசின் உள்ளத்தில் தானாகக் குமுறிக் கிளம்பும் கண்டனம், இலங்கை நாட்டின் மீது கிளம்பவில்லை! கவலை மட்டுமே தோன்றுகிறது. அதுவும் தமிழக அரசு, பல கடிதங்கள் எழுதிய பிறகு!

அடடா! மத்திய அரசு கவலை தெரிவித்தது என்று அந்தக் கவலையைத் தூக்கி வைத்துக்கொண்டு ஆடுவதற்கு ஒரு மாநில அரசும், இதுவே போதும்! இதுவே பெரிய காரியம்! இதுவே அரசுக்குக் கிடைத்த வெற்றி! என்று முழுப் பக்கத்தில் முழங்குகிற ஏடுகளும் - தமிழக மீனவர்களின் கவலையைத் துடைத்துவிடுமா? ஏமாந்தவனாகத் தமிழன் இருப்பதாலும், மேலும் ஏமாளியாக அவன் தன்னை ஆக்கிக்கொள்வதாலும் - மிளகாய் அரைப்பதற்கு இந்தத் தமிழன் தலைதான் சிறந்த தலையென்றும், கயிறு திரிப்பதற்கும் இந்த அப்பாவியின் தொடையே பொருத்தமான தொடையென்றும் இலங்கை அரசும் கருதுகிறது! இந்திய அரசும் கருதுகிறது! அதனால்தான் கவலைகளை ஒன்றுக்கொன்று பரிமாறிக் கொண்டு, தமிழக மக்களின் உணர்வுகளை ஏலம் போட்டுக் கொண்டிருக்கின்றன.

கச்சத் தீவை மீட்பது பற்றி பரிசீலனை ஒரு புறத்தில் இருக்கட்டும் - கழக அரசும், தமிழக அனைத்துக் கட்சிகளும் தடுத்தும் கேளாமல் 1974 ஆம் ஆண்டு இந்திரா காந்தியின் அரசு, இலங்கை அரசுடன் கச்சத் தீவு ஒப்பந்தம் செய்து கொண்டது - 1976 ஜனவரியில் கழக அரசு கலைக்கப்பட்டது - அப்படிக் கலைக்கப்பட்ட ஐம்பது நாட்களுக்குப் பிறகு, இந்திரா அரசு இலங்கை அரசுடன் கச்சத் தீவுக்கான மற்றொரு ஒப்பந்தம் செய்து கொண்டு - 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் தமிழக மீனவர்களுக்கிருந்த மீன் பிடிக்கும் உரிமைக்கு வேட்டு வைக்கப்பட்டது.

எனவேதான் இப்போதுள்ள மிக முக்கிய பிரச்சினை, கச்சத் தீவை மீட்க முடியுமா என்பது குறித்து மத்திய வெளியுறவுத் துறை பரீசிலனை செய்யட்டும். அதற்கு முதல் கட்டமாக - 1974 ஆம் ஆண்டு உறுதியளிக்கப்பட்ட மீன் பிடிக்கும் உரிமையை தமிழக மீனவர்களுக்கு மத்திய அரசு மீட்டுத் தர முன் வரட்டும்!

கண்டனம் தெரிவித்தால் இலங்கை அரசின் முகம் வாடுமே என்று, கவலை தெரிவித்துக் கனிவுடன் கோரிக்கை வைக்கும் இந்திய அரசு, உடனடியாக உறுதியுடன் செயல்பட முன்வர வேண்டும் - தமிழ்நாடும் இந்தியாவுக்குள்தான் இருக்கிறது என்ற ஒருமைப்பாட்டு உணர்வுடன்!

அந்த உணர்வு எழுமா?

அல்லது மீண்டும் கவலைதானா?

அன்புடன்,

மு. க.

(25-03-1992)

1893. அந்த நாள் நினைவும் வந்ததே!

உடன்பிறப்பே,

முரசொலி அலுவலகத்திலிருந்து அண்ணா அறிவால யத்துக்குச் சென்று கொண்டிருக்கும் போது, ஒரு மின்விளக்குக் கம்பத்தில் மார்ச் 23 - மாவீரன் பகத் சிங் தூக்கில் இடப்பட்ட நினைவு நாள் என ஒரு சுவரொட்டி தொங்கிக் கொண்டிருந்ததைக் கண்டேன். என் நினைவு பத்தாண்டுகட்கு முன்பு நான் எழுதி வெளிவந்த தூக்கு மேடை திரைப்படத்தை வட்டமிடத் தொடங்கியது. அதில் பகத் சிங் பற்றிய ஓரங்க நாடகம் ஒன்று தீட்டியிருந்தேன். அதனை பகத் சிங் நினைவாக இந்தக் கடிதத்தில் இணைத்திடுகிறேன்.

(1)

(திரையில் ஒலி)

பகத்சிங்! இந்திய நாட்டு விடுதலைச் சரித்திரத்தில் எப்பொழுதும் புரட்சிகரமாக முழங்கிக் கொண்டிருக்கும் ஒரு வீர இளைஞனின் பெயர்!... வெள்ளையரின் ஆட்சியிலே டயர் துரையால் நடத்தப்பட்ட, ஜாலியன் வாலாபாக் படுகொலையில் சிந்தப்பட்ட, இந்தியர்களின் ரத்தம் தோய்ந்த மண்ணை எடுத்து வந்து, தனது பனிரெண்டாவது வயதிலேயே வீட்டில் வைத்து வீர வணக்கம் செலுத்திய பாஞ்சாலத்து சிங்கம்தான் பகத்சிங்...

சிறையில் அடைத்தனர்... சிந்தை கலங்கிவிடவில்லை!... நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் நித்த நித்தம் ஏற்றி இறக்கினர்! அவன் நெருப்பின் பொறியாக நிமிர்ந்தானே தவிர, நீரின் துளி போலச் சிதறிவிடவில்லை!... சின்னஞ் சிறு வயதில் தோட்டத்தில் என்னடா விதைக்கிறாய் என்று தந்தை கேட்ட போது, குண்டுகளைப் பயிரிடுகிறேன் என்று பதில் சொன்னவனாயிற்றே பகத்சிங்!....

விடுதலைக்குக் கீதம் இசைப்போர், இசைக்கட்டும்! நான் வெள்ளயரை எதிர்த்து முரசு கொட்டுகிறேன்! என்று வெங் கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள்கள் இவையெனத் தூக்கு மேடை ஏறவும் துணிந்திட்டான்... பகத்சிங்! பலாத்காரச் செயல்... கொலை... குண்டு வீச்சு... இப்படிப் பல குற்றங்கள் சாட்டப்பட்டன அவன்மீது!... அவனை வேட்டையாடிப் பிடிக்க போலீஸ் படை வெறி கொண்டு அலைந்தது... பகத்சிங் எதற்கும் கலங்கவில்லை! யாருக்கும் அஞ்சவில்லை! அடக்குமுறை தர்பாருக்கு முன்னால் அவன் ஒரு வீரனாகவே தலைநிமிர்ந்து நிற்கிறான்.

(2)

(லாகூர் மாஜிஸ்திரேட் கோர்ட்)

அரசாங்க வக்கீல் :-

போலீஸ் அதிகாரி சாண்டர்சைக் கொலை செய்தது.. பாராளுமன்றத்தில் வெடி குண்டு வீசியது.. லாகூர் சதியில் பங்கு பெற்றது... இத்தனை குற்றங்களும் பயங்கரவாதி பகத்சிங்கினாலும், அவரது நண்பர்களாலும் நடத்தப்பட்டிருக்கின்றன....

நீதிபதி :-

அனைத்துமே தண்டனைக்குரிய குற்றங்கள்... இதைப் பற்றி பகத்சிங்கும், மற்றவர்களும் ஏதாவது சொல்ல வேண்டியிருக்கிறதா?...

பகத்சிங் :-

நீதிபதி அவர்களே! எங்களைப் போன்ற இளைஞர்கள் புரட்சிப் போர்க் கோலம் பூணக் காரணம் யார்?... அதை முதலில் அறிந்து கொண்டீர்களா?... இந்த மண்ணை அடிமை கொண்டதுமல்லாமல், இந்த மண்ணிலேயே ஜாலியன் வாலாபாக் படுகொலையில் சுட்டேன், சுட்டேன், தோட்டாக்கள் தீரும்வரையில் சுட்டேன் - என்றானே வெள்ளை வெறியன் - ஜனரல் டயர்! அவனுக்கு உங்கள் அரசு விருது வழங்கியது... ஆனால் யாரையும் கொல்லாத குண்டுகளை, பாராளுமன்றத்தில் வீசிய எங்களுக்கு பயங்கரவாதிகள் என்ற பட்டம் சூட்டிக் கூண்டிலே நிறுத்துகிறது....

அரசாங்க வக்கீல் :-

பாராளுமன்றத்து வெடிகுண்டு விவகாரம் இருக்கட்டும்... அதில் யாரும் சாகவில்லை உண்மைதான்... போலீஸ் அதிகாரி சாண்டர்சைக் கொல்ல சதி செய்ததும் - அதை நிறைவேற்றியதும் நீங்கள் தான் என்று... உங்களோடு இருந்த ஜெயகோபால் சொல்லியிருக்கிறார் தெரியுமா?... அதாவது உங்கள் நண்பர் ஜெயகோபால்...

பகத்சிங் :-

அப்படிச் சொல்லாதீர்கள்... அப்ரூவர் ஜெய கோபால் என்று சொல்லுங்கள்... அதுதான் அவருக்கு அழகான அடைமொழி...

அரசாங்க வக்கீல் :-

மிஸ்டர் ஜெயகோபால்... சாண்டர்ஸ் கொலையைப் பற்றிய விபரங்களைக் கூறுங்கள்...

ஜெய :-

பகத்சிங்கும், அவருடைய நண்பர்களும் கொலைக்கான சதியை நடத்தியபோது நானும் கூட இருந்தேன்...

அ. வக்கீல் :-

சதியில் சம்பந்தப்பட்டவர்கள் யார்? யார்?..

ஜெய :- பகத் சிங், ராஜகுரு, சுகதேவ், ஆசாத் ...

(அப்போது கிஷோரிலால் என்ற கைதி, செருப்பை எடுத்து ஜெயகோபால் மீது வீசுகிறான்)

பகத்சிங் :-

கிஷோர்! என்ன காரியம் செய்தாய்?

கிஷோர் :- துரோகிக்குப் பரிசு கொடுத்தேன்.

பகத்சிங் :-

துரோகிகளைப் பார்த்து தூ! தூ! என்று இகழ்கிறதே நாடு! அது போதாதா?... உன் காலணி படுகின்ற பாக்யம்கூட இந்தக் கயவனுக்கு இருக்கக் கூடாது கிஷோர்!

அரசாங்க வக்கீல் :- (கையில் செருப்பைத் தூக்கிக் காட்டி) நீதிபதியவர்களே! நீதிமன்றத்தில் செருப்பு!...

பகத்சிங் :-

இல்லை... அந்த அப்ரூவர் மீது அவ்வளவு வெறுப்பு!...

நீதிபதி :-

எப்படியிருந்தாலும் இதை நான் அனுமதிக்க முடியாது... (போலீசாரைப் பார்த்து) நாளை... கோர்ட்டுக்கு வரும்போது இவர்கள் அனைவருக்கும் விலங்கு மாட்டி அழைத்து வாருங்கள்!...

பகத்சிங் :-

நாட்டுக்கே விலங்கு பூட்டப்பட்டிருக்கிறது... இந்த விலங்குகள் பூட்டும் விலங்குகளால் வீரர்கள் வெலவெலத்துப் போய்விட மாட்டார்கள்... இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசமென ஆணையிட்ட ஜார் அரசன், இமையமலை வீழ்ந்தது போல் வீழ்ந்திட்டானே - அந்த வீழ்ச்சிக்கு வித்திட்ட மாவீரன் லெனினின் வைர நெஞ்சுக்கு வாழ்த்துப் பாடுகிறவர்கள் நாங்கள். உண்மையான புரட்சிக்காரர்கள் நாங்கள்...

அரசாங்க வக்கீல் :-

போலீஸ் அதிகாரி சாண்டர்சைக் கொலை செய்தது தான் புரட்சியா?...

பகத் சிங் :-

சைமன் கமிஷனைக் கண்டித்து ஊர்வலம் நடத்திய லாலா லஜபதி ராயைத் தடியால் அடித்துக் கொன்றார்களே! அதிகாரிகள் ... அந்த அதிகார வர்க்கத்திற்கு ... ஆங்கிலேய ஏகாதிபத்யத்திற்கு ... பாடம் கற்பிக்க இந்த பகத்சிங்கும் (மற்ற இருவரையும் சுட்டிக் காட்டி) ராஜகுருவும், சுகதேவும் முன் வந்தது எப்படிக் குற்றமாகும்?

ராஜகுரு :- புரட்சி...

சுகதேவ் :- ஓங்குக!...

கைதிகள் அனைவரும் :- ஓங்குக!...

நீதிபதி :-

இனி இவர்களை நீதிமன்றத்துக்கு அழைத்து வரத் தேவையில்லை... தானாக விசாரணை நடந்து, தானாகவே தீர்ப்பு வழங்கப்படும்!... (நீதிபதி எழுந்து போகிறார். நீதிமன்றம் கலைகிறது)

(3)

லாகூர் சிறைச்சாலை

சுகதேவ், ராஜகுரு, கிஷோர், அஜாய் ஆகியோர் இருக்கிறார்கள்... பகத்சிங் லெனின் எழுதிய நூலொன்றைப் படித்துக் கொண்டிருக்கிறான். மற்றவர்கள் சிறையில் உலவிக் கொண்டிருக்கிறார்கள்... விண்ணில் பறவைகள் சுதந்திரமாகப் பறந்து கொண்டிருக்கின்றன. சிறை அதிகாரி பகத்சிங்கிடம் வந்து ஒரு கடிதத்தை கொடுத்து...

அதிகாரி :- நீதிமன்றத் தீர்ப்பு

(பகத்சிங் வாங்கிப் படித்துவிட்டு... கலகல எனச் சிரிக்கிறான். நண்பர்கள் சூழ்கிறார்கள் வியப்புடன்...)

அஜாய் :-

பகத்சிங்! இவ்வளவு மகிழ்ச்சிக்குக் காரணம் என்னவோ?

பகத் :-

அஜாய் கோஷ்!.... உங்களை விடுதலை செய்து விட்டார்கள்...

அஜாய் :- என்னை மட்டுமா?

பகத் :-

ஆமாம்... (மகிழ்வுடன்) இதில் ஒரு துக்ககரமான செய்தி... (கிஷோர் முதுகில் தட்டி) கிஷோரிலாலுக்கு ஆயுள் தண்டனை... அந்தமான் வாசம்...

கிஷோர் :-

பரவாயில்லை... பகத்சிங்!... உனக்கும், சுகதேவுக்கும், ராஜகுருவுக்கும் எவ்வளவு நாள் தண்டனை...

பகத் :-

தண்டனையே இல்லை!... எங்களுக்கு விடுதலை!... இந்த உலகத்திலிருந்தே விடுதலை!...

கிஷோர் :- ஆ!

அஜாய் :- ஆ!

பகத் :-

நாங்கள் மனமார வரவேற்கும் மரண தண்டனை... (சுகதேவையும் ராஜகுருவையும் இருபுறமும் கட்டிக் கொண்டு மத்தியில் நின்று) நாங்கள் மூவரும் சாகப் போவதில்லை...

இனிமேல்தான் எல்லோருடைய இதயங்களிலும் வாழப் போகிறோம்...

அதிகாரி :-

(மற்றொரு அதிகாரி வந்து) உங்கள் மரண தண்டனை நிறைவேறுவதற்கு முன்பு உங்கள் ஆத்மா சாந்தி அடைவதற்காக... மதகுரு ஒருவர் பிரார்த்தனைக்கு வந்திருக்கிறார்...

பகத் :-

வரவேண்டாம் அவர்!.... நான் ஒரு நாத்திகன். மதவாதியல்ல என்பதால்தான் சீக்கிய முறைப்படி இருக்க வேண்டிய தாடியைக்கூட எடுத்துவிட்டேன்.... முன்கூட்டியே முடிவைத் தெரிந்துகொண்டு நாங்கள் கவர்னர் ஜெனரலுக்கு எழுதிய கடிதமிது... முடிந்தால் இதை அவருக்கு அனுப்பி விடுங்கள்....

கிஷோர் :-

என்ன எழுதியிருக்கிறார் கவர்னர் ஜெனரலுக்கு?

பகத் :-

சொல்லுகிறேன்... உங்கள் நீதி மன்றத்தின் தீர்ப்புப்படி, நாங்கள் விடுதலைப் போரிலே பங்கு கொண்ட வீரர்கள்! எனவே எங்களைப் போர்க் கைதிகளாக நடத்துங்கள்!... எங்களைத் தூக்கு மேடைக்கு அனுப்புவதற்குப் பதிலாக, உங்களுடைய ராணுவத்தைக் கொண்டு எங்களைச் சுட்டுத் தள்ளுங்கள்... என்று எழுதியிருக்கிறேன்... அது மட்டுமல்ல கிஷோர்... தலைசிறந்த தேசத் தியாகியான என் தந்தையே கூட, புத்திர பாசத்தால் தாக்குண்டு எனக்காக நீதிபதியிடம் கருணை மனு போட்டாராம். அவரையும் கண்டித்துக் கடிதம் எழுதியிருக்கிறேன்...

கிஷோர் :- அதில்!...

பகத் :-

அப்பா! நீங்கள் என்னைக் கலந்து பேசாமலும், எனக்கு அறிவிக்காமலும் - என் முதுகில் குத்துவதைப் போலக் கருணை மனு போட்டதாகக் கேள்வியுற்று அதிர்ச்சி அடைந்தேன். என் உயிரை நீங்கள் மதிக்கிற அளவுக்கு நான் மதிக்கவில்லை.. கொள்கையை விற்றுவிட்டு, உயிரை மீட்டுக் கொள்ள நான் விரும்பவில்லை... என்று எழுதியிருக்கிறேன்...

கிஷோர் :- (முழக்கமிடல்) பகத்சிங்...

மற்றவர் :- வாழ்க...!

பகத் :-

நான் வாழ்ந்து என்ன பயன்? நம்முடைய லட்சியங்கள் வாழட்டும்! நம்முடைய விடுதலைப் புரட்சி வெல்லட்டும்... புரட்சி!

மற்றவர் :- ஓங்குக!....

பகத் :- புரட்சி!

மற்றவர் :- ஓங்குக!...

(அதிகாரிகள் வந்து பகத்சிங், சுகதேவன், ராஜகுருவுக்கு விலங்குகளை மாட்டுகிறார்கள் - மூவரும் மற்றவர்களிடம் புன்னகையுடன் விடை பெறுகிறார்கள் - அஜாய் கோஷ், கிஷோர், கண்களில் நீர் வடிகிறது. பகத்சிங், சுகதேவ் ராஜகுரு... அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.)

அஜாய் :- (கண்களில் நீர் வழிய) புரட்சி! என்று கர்சிக்க, அந்த சிறைச்சாலையில் ஒவ்வொரு கூண்டிலுமுள்ள கைதிகள்! ஓங்குக என்று பெருமுழக்கமிடுகிறார்கள்.

(திரை விழுகிறது)

இப்படி, தியாக வரலாறுகளை எழுதிப் பெற்ற இந்திய நாட்டு சுதந்திரம்! இன்றுள்ள அரசின் புதிய பொருளாதாரத் தொழில் கொள்கைகளால், வெளிநாட்டுக் கம்பெனிகள் பூட்டும் விலங்குக்கு உட்பட்டு விடுமோ என்ற அச்சம் நம்மை ஆட்டிப் படைக்கும் நேரத்தில், பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்திட அனைவரும் சிந்தித்து செயல்பட வேண்டுமன்றோ? அதற்காகவே இந்தக் கடிதம்!

அன்புடன்,

மு. க.

(26-03-1992)

1894. அந்தப் பெயரை வைத்துக்கொண்டா? அந்தோ! மிகப் பரிதாபம்!

உடன்பிறப்பே,

நமது கழகக் கூட்டங்களுக்குப் பெருந்திரளாக மக்கள் கூடுவதும், குறிப்பாக நான் கலந்து கொண்ட சென்னை, காஞ்சி, விழுப்புரம், சேலம், தஞ்சை, ஈரோடு, கோவை கூட்டங்களில் பல லட்சக்கணக்கில் மக்கள் திரண்டனர் என்பதும் ஜெயலலிதாவுக்குப் பெரும் அதிர்ச்சியையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அது மட்டுமா?

மகாமகத் திருவிழாவினை அ.தி.மு.க.வின் அரசியல் மாநாடாக ஆக்கியதால் நூறு பேர் மடிந்த கொடுமை -

டான்சி எனும் அரசுக்குச் சொந்தமான நிலத்தை இரண்டு கோடி ரூபாய்க்கு முதலமைச்சர் ஜெயலலிதாவே பங்குதாராராக இருக்கும் ஜெயா பப்ளிகேஷனுக்கு, நெறிமுறைகளுக்கு மாறாக வாங்கியுள்ள ஊழல் -

தி.மு.க. ஆட்சியில் அரசுடைமையாக்கப்பட்டு, அரசுக்குச் சொந்தமாகிவிட்ட பீர் தொழிற்சாலையை விற்பதாக இருந்தால் டெண்டர் கோரித்தான் விற்க வேண்டும் என்ற விதிமுறைக்கு மாறாக, பெரும்பேரம் பேசிக் கொண்டு அதே முதலாளியிடம் ஒப்படைத்து விட்ட ஊழல் -

ஸ்பிக் உரத் தொழிற்சாலையெனும் அரசின் கூட்டுத் துறையில் உள்ள மிகப் பெரிய நிறுவனத்தில், தி.மு.க. ஆட்சியின் போது அரசின் கண்காணிப்பு இருக்க வேண்டுமென்பதற்காக, அரசின் தலைமைச் செயலாளர் எவரோ அவரே இந்த போர்டின் தலைவராகவும், அதிபர் மேனேஜிங் டைரக்டராகவும் இருக்க வேண்டுமென்று மாற்றியமைத்திருந்த நிலையை மாற்றி, அந்த அதிபர்களில் தந்தை தலைவராகவும், மகன், எம்.டி.யாகவும் இருக்கும் வகையில் அமைத்த ஊழல் -

பஸ் முதலாளிகளிடம் மட்டுமே பதினைந்து கோடி ரூபாய்க்கு மேல் கொள்ளை வசூல் - அதற்காக அவர்களுக்குப் பல சலுகைகள் -

இவைகளேயன்னியில் பால் விலை உயர்வு, அரிசி விலை உயர்வு, பஸ் கட்டண உயர்வு போன்ற பல்வேறு உயர்வுகளால் வேதனைப்படும் மக்களின் ஓலம் -

இத்தனையும் மறைப்பதற்கு ஒரு நாளைக்கு ஒரு திசை திருப்பும் ஸ்டண்டு அடிப்பது போல, திடீரென்று 1989 மார்ச் 25 சட்டப் பேரவை நிகழ்ச்சிகளை நினைவு கூர்வதாகச் சொல்லிக் கொண்டு தி.மு.க. மீதும், என் மீதும் சேறு வாரி வீசும் செயலை ஜெயலலிதா நடத்தியுள்ளார்.

நானும் பதிலுக்கு சேறு வாரி வீசி என் கரங்களை சேறாக்கிக்கொள்ள விரும்பவில்லை. அது தேவையுமில்லை. ஜெயலலிதாவின் பக்கத்திலே அமைச்சர்களாக அமர்ந்திருப்பவர்கள் பலரே, அந்த அம்மையாரைப் பற்றிய அருமையான படப்பிடிப்புகளை பலமுறை இந்த நாட்டுக்குக் காட்சியாக்கியிருக்கிறார்கள்.

எனவே நான், இந்தக் கடிதத்தில் ஒரு முக்கியமான பிரச்சினையை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

1989 மார்ச் 25 குறித்து முதல்வர் ஜெயலலிதா, காங்கிரஸ் கட்சித் தலைவர் பாலசுப்ரமணியம், அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஆகியோர் பேசிய போது இடையில் அவையின் முன்னவரும், நிதியமைச்சருமான நாவலரும் குறுக்கிட்டுப் பேசியிருக்கிறார். அவையில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை, தான் சார்ந்துள்ள கழகத்தைப் பற்றியதாக இருந்த காரணத்தால் பரிதி இளம்வழுதி எழுந்து பேச முயன்றார். மற்றவர்கள் தனது அறைக்கு வந்து தன்னிடம் முன் கூட்டியே அனுமதி பெற்றுப் பேசுவதாகவும் - அப்படி அனுமதி பெறாத இளம்வழுதியைப் பேச அனுமதிக்க முடியாதென்றும் சபாநாயகர் கூறியதோடு - மீண்டும் பேச முயன்ற இளம்வழுதியை வெளியேற்றவும் ஆணை பிறப்பித்திருக்கிறார்.

சபாநாயகரின் இதே கருத்தை அவை முன்னவர் நாவலரும் வழி மொழிந்து பேசியதோடு, முன்கூட்டியே அனுமதி பெறாமல் அப்படித்தான் நாங்கள் இப்போதும் இருக்கிறோம் என்பது போல, இளம் வழுதி நடந்துகொண்டதாக குற்றமும் சாட்டியுள்ளார்.

முன்கூட்டி சபாநாயகரிடம் அனுமதி பெற்றுப் பேசுகிறவர்கள் எதை வேண்டுமானாலும் பேசலாம் - அது மறுத்துரைக்கப்பட வேண்டிய கருத்தாக இருந்தால், அதற்குத் தொடர்புடைய கட்சி உறுப்பினர்கள் ஒழுங்கு பிரச்சினை எழுப்பி, தமது கருத்தைக் கூறக் கூடாது என்று தடைவிதிப்பது சரிதானா என்பதை அவை முன்னவராவது விளக்கிட வேண்டும்!

1989 மார்ச் 25-ந் தேதி அவையில் பிரச்சினை எழுப்பப்பட்ட போது பதில் அளித்திருக்கலாம். உண்டு என்று கூறியிருக்கலாம். இல்லை என்று சொல்லியிருக்கலாம். அல்லது முடியாது என்று கூட சொல்லியிருக்கலாம். அதை விடுத்து வன்முறை தூண்டிவிடப்பட்டது.

என்பதாக நிதியமைச்சரும், அவை முன்னவருமான நாவலர் பேரவையில் கூறியிருக்கிறார்.

நாவலர் அவர்களை நான் கேட்க விரும்புவது இதுதான்!

தாங்கள் பட்ஜெட் படித்தீர்கள் அல்லவா? அப்போது யாராவது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து முதலில் மகாமகப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவோம். அதற்கு பதில் சொல்லுங்கள்! பிறகு பட்ஜெட் படிக்கலாம், என்று குறுக்கே கூச்சல் போட்டுக் கொண்டேயிருந்தால் என்ன செய்திருப்பீர்கள்? பட்ஜெட் படிப்பதை நிறுத்தி விட்டு, மகாமகப் பிரச்சினையை எடுத்து விவாதித்திருப்பீர்களா?

அதற்கு மேலே எதிர்க் கட்சியினர் வரம்பு கடந்து, உங்கள் கையிலே இருந்த பட்ஜெட் புத்தகத்தைப் பிடுங்க முயன்றால், அதுவும் நியாயமான காரியமே என்று கூறுவீர்களா?

பட்ஜெட்டைப் பிடுங்கும் முயற்சியில் உங்கள் முகத்திலேயே குத்தி மூக்குக் கண்ணாடியையும் உடைத்திருந்தால், அடடா! இதுவன்றோ ஜனநாயகம்! எனப் பாராட்டிவிட்டு பட்ஜெட்டை ஒத்திவைத்துவிட்டு, எதிர்க்கட்சி எழுப்பிய பிரச்சினையை விவாதிக்க முற்பட்டிருப்பீர்களா? நாவலர் அவர்களே! தாங்கள் பட்ஜெட் படிக்கும் போது அப்படியொருவர் நின்று கொண்டே குறுக்கே பேசிக்கொண்டிருந்தால் நீங்கள்தான் ஏற்பீர்களா? சபாநாயகர்தான் அனுமதிப்பாரா?

பட்ஜெட்டைப் பிடுங்குகிற முயற்சியில் ஒருவர் ஈடுபட்டு என்னைத் தாக்குகிற அந்தக் காட்சி, புகைப்படங்களாகக் கூட அப்போதே ஏடுகளில் வெளிவந்ததே! அதுதான் ஜனநாயக முறை என நாவலரே, நீங்கள் வாதிடுகிறீர்களா?

சரியாகவோ தவறாகவோ தாங்கள் தலைவனாக ஏற்றுக்கொண்டிருக்கிற ஒருவன், தங்கள் கண் எதிரிலேயே அவையில் முகத்தில் குத்துண்டு கீழே சரியும்பொழுது, அதைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில், அவர்கள் தமது தலைவனைக் காப்பாற்றக் கூட ஓடிவரமாட்டார்கள் என எண்ணுகிறீர்களா?

அன்றைக்கு பிரச்சினை எழுப்பப்பட்ட போது பதில் அளித்திருக்கலாம்.

என்று, இன்று அறிவுரை கூறுகிறீர்களே? அதைப்போல இன்று இளம்வழுதி எழுப்பிய பிரச்சினை என்னவென்று கேட்டு, அதற்குப் பதில் அளித்திருக்கலாம் என்ற நியாய உணர்வு தங்களுக்கு ஏன் ஏற்படவில்லை?

அவையில் ஏதாவது கவனத்தை ஈர்க்கக் கூடிய பிரச்சினை குறித்து பேசுவதாக இருந்தால், முதலில் சபாநாயகரின் அறைக்கு வந்து முன்அனுமதி பெற்றிருந்தால் மட்டுமே, அதனை அவையில் பேசலாம் என்று இன்றைய சபாநாயகர் கூறியிருக்கிறார்.

இன்றைய சபாநாயகரின் அறிவிப்பின்படி, அன்றைக்கு 1989 மார்ச் 25-ந் தேதியன்று, பேரவையில் பிரச்சினை எழுப்புவதற்கு ஜெயலலிதா அவர்கள், அன்றைய சபாநாயகரிடம் முன் அனுமதி பெற்றிருந்தாரா?

மானியங்கள் விவாதிக்கப்படும் சாதாரண நாட்களிலேயே, சபாநாயகரிடம் அவரது அறையில் முன் அனுமதி பெற்றுத்தான் எந்தவொரு பிரச்சினையையும் அவையில் எழுப்ப வேண்டுமென இன்றைய சபாநாயகர் சொல்லும் போது, பட்ஜெட் உரை நிகழ்த்தப்படும் மிக முக்கியமான நாளில் முன் அனுமதி பெறாதது மட்டுமல்ல. சபாநாயகர் தடுத்த பிறகும் கூட, பட்ஜெட்டைப் படிக்க விடாமல் குறுக்கிட்டது - பட்ஜெட்டை பிடுங்கியது - முதலமைச்சரின் முகத்தில் குத்தியது - எல்லாம் நியாயந்தான் என்று நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் நீதி வழங்குகிறாரா?

அதுவும், நீதி தவறியதை உணர்ந்து உயிரையே விட்ட அந்தப் பாண்டியன் நெடுஞ்செழியனின் பெயரையே தனக்கு வைத்துக்கொண்டு! அந்தோ! மிகப் பரிதாபம்!

இதற்கு நாவலர் பதில் சொல்லாவிட்டாலும், நிதியமைச்சர் என்ற முறையில் அவரும் - மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் டான்சி நிலத்தை முதலமைச்சர் வாங்கியதிலும் - பீர் தொழிற்சாலையை விற்றதிலும் உள்ள முறைகேடுகளுக்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

அன்புடன்,

மு. க.

(27-03-1992)

1895. அடுத்து தீர்ப்பு என்ன? அதையும் எதிர்பார்க்கிறது நாடு!

உடன்பிறப்பே,

1989-ஆம் ஆண்டு மார்ச் 25-ஆம் நாள் சட்டப் பேரவையின் நிகழ்ச்சிகள் பற்றிய தனது கருத்தை இன்றைய சபாநாயகர் தீர்ப்பாக வழங்கி, அன்று நடந்த சம்பவங்கள் ஒரு கொலை முயற்சி என்ற அடிப்படையில், இந்தியக் குற்ற இயல் சட்டம் 307 மற்றும் 468-ன் படி, நடந்த குற்றத்திற்கான தண்டனை ஏழு ஆண்டு வரையிலோ அல்லது பத்து ஆண்டு வரையிலோ கடுங்காவல் தண்டனைக்கும் - ஏன்? ஆயுள் தண்டனைக்கும் உரிய குற்றமாகையால், இப்போதும் கூட அந்தக் கொலை முயற்சி வழக்கைத் தொடரலாம் என்று கூறியிருக்கிறார். இது எல்லா ஏடுகளிலும் வெளிவந்துள்ளது.

எத்தகைய வழக்குகள் தி.மு.கழகத்தினர் மீது இட்டுக் கட்டி, ஜோடித்து, தொடரப்பட்டாலும் அந்த வழக்குகளை எதிர்கொள்ள நானும், தி.மு.கழகமும் என்றைக்கும் தயாராகவே இருக்கிறோம் என்பதை முதலிலேயே தெரிவித்துக் கொண்டு, இதன் தொடர்பான சில விபரங்களை இந்த நீண்ட கடிதத்தின் வாயிலாக விளக்கிடவும் விரும்புகிறேன்.

பொய்க்கால் குதிரை, நிஜக் குதிரையை விட ரொம்ப அழகாயிருக்குமல்லவா? வண்ண வண்ணத் துணிகள்... பளபளக்கும் கண்ணாடிகள்... ஜிகினா வேலைப்பாடுகள்... இத்தனையும் அந்தப் பொய்யான குதிரைப் பொம்மைக்கு உண்டு. அதை ஒரு மனிதன் தோளில் மாட்டிக் கொண்டு, அந்தக் குதிரையில் சவாரி செய்வது போல ஆடுவான். பொய்க்கால் குதிரை ஆட்டம், கண்டிடக் கவர்ச்சியாக இருக்கும்! ஆனால் நிஜக் குதிரைதான் சவாரிக்குப் பயன்படும். பொய்க்கால் குதிரை, குறிப்பிட்ட இடத்திற்குள் ஆடி ஓய்ந்துவிடும்.

எனவே நிஜங்கள் என்ன என்பதை இப்போது பார்ப்போம்!

1989 மார்ச் 25-க்கு முன்பு சட்டப் பேரவையில் 1972 டிசம்பர் 2 என்ற தேதியும் மிக முக்கியமான நாளாகும். இன்றைய அவை முன்னவர் நாவலர் அவர்கள் தான் அன்றைக்கும், அதாவது தி.மு.க. ஆட்சியிலும் அவை முன்னவராகவும், கல்வி அமைச்சராகவும் இருந்தார். அன்றைய சபாநாயகர் மதியழகன் அவர்கள் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசியவரும் நாவலர் அவர்களே யாவார்!

அவ்வாறு நாவலர் முன்மொழிந்து பேசியபோது, எதிர்க்கட்சியில் எம்.ஜி.ஆர். அவர்கள் மற்றொரு தீர்மானத்தைக் கொடுத்து அதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினாரே! அதை அவை முன்னவராயிருந்த நாவலர் அப்போது ஏற்றுக்கொண்டாரா? அல்லது விதிமுறையைச் சுட்டிக்காட்டி அதனை மறுத்தாரா? அன்று நாவலர் எடுத்த நிலை 1989 மார்ச் 25-க்கு மட்டும் பொருந்தாமல் போய்விடுமா?

இதையும் நினைவில் வைத்துக்கொண்டு சட்டசபை விதி முறைகள், எதிர்க் கட்சிகள் ஜனநாயக ரீதியில் காட்டும் எதிர்ப்பும் - எப்படிப்பட்ட அணுகுமுறைகளோடு விளங்க வேண்டும் என்பதையும் சிந்திக்க வேண்டும்.

1989 மார்ச் 25-ஆம் நாள் சட்டப் பேரவையில் என்னநடந்தது? ஏன் அமளி மூண்டது? என்பதைச் சட்டசபை நடவடிக்கைக் குறிப்பில் சட்டமன்ற அலுவலர்கள், சுருக்கெழுத்தாளர்கள் எழுதியிருப்பதை இன்றைய சபாநாயகரோ, இன்றைய அவை முன்னவரோ, நம்பிட மறுக்கலாம். ஆனால், அன்றைய பேரவை நிகழ்ச்சிக்கு வந்திருந்த பத்திரிகை நிருபர்கள் உடனடியாக - அவர்களுக்குத் தொடர்புடைய பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்து அவை அன்று மாலையிலும், மறுநாள் காலையிலும் அந்தப் பத்திரிகைகளில் செய்திகளாக வந்துள்ளனவே!

இதோ 1989 மார்ச் 26 காலை வெளிவந்த தினமணியில் உள்ள செய்தி -

> “ஜெயலலிதா, குமரி அனந்தன் ஆகியோர் எழுப்பியுள்ள பிரச்சினைகள், கொடுத்துள்ள தீர்மானங்களைப் பரிசீலிக்க வேண்டியுள்ளது. எனவே அதனைப் பரிசீலித்து - அதன் மீதான தீர்ப்பை திங்களன்று

வழங்குவதாக பேரவைத் தலைவர் (தமிழ்க்குடிமகன்) சொன்னார். இதனை ஆட்சேபித்து ஜெயலலிதா, திருநாவுக்கரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்., உகும்சந்த், அண்ணா நம்பி, எஸ்.ஆர். ராதா, செங்கோட்டையன் உள்ளிட்ட பல அங்கத்தினர்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்தனர்.

பேரவையில் அமளிச் சூழ்நிலை உருவாகியது. ஜெயலலிதா, திருநாவுக்கரசு உள்ளிட்ட பல அ.தி.மு.க. அங்கத்தினர்கள் தொடர்ந்து காட்டமாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

அவர்களை அமரும்படி பேரவைத் தலைவர் விடுத்த வேண்டுகோள் பயனளிக்கவில்லை.

ஆளுங்கட்சி அங்கத்தினர்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்தனர்.

இந்த நேரத்தில் எதிர்ப்பு, கூச்சல் இவற்றைப் பொருட்படுத்தாமல் குரல் உயர்த்தி முதலமைச்சர் (கருணாநிதி) நிதிநிலை அறிக்கையைப் படிக்க முற்பட்டார்.

முதலிரண்டு வரிகளை அவர் படித்துக் கொண்டிருக்கும்போது, குத்துடா! என்று எதிர்க் கட்சி வரிசையிலிருந்து குரல் கேட்டது.

முதலமைச்சரின் இருக்கைக்கு எதிரே, கையூன்றியபடி பட்ஜெட் உரையைப் படிப்பதற்காக ஒரு சிறிய மேஜை போடப்பட்டிருந்தது.

எதிர்க்கட்சியில் பின் வரிசையில் அமர்ந்திருந்த செங்கோட்டையனும், வேறு சிலரும் பாய்ந்து வந்து, அந்த மேஜையைத் தட்டி விட்டு, முதல்வர் படித்துக்கொண்டிருந்த (பட்ஜெட்) உரையைக் கிழித்துப் பறக்க விட்டனர். முதல்வரின் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விடப்பட்டது. அவர் நிலை தடுமாறினார். தள்ளி விடப்பட்ட அந்தச் சிறிய மேஜை கீழே விழுந்து, முதலமைச்சர் கருணாநிதியின் உள்ளங்கையின் இருபக்கங்களிலும், மணிக் கட்டிலும் ரத்தக் காயத்தை ஏற்படுத்தியது.

ஆளுங்கட்சி அங்கத்தினர்களும், அமைச்சர்களும் பாய்ந்து வந்தனர். முதல்வர் கருணாநிதியைச் சுற்றி அமைச்சர்களும், தி.மு.க. அங்கத்தினர்களும் அரண்போல் நின்றனர். சிலர் முதல்வரை அப்படியே பேரவைத் தலைவர் அறைக்கு அழைத்துச் சென்றனர்.

ஆளுங்கட்சி அங்கத்தினர்களைச் சமாதானப்படுத்தும் முயற்சியில் கருணாநிதியும், அமைச்சர் அன்பழகனும் ஈடுபட்டனர்.

நிலைமை மோசமாகியது. போடப்பட்டிருந்த மேஜை, இருக்கைகள் ஆகியவற்றின் மீது ஏறி நின்று கொண்டு இரு தரப்பினரும் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இவ்வாறு தினமணியில் வந்துள்ள இதே போன்ற செய்திகள்தான், எல்லா ஏடுகளிலுமே வெளி வந்திருந்தன.

கிரிமினல் குற்றச்சாட்டு புரிந்திருப்பதாக புகார் செய்யப்பட்ட ஒருவர், பட்ஜெட் தாக்கல் செய்யக்கூடாது என்று ஜெயலலிதா திரும்பத் திரும்பச் சொன்னார் என்று இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

உடன்பிறப்பே! திட்டமிட்டு ஒரு அமளியை உருவாக்கித் தலையைத் தானாகக் கலைத்துக் கொண்டு - சேலையை இழுத்தனர் எனக் கதை கட்டி, கொல்ல முயற்சி என்று கூச்சல் போட்டு - அன்றைக்கே ஆட்சியைக் கலைத்து விடலாம் என்று புகைப்படம் எடுத்துக் கொண்டவர்களுக்கு, அன்றைக்கே ஆட்சியை டெல்லியிலிருந்து கலைப்பதற்கு பிரதமர் ராஜீவ் காந்தி, உத்தரவிடாதது பெரிய ஏமாற்றமாகப் போய் விட்டது!

ஏனெனில், 1988 ஜனவரி 28-ஆம் தேதியன்று, இதேபோல ஒரு அமளியை சட்டப் பேரவையில் நடத்தி, அதன் காரணமாக ஜானகி அம்மையார் ஆட்சியைக் கலைக்கச் செய்தவர்கள் அல்லவா! ஜெ அணியினர் - அதே நம்பிக்கையில்தான் 1989 மார்ச் 25-ந் தேதியும், சட்டப் பேரவையில் ஜெ அணியினர் நவீன அரிச்சந்திரா மயான காண்டம் நாடகத்தை அரங்கேற்றத் துடித்தனர். ஆனால், இந்த அரிச்சந்திரா நாடகத்துக்கு வசனம் எழுதிக் கொடுத்தது கோயபல்ஸ் என்பது குறிப்பிடத் தக்கது. எனவே சந்திரமதியின் புலம்பலுக்கு, கிளிசரின் ஒரு டஜன் பாட்டில்கள் தேவைப்பட்டன!

பட்ஜெட் உரை நிகழ்த்தப்படும் நாளில், எந்தப் பிரச்சினையும் எடுத்துக்கொள்ள இயலாது - அடுத்த நாள் பரிசீலித்து எடுத்துக்கொள்வது பற்றி அறிவிக்கிறேன் என்று சபாநாயகர் தமிழ்க்குடிமகன் அவர்கள், பலமுறை திரும்பத் திரும்பச் சொன்ன பிறகும்,

கிரிமினல் புகார் கூறப்பட்ட ஒருவர் பட்ஜெட் படிக்கக் கூடாது என்று ஜெயலலிதா திரும்பத் திரும்பக் கூறினார் என்று இந்து பத்திரிகையே 1989 மார்ச் 26-ந் தேதி செய்தி வெளியிட்டிருக்கிறதே! அப்படியொரு குற்றம் சாட்டி அதனால் பட்ஜெட் படிக்கக் கூடாது என்று குறுக்கிட்டுச் கூச்சலிடுவதென்றால் - எந்தவொரு நிதி அமைச்சரும், முதலமைச்சரும் அவையில் உரை நிகழ்த்த எழும்போது நீங்கள் கிரிமினல் குற்றப் புகார் கூறப்பட்டவர். எனவே உரை நிகழ்த்தக் கூடாது என்று எதிர்க் கட்சியினர் தடுத்துக் கூச்சலிடலாமே! அந்தப் புகாருக்கு ஆதாரம் இருக்கிறதோ இல்லையோ - அப்படியொருவர் ஒரு புகார் கூறினாலே போதும்! அது நிரூபிக்கப்படாமலே இருந்தால் கூட - புகார் கூறப்பட்டுவிட்ட காரணத்தால் அந்த அமைச்சர் உரை நிகழ்த்தக் கூடாது என்று எதிர்க் கட்சியினர் கூச்சலிட உரிமை உண்டு என இன்றைய அவை முன்னவரும், நிதியமைச்சருமான நாவலர் ஒப்புக்கொள்கிறாரா?

இதோ இந்த ஆண்டு, நிதியமைச்சர் நாவலர், நிதிநிலை அறிக்கை படித்த போது சட்டப் பேரவையில் என்ன நடந்தது?

1992 மார்ச் 6-ந் தேதி, 10 மணி அளவில் பேரவை கூடியது.

பேரவைத் தலைவர், நிதியமைச்சரை 1992 - 93-ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை அளித்திட அழைத்தார்.

அப்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சிஉறுப்பினர் பழனிசாமி, குறுக்கிட்டுப் பேச முயன்றார்.

திரு. ஜி. பழனிசாமி :- தலைவர் அவர்களே....

பேரவைத் தலைவர் : இப்போது நிதிநிலை அறிக்கை தாக்கல் ஆகப் போகிறது. உங்களுக்கு என் முடிவை தெரிவித்திருக்கிறேன். இதற்கு மேலும் நீங்கள் பேசக் கூடாது.

திரு. ஜி. பழனிசாமி : தலைவர் அவர்களே....

திரு. வே. தம்புசாமி : தலைவர் அவர்களே...

டாக்டர் தே. குமாரதாஸ் : தலைவர் அவர்களே....

திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே...

பேரவைத் தலைவர் :

இந்த நாளும், நேரமும் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தவற்காக, ஆளுநர் அவர்களால் அறிவிக்கப்பட்ட ஒன்றாகும். இன்றைக்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுப்பதற்கு இல்லை என்று தகவல் கொடுத்திருக்கிறேன். நான் கொடுத்த அந்த அறிவிப்பை மீறி நீங்கள் பேசுவது மரபு அல்ல. முறையும் அல்ல. தயவு செய்து உட்காருங்கள். அவையில் எழுப்புவதை விட்டுவிட்டு என்னுடைய அறைக்கு வாருங்கள். என்னுடைய அறிவிப்பின்மீது ஏதாவது பேசவேண்டுமென்றால், என்னுடைய அறைக்கு வாருங்கள். உட்காருங்கள்! இங்கே எதையும் சொல்லக் கூடாது.

இப்படிப் பேரவையின் இன்றைய தலைவர் சொன்னதும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதற்கு மேல் பிரச்சினை எழுப்பவில்லை.

அதன்பிறகு நிதியமைச்சர் நாவலர், சுமார் இரண்டு மணி நேரம் வரவு செலவுத் திட்ட (பட்ஜெட்) உரையைப் படித்து முடித்தார்.

ஆனால் 1989 மார்ச் மாதம் 25-ந் தேதி, பேரவைத் தலைவர் அவர்கள், இன்றைய பேரவைத் தலைவர் சுட்டிக் காட்டிய இதே விதிமுறை, மரபு இவற்றைத்தானே அன்றைக்கும் ஜெயலலிதாவுக்கும், அவரைச் சார்ந்த கட்சி உறுப்பினர்களுக்கும் சுட்டிக் காட்டி பட்ஜெட் உரை படிக்கும்போது அமைதி காத்திடச் சொல்லி வேண்டுகோள் விடுத்தார்.

இப்போது பொருந்துகிற இந்த விதிமுறை, அதாவது பட்ஜெட் படிக்கும் நாளில் வேறு எந்த பிரச்சினையும் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்ற விதிமுறை - மாண்புமிகு சேடப்பட்டி முத்தையா அவர்களுக்கு மட்டுந்தான் உரியதா? அன்றைய பேரவைத் தலைவர் மானமிகு தமிழ்க்குடிமகனுக்கு உரியதாகாதா?

உடன்பிறப்பே, கொலை முயற்சி வழக்காம் - 307, 468 சட்டப் பிரிவுகளாம் - ஏழாண்டு தண்டனை, ஏன்? ஆயுள் தண்டனைகூட தரலாமாம்!

சரி, ஒரு வாதத்திற்காக கேட்கிறேன்! 1989 மார்ச் 25 அமளிக்கு வித்திட்டவர்கள் யார் என்பதை மறைத்திட முயலுகிறவர்கள் - 1988 ஜனவரி 28-ந் தேதி சட்டப் பேரவையில் என்ன செய்தார்கள்.

தொண்ணூறு உறுப்பினர்களுக்கு மேலிருந்த ஜானகி அணியை வீழ்த்த, சுமார் 30 உறுப்பினர்களைக் கொண்ட ஜெயலலிதா அணி, பேரவையில் அன்று ஆடிய ஆட்டமென்ன? முதல் நாளிரவு பனிரெண்டு மணி வரையில், ஜானகி அம்மையாருக்கு ஆதரவு தருவதாக டெல்லியிலிருந்து தொலைபேசி மூலம் வாக்களித்த காங்கிரஸ் கட்சி, மறுநாள் காலை அந்த அம்மையார் அணியின் முதுகில் குத்திவிட்டு ஜெயலலிதா அணியுடன் சேர்ந்து கொண்டபோது ஜனநாயகக் காவலர் நாவலர் எங்கே இருந்தார்?

முப்பது எம்.எல்.ஏ.க்களே கொண்ட ஜெயலலிதா அணியில் அல்லவா இருந்தார் - அவரை முதலமைச்சராக ஆக்கி, ஜானகி அம்மையாரை வீழ்த்தி விட்டு, பிறகு தானே முதலமைச்சராகிவிட திட்டம் தீட்டிய ஜெயலலிதா, அப்போது ஜானகியம்மாள் எம்.ஜி.ஆரின் மனைவியே அல்ல! என்று அறிக்கை விடுத்து, இன்னும் ஏதேதோ நாலாந்தர நடையிலே அந்த அம்மையாரைப் பற்றி விமர்சித்தார்! அந்த ஜெயலலிதாவுடன் சேர்ந்து கொண்டு தானே முப்பது எம்.எல்.ஏ.க்கள் இருந்த அணிக்குத் தலைமை வகித்து, தொண்ணூறு எம்.எல்.ஏ.க்கள் கொண்ட ஜானகி அணியை நாவலர் வீழ்த்தினார். அதற்குச் சில மாதங்கள் கழித்த பிறகுதானே, நமது நடமாடும் பல்கலைக் கழகத்தைப் பார்த்து, ஜெயலலிதா, தெரு நாய் என்றும், உதிர்ந்த மயிர் என்றும் வசை பாடினார்! அன்று அவர் இசை பாடியதாக எண்ணியன்றோ இன்று நாவலர் மகிழ்கிறார்!

அந்த நாவலர், ஜெ அணிக்குத் தலைமையேற்க, அந்த அணிக்கு காங்கிரஸ் துணைக்கு வர - ஜானகி அணியுடன் சட்டப் பேரவையில் நடத்திய போர்க்களக் காட்சி, கொலை முயற்சியில் சேருமோ சேராதோ? சேடப்பட்டி தான் சொல்ல வேண்டும்!

இருந்தாலும் மக்களுக்கு மறதி அதிகமாயிற்றே!

எனவே, 1988 ஜனவரி 29 காலையில் வெளி வந்த தினத்தந்தி, தினமணி இரண்டு ஏடுகளில் படங்களுடன் வெளிவந்த செய்திகளை மட்டும் அதே படங்களுடன் இக்கடிதத்தில் தொகுத்தளித்துள்ளேன்.

தினத்தந்தி பத்திரிகை 29.1.1988 அன்று, வெளியிட்ட முதல் பக்கம் எட்டு கலம் கொட்டை எழுத்துச் செய்தி - தினத்தந்தியிலும், தினமணியிலும் வெளிவந்த பேரவை நிகழ்ச்சியின் படங்கள்! அடடா! காங்கிரசாரும், ஜெ அணியினரும், ஜா அணியினரும் சட்டப் பேரவைக்குள் நடத்திய அஹிம்சா போராட்டத்தின் அழகே அழகு!

முதலில் 1988 ஜனவரி 28 அமளியைப் பற்றி தினத்தந்தி செய்தி வருமாறு -

சென்னை, ஜன. 29 -

ஜானகி அம்மாள் தலைமையில் உள்ள அரசாங்கம் மெஜாரிட்டி பலத்தை நிரூபிப்பதற்காக, தமிழகச் சட்டசபை நேற்று காலை 10 மணிக்கு கூடியது.

பலத்த அமளி காரணமாக, சபை பகல் 12 மணிக்கும், பிறகு 3 மணிக்கும் தள்ளி வைக்கப்பட்டது.

பிற்பகல் 3 மணிக்கு சபை கூடியபோது, வரலாறு கண்டறியாத கலவரம் மூண்டது.

சபாநாயகர் பி.எச். பாண்டியன் தனது ஆசனத்தில் வந்து உட்கார்ந்ததும், இ. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சிவராமன் சபாநாயகர் ஆசனத்தில் உட்கார முயன்றார். அவருக்கு ஆதரவாக இ. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், சபாநாயகர் இடத்தை நோக்கி திமுதிமு என்று இறங்கி, பயங்கர கோஷம் போட்டுக்கொண்டு வந்தார்கள்.

தங்கள் உறுப்பினர் சிவராமனை, சபாநாயகர் ஆசனத்தில் அமர்த்துவதற்காக பிடித்து தள்ளினார்கள்.

உடனே சபாநாயகர் பி.எச். பாண்டியன், சிவராமனை வெளியே தள்ளினார்.

சபாநாயகருக்கு ஆதரவாக சபைக் காவலர் மற்றும் உதவியாளர்கள் ஓடி வந்து தடுத்தார்கள்.

இப்படி முன்னும், பின்னும் சிவராமனைத் தள்ளிய வேகத்தில், சபாநாயகருக்கு முன்னால் இருந்த உயரமான அவரது மேஜை டமார் என்று கீழே விழுந்தது.

உடனே காங்கிரஸ் கட்சியினர் பக்கத்தில் இருந்த ஒரு நாற்காலி, சபாநாயகரை நோக்கி வீசப்பட்டது.

பதிலுக்கு இந்தப்பக்கத்தில் இருந்தும் நாற்காலி வீசப்பட்டது.

இதைத் தொடர்ந்து, இருதரப்பு உறுப்பினர்களும் புத்தகம், மேஜை வெயிட் மற்றும் கையில் கிடைத்ததையெல்லாம் தூக்கி வீசினார்கள். இதில் சபாநாயகர் கண் அருகே ஏதோ ஒரு பொருள் தாக்கி காயம் அடைந்தார்.

சபையில் அமளி நிலவியது.

அப்போது பத்திரிகை நிருபர்கள் மேஜை மீது, பெடஸ்ட்ரல் பேன் (ராட்சத காற்றாடி) ஒன்று வந்து விழுந்தது.

இதைத் தொடர்ந்து அ.தி.மு.க. உறுப்பினர் பி.என். ராமச்சந்திரன் தன் பச்சைநிற பெல்ட்டை சுழற்றிக்கொண்டு, இரு தரப்பினருக்கும் இடையே உள்ள நீளமான மேஜை மீது நின்று கொண்டு சுழற்றினார். அ.தி.மு.க. கட்சியினர் வேகத்துடன் முன்னேறியதும், இ. காங்கிரஸ் உறுப்பினர்கள் பின்வாங்க ஆரம்பித்தனர்.

இருதரப்பில் இருந்தும் சபைக்கு உள்ளேயே செருப்பு, சோடாபாட்டில், ஒலிபெருக்கி பிடுங்கி வீசியது, கல், மின் விசிறி ஆகியவற்றை தூக்கி வீசினார்கள். பலருக்கு காயம் ஏற்பட்டது. இவ்வளவு அமளியும், கலாட்டாவும் 3 நிமிடங்களுக்குள் நடந்து முடிந்துவிட்டது.

இந்த அடிதடி மோதலுக்குள், வெளி ஆட்கள் சிலரும், சைக்கிள் செயினுடன் புகுந்து நிலைமையை மோசமாக்கினார்கள். குண்டு வெடித்தால் பொதுமக்கள் சிதறி ஓடுவது போல், சபைக்குள் இருந்து வெளியே ஓட ஆரம்பித்தார்கள்.

இன்னும் சிலர் கலவரம் செய்ததால், சட்டசபைக்கு உள்ளே அமைதி நிலை நாட்டும்படி போலீசார் வரவழைக்கப்பட்டனர்.

இரும்பு தொப்பி அணிந்த போலீசார், சபைக்கு உள்ளேயே தடியடி நடத்தினார்கள். சபைக்கு வெளியேயும் சிலர் கலவரம் செய்ததால், அங்கும் போலீசார் தடியடி நடத்தினார்கள். இதனால் சிதறி ஓடியவர்கள், பக்கத்தில் இருந்த அறைகளிலும், நிருபர்கள் அறைக்குள்ளும் நுழைந்தனர்.

நிருபர்கள் அறைக் கதவு பூட்டப்பட்டது. நிருபர்கள் வெளியே போக முடியாமல் தவித்தார்கள். சிறிது நேரத்தில் கலவரம் ஓய்ந்தது.

போலீஸ் கமிஷனர் தேவாரம் முன்னின்று கலவரக்காரர்களை விரட்டினார்.

காயம் அடைந்த சபாநாயகருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கோட்டையில் உள்ள அரசு ஆஸ்பத்திரி டாக்டர் சோமசுந்தரமும், அவருடைய உதவியாளர்களும் முதல் உதவி சிகிச்சை அளித்தனர்.

சட்டசபையில் நடந்த கைகலப்பிலும், கலாட்டாவிலும் காயம் அடைந்த எம்.எல்.ஏக்கள் சிகிச்சைக்காக சென்னை பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டனர்.

அவர்களுக்கு ஆஸ்பத்திரி டீன் சுரையாபேகம், ஆர்.எம்.ஓ. ராஜரத்தினம், ஏ.ஆர்.எம்.ஓ குணசேகரன், டாக்டர் கணேசன் ஆகியோர் தலைமையில் 12 பேர் கொண்ட டாக்டர்கள் குழு சிகிச்சை அளித்தது.

எம்.எல்.ஏக்களும், சட்டசபைக் காவலர்களும், ஊழியர்களுமாக ஏறத்தாழ 60 பேரும் சிகிச்சை பெற்றார்கள். எம்.எல்.ஏக்களை டாக்டர்கள் தங்கி சிகிச்சை பெறகேட்டுக்கொண்ட பிறகும் அவர்கள் மறுத்துவிட்டு, காயங்களுடன் மருந்து கட்டுப் போட்டுவிட்டு திரும்பினார்கள்.

சிகிச்சை பெற்ற எம்.எல்.ஏ.க்கள் பற்றிய விவரம் வருமாறு -

மயிலை தமிழ்மணி, திருப்போரூர் தொகுதி எம்.எல்.ஏ. இவருக்கு கையிலும், காலிலும் காயம் ஏற்பட்டுள்ளது. டாக்டர் கே.பி. ராமலிங்கம், ராசிபுரம் தொகுதியைச் சேர்ந்தவர், வலது கையில் காயம் அடைந்தார். சேர்ந்த மங்கலம் சிவப்பிரகாசம், இவரின் வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. தண்டராம்பட்டு ஏ.வி. வேலு, காஞ்சிபுரம் பாலாஜி, அச்சிறுபாக்கம் எத்திராஜ், பட்டுக்கோட்டை பி.என். ராமச்சந்திரன் இவர்கள் அனைவரும் ஜானகி அம்மாளை ஆதரிப்பவர்கள், ஆலங்குடி வெங்கடாசலம், தியாகராஜன் (இ. காங்கிரஸ்).

ராஜேந்திரன் என்ற ஏட்டுவும், கலியபெருமாள் என்ற போலீஸ்காரரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில், ராஜேந்திரனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. கண்ணாடி பாட்டிலால் அடித்ததில் கலியபெருமாள் காயம் அடைந்தார். அவரின் காலில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

எம்.எல்.ஏ.க்களுக்கும், மற்றவர்களுக்கும் டாக்டர்கள் சிகிச்சை அளித்ததை தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்குனர் டாக்டர் எஸ். ஆறுமுகம் பார்வையிட்டார் - இவ்வாறு தினத்தந்தி செய்தி கூறுகிறது!

அடுத்து, 1988 ஜனவரி 28 குறித்து தினமணி செய்தியும் வெளியிட்டு, தலையங்கத்தையும் எப்படித் தொடங்குகிறது என்று பார்ப்போம்.

நேற்று தமிழகச் சட்டமன்றத்தில் ஒரு மகாபாரதப் போர் நடந்து ஓய்ந்தது. இதில் வெற்றி யாருக்குமில்லை. ஜனநாயகமும், நேர்மையான அரசியலும், தமிழர் பண்பாடும் படுதோல்வியடைந்துள்ளன.

தமிழகச் சட்டமன்றத்தில் இதுவரை கண்டிராத - நினைத்தும் பார்க்க முடியாத அளவில் கலவரம் மூண்டு, ஆயுதப் போலீசார் உள்ளே நுழைந்து தடியடி நடத்திய வெட்கக் கேடான சம்பவம், நடந்து விட்டது.

அதே நாளில் தினமணி வரலாறு காணாத சம்பவம் என தலைப்பிட்டு ஆறாம் பக்கத்தில் எழுதியுள்ள செய்திக் கட்டுரை வருமாறு -

சென்னை, ஜன. 28 -

தமிழகச் சட்டப் பேரவையில் எந்த ஆட்சிக் காலத்திலும், எப்போதும் நடைபெற்றிராத வகையில், இரும்புத் தொப்பி அணிந்த கவச போலீசார் பேரவைக்குள் புகுந்து தடியடி நடத்த வேண்டிய அளவுக்குத் தலைகுனிவை ஏற்படுத்திய, ஒரு அருவெறுக்கத்தக்க செயல் வியாழன்று நடைபெற்றது.

முன்னதாக சட்டப் பேரவை இருமுறை ஒத்தி வைக்கப்பட்டு, பிற்பகல் மூன்று மணிக்கு பேரவை கூடியதும், பேரவைத் தலைவர் பாண்டியன் தமது இருக்கையில் வந்தமர்ந்தார். அதற்கு முன்னதாகவே, அவரது இருக்கை அருகே நின்று கொண்டிருந்த சின்ன சேலம் சிவராமன் சட்டப் பேரவை, அலுவலர்கள், பேரவைத் தலைவரின் உதவியாளர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, பேரவைத் தலைவர் இருக்கையில் பொருத்தப்பட்டுள்ள கைப்பிடியின் மீது அமர்ந்து கொண்டார். இது முறையல்ல என்றும் இறங்கிச் சென்று உங்கள் இருக்கையில் அமருங்கள் என்றும் பேரவைத் தலைவர் கேட்டுக் கொண்டார். ஆனால், சிவராமன் நகருவதாக இல்லை.

நெருக்கியடித்துக் கொண்டு பாண்டியனுக்குப் பக்கத்தில் அமர முற்பட்டார்.

ஆனால் பேரவைத் தலைவர், இடம் கொடுக்காமல் நெளிய முற்பட்டபோது கிடைத்த இடத்தில் நெருக்கியடித்துக் கொண்டு சிவராமன் உட்கார்ந்தார்.

காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் பேரவைத் தலைவர் இருக்கையை நோக்கி ஓட, ஆளுங்கட்சியினர், காங்கிரஸ் அங்கத்தினர்கள் இருந்த வரிசையை நோக்கி ஓட ஒரே போர்க்களம் போல் பேரவை காட்சியளித்தது. நாற்காலிகள் வீசப்பட்டன. கையில் கிடைத்ததையெல்லாம் எடுத்துக் கொண்டும், மைக்கைப் பிடுங்கிக் கொண்டும் தாக்குதலில் ஈடுபட்டார்கள். பேரவை மண்டபத்தில் தொங்கிக் கொண்டிருந்த அழகிய சர விளக்குகள் நொறுங்கின. சிறிய மின் விசிறிகள் அப்படியே பிடுங்கப்பட்டு தாக்கும் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன. தாக்குதலில் ஈடுபட்டோர் பத்திரிகையாளர்களையும் விட்டு வைக்கவில்லை. அவர்கள் பக்கமும் பேப்பர் வெயிட்டுகள், (மண்ணால் அடைக்கப்பட்ட துணிப் பைகள்) பிடுங்கப்பட்ட ஒலிபெருக்கிகள், சிறிய மின் விசிறிகள் வந்து விழுந்தன. சட்டமன்ற மண்டபத்திலோ, வளாகத்திலோ இடம் பெறாத பொருட்களைக் கொண்டு சிலர் தாக்கியபோது, அவர்களை அடையாளம் கண்டு கொண்ட இந்திரா காங்கிரஸ் கட்சியினர் வெளியாட்கள், சமூக விரோதிகள், உள்ளே புகுந்து தாக்குகிறார்களே என்று குரல் கொடுத்தனர். இதற்குள் ஒருவர் அமைச்சர்கள் வரிசைக்கும், எதிர்க் கட்சி வரிசைக்கும் இடையே போடப்பட்டிருந்து மேஜை மீது ஏறி நின்று கொண்டு இடுப்பில் சுற்றியிருந்த பச்சை பெல்ட்டை சுழற்றிச் சுழற்றிச் சுழற்றி அடித்தார்.

தி.மு.க. குழுத் தலைவர் மனோகரனது தோள் பட்டையைத் தேய்த்துக்கொண்டு ஒரு பேப்பர் வெயிட் பறந்தது. அதற்குள் இன்னொரு பேப்பர் வெயிட் வீசப்பட்டபோது, கிரிக்கெட் பந்தயத்தில் கேச் பிடிப்பது போல், அதை அவர் பிடித்துத் தாக்குதலிலிருந்து தப்பினார். மனோகரன், சமத், ஆறுமுகம் ஆகிய அங்கத்தினர்கள் பேரவையிலிருந்து வெளியேறினர். தாக்குதல் நடந்து கொண்டிருந்தபோதே, சிலர் வழிந்த ரத்தத்தைத் துடைத்துக் கொண்டு தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டிருந்தார்கள்.

நிலைமை மோசமாவதைக் கண்ட பேரவைத் தலைவர், அங்கிருந்த போலீஸ் கமிஷனர் தேவாரத்திற்குக் கட்டளை பிறப்பிக்கவே, இரும்புத் தொப்பி அணிந்த போலீசார் தடிகளுடன் பேரவை மண்டபத்திற்குள் நுழைந்து அவர்களை வெளியே துரத்தினர்.

காயமடைந்தவர்களுக்கு உடனடி முதலுதவி சிகிச்சை அளிப்பதற்காக, தலைமைச் செயலக மருத்துவமனையிலிருந்து மருத்துவர்களும், செவிலியர்களும் வரவழைக்கப்பட்டனர். ஆனால், அவர்களால் பேரவை மண்டபம் அருகே கூட செல்ல முடியவில்லை. அடிதடியில் சிக்கிக் கொள்ளாமலிருக்கப் பத்திரிகை நிருபர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த அறையில் தஞ்சம் புகுந்தனர். பிறகு, போலீஸ் பாதுகாப்போடு அவர்கள் பேரவை மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு சிலருக்கு அவர்கள் முதலுதவி சிகிச்சை அளித்தனர்.

காயமடைந்த இந்திரா காங்கிரஸ் அங்கத்தினர்கள் ரத்தம் சொட்டச் சொட்ட எதிர்க்கட்சித் தலைவர் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, காயத்துக்கு கட்டு போடப்பட்டது. இரண்டு நிருபர்களுக்கு காலில் காயம் ஏற்பட்டது. தூக்கி எறியப்பட்ட சிறிய மின் விசிறி அவர்கள் காலில் விழுந்தது. விருத்தாசலம் தியாகராஜன், வெள்ளக் கோவில் துரை ராமசாமி, பெரிய சாமி ஆகியோர், தலையில் கட்டுப்போட்ட நிலையில் முன்னாள் மேலவைத் தலைவர் அலுவலகத்திற்கு அருகே தரையில் படுத்திருந்தனர். காயமடைந்த பலர் ஊசி போட்டுக்கொண்டு வலியால் துடித்தார்கள். எதிர்க் கட்சித் துணைத் தரைலவர் யசோதாவுக்குக் கை எலும்பு முறிவு ஏற்பட்டதாகக் காங்கிரஸ் அங்கத்தினர்கள் தெரிவித்தனர். காயமடைந்த காங்கிரஸ் அங்கத்தினர்களை தலைக்கட்டுடனும், கையிலும், காலிலும் போடப்பட்ட கட்டுகளுடனும் ஆளுநர் மாளிகைக்கு மாநிலங்களவை இ. காங்கிரஸ் அங்கத்தினர் திண்டிவனம் ராமமூர்த்தி, மாநில இ. காங்கிரஸ் தலைவர் பழனியாண்டியும் அழைத்துச் சென்றார்கள். - இவ்வாறு தினமணி எழுதியிருந்தது.

உடன்பிறப்பே,

1972-ல் அ.தி.மு.க. தோன்றிய காலத்திலிருந்து சட்டசபை விதிகள் எப்படியெல்லாம் அந்தக் கட்சி உறுப்பினர்களால்

மீறப்பட்டது என்பதற்கும், அது ஒரு தொடர்கதையாகி 1988 ஜனவரி 28 ஆம் நாளன்று ஜெயலலிதா அணி, ஜானகி அணி எனப் பிரிந்து மோதிக் கொண்டு, அதற்குக் காங்கிரசும் துணை நின்று கலவரம் நடத்தியதற்கும், 1989-ல் ஜெயலலிதாவின் கட்சியினர் எப்படி அவையின் விதிகளை மீறி அமளியை உருவாக்கினர் என்பதற்கும், நான் தொகுத்துத் தந்துள்ள இந்தச் செய்திகளை விட வேறு சான்றுகளும் வேண்டுமோ?

கொலை முயற்சிக் குற்றம் - ஏழாண்டு தண்டனை - ஆயுள் சிறைவாசம் என்றெல்லாம் அச்சுறுத்துகிற இன்றைய ஆளுங் கட்சியினர், அவர்களுக்குத் துதிபாடும் காங்கிரஸ் கட்சியினர், இரு சாராருமே எண்ணிப் பார்த்திட வேண்டிய சட்டப் பேரவை நிகழ்ச்சி! இதிலிருந்தே அவர்கள் 1989 மார்ச் 25-ந் தேதி சட்டப் பேரவையிலும், எப்படி நடந்து கொண்டிருப்பார்கள் என்பதை நாட்டு மக்கள் நன்றாகவே புரிந்து கொள்வார்கள்!

நீயும், இவற்றை மறந்துவிட்ட மக்களுக்கு நினைவூட்டும் பணியை நிறுத்தாமல் தொடர்ந்திட வேண்டுகிறேன். 1989 மார்ச் 25 சட்டமன்ற நிகழ்ச்சிகளை படித்து விட்டு தீர்ப்பு வழங்கியுள்ள இன்றைய சபாநாயகர், 1988 ஜனவரி 28 சட்டமன்ற நிகழ்ச்சிகளையும் படித்துவிட்டு என்ன தீர்ப்பு வழங்குகிறார் என நாடு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது!

அன்புடன்,

மு. க.

(28-03-1992)

1896. அவசரக் கோலம்; அலங்கோலமாகும்!

உடன்பிறப்பே,

பாஞ்சாலங்குறிச்சியில் கட்ட பொம்மன் கோட்டைக்கு செல்லும் வழியில் உள்ள பல வளைவுகளில், ஒரு வளைவுக்குக் கருணாநிதியின் பெயர் இருந்ததை அகற்றிவிட்டு, அந்த வளைவில் சுந்தரலிங்கத்தின் பெயர் எழுதப்படும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா போரவையில் சிரித்துக்கொண்டே அறிவித்தார் என ஏடுகளில் செய்தி வந்தது.

அதுகுறித்து நெல்லை கட்டபொம்மன் மாவட்டச் செயலாளர் இலக்குமணனும், சிதம்பரனார் மாவட்டச் செயலாளர் பெரியசாமியும், மற்றும் கட்டபொம்மன் வாரிசுகளும் வெளியிட்டுள்ள அறிக்கைகளைக் கண்டிருப்பாய்!

என் பெயரை அகற்றுவது பற்றியோ, என் சிலையை நொறுக்குவது பற்றியோ நான் என்றைக்கும் கவலைப்பட்டுக் கொண்டதில்லை!

அதே போல பத்தாண்டு கால எம்.ஜி.ஆர். ஆட்சியில் வைக்கப்பட்ட எம்.ஜி.ஆர் பெயர்களையோ, அவரது அன்னையார் பெயரையோ இரண்டு ஆண்டுக் கால கழக ஆட்சியில் அகற்றியதுமில்லை.

எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழகத் தொடக்க விழாவை குடியரசுத் தலைவரை அழைத்து நடத்தினேன்.

திரையுலகில் எம்.ஜி.ஆர். விருது என ஒரு புதிய விருதினை அறிமுகப்படுத்தினேன்.

ஆளுநர் ஆட்சியில் கவனிக்கப்படாமல் கிடந்த எம்.ஜி.ஆர். நினைவிடத்தை, சுமார் முப்பது லட்ச ரூபாய் செலவில் கட்டி முடித்தேன்.

அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் பெயர் மாற்றப்பட வேண்டுமென்ற நோக்கத்தில், சட்டமன்றத்தில் கேள்வி கேட்கப்பட்ட போது கூட, அந்தப் பெயர் மாற்றப்படமாட்டாது என அறிவித்ததோடு - அன்னை சத்தியா பெயரில் அந்தப் போக்குவரத்துக் கழகத்துக்கான புதிய கட்டிடத்தையும் திறந்து வைத்தேன்.

ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி அரசுடைமை ஆக்கப்பட்டபோது கூட, அந்தக் கல்லூரியின் பெயரை மாற்றாமல் - அந்தக் கல்லூரி வளாகத்தில், வேறொரு கட்டிடத்தில் தான் தாமரை என்ற மருத்துவ ஆராய்ச்சி விஞ்ஞான நிறுவனத்தைத் தொடங்கி வைத்தேன்.

இதையெல்லாம் சொல்வது, எனவே இந்த ஆட்சியில் என் பெயரை மாற்றி விடாதீர்கள் என்று வேண்டுகோள் விடுப்பதற்காக அல்ல!

ஒரு முதலமைச்சர் ஓர் அறிவிப்பைப் பேரவையில் செய்வதற்கு முன்பு, அதைப்பற்றிய கேள்வி ஞானம் கூட இல்லாமல் நடந்து கொள்கிறாரே என்பதுதான் எனக்குள்ள ஆதங்கமாகும்!

என்னமோ சுந்தரலிங்கம் என்ற அந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்து மாவீரனின் பெயரை நான் புறக்கணித்து விட்டது போலவும், அதை இவர் நினைவு வைத்துக் கொண்டு - அதற்காக என் பெயரில் உள்ள வளைவுக்கு அந்த வீரனின் பெயரை வைப்பது போலவும், தாழ்த்தப்பட்ட மக்களை ஏமாற்ற முனைவது வேடிக்கை பார்க்கக் கூடிய விஷயமல்ல. அதனால்தான் இந்த விளக்கம்.

நெல்லை கட்டபொம்மன், சிதம்பரம் மாவட்டச் செயலாளர்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது போல, பாயும் புலி பண்டாரக வன்னியன் காலமும் - கட்டபொம்மன் காலமும் ஒன்றாக இருப்பதை வைத்து, பாயும் புலி பண்டாரக வன்னியன் வரலாற்றுப் புதினத்தில் மாவீரன் சுந்தரலிங்கத்திற்கும், வெள்ளையத் தேவனுக்குமுள்ள தொடர்பு, நட்பு முதலியவற்றை விளக்கி, பாஞ்சாலங் குறிச்சியின் தூதுவராக சுந்தரலிங்கம், ஈழம் சென்று பாயும் புலி பண்டாரக வன்னியனைச் சந்திப்பது போன்ற நிகழ்ச்சிகளை கற்பனை செய்து விரிவாக எழுதியுள்ளவன் நான்!

நெல்லை கட்டபொம்மன் மாவட்ட வளாகத்திற்கு, சுந்தரலிங்கம் வளாகம் எனப் பெயர் சூட்டியதும் நான்தான்!

பாஞ்சாலங்குறிச்சியில் சுந்தரலிங்கம் நினைவுச் சின்னமே இல்லாதது போல முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள், எந்த அதிகாரியிடம் விசாரித்து - அதன் பிறகு இப்படி ஒரு அறிவிப்பை செய்தார் என்பதுதான் புரியாத புதிராக இருக்கிறது.

இது குறித்து நெல்லை சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும் நமது கழக வழக்கறிஞருமான திரு. ஏ.எல். சுப்பிரமணியம் எழுதியுள்ள கடிதத்தையும், அவர் அனுப்பியுள்ள புகைப் படங்களையும் இந்தக் கடிதத்துடன் இணைத்துள்ளேன்.

அன்புள்ள தலைவர் அவர்களுக்கு,

வணக்கம்.

நீங்கள் தமிழக முதலமைச்சராக இருந்தபோது கட்டிய ஒட்டப்பிடாரம் அருகில் உள்ள கட்டபொம்மன் கோட்டைக்குச் செல்லும் வழியில் சுந்தரலிங்கம் பெயரில் தோரண வாயில் அமைக்கப்பட்டுள்ளதா என்று அறிந்து, உடனே தங்களுக்குத் தெரிவிக்கும்படி சட்டப் பேரவை முன்னாள் தலைவர் திரு. தமிழ்க்குடிமகன் அவர்கள், என்னிடம் நேற்று இரவு தொலைபேசியில் தெரிவித்தார்கள். இன்று காலை நானும், போட்டோகிராபர் தோழர் மணி மற்றும் தினகரன் நாளேட்டின் நிருபர் திரு. பொன் இளங்கனி ஆகியோர் ஒட்டப்பிடாரம் சென்றோம். புகைப் படங்களும் எடுத்தோம். விரிவான அறிக்கையை கீழே தந்துள்ளேன்.

1. தூத்துக்குடி, மதுரை நெடுஞ்சாலை தென் வடலாக உள்ளது. அதில் உள்ள குறுக்குச் சாலை என்ற ஊரிலிருந்து ஒட்டப்பிடாரத்திற்கு மேற்கே தனிச்சாலை பிரிகிறது. அச்சாலை பிரியும் இடத்தில், கட்டபொம்மன் நினைவுக் கோட்டை கண்ட டாக்டர் கலைஞர் மு. க. தோரண வாயில் என்ற தோரண வாயில் உள்ளது. இதிலிருந்து மேற்கே சுமார் 6 கிலோ மீட்டர் தூரத்தில் ஒட்டப்பிடாரம் உள்ளது. இதற்கிடையில் ஊர் ஏதும் இல்லை.

2. ஒட்டப்பிடாரத்தில் இருந்து வடக்கே ஒன்றரைக் கிலோ மீட்டர் தூரத்தில், பாஞ்சாலங் குறிச்சி கட்டபொம்மன் கோட்டை உள்ளது. இச்சாலைத் துவக்கத்தில் கட்ட

பொம்மன் கோட்டை நுழைவு வாயில், பாஞ்சாலங் குறிச்சி என்று எழுதப்பட்ட தோரண வாயில் உள்ளது.

3. அடுத்து மூன்றாவது, ஊமத்துரை தோரண வாயில் உள்ளது.

4. அடுத்து நான்காவதாக, சிறிது தூரத்தில் வெள்ளையத் தேவன் தோரணவாயில் உள்ளது.

5. அதை அடுத்து ஐந்தாவதாக, தானாதிப் பிள்ளை தோரண வாயில் உள்ளது.

6. அங்கிருந்து 300 மீட்டர் தூரத்தில் ஆறாவதாக, சுந்தர லிங்கம் தோரண வாயில் உள்ளது.

7. ஏழாவதாக, வீர சக்கம்மாள் தோரண வாயில் உள்ளது. கோட்டையை விட்டு வெளியே வரும்போது கட்டபொம்மன் வணங்கிய தெய்வமாகிய வீர சக்கம்மாள் பெயரில் நுழைவு வாயிலும், அதை அடுத்து சுந்தரலிங்கம் பெயரில் நுழைவு வாயிலும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நுழைவு வாயிலில் நின்று பார்த்தால் சுமார் 500 மீட்டர் தூரமே உள்ள கட்டபொம்மன் கோட்டை பொலிவுடன் காணப்படுகிறது.

8. கட்டபொம்மன் கோட்டையில் கட்டபொம்மன் சிலை உருவிய வாளோடு கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. அச்சிலை முன்புள்ள அழகிய மண்டபத்தில் சிலைக்கு இரு புறமும், இரண்டு இரண்டாக மொத்தம் நான்கு தூண்கள் உள்ளன. சிலைக்கு வலப்புறம் உள்ள தூண்களில் முதல் தூணில், தானாபதி பிள்ளை சிலையும், அடுத்த தூணில், சுந்தரலிங்கம் சிலையும் கோவில் தூண்களில் உள்ளது போன்று அமைக்கப்பட்டுள்ளன. எதிர்புறம் உள்ள இரு தூண்களில் ஊமத்துரை, வெள்ளையத் தேவன் சிலைகள் அவ்வாறே உள்ளன.

9. மண்டபத்தைச் சுற்றியுள்ள உள் வளாகத்தில் கட்டபொம்மன் போர் வரலாறு ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. அதில் சுந்தரலிங்கம் கோட்டை மதில் மீது வாளோடும், கொடியோடும் வீராவேசமாக நிற்பது போல் ஒரு ஓவியம் தீட்டப்பட்டுள்ளது.

அதையடுத்து ஒரு ஓவியத்தில் மேலே சொன்ன ஏழு தோரண வாயில்கள் சுற்றிலும் உள்ளது போல் வரையப்பட்டுள்ளது.

10. கோட்டைக்கு வெளியே கட்டபொம்மன் வாரிசுகளுக்கு, நீங்கள் அமைத்துத் தந்த குடியிருப்பு உள்ளது.

11. மேலும் சென்ற முறை நீங்கள் முதலமைச்சராக நெல்லை வந்த பொழுது, கொக்கிரகுளத்திலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்திற்கு சுந்தர லிங்கம் வளாகம் என்றும், அதிலுள்ள ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு புலித்தேவன் மாளிகை என்றும் பெயர் சூட்டினீர்கள். அப்பெயர்கள் இன்றும் நடைமுறையிலுள்ளன.

12. கட்டபொம்மன் கோட்டை கட்டி ஆண்ட பாஞ்சாலங்குறிச்சி ஊரே ரெவின்யூ ரிக்கார்டுகளில் இருந்து ஆங்கிலேயர்களால் அகற்றப்பட்டது, கோட்டையை மீண்டும் அழகுற அமைத்து, பாஞ்சாலங் குறிச்சி பெயரும் ரெவின்யூ ரெக்கார்டில் விளங்கச் செய்தீர்கள். கோட்டையில் இருந்து சுமார் ஏழரை கிலோ மீட்டர் தூரத்தில்தான் தங்கள் பெயர் நுழைவு வாயில் உள்ளது. இதைக் கூட தற்போதைய முதல்வரால் தாங்க முடியவில்லை. கட்டபொம்மனுக்குத் தோழனாக ஒரு சுந்தரலிங்கம் இருந்ததாகத்தான் வரலாறு கூறுகிறது. ஏற்கெனவே அவர் பெயரில் தோரண வாயில் அமைக்கப்பட்டுள்ளது. ஜெயலலிதா வேறு எந்த சுந்தரலிங்கத்திற்கு புதிய தோரணவாயில் அமைக்கப் போகிறார் என்பது வெளிச்சம். காழ்ப்பு உணர்ச்சிக்கு அளவே இல்லாது போயிற்று.

இங்ஙனம்

அன்புடன்

ஏ.எல். சுப்பிரமணியம்.

இவ்வாறு ஏ.எல்.எஸ். கடிதத்தில் எல்லா விளக்கமுமே இருக்கிறது.

உடன்பிறப்பே! மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன். என் பெயரை எடுப்பதிலே இந்த ஆட்சியாளர்கள் எவ்வளவு தீவிரம் வேண்டுமானாலும் காட்டட்டும் - நாட்டில் மலிந்து வரும் மக்கள் பிரச்சினைகள், ஆட்சியின் அலங்கோலங்கள், ஊழல்கள் இவற்றை மறைத்திட, திசை திருப்பும் முயற்சியில் முதலமைச்சர் ஜெயலலிதா ஈடுபடுகிறார் என்ற உண்மையை மக்கள் உணர்ந்து கொள்வார்கள்!

இக்கடிதம் நான் எழுதியதற்கு காரணமே, எதிலும் விபரம் அறிந்து கொள்ளாமலே பேரவையிலே கூட, முதலமைச்சர் பேசியிருக்கிறாரே என்பதை நாடு புரிந்துகொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக மட்டுமேதான்! அவசரக் கோலம், அலங்கோலமாகி விடும் அல்லவா?

அன்புடன்,

மு. க.

(30-03-1992)

1897. உண்மைகள் வெளிச்சத்திற்கு வரவேண்டும்!

உடன்பிறப்பே,

போபர்ஸ்! இந்தப் பெயர் இந்திய நாட்டின் பட்டி தொட்டிகள் முதல் பட்டினக்கரை வரையில் உள்ள எல்லா தரப்பு மக்களும் அறிந்த ஒன்று.

ராஜீவ்காந்தி அவர்கள் பிரதமராக இருந்த போது பீரங்கி வாங்கியதில் பெரும் ஊழல் நடைபெற்றுள்ளது என்று விவகாரத்தைப் பற்றி பேசாதவர்கள் இல்லை! எழுதாத ஏடுகளும் இல்லை!

போபர்ஸ் கம்பெனியிடமிருந்து வாங்கப்பட்ட பீரங்கிகளுக்கான பேரத்தில் பல கோடி ரூபாய் ஊழல் என்றும் - இந்தியாவில் உள்ள இடைத்தரகர்களுக்குப் பல கோடி ரூபாய் கைமாறியதென்றும் - பிரதமர் ராஜீவுக்கும் அவரது அமைச்சர்கள் சிலருக்கும் கூட அந்த ஊழலில் பங்கு உண்டு என்றும் எத்தனை எத்தனையோ ஆதாரங்கள் ஏடுகளில் வெளியிடப்பட்டன.

ராஜீவ் அரசு அந்த ஊழலில் உண்மைகள் வெளிவராமல் பார்த்துக் கொள்வதில் தனது அபாரமான திறமையைக் காட்டிக் கொண்டது.

அடுத்து வந்த தேசிய முன்னணி ஆட்சியில் வி.பி. சிங் அவர்கள் பிரதமர் பொறுப்பிலிருந்து; போபர்ஸ் விவகாரத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வரப் பெரிதும் முயன்றும் கூட; பல முட்டுக்கட்டைகளால் தாமதமாகி - முக்கியமான கட்டத்தில்; அந்த ஆட்சியே கவிழ்க்கப்பட்டு விட்டது.

அடுத்து வந்த சந்திரசேகர் அரசோ; ராஜீவ் காந்தியினால் முட்டுக் கொடுக்கப்பட்டு நாட்களை நகர்த்திக் கொண்டிருந்த அரசு! எனவே பிரதமராகச் சில நாட்கள் பதவி வகித்த சந்திரசேகர் அவர்கள் போபர்ஸ் ஊழலை விசாரிக்க வேண்டியது இவ்வளவு பெரிய அரசின் பணியல்ல என்றும் அதனை ஒரு சாதாரண போலீஸ் இன்ஸ்பெக்டரே செய்யலாம் என்றும் கூறி அந்தப் பூதாகாரமான

ஊழலை ஒரு புழுவினும் சிறியதாக வர்ணித்துத் தன் பதவியைச் சில காலம் காப்பாற்றிக்கொண்டு ஜென்ம சாபல்யம் அடைந்து விட்ட திருப்தியுடன் நாற்காலியை விட்டு இறங்கிக் கொண்டார்.

இப்போது நிலை என்ன? மூடி மறைக்க முடியாத அளவுக்கு போபர்ஸ் விவகாரம் மீண்டும் தலை தூக்கிவிட்ட காரணத்தால்; நரசிம்மராவ் அவர்களின் அரசு, அதனை விசாரிக்காமலும் இருக்க முடியவில்லை! விசாரிக்கவும் விருப்பமில்லை! இப்படியொரு இரண்டுங்கெட்டான் நிலையில் ஏதோ கண்துடைப்பாக சில காரியங்களில் ஈடுபட்டு காலத்தைப் போக்கிக் கொண்டிருந்தது.

ஆனால் போபர்ஸ் விவகாரத்தில் ராஜீவ் காந்திக்கே நேரடித் தொடர்பு உண்டு என்ற குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரப் பத்திரங்களை ஏடுகள் வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியவுடன் மத்திய அரசு தர்மசங்கடத்தில் மாட்டிக் கொண்டு விழித்தது.

இருந்தபோதிலும் போபர்ஸ் விசாரணையை அறவே தடுத்து நிறுத்திவிட முடியாத நிலைமை மத்திய அரசுக்கு!

எனவே அதுகுறித்து சுவிட்சர்லாந்தில் நடைபெறும் விசாரணையை இழுபறியாக்கி காலம் கடத்தும் தந்திரத்தைக் கையாண்டது.

அந்தத் தந்திரத்தைச் செயல்படுத்தும் முயற்சியில் மத்திய அமைச்சர் சோலங்கி பலிக்கடா ஆக்கப்பட்டு விட்டார்.

இந்திய நீதிமன்ற விசாரணை முடியும் வரையில் சுவிட்சர்லாந்து நாட்டில் நடக்கும் புலன் விசாரணைகளை நிறுத்தி வைக்கும்படி அந்த அரசாங்கத்துக்கு இந்திய அரசு தகவல் தந்ததாக ஒரு பெரும் குற்றச்சாட்டு!

அதற்குப் பயன்படுத்தப்பட்டவர் சோலங்கி என்றும்; அவரே நேரில் சென்று விசாரணையைத் தாமதப்படுத்தும்படி சுவிட்சர்லாந்து அரசுக்குக் கூறியதாகவும் எதிர்க்கட்சிகள் பிரச்சினையைப் பெரிதாக எழுப்பி விட்டன!

அதை மறுக்கவும் முடியாமல்; வேறு யாரையும் காட்டிக் கொடுக்கவும் முடியாமல் மாதவ சிங் சோலங்கி அவர்கள்; பின்வருமாறு ஒரு செய்தியைச் சொன்னார்.

கடந்த ஜனவரியில் டாவோஸ் நகரத்தில் சுவிட்சர்லாந்தின் வெளியுறவு மந்திரியை சந்தித்தேன். அப்போது அவரிடம் ஒரு

கடிதத்தைக் கொடுத்தேன். அது என்னிடம் ஒரு வக்கீல் கொடுத்து சுவிட்சர்லாந்து வெளியுறவு மந்திரியிடம் கொடுக்கச் சொன்ன கடிதம். அந்தக் கடிதத்தை என்னிடம் கொடுத்த அந்த வக்கீலின் பெயர் எனக்குத் தெரியாது. கடிதத்தை சேர்ப்பித்தது தவிர வேறு எதுவும் தெரியாது.

இப்படியொரு இந்தியப் பேரரசின் மத்திய அமைச்சர்; அதுவும் வெளியுறவு அமைச்சர் - தபால் இலாக்கா அமைச்சர் என்ற நிலையிலே கூட அல்ல; தபால் தந்தி ஊழியர் ஒருவரின் நிலையிலே செயல்பட்டிருப்பதாகச் சொல்வது நம்பத் தகுந்ததல்ல என்று நாடே கேலிபுரிகிற கட்டத்தில்; சோலங்கி அவர்கள் தனது பதவி விலகல் மூலம் அதற்கு முற்றுப்புள்ளி வைத்திட முனைந்துள்ளார்.

இப்போது அடுத்த கேள்வி எழுந்து விட்டது! அவரை இந்தப் பணிக்கு முடுக்கி விட்டது யார் என்பதுதான் அந்தக் கேள்வி!

உண்மையிலேயே ஒரு வக்கீல் கொடுத்த கடிதமாக அது இருக்க முடியாது என்பது எதிர்க்கட்சிகள் எடுத்து வைக்கும் வாதம்!

மிகக் கடுமையான ஓர் ஊழல் பிரச்சினையில்; ஒரு வக்கீல் கடிதம் கொடுத்தார் - அந்த வக்கீல் அரசாங்க வக்கீலும் அல்ல - அந்தக் கடிதத்தில் உள்ள விஷயமும் தனக்குத் தெரியாது என்றெல்லாம் சோலங்கி அவை உறுப்பினர்களுக்கு பதில் சொல்லித் திண்டாடியிருப்பது இந்திய நாட்டின் பெருமைக்கே அறைகூவல் விடுத்திடும் நிகழ்ச்சியாகும்!

யார் கொடுத்த கடிதமோ; அல்லது சோலங்கி நேரில் விடுத்த வேண்டுகோளோ? அல்லது யாருடைய தூண்டுதலோ? இத்தனையிலும் ஒடுகிற மைய இழை ஒன்றுதான்!

போபர்ஸ் விசாரணையில் விரைவில் முடிந்து உண்மைகள் வெளிவந்து உத்தமர் எனப் புகழப்பட்டோரின் முகமூடிகள் கிழிக்கப்பட்டு விடக் கூடாது என்பதுதான் அந்த மைய இழை!

நரசிம்மராவ் அவர்கள் என்ன செய்கிறார் என்று பார்ப்போம்!

உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வர முனைந்திடப் போகிறாரா? அல்லது; ஊர்வாயை மூடிட ஏதாவது புது உபாயம் தேடப் போகிறாரா?

அன்புடன்,

மு. க. (02-04-1992)

1898. மக்கள் பிரச்சினைகளை முன் வைப்போம்!

உடன்பிறப்பே,

இந்த மாதம் 16-ஆம் நாள் நமது தோழமைக் கட்சிகளுடன் சேர்ந்து நீ எழுச்சியுடன் ஆற்ற வேண்டிய கடமை ஒன்று உள்ளது. இரண்டொரு நாட்களுக்கு முன்பு தி.மு.க., மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, ஜனதா தளக் கட்சிகளின் பிரதிநிதிகள் கூடிப் பேசி எடுத்துள்ள முடிவை ஆங்காங்கு வெற்றிகரமாக நிறைவேற்றிட வேண்டும்.

அரசின் அடாவடித்தனங்களும், அடக்குமுறைகளும், அதிகார துஷ்பிரயோகமும் அளவு மீறிப் போய்க்கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்தும் கடமையும், இடித்துரைக்கும் பணியும் எதிர்க்கட்சிகளுக்கு உண்டு!

ஆனால், மக்களால் எதிர்க்கட்சியென்ற தகுதி வழங்கப்பட்டு சட்டமன்றத்தில் அமர்த்தப்பட்டுள்ள கட்சியோ; தனக்குள்ளேயே இரு குழுக்களாகி; ஒரு குழு ஆளுங்கட்சிக்குத் தாளம் போட்டால் - இன்னொரு குழு டமாரம் அடிப்பேன் என்று முழங்கிக் கொண்டிருக்கிறது.

மக்கள் பிரச்சினைகளுக்காக உரத்த குரல் எழுப்பிடத் தவறுவது ஒருபுறம் இருக்கட்டும்; அவர்களது சொந்தக் கட்சி மந்திரிக்கே திருச்சி விமான நிலையத்தில் கறுப்புக் கொடி - அடிதடி - தாக்குதல் - கார் உடைப்பு - ஆளுங்கட்சியின் உபயமாக நடத்தப்பட்டதே; அதற்காகக் கூட ஒரு கண்டனக் குரல் எழுப்ப - உரிய அவையில், ஒரு உதட்டை விட்டு இன்னொரு உதடு பிரிய மறுத்துவிட்டதே! அப்படியொரு பிடிவாதமான மௌனமன்றோ கடைப்பிடிக்கப்பட்டது!

டெண்டர் விடாமல் பீர் தொழிற்சாலை விற்பனையா? அமைச்சர்களுக்கென வகுக்கப்பட்ட நெறிமுறைகளை மீறி

முதலமைச்சரே இரண்டு கோடி ரூபாய்க்கு அரசாங்க நிலத்தை விலைக்கு வாங்குவதா? பல கோடி ரூபாய் முதலீடு உள்ள ஸ்பிக் உரத் தொழிற்சாலையில் அரசாங்கத்தின் கண்காணிப்புக்காக தலைவர் பதவியில் இருந்த அரசுத் தலைமைச் செயலாளரை நீக்கிக் கொண்டு அந்தத் தொழில் அதிபர் குடும்பத்துக்கே அந்தத் தொழிற்சாலையை அனுபவித்து மகிழ அனுமதிப்பதா?

இந்தக் கேள்விகள் எல்லாம் கடுகணைகளாகக் கூட அல்ல; தொடுகணை களாகவாவது சட்டப்பேரவையில் எழுப்பப்பட்டிருக்க வேண்டாமா?

எதிர் வரிசையில் இருப்போரோ விரல் விட்டு எண்ணக் கூடிய அளவுக்கு மிகச் சிலர்! அங்கு அவர்கள் நிலை என்ன என்பதை விளக்கத் தேவையில்லை! மின்னல் அனைய பிரகாசமான கருத்துக்களைக் கூறினாலும்; அவை மின்னல் வேகத்தில் கூச்சல் குழப்பங்களால் செயலற்றுப் போகின்றன!

தராசு அலுவலக ஊழியர்கள் இருவர் கொலையுண்டார்களே; வழக்கு என்ன ஆயிற்று? விளக்கம் உண்டா? ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.வின் செயல், ஆளுங் கட்சி மேலிடத்துக்குப் பிடிக்காத காரணத்தால் அந்த எம்.எல்.ஏ. சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலிருந்து கடத்தப்பட்டு தாக்கப்பட்டாரே; அதற்குக் கேள்வி முறை உண்டா? திசை திருப்பும் செய்தியல்லவா கற்பனை செய்யப்பட்டது!

அவிநாசிக்கருகே கள்ளச்சாராய சாம்ராஜ்யமே கண்டுபிடிக்கப் பட்டது! பிடிபட்ட சீமான் அடுத்த கணமே ஜாமீனில் விடுதலை ஆகிறார் - பிடித்த அதிகாரி மாறுதல் செய்யப்படுகிறார்!

அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சேகர் என்பவரால் எந்த வனத்துறை அதிகாரிக்கு ஜனாதிபதி விருது கொடுக்கலாம் என்று பரிந்துரைக் கடிதம் எழுதப்பட்டதோ அந்த வனத்துறை அதிகாரி; இந்த ஆட்சியில் அ.தி.மு.க.வினர் களவாடிக் கடத்திய 5 கோடி ரூபாய் பெறுமானமுள்ள சந்தனக் கட்டைகளைப் பிடித்தார் என்பதற்காக தர்மபுரியிலேயிருந்து கன்யாகுமரிக்கு மாற்றப்படுகிறார்.

நீதிமன்ற ஆணையை மீறி சாதிச் சான்றிதழ் தரத் தாமதம் செய்தமைக்காக ஒரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கே நீதிபதி சிறைத் தண்டனை வழங்கும் அதிசயமும் இந்த ஆட்சியில்தான் நடைபெற்றுள்ளது.

எதிர்க்கட்சி வரிசையில் சிலரே இருப்பினும் ஏடுகள் எதிர்க் கட்சியாகப் பணியாற்றலாம் எனக் கூறிவிட்டு; இப்போது அந்த ஏடுகள் எரிக்கப்படுவதும்; போலீசாரால் அடக்கப்படுவதும்; அவற்றின் அலுவலகங்கள் தாக்கப்படுவதும் என்ன நியாயம்? நக்கீரன் எழுதியது அவதூறு என்றால் சட்டமிருக்கிறது வழக்குப் போட! மன்றமிருக்கிறது நீதி வழங்க!

அதை விடுத்து தாக்குதல்! தணலில் அந்த ஏடுகளை இடுதல்! அதற்குப் பாதுகாப்பாக காவல் துறை கை கட்டி நிற்பது என்றால்; இதற்குப் பெயரா பத்திரிகை சுதந்திரம்?

ஒரு ஏடு; சாதிக் கலவரத்தையோ - மதக் கலவரத்தையோ தூண்டிவிடும் போக்கில் எழுதினால்; செய்தி வெளியிட்டால் அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்கலாம் - சட்டம், ஒழுங்கைக் காப்பாற்ற!

அப்போதும் பாதிக்கப்பட்டோர் நீதிகோரி வழக்கு மன்றம் செல்லலாம்!

ஆனால் இப்போது எல்லா வழிகளும் மல்லவா அடைக்கப்படுகிறது!

நினைக்கவே நெஞ்சு நெக்குருகும் கொடுமை மகாமகத் திருவிழாவில் நடைபெற்றது -

இந்தியா முழுமையுள்ள எல்லா மொழி ஏடுகளும்; மகாமகத்தை ஜெயலலிதா தனது கட்சி மகாநாடுபோல ஆக்கியதால்தான் இந்த விபரீதமென குற்றம் சாட்டின!

எதிர்க் கட்சிகள் (காங்கிரஸ் தவிர) என்ன கேட்டன! உயர்நீதி மன்ற நீதிபதி விசாரணை - அதைக்கூட ஏற்கமறுத்து; ஆண்டவன் கூலி கொடுப்பான்! என்று முனிபுங்கவர்களைப் போல சாபமல்லவா முதல்வரால் கொடுக்கப்பட்டது!

இப்படி எத்தனை எத்தனையோ; எண்ணிலடங்கா ஜனநாயக விரோதச் செயல்கள்!

நம்பி வாக்களித்த மக்கள் நட்டாற்றில் நிற்கிறார்கள்! விலைவாசி, மணிக்கு மணி ஏறிக் கொண்டிருக்கிறது!

பால்விலை, அரிசி விலை, பஸ் கட்டணம், ரயில் கட்டணம் - இப்படிப் பல தொல்லை தரும் உயர்வுகள்!

ஒழுங்கான அரிசியும் தருவதில்லை - உரிய அளவும் கிடைப்பதில்லை! ரேஷன் கடை மோசடி! மோசடி!

உள்ளாட்சி மன்றங்களுக்கு இப்போது தேர்தல் இல்லை! ஊர் மக்களின் குறை கோட்பார் இல்லை!

கூட்டுறவு சங்கத் தேர்தலை ஊழலின்றி நடத்தப் போகிறார்களாம்!

அரசு நிலத்தை அபகரித்து; அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினராலேயே அடையாளம் காட்டப்பட்டவர் அமைச்சர் இன்று! அவர் ஊழலின்றி கூட்டுறவு சங்கத் தேர்தலை நடத்துவாராம் - ஜான்சி ராணி என்று வர்ணித்தனர் முதலமைச்சரை; அவரோ இப்போது டான்சி நிலத்தை அரசு நெறிமுறைக்கு விரோதமாக வாங்கி டான்சி ராணி ஆகியிருக்கிறார். அவர் தலைமையில் கூட்டுறவு சங்கத் தேர்தல் ஒழுங்காக நடைபெறுமாம்!

அமைச்சர்கள் கூட்டுறவு அதிகாரிகளை மிரட்டி; ஆளுங்கட்சியின் கூட்டுறவுத் தேர்தல் மோசடிகளுக்கு ஒத்துழைப்பு தருமாறு உத்திரவிட்ட செய்தி பத்திரிகைகளிலேயே வெளி வந்துள்ளது!

நாள்தோறும் ஆயிரம் கோடி, பத்தாயிரம் கோடி என்று அறிவிப்புகள்!

மாநிலத்தில் பல மாவட்டங்களில் வறட்சி! கடுமையான வறட்சி! குடிக்கத் தண்ணீர் இல்லை! கால் நடைகளுக்குத் தீவனப் பஞ்சம்!

இவற்றையெல்லாம் கண்டுகொள்ள யாருமில்லை; தர்மதேவதை மந்திரம் ஜெபித்துத் தவம் செய்கிறார்கள் மந்திரிகள்; கிடைத்த இடத்தைத் தக்க வைத்துக் கொள்ள!

இந்த நிலையில்தான் உடன்பிறப்பே; கழகமும் தோழமைக் கட்சிகளும் 16-ந் தேதி மாநில முழுதும் அரசு அலுவலகங்களின் முன்னால் அமைதியான ஆர்ப்பாட்டம் நடத்தி மக்கள் பிரச்சினைகளுக்காகவும் - ஜனநாயக விரோத காரியங்களை தடுத்து நிறுத்திடுவதற்காகவும் - ஊழல் முடை நாற்றத்தைக் கண்டிப்பதற்காகவும் - திரள்வதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

கழக உடன்பிறப்புகளுக்கு இதற்கிடையே நகரக் கழகக் கட்சித் தேர்தல்களும் முடிவுற்று புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவார்கள்.

கட்சித் தேர்தலில் வென்றோர் - வெற்றி வாய்ப்பை இழந்தோர் - அனைவரும் அணி திரண்டு; தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களுடன் 16-ந் தேதி அமைதி ஆர்ப்பாட்டம் மகத்தான வெற்றி என்ற செய்தியை அறிவித்திட; ஆயத்தமாக வேண்டுகிறேன்.

அன்புடன்,

மு. க.

(06-04-1992)

1899. அன்பு இதயங்களின் வாசல்களின் முன்னால்!

உடன்பிறப்பே,

நமது கழக அமைப்புகளின் தேர்தல்கள் மே திங்களுடன் நிறைவுற்று அதனைத் தொடர்ந்து புதிய பொதுக்குழு கூடி தலைமைக் கழகத் தேர்தலை நடத்த இருக்கிறது.

ஏறத்தாழ அறுபதாயிரம் கிளைக் கழகங்களுக்கான தேர்தல்கள் முடிவுற்று; கிளைகளின் நிர்வாகிகளும் - கிளைகளிலிருந்து மேலமைப்புகளுக்குச் செல்லும் பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பேரூர்க் கழகங்களின் தேர்தல்களும் நடந்து முடிந்து அடுத்ததாக; வரும் 10, 11, 12 நாட்களில் நகரக் கழகத்தில் நிர்வாகிகளின் தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன. அதற்கடுத்து ஒன்றியக் கழகத் தேர்தல்கள்; அந்த அமைப்புகளில் இருந்து மாவட்டத்திற்கு செல்லும் பிரதிநிதிகளால் மாவட்டக் கழக நிர்வாகிகளும், தலைமைப் பொதுக்குழுவுக்கான உறுப்பினர்களும், தலைமைச் செயற்குழு உறுப்பினர்களும் தேர்வு செய்யப்படுவார்கள்.

இந்தத் தேர்தல்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் குறித்தும், நடைமுறை சாத்தியமாகத் தேவைப்படும் மாற்றங்கள் குறித்தும், கழக சட்டதிட்டங்களின் அடிப்படையில் கழகப் பொதுச் செயலாளர் அவர்கள் அவ்வப்போது அறிவிப்புகள் செய்தும், அமைப்புச் செயலாளர்கள் வாயிலாகத் தெரிவித்தும் தேர்தல்கள் ஒழுங்குற நடைபெற ஆவன செய்து வருகிறார்.

மாவட்டங்களில் இருந்தும், ஒன்றியங்கள், நகரங்களிலிருந்தும் நாள்தோறும் சில பிரச்சினைகள் தலைமைக் கழகத்திற்கு வருகின்றன. அவற்றை ஆராய்ந்து பார்த்து; பாரபட்சமின்றி நியாயப்பூர்வமான முடிவுகள் எடுக்கப்பட்டு, அவைகள் அமைப்பு ரீதியாகச் செயல்படுத்தப் படுகின்றன.

பெரும்பாலான அமைப்புகளில் போட்டிகள் கடுமையாக இருக்கின்றன! பூரிப்புதான் ஒருவகையில் எனக்கு!

பூண்டற்றுப் போய்விட்டது கழகம் எனப் புகன்று புளகாங்கிதம் அடைந்தார்களே; அவர்களைப் பொய்யர்கள் ஆக்கிவிட்டு; அமைப்புகளின் பொறுப்புகளுக்குப் பலமான போட்டியல்லவா போடுகிறார்கள் கழகக் கண்மணிகள்!

போட்டியை வரவேற்று மகிழ்கின்ற அதே நேரத்தில்; போட்டியில் குதித்திருப்போரை யெல்லாம் கேட்டுக் கொள்கிறேன் - நமது தலைவர் அண்ணா வளர்த்து வைத்துள்ளதும், நாம் கண்போல் கட்டிக் காப்பதுமான குடும்ப பாச உணர்வுக்குக் கடுகளவு குந்தகமும் விளைந்திடாமல் கழக அமைப்புகளை வலுப்படுத்துவதிலும், வளர்ப்பதிலும் கவனம் தேவை!

போட்டியில் களத்தில் நிற்போர்; சிந்திக்க வேண்டும் - வீம்புக்குப் போட்டியிடுவதை விடுத்து - யார் வென்றால் கழகப் பணிகளை அயராமல் ஆர்வத்துடன் ஆற்றிட இயலும் என்பதை எண்ணிப் பார்த்து விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடனும் நடந்து கொள்ளலாம்! வெற்றிக்கான வாய்ப்பு அதிகமிருப்பினும் கூட; அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி வென்ற பிறகு விறுவிறுப்பாகக் கழக வேலைகளைச் செய்திட நம்மால் முடியுமா என சிந்தித்துப் பார்த்து; இயலாது என மனச்சாட்சி கூறிடின் - அதற்கு ஏற்றோர் எவரோ அவருக்கு வழிவிடுதலே கழகத்திற்கு ஆற்றிடும் அரும்பணியாகும்!

அதேபோல் இந்த அமைப்புகளின் தேர்தல்களில் வாக்களிக்கும் வாய்ப்பு பெற்றவர்கள் - விருப்பு, வெறுப்பு இவற்றினை மூட்டை கட்டி, மூலையில் போட்டுவிட்டு எவர் வென்றிடின் கழகத்தின் கடமையினைக் குறைவற நிறைவேற்ற முனைவார் - எவர் கண்ணியம் காத்திடுவார் - எவர் எந்த நிலையிலும் கட்டுப்பாடு காக்கத் தவறாது இருந்திடுவார் - என்று அண்ணா வழங்கியுள்ள மூன்று அளவுகோல்களையும் பயன்படுத்தி அமைப்புகளின் நிர்வாகிகளையோ, மேலமைப்புகளுக்கான பிரதிநிதிகளையோ தேர்ந்தெடுக்க வேண்டும்.

இல்லையேல் அறுபதாயிரம் கிளைக் கழகங்கள் என்பது; நமது வலிவைக் குறிப்பதாக அமையாமல் - வடியக் கூடிய ஒரு வீக்கத்தைக் குறிப்பதாகவோ அல்லது வடியாமல் வருத்தக் கூடிய ஒரு நோயைக் குறிப்பதாகவோதான் ஆகிவிடும்!

அறுபதாயிரம் கிளைகள் - நாற்பது லட்சம் உறுப்பினர்கள் - ஆம்; பொதுத்தேர்தலில் முற்றாக தோற்றுப்போன ஓர் இயக்கத்திற்கு!

பாய்மரம் சிதைந்தது போல் தேர்தலில் தோல்வி; வீண்பழி எனும் புயற்காற்று வீசியதால்! பாய்மரம் வீழ்ந்து, பாய்கள் கிழிந்து போயினும் - படகு பலமாக இருப்பது போலக் கழக அமைப்பு இருக்கிறது!

அதற்கு அடையாளமே கிளைகளில், பேரூர்களில், நகரங்களில், ஒன்றியங்களில், மாவட்டங்களில்; மற்றும் பொதுக்குழு செயற்குழுக்களில் அங்கம் வகித்திட இத்தனை போட்டிகள்!

தோள் மீது கை போட்டுக் கொண்டு பிரிக்க முடியாத நண்பர்களாக இருந்தோர் கூட அமைப்புகளின் பொறுப்புகளுக்கான போட்டிகளில் ஈடுபட்டுள்ளனர் - அந்தப் போட்டி எப்படியிருக்கிறது என நான் கருதுகிறேன் என்றால்; உனக்கேன் சிரமம்; நான் அந்தப் பளுவைத் தூக்குகிறேன் என்ற பாச உணர்வுடன் இருப்பதாகத் தான்! அஃதன்னியில் நீ அதைத் தொடவே கூடாது என்ற வெறுப்பு உணர்வின் அடிப்படையில் அல்ல! அந்த வெறுப்பு உணர்வு இருந்தால் அதனை விலக்கிக்கொள்ள வேண்டும்; அது நமது குடும்பத்துக்கு ஆகாது என்று தாயின் மொழியில் வேண்டுகிறேன்! தமிழ் மொழியென்று பொருள் கொள்ளாமல்; தாயின் உள்ளத்துடன் வேண்டுகிற மொழியென்றே வேண்டிடுக!

இன்னொன்று மிக முக்கியம்; அவரவர் சார்ந்துள்ள அமைப்புகளின் தேர்தல்களில் மட்டுமே அக்கறை காட்டிட வேண்டும் -

மேலமைப்புகளின் தேர்தலுக்காக; கீழ் அமைப்புகளின் தேர்தல்களிலேயே கவனம் செலுத்த ஆரம்பித்தால் - வாக்களிக்கும் வாய்ப்புக்கு மட்டுமே சிலர் நிர்வாகிகளாகவோ, பிரதிநிதிகளாகவோ கீழ் அமைப்புகளில் இடம் பெறுவரேயன்றி - கழகத்திற்கு வலிவேற்றி வளர்த்திடும் பணிக்குப் பயன்படாமற் போய்விடுவர்!

கடந்த காலத்தில் ஒவ்வொரு அமைப்பின் நிர்வாகமும் எவ்வாறு செயல்பட்டன என்பதையும் கழக வாக்காளர்கள் கணித்திடல் மிக முக்கியம்!

இந்தக் கருத்துக்களை; கழகத்தின் நலம் நாடுவோர் அனைவரும் என்னுடன் பகிர்ந்து கொள்வர் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!

தலைமைக் கழகமாயினும், மாவட்டக் கழகமாயினும், ஒன்றிய நகரக் கழகங்களாயினும், ஏன் கிளைக் கழகமாயினும் கூட அஃதன்னியில் நமது கழகத்தின் பல்வேறு அணிகளில் நிர்வாகப் பொறுப்பு வகிப்போர் ஆயினும் - எல்லோருமே எல்லோரையும் அரவணைத்து, எள்ளளவு மனக்கசப்புக்கும் இடமின்றி, எதிரியிடம்தான் வளையக் கூடாது; உடன்பிறப்புகள் ஒருவருக்கொருவர் வளைந்து கொடுப்பது; அதுவும் கழகம் வலிவோடும் பொலிவோடும் திகழ வளைந்து கொடுப்பது தவறல்ல; என்ற பரந்த நோக்குடன் பெருந்தன்மையுடன், இந்த இயக்கத்தின் இலட்சியப் பயணம் அண்ணா வழியில் அயராது தொடர்ந்த நல்லெண்ணத்துடன் செயல்பட வேண்டும்!

நிறைவுறும் கட்டத்தை நெருங்கிவிட்ட தேர்தல்களில் நமது கழக உடன்பிறப்புகள்; இந்தக் கடிதத்தில் மைய இழையாக விளங்கிடும்; எனது ஒட்டுமொத்தமான வேண்டுகோளாக-

ஊக்கம்

உழைப்பு

ஒற்றுமை

ஆகியவற்றை, அண்ணா தந்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் அடிப்படையில் ஒளியுமிழ்ந்திடச் செய்யுங்கள் என; உடன்பிறப்புகளின் அன்பு இதயங்களின் வாசல்களின் முன்னால் வைக்கிறேன்.

அன்புடன்,

மு. க.

(07-04-1992)

1900. பாவம்; வெளியில் சொல்லத்தான் தயக்கம்!

உடன்பிறப்பே,

1976-க்கு முன்பு நடைபெற்ற தி.மு.க. ஆட்சியிலும் - 1989, 1990 ஆகிய இரண்டு ஆண்டுகால தி.மு.க. ஆட்சியிலும் தொழில்துறையின் வளர்ச்சி குன்றி விட்டதைப் போலவும் அ.தி.மு.க. ஆட்சியில்தான் புதிய புதிய தொழில் திட்டங்கள், கொள்கைகள் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவது போலவும் - ஜெயலலிதா அவர்கள் பாவலா பண்ணிக்கொண்டு பேசுவதைப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது.

1989-ல் கழகம் மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பு, தமிழகத் தொழில் துறையில் எவ்வளவு முறைகேடுகள் நடந்திருந்தன - அவற்றால் அரசுக்கு எவ்வளவு இழப்பு - தொழில் வளர்ச்சியில் எத்துணை பெரிய தடங்கல் என்பதற்கும்; கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் அக்குறைபாடுகள் எப்படிக் களையப் பெற்றன என்பதற்கும் இந்தக் கடிதத்தில் ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் எடுத்துக் காட்டுகிறேன்.

1990 ஏப்ரல் திங்கள் 18-ஆம் நாள் தொழில்துறை மானியத்துக்கு நடைபெற்ற விவாத முடிவில் நான் பதில் அளித்துப் பேசியதில் ஒரு பகுதியை மட்டும் நினைவூட்டுகிறேன்.

கிரானைட் பற்றி இப்போது நிறையப் பேசப்படுகிறது - கிராபைட் தொழில் குறித்தும் பேசப்படுகிறது - அது பற்றிய சில விபரங்களை நீ தெரிந்து வைத்திருக்க வேண்டும். மக்களுக்கு விளக்க வேண்டுமென்பதற்காக அந்தப் பதிலுரையின் ஒரு பகுதியை இக்கடிதத்தில் இணைத்துள்ளேன். இதோ அந்தப் பகுதி:-

உறுப்பினர்கள் டாமினைப் பற்றியும், கிரானைட்டைப் பற்றியும் அதிலே நடைபெற்ற தவறுகள் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு விளக்கமாக சொல்லியிருக்கிறேன். எனவே சுருக்கமாகத்தான் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக உறுப்பினர் பி.எச். பாண்டியன் கடந்த கால ஆட்சியில் தவறு செய்த ஒரு அதிகாரியை இன்னும் விட்டு வைத்திருக்கிறீர்களே ஏன் என்று எல்லாம் கேட்டார்கள். தவறு எப்படி நடந்தது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். உறுப்பினர் வெள்ளிங்கிரி பேசும் போது ஒன்றைச் சொன்னார்கள்.

இந்த ஆண்டு நீங்கள் ஈட்டியிருக்கிற லாபம் உற்பத்தியால் வந்ததல்ல. விலையை உயர்த்தியதால் வந்தது என்றார்கள். அதிலே ஓரளவுக்கு உண்மை இருக்கிறது. ஆம். விலையை உயர்த்தினோம். எப்படி? வேண்டுமென்றே விலையைக் குறைத்து, தனியார் தருகின்ற விலையை விட அரசு நிறுவனம், பொது நிறுவனம், டாமின் நிறுவனம் விலையைக் குறைத்து அதன் காரணமாக ஊழல்கள் நடைபெற்ற காரணத்தால், அதற்கு ஓர் அதிகாரி அன்றைக்குக் காரணமாக இருந்ததினால் பெரும் நஷ்டத்திற்கு இந்த நிறுவனம் உள்ளானது.

அந்த விலைகளை எல்லாம் சரி பார்த்து, கவர்னர் ஆட்சிக் காலத்திலே நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் கவர்னர் ஆட்சிக் காலத்திலே கூட அந்த அதிகாரியினுடைய சுய உருவம் நவம்பர் மாதத்திலேதான் தெரிந்தது. நவம்பரிலே தெரிந்தவுடன், கவர்னர் ஆட்சியிலே நடவடிக்கை எடுக்கப்பட்டது.

என்ன நடைபெற்றதென்றால், 1983-84-ஆம் ஆண்டு ஒரு கன மீட்டர் விலை - சாம்பல் வண்ணப்பாறை, கருப்புவண்ணப் பாறை என்று இரண்டு விதமான பாறைகள் அங்கே ஏற்றுமதிக்காக விற்பனை செய்யப்படும் பாறைகள் - டாமின் விதித்த விலை 277 முதல் 294 வரையிலான டாலர்,

தனியார் அதே நேரத்தில் அதே கல்லுக்கு 420 டாலர்

84-85-ல் டாமின் 258 முதல் 269 டாலர்

தனியார் 475 டாலர்

85-86-ல் டாமின் 299 டாலர்.

தனியார் 460 டாலர்

86-87-ல் டாமின் 404 முதல் 427 டாலர்

தனியார் 475 டாலர்

87-88-ல் டாமின் 512 முதல் 538 டாலர்

தனியார் 575 டாலர்

இந்த விபரங்கள் வெளிப்பட்டு, அப்போது தான் கவர்னருடைய கவனத்திற்கு வந்து, அந்த அதிகாரி பிடிபடுகிறார். அது மட்டுமல்ல, டாமின் சார்பாக ஏற்றுமதி செய்யப்பட்ட சாம்பல் வண்ணப் பாறை மிக நல்ல தரம்வாய்ந்தது. தனியார் ஏற்றுமதி செய்த சாம்பல் வண்ணப் பாறை மிக மிகக் குறைந்த தரம்வாய்ந்தவை. அவை அதிக விலைக்கு விற்று, டாமின் சார்பாக குறைந்த விலைக்கு விற்கப்பட்டதால், பெரும் ஊழல் நடைபெற்ற காரணத்தால்தான் பெரும் இழப்புக்கு இந்த நிறுவனம் ஆளானது. கருப்பு வண்ணப் பாறையில் 86-87-ல் என்ன பெரிய அநியாயம் நடந்திருக்கிறது என்று பார்த்தால் ஒரு கன மீட்டர் டாமின் விலை 714 டாலர், தனியார் விலை 1500 டாலர். தரக்குறைவான அந்த கருப்பு வண்ணப் பாறையை தனியார் 1500 டாலருக்கு விற்ற நேரத்தில், நம்முடைய டாமின் 714 டாலருக்கு விற்றிருக்கிறது. இதன் காரணமாக ஒரு சுரங்கத்தில் ஏற்பட்ட நஷ்டம் மாத்திரம் 48 லட்சம் ரூபாய்.

86-ஆம் ஆண்டில் திருவக்கரையில் உள்ள சுரங்கப் பாறைக்கு 1281 டாலர் கொடுக்க ஜப்பான் நிறுவனம் ஓரியன்ட் சான்யோ முன் வந்தது. ஒரு கன மீட்டருக்கு 1281 டாலர் கொடுக்க அந்த நிறுவனம் வந்தது. ஆனால் டாமின் நிறுவனம் அவர்களுக்குக் கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டு மிட்சுபிஷி கார்ப்பரேஷனுக்கு ஒரு கன மீட்டருக்கு 550 டாலர் வீதம் 1982-ஆம் ஆண்டு கொடுத்த அதே விலைக்கே ஏற்றுமதி செய்தது. இதனால் அந்த ஒரு சுரங்கத்திலே மாத்திரம் ஏற்பட்ட நஷ்டம் 41 லட்சம் ரூபாய். கவர்னர் ஆட்சியில் பழைய நிர்வாக இயக்குநரை மாற்றிவிட்டு - பாண்டியன் குறிப்பிட்டாரே அந்த நிர்வாக இயக்குநர் - அவரை மாற்றி விட்டு புது நிர்வாக இயக்குநரைப் போட்டவுடன், நவம்பர் மாதம் 714 டாலர் என்ற நிலை மாற்றப்பட்டு, டிசம்பர் மாதம் முதல் 2050 டாலர் என கன மீட்டருக்கு விற்கப்படுகிற நிலை உருவானது என்பதையும் நான் ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதனால் இப்படி இந்த விலை மாற்றங்களின் காரணமாக டாமினுக்கு ஏகப்பட்ட நஷ்டம் - கிட்டத்தட்ட டாமின் வசம் 3500 ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் இருக்கிறது. அதில் 2500

ஏக்கரில் ஏற்பட்ட நஷ்டம் அந்த நேரத்தில் 10 கோடி ரூபாய்! எனவேதான் அந்த அதிகாரி மீது நாம் இன்றைக்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு இருக்கிறோம். விசாரணை முறைப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் நடவடிக்கை எடுக்க சில ஆதாரங்கள் தேவைப்படுகிற காரணத்தால் - இங்கு மாத்திரம் அல்ல, வெளிநாட்டிலே இருந்தும் கூட ஆதாரங்கள் தேவைப்படுகின்ற காரணத்தாலே சற்றுக் காலதாமதம் ஆகியதேயல்லாமல் நிச்சயம் தவறு செய்தவர்கள் விடுவிக்கப்பட மாட்டார்கள்; தண்டிக்கப்படுவார்கள் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1987-88ல் இதைப் பார்த்தால் புரியும். 1987-88-ல் விற்பனை 11.75 கோடி ரூபாய். மொத்த நஷ்டம் 11 லட்சம் ரூபாய். 1988-89-ல் விற்பனை 10.63 கோடி ரூபாய். லாபம் 2.12 கோடி ரூபாய். இப்போது 1989-90-ல் விற்பனை 14.14 கோடி ரூபாய். லாபம் 5.27 கோடி ரூபாய். இந்த 5.27-ஐ புத்தகத்திலே 2.12 என்று தவறாக அச்சிட்டு விட்டார்கள். திருத்திப் படித்துக் கொள்ள வேண்டுகிறேன்.

11 கோடிக்கு விற்பனையானபோது 11 லட்சம் நஷ்டம். 14 கோடிக்கு விற்பனை ஆகிறபோது இப்போது 5 கோடி ரூபாய் லாபம் என்றால் எவ்வளவு பெரிய தவறு அதிலே நடைபெற்றிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம். எனவேதான் இதிலே நடைபெற்று இருக்கின்ற தவறுகளை விசாரிக்க, நடவடிக்கைகளை எடுக்க அரசு தயங்காது என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகங்கை கிராஃபைட்டைப் பற்றியும் இங்கே பேசி இருக்கின்றார்கள். இந்த அதிகாரி இருந்து தீட்டப்பட்ட திட்டம் அது. 1984-ஆம் ஆண்டு 85 சதவீத கரிச்சத்தோடு கூடிய கிராஃபைட் சுத்திகரிப்பாலை ஒன்றை 3.4 கோடி ரூபாய் செலவில் அமைக்க முதலிலே திட்டம் தயாரிக்கப்பட்டது. அன்றைக்கு 96 சதவீத கரிச்சத்தோடு கூடிய கிராஃபைட்டுக்கு வெளிநாட்டில் நல்ல கிராக்கி இருக்கும் என்ற ஒரு கருத்து அறிவிக்கப்பட்டு 27 கோடி ரூபாய் திட்டச் செலவில் நூறு சதவீத ஏற்றுமதி நோக்கோடு தொழிற்சாலை அமைக்க திட்டமிடப்பட்டது. முதலிலே 3.4 கோடி ரூபாய் என்று ஆரம்பித்து, இது அதிக சத்தோடு கூடியது; நூறு சதவீதம் ஏற்றுமதிக்கு உரியதாக ஆக்கலாம் என்று 27 கோடி

ரூபாயில் அது திட்டமிடப் பட்டது. இந்தத் திட்டத்துக்கு அனுமதி கோரி தமிழக அரசின் திட்ட ஆய்வுக் குழுக் கூட்டத்திலே ஆகஸ்ட் - செப்டம்பர் மாதங்களில் 1988-லே விவாதிக்கப்பட்டது. அந்தக் கூட்டத்திலே தலைமைச் செயலாளர், உலகில் வேறு தொழில் நுட்பம் உள்ளதா, ஹம் போல் ஹெவி ஆலை நிறுவனத்திடம், இயந்திரங்கள் மதிப்பீடு முதலிய விவரங்களை எல்லாம் கோரலாம் என்று கூறினார். அப்போதைய நிறுவனத் தலைவரான இந்த அதிகாரி அந்த ஆதாரங்கள், தகவல்கள் தன்னிடத்திலே இல்லை என்று கூறிவிட்டார். பிறகு அவர் மாற்றப்பட்டார். கவர்னர் ஆட்சியில் மாற்றப்பட்டார் என்பது நான் முன்பே கூறியுள்ள செய்தியாகும்.

அதற்குப் பிறகே அங்கே நம்முடைய நண்பர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல அந்தப் பாறைகள் மாத்திரம் வெட்டப்படுகின்ற வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் ஆய்வு அறிக்கை இன்னும் வந்துசேர வில்லை. அந்த ஆய்வு அறிக்கைக்காக இந்தியன் பியூரோ ஆஃப் பைன்ஸ் பாண்டியன் கிராஃபைட்ஸ் மற்றும் தேசிய உலோகத் தொழில்கூடம் இவைகளிடமிருந்து அந்த அறிக்கைகளைப் பெற சில காலம் ஆகும். இப்பொழுது அந்த அறிக்கையை விரிவான திட்ட அறிக்கையை ஜூன் மாதம் 15-ஆம் தேதிக்குள் சமர்ப்பிப்பதாக 9.4.90 அன்று பெறப்பட்ட கடிதத்திலே உறுதி அளித்து இருக்கிறார்கள். 14 ஆயிரம் டன் கிராஃபைட் கனிமம் அங்கே வெட்டி எடுக்கப்பட்டு இருக்கிறது. அதனுடைய மதிப்பு ஏறத்தாழ 55 லட்ச ரூபாயாகும் என்று சொல்லப்படுகிறது. இதற்கு மேலும் அங்கே கிராஃபைட் எடுத்து வெளியிலே வீணாக அவைகளைப் போட்டால் அது கெட்டு விடக்கூடும் என்பதற்காக அந்த வெட்டுகின்ற பணி நிறுத்தி வைக்கப்பட்டு, அந்த ஆய்வு அறிக்கையை முழுமையாக ஆராய்ந்த பிறகு நடவடிக்கைகள் எடுக்கப்படும், கிராஃபைட் தொழில் அங்கே தொடங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடன்பிறப்பே, கிரானைட், கிராபைட் தொழில்களைப் பற்றி மட்டுமே இந்த விளக்கம். இன்னும் பல தொழில் திட்டங்கள், தொழில் வளர்ச்சிக்கான புதிய கொள்கைகள், சலுகைகள் அனைத்தும் கழக ஆட்சியில் எந்தவித போரும் தொழில் அதிபர்களிடம் நடத்தாமல் நேர்மையுடன் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன.

சமயம் வாய்க்கும்போது அந்த ஒவ்வொரு தொழில் குறித்தும்; தேவைப்படின் விளக்கங்கள் அளிப்பேன்.

வடசென்னை அனல் மின்சார நிலையம் அனுமதி பெற்றும் கூட ஆக்ரமிக்கப்பட்ட இடத்தை அந்த இடத்தின் உரிமையாளர் தரமறுத்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார். கழக ஆட்சிக்கு முன்பிருந்த அ.தி.மு.க. அரசோ, கவர்னர் அரசோ அதுகுறித்து எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாத நிலையில்; வடசென்னை அனல் மின் நிலையம் தமிழகத்தை விட்டு வேறு மாநிலம் போய்விடக் கூடாது என்ற அக்கறையுடன்; அந்த உரிமையாளரை அழைத்துப் பேசி உச்ச நீதிமன்ற வழக்கை வாபஸ் பெறச் செய்து, அந்த மிகப்பெரும் மின்நிலையப் பணிகளை தொடங்கிட முயற்சி மேற்கொண்டு அதில் வெற்றி கண்டதே கழக அரசுதான் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது!

எனவே கழக அரசு வகுத்த திட்டங்களை; கழக அரசு, ஒழுங்குபடுத்தி தொடர்ந்த திட்டங்களை, புதிய திட்டங்கள் போல அறிவித்து முதல்வர் ஜெயலலிதா அவர்கள் எல்லாமே என் சாதனைதான் என்று விளம்பரப்படுத்திக் கொள்கிறார் என்பதை தொழில்துறையில் ஈடுபாடு கொண்டோர் மனத்தில் நினைக்காமல் இல்லை!

பாவம்; வெளியில் சொல்லத்தான் தயக்கம்!

அன்புடன்,

மு. க.

(08-04-1992)

1901. முத்துப் பல்லக்குதான் ஜோடிப்பார்களா?

உடன்பிறப்பே,

தமிழ்நாடு எங்கே போய்க்கொண்டிருக்கிறது? இட்லரின் ஜெர்மானிய நாடாகவோ; ஜாரின் ரஷ்யாவாகவோ; லூயி மன்னனின் பிரஞ்சு மண்ணாகவோ ஆகிக் கொண்டிருக்கிறதா? இந்த சந்தேகம் பெருமூச்சாக மாறி எரிமலையாகக் குமுறிக் கொண்டிருக்கிறது!

எங்கு திரும்பினாலும் ஊழல், லஞ்சம், கோடி கோடியாகப் பேரம் - எதிர்க்கட்சிகளைத் தீர்த்துக் கட்டிவிட்டுத்தான் மறுவேலை! தோழமைக் கட்சியாக இருந்தால்கூட கொஞ்சிக் கொண்டே நஞ்சைக் கொடுத்து தொலைத்துக் கட்டுவது தான் குறிக்கோள்! இப்படி ஜனநாயக விரோதக் கொள்கைகளைத் தனது சட்டதிட்ட புத்தகத்தில் எழுதாத விதிகளாக இணைத்துக் கொண்டுள்ள ஒரு கட்சியின் ஆட்சியில் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் அடியாட்கள், குண்டர்கள் உறுமல்! அடாவடிச் சேட்டைகள்! அத்தனையும் மௌனமாக வேடிக்கை பார்க்க, அல்லது உசுப்பிவிட, அல்லது உதவி செய்திட ஒரு காவல்துறை என்றால்; இதை நாடு என்பதா? அல்லது சுடுகாடு என்பதா?

கோடி கோடியாகக் கொள்ளையடித்துக் குவிப்போம் - கோட்டங்களை வாங்குவோம்; கோட்டை கட்டி ஆளும் அரசுக்குச் சொந்தமான நிலங்களைக்கூட அமைச்சர்களுக்கென வகுத்த நெறிமுறை ஆணைகளை மீறி அபகரித்துக் கொள்வோம்; பெட்டிகளை நிரப்புவதற்கென்றே புதிய புதிய கொள்கை மாற்றங்கள் செய்வோம் - ஒவ்வொரு இலாக்காவிலும் எட்டு மாதத்திற்குள் ஒன்பது அதிகாரிகளை மாற்றுவோம்; அவர்கள் எம் இட்டப்படி கேட்காவிட்டால் அதுதான் தண்டனை; நேர்மைக்கு நியாயத்திற்குக் கட்டுப்பட்டு எவராவது ஒரு அதிகாரி கண்டிப்புடன் நடவடிக்கை எடுத்துக் கள்ளச் சாராய வியாபாரிகளையோ; கொலைகாரர்களையோ கூண்டுக்குள்

போட்டால்; அந்த அதிகாரியைத் தூண்டிற் புழுவாகத் துடிக்கவிடுவோம்; கூட்டுறவுத் தேர்தலில் ஆளுங்கட்சி அல்லாதார் யாராயினும் அவர்கள் தரும் வேட்புமனுக்கள் முற்றிலும் சரியாக இருந்தாலும் அதனைத் தள்ளுபடி செய்ய வேண்டும் - இல்லையேல் அந்த அதிகாரிக்கு தண்டனை தலைமேலே உண்டு என ஆணை பிறப்பித்துவிடுவோம்; மீண்டும் எம்மைத் தவிர எவரும் ஆட்சிக்கு வந்திடார் என்ற போலி நம்பிக்கையில் தாண்டிக் குதிப்போம் - அம்மன் கோயில் என்ன; சாமி கோயில் என்ன; அந்தோணியார் ஆலயம் என்ன; பள்ளி வாசல் என்ன; எல்லா இடங்களிலும் யானே தெய்வம்! யானே சக்தி! யானே சிவம்! யானே இறை! என அழைத்திடுக என ஆணையும் பிறப்பிப்போம் - அதற்கு எடுத்துக்காட்டே மகாமகக் குளத்தையே மானுட ஜாதி நெருக்கிக்கொண்டு செத்த மகாபாரதப் போர்க்களமாக்கியது என்பதையும் அறிவீர்; அறிந்துமா எதிர்க்கின்றீர்? அனைத்து ஏடுகளும் குமரி முதல் இமயம் வரையில் உள்ள எல்லா மொழி ஏடுகளும் எதிர்க்கட்சிகளும் குடந்தைக் கொடுமைக்கு நீதி விசாரணை கேட்டதை இலட்சியம் செய்தோமா? அலட்சியப்படுத்தி அந்தக் கோரிக்கையைக் குப்பைத் தொட்டியில் அல்லவா போட்டோம் - உம் என்றால் சிறைவாசம்தான்! ஏன் என்றால் வனவாசம்தான்! பொட்டுப் பூச்சிகளாய் புன்மைத் தேரைகளாய் அழுது, இளித்து, அஞ்சி, குனிந்து, பிதற்றிக் கொண்டிருக்கிற மனித ஜீவன்கள் எத்தனை எத்தனை என் பின்னால் பக்தி ரசக் கீர்த்தனைகள் பாடிப் பாதம் தொழுது கிடக்கின்றன என்பதைப் பார்த்த பிறகுமா; என்னை நிமிர்ந்து பார்த்து நேருக்கு நேர் மாற்றுக் கருத்து கூறுவது? என்னை எதிர்த்தா பேசுவது? என்னை விமர்சித்தா எழுதுவது? நடக்குமா? நடக்க விடுவேனா? அவதூறுகளைத் தட்டிக் கேட்க ஆயிரம் சட்டங்கள் இருக்கலாம் - அவைகள் எதற்காக; என்னிடம் ஊருக்கு ஊர் அடியாட்கள் ஆட்சிமன்றப் பொறுப்புகளில் அமர்ந்திருக்கும்போது? அவர்களுக்கு அதிகாரபூர்வமாகக் காவல்துறையும் கை கட்டிச் சேவகம் நடத்தும்போது? எவனடா என்னைப்பற்றியோ, என் ஊழலைப்பற்றியோ, அரசு நெறிமுறை ஆணைகளை மீறினேன் என்பது பற்றியோ மூச்சுவிடுவது? குறிப்புத்தான் காட்டுவேன்; மக்கள் பார்த்துக் கொள்வார்கள் என மன்றத்தில் ஒரு வாசகத்தின் மூலம்! அதில் மறைந்து கிடக்கும் சூட்சுமத்தைப் புரிந்து கொள்ளும் மகாமேதாவிகள் என் ஆட்கள் -

வீரர்கள்! சூரர்கள்! தீரர்கள்! இருக்கமாட்டார்களா என்ன? சுற்றிலும் போலீசார் காவலுக்கு இருக்கும் போது சுக்கு நூறாக்குவர் - சுக்கு மாந்தடி சுழற்றுவர் - சுக்கைப் போல் நசுக்குவர் எதிர்ப்புகளை!

இப்படி முழக்கிக் கொண்டு ஓர் அரசு; தமிழகத்தையே சர்வாதிகார சாம்ராஜ்யமாக்கிக் கொண்டு, ஊழலென்னும் சப்ரகூட மஞ்சத்தில் சயனித்திருக்கிறதென்றால் - நடுநிலையுடன் சிந்திக்கின்ற யாராக இருப்பினும் அவர்கள் இந்த ஜனநாயக விரோதப்போக்கினை அனுமதிக்க முடியுமா? அங்கீகரிக்கத்தான் இதயம் இடம் தருமா?

நக்கீரன் ஏடு; நாடு முழுதும் நாறுகின்ற ஊழல்களைப் பற்றி எழுதினால் - அது எழுதியது பொய் என்றால், தவறு என்றால் - மறுப்பு வழங்கலாம்! விளக்கம் சொல்லலாம்! ஏன்; சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளலாம் - வழக்கு தொடரலாம்!

அந்த ஏடு என்ன; மதச் சண்டையை மூட்டி விட்டதா? சாதிக் கலவரத்தைத் தூண்டிவிட்டதா? முதல்வரைப் பற்றி, ஆட்சியைப் பற்றிய குற்றம் குறைகளை சுட்டிக்காட்டினால், இல்லையென மறுத்து தண்டனை வாங்கித் தருவதற்கு நீதிமன்றங்களும் - சட்டங்களும் இருக்கும் போது, ஊருக்கு ஊர் அந்த ஏடுகளுக்குத் தீயிட ஆளுங்கட்சி அடியாட்களையும், காவல்துறையினரையும் பயன்படுத்துவதா? பத்திரிகை ஏஜெண்டுகளை மிரட்டுவதா?

பழனியில் ஒரு போலீஸ்காரர்; ஓய்வு நேரத்தில் ஒரு உரையாடலின்போது முதல்வரைப் பற்றி விமர்சித்து விட்டாராம் - அவரை வேலையிலிருந்து தற்காலிக நீக்கம் செய்துவிட்டனர்! அத்துடன் விட்டனரா? ஆட்டோவில் அடியாட்கள் ஏறிவந்து அவர் தேநீர்க் கடையில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தபோது அவரையும் அவருடன் இருந்த நண்பரையும் தாக்கிப் புடைத்திருக்கிறார்கள்! ஓடஓட விரட்டியிருக்கிறார்கள் ஆயுதங்களுடன்!

இந்த நிலையைக் காவல்துறையின் மூத்த அதிகாரிகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால்; ஒருவேளை அவர்களும் துணைபோய்க் கொண்டிருந்தால் - எல்லோரும் எல்லா பத்திரிகைகளையும் கொளுத்தலாம் என்ற துணிவு எல்லாருக்குமே வந்துவிடும்! சட்டம் ஒழுங்கு அமைதியில் காவல்துறைக்குக் கவலையில்லையெனில் நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள நாமும் களத்தில் இறங்குவது தவறில்லை என்ற எண்ணமும்

துணிவும்; பாதிக்கப்படுகிறவர்களுக்கும், அவர்களுக்காகப் பரிந்து பேசுகிறவர்களுக்கும் ஏற்பட்டு விடும்!

இப்படியொரு வேண்டடத்தகாத விபரீத நிலைமை உருவாகி; தமிழகம் அமளிக்காடாக மாறுதவதற்கு முன்பு - காவல்த்துறையினர் தமது கடமையைச் செய்திட முன்வர வேண்டும்!

முன் வருவார்களா? அல்லது ஆளுங்கட்சி முரடர்கள், குண்டர்கள், அடியாட்கள் பவனிவர முத்துப் பல்லக்கு ஜோடித்துக் கொண்டிருப்பார்களா?

உடன்பிறப்பே, கடிதத்தின் இறுதிப் பகுதியாக அறிஞர் அண்ணா தீட்டிய ''சொர்க்கவாசல்'' திரைப்படத்தில் வரும் உரையாடலை நினைத்துப் பார்க்கிறேன்.

நாட்டைத் தமது களி நடன மடமாக்கிக் கொண்டு அடுத்துக் கெடுப்போர் யார்? அறநெறி அறிந்தோர் யார்? என்ற விளக்கமும் அறியாது, மக்களின் மனம் ஒரு எரிமலை; அதை ராஜபக்தி எனும் சல்லாத்துணி கொண்டு மறைத்து விட முடியாது என்ற சாதாரண உண்மையையும் மறந்து, வயல்கள் வெடித்துக் கிடந்தாலும், ஆறுகள் வறண்டு போயினும், மாடு கன்றுகள் செத்து மக்கள் எலும்பும் தோலுமாகிப் போயினும் தமக்கு மகிழ்ச்சி தர கொலுமண்டபத்திலே கோணங்கிகளும், கொடி பிடிப்போரும் இருக்கவேண்டும், வீரமில்லாவிட்டாலும் விருதுகள் வேண்டுமென்று இறுமான்று கிடக்கும் அரசே! மக்களின் கோபத்தைக் கிளறாதே; என எச்சரிக்கிறேன்.

அண்ணாவின் அந்த உரையாடல் எவ்வளவு பொருந்துகிறது இக்காலத்துக்கும் என்பதை கவனித்தாயா?

அன்புடன்,

மு. க.

(09-04-1992)

1902. நான் தயார்! நாடு தயாராகட்டும்!

உடன்பிறப்பே,

மீண்டும் உன்னை அண்ணா எழுதிய சொர்க்க வாசல் எனும் புரட்சிக் காவியம் படித்திடவே அழைத்திடுகிறேன்.

புரட்சி என்று எழுச்சிமிக்கப் புனிதமான சொல்; இன்றைக்குச் சகதியில் சிந்திய பாலாக மாறிவிட்டாலுங்கூட; புரட்சிக்கவிஞர் எனப் பாரதிதாசனைச் சொல்லும்போது அந்தச் சொல்லுக்கு இயல்பாகவே ஒரு கம்பீரம் வந்து விடுகிறதல்லவா?

அப்படியொரு புரட்சி கவிஞனைத்தான் அண்ணா அவர்கள் தனது சொர்க்க வாசல் காவியத்தில் படைத்திருக்கிறார். அவன் பெயர் மதிவாணன்! அவன் அரசை எதிர்த்து முழங்கினான், அரச குருவைக் கண்டித்தான் என்பதற்காகக் கொலு மண்டபத்திலே கூண்டிலே நிறுத்தப்படுகிறான்.

> "இந்த விநாடி முதல் நீ நாடு கடத்தப்படுகிறாய் உன் பாடல்கள் தடை செய்யப்படுகின்றன!"

தர்பாரின் ஓங்காரக்குரல் கேட்டு; மதிவாணன் அந்த அவையைச் சுற்றிப் பார்த்துக் கேட்கிறான்-

> "உண்மைக்காகப் பரிந்து பேச ஒருவரும் இல்லையா?"

அவனது இந்தக் கேள்வி கொலுமண்டபச் சுவர்களில் எதிரொலிக்கிறது! மண்டபம் மௌனக் கோலத்தில் இருக்கிறது!

> "நாசகாலனே! நாட்டை விட்டு ஓடுகிற நீ போய் அழைத்துவா உன் வீரர்களை எங்கிருந்தாவது! புது ஞான போதகனே! போ! போய்க் கூட்டி வா உன் படைகளை! யார் முன் பேசுகிறோம் என்பதை மறந்தாய் மதியிலி! சாலையோரத்தில் கிடக்கும் வேலையற்றதுகளிடம் பேசிப் பழக்கமோ?"

அரியாசனத்திலிருந்து இப்படி அனல் கக்கும் சொற்கள் கிளம்புகின்றன!

"சாலையோரத்தில் வேலையற்றதுகள் இருப்பதுதான் அரசே; ஆபத்து! படையும் அழிக்க முடியாத புயல் அரசே! அவர்களிடம் நான் பேசுகிறேன் என்றீரே; உண்மை. என் பேச்சும் அவர்களுக்குப் புரிந்து விட்டது. சாலையோரத்தில் வேலையற்றதுகள் - வேலையற்றதுகளின் உள்ளத்திலே விபரீத எண்ணங்கள்! அரசே! இதுதான் காலக்குறி"

மதிவாணனின் மறுப்புரையால் மிரண்டுபோன நிலையில் வெகுண்டெழுகிறது அரசின் ஆணை!

"உம் இழுத்துச் செல்லுங்கள் நாயை! நாட்டைவிட்டே துரத்துங்கள்!"

இளங்கவி மதிவாணனுக்கு விதிக்கப்பட்ட தண்டனையைக் கேள்வியுற்று; வெளியில் மூத்த கவிராயர் ஒருவர் முழங்குகிறார் - அந்த முழக்கத்தினூடே முரசொலியும் கேட்பதாக; அண்ணா அந்த ஓவியத்தில் தீட்டுகிறார்.

"வெற்றி! வெற்றி! தமிழுக்கு வெற்றி - மதிவாணன் மகத்தான பரிசு பெற்றுவிட்டான். இனி அறிவுப் புரட்சி ஆரம்பமாகி விடும்."

இப்படி பெரிய கவிராயர் மகிழ்ச்சி பொங்கத் துள்ளிக் குதித்து மதிவாணனைக் கட்டித் தழுவிக் கொண்டு, வெற்றி! வெற்றி! எனக் கூவிடும்போது அரசுக் காவலர்கள் அவரைத் தாக்கிக் கீழே வீழ்த்துகிறார்கள் - மதிவாணனைத் தரதரவென்று இழுத்துச் செல்கிறார்கள்.

'வெற்றி கொண்டாய்! வெற்றி கொண்டாய்!' என முழங்கிக்கொண்டே கீழே சாய்ந்த அந்த மூத்த கவிராயரின் கடைசிச் சொற்கள் -

நிமிர்ந்து நில்!

ஏறுநடை போடு!

வெற்றி நமதே!

வெற்றி! வெற்றி!

ஆம்; அப்படியே நாட்டு மக்கள் நிமிர்ந்து நின்றனர். ஏறுநடை போட்டனர். தடை செய்யப்பட்ட அவன் பாடல்களைத் தடையை மீறித் தெருவுக்குத் தெரு, வீதிக்கு வீதி மக்கள் எங்கு திரண்டனரோ அங்கெல்லாம் பாடினர். திரண்டு குழுமிய அந்த மக்களும் பாடினர். தடை விதித்து விட்டோமென தர்பாருக்குள் முடங்கிக் கிடந்தோர் ஒருவரைப் பார்த்து ஒருவர் மகிழ்ந்து கொண்டனர். ஆனால் அந்த தர்பாரைத் தகர்க்கும் விதத்தில்; தடை செய்யப்பட்ட அந்தப் பாடல் நாடு முழுதும் பாடப்பட்டது.

இதோ; எந்தப் பாடலைப் பாட வேண்டாமென்று பாராளும் அரசு தடுத்ததோ - அந்தப் பாடலை, அந்தப் பாடலின் கருத்தை, ஆபாசத்துக்கு இடமின்றி, அறவழிப் போர்க்களம் அமைத்துக் கொண்டு, ஒரு காட்சியாக்கிக் காட்டுகிறார்! அரசு தடை செய்த பாடலை மலைவாசிகள் பாடுகிறார்கள். அரண்மனை வீரர்கள் அதிகாரக் குரலில் அவர்கள் விரட்டுகிறார்கள்.

இதென்ன கூட்டம்? தடை செய்யப்பட்ட பாடலைப் பாடக்கூடாது!

தடையா விதிக்கிறீர்கள் தடை! கேள் பாடலை!

ஏய்! தடையை மீறினால் தண்டனை கடுமையாகும்

தூக்குமேடையிலும் பாடிக் கொண்டே சாவதற்குச் சித்தமாயிருக்கிறோம்.

என்னடா சொன்னாய்?

அரைக்க அரைக்கத்தான் சந்தனம் மணக்கும். தடையை மீறுகிறோம்....

ஆ!

மீறுவோம் தடையை! பாடுவோம் கவிதையை! இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்!

இவ்வாறு தடைமீறும் நிகழ்ச்சி; நாடு முழுதும் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் நடக்கிறது. அரண்மனைக்குச் செய்தி எட்டுகிறது. காட்டுத் தீ போல!

தடையை மீறுகிறார்களா? தயவு தாட்சண்யம் கூடாது! தம்பி, அண்ணன், தாய், மக்கள், மனைவி, தகப்பன், எந்த உறவு முறை இருந்தாலும் தடையைமீறிப் பாடினால் பிடித்துத் தள்ள வேண்டும் சிறையிலே!

தள்ளிக் கொண்டு தானிருக்கிறோம் சிறையிலே! ஆனால் பாடுகிறவர்கள் ஓயவில்லையே!

அரண்மனையில் இந்த உரையாடல்! ஆனால் தடையை மீறியோர் அடைபட்டுக் கிடக்கும் சிறைகளிலேயும் அந்தப் பாட்டே ஒலிக்கிறது!

"வெளியே பாடினோம் சிறைக்குள் அடைத்தனர்!
சிறையில் பாடினால் வெளியே தள்ளுராங்களான்னு
பார்ப்போம்!"

இப்படி கேலிக்குரல்கள் - ஆம்; தடை மீறிப் பாடி தண்டனை பெற்றவர்களின் குரல்கள்; அதுவும் சிறைச்சாலைகளுக்குள்!

"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை - நமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை"

எனப் பாடிய புரட்சிக் கவிஞனைப் போன்ற பாத்திரப் படைப்பன்றோ அண்ணா படைத்த மதிவாணன் என்ற அந்தக் கவிஞன்!

எனவே; வேறு குற்றங்களுக்காகத் தண்டனை பெற்று சிறையிலே இருக்கும் கைதிகளும் கூட; தடை செய்யப்பட்ட பாடலைப் பாடி சிறையில் இருக்கும் கைதிகளுடன் சேர்ந்து அந்தப் பாடலையே பாடுகிறார்கள்!

உடன்பிறப்பே, அண்ணாவின் இந்தப் புரட்சிக் காவியம் என்ன நோக்குடன் அன்றைக்கு எழுதப்பட்டிருக்கிறது - எந்தக் கருத்தை மைய இழையாகக் கொண்டிருக்கிறது என்பதை கவனித்தாயா?

கருத்துக்குக் கருத்து - கொள்கைக்குக் கொள்கை - என வாதமிடுவதற்கு அஞ்சி நடுங்கி; நாங்கள் சொல்வதே அருமறை, திருமறை, செய்வதே சட்டம், எமை எதிர்த்து எவரும் உதடு அசைத்திட அனுமதியோம், வெறிக்கூத்தாடுவோம் அதனை யாரும் வெளியில் சொல்லக் கூடாது - வெட்கங்கெட்ட பேச்சுப் பேச எமக்கே உரிமை; அதனை வெட்டிப் பேசவோ தட்டிக் கேட்கவோ எவர் எழுந்திடினும் அடிப்போம், எலும்பை உடைப்போம் - என்ற இறுமாப்பு கொண்டலைவோரின் தடையுத்தரவுகளை அறவழியில் காத்திட முனைதல் வேண்டும் என்பதே அண்ணாவின் கொள்கை!

அதனால்தான் அவர் எழுதிய ஆரிய மாயை நூலுக்குப் பதில் கூறி; அந்த நூலை விவாத மண்டபத்தில் சந்திக்க

திராணியற்றிருந்த அரசு அதற்குத் தடை விதித்தபோது; அந்த நூலை ஊர்தோறும் கூட்டங்கள் போட்டு மேடைக்கு மேடை; தடையை மீறிக் கழகத்தினர் படிக்க வேண்டுமென்ற அறப்போர் ஒன்றினை அண்ணா அறிவித்தார். அவ்வாறு தடையை மீறி அந்த நூலைப் படித்தோர் கைது செய்யப்பட்டு சிறை புகுந்த நிகழ்ச்சி நமது கழகத்தின் வரலாற்றில் ஒரு பகுதி!

யாரோ சிலர்; மக்கள் ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டு - உச்சாணிக் கொப்பில் தொத்திக் கொண்டோர், தாங்கள் மறைக்க முயலும் மர்மங்களை வெளிக் கொணருகிறார்கள் எதிர் தரப்பினர் என்பதற்காக எரிச்சல் கொண்டும், ஆண்டவன் அவதாரமெனத் தங்களைக் கருதிக் கொண்டு தமக்கு மாறாக ஓர் அணுவும் அசையக் கூடாது என மமதை பூண்டும், அதிகாரக் கோலை அர்த்தமற்றுப் பயன்படுத்தினால்; அதனை அறவழியில் எதிர்த்து அதற்கான தண்டனையை அடைவது மகத்தான பரிசு என்று மதிவாணன் பாத்திரம் போலவே எண்ணியவர்தான் கண்ணியராம் நமது அண்ணா!

அதனால்தான் அடுத்து ஒருமுறை புரட்சிக் கவிஞரின் இரணியன் நாடகத்தை அரசு தடை விதித்து அடக்கியபோது; திருவத்திபுரத்தில் புலவர் கோவிந்தனாரைக் கொண்டு அந்த நாடகத்தைத் தடையை மீறி நடத்தச் சொன்னார் அண்ணா!

நாடக மேடையில் நடிகர்கள் கைது செய்யப்பட்ட போது; அடுத்த கிழமை திராவிட நாடு இதழில், திருவத்திபுரத்தில் இரணியன் கைது - பிரகலாதன் கைது - மகாவிஷ்ணு கைது என்று முதல் பக்கத்தில் கட்டுரை தீட்டியவர் அண்ணா!

கேலியும், கிண்டலும், கண்டனமும், ஏன்; ஆபாச உரைகளும்கூட எமக்குத்தான் உரிமை; அவற்றை யாரும் கையாளக் கூடாது என்றால் - ஆபாசத்தை வேண்டுமானால் அவர்களே மொத்தக் குத்தகைக்கு வைத்துக்கொள்ளட்டும்; நாம் தீண்ட வேண்டாம் அந்த தீதான மொழியை - ஆனால் நடைபெறும் ஊழல்களைப் பார்த்துக் கொண்டு கைகட்டி வாய் புதைத்து நிற்க முடியாது அல்லவா? பொய்யின் உருவங்களாக நின்றுகொண்டு மரபுகளை மீறிச் செயல்படுவோம் என்றோ; எமை எதிர்த்து எழுதினால், பேசினால், உண்மைகளை உரைத்தால், வெளியிட்டால் - அடக்குமுறையை அவிழ்த்து விட்டுக் கசக்கிப் பிழிவோமென்றோ - பயிரை மேயும் வேலிகளைப் போன்றுள்ள

சில காவல்துறை அதிகாரிகளைப் பக்கம் வைத்துக்கொண்டு நடத்தப்படும் எந்த தர்பாரையும் தட்டிக் கேட்காமல் தலை தொங்கப்போட்டுக் கிடப்பவன் கோழை - மோழை என்ற பட்டியலில் தள்ளப்பட்டு விடுவான்.

சொர்க்க வாசல் புரட்சிக் காவியத்தில் வருவது போல தடை என்ற சொல்லை இன்று இங்குள்ள அரசு பயன்படுத்தாவிட்டாலும்; இதன் ஆணைகள், செயல்கள் பல்வேறு உருவில் வந்தாலும் - அவற்றின் நோக்கம் தி.மு.க.வின் இயக்கத்திற்கு எதிரான தடைதான் என்பதை நாமும் அறிவோம். நாடும் அறியும்.

தடா கொடுமையால் கழகத்தைத் தணலில் பொசுக்கி விடலாமென்றுதானே சகோதரி சுப்புலட்சுமி ஜெகதீசனையும், அவர் கணவரையும், தம்பி கோபால்சாமியின் இளவல் நெல்லை வை. ரவிச்சந்திரனையும் மூன்று நான்கு மாதங்களுக்கு மேலாக சிறையில் போட்டு வாட்டுகிறார்கள்.

தடாவாயினும், வேறுபல தடைகளாயினும், தண்டனை களாயினும், அச்சுறுத்தல்களாயினும், அடாவடித்தனங்களாயினும் - அவற்றுக்குக் காரணமான கொடுங்கோன்மை அரசையும் கொடுமையான சட்டங்களையும் எப்படி எதிர்ப்பது என்பது குறித்து தேசப் பிதாவான மகாத்மா காந்தி நமக்கெல்லாம் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

ஆயிரக்கணக்கில் லட்சக்கணக்கில் மக்கள் முன்வந்து மற்றவர்கள் ஒரு குற்றமும் செய்யாமல் குற்றவாளிகள் எனத் தண்டிக்கப்பட்டிருக்கும் போது; நாங்களும் குற்றவாளிகள்தான், எங்களையும் கைது செய்யுங்கள் என்று சொல்லத் தொடங்கிவிட்டால் என்ன ஆகும்?

இப்படியொரு கேள்வியை தம்பி முரசொலி மாறன் மாநிலங்களவையில் சில நாட்களுக்கு முன்பு எழுப்பியதை; அண்ணல் காந்தி வழியில் - அண்ணா வழியில் செயல்படுத்தும் நேரம் கழகத்திற்கு வந்து விட்டதாகவே நான் கருதுகிறேன்.

தடை செய்யப்பட்ட நூலை ஊர்தோறும், வீதி தோறும் படியுங்கள் என ஆணையிட்டவர் அண்ணா!

தடை செய்யப்பட்ட நாடகத்தை நடத்தச் சொன்னவர் அண்ணா!

ஏற்றகாரணம் எதுவுமின்றி - பெருந்தன்மை என்பது துளியளவுமின்றி - எரிச்சல்; அடக்க முடியாத எரிச்சல் ஒன்று மட்டுமே தமது மூலதனமென உணர்த்தி - கோலோச்சுவோர் கொக்கரித்திடின்; அதனை சந்திப்பதற்கு சகலவிதமான தியாகங்களையும் செய்திடத் தமிழகம் தயாராக வேண்டியதுதான்! ஆணவத்தின் விஷப்பல் - அராஜகத்தின் நச்சுப் பல் - ஜனநாயகத்தைக் கடித்துக் குதறுவதை இன்னும் எத்தனை நாளைக்குத்தான் பொறுத்துக் கொள்ள முடியும்? காந்தீய வழியும், அண்ணாவின் வழியும் - ஆம்; நம்மை நாமே வருத்திக்கொள்ளும் அறப்போர் வழி, அகிம்சாவழி - அவ்வழி நின்று களச்சாவை யாசித்துப் பெற்றிட நான் தயார்! நாடு தயாராகட்டும்! இல்லையேல் நம் கண் எதிரிலேயே கள்ளிக் காடாகிவிடும் தமிழ் நிலம் - தமிழர் நலன்; எல்லாமே!

அன்புடன்,

மு. க.

(11-04-1992)

1903. தி.மு.க. வீட்டுக்கு விளக்கு - நாட்டுக்குத் தொண்டன்!

உடன்பிறப்பே,

கழக அமைப்புகளின் தேர்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதில் ஒரு கட்டமாக நகரக் கழக நிர்வாகிகள் தேர்தல்கள் நடந்து முடியும் நிலையில் உள்ளன. ஓரிரு நகரங்களில் தவிர, கசப்பு உணர்வும் காழ்ப்பு உணர்வுமின்றி பெரும்பாலான நகரக் கழக தேர்தல்கள் ஜனநாயகரீதியில் நாளையுடன் நிறைவுற இருக்கின்றன. அடுத்தது ஒன்றியக் கழகங்கள் - அதன் பிறகு மாவட்டக் கழகங்கள்!

நமது பொதுச்செயலாளர் விடுத்துள்ள மிக முக்கியமான அறிக்கையைப் பார்த்திருப்பாய். அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் பிரதிநிதிகளுக்கு நடைபெறும் தேர்தலில் - தாங்கள் ஒரு பொறுப்புக்கு நின்றால் மட்டுமே தலைமைக் கழகச் செயலாளர்களோ, மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட தலைமை நிர்வாகக் குழு உறுப்பினர்களோ, கழகச் சார்புடைய துணை அணிகளின் செயலாளர்களோ - அந்தப் பொறுப்புக்காக மாத்திரம் தங்களுக்காக தேர்தல் பணியில் ஈடுபடலாமே தவிர, எந்த அமைப்பின் தேர்தலிலும் எந்தவொரு அணியின் சார்பிலும் அவர்கள் ஈடுபடுவதும், தலையிடுவதும் கழகம் கட்டிக்காக்கும் உட்கட்சி ஜனநாயகத்திற்கு விரோதமாகிவிடும் எனக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

தேர்தல்களில் போட்டியைத் தவிர்த்து இரு அணியினரும் ஒத்த கருத்துடன் சமாதானமாகப் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளும் முயற்சியிலும், கழகக் கட்டுக்கோப்புக்கு ஊறு நேரா வண்ணம் பார்த்துக் கொள்வதிலும், கசப்பு உணர்வு கடுமையான நிலையை எட்டாமல் தடுத்து நிறுத்திக் கழகத்தின் கண்ணியம் காப்பதிலும் பேராசிரியர் அவர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தலைமைக் கழக செயலாளர்கள், மாவட்டக் கழக செயலாளர்கள்

உள்ளிட்ட தலைமை நிர்வாகக் குழு உறுப்பினர்கள், கழகச் சார்புடைய அணிகளின் செயலாளர்கள் அனைவருக்கும் பொறுப்பு உண்டு - ஆனால் போட்டிகள் தவிர்க்க முடியாத நிலையில்; அணிசாராக் கொள்கையை அவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்பதுதான் அந்த அறிக்கையின் நோக்கமாகும்.

பொதுத்தேர்தலில் இவ்வளவு பெரிய தோல்விக்குப் பிறகும் கழகம் உறுதியுடனும், வலிவுடனும், மக்கள் செல்வாக்குடனும் திகழ்கிறதே என்ற ஆத்திரம் ஆளுங்கட்சிக்கும், அதன் ஆதரவாளர்களுக்கும் - இங்குள்ள ஆளுங்கட்சிக்கு ஆலவட்டம் சுழற்றும் காங்கிரசுக்கும் இருப்பதால்தான் அவர்கள் நம்மைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்கள். எழுதிக் கொண்டிருக்கிறார்கள். நம்மை இழித்தும் பழித்தும் கூறினால் மட்டும் போதாது எனக் கணக்கிட்டு; நமக்குள்ளே நமது உடன்பிறப்புகளுக்குள்ளே கலகமூட்டலாமா என்றும், கத்தியைத் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள், ஒற்றுமை உணர்வை வெட்டிப் பிளக்க!

இப்போதே சில ஏடுகளைப் பார்த்தால்; இவருக்கும் அவருக்கும் பகை - அவர், இவரை வீழ்த்தப் பார்க்கிறார்; இவர் அவரை வீழ்த்தப் பார்க்கிறார் - என்றெல்லாம் கற்பனைக் கதைகளை எழுதிக் காட்டி, அதன் மூலம் பகை வளர்த்து புகை கிளப்பலாமா என்றும் திட்டம் தீட்டுவது புரிகிறது!

நமது கழகத்தைப் பொறுத்த வரையில் தலைமைக் குழு, நிர்வாகக் குழு, செயற்குழு, பொதுக்குழு என பலகுழுக்களில் அவரவர் கருத்துக்களை மனம்விட்டுப் பேசுவதற்கும்; இறுதியாக எடுக்கப்பட்ட முடிவுக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்கும் ஏற்ற ஜனநாயக முறை; அண்ணா காலத்திலிருந்து தொடர்ந்து கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. இந்தக் குழுக்கள் எல்லாம் இல்லாமல் தனிக் குழுக்களில் எவரும், எதுவும் நமது உடன்பிறப்புக்களைப் பொறுத்த வரையில் பேச வேண்டிய அவசியமில்லை என்கிற போது; அப்படிப் பேசுவது கழகத்திற்குத் தீங்கு பயப்பது என்பதை உணர்ந்து நமது உடன்பிறப்புகள் செயல்பட்டு வரும்போது - கடுகை மலையாக்கிக் கழகத்தை வலிவிழக்கச் செய்யலாமா என்பதற்கான சூது வலை; மாநில அரசின் மட்டத்திலே பின்னப் பட்டாலும் அந்தத் திட்டத்தைத் தகர்தெறிந்து தகத்தகாயக் கதிராகக் கழகம் ஒளிவிடும் என்பதை வரலாறு விளக்கிக்

கொண்டுதானிருக்கிறது! ஆட்சியை வைத்து மட்டுமே வலிவைக் கணக்கிடும் இயக்கமல்ல இது; ஆற்றல்மிகு செயல்வீரர்களாம் எனது அருமை உடன்பிறப்புகளின் உறுதி குலையா வைர நெஞ்சங்களை வைத்துக் கணக்கிடும் இயக்கம் இது!

ஆனாலும் உடன்பிறப்பே, நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டும்! தி.மு. கழகத்தின் வலிவு குறைந்தால்தான் திராவிட இயக்க உணர்வுகளின் வலிவே குறையும் எனக் கணக்கிட்டு; கடந்த காலத்திலேயே மத்திய உளவுத்துறை அதிகாரிகளைக் கொண்டே 1972-க்கு முன்பே ஒருபெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதும்; அந்த முயற்சியில் அந்த அதிகாரிகள் வெற்றி பெற்றதும் நாடறிந்த உண்மை! அப்போது சிலர் பலியானதைப் போல இப்போது பலியாவார்களா என அந்தத் துறையினர் வலை போட்டுப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

உடன்பிறப்பே, குங்குமம் இதழில் நான் நெஞ்சுக்கு நீதி மூன்றாம் பாகத்தை 24 அத்தியாயங்கள் வரையில் எழுதி; மீதியைப் பிறகு தொடர்ந்து பின்னர் எழுதுவதாகக் குறிப்பிட்டு, இப்போது தற்காலிகமாக அந்தத் தொடரை நிறுத்தி வைத்துள்ளேன்.

அதில் இரண்டு வாரங்களுக்கு முன்பு நான் எழுதிய 23 ஆம் அத்தியாயத்தின் பிற்பகுதியை நீ இதுவரை படிக்காமலிருந்தாலும் - ஒருவேளை படித்திருந்தாலும் பரவாயில்லை; இப்போதும் ஒருமுறை படித்துப்பார்! உனக்கு வசதியாக அந்தப் பகுதியை இந்தக் கடிதத்திலேயே இணைத்துள்ளேன். அது வருமாறு :-

உண்மையை மறைக்க முனைவது விதையை பூமிக்குள் மறைப்பது போலத்தான் என நான் எழுதிய ஒரு வாசகம் எவ்வளவு சரியானது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டையும் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

1972-ல் எம்.ஜி.ஆர். அவர்கள் கழகத்திலிருந்து தன்னை விலக்குகிற அளவுக்குக் கட்டுப்பாடற்ற முறையில் நடந்து கொண்டது ஏன் என்பது பற்றி நானும், பேராசிரியர் அவர்களும், நாவலர் அவர்களும் எத்தனையோ ஆதாரங்களுடன் அப்போதே எடுத்துச் சொல்லியும் விஷயமுணர்ந்த தெளிவுடைய வட்டாரத்தினர் மட்டுமே அதனை நம்பினார்கள்.

எந்தவொரு மாநிலக் கட்சி செல்வாக்கு பெற்று மக்களிடையே வேரூன்றினாலும் அந்தக் கட்சியின் செல்வாக்கைக்

குறைப்பதற்கு அந்தக் கட்சிக்குள்ளேயிருந்து ஒரு பிரமுகரை வலை வீசிப் பிடித்து அந்தக்கட்சியைப் பிளந்து அந்த மாநிலத்தில் காங்கிரசைப் பலப்படுத்திக்கொள்ள நடைபெற்ற முயற்சிகளுக்குக் கணக்கேயில்லை.

காஷ்மீரத்தில் மாநில சுயாட்சிக் கொள்கையை முதன்மையாக வைத்து வளர்ந்த ஷேக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சியை, அவரது மறைவுக்குப்பிறகு அவரது மகன் பரூக் அப்துல்லா உறுதியுடன் வளர்த்து மாநில சுயாட்சிக் கொள்கைக்கு இந்தியா முழுதும் ஆக்கம் தேடியது பிடிக்காமல்தான் அவரது கட்சியை அவரது உறவினரான ஷா என்பவரைக் கொண்டே உடைத்து; ஆட்சியை மாற்றி - கடைசியாக பரூக் அப்துல்லாவையே காங்கிரசின் கைக்குள் போட்டுக்கொண்டு காஷ்மீரில் பெரும் பிரச்சினை இன்றளவும் அடங்காத அளவுக்கு உருவெடுத்திருக்கிறது.

பஞ்சாபில் மாநில சுயாட்சிக் கொள்கையுடன் அகாலிதளம் என்ற மாநிலக் கட்சி மிக்க வலுவுடன் வளர்ந்தது கண்டு; அதனைப் பிளக்க பிந்தரன்வாலேயை உருவாக்கியதும் அவரைத் தனது ஆதரவாளராக ஆக்கிக்கொண்டு அகாலிதளத்தை அழிக்க முனைந்ததும் வரலாற்று உண்மையாகும். இதுபோன்ற காரியத்தில் ஈடுபட்டு பிந்தரன்வாலேயை வளர்த்த காங்கிரஸ் இயக்கம், பின்னர் அவரையே எதிர்த்து அமிர்தசரஸ் ஆலயத்துக்குள் இராணுவத்தை அனுப்ப வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானது. அந்த அதிரடிப் போரில் அமிர்தசரஸ் ஆலயத்துக்குள்ளே பிந்தரன்வாலேயும் ஆயிரக்கணக்கான சீக்கியர்களும் பிணமாக்கப்பட்டனர். அகாலிதளமும் சிதறுண்டு போயிற்று.

நான் இதை எழுதிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் இந்த வாரம் ஜூனியர் விகடன் (25.3.1992) என்ற தமிழ் வார ஏட்டில் வெளி வந்துள்ள தொடர்கட்டுரையின் ஒரு பகுதியை எழுத்துப் பிசகாமல் அப்படியே தந்திட விரும்புகிறேன். ஜூனியர் விகடன் எஸ்.எஸ். வாசன் என்ற பிரபல காங்கிரஸ்காரரும் - ஜெமினி ஸ்டுடியோ அதிபரும் - ஆனந்த விகடன் நிறுவனத்தருமான - செல்வாக்குடன் வாழ்ந்து மறைந்த ஒருவரின் புதல்வர் பாலசுப்பிரமணியம் அவர்களால் நடத்தப்படுகிற ஏடு! அந்த ஏட்டில் போலீஸ் மனிதர்கள் என்ற தலைப்பில் ஒரு தொடர் வெளி வந்து கொண்டிருக்கிறது. நான் இங்கே குறிப்பிடுவது 13-வது

தொடராகும். போலீஸ் உளவுத்துறை அதிகாரி ஒருவர்; அவர் பணியாற்றியபோது நாட்டில் நடந்த சில நடப்புகளைக் கூறுகிறார். அதைத்தான் நீங்கள் இப்போது படிக்கப் போகிறீர்கள். அவர் கூற்று பின் வருமாறு -

> எம்.ஜி.ஆரைத் தி.மு.க.விலிருந்து வெளியே கொண்டு வர ஒரு பெரிய நாடகம் நடத்தினோம். அந்த நாடகத்தை எப்படி நடத்தினோம் தெரியுமா? என்று ஆரம்பித்த சி.ஐ.டி. அதிகாரி தொடர்ந்து சொல்லத் தொடங்கினார்.

எதிர்க்கட்சிகளை உடைப்பதற்குத் தேவையான தகவல்களைத் திரட்டித் தரும் பொறுப்பும் சில சமயம் உளவுத்துறையின் தலையில் விழும். அதைச் செய்யவேண்டுமானால் அந்தக் கட்சியிலுள்ள தலைவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை, அவர்களுக்கு என்னென்ன பலவீனங்கள் உண்டு, அவர்களுக்குப் பொதுமக்கள் மத்தியில் உள்ள செல்வாக்கு போன்ற புள்ளிவிவரங்கள் இன்டெலிஜென்ஸ் அதிகாரிகளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இல்லையென்றால் ஆழம் தெரியாமல் காலைவிட்ட கதையாகிவிடும்!

1971.... அப்போது தி.மு.க. பதினைந்து எம்.பி.க்களை வைத்திருந்தது. அரசியலில் கருணாநிதி ஒரு சூப்பர்மேனாக இருந்த நேரம்... மாநில சுயாட்சிக் கொள்கையை உரமூட்டி வளர்த்துக் கொண்டிருந்தார். தன்னுடைய மாநிலத்தில்தான் சிறப்பான ஆட்சி என்றும் முழங்கினார். இந்தக் குரல்கள் எல்லாம் அப்போதைய பிரதமர் இந்திராகாந்தியின் காதிலும் விழுந்து கொண்டிருந்தன. தமிழ்நாட்டைச் சுற்றியுள்ள மாநிலங்களில் காங்கிரஸ்தான் ஆண்டு கொண்டிருந்தது. தமிழ்நாடு மட்டும் ஒரு தீவாக தி.மு.க.வின் கையில் இருந்தது.

தி.மு.கழக எம்.பி.க்களின் ஆதரவு இந்திராகாந்தியின் அரசுக்குத் தேவைப்பட்டது. அதே சமயத்தில் கருணாநிதி தன் கைக்குள் இருக்க வேண்டும் என்றும் நினைத்தார் இந்திராகாந்தி.

இதற்கு என்ன செய்யலாம் என்று யோசனையில் இருந்தார். தி.மு.க. வை உடைத்து விட்டால், அந்தக்

கட்சி காங்கிரஸ் உதவியைத் தமிழ் நாட்டில் நாடும் என்று முடிவெடுத்தார். அதற்கான வேலைகளைச் செய்ய இன்டெலிஜென்ஸ் உயர் அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார். உதவிக்கு காங்கிரஸ் பிரமுகர் ஒருவரும் அனுப்பப்பட்டிருந்தார். அந்த காங்கிரஸ் பிரமுகர் இன்டெலிஜென்ஸ் அதிகாரிகளோடு உட்கார்ந்து திட்டம் போட்டுக் கொடுத்தார்.

எனக்குக்கூட அப்போது வேறு ஒரு மாநிலத்தில்தான் பணியிருந்தது. ஆனால், தமிழக அரசியல் தெரியும் என்பதால் எனக்கு ஸ்பெஷல் டியூட்டி போட்டிருந்தார்கள்.

தி.மு.க.வில் முக்கியப் புள்ளிகள் யார் இருக்கிறார்கள் என்று பார்த்தபோது எம்.ஜி.ஆர்.தான் முன்னணியில் இருந்தார்.

அதனால்தான் அவரைத் தி.மு.க.விலிருந்து இழுக்க முயற்சி செய்தோம்.

அப்போது ஏராளமான படங்களில் நடித்துக் கொண்டிருந்தார் எம்.ஜி.ஆர்.! வருமானமும் அவருக்கு அதிகமாக இருந்த நேரம்...

இதைக் கருத்தில் கொண்டு வருமான வரி அதிகாரிகள், அடுத்து வருவாய்க் கண்காணிப்பு அமலாக்கப் பிரிவு (Ecorcement Directorate) என்று எல்லா அதிகாரிகளும் எம்.ஜி.ஆர். வீட்டை முற்றுகையிட்டு அவரைக் குடைந்தெடுத்தார்கள். அப்போது அவர் ஒரு சினிமாப் படப்பிடிப்பு சம்பந்தமாக வெளிநாடு சென்று வந்திருந்தார். அதற்கான கணக்கு வழக்குகளையும் விசாரித்தார்கள். ஆனால் இதற்கெல்லாம் பெரும் பின்னணி இருப்பது அவருக்குத் தெரியாது!

இந்தச் சமயத்தில் எம்.ஜி.ஆருடன் பேச என்னை அனுப்பினார்கள். நான் போன போது எம்.ஜி.ஆர். மிகவும் சோர்வாக இருந்தார். நானே வலிய பேசி பிரச்சினைகளைச் சமாளிக்க டெல்லிக்கு போய் அம்மாவை (இந்திராகாந்தி) பாருங்க... எல்லாம் சரியாகப் போய்விடும் என்று யோசனை சொன்னேன்

எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டார் எம்.ஜி.ஆர்.!

பிறகு நானே, முக்கியமான காங்கிரஸ் பிரமுகர் ஒருவரின் பெயரைச் சொல்லி, அவர் மூலமாக அம்மாவை மீட் பண்ணுங்க என்று கூறி, வழி காட்டிக் கொடுத்தேன்.

அதன்படியே, எம்.ஜி.ஆர். அந்த காங்கிரஸ் பிரமுகர் மற்றும் தன் வழக்கறிஞர், ஆடிட்டருடன் சென்று பிரதமர் இந்திராவைச் சந்தித்தார்.

சந்திப்பு நடந்து எம்.ஜி.ஆர். உற்சாகமாகத் திரும்பினார்.

இப்படித்தான் மெதுவாகத் தொடங்கி தி.மு.க.வில் உட்பூசல் உண்டாக்கிக் கடைசியில் 1972-ல் எம்.ஜி.ஆரைத் தி.மு.க.விலிருந்தே வெளியேற வைத்தோம்... என்று முடித்தார் அந்த அதிகாரி.

ஜூனியர் விகடன் வார இதழில் வந்துள்ள இந்த உண்மையை இருபது ஆண்டுகளுக்கு முன்பு, நானும் ஏனைய தி.மு.க. தலைவர்களும் பல ஆதாரங்களுடன் மக்கள் மன்றத்தில் எடுத்து வைத்தபோது இப்படியும் இருக்குமா? என்று (ஆராய்வதற்கு அவகாசமில்லாதவர்கள்) எங்களை மூர்க்கத்தனமாக எதிர்த்தனர். ஆனால் அந்த உண்மை இருபது ஆண்டுகள் கழித்து சாட்சியத்துடன் வெளிவந்துள்ளது.

மாநில சுயாட்சி கேட்டு வளர்ந்து வலுப்பெற்ற கழகத்தைப் பிளந்து கட்டுக்கோப்பை உடைத்த எம்.ஜி.ஆருக்குக் காலம் அப்போது முதலமைச்சர் பதவியைப் பரிசாக வழங்கியது.

அண்ணாவின் கட்டுப்பாடு மந்திரத்தை நெஞ்சில் நிறுத்திப் பணியாற்றிய நாங்கள்; எதையும் தாங்கும் இதயத்துடன் எதிர்க்கட்சியாக இருந்து மக்கள் பணியைத் தொடர்ந்தோம்.

இதுதான் நான் குங்குமம் வார இதழில் ஜூனியர் விகடன் பத்திரிகையில் வெளிவந்துள்ள ஆதாரத்துடன் எழுதியுள்ள 23-வது அத்தியாயத்தின் ஒரு பகுதியாகும்!

உளவுத் துறையினர் நம் கழகத்தில் ஊடுருவிய அத்தியாயம் - அதற்கு முன்பே அண்ணா காலத்தில் 1960ஆம் ஆண்டுவாக்கிலேயே ஆரம்பமானது! அது, ஓரளவு வெற்றியும் பெற்றது! ஏன்; 1976-ல் கூட அந்தத் துறை தனது அரசியல் பணியைச் செய்தது!

இப்படி 1960-ல் சலனங்கள் வெளியேறவும்; 1972-ல் சதி முயற்சி வென்றிடவும் 1976-77-ல் சபலங்கள் வெளியேறவுமான நிலை; கழகத்திற்கு ஏற்பட்டது.

இப்போதும் மத்திய உளவுத் துறையோ; அல்லது அதற்குத் துணை நிற்கும் சில துறைகளோ ஊடுருவிட முயற்சிப்பது என் காதுக்கு வந்து கொண்டிருக்கிறது!

அவற்றின் சூது, சூழ்ச்சிக்கு; என் உயிரினும் மேலான உடன்பிறப்பே - உன்போன்ற கழகக் கண்மணிகள் வயப்பட மாட்டார்கள்; ஏன்; பயப்படவும் மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்!

அதனால்தான் சொல்கிறேன்; கட்டுப்பாடு மிக்க நமது கழக அமைப்புகளை - ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பதின் மூலமும் - கசப்புகளை அறவே விலக்கி; ஜனநாயக நெறிமுறைகளைக் காத்திடுவதின் மூலமும் - மேலும் வலுப்படுத்திட வேண்டுமென்று!

தி.மு.க. வீட்டுக்கு விளக்கு;

நாட்டுக்குத் தொண்டன்!

இது அண்ணாவின் அரும்பெரும் வாசகம்! அந்த விளக்கு அணைந்திட விடமாட்டோம்! அணைத்திட முயல்வோர் விட்டில் பூச்சிகளாவர்!

இந்த உறுதியுடன்

ஒற்றுமை காப்போம்!

உழைப்போம்!

ஊக்கம் பெறுவோம்!

அன்புடன்,

மு. க.

(13-04-1992)

1904. கல்கத்தா முதல் திருப்பதி வரையில்!

உடன்பிறப்பே,

திருப்பதி காங்கிரஸ் மாநாடு பெரும்பான்மை வகுப்புவாதத்தின் சின்னமாக பாரதீய ஜனதா கட்சி திகழ்வதாகக் குற்றம் சாட்டியும்; எந்தவொரு வகுப்புவாதக் கட்சியுடனும் காங்கிரஸ் கட்சி, மறைமுகமாகவோ நேரடியாகவோ கூட்டு வைத்துக்கொண்டதில்லையென்றும்; இதுவே எதிர்காலத்தில் காங்கிரசின் அடிப்படைக் கோட்பாடாக இருக்குமென்றும் ஒரு தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது மட்டுமின்றி - பாரதீய ஜனதாவுடன் எதிர்க்கட்சிகள் கூட்டு வைத்துக் கொண்டன என்றும் சுட்டிக்காட்டியுள்ள செய்தி ஏடுகளில் வெளியிடப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியினுடைய அருங்குணமே; தனக்குத் தேவைப்பட்டால் அந்தக் கட்சி வகுப்பு வாதமற்ற கட்சி என்று வர்ணிப்பதும் - தேவைப்படாவிடின் அந்தக் கட்சியை வகுப்புவாதக் கட்சியென்று விமர்சிப்பதும்தான்!

கேரள மாநிலத்தில் முஸ்லிம் லீக், கம்யூனிஸ்டு கட்சிகள் தேர்தல் தொகுதி உடன்பாடு கொண்டு போட்டியிட்டு வென்ற போதும் - கூட்டணி அமைச்சரவை அமைத்தபோதும் காங்கிரசின் கண்களுக்கு முஸ்லிம் லீக் வகுப்புவாதக் கட்சியாகத் தெரிந்தது.

அதே முஸ்லிம் லீக் கட்சி, காங்கிரசுடன் தேர்தல் உறவு கொண்டபோது வகுப்புவாதப் பிரச்சாரம் வானில் தோன்றிய மேகம் காற்றுப்பட்டு கலைவது போல் கலைந்து விட்டது! அது காங்கிரசுக்கு - வகுப்புவாதமற்ற கட்சியாக; சிறுபான்மையோர் நலம் பேணும் கட்சியாக அப்போது காட்சியளித்தது! அதாவது தேவையைப் பொறுத்து!

எதிர்க்கட்சிகளுக்கு வகுப்புவாதச் சாயம் பூசப் பார்க்கிற திருப்பதி காங்கிரஸ் மாநாட்டினர்; இன்றைக்கு டெல்லி பாராளுமன்ற துணை சபாநாயகராக யாரை உட்கார

வைத்திருக்கிறார்கள் என்பதை ஏனோ மறந்து விட்டார்கள்! பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்தான் டெல்லி நாடாளுமன்ற துணை சபாநாயகர்!

பாரதீய ஜனதா தலைவர் முரளி மனோகர் ஜோஷி ஏக்தா யாத்திரை நடத்தி குமரிமுனையிலிருந்து புறப்பட்டு, காஷ்மீர் சென்று தேசியக் கொடியை ஏற்றுவேன் என்று கிளம்பியபோது; அவருக்கு மறைமுகமான ஆதரவு தந்தது மத்திய காங்கிரஸ் அரசு என்ற உண்மையை திருப்பதி வெங்கடேசப் பெருமாளுக்கு நேராக மறைக்க முடியுமா?

காஷ்மீரில் கவர்னர் தேசியக் கொடியை ஏற்றுகிறார் - அதே சமயம், பாரதீய ஜனதா தலைவர் அங்கே தேசியக் கொடியை ஏற்றுவதற்கு - மத்திய அரசு; பாதுகாப்பு போன்றவைகளுக்காக மொத்தமாக செலவழித்தது ஒரு கோடி ரூபாய்!

கோடிப் பணம் செலவழித்து ஒரு கொடியை பாரதீய ஜனதா தலைவர் ஏற்றுவதற்கு மத்திய அரசு துணை நின்றதற்குப் பெயர் என்ன?

மறைமுக ஆதரவா? அல்லது நேரடியாகவே ஆதரவா?

ஒருபுறம் பெரும்பான்மை மதவாதம் - மற்றொருபுறம் சிறுபான்மை மதவாதம் - இரண்டுமே பயங்கரவாதமாகவும் பிரிவினைவாதமாகவும் அமைந்துள்ளது. எனவேதான் 1952 கல்கத்தா காங்கிரஸ்; எந்தவொரு வகுப்புவாத தன்மை கொண்ட அமைப்புடன் கூட்டோ, ஒத்துழைப்போ, உடன்பாடோ கூடாது என முடிவெடுத்துள்ளது என்பதை மறந்து விடக்கூடாது என்று திருப்பதி தீர்மானம் கோடிட்டுக் காட்டுகிறது.

ஆனால் நான் கேட்கிறேன்; கல்கத்தா காங்கிரஸ் தீர்மானத்தை 1952 முதல் 1992 வரை நாற்பது ஆண்டு காலத்தில் - காங்கிரஸ் கட்சி எத்தனை முறை மறந்து செயல்பட்டிருக்கிறது என்பதை நாட்டு மக்கள் மறந்து விட முடியுமா?

மதச்சார்பற்ற கொள்கைக்கு விரோதமாக மூர்க்கத்தனமாக திட்டமிட்டு அமளி விளைத்திட அவ்வப்போது ஆண்டவன் பெயரால், மதத்தின் பெயரால் அரசியல் ஆதாயம் தேடிட முனையும் பாரதீய ஜனதா கட்சியுடன்; காங்கிரஸ் தொடர்பு கொள்ளாது; அவர்களுக்கு ஆக்கம் அளிக்காது; ஊக்கம் தராது என்பது வரவேற்கத்தக்க கருத்து எனினும்;

எதிர்க்கட்சிகளாக குறை கூறும் காங்கிரஸ் கட்சி - மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முன்வந்த தேசிய முன்னணி அரசுக்கு - பாரதீய ஜனதா கட்சி ஆதரவு தர மறுத்து - அயோத்திப் பிரச்சினையை கிளப்பி ரதயாத்திரை மேற்கொண்ட போதும் சரி; மண்டல் கமிஷனுக்காகவும், ரதயாத்திரையை தடுத்தமைக்காகவும் வி.பி.சிங் மீது நம்பிக்கையில்லை என்று வாக்களித்த போதும் சரி; அந்த பாரதீய ஜனதாவுடன் தான் கைகோத்து நின்று ஒரு முற்போக்கான ஆட்சியைக் கவிழ்த்தது என்பதை வரலாறு மறைத்து விட முடியுமா?

அன்புடன்,

மு. க.

(16-04-1992)

1905. இரவில் வந்தது சுதந்திரம்; இன்னும் விடியவே இல்லை!

உடன்பிறப்பே,

நேற்றுவரை நேருவையும் அவரது கொள்கைகளையும் விமர்சித்து வந்தவர்கள், நேருவின் வழியிலிருந்து இப்போது காங்கிரஸ் தடம் மாறி விட்டதாக கூச்சலிடுகிறார்கள். நாட்டின் வளர்ச்சிக்கு உதவிட நேரு வகுத்தளித்த பொருளாதாரக் கொள்கையிலிருந்து காங்கிரஸ் மாறிச் செல்லாது.

இவ்வாறு; திருப்பதி காங்கிரஸ் மாநாட்டில் பொருளாதாரத் தீர்மானத்தை முன் மொழிந்து பேசிய திட்டக் குழுத் துணைத் தலைவர் பிரணாப் முகர்ஜி குறிப்பிட்டிருக்கிறார்.

இதில் இரண்டு பகுதிகள் மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவை.

நேற்று வரை நேருவை விமர்சித்தவர்கள் இன்று நேரு வழியிலிருந்து காங்கிரஸ் விலகிச் செல்கிறது எனக் கூச்சலிடுவதா? என்பது நண்பர் பிரணாப் முகர்ஜியின் வாதம்!

இப்போது நமக்குக் கிடைக்க வேண்டிய விளக்கம் என்ன? நேருவின் கொள்கையை விமர்சித்தவர்கள், இன்று காங்கிரஸ் கட்சி நேருவின் கொள்கையிலிருந்து விலகிப் போகலாமா? என்று கேட்பதற்குத் தகுதியற்றவர்களா - அல்லவா? என்பது வேறு பிரச்சினை; நேருவின் பொருளாதாரக் கொள்கையிலிருந்து காங்கிரஸ் வழுக்கிச் சென்றுவிட்டது என்ற உண்மையை யார் சொன்னால் என்ன? என்பது தான் நமது கேள்வி!

“எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு”

என்பது திருக்குறள்!

ஒரு கருத்தை யார் சொல்கிறார்கள் என்பது முக்கியமல்ல; அந்தக் கருத்து உண்மையா அல்லவா என்று ஆராய்ந்து

தெளிவதுதான் அறிவுடையோர் செயல் என்பது இந்தக் குறளின் கருத்துரையாகும்.

நேருவின் பொருளாதாரக் கொள்கை பொதுத் துறை - கூட்டுத் துறை - தனியார் துறை என அமைந்து மூன்று துறைகளுக்கிடையே போட்டி உணர்வு எழுவதின் வாயிலாகத் தொழில் வளர்ச்சியும் அதன் தொடர்பாக பொருளாதார வளர்ச்சியும் என்றிருந்தது.

அதனினும் முற்போக்காக; தனியார் துறை, கூட்டுத் துறையாக மாறி; இறுதியாகப் பொதுத் துறை என்ற முழுமையான குறிக்கோள் வெற்றி பெற வேண்டுமென்ற சோஷலிசக் கருத்துடையோர் - நேருவின் பொருளாதாரக் கொள்கையினின்றும் சற்று வேறுபட்டவர்களே தவிர முற்றிலும் முரண்பட்டவர்கள் அல்லர்!

நேருவின் பொருளாதாரக் கொள்கை போதாது என வாதிட்டதற்கும் - இன்றைய காங்கிரசின் பொருளாதாரக் கொள்கை தீதானது என்று சுட்டிக் காட்டுவதற்குமுள்ள வித்தியாசத்தை நண்பர் பிரணாப் முகர்ஜி போன்ற பெரும் பொறுப்பில் இருப்பவர்களே உணர மறுப்பதுதான் விந்தையாக இருக்கிறது.

பெருந்தலைவர் காமராஜர் முன்னின்று 1955 ஆம் ஆண்டு ஆவடியில் நடத்திய காங்கிரஸ் மாநாட்டில் சோஷலிசம் என்ற சொல்லுக்குப் புதிய ஜொலிப்பே ஏற்படுமளவுக்கு ஆவடி சோஷலிசம் அரங்கேறியது!

திட்டமிட்ட பொருளாதாரம், பொதுத் துறை பெருக்கத்தின் வாயிலாக தொழில் வளர்ச்சிப் போட்டி, தேசிய மயமாக்குதல் போன்ற முற்போக்குத் திட்டங்களால் மட்டுமே நாட்டை முன்னேற்ற முடியுமென்று நேருவின் பொன்மொழியை உச்சரித்துக் காலம் தள்ளி வந்த காங்கிரஸ் - இந்திய நாட்டைக் குறிப்பிடும் அரசியல் சாசனத்தில் கூட இறையாண்மை, மதச் சார்பற்ற தன்மை இவற்றுடன் சோஷலிசம் என்பதையும் அரசியல் சட்ட திருத்தம் கொண்டு வந்து இணைத்துக் கொண்ட காங்கிரஸ்; இன்றைக்கு தொழில்களைத் தனியார் துறைக்கு தாரை வார்க்கவும், பன்னாட்டு மூலதனத்திற்கு அழைப்பு விடுத்து - உலக வங்கியின் உதவியை நாடிடுவதோடு அவற்றின் நிபந்தனைகளுக்கெல்லாம் தலையசைத்திடவும் தயார் நிலையில் இருக்கிறதென்றால் எங்கேயிருக்கிறார் நேரு?

திருப்பதி காங்கிரஸ் மேடையில் திருவுருவப் படமாக இருப்பதைத் தவிர!

இரண்டாவது பகுதியாக தனது பேச்சில் பிரணாப் முகர்ஜி அளித்திடும் திட்டவட்டமான உறுதி என்னவென்றால்; நேரு வகுத்தளித்த பொருளாதாரக் கொள்கையிலிருந்து காங்கிரஸ் மாறிச் செல்லாது என்பதாகும்.

ஆனால் பிரணாப்பின் உரைக்கும்; திருப்பதி மாநாட்டில் இயற்றப்பட்ட ஒரு தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கவலைக்கும் எவ்வளவு தொடர்பு உள்ளது என்பதை சிந்திக்காமல் இருந்து விட முடியாது.

பொருளாதார உதவி, மற்றும் பன்னாட்டு வாணிப விஷயங்கள் தொடர்பாக சில நாடுகளும் நிறுவனங்களும் பொருளாதாரத்திற்கு அப்பாற்பட்ட நிபந்தனைகளை விதிப்பது பற்றி திருப்பதி காங்கிரஸ் மாநாடு கவலையைத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்தச் செய்தியை ஏடுகளில் காணும் போது என்ன நினைக்கத் தோன்றுகிறது?

இன்றைய மத்திய காங்கிரஸ் அரசின் புதிய போக்கினால் - ஆரம்பமே கவலை தெரிவிக்கும் அவசியம் ஏற்பட்டிருக்கிறதென்றால், போகப் போக இந்தக் கவலை இந்தியாவின் பெருங் கவலையாக மாறிவிடாது என்பதற்கு என்ன உத்திரவாதம்?

சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து நாற்பத்தி ஐந்து ஆண்டு காலத்தில் சுமார் மூன்று ஆண்டுக் காலம் எதிர்க்கட்சிகள் ஆண்டதுபோக, நாற்பது ஆண்டு காலத்திற்கு மேலாக மத்திய ஆட்சியில் அமர்ந்து அரசோச்சும் காங்கிரஸ் இயக்கம் - பல தடவை தேர்தல் சின்னங்களை மாற்றிக் கொண்டது போல, தேர்தல் கோஷங்களை மாற்றிக் கொண்டு மக்களை ஏமாற்றக் கற்றுக் கொண்டதே தவிர;

“இரவில் வந்தது சுதந்திரம் -
இன்னும் விடியவே இல்லை”

என்று கவிதை வடிக்கும் கண்ணீரை மாற்றிடவில்லை என்ற உண்மையை மறுப்பாரும் உண்டோ?

அன்புடன்,

மு. க.

(17-04-1992)

1906. “குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை”!

உடன்பிறப்பே,

குற்றம் பார்க்கின் சுற்றமில்லை என்ற முதுமொழியைத் தலைப்பாக வைத்து 1960 ஆம் ஆண்டுவாக்கில் நமது தலைவர் அண்ணா அவர்கள் எழுதிய மடல்களையும், ஆற்றிய உரைகளையும் நினைவில் வைத்துக்கொண்டே இந்தக் கடிதம் எழுதுகிறேன். நீயும் இந்தக் கடிதத்தைப் படிக்கும்போது மட்டுமல்லாமல் படித்த பிறகும் நினைவில் வைத்துக்கொண்டு நடப்பாய் என்ற நம்பிக்கையோடும், நடக்க வேண்டும் என்ற வேண்டுகோளோடும் இதனை எழுதுகிறேன்.

கடும் மழைத்துளிகளினூடே கண்ணீர்த் துளிகளைச் சிந்தியவாறு சென்னை ராபின்சன் பூங்காவில் 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 17-ஆம் நாள் தி.மு.க.வை அண்ணா தொடங்கி வைத்த காலத்திலிருந்து இதுவரை ஏறத்தாழ நாற்பத்தி இரண்டு ஆண்டு காலத்திற்கு மேலாக கட்சிக்குள்ளே விட்டு இப்போது ஒன்பதாவது பொதுத் தேர்தலில் ஈடுபட்டிருக்கிறோம்.

இந்தத் தேர்தலுக்கான பணிகள் ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுக் காலத்திற்கு முன்பே தொடங்கப்பெற்று - தவிர்க்க முடியாத பல காரணங்களால் இடையிடையே காலத்தாழ்வு ஏற்பட்டு; இப்போது; வருகிற ஜூன் திங்களுடன் முடிவடைய இருக்கின்றன.

அறுபதாயிரம் கிளைக் கழகங்களுக்கான தேர்தல்கள் முடிவுற்று - அதனையடுத்து பேரூர்க் கழகங்களில் தேர்தல்களும், பின்னர் நகர, நகரியக் கழகங்களில் தேர்தல்களும் நடைபெற்று - வரும் 25, 26, 27 நாட்களில் ஒன்றியக் கழகத் தேர்தல்கள் நடைபெற உள்ளன. அதற்கடுத்து மாவட்டக் கழகத் தேர்தல் - தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்; தலைமைச் செயற்குழு உறுப்பினர் தேர்தல் - அதன் தொடர்ச்சியாக தலைமைக் கழகத் தேர்தல்!

இவற்றுக்கிடையே சென்னை மாவட்டக் கழக வட்டக் கிளைகளில் தேர்தல்; அதனைத் தொடர்ந்து பகுதிக் கழகத் தேர்தல் - இவை, முடிவுற்று; சென்னை மற்றுமுள்ள மாவட்டக் கழகங்களின் தேர்தல்களுக்கும் - மதுரை, கோவை மாநகராட்சிக் கழகத் தேர்தல்களுக்கும் நாட்கள் குறிப்பிடப்பட இருக்கின்ற நிலையில் உடனடியாக 25, 26, 27 தேதிகளில் நடைபெறும் ஒன்றியக் கழகத் தேர்தல்கள் மிக முக்கியமானவை.

ஏனெனில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் அனைவருமே அந்தப் பொறுப்பின் அடிப்படையிலேயே தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்களாகின்றன. மாவட்டக் கழகங்களின் பணியாற்றும் திறனுக்குத் துணையாக அமைந்து செயலாற்றும் கடமை ஒன்றியச் செயலாளர்களுக்கு மிக அதிகமாக உண்டு.

பொதுவாகச் சொல்ல வேண்டுமானால்; மேலமைப்பில் ஒருவர் பொறுப்புக்கு வரவேண்டுமென்பதற்காக கீழ் அமைப்புகளில் பொறுப்பேற்கிற நிர்வாகிகளோ, பிரதிநிதிகளோ சொத்தை சோடைகளாக இருந்தாலும் பரவாயில்லை; தனக்கு வாக்களிக்கக் கூடியவர்களாக அல்லது தனது கருத்துக்கு இணங்கி; தான் பரிந்துரை செய்யும் ஒருவருக்கு வாக்களிக்கக் கூடியவர்களாக இருந்தால் போதுமென்று எண்ணிச் செயல்பட்டால்; அது, தற்காலிக வெற்றியை ஒருவருக்கு மேலமைப்பில் பெற்றுத் தரலாம். ஆனால் கழகம் வலிவு பெற, வெற்றிகளை ஈட்ட, நிரந்தரமான ஆக்கப் பணிகள் இல்லாமல் அந்தக் கீழ் அமைப்புகள் பட்டுப் போய்விடக் கூடும். அது சில இடங்களைப் பொறுத்து அனுபவ ரீதியான உண்மை!

எனவே அத்தகைய முயற்சிகளாலும் - அல்லது போட்டியில்லாமலே - சமரசம் என்ற பெயரால் பினாமி நிர்வாகிகள் அமைவதாலும்; கழகத்தின் எதிர்கால வளர்ச்சி குன்றிப் போகும் எனும் உண்மையை உணர்ந்து கழக உடன் பிறப்புகள்; அவர்கள் வாக்காளர்களாக இருப்பினும் - அல்லது வேட்பாளர்களாக இருப்பினும் செயல்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

போட்டிகள்; கசப்புணர்வுகளைக் கடந்து, காழ்ப்பு விளைவிக்காத அளவுக்கு உருவாகிடுவதையும், நடப்பதையும், அந்தப் போட்டிகள் முடிந்த பிறகு குடும்ப பாச உணர்வுடன் கழகம் கட்டிக் காப்பதையும் கண் போன்று கருதுவோர் யாராயினும்

அவர்கள் என் வயதுக்கு முத்தோராயினும், இளையோராயினும் கரங்கூப்பி நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுமார் நாற்பது ஆண்டுகளில் கட்சிக்குள் எட்டு பொதுத்தேர்தல்களை நடத்தி முடித்து விட்டு ஒன்பதாவது தேர்தலையும் நடத்திக் கொண்டிருக்கிற ஒரு மாநிலக் கட்சி தி.மு.க.வைத் தவிர இந்தியாவில் வேறு எங்கு இருக்கிறது?

அறுபதாயிரம் கிளைகள் - அவற்றைத் தொடர்ந்து பல்வேறு அமைப்புகளின் தேர்தல்களில் ஒன்றிரண்டு அசம்பாவிதங்கள் ஏற்பட்டுவிட்டது கண்டே நான் பதறிப் போனேன். கழுகுக் கண்களுடன் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் சிலர் அந்தச் சம்பவங்களைத் திரித்துக்கூறி ஆத்ம திருப்தி அடைந்து கொள்கிறார்கள்!

கட்சித் தேர்தல் நேரத்தை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, நமது கழகத்தின் செயல்வீரர் ஒருவர் கொல்லப்பட்டால் அதனைத் கட்சித் தேர்தலுடன் இணைத்து; கழகத்திற்குக் களங்கம் சேர்க்கலாமா என்று திட்டமிட்டுப் பிரச்சாரம் செய்வோர் நம்மைச் சுற்றித் திரிந்து கொண்டிருப்பதை உணர்ந்து பார்த்து; அந்த எரிச்சல் நெஞ்ச எதிரிகளுக்கு இடம் கொடுத்துவிடாமல் எச்சரிக்கையுடன் எனதருமை உடன்பிறப்புகள் நடந்துகொள்ள வேண்டுமென அவர்தம் கரம் பிடித்துக் கேட்டுக் கொள்கிறேன்.

கிளைக்கழகங்கள் என்பவை பிரதிநிதிகளைத் தருகிற அமைப்பாக மட்டுமல்லாமல் ஓய்வின்றி மக்களிடையே கழகப் பணியாற்றுகிற அமைப்பாக இருந்தால்தான் நகரங்கள், ஒன்றியங்களின் பணி சிறப்பாக இருக்கும். அதே சமயம் நகரங்களும் ஒன்றியங்களும், கிளைக்கழகங்களை வேலை வாங்குகிற ஊக்கமுடைய நிர்வாகிகளிடம் வந்தாக வேண்டும் - அந்த நகர மற்றும் ஒன்றிய நிர்வாகிகளிடம் வேலை வாங்குகிற மாவட்டச் செயலாளர்கள் தலைமைக் கழகத்துடன் நேரடியாக நெருங்கிய தொடர்பு கொண்டு - திட்டங்களை வகுத்தல், அவற்றை மாவட்டங்களில் நிறைவேற்றுதல் போன்ற பணிகளுக்குப் பொறுப்பேற்பதுடன்; தலைமைக் கழக நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களாகவும் ஆகிறார்கள்.

எனவே தூய்மையான தொண்டு - துடிப்பான செயலாற்றல் - இவற்றைக் கொண்ட நிர்வாகிகள் எல்லா அமைப்புகளிலும் இடம்

பெறுதல் மிக முக்கியம் என்பதை; தேர்தலில் ஈடுபடும் வாக்காளர், வேட்பாளர், பணியாற்றும் உடன்பிறப்புகள் அனைவரும் உணர்ந்திடல் வேண்டும்.

கழகம், சோதனைகள் பலவற்றை சந்தித்துக் கொண்டிருக்கிறது.

கழகப் பேச்சாளர்கள் மீது வழக்கு! கைது! அடக்குமுறை!

கழக ஏடுகள், ஆதரவு ஏடுகள் மீது ஒடுக்குமுறை! மிரட்டல்! தாக்குதல்!

தடாவில் கைதான சகோதரி சுப்புலட்சுமியும், அவரது கணவர் சகோதரர் ஜெகதீசனும், தம்பி ரவிச்சந்திரனும் பல மாதங்களாக சிறைக் கொட்டடிகளில்!

தமிழ்நாட்டு மக்களின் அவதியோ சொல்லும் தரமன்று!

ஆளுங்கட்சியின் அடாவடித்தனம் - ஆணவம் - செருக்கு - மமதை - எல்லை மீறிய நிலையில்!

லஞ்ச ஊழல் - கொள்ளையோ கொள்ளை!

கட்சித் தேர்தல்களில் பொறுப்புக்குரிய இடங்களை நிரப்புவது மட்டுமல்ல; விரைவில் சிறைகளை நிரப்ப வேண்டிய அறப்போராட்டமும் நம்மை அழைத்துக் கொண்டிருக்கிறது!

அதனால்தான் உடன்பிறப்பே; அண்ணா அடிக்கடி வலியுறுத்திய குற்றம் பார்க்கின் சுற்றமில்லை என்ற வாசகத்தை நினைவூட்டுவதோடு - அந்தச் சுற்றம் கடமை நிறைந்த சுற்றமாக, கண்ணியம் காத்திடும் சுற்றமாக, கட்டுப்பாடு போற்றிடும் சுற்றமாகத் திகழ்ந்திட; உன்னைப் போன்ற ஓர் உடன்பிறப்பாம் நான் மீண்டும் மீண்டும் வேண்டுகிறேன்!

அன்புடன்,

மு. க.

(22-04-1992)

1907. ஒரே நாளில் ஆயிரம் கூட்டங்கள்!

உடன்பிறப்பே,

மதுரையில் உரையாற்றிய நமது பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள்; ஜனநாயகத்தில் பேச்சுரிமை, எழுத்துரிமைக்குப் பூட்டப்படும் அடக்குமுறை விலங்குகளை உடைத்தெறியும் வகையில்; ஜெயலலிதா அரசின் அராஜகப் போக்கினைக் கண்டிக்கும் அறப்போராட்டமாக தமிழக முழுதும் ஒரே நாளில் ஆயிரம் பொதுக் கூட்டங்கள் தி.மு. கழகத்தின் சார்பில் நடத்தப்படுமென அறிவித்துள்ளார்.

அந்த அறிவிப்பையொட்டித் தலைமைக் கழகம் வருகிற மே திங்கள் நாலாம் தேதியன்று அந்தக் கூட்டங்களை நடத்துவதென முடிவு செய்துள்ளது.

ஒரே நாளில் ஆயிரம் கூட்டங்கள்! - எல்லாக் கூட்டங்களிலும் முன்னணிப் பேச்சாளர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்றில்லை! நமது கழக நிர்வாகிகளே அரசியல் தெளிவு படைத்தவர்கள்தான்! உரையாற்றும் திறன் கொண்டவர்கள்தான்! எனவே முன்னணிப் பேச்சாளரை முன்னிட்டு; முதல் நாளோ மறுநாளோ கூட்டத்தை நடத்திக் கொள்கிறோம் என்றில்லாமல் ஆயிரம் கூட்டங்களும் ஒரே நாளில்; அதாவது மே 4-ஆம் நாளில் நடைபெற்றிட வேண்டும்.

ஒரு ஆட்சியின் குறைகளை, குற்றங்களை எடுத்துக் கூறப் பேச்சுரிமை இல்லை - எழுதிட எழுத்துரிமை இல்லை - என்று ஆணவக் குரல் எழுப்பி அடாவடித்தனங்களில் இறங்கும் இந்த ஆட்சியின் அலங்கோலத்தை ஆயிரம் கூட்டங்களில் ஒரே நாளில் விளக்கிடுவோம்!

இல்லாதது பொல்லாததை எழுதினால் - அவதூறு வழக்குப் போட சட்டத்தில் இடமிருக்கும் போது; மூச்சு விட்டாலே குற்றம்! கைது செய்து முடக்கிப் போடு சிறையில்! என்று முண்டா தட்டும் ஆட்சிக்கு அறைகூவல் விடுக்கவே ஆயிரம் கூட்டங்கள்!

அரிசி விலையேற்றம், பால் விலையேற்றம், பஸ் கட்டணம் ஏற்றம் - அத்யாவசியப் பொருள்கள் அனைத்தும் அநியாய விலையேற்றம் - மக்கள் படும் அவதி சொல்லுந்தரமன்று!

பல மாவட்டங்களில் வறட்சி, குடிநீர் இல்லை, அந்தத் துயர் துடைக்கும் பணிகளைப் பற்றி அரசுக்கு அக்கறையில்லை!

உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தவில்லை - மக்கள் குறை கேட்டுத் தீர்த்து வைக்கக் கிராமங்களில் நகரங்களில்; பிரதிநிதிகள் இல்லை!

இருந்த கூட்டுறவு சங்கங்களைக் கலைத்து விட்டு - ஆளுங்கட்சியினர் மட்டுமே இடம் பெறுவதற்காக ஒரு மோசடித் தேர்தல் நடத்த வெளிப்படையாகவே அதிகார துஷ்பிரயோகம்!

மகாமகத் திருவிழாவை ஆளுங் கட்சியின் அரசியல் மாநாடாக ஆக்கி - கால்பகுதி குளத்தை வளைத்துக் கொண்டு; மாறி மாறி அபிஷேகம் நடத்திக்கொண்டு - பாபத்தைக் கழுவ வந்த பச்சிளங் குழந்தைகளும், வாலிபர்களும், பாட்டன் பாட்டிகளுமாக நூறு பேர் மாண்டு மடிந்த பரிதாபத்துக்கு நீதி விசாரணை கேட்டால்; அப்படிக் கேட்பவர்களுக்கு ஆண்டவன் கூலி கொடுப்பான் எனச் சாபமிடும் மமதை!

அரசாங்க நிலத்தை அமைச்சர்கள் வாங்கக் கூடாது என்றுள்ள அரசு விதிமுறை ஆணையை மீறி இரண்டு கோடி ரூபாய்க்கு முதலமைச்சரே அரசு நிலத்தை வாங்கிக்கொண்ட நெறி கடந்த செயலைக் கண்டித்தால்; அதற்கு முதலமைச்சர் வாய் திறக்காமலே தப்பிக்கப் பார்க்கும் தந்திரம்!

தி.மு.க. ஆட்சியில் அரசுடைமையாக்கப்பட்ட பீர் தொழிற்சாலை விதிமுறைப்படி டெண்டர் விடாமலே; தனியாரிடம் தாரை வார்த்து விட்ட கொடுமை - அதில் நடைபெற்றுள்ள பேரம் - இந்த ஊழல்களை பெரிய பெரிய கட்அவுட்களால் மறைத்து விடலாமென்று மனப்பால் குடிக்கும் தந்திரம்!

பொழுது விடிந்து பொழுது போனால் கொலை, கொள்ளை, திருட்டு, வழிப்பறி என்று ஏடுகள் கொள்ளாத அளவுக்கு செய்திகள் வரும் நிலையில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு!

ஆதாரங்களுடன் எழுதப்படும் செய்திகளை ஆதாரங்களைக் காட்டி மறுத்திட வக்கின்றி வகையின்றி அந்தச் செய்திகளை

வெளியிடும் ஏடுகளுக்குத் தொல்லை தருதல் - இம்சித்தல் - ஏடுகளைக் கொளுத்திடக் குண்டர்களை ஏவுதல் இத்யாதி குரூரச் செயல்கள்!

அரசு அதிகாரிகளை, ஊழியர்களை அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அடித்தார்கள் உதைத்தார்கள் என்ற புகார்கள், அங்கிங்கெனாதபடி எங்கெங்கும்!

அடிமட்டம் முதல் மேல்மட்டம் வரையில் எல்லா துறைக்கும் - எல்லா வகைக்கும் - இன்ன தொகை; இன்னார் வழி தரப்பட வேண்டுமென்று ஆயிரத்தில் தொடங்கி கோடியைத் தொடும் வண்ணம் லஞ்ச லாவண்யம்!

பொதுவாக ஜனநாயகத்தில் கதவுகள் அனைத்தும் மூடப்பட்டு; சர்வாதிகாரக் குரல் எங்கும் நிறைநாதமாக ஆக வேண்டுமென்பதற்கான திட்டவட்ட ஏற்பாடுகள்!

கூட்டத்தில் என்ன பேசப் போகிறாய் அதை எழுதிக் கொடு! என போலீஸ் அதிகாரிகள் கழகப் பேச்சாளர்களைக் கேட்கிறார்களாம்!

முதலமைச்சரைப் பற்றிப் பேசுவதாக இருந்தால் அனுமதி கிடையாது என ஆர்ப்பரிக்கிறார்களாம்!

அ.தி.மு.க.வினர் கூட்டத்தில் கல் வீசுவார்கள்; அதற்கு நாங்கள் பொறுப்பல்ல; எனப் போலீசார் நமது கழக நிர்வாகிகளை மிரட்டுகிறார்களாம்!

நேற்று முசிறியில் தம்பி கே.பி. இராமலிங்கம் கூட்டத்தில்; இதோ நான் தொகுத்திருப்பது போன்ற நிலைதான்!

ஆபாசப் பேச்சு - ஆபாச எழுத்து - அதனால் தடை! ஆகவே கைது; என்கிறார்கள்!

ஜெயலலிதாவுக்கு பக்கத்தில் அமர்ந்துள்ள அமைச்சர்கள் ஜெயலலிதாவைப் பற்றிப் பேசாதா ஆபாசப் பேச்சுக்களையோ; கழகச் சொற்பொழிவாளர்கள் பேசி விடப் போகிறார்கள்!

அவ்வளவு ஏன்? ஜெயலலிதாவே எம்.ஜி.ஆர். குடும்பத்தைப் பற்றியும், அவரது மனைவி ஜானகி அம்மையாரைப் பற்றியும், எம்.ஜி.ஆரைப் பற்றியும் பேசாத ஆபாசப் பேச்சுக்களையோ கழகத்தினர் பேசிவிடப் போகிறார்கள்!

அந்த இரு அணியினரும் பேசிக் கொண்டதை - எழுதிக் கொண்டதை - அறிக்கை விட்டுக் கொண்டதை; தேதிவாரியாக வந்த பத்திரிகைகளில் உள்ளதைப் படித்துக் காட்டினாலே போதும்; ஆபாசத்தின் உறைவிடங்கள் யார்? எவர்? எது? என்பதை ஊரார் அறிவரே!

பெரியார் அண்ணா கொள்கைகளைக் குழி தோண்டிப் புதைத்துக்கொண்டே; அவர்களின் பெயர்களை மட்டுமே பயன்படுத்திக் கொண்டு இந்த ஆட்சி போடும் வேடத்தை அம்பலமாக்க வேண்டாமா?

நவோதயா பள்ளிக்கு நடை பாவாடை விரித்து, இந்தி ஆதிக்கத்துக்கு ஆலவட்டம் சுழற்றும் தமிழ்த் துரோகத்துக்கு பாடம் கற்பிக்க வேண்டாமா?

கர்நாடகத் தமிழ் அகதிகளைக் கைவிட்ட இந்த ஆட்சியின் அலட்சியத்தை சுட்டிக் காட்ட வேண்டாமா?

இழிதகைச் செயல்கள்!
பழி வாங்கும் நடவடிக்கை!
தடா தர்பார்!
ஊர் நாறும் ஊழல்!
கோடி கோடியாகக் கொள்ளை!

இவற்றைச் சுட்டிக் காட்டினால்; கருத்துக்குக் கருத்து விளக்கமளிக்க வக்கற்று, வகையற்று, திறனற்று, திராணியற்று, உரிமைகளைப் பறிக்கும் அடக்குமுறைகளை - ஏதேச்சதிகார ஆணைகளைப் பாயவிடும் இந்த அராஜக அரசைக் கண்டித்து

ஒரே நாளில்
ஆயிரம் கூட்டங்கள்
மே 4- ஆம் நாள் மாநில முழுதும் நடக்கட்டும்!

இது நாம் நடத்தும் அறவழிப் போர்! அடக்குமுறை எதிர்ப்புப் போர்! ஆணவ, அராஜக, அடாவடி ஆட்சியைக் கண்டிக்கும் போர்!

அன்புடன்,

மு. க.

(24-04-1992)

1908. வஞ்சக வலை அறுபட வரட்டும் நீதி விசாரணை!

உடன்பிறப்பே,

ஜெயலலிதா, நடிகையாக இருந்தபோது ஐதராபாத் நகரில் திராட்சைத் தோட்டம் வாங்கினாராம். 1991-ல் ஆட்சிக்கு வருவதற்கு சில மாதங்களுக்கு முன்பு அந்த இடத்தில் பெரிய பங்களா ஒன்று கட்டுவதற்கு ஆந்திராவில் அனுமதி வாங்கினாராம். ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த சில மாதங்களில் அந்தப் பெரிய பங்களாவைக் கட்டி முடித்தாராம். அதை ஆங்கில ஏடான ஸ்டேட்ஸ்மேன் படங்களுடனும், ஜெயலலிதாவின் அனுமதி கோரல் எனும் கடிதத்துடனும் வெளியிடவே; அதனைச் சில தமிழ் ஏடுகள் மறுபிரசுரம் செய்தனவாம். (தனக்கு பங்களா எங்குமே இல்லை என்று ஜெயலலிதா மறுத்த காரணத்தால்தான் - ஸ்டேட்ஸ்மேன் அந்தப் படங்களை வெளியிட்டது)

இதுகுறித்து சட்டப்பேரவையில் பேசிய ஜெயலலிதா; பங்களா கட்டுவதற்கு எப்போது ஆரம்பம் நடந்தது என்பது பற்றியோ - கட்டி முடிக்கப்பட்டது எப்போது என்பது பற்றியோ - எத்தனை லட்ச ரூபாய் செலவிடப்பட்டது என்பது பற்றியோ விபரங்களோ விளக்கங்களோ தரவில்லை - அந்த விபரங்களைப் பற்றி நான் கவலைப்படவுமில்லை! வருமான வரி இலாக்காவும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை!

கடந்த ஏழெட்டு மாத காலங்களில் ஜெயலலிதா தனது சொந்தப் பணத்திலிருந்தே சுமார் இருபது லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை பல்வேறு நிதி உதவிகளாக வழங்கியுள்ளதாக அவர் சார்பிலும், அரசின் சார்பிலும் விளம்பரச் செய்திகள் பெரிதுபடுத்தப்பட்டுள்ளன. மாதம் ஒரு ரூபாய் மட்டுமே மந்திரி சம்பளம் வாங்கிக் கொள்வதாக அறிவித்த ஜெயலலிதாவுக்கு - சொந்தப் பணத்தில் இருபது லட்ச ரூபாய்

மேல் நிதி வழங்க ஏது பணம்? எங்கிருந்து வந்த பணம்? என்று வருமான வரி இலாக்காவே கவலைப்படாமல் இருக்கும்போது; கைப்பற்றிய கோடிகளையே அடம்பிடித்து வலியுறுத்தியதால் திருப்பிக் கொடுக்கும் போது; ஐதராபாத் பங்களாவை இந்த ஓராண்டு காலத்தில் கட்டி முடிக்க எவ்வளவு பணம் செலவாயிற்று என்று எதற்காகப் பிரச்சினை எழுப்பிட வேண்டும்!

இந்த ஆட்சியில் இந்த ஓராண்டுக் காலம் முடிவதற்குள்ளேயே - பஸ் அதிபர்களுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கிடவும், ஆம்னி பஸ்களுக்கு நீதிமன்றக் கருத்தையும் மீறி ஒரேயடியாக வரியைக் குறைக்கவும் - இருபது கோடி ரூபாய் அளவுக்கு அரசின் கஜானாவுக்குச் செல்லாத கப்பம் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதை இந்த மாநில முழுதுமுள்ள நடுநிலையாளர்கள் உணர்வார்கள்!

அரசின் கண்காணிப்பில் இருந்த பெருந் தொழில்களில் அரசின் தலைமைப் பொறுப்பை அகற்றிக் கொண்டு; தலைமை மற்றும் நிர்வாகம் ஆகிய இரு பொறுப்புக்களையும் முதலாளிக் குடும்பத்திற்கே அளித்ததற்கு கைமாறி பணம் எத்தனை கோடி என்பதும் ஊரறிந்த ஊழல் அல்லவா?

அமைச்சர்கள் அரசு நிலத்தை வாங்கவோ அல்லது தமது சொத்துக்களை அரசின் விதிமுறை ஆணையை மீறி; முதலமைச்சரோ இரண்டு கோடி ரூபாய் கொடுத்து அரசாங்கத்தின் நிலத்தை வாங்குகிறார் என்றால்; அது நேர்மையா? முறையா என எழும் கேள்விக்கு ஜெயலலிதா வாய் திறக்காமல் மௌனம் சாதிப்பது ஒன்றே ஊழல் நடந்து விட்டது என்பதற்கு அழிக்க முடியாத ஆதாரம் அல்லவா?

அரசுக்குச் சொந்தமான பீர் தொழிற்சாலையை; டெண்டர் கோராமலேயே தனியாருக்குத் தாரை வார்த்ததில் எத்தனை கோடி பேரம் நடைபெற்றுள்ளது?

இதையெல்லாம் கேட்டால்; மக்களை ஏமாற்ற பொய் மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டுவதா?

முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆட்சியில் ஜெயலலிதா தமிழ்நாட்டில் வாழ முடியாமல் கொடுங்கோன்மை நடைபெற்றதாம்! தமிழகத்தில் மருத்துவ சிகிச்சை கூட பெற முடியவில்லையாம். அதனால்தான் அவர் ஆந்திரத் தலைநகரில்

குடியேறிவிடலாம் என எண்ணியிருந்தாராம். அதற்காக; இங்கே அவர் ஆட்சிக்கு வந்தபிறகு ஏற்கெனவே வாங்கிய இடத்தில் இப்போது பங்களா கட்டியிருக்கிறாராம்!

பொய் சொல்லுவதில் ஜெயலலிதாவை மிஞ்சுவதற்கு யாரும் பிறக்கவேயில்லை. அரிச்சந்திரன் வீட்டுக்கு அடுத்த வீட்டிலே பிறந்தவர் மாதிரி; உண்மை பேசுவதாக நடித்து அவர் கொட்டியளந்துள்ள பொய்களைக் கூடை கூடையாக நிரப்பி வைக்கலாம்.

"கருணாநிதி ஆட்சியில் எனக்கு சிகிச்சை அளிக்கவே மருத்துவர்கள் வர பயப்படுகிறார்கள்"

என்று அப்போதே பத்திரிகைகளில் பேட்டி கொடுத்தார் ஜெயலலிதா!

அவரது அறிக்கையை அப்போதே டாக்டர்கள் அசோசியேஷன் மறுத்துக் கருத்து தெரிவித்தது. இருந்த போதிலும் ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் என்ற இலக்கணத்தை (?) ஜெயலலிதா கைவிட்டதாகத் தெரியவில்லை.

நல்ல உடல் நலத்துடன் இருந்துகொண்டே மக்களின் அனுதாபத்தைப் பெறுவதற்காக அவர் எதிர்க்கட்சியில் இருந்தபோது உடல் நலமில்லை என திறம்பட நடித்துக் கொண்டிருந்தார் என்பதற்கு; இப்போது ஆட்சிக்கு வந்தபிறகு அவர் நோய் நொடியின்றி திடகாத்திரமாக இருப்பது ஒன்றே சரியான சான்றாகும்! (தொடர்ந்து அவர் உடல் நலமுடன் வாழ்ந்திட என் வாழ்த்துக்கள்!)

ஜெயலலிதா மிகுந்த துணிச்சலுடன் பொய் கூறுவார் என்பதற்கு இன்னும் பல உதாரணங்கள் உண்டு!

தி.மு.க. ஆட்சியில் மாநகராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டது. உடனே ஜெயலலிதா நிருபர்களைக் கூப்பிட்டார்! சேதி தெரியுமா? என் பெயர் மாநகராட்சி வாக்காளர் பட்டியலில் இல்லை! கருணாநிதியின் சூழ்ச்சி பாரீர்! என்று கூச்சல் போட்டார்! மறுநாள் பத்திரிகைகளில் அதுதான் முதல் பக்க செய்தி!

செய்தி வந்தவுடனேயே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த தம்பி கோ.சி. மணி நிருபர்களை அழைத்து; மாநகராட்சி வாக்காளர் பட்டியலைக் காட்டி; 'இதோ பாருங்கள்! அச்சடிக்கப்பட்ட

இந்த வாக்காளர் பட்டியலில் ஜெயலலிதா பெயர் மட்டுமல்ல; அவர் வீட்டு முகவரியில் நடராசன் குடும்பத்தார் அனைவரின் பெயரும் இருக்கிறது' என்று ஆதாரத்துடன் சுட்டிக் காட்டினார்.

அடுத்து இன்னொரு பொய் - தி.மு.க. அறக்கட்டளையில் தம்பி முரசொலி மாறன்தான் முக்கியமான டிரஸ்டி என்று ஜெயலலிதா, பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்தார்.

நான் உடனே தி.மு.க. அறக்கட்டளை ஆவணங்களை பத்திரிகை நிருபர்களுக்குக் காட்டி; அந்த அறக்கட்டளையில் கழகத் தலைவர், கழகப் பொதுச்செயலாளர், கழகப் பொருளாளர், மற்றும் கழகச் செயற்குழு உறுப்பினர்களான மன்னை நாராயணசாமி, நீலநாராயணன் மட்டுமே டிரஸ்டிகள் என்றும் மாறன் டிரஸ்டியே அல்ல என்றும் ஆதாரத்துடன் விளக்கினேன்.

1989-ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் ஜெயலலிதாவின் தொலைபேசி டேப் செய்து ஒட்டுக் கேட்கப்படுவதாக பத்திரிகைகளுக்கு அவரே செய்தி அளித்தார். தொலைபேசித் துறை மத்திய அரசுக்குத் தொடர்புடையது. ஜெயலலிதாவின் கூற்றை தொலைபேசித் துறையின் ஜெனரல் மானேஜரே மறுத்துப் பத்திரிகைகளில் அப்போதே செய்தி வந்தது.

பேரவையில் அறிவிக்கப்பட்ட அலுவல் எடுத்துக் கொள்ளப்படும்போது; குறுக்கிட்டு இன்னொரு அலுவலை எடுத்துக்கொள்ள முடியாது என்று இப்போது அறிவுரை கூறும் ஜெயலலிதா; அன்றைக்கு 1989 மார்ச் 25-ஆம் நாள்; நான் பட்ஜெட் படிக்க முனைந்தபோது - எழுந்து நின்று; கிரிமினல் ஒருவர் பட்ஜெட் படிக்கக் கூடாது என்று கூச்சல் போட்டு; சபாநாயகர் எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் - ஜெயலலிதாவும் அவரது கட்சியினரும் என் கையிலிருந்த பட்ஜெட்டைப் பிடுங்கிக் கிழித்து, என் முகத்திலும் குத்திவிட்டு; அதன்பிறகு ஒரு திட்டமிட்ட நாடகத்தை ஆடித் தீர்த்தார்களே - இப்போது ஜெயலலிதா கூறுகிற அறிவுரை அப்போதும் மட்டும் அவருக்குப் பொருந்தவில்லையே; ஏன்?

1989 பட்ஜெட் வெளியிட்ட நாளில் என்ன நடந்தது? யார் அமளியை ஆரம்பித்தது? யார் முதலமைச்சரைத் தாக்கியது? இந்த விபரங்கள் அனைத்தும் மறுநாள் வெளிவந்த இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி போன்ற எல்லா ஏடுகளிலும் பிரசுரிக்கப்பட்டிருந்ததே

- அதையே மறைத்திடப் பொய் கூறும் ஜெயலலிதா; வேறு எதற்குத்தான் பொய் கூற மாட்டார்!

பத்மநாபா கொலை செய்யப்பட்ட இரண்டு மாதங்கள் கழித்து, விடுதலைப் புலிகளைப் பற்றி நிருபர்களுக்கு பேட்டி அளித்த ஜெயலலிதா இப்போது விடுதலைப் புலிகள் மீது எந்தப் புகாரும் இல்லை. அவர்களுக்கு மத்திய மாநில அரசுகளும் தமிழ்மக்களும் ஆதரவு தர வேண்டும் என்று கூறவில்லை?

இப்போது அதே ஜெயலலிதாதானே - பத்மநாபா கொலையைக் காரணம் காட்டி, தடா சட்டத்தில் முன்னாள் அமைச்சர் சகோதரி சுப்புலட்சுமியையும், அவரது கணவர் சகோதரர் ஜெகதீசனையும், நூறு நாட்களுக்கு மேலாக சிறையில் வைத்து வதைக்கிறார்.

தம்பி ரவிச்சந்திரனை நூற்று ஐம்பது நாட்களுக்கு மேலாக சிறையிலிட்டுக் கொடுமைப் படுத்துகிறார்.

ஜெயலலிதாவின் பொய்களுக்கு இன்னொரு எடுத்துக்காட்டாக; இதோ, பல்கலைக் கழகத்தில் கருணாநிதி முறைகேடுகள் என்ற தலைப்பில் ஒரு நீதிவிசாரணை நாடகம் நடத்த போகிறார்களாம். அமைச்சர் அரங்கநாயகம் முதலமைச்சரின் ஆணைப்படி அறிவித்துள்ளார்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை நான் புரக்கணிப்பவனாம். நூறு ஆண்டுகள் உயர்நீதிமன்ற வரலாற்றில் முதன் முதலாக ஒரு தாழ்த்தப்பட்ட பெருங்குடி மகன் நீதிபதியாக அமர்த்தப்பட்டது தி.மு.க. ஆட்சியில்தான் என்பதை மறந்திடுவர் மக்கள் என மனப்பால் குடிக்கிறார்கள்.

போலீஸ் இலாக்காவின் டைரக்டர் ஜெனரலாக தாழ்த்தப்பட்ட குடியில் பிறந்த ஒருவரை கழக ஆட்சியில் நியமித்தபோது, அவரைக் காரசாரமாகத் தாக்கிப் பேசியவர்கள், எழுதியவர்கள் இன்று தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நீலிக் கண்ணீர் விடுகிறார்கள்.

தாழ்த்தப்பட்டோருக்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும், மிக பிற்படுத்தப்பட்டோருக்கும் ஆசிரியர் நியமனத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஆணையை 1989 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் அரசின் வேண்டுகோளை ஏற்று சென்னை பல்கலைக் கழகம் நடைமுறைக்குக் கொண்டுவந்தது என்பதையெல்லாம் மூடிமறைத்து விடமுடியுமா?

அதனை பல்கலைக் கழகம் நடைமுறைப்படுத்திட ஆசிரியர் பதவிகளுக்காக இடஒதுக்கீடு அடிப்படையில் விளம்பரம் செய்து நேர்முக தேர்வு நடத்தியது. அப்போது அதனை எதிர்த்து ஆதிக்கவர்க்கத்தின் சில எடுபிடிகள் நீதிமன்றம் சென்று இடைக்கால தடை பெற்றார்களே; அவர்கள் யார் என்ற முகமூடியும் இந்த விசாரணை வந்தால் கிழித்தெறியப்படும் - ஐநூறு மூட்டை சிமெண்டு கோவை வரையில் சென்றது உட்பட! பல விவகாரங்கள் வெடித்துச் சிதற; வர வேண்டும் நீதி விசாரணை!

பல்கலைக் கழக நீதி விசாரணையென்றால்; அதற்காக யாரும் பயப்படப் போவதில்லை - வரவேற்கவே செய்கிறோம் - பல்கலைக்கழக சிமெண்ட் ஊழலில் இருந்து; இப்போது சாட்சி சொல்ல வரவேண்டியவர்கள், அமைச்சர்களாயினும், அதிகாரிகளாயினும் அவர்கள் புரிந்த ஊழல்களையெல்லாம் வெளிப்படுத்த - ஊர் நாறச் செய்ய; ஒரு பொன்னான வாய்ப்பல்லவா நமக்குக் கிடைக்கப் போகிறது. அடடா! மீனாட்சி கல்லூரி மீது எவ்வளவு அக்கறை? ஏன்? எதற்காக? என்ன காரணம்? இந்தியாவின் மிகப் பெரிய பதவியிலிருப்பவர் கூட அந்தக் கல்லூரிக்கு காட்டிய பரிவு - அக்கறை - இவைகள் எல்லாம் கூட பச்சையாக வெளிப்பட பல்கலைக் கழகம் பற்றிய நீதி விசாரணை பயன்படுமல்லவா? இட ஒதுக்கிடு பற்றி மேடையில் அலறும் நீதிமான்கள்; அந்தக் கல்லூரி விஷயத்தில் எப்படி நடந்து கொண்டனர் என்ற அற்புதங்கள் முதற்கொண்டு; சமீப கால டாக்டர் பட்டம் அளித்த விழா - அதில் முறைகேடுகள், விளம்பர செலவுக்குக் கல்லூரிகளை அரசு வற்புறுத்திய விவகாரம், முதல்வருக்கு வெள்ளிப் பேழை அளிக்கப்பட்டதற்கான செலவு விபரம் - வரையில் எத்தனை எத்தனை கேள்விகள் குடைந்தெடுக்கப் போகின்றன! எனவே; வரட்டும் நீதி விசாரணை!

தாமதமின்றி; அந்த நீதிவிசாரணை வர வேண்டும் - அந்த விசாரணை பகிரங்கமாக நடைபெற வேண்டும் - ஜெயலலிதா ஜோடிக்கும் மற்றொரு பொய்யும் மண்டையில் அடிவாங்கப் போவது நிச்சயம்.

பொய்க்குக் கால் நொண்டி என்பதைப் புரியாத மக்கள் இன்னுமிருக்கிறார்கள் என நம்பிக்கொண்டு, அறியாத மக்களின் அனுதாபத்தைப் பெறலாம் என்று ஜெயலலிதா அடுக்கிக் காட்டும் பொய்கள்; சரசரவெனச் சாய்ந்து விடும்!

அப்பேற்பட்ட பைசா நகரத்துக் கோபுரமே; சாய்ந்து விழுந்துவிடப் போகிறது என்று செய்திகள் வருகிறபோது - ஜெயலலிதாவின் பொய்கள் மாத்திரம் நிலைத்துவிடப் போகின்றனவா என்ன?

எனவே உடன்பிறப்பே; வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் - வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டாவது; முதலில் வசந்தசேனை வெல்வது போலிருந்தாலும் இறுதியில் மனோகரனுக்கே வெற்றி கிடைத்திடும் என்ற மனோகரா கதையை நினைவில் வைத்துக் கொண்டு - இந்த ஆட்சியாளர்கள் விரித்திடும் வஞ்சக வலையை, வன்னெஞ்ச சதியை - மக்களுக்கு உணர்த்திட மார் தட்டிக் கிளம்பிடுக மணிக்கொடி ஏந்திடுக!

அன்புடன்,

மு. க.

(26-04-1992)

1909. உட்பகையால் உள்ளதாம் கேடு!

உடன்பிறப்பே,

கட்சி அமைப்புகளின் தேர்தல்களில் பெரும்பாலான இடங்களில் ஜனநாயக முறை கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. கட்டுப்பாடு காக்கப்பட்டிருக்கிறது. பணியாற்றுவதில்தானே நமக்குள் போட்டி என்ற ஆரோக்கியமான மனப்பான்மையுடன் வெற்றி பெற்றவர்களும் தோல்வியுற்றவர்களும் உடன்பிறப்பு உணர்வுடன் ஒன்றுபட்டுக் கழகத் தொண்டினைத் தொடர்கின்றனர். அவர்களை வாழ்த்துகின்றேன். போற்றுகின்றேன். புகழ்கின்றேன்.

கடந்த இரண்டு மாத காலமாகவே நானும் பொதுச் செயலாளரும் பொருளாளரும் அமைப்புச் செயலாளர்களும் மற்றும் தலைமைக் கழக அலுவலர்களும் ஒவ்வொரு நாளும் பல மணி நேரம் இந்தத் தேர்தல் பணிகளுக்காக அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் பல்வேறு பகுதிகளிலுமிருந்து பல்வேறு விதமான பிரச்சினைகள், புகார்களுடன் வருகின்ற கழக உடன்பிறப்புக்களைச் சந்தித்து தலைமையின் சார்பில் அவற்றினைத் தீர்த்து வைக்கிறோம்.

நாற்பது லட்சம் உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் ஒரு தேர்தலை, கிளைகள் - பேரூர்கள் - நகரங்கள் - நகரியங்கள் - ஒன்றியங்கள் - மாவட்டங்கள் என்ற நிலையில் கட்டம் கட்டமாக நடத்தும் பொழுது; எத்துணை பெரும் பொறுப்பைத் தலைமைக்கழகம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்றில்லை.

எவ்வளவோ விழிப்புணர்வுடன் செயல்பட்டும் கூட, பெரும்பாலான இடங்களில் - தலைமை மகிழத்தக்க அளவுக்கு அமைப்புகளின் தேர்தல்கள் முடிவுற்றிருந்தாலும்கூட - ஓரிரு இடங்களில் இந்தத் தேர்தல்களில் சூடு அதிகரித்தும் - ஒன்றிரண்டு முறைகேடுகள் நிகழ்ந்தும் - பொறுப்பிலே உள்ள சிலர், தமது

பொறுப்பை மறந்து வன்முறைகளில் ஈடுபட்டும் உட்கட்சி ஜனநாயகத்திற்கு விளைவித்துள்ள காயத்தைக் கடுமையாகக் கண்டிக்க வேண்டிய நிலையில் தலைமைக் கழகம் உள்ளது என்பதைத் திட்டவட்டமாகக் கூற வேண்டியவனாக இருக்கிறேன்.

அவ்வாறு கட்டுப்பாடு மீறியவர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதைத் தவிர, தலைமைக் கழகத்துக்கு வேறு வழியில்லை என்பதையும் வேதனையுடன் தெரிவித்துக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

அத்தகைய நடவடிக்கைகள் கழகப் பொதுச் செயலாளர் அவர்களால் கழகத்தின் சட்டதிட்ட விதிமுறைகளின்படி மேற்கொள்ளப்படுவது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

தலைமைக் கழக செயலாளர்கள், தலைமை நிர்வாகக் குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழகச் சார்புடைய அணிகளின் அமைப்பாளர்கள், செயலாளர்கள், எவராயினும், அவர்கள் அமைப்புத் தேர்தல்களில் ஏதாவது ஒரு பொறுப்புக்குப் போட்டியிட்டால் அந்தப் பொறுப்புக்காக மட்டுமே தேர்தல் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாமே தவிர, மற்றபடி எல்லா அமைப்புகளின் தேர்தல் பிரச்சினைகளிலும் தலையிட்டு நிலைமையைச் சிக்கலாக்கிடக் கூடாது என ஏற்கெனவே பொதுச் செயலாளர் தெளிவுபடுத்தி அறிக்கை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையின் மையக்கருத்தும் நோக்கமும் சில இடங்களில் மீறப்பட்டிருப்பது கூட மிகவும் வருந்த வேண்டிய ஒன்றாகும்.

பொறுப்புகளுக்குப் போட்டியிடும் எவரும் என் பெயரையோ, பேராசிரியர் பெயரையோ, அல்லது கழக முன்னணியினர் யாராவது ஒருவரின் பெயரையோ பயன்படுத்தி - அவர்களது வாழ்த்துடன் தான் நிற்கிறேன் - அவர்களது ஆதரவுடன்தான் நிற்கிறேன் என்றும்; ஒருபடி மேலே போய்; அவர்தான் நிற்கச் சொன்னார் என்றும் கூறி வாக்காளர்களிடம் ஆதரவு திரட்டுவது என்பது இன்று நேற்றல்ல; கடந்த காலத்தில் கட்சி நடத்தியுள்ள எட்டு பொதுத் தேர்தல்களிலுமே வேட்பாளர்கள் கடைப்பிடித்து வரும் முறையாகும்.

போட்டியிடுபவர்கள் ஒரு அணியினர் எங்களிடம் வந்து; என்ன, நீங்களே அவரை நிற்கச் சொன்னதாக அவர் பிரச்சாரம்

செய்கிறாரே? என்று கூறும்போது - அவர் அப்படிப் பிரச்சாரம் செய்தால்; நீங்களும் அதே மாதிரி என்னையும் அவர்தான் நிற்கச் சொன்னார் என்று கூறி உங்கள் தரப்புக்கு ஆதரவு திரட்டுங்களேன் என்றுதான் அறிவுரை கூறி வருகிறோம்.

கழகத் தலைமை தங்களை ஆதரிக்கிறது என்று கூறிக் கொள்ள கடமையுணர்வும், கட்டுப்பாடு உணர்வும் கொண்ட கண்ணியமிக்கக் கழகக் கண்மணிகள் அனைவருக்கும் உரிமை உண்டு.

போட்டியிடும் ஒரு அணிக்கு எதிரான இன்னொரு அணி; பொதுவான நிலையில் இருக்கும் கழகத் தலைமையைத் தனது பக்கம் இருப்பதாகவோ; அல்லது தனக்கு எதிராக இருப்பதாகவோ எண்ணுவது பெருந்தவறு! அதை யாரேனும் நம்பினால் அது அதைவிட மிகப் பெருந் தவறு!

இன்னும் சில தந்திரம் கற்ற உடன்பிறப்புகள்; கழக முன்னணியில் உள்ள இவரைப் பற்றி அவரிடம் குறை கூறுவது - அவரைப் பற்றி இவரிடம் குறை கூறுவது - இருவரிடையே கலகமூட்டி; இடையில் புகுந்து வென்று விடுவது என்ற பாணியைத் தேர்தல் வெற்றிக்குப் பயன்படுத்துகிறார்கள் எனக் கேள்விப்படும்போது எனக்குத் தோன்றுவதெல்லாம் அந்த இருவரும் இந்த அவரும் அந்தத் தந்திரசாலிகளிடம் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதும், அதேபோல வாக்காளர்களும் விழிப்புடனிருக்க வேண்டும் என்பதும்தான்!

கட்சித் தேர்தலில் ஓரிரு இடங்களில் நடைபெற்றுள்ள விரும்பத் தகாத சம்பவங்களையும், சிலரது நடவடிக்கை போக்குகளையும் நான் இந்த அளவுக்குப் பெரிதுபடுத்தி முக்கியமான கடிதமாக எழுதியதற்குக் காரணமே தவறுகளை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டுமென்பதால்தான்! எள்முனையளவுப் பிளவுதான் என்றாலும் கூட அந்த உட்பகையால் கேடு விளையும் என்று வள்ளுவர் எச்சரித்திருப்பதை நினைவூட்டுவதற்காகத்தான்!

கருப்புத் துணியில் மையிருக்கும் குப்பியைக் கவிழ்த்தாலும் அந்தக் கறை தெரியப் போவதில்லை! ஆனால் தூய வெள்ளைத் துணியில் துளியளவு மை சிந்தினாலும் துணியின் மேன்மை கெடுமல்லவா?

இதனை மனத்திற்கொண்டு; அடுத்த கட்ட அமைப்புகளின் தேர்தல்களில் ஈடுபடுகிறவர்கள்தான் உண்மையான அண்ணாவின் தம்பிகளாக - என்னுயிரினு மேலான அன்பு உடன்பிறப்புகளாகத் திகழ முடியும்!

அரசின் உளவுத் துறைகள் கழகத்திற்குள் ஊடுருவிய கடந்த காலத்தையும் - மீண்டும் அந்த முயற்சியில் அத்துறைகள் இறங்கியிருப்பதையும் நான் விளக்கிக் கூறி அண்மையில் எழுதிய கடிதத்தை; உடன்பிறப்புகள் மறந்திருக்க மாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

எனவே வஞ்சகர்களின் சூதுவலையில் சிக்கிவிடாமல்; சிக்கியவர் எவராவது இருப்பின் அவர்களது சில்லறை விஷமங்களில் ஏமாந்து விடாமல்; அண்ணா வழியில் அயராது உழைப்போம்! அவர் ஏற்றிவைத்த விளக்காம் கழகத்தைக் காப்போம்!

அன்புடன்,

மு. க.

(28-04-1992)

1910. கொடிய சட்டம்! கோமாளிச் சட்டம்!

உடன்பிறப்பே,

பொதுச் சொத்துக்களுக்கு சேதம் உண்டாக்கினால் கட்சிகளிடம் நஷ்டஈடு வாங்குவதற்கான சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

தடா சட்டத்தை விடக் கொடுமையானது இந்தச் சட்டம் என்பதை உணர்ந்துள்ள எதிர்க் கட்சிகள் எவ்வளவோ எடுத்துக் கூறியும் ஆளுங்கட்சிக்குரிய பெரும்பான்மை பலத்துடனும், காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடனும் சட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது.

இனிமேல் ஒரு கட்சி அறவழியில் அமைதி வழியில் பொதுப் பிரச்சினைகளுக்காகப் போராட்டம் நடத்தினாலும் - அதில் ஆளுங்கட்சிக் குண்டர்கள் நுழைந்து வன்முறைக்கு வித்திடலாம் - கல் வீசலாம் - சோடா புட்டிகளால் தாக்கலாம்; அதனால் ஏற்படும் விளைவுகள் எதுவாயினும் அறப் போராட்டம் நடத்திய கட்சியே பொறுப்பு என்று இந்தச் சட்டத்தை வைத்துக் கொட்டித் தீர்க்கலாம் எனத் திட்டமிட்டுக் கொண்டுவரப்பட்டுள்ளது இச்சட்டம் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமே இல்லை.

இந்தச் சட்டம் பற்றி சிலாகித்துப் பேசிய சட்டத் துறை அமைச்சர்; தன்னை ஒரு அறநெறி சீலராகப் பாவித்துக்கொண்டு, அமைதி வழியில் அண்ணா என்ன - காந்தியா என்ன - புத்தர் என்ன - மகாவீரர் என்ன; அனைவரையும் மிஞ்சக் கூடியவர் அவரேதான் எனக் கருதிக் கொண்டு கடந்த காலத்து பேரணிகள், போராட்டங்கள் குறித்தெல்லாம் ஆரோகணம் அவரோகணங்கள் செய்துள்ளார்.

எவ்வளவு அடக்கமாகவும், அரசியல் பண்பாட்டுடனும் அவர் பேசக் கூடியவர் என்பதற்கு ஒரே எடுத்துக்காட்டு :- எம்.ஜி.ஆர்.

ஆணையிட்டால் கருணாநிதியின் தலையை வெட்டி அவர் காலடியில் வைப்பேன்! என்று முழங்கியவர்! அதனால் இவரை தலைவெட்டித் தம்பி என்று இவரது அண்ணன் மதியழகன் அவர்களே மேடையில் வர்ணித்த காலமும் உண்டு!

1972-ல் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் கட்சியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முயற்சித்து, அதற்காகக் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி மதுரை முத்து போன்ற சிலரை பொது மேடையில் தாக்கிப் பேசியதற்காக அன்றைய பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் அறிக்கையின் அடிப்படையில் வெளியேற்றப்பட்ட போது எம்.ஜி.ஆர். கட்சிக்குத் தளபதியாக இருந்த இவரது மேற்பார்வையிலும் தூண்டுதலிலும் உடைக்கப்பட்ட, எரிக்கப்பட்ட லாரிகள், பஸ்கள் எவ்வளவு என்ற கணக்கை இப்போது மறந்து விட்டார் போலும்!

அண்ணா போராட்டம் நடத்தினால் ஐந்து பேருக்கு மேல் அதில் ஈடுபடுத்த மாட்டார் என்று புதிய வரலாறு எழுதியிருக்கிறார் சட்டப் பேரவையில் இந்த அமைச்சர்!

அண்ணா காலத்தில்தான் நேருவுக்குக் கறுப்பு கொடி காட்டப்பட்டது என்பதையும் குதிரை படைகொண்டு அன்றிருந்த அரசு கருப்புக் கொடி காட்டிய ஆயிரக் கணக்கான கழகத்தினரை மிதித்துத் துவைத்திடச் செய்து, சிலரைக் கொன்றனர் என்பதையும்; அமைச்சர், தனது வாதத்திற்காக வசதியாக மறந்து விட்டார் போலும்!

1967-ல் அண்ணா முதல்வரானபோது; அந்த ஆகஸ்டு 15 சுதந்திரதின விழா ஊர்வலத்தை நடத்திய காங்கிரசார் இந்த அமைச்சரின் தென்னகம் பத்திரிகை அலுவலகத்தையும், முரசொலி அலுவலகத்தையும் தாக்கிச் சேதப்படுத்தியதை மறந்திருக்க மாட்டார் - வாதத்திற்காக மறைத்து விட்டிருக்கிறார்!

அண்ணா ஆட்சியின் போது மாணவர்கள் நடத்திய இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ரயில் பெட்டிகள் கொளுத்தப்பட்டபோது; அந்த மாணவர்கள் மீது ஏன் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவில்லை எனக் காங்கிரஸ் தரப்பில் கேட்க; அதற்கு அண்ணா சொன்ன பதில்; ரயில் பெட்டிகள் போனால் வேறு செய்து கொள்ளலாம் ஒரு மாணவனின் உயிர் போனால் மீட்க முடியுமா? என்பதுதான்!

இப்படிப் பதில் சொல்லப்பட்டதே தவிர அந்த மாணவர் அமைப்பைப் பிடித்து; சொத்து சேதமானதற்கு நஷ்டஈடு கொடு எனக் கேட்கவில்லை!

இந்திரா காந்தியை ஜனதா ஆட்சியில் கைது செய்தபோது எரிக்கப்பட்ட பஸ்கள் தமிழ்நாட்டில் மட்டும் எத்தனை? அந்த பஸ்களில் பயணம் செய்தவர்கள் கூட கருகிச் செத்தார்களே; அப்போது தமிழ்நாட்டில் நடைபெற்ற ஆட்சி எம்.ஜி.ஆர். ஆட்சியல்லவா?

அதையெல்லாம் மறந்துவிட்டு; காங்கிரஸ் கட்சியினரும் இந்தச் சட்டத்திற்கு கை தூக்கி இருக்கிறார்கள் என்பதுதான் ஆச்சர்யம்!

அமைச்சர் மற்றொரு, உண்மைக்கு மாறான தகவலையும் பேரவையில் வெளியிட்டிருக்கிறார்.

1980-ல் - ஜனாதிபதி ஆட்சியைக் கண்டித்து, கவர்னர் மாளிகைக்கு புரட்சித் தலைவர் ஊர்வலம் நடத்தினார். அதில் சிறு அசம்பாவிதம்கூட நடைபெறவில்லை!.

பொய்யைச் சொன்னாலும் மிக பொருத்தமாகவே சொல்லியிருக்கிறார் அமைச்சர்!

ஏற்கெனவே பேரவையில் இதே அமைச்சர் பி.பி.சி.யில் பிரபாகரன் கொடுத்த பேட்டி குறித்து ஒரு தவறான தகவலைச் சொல்லியிருக்கிறார்; அது உரிமைப் பிரச்சினைக்குரியது - என்பதை தளபதி வீரமணி அவர்கள் ஒரு அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

மற்றொரு அமைச்சர் அவையில் கூறியிருப்பது மற்றொரு தவறான தகவல்!

1980-ல் ஜனாதிபதி ஆட்சியைக் கண்டித்து எம்.ஜி.ஆர். தலைமையில் நடைபெற்ற ஊர்வலத்தில் ஒரு அசம்பாவிதமும் இல்லையாம்!

அந்த ஊர்வலத்தின்போதுதான் அண்ணாசாலையில் பெரும் அமளி! ஊர்வலத்தினர் அங்கிருக்கும் காவல்நிலையத்துக்குள் புகுந்து துப்பாக்கிகளையெல்லாம் தூக்கிக்கொண்டனர் -

முன்னூறு பேருக்கு மேல் கைது செய்யப்பட்டனர். 1980-ல் மீண்டும் ஆட்சிக்கு வந்த எம்.ஜி.ஆர். அவர்கள், பேரவையில் வைத்த போலீஸ் மானியக் கோரிக்கையிலேயே அந்த கலவரம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த முன்னூறு பேர் மீதும் இருந்த வழக்கை எம்.ஜி.ஆர்.தான் திரும்பப் பெற்று அவர்களை விடுவித்தார்.

அவ்வளவு ஏன்; எம்.ஜி.ஆர். மறைந்த நாளில் சென்னையில் எத்தனை கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் பாழ்படுத்தப்பட்டன. எத்தனை கடைகள் சூறையாடப்பட்டன. எத்தனை பஸ்கள் சேதமுற்றன.

உடன்பிறப்பே, எந்தக் கட்சியானாலும் - எந்தப் போராட்டத்தினாலும் - பொதுச் சொத்து சேதமுறுவதை; பொறுப்புள்ள அரசியல் தலைவர்கள் எவரும் விரும்பமாட்டார்கள்!

ஆனால் அதற்காக எதிர்க்கட்சிகளைப் பழிவாங்கவேண்டுமென்று திட்டமிட்ட தீயநோக்கத்துடன் கொண்டு வரப்பட்டுள்ள இந்தச் சட்டத்தை பொறுப்புள்ள அரசியல் தலைவர்கள் எவரும் ஏற்கமாட்டார்கள்!

அதனால் இது; கொடிய சட்டம் மட்டுமல்ல; கோமாளிச் சட்டமும்கூட!

அன்புடன்,

மு. க.

(29-04-1992)

1911. இரட்டைக் குழல் துப்பாக்கி - இதுதானோ?

உடன்பிறப்பே,

ஜெயலலிதா அரசு பத்திரிகைகள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள அடக்குமுறையை எதிர்த்து இந்திய நாட்டளவிலும் - தமிழ்நாட்டிலும் பத்திரிகையாளர்கள் கண்டனப் போராட்டத்தில் குதித்துள்ளார்கள்.

கடந்த 28-ஆம் நாள் தமிழக சட்டப் பேரவைக் கூட்டத்தைப் புறக்கணித்த ஏடுகளின் பட்டியலைப் படித்துப் பார்த்தேன்.

இந்து
இந்தியன் எக்ஸ்பிரஸ்
பி.டி.ஐ. செய்தி நிறுவனம்
யு.என்.ஐ. செய்தி நிறுவனம்
இந்தியா டுடே
பிசினஸ் இந்தியா
தினமணி
தினகரன்
தீக்கதிர்
தினப்புரட்சி
டெக்கான் ஹெரால்டு
மாலைமுரசு
மாலைக்கதிர்
ஈவினிங் மெட்ராஸ்
அப்சர்வர்
டெலிகிராப்
சண்டே மெயில்

போன்ற முப்பதுக்கு மேற்பட்ட பத்திரிகைகள், அன்றையதினம் தங்களின் கண்டனத்தைத் தெரிவிக்கும்

வகையில் சட்டப்பேரவைக்குள் சென்று செய்தி சேகரிக்காமல் - புறக்கணிப்பு செய்ததோடு; கருப்புச் சின்னங்களும் அணிந்து கொண்டனர் அந்தப் பத்திரிகைகளின் நிருபர்கள்!

புறக்கணித்த பத்திரிகைகளின் வரிசையில் முரசொலி இடம் பெறவில்லையே; ஏன்? என்று நீ கேட்கமாட்டாய்!

முரசொலியின் நிருபரும் - தினகரன் சார்புடைய கோவை மாலை முரசு நிருபரும் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டு, பத்து நாட்கள் அவர்கள் அவைக்குள்ளே நுழையக் கூடாது என்று ஏற்கெனவே சபாநாயகர் ஆணையிட்டிருப்பதுதான் உனக்குத் தெரியுமே!

முரசொலி மீதுள்ள குற்றச்சாட்டு என்ன? சபாநாயகர்; சட்டசபைக் குறிப்பில் இடம் பெறலாகாது என அறிவித்த சில வார்த்தைகளை முரசொலியில் வெளியிட்டு விட்டார்கள் என்பதுதான்!

உரிமைக் குழுவில் சாட்சியமளித்த முரசொலி ஆசிரியர் தம்பி செல்வம்; அவையில் கூச்சலும் குழப்பமுமாக இருந்ததால் சபாநாயகர் சொன்னது முரசொலி நிருபர் காதில் சரியாக விழாமல்; அப்படி நேர்ந்து விட்டது என்றும் இனி அப்படி எதுவும் நடைபெறாமல் பார்த்துக் கொள்வதாகவும் கூறியுள்ளார்.

மற்றொரு குற்றச்சாட்டு; தம்பி பரிதி இளம்வழுதி தாக்கப்பட்டது குறித்தும் வேட்டி அவிழ்ப்பு நிகழ்ச்சி குறித்தும் முரசொலி வெளியிட்டது உண்மையல்ல என்பதாகும்!

அந்தச் செய்தி முரசொலியில் வெளியான அதே நாளில் சென்னையில் வெளிவந்த பல ஏடுகளில் அதே செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த ஏடுகள் எவற்றின் மீதும் உரிமைப் பிரச்சினை எழுப்பப்படாமல் முரசொலி மீது மட்டும் உரிமைப் பிரச்சினை! சட்டசபையில் கூண்டு! பிடிவாரண்டு!

அதேபோல் அடுத்து ஒரு சமயம் அதே பரிதி இளம் வழுதி, அவையில் தாக்கப்பட்டார் எனக் கோவை மாலைமுரசு செய்தி வெளியிட்டதாகக் குற்றம் சாட்டி; அதற்கும் உரிமைப் பிரச்சினை! சட்டசபையில் கூண்டு! பிடிவாரண்டு!

சட்டசபையைப் பற்றியே விமர்சனம் செய்தது எனக் குற்றம் சாட்டப்பட்டு இல்லஸ்ட்ரேடட் வீக்லி என்ற ஆங்கில வார இதழ்

ஆசிரியர்க்கும் நிருபருக்கும் உரிமைப் பிரச்சினை - கூண்டு - பிடிவாரண்டு!

உரிமைக் குழுவில் முரசொலி செல்வம் விசாரிக்கப்பட்டபோது; அவர் திரும்பத் திரும்ப சொன்னது பின்வருமாறு :-

> எந்த நோக்கத்தோடும் - உள்நோக்கத்தோடும் இந்த செய்தியை (முரசொலி) வெளியிடவில்லை என்பதை நான் மீண்டும் உறுதியாகச் சொல்கிறேன். இனிமேல் இது போன்ற தவறுகள் - தவறு என்று கருதினால், அவ்வாறு நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன் என்று உறுதி கூறுகிறேன். நீங்கள் விரும்பினால் இந்த விளக்கத்தை முரசொலியில் பிரசுரிக்கவும் தயாராக இருக்கிறேன்.

இப்படி செல்வம் சொன்னது மட்டுமல்ல; அடுத்து உரிமைக் குழுவுக்கு எழுதிய கடிதத்தில் கூட;

> நான் ஏற்கெனவே உரிமைக் குழுவுக்கு நேரடியாக வந்து தந்துள்ள விளக்கத்தை ஏற்று இத்துடன் இப்பிரச்சினையை விட்டு விடுவீர்களேயானால் மிகவும் நன்றியுடையவர்களாக இருப்போம்
>
> என்று வேண்டுகோள்தான் விடுத்திருக்கிறார்.

இவைகள் நானாக எழுதுவதல்ல உடன்பிறப்பே; இவைகள் அவை உரிமைக் குழுவின் சார்பாக அச்சியற்றி பேரவையில் ஏப்ரல் 9 - ஆம் நாள் வைக்கப்பட்ட அறிக்கையிலிருந்து எடுத்துக் காட்டப்படும் வாசகங்களாகும்!

ஏறத்தாழ இதேபோன்றுதான் கோவை மாலை முரசு, வீக்லி இதழ் ஆகியவற்றின் விளக்கங்களும் உரிமைக் குழுவுக்கு தரப்பட்டுள்ளன.

பத்திரிகைகள் மீது பாய்ச்சல் நடத்தும் இந்த ஆட்சியாளர்கள் குறித்து இன்றைய தினமணி (ஏப். 30) இதழ் கூட தலையங்கம் தீட்டும்போது முரசொலி, கோவை மாலைமுரசு ஏடுகள் குறித்து என்ன எழுதியுள்ளது தெரியுமா?

> கோவை மாலைமுரசு, முரசொலி - ஆகிய இரு தமிழக தினசரிப் பத்திரிகைகளின் ஆசிரியர்களைக் கைது செய்யச் சட்டப் பேரவைத் தலைவர் ஆணை பிறப்பித்திருப்பதின் விளைவாகப் பத்திரிகைத்

துறைக்கும் சட்டப்பேரவைக்குமிடையே மோதல் மூண்டிருக்கிறது. பத்திரிகைத் துறையினர் சிலர் உள்நோக்கத்துடன் வேண்டுமென்றே திட்டமிட்டுத் தமிழ்நாடு சட்டசபைக்குக் களங்கம் ஏற்படும் வகையில் செய்திகளை வெளியிட்டால், பேரவையின் பெருமையை பேணிக் காப்பதற்காக பேரவைத் தலைவர் இத்தகைய தீவிரமான நடவடிக்கைகள் எடுத்தால் எவரும் ஆட்சேபிக்க இயலாது. ஆனால் இப்போதைய பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள பத்திரிகைகள் அவ்வாறு நடந்து கொண்டதாக இதுவரையில் நிரூபிக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தினமணி இவ்வாறு எழுதியுள்ளது - எழுதியது மட்டுமல்ல; சட்டசபை புறக்கணிப்புப் போராட்டத்தில் தினமணியும் கலந்து கொண்டுள்ளது.

முரசொலி - திராவிட இயக்க ஏடாயிற்றே என்றோ - கோவை மாலை முரசு - தினகரன் சார்புடைதாயிற்றே என்றோ எண்ணிடாமல்; பத்திரிகை சுதந்திரம் காக்கும் பணியில் தினமணி உள்ளிட்ட பல ஏடுகள், தங்களின் கண்டனத்தை எழுத்திலும், பேச்சிலும் மட்டுமல்லாமல் செயலிலும் காட்டியுள்ளன!

உடன்பிறப்பே; இதில் என் உள்ளத்தைக் குடையும் வேதனை ஒன்றுண்டு - சொன்னால்தான் மனம் ஆறும்! வாய்விட்டு அழுதால்தான் துக்கம் தீரும் என்பார்களே அதுபோல! அதனால் சொல்லாமல் இருக்க முடியவில்லை!

தினத்தந்தி, தினமலர் போன்ற சில ஏடுகள்; இந்தப் புறக்கணிப்பு போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் சட்டசபைக்குச் சென்று செய்திகள் வெளியிட்டதிலோ; அரசின் பிரச்சார சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி நிருபர்கள் அவைக்குச் சென்று செய்தி சேகரித்து வெளியிட்டதிலோ எனக்கு வருத்தமிருப்பினும் அப்படியா? என்று ஆச்சரியமேற் படவில்லை!

ஆனால் விடுதலை ஏட்டின் செய்தியாளர் அன்றையதினம் இந்தப் புறக்கணிப்பு நடவடிக்கையில் கலந்து கொள்ளாமல் - அவைக்குச் சென்றதும்; அது குறித்து பேரவையிலேயே அவை முனைவர் நாவலர் அவர்கள் விடுதலை இதழுக்கும் சேர்த்து நன்றி தெரிவித்திருப்பதும்தான் வேதனையாகவும் வியப்பாகவும் எனக்கு இருக்கிறது!

திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்றுக்கொன்று வேறுபட்டு மோதிக் கொண்டிருந்த காலகட்டத்திலே கூட - அறிஞர் அண்ணா அவர்கள் இரு இயக்கமும் இரட்டைக் குழல் துப்பாக்கி என்றுதான் குறிப்பிட்டார்!

இல்லஸ்ட்ரேடட் வீக்லிக்கு ஏற்பட்ட இன்னலுக்காக விடுதலை இதழ் அதனைப் பொருட்படுத்தாமல் கூட இருந்திருக்கலாம்!

கோவை மாலைமுரசுடன் விடுதலைக்குச் சில ஆண்டுகாலத் தொடர்பேதான் இருந்திருக்கலாம்!

ஆனால் முரசொலி? ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் - அடிப்படைக் கொள்கையில் விடுதலை இதழுக்கு வெகு தொலைவில் உள்ள ஏடல்லவே!

அந்த ஏடு முரசொலிக்கு வந்துள்ள சோதனையில் விலகி நிற்பது என்பது நினைத்துப் பார்க்கக் கூடிய ஒன்றல்லவே!

* முரசொலி நிருபருக்கு பேரவையில் அனுமதி இல்லை!

* முரசொலி செல்வத்துக்குச் சட்டசபையில் கூண்டு!

* அதுமட்டுமா? செல்வத்தைக் கைது செய்ய பிடிவாரண்டு!

பத்திரிகைகள் ஓரினம் என்ற இன உணர்வோடு இந்து கூட - எக்ஸ்பிரஸ் கூட - தினமணி கூட - யு.என்.ஐ., பி.டி.ஐ. கூட - பத்திரிகை சுதந்திரம் காத்திடும் இந்தப் பொதுப் பிரச்சினையில்; இணைந்து குரல் கொடுக்கின்றன!

விடுதலையோ - ஒரு வேண்டுகோளுடன் தனது கடமையை முடித்து விட்டு; புறக்கணிப்புப் போராட்டத்தை புறக்கணித்தே விட்டதே - இரட்டைக் குழல் துப்பாக்கி என்பதற்குப் பொருள் இல்லாமல் போய்விட்டதே!

உடன்பிறப்பே; என் மனச் சுமையை இறக்கி வைக்க வேறு வழியில்லை - அதனால்தான் இந்தக் கடிதம் தேவைப்பட்டது.

அன்புடன்,

மு. க.

(01-05-1992)

1912. ஊழலோ ஊழல்! ஸ்பிக் ஊழல்!!

உடன்பிறப்பே,

கடந்த பத்து மாத காலத்தில் அ.தி.மு.க. ஆட்சி; ஊழலையே கருவுற்று - ஊழலையே அடுக்கடுக்காகப் பிரசவித்துக் கொண்டிருக்கிறது என்பதற்கு எத்தனையோ சான்றுகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இது; குந்திதேவி பிள்ளை பெற்றாள் என்றதும் அதைக் கேட்டு காந்தாரி அம்மிக் குழவியை எடுத்து அடிவயிற்றிலே குத்திக்கொண்டு பெருகிய உதிரத்தை ஒரே நேரத்தில் நூறு பாத்திரங்களில் பிடித்து கௌரவர்கள் என்ற நூறு பேரை பிரசவித்தது போன்ற ஒரே நேர ஊழல் அல்ல!

கந்த புராணக் கதையில் கூறப்படுமே; சூரபத்மனை வெல்ல முடியாமல் சுப்பிரமணியர் திகைத்த போது சூரபத்மனின் தாய் தொடர்ந்து ஆயிரக் கணக்கில் அரக்கர்களைப் பிரசவித்துக் கொண்டேயிருந்தாள் என்று - அந்தப் பொய்க் கதையை உண்மையாக்கும் வண்ணம் இந்த ஆட்சியில் அனுதினமும் ஒவ்வொரு அணுப்பொழுதும் ஊழல்கள் பிரசவிக்கப்படுகின்றன.

அரசாங்க நிலத்தை அமைச்சர்கள் வாங்கக் கூடாது என்ற அரசு நெறிமுறை ஆணையையே மீறி அரசு நிலத்தை டான்சியிடமிருந்து முதலமைச்சர் ஜெயலலிதாவே வாங்கியிருப்பது பிரசவிக்கப்பட்ட ஊழல்களிலேயே மிகவும் மூத்த ஊழல்!

அதன் விபரமென்ன? அந்த நிலப்பரப்பு 54 ஏக்கர்! ஏக்கர் ஒன்றுக்கு (Guide Lines) விலை நிர்ணய வழி காட்டுதல் ஏழு லட்ச ரூபாய்! அதன்படி மூன்று கோடியே எழுபத்தி எட்டு லட்ச ரூபாய்க்கு டெண்டர் விடுதலுக்காக ஆரம்பத் தொகை நிர்ணயிக்கப்பட்டது.

இதற்கும் குறைவாக யார் டெண்டர் கேட்டாலும் - மறு டெண்டர்தான் விடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்படி எதுவும் செய்யாமலே; ஆறு கோடி ரூபாய் மதிப்புள்ள அந்த

நிலத்தை - ஆரம்ப டெண்டர் தொகையான மூன்று கோடியே எழுபத்தி எட்டு லட்ச ரூபாய்க்கும் குறைவாக; ஒரு கோடியே எண்பது லட்ச ரூபாய் அளவுக்கு ஜெயலலிதா வாங்கிக்கொண்டார்! அதாவது முதலமைச்சர் வாங்கிக்கொண்டார்! ஆம்; அரசு ஆணையை மீறி - அமைச்சர்களின் (Code of Conduct) நெறிமுறை விதிகளைக் காலில் போட்டு மிதித்துவிட்டு வாங்கிக் கொண்டார்!

இதோ ஊழல் பிரசவப் பட்டியலில் இன்னொரு குரூரமான பிள்ளை!

ஏற்கெனவே தி.மு.க. ஆட்சியில் ஸ்பிக் உரத் தொழிற்சாலையில் தந்தை தலைவராகவும் - மகன்; எம்.டி. ஆகவும் இருந்ததை மாற்றி அரசின் கண்காணிப்பு வலுவாக இருக்க வேண்டுமென்பதற்காக அரசுத் தலைமைச் செயலாளர் யாரோ அவர் அந்தத் தொழிற்சாலை நிர்வாகக் குழுவின் தலைவராக இருக்குமாறு நடைமுறைப் படுத்தப்பட்டது.

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும் - அந்த ஏற்பாட்டை மாற்றி தலைமைச் செயலாளரை தலைமைப் பதவியிலிருந்து திரும்பப் பெற்றுக் கொண்டு; அதிபர் குடும்பத்துக்கே மீண்டும் தலைவர் பதவியும், எம்.டி. பதவியும் கொடுக்கப்பட்டது.

இதுவரையில் அந்தப் பெரிய தொழிற்சாலையில் - அரசின் பங்கு 26 சதவீதமாக இருந்தது! அதிபரின் பங்கு 13 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தது!

ஆனால் இப்போது 4.5.92 இந்து ஏட்டில் வந்துள்ள செய்தியின் படி - புதிய பங்குகளை டிட்கோ விட்டுக் கொடுத்தால் ஸ்பிக் நிறுவனத்தில் எம்.ஏ. சிதம்பரம் குழுவின் பங்குத் தொகை 27 சதவீதமாக உயரும். டிட்கோவின் பங்கு 16 சதவீதமாகக் குறையும்!

இதில் டிட்கோ என்பது அரசு நிறுவனமாகும்! இந்த டிட்கோ நிறுவனம் தனக்கிருந்த 26 சதவீதத்திலிருந்து தனது பங்கை 16 சதவீதமாகக் குறைத்துக் கொண்டு, அதிபரின் பங்கு 13 சதவீதத்திலிருந்து 27 சதவீதமாக அதிகரிக்க வழி விட்டிருக்கிறது.

இதைத்தான் இந்து ஏடு; புதிய பங்குகளை டிட்கோ விட்டுக் கொடுத்ததால் இந்த மாற்றம் என்று குறிப்பிடுகிறது.

TAC-என்கிற கம்பெயினில் டிட்கோவிற்குச் சொந்தமான பங்குகளையும் அந்த முதலாளி கம்பெனிக்கே தமிழக அரசு விற்க முடிவெடுத்திருக்கிறது!

- அதுமட்டுமல்ல; அந்தப் பணத்தைக் கூட அந்த முதலாளிக் கம்பெனி உடனடியாகத் தரத் தேவையில்லையாம்!

- தவணை முறையில் கொடுக்கலாமாம்!

- இதையும் இந்து ஏடு வெளியிட்டிருக்கிறது!

மேலும் ஒரு தகவல் இப்போது வெளியாகியிருக்கிறது! அது என்ன?

அரசு நிறுவனமான டிட்கோவுக்கு (Share) பங்குகளை வாங்கவும், விற்கவும் உரிமையுண்டு!

ஆனால் இப்போது டிட்கோ வேண்டுமென்றே தனது பிடியை விட்டுக் கொடுத்து தனியார் கொழுப்பதற்காக M.A.C. குழுவுக்கு தனது பங்குகளையும் T.A.C. நிறுவன பங்குகளையும் விற்றுள்ளதாக வந்துள்ள தகவல் உண்மையா? அல்லவா?

பங்குகளை விற்பது என முடிவு செய்தபிறகு; குறிப்பிட்ட தனியாருக்கு வெளி மார்க்கெட்டில் தற்போது நிலவுகிற விலைக்கு விற்றிருந்தால் நாற்பது கோடி ரூபாய்க்கு விற்றிருக்கலாம் -

ஆனால் அப்படி விற்காமல் M.A. சிதம்பரம் குழுவுக்கே இருபது கோடி ரூபாய்க்கு விற்றுள்ளது உண்மையா? அல்லவா?

இந்த 20 கோடி ரூபாய் இழப்பு - அரசு நிறுவனத்துக்கு!

இதில் இடையிலே யாருடைய பெட்டிக்கோ கறுப்புப் பணம் எத்தனை கோடி?

இப்படி அரசு நிறுவனப் பங்குகளை விற்க வேண்டிய அவசியம் என்ன? அதுவும் 20 கோடி இழப்போடு?

ஆரோமேடிக் தொழிற்சாலைக்கான அனுமதி கிடைத்திருக்கிறது என்றால்; அதுவும் ஸ்பிக்கும் பங்குதாராராக உள்ள கூட்டு நிறுவனத்திற்குத்தான்! ஸ்பிக்கில் தமிழக அரசும் அந்தக் கூட்டுத் துறையில் இடம் பெற்றிருப்பதால்தான் ஆரோமேடிக் தொழிற்சாலை அனுமதியே முன்னுரிமையுடன் கிடைத்துள்ளது.

இந்த நிலையில் ஸ்பிக் நிறுவனத்துக்கு ஆரோமேடிக் மூலமும் பெருக இருக்கின்ற ஆதாயத்தில் தமிழக அரசுத்

துறையும் பயன் பெறக் கூடிய வாய்ப்பு பிரகாசமாக இருக்கும் போது ஸ்பிக் தொழிற்சாலையில் தனக்குள்ள கண்காணிப்புப் பிடியையும், நிதியாதாரப் பிடியையும் அரசாங்கம் மிக வேகமாகத் தளர்த்திக் கொண்டு இருபது கோடி ரூபாய் இழப்பையும் வலிந்து ஏற்றுக்கொள்கிறதென்றால்; இதை எப்படி சகித்துக்கொள்ள முடியும்? இப்போது இழக்கும் 20 கோடி மட்டுமல்ல; வருங்காலத்தில் ஆதாயமாகக் கிடைக்கும் பல கோடி ரூபாய்களையும் அரசு இழக்கிறது!

இதனைத் தவிர்க்க நீதிமன்றத்தை நாடுவதா? மக்கள் மன்றத்தை நாடுவதா?

அல்லது இரண்டு முறைகளையும் கடைப்பிடிப்பதா? விரைவில் பதில் கிடைக்கும்.

அன்புடன்,

மு. க.

(08-05-1992)

1913. தீர்மானிப்பது யார்? அதுதான் தெரியவில்லை!

உடன்பிறப்பே,

உதகையில் நடைபெற்ற விழா ஒன்றில் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா பேசியிருக்கிறார். தினகரனில் அது முழுமையாக வெளி வந்துள்ளது. அவரது பேச்சில் நீதிக்குத் தலைவணங்குகிறோம் என்றும்; பத்திரிகைகளைப் பழிவாங்கவில்லை என்றும் அவர் கூறியிருப்பது எல்லோரும் நம்பித்தீர வேண்டிய விஷயங்கள்! என்ன சிரிக்கிறாய்?

உச்சநீதிமன்றம் தடை ஆணை பிறப்பித்தாலும் தனது பிடிவாரண்டு உத்திரவு அப்படியே இருக்கிறது என்று சொன்னவர்; அந்த உத்திரவை அமல்படுத்தாமல் இருப்பதிலிருந்தே அவர் நீதிக்குத் தலைவணங்கத் தொடங்கி விட்டார் என்பது புரியவில்லையா?

> பிரகாசம், ஓமந்தூரார், குமாரசாமி ராஜா, ராஜாஜி, காமராசர், அண்ணா, இடையில் ஒருவர், பிறகு எம்.ஜி.ஆர். ஆகியோர் முதல்வராக இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இல்லாத சிறப்பு முதல்வர் ஜெயலலிதாவுக்கு உண்டு.
>
> என்று சேடப்பட்டி அந்த விழாவில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆம்; அவர்கள் யாருமே (இடையிலே ஒருவர் உட்பட) அவர்களது ஆட்சியில் பத்திரிகையாளர்களுக்குச் சட்டசபையில் கூண்டு தயாரித்து வைத்து அதில் அவர்கள் நிறுத்தப்படுவதற்குப் பிடிவாரண்டு அனுப்பியது இல்லை அல்லவா; அதனால் முத்தையாவின் வாதப்படி; கடந்த கால முதல்வர்களுக்கெல்லாம் இல்லாத சிறப்பு ஜெயலலிதாவுக்கு உண்டு என்பது உண்மை தானே!

அதுமட்டுமா? பிரகாசம் காரு முதல் ஜெயலலிதாவுக்கு முன்பிருந்த எந்த முதலமைச்சருக்காவது; சபாநாயகர், சபையிலேயே காலில் விழுந்து வணங்கும் சிறப்பு கிடைத்ததுண்டா?

எனவே அந்த முதல்வர்களையெல்லாம் விட சிறப்பு வாய்ந்தவர் ஜெயலலிதா என்று ஊட்டியில் சபாநாயகர் முத்தையா முழங்கியுள்ளதும் ஒரு வகையில் நூற்றுக்கு நூறு சரிதானே!

> சபையில் செய்திக் குறிப்பு எடுக்க ஐம்பத்தாறு பேருக்கு அனுமதி அளித்துள்ளோம். அதில் மூன்று பத்திரிகைகள் மீது மட்டுமே நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இதுவும் அவரது உதகை உரைதான்!

ரயில் பெட்டியில் ஐம்பது குழந்தைகள் இருந்தன. அதில் மூணு குழந்தைகளை மட்டுமே தூக்கி ஆற்றில் வீசினேன் என்று ஒருவர் நீதிபதியிடம் வாக்குமூலம் கொடுத்ததாக; எப்போதோ ஒரு வழக்கு பற்றிய செய்தி படித்ததாக எனக்கு நினைவு!

அது போகட்டும்; அவர் இன்னொன்றும் சொல்லியிருக்கிறார் அந்த விழாவில்!

> பிடிவாரண்டை எதிர்த்து மூன்று பத்திரிகையாளர்கள் கோர்ட்டுக்குப் போனார்கள். சுப்ரீம் கோர்ட்டில் ஒருவரின் மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. எனவே அவர் போலீசில் சிக்கினார். அவரை என்முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள். உடனே அடுத்த கூட்டத் தொடரில் ஆஜரானால் போதும் என்று பெருந்தன்மையுடன் அனுப்பி வைத்தேன்.

ஆமாம்; உடன்பிறப்பே - பெருந்தன்மையுடன் அனுப்பி வைத்தாராம் - சட்டசபை நடக்காத நேரத்தில் வேறு என்னதான் செய்வாராம்? சட்டசபை அலுவலக அதிகாரிகளாவது விளக்கமளித்தால் நமக்கும் விஷயம் தெளிவாகுமல்லவா?

முக்கியமான ஒன்றை கவனித்தாயா? **சுப்ரீம் கோர்ட்டில் ஒருவரின் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.** அதனால் அவர் போலீசில் சிக்கினார் என்று முத்தையா கூறியுள்ளார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? தள்ளுபடி செய்யப்படாமல் பிடிவாரண்டுக்கு தடை ஆணை விதித்து சுப்ரீம் கோர்ட் வழங்கிய உத்திரவை மீறி; மற்ற இரண்டு பத்திரிகையாளர்களையும் போலீசாரால் சிக்கவைக்க முடியவில்லை என்ற உண்மைதான் உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவாகத் தெரிகிறது!

உதகையில் அவரது பேச்சிலேயே மிக முக்கியமான கட்டம்; இப்போது வரப்போதுவதுதான்!

சம்பவ நாளில் சட்டசபைக் கூட்டம் நடந்தபோது ஒரு குறிப்பிட்ட கட்சியின் உறுப்பினர் பேசும்போது, ராஜீவ்காந்தி கொலைக்கு காங்கிரஸ்காரர்களே காரணம் என்று குற்றம் சாட்டினார். அவரது பேச்சை அவைக் குறிப்பில் இருந்து நீக்கினேன். ஆனால் நீக்கப்பட்ட அந்தக் குறிப்பு அடுத்த நாள் ஒரு பத்திரிகையில் வெளியாகி இருந்தது. அதனால்தான் அந்தப் பத்திரிகை மீது நடவடிக்கை எடுத்தோம்.

அண்ணாவுக்கும் எம்.ஜி.ஆருக்கும் இடையில் முதல்வராக இருந்தார் என்று என் பெயரைக் குறிப்பிடுவதே தனக்குப் பெருமையில்லை எனக் கருதும் சபாநாயகர் முத்தையா; எந்தப் பேச்சு அவைக் குறிப்பிலே இடம் பெறக் கூடாது என்று அவையில் உத்திரவிட்டாரோ - அந்தப் பேச்சு அவர் உத்திரவை மீறி ஒரு பத்திரிகையில் வெளிவந்தது என்பதற்காக நடவடிக்கை எடுத்ததாகச் சொல்கிறாரோ; அந்தப் பேச்சு என்ன என்பதை அவரே உதகைப் பொதுக்கூட்டத்தில் வெளியிட்டு விட்டாரே!

ராஜீவ் காந்தி கொலைக்குக்
காங்கிரஸ்காரர்களே காரணம்!

என்று ஒரு உறுப்பினர் பேசினார் - அந்த உறுப்பினர் பேசியதற்கு காரணம்; அவருக்கு முதலில் பேசிய உறுப்பினர், ராஜீவ் கொலைக்கு தி.மு.க. மீது குற்றம் சாட்டினார் - அதற்கு பதில் அளித்த உறுப்பினர் காங்கிரஸ் மீது குற்றம் சாட்டினார்!

ஆனால் சபாநாயகர் முத்தையா; எந்த வாசகம் அவைக்குறிப்பிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்றும் அது பத்திரிகைகளில் வந்து மக்கள் கவனத்திற்குப் போகக்கூடாது என்றும் உத்திரவிட்டாரோ; அந்த உத்தரவுக்கு அவரே மதிப்பளிக்காமல் - இதோ உதகை விழாவில் அந்த வாசகத்தை வெளியிட்டு விட்டாரே; இது உரிமை மீறலா அல்லவா என்பதை யார் தீர்மானிப்பது? அதுதான் தெரியவில்லை!

அன்புடன்,

மு. க.

(19-05-1992)

1914. உடன்பிறப்பே, என் உயிரே! வருக! வருக!

உடன்பிறப்பே,

மாவட்டக் கழகச் செயலாளர்கள் முப்பது பேரும், ஒன்றியக் கழகம் மற்றும் பகுதிக் கழகச் செயலாளர்கள் நானூற்றி ஐந்து பேரும், நகரக் கழகச் செயலாளர்கள் நூற்றிப் பன்னிரெண்டு பேரும் பொதுக் குழு உறுப்பினர்கள் இருநூற்றி முப்பது பேரும், செயற்குழு உறுப்பினர்கள் தொண்ணூரு பேரும் கொண்ட; 867 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தலைமைக் கழகத்தின் புதிய பொதுக்குழு ஜூன் திங்கள் இரண்டாம் நாள் காலையில் சென்னை அண்ணாசாலையில் உள்ள அண்ணா அறிவாலயத்தில் கூடுகிறது.

புதிய பொலிவுடன் வலிவுடன் புதிய ஊக்கத்துடன் உற்சாகத்துடன் புதிய பொதுக்குழுவுக்குத் தேர்வு செய்யப்பட்டு புறநானூற்றுப் பாசறையாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையகமான நமது ஆருயிர் அண்ணன் பெயரால் அமைந்துள்ள அறிவாலயத்தில் உன் புன்னகை சிந்தும் முகத்தையும், புத்தொளி பாய்ச்சும் விழிகளையும், காணப் போகிறோம் என்ற களிப்புடன் இன்பத் துடிப்புடன் காத்திருக்கிறேன்.

இந்த உயிரோட்டமுள்ள இயக்கத்திற்கு ஜனநாயக மூச்சுக் காற்றும், அண்ணன் தம்பி என்று குடும்ப பாச நாடித் துடிப்பும், தடைபடாக் கொள்கைக் குருதியோட்டமும் என்றென்றும் சீர்குலையா நிலையில் இருக்க வேண்டுமென்று அண்ணனிடம் கற்ற பாடத்தைக் கனவிலும் மறவாமல்; எத்தனையோ கடுஞ்சோதனைகளுக் கிடையிலேயும் கட்டிக் காத்து வருகிறோம் நாம்!

அண்ணா தலைமையில் 1949 முதல் 18 ஆண்டுகள் எதிர்க்கட்சியாக ஏறு நடை போட்டோம்! களம் பல கண்டோம்! குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்து நாம் குதித்திட்ட போராயினும் - ஆசிய ஜோதி நேரு பிரான் அவசரத்தில் உதிர்த்த ஆத்திரச் சொல்லை அனுமதிக்க முடியாதென கறுப்புக் கொடி காட்டி எதிர்த்த போராயினும் - தமிழ்மண்ணில் உள்ள ஊருக்குத் தமிழ்ப் பெயர் கல்லக்குடி புகைவண்டி நிலையம் என்ற பெயரே இருக்க வேண்டுமெனத் தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்த போராயினும் - சமூக நீதிவேண்டி நடத்திய போராயினும் - இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து 1965-ல் நடத்திய மகத்தான மொழிப் போராயினும் - விலைவாசி உயர்வை எதிர்த்துச் சிறை புகுந்த போராயினும் - அண்ணா தலைமையேற்க அரசியல் சட்டத்தில் இந்தி ஆதிக்க மொழிப் பிரிவு நகலைக் கொளுத்திய போராயினும் - பல்லாயிரவர் காராக்கிரகத்தில் அடைபட்டோம். சிலரைச் சிறையிலேயே பிணமாகக் கண்டோம்.

பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு அண்ணா தலைமையில் ஆட்சி அமைந்தது. தேர்தலில் கழகம் நின்று, வெற்றி பெற்று, ஆட்சி அமைத்த காரணத்தினால்தான் தமிழ் மக்களின் நீண்ட காலக் கோரிக்கையாக இருந்ததும் - தியாகி சங்கரலிங்க நாடார் உண்ணா நோன்பிருந்து உயிர் கொடுத்தும் கூடக் காங்கிரஸ் ஆட்சியில் நிறைவேற்றப்படாததுமான - தமிழ்நாடு எனும் பெயர் இந்த மாநிலத்துக்கு சூட்டப்பட்டது.

கழகம் தேர்தலில் நின்று ஆட்சி அமைத்த காரணத்தினால்தான் காங்கிரஸ் ஆட்சியில் பலமுறை புறக்கணிக்கப்பட்ட சுயமரியாதைத் திருமண மசோதாவை சட்டமாக்கிப் பெரியார் அவர்களுக்குக் காணிக்கையாக்கிட முடிந்தது.

கழக ஆட்சி தோன்றியதால்தான் இந்தி ஆதிக்கத்திற்கு அணை போட்டு; இரு மொழித் திட்டம் நடைமுறைப்படுத்த முடிந்தது!

ஈராண்டு ஆண்டு நமதண்ணன் வேதனைக் கடலில் நம்மை மிதக்க விட்டுப் பிரிந்த பின்னரும் ஏழாண்டுக் காலம் அவர் வழிநின்று ஆட்சி நடத்தினோம். தமிழர்களின் பொற்காலம் அதுவென்று தந்தை பெரியாரும் தமிழ்ச்சான்றோர் பலரும் போற்றிடவும் - ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற

சூளுரையுடன் எண்ணற்ற திட்டங்களை அவர்களுக்கெனத் தீட்டிப் பாராட்டைப் பெற்றிடவும் - மாநில வளர்ச்சிக்கெனவும் வளம் பெருகுவதற்கெனவும் நேர்த்தியான நிர்வாகம் நடக்கின்றதென அனைத்துத் தரப்பு மக்களும் வாழ்த்திடவும் - கழக ஆட்சி கோலோச்சியதோடு; மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்ற கொள்கையையும் சட்டப் பேரவைத் தீர்மானமாக்கியது! அந்தத் தீர்மானம் இந்திய நாட்டுக்கே வழிகாட்டும் தீப ஒளியாக அமைந்தது!

இந்திய ஜனநாயகத்திற்கே ஆபத்து வந்த போது ஆட்சி பெரிதென்று எண்ணாமல்; இரண்டாவது சுதந்திரப் போரில் கலந்து கொண்டு - ஆட்சியையும் இழந்து, ஐநூறுக்கு மேற்பட்டோர் மிசாக் கைதிகளாகவும் ஓராண்டு சிறையில் வாடினர்! அடிபட்டனர்! மிதிபட்டனர்! சிட்டியும், சாத்தூர் பாலுவும் மிசாக் கைதிகளாகவே மாண்டு போயினர்!

மீண்டும் பனிரெண்டு ஆண்டுக் காலம் எதிர்க் கட்சியாக! சந்தித்த களங்கள் எத்தனை எத்தனை! தொடரப்பட்ட பொய் வழக்குகள் கொஞ்சமா? இலங்கைத் தமிழருக்காக - இந்தி ஆதிக்கம் தலைநீட்டுவதைத் தடுப்பதற்காக; ஐம்பதாயிரம் பேர் அறுபதாயிரம் பேர் சிறை புகுந்தோம்! அப்போது தீக்குளித்து மாண்டோர் எண்ணிக்கை எவ்வளவு! நானும் பேராசிரியரும் சட்டமன்ற உறுப்பினர் பதவிகளை ஈழத் தமிழருக்காகத் துறந்தோம்! இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில் ஈடுபட்ட பேராசிரியர் உள்ளிட்ட பத்து சட்டமன்ற உறுப்பினர்களின் பதவியை எம்.ஜி.ஆர். ஆட்சியில் பறித்துக் கொண்டு வெளியேற்றினர். அப்படி வெளியேற்றும் தீர்மானத்தை முன்மொழிந்தவர் நாவலர் என்ற கொடுமையையும் தாங்கிக்கொண்டோம்! எத்தனையோ இழிவுகள்! பழிச் சொற்கள்! வேண்டுமென்றே திட்டமிட்டு நம் மீது பொழியப்பட்டன! எதையும் தாங்கும் இதயத்தைத்தான் அண்ணனிடம் பெற்றிருக்கிறோமே; அதனால் தாங்கிக் கொண்டோம்!

அனைத்துக்கும் உச்சகட்டமாகச் சட்டமன்ற உறுப்பினர் விடுதி அறையிலிருந்த நமது கட்சி அலுவலகத்திலிருந்து கைது செய்யப்பட்டு வெளியே தள்ளப்பட்டோம்.

அப்போது நாம் எடுத்த சபதம்தான்; உடன்பிறப்புகள் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் என வசூலித்து ஊர் ஊருக்கும் என்னை

அழைத்துக் கொடுத்த நிதியில் - எழுந்துள்ள எழில் மாடமாம் அண்ணா அறிவாலயம்!

அங்குதான் உடன்பிறப்பே; நமது புதிய பொதுக் குழு கூடுகிறது! 1989 - ல் மீண்டும் கழகத்தின் கையில் ஆட்சியைத் தந்தனர் தமிழ் மக்கள்!

நலிவுற்ற மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக - பாட்டாளிகளின் பாதுகாவலனாக - பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு கலங்கரை விளக்கமாக - தாழ்த்தப்பட்ட மக்களின் நலம் பெருக்கும் சேவகனாக - விவசாயிகளின் அன்புக்குப் பாத்திரமான நண்பனாக - பெரியோர், இளையோர், மாணவர், மகளிர், முன்னேற்றத்திற்கான நல்லொளி தீபமாக - இரண்டு ஆண்டு காலத்தில் எத்தனை திட்டங்கள்! எத்தனை சாதனைகள்! இதயமுள்ளோர் அறிவர்! அறிந்து மகிழ்வர்!

எனினும்; வீண்பழி சுமத்தி வீழ்த்தினர் தமிழர்களின் உடைமையாம் கழக ஆட்சியை! ஓராண்டு காலத்திற்குப் பிறகே உண்மையை உணர்கின்றனர்!

முதலில் பதினெட்டு ஆண்டு - பின்னர் பனிரெண்டு ஆண்டு - மொத்தம் முப்பது ஆண்டு எதிர்க்கட்சியாக இருந்து பழகிப் பணியாற்றியதோடு மக்களுக்காகவும் உரிமைகளுக்காகவும் களம்பல கண்ட கழகம்; மீண்டும் இப்போது எதிர்க்கட்சியாக!

அதிலும் ஒரு பெரும் தோல்வியைத் தேர்தலில் சந்தித்த நிலையில்! அதனால் என்ன? ஆட்சி வரும் போகும்! வரும்போது வசந்த விழா கொண்டாடுவதும் - போகும்போது புலம்பியழுவதும்; கழகத்தின் குணமல்லவே!

இந்த ஒளிமிகுந்த உண்மையைத் தெளிவாகத் தெரிவிக்கும் வகையில்தான்; நடந்து முடிந்த கட்சித் தேர்தலில் கடும் போட்டியிட்டுக் கழகத்தின் பல்வேறு அமைப்புகளின் பொறுப்புகளுக்கு என் கண்ணின் மணிகள் வந்துள்ளனர்.

மாண்புமிகு மந்திரி பதவிகளை விடப் பெரிதென எண்ணியன்றோ மானமிகு மாவட்டச் செயலாளர்களாகவும் - எம்.பி., எம்.எல்.ஏ. பதவிகளை விடப் பெரிதென எண்ணியன்றோ ஒன்றியச் செயலாளர்களாகவும் - ஏனைய நிர்வாகிகளாகவும் என் உடன்பிறப்புக்கள் வந்துள்ளனர்.

வெற்றி பெற்றோருடன் போட்டி போட்டுக் கொண்டு; கழகம் அறிவிக்கும் களங்கள் காண்பதற்கு கட்சித் தேர்தலில் வெற்றி பெறாதவர்களும் வீரப்பண் பாடிக்கொண்டு ஓரணியில் நிற்பர் என்பதை நான் பலமுறை அனுபவத்தில் காண்பவனல்லவா?

அந்தக் களிப்புடன் - நம்பிக்கையுடன்-நேசமுடன் - பாசமுடன் - என் உயிரனையோர் ஊருக்கு ஊர் உடன்பிறப்புகளாயிருக்கின்றனர் என்ற துணிவுடன்;

புதிய பொதுக்குழு உறுப்பினர்களை இரு கை நீட்டி வரவேற்கிறேன்!

போட்டியிட்டோர் - போட்டியிட்டோர் அனைவர்க்கும் வாக்களித்தோர் - வென்றோர் - வெற்றி வாய்ப்பை நழுவ விட்டோர் - அனைவருமே ஜனநாயகக் கடமை ஆற்றி; கழகத்திற்கு வலிவு சேர்த்துள்ளனர் என்றே நான் பெருமிதம் கொள்கிறேன். வீரர் குலமே! வேலை நிறைய இருக்கிறது; வில் விட்டு எழும் கணையெனக் கிளம்புக! என அழைக்கிறேன்!

தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருப்பது; ஆட்சியல்ல!

அல்லிராணி தர்பார்! இங்கே அராஜகம் - ஆணவம் மட்டுமல்ல; ஊழலே உப்பரிகையாக எழுப்பப்பட்டு அதிலே அமர்ந்து ஒய்யாரம் கொட்டுகிறது அரசியல் அநாகரிகம்! அற்பத்தனமே அரியாசனம்! ஊதாரித்தனமே பரிபாலனம்!

“தனி அதிபர் கொழுக்கின்றனர் -
தரித்திரரோ கொதிக்கின்றனர் -
தர்ம தேவதை லஞ்சம் குவிக்கின்றார்
தமிழ்நாடே விலை போகுமோ எனத்
தவிக்கின்றார் நல்லோர்!
அன்றாடம் அறிவிப்புகள் கோடி கோடியாக!
ஒன்றாவது உருப்படியாய்
நிறைவேற்றியது உண்டா எனில்; இல்லை! இல்லை!
நெஞ்சம் கொதிக்கின்ற தமிழர்களின்
உணர்வுகளை ஒன்று திரட்டும் காலம்
உதயமாயிற்று; இன்று!”

புதிய பொதுக்குழு புலிப் போத்துகளின் கூட்டம் - பொங்கியெழும் சிங்கங்களின் அணிவகுப்பு - வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித் தோள்கள் எனப் புரட்சிக்கவிஞர் தந்த போர்ப்பரணி முழக்கும் தளபதிகளும் சிப்பாய்களும் குழுமிடும் பாடி வீடு-

உடன்பிறப்பே - என்
உயிரே! வருக! வருக!

அன்புடன்,

மு. க.

(31-05-1992)

1915. பகிரங்க ஊழல் குற்றச்சாட்டு - பட்டியல் மேலும் நீளும்!

உடன்பிறப்பே,

எதிர்க்கட்சிகள் மாநிலத்தில் நடைபெறும் புனிதமான (?) ஆட்சியின் மீது பொய்யும் புரட்டும் கூறி தவறான பிரச்சாரம் செய்கின்றனவாம். அதற்குப் பதிலடி கொடுக்கப் புறப்படு என்று ஜெயலலிதா; தனது கட்சியினருக்குக் கட்டளை பிறப்பித்துள்ளார். கட்டளையை அவரது கட்சியினர் உடனடியாக மதுரையில் தீப்பொறி ஆறுமுகத்தின் மீது நிறைவேற்றிக் காட்டியுள்ளனர். அமைதியும் பொறுமையும் கடைப்பிடிக்கிற காரணத்தினாலேயே மாற்றாரின் கரங்கள் மலர் பறித்துக்கொண்டிருக்குமென்ற மமதை நினைப்பு; இன்று மண்டிலம் ஆள்பவர்களுக்கு!

கழகத்தினர் நமது தோழமைக் கட்சியினர், ஆட்சியை விமர்சிக்கும் ஏடுகள் மட்டுமல்ல ஆளுங் கட்சியின் தாக்குதலுக்கு ஆளாவது; அ.தி.மு.க.வின் தோழமைக் கட்சியான காங்கிரஸ்காரர்களுக்கும் அவ்வப்போது செம அடி விழுந்துகொண்டு தானிருக்கிறது. மத்திய இணை அமைச்சர் நண்பர் சிதம்பரத்தைத் திருச்சி விமான நிலையத்தில் தாக்கி, அவரது காரையும், காங்கிரஸ் பிரமுகர்களையும் கல்கொண்டு காயப்படுத்தியது முதல்; அண்மையில் கோவை விமான நிலைய விழாவில் முதல்வர் ஜெயலலிதா முன்னிலையிலேயே - அவர் தந்த ஊக்கத்துடன் காங்கிரஸ் எம்.பி. குப்புசாமி தாக்கப்பட்டது வரையில் கூட அல்ல; இதோ இரண்டு நாட்களுக்கு முன்பு கோவை காங்கிரஸ் அலுவலகத்தில் நுழைந்து இந்திரா, காமராஜ், ராஜீவ் படங்களை நொறுக்கியது உட்பட அ.தி.மு.க.வினரின் அடி உதைகளை அர்ச்சனைகளாகக் கருதி வலியை வெளியில் காட்டிக்கொள்ளாமல் உள்ளூர வேதனைப்படுகிறார்கள் பாவம்! நண்பர் குப்புசாமி போன்ற ஒருசில மானஸ்தர்கள் பதைக்கிறார்கள்.

சீறுகிறார்கள். அவர்களால் என்ன செய்ய முடியும், தலைமையே தாசானுதாசனாகத் தண்டனிட்டுக் கிடக்கும்போது!

இவ்வாறு அடியாட்களை விட்டுத் தாக்குவதற்கு என்ன காரணம்? வாதங்களை எதிர் கொண்டு பதில் சொல்ல ஆளுங்கட்சிக்கு வக்கில்லை! சாட்டப்படும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று சாட்டையடி போலப் பதில் கொடுக்க சக்தியில்லை! சாரமில்லை! அதனால் சல்லடம் கட்டிக்கொண்டு ஆடுகிறார்கள்.

எதிர்க்கட்சிகள் இந்த தர்ம தேவதை (?) ஆட்சியின் மீது பொய்க் குற்றச்சாட்டுகளைக் கூறுகின்றனவாம்!

விலைவாசியைக் குறைப்போம் என்றீர்களே; அது விஷம் போல் ஏறுகிறதே! எனக் கூறுவதும் கேட்பதும் பொய்க் குற்றச்சாட்டா?

தி.மு.க. ஆட்சியில் நியாயவிலைக் கடையில் குறைந்த விலையில் இருபது கிலோ அரிசி தரப்பட்டதே; அதை பனிரெண்டு கிலோ எனக் குறைத்து விலையையும் ஏற்றி விட்டீர்களே; நியாயமா? என்று கேட்டால் அது பொய்க் குற்றச்சாட்டா?

நிலைமைக்கேற்ப அளவோடு பஸ் கட்டணத்தை உயர்த்தாமல் தாறுமாறாக ஏற்றி ஏழை நடுத்தர மக்களை இன்னலுக்கு ஆளாக்குவது சரியா எனக் கேட்பது பொய்க் குற்றச்சாட்டா?

பூரண மதுவிலக்கு கொண்டு வரப்போகிறோம் எனக் கூறிவிட்டு; ஊருக்கு ஊர் பார் திறக்கிறீர்களே - எனக் கேட்டால் அது பொய்க் குற்றச்சாட்டா?

லாபம் குவிக்கும் ஆம்னி பஸ்களுக்கு நீதி மன்றம் நிர்ணயித்த வரியை விட ஆயிரத்து ஐநூறு ரூபாய் குறைத்து ஐநூறு ரூபாய் என ஆக்கி; அவர்களிடம் சில கோடி பெற்றுக் கொண்ட ஊழல் என்ன - பொய்க்குற்றச்சாட்டா?

தனியார் பேருந்துகளுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்குவதற்காக பதினைந்து கோடி ரூபாய் வரையில் பேரம் நடந்து முடிந்து பணமும் பட்டுவாடா ஆன செய்தி பட்டிதொட்டியெல்லாம் சிரிப்பாய்ச் சிரிக்கிறதே; அது பொய்க் குற்றச்சாட்டா?

கண்டிப்புக்குப் பேர் போன அதிகாரி எனப்படும் மலைச்சாமி தலைமையில் அமைந்த குழுவினர் அரசின் வசம் வந்த பீர் தொழிற்சாலையை பதினான்கு கோடி ரூபாய்க்கு விற்கலாம் எனப் பரிந்துரை செய்திருந்தும்; அதற்கு மாறாக - டெண்டர் கூட விடாமல் - தனியார் முதலாளிக்கு சுமார் பத்தரை கோடி ரூபாய்க்குக் கொடுத்து; இரண்டு கோடி ரூபாயை லஞ்சமாக வாயில் போட்டுக் கொண்டதே; தர்ம தேவதை (?) அந்தக் குற்றச்சாட்டு பொய்யா?

அரசு நிலத்தை அமைச்சர்கள் வாங்கக் கூடாது என்ற அரசு நெறிமுறை ஆணையை மீறி முதலமைச்சரே டெண்டர் தொகைக்கும் குறைவாக சுமார் நாலு கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்ட டான்சி நிலம் 54 கிரவுண்டை சுமார் இரண்டு கோடி ரூபாய்க்கு வாங்கிய ஊழல் என்ன பொய்யான குற்றச்சாட்டா?

ஸ்பிக் அதிபர்களுடன் செய்து கொண்ட பேரத்தில் - பங்குத் தொகை ஊழலில் அரசுக்கு வரவேண்டிய தொகை இருபத்தி எட்டு கோடி ரூபாய்; ஊழலில் கரைந்து போயுள்ளதே; இந்தக் குற்றச்சாட்டுதான் என்ன பொய்யா?

மோகன் புருவரீஸ் மது வகையறாவுக்கு கழக ஆட்சியில் செய்த விலை நிர்ணயம் குறைவு எனக் கூறி அந்த நிறுவனம் நீதிமன்றத்துக்குச் சென்றதையொட்டி; நீதிமன்றம் தமிழக அரசு அதுபற்றி முடிவெடுத்து அறிவிக்க வேண்டும் என ஆலோசனை கூறியதைத் தொடர்ந்து ஜெயலலிதா அரசு - மத்திய அரசின் விலை நிர்ணயத்துக்கு (Guide Lines) மாறாக அந்த நிறுவனத்துக்கு ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் லாபம் வரக் கூடிய அளவுக்கு பெற வேண்டியதைப் பெற்றுக்கொண்டு விலை நிர்ணயம் செய்துள்ளது என்பது பொய்யான குற்றச்சாட்டா?

இதோ மே 27 இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டில் வந்துள்ள செய்தி-

A Tamil Nadu Minister went to Madras Customs to Receive a Passenger who was caught taking 7,000 Colour Film rolls, valued at Rs. 10 Lakhs the open Market. However, the passenger was allowed to go and is goods were confiscated

சென்னை விமான நிலைய சுங்கத்துறை அலுவலகத்தில் ஒரு பயணி மாட்டிக்கொண்டார்; ஏழாயிரம் வண்ணப் படச் சுருள் கொண்டு வந்ததற்காக! அதன் வெளிச்சந்தை மதிப்பு பத்து லட்ச ரூபாய் - (கறுப்புச் சந்தை மதிப்பு முப்பது அல்லது

நாற்பது லட்ச ரூபாய் இருக்கும்) தமிழக அமைச்சர் சுங்கத் துறை அலுவலகத்திற்கு அந்த பயணியை வரவேற்பதற்காகச் சென்றார் விளைவு என்ன? அந்தப் பயணி கொண்டுவந்த பொருளை கைப்பற்றிக் கொண்டு, பயணியை விடுவித்து விட்டார்கள்.

அமைச்சர் போகாமல் இருந்திருந்தால் அந்தப் பயணி சட்டப்பூர்வமான நடவடிக்கைக்கு ஆளாக்கப்பட்டிருக்க வேண்டும்.

யார் அந்த அமைச்சர்? அந்த அரசில் அமைச்சரின் அழகு எப்படியிருக்கிறது பார்த்தாயா?

இது என்ன ஆச்சரியம்; அமைச்சர் போலீஸ் ஸ்டேஷனுக்கே போய் குற்றவாளிகளை விடுவிக்கச் சொல்லி போலீஸ் அதிகாரிகளை மிரட்டியிருக்கிறார்களே; அதைவிட இது என்ன ஆச்சரியம் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

எல்லையற்றதும், எண்ணத் தொலையாததுமான எத்தனையோ ஊழல்களில் ஒன்றிரண்டைடத்தான் இந்தக் கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளேன்.

பெரிய பட்டியலே இருக்கிறது - முதலில் முதலமைச்சர் இந்தக் குற்றச்சாட்டுகளை மறுக்கட்டும்!

இவை ஆதாரங்களுடன் சாட்டப்படும் குற்றச்சாட்டுகள்!

பொய்யான குற்றச்சாட்டுகள் என்றாலோ; ஆளுங் கட்சி மீது வீணாக அவதூறு பொழியும் குற்றச் சாட்டுகள் என்றாலோ - ஆளுங் கட்சி தன்னை நிரபராதி என நிரூபித்துக்கொள்ள நம்மை நீதிமன்றத்தில் நிறுத்தலாமே! அதற்குத் துணிவு உண்டா?

அன்புடன்,

மு. க.

(01-06-1992)

1916. சரித்திரம் திரும்பாமலா போய்விடும்; திரும்பும்!

உடன்பிறப்பே,

சுனில் என்று அவனை சுருக்கமாகப் பெயரிட்டு அழைப்பார்கள். உடனே நமது சபாநாயகருக்குக் கூண்டும் - சுப்ரீம் கோர்ட்டும் - நினைவுக்கு வந்துவிடக் கூடும். அதனால் இந்த சுனில் முழுப் பெயரை முன்கூட்டியே தெரிவித்து விடுகிறேன்.

சுனில்பத்ரா என்பது அவனது முழுப் பெயர். 1980-ஆம் ஆண்டு டெல்லி திகார் சிறைச்சாலையில் அடைபட்டிருந்த ஒரு கொலை வழக்குக் கைதி. ஆயுள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்தவன். என்ன திடீரென்று யாரோ ஒரு கொலை வழக்குக் கைதி சுனில் பத்ராவைப் பற்றி சிறுகதை பாணியில் கடிதம் எழுதத் தொடங்கி விட்டாய் என நீ குறும்பாகவும் வியப்பாகவும் பார்ப்பது; நீ இந்தக் கடிதத்தைப் படித்துக்கொண்டிருக்கும்போதே என் மனக் கண்ணில் காட்சியளிக்கிறது. எனக்குத்தான் உன்னோடு பொதுவாழ்வு உறவு என்பது ஐம்பத்தி நான்கு ஆண்டுக்காலமாக உண்டே!

அதனால் எத்தனை விதமான உடன்பிறப்புக்களையும் இந்த நீண்ட நெடிய காலத்தில் நான் பார்த்து, பழகியும், அவர்களையும் உணர்ந்தும், அவர்கள் என்ன நினைக்கிறார்கள் - என்ன பேசுகிறார்கள் என்பதை அறிந்தும் இருப்பவனல்லவா நான்!

அதனால்தான் இந்தக் கடிதத்தை படிக்கத் தொடங்கியவுடன் உன் முகமும் அகமும் எப்படியிருக்குமென்பதை தொலைவில் இருந்தே கண்டிட முடிகிறது.

எத்தனை நாட்களாகின்றன உனக்குக் கடிதம் எழுதி; கழகத்தின் புதிய பொதுக்குழு ஜூன் இரண்டாம் நாள் கூடுவதற்கு முன்பு எழுதியது! மூத்த தலைவர்கள் யாரிடமாவது பொறுப்பை ஒப்படைத்து விட்டு ஒரு நாளில் மூன்று அல்லது நான்கு மணி நேரமாவது ஓய்வு பெறலாம் என நினைத்த எனக்கு மீண்டும்

முடிசூட்டுகிறேன் என்று என் தலையில் பெரும் சுமையை மறுபடியும் உன்போன்றோர் பிடிவாதமாகத் தூக்கி வைத்தீர்கள்; அந்த நாளுக்கு முன்பு எழுதியது! ஆம்; மூன்று கிழமைகள் ஓடிவிட்டன. இடையில் எத்தனையோ நிகழ்ச்சிகள் - அறவழிப் போராட்டங்கள் - அரசின் ஆர்ப்பாட்டப் பேயாட்டங்கள் - அராஜகச் சதிராட்டங்கள் - அந்தப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டதினால் உடன்பிறப்பே என எழுதத் தொடங்கும்போதே ஓர் இன்பம் கண்டு - இதயத் தடாகத்தில் எத்தனையோ நூறு நூறு உணர்ச்சிப் பூக்கள் மலர்ந்து - நான் எழுதும் கடிதம் கண்டு நீ மகிழ்வதைவிட நான் அதிகம் மகிழ்ந்திடும் நிலையை உருவாக்கிக் கொள்ள வாய்ப்பு, தடைபட்டுப் போயிற்று!

இதோ இன்று எழுதும் கடிதம் எனக்கேற்பட்ட அதிர்ச்சி உணர்வின் வெளிப்பாடு! இதில் மகிழ்ச்சி எவ்வாறு ஏற்படும் என்கிறாயா? ஏன் ஏற்படாது? குமுறிக்கொண்டிருக்கும் வேதனையை வெளியேகொட்டிவிடுவதால், அதனை உன் போன்ற உடன்பிறப்புகள் பகிர்ந்து கொள்வதால் என் மனச்சுமை சற்று குறைகிறதல்லவா - அதனால்தான் மகிழ்ச்சி என்கிறேன்.

அடடே, உடன்பிறப்புடன் உள்ளத்தைப் பகிர்ந்து கொள்ளும் பரபரப்பில் சுனில்பத்ராவை டெல்லி திகார் சிறையிலேயே விட்டு விட்டேன் போலிருக்கிறதே.

அந்தக் கொலை வழக்குக் கைதி, சிறையில் இருந்தவாறே உச்ச நீதிமன்றத்திற்கு ஒரு கடிதம் எழுதினான். அந்தக் கடிதத்தை உச்சநீதிமன்றம் அவனது ரிட் மனுவாகவே பாவித்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. உச்சநீதிமன்ற நீதிபதிகள் மூவர் அந்த விசாரணையை நடத்தினர். யார் யார் தெரியுமா? வி.ஆர். கிருஷ்ணய்யர், ஆர்.எஸ். பதக், ஓ. சின்னப்பரெட்டி ஆகியோர்தான் அந்த மூவரும்!

சரி; அந்தக் கடிதத்தில் சுனில்பத்ரா அப்படி என்ன எழுதியிருந்தான்!

சிறையில் நேர்காணலுக்கு விதிக்கப்படும் தடை உள்ளிட்ட பல்வேறு கொடுமைகளை அவன் கடிதத்தில் குறிப்பிட்டுவிட்டு; தனக்குக் கைவிலங்கு பூட்டி அழைத்துச் செல்லப்படுவதாகவும் சுட்டிக் காட்டியிருந்தான்.

அந்தக் கடிதத்தை உச்சநீதிமன்றம் ஏதோ ஒரு கைதியின் வெற்றுப் புலம்பல் என்று வெறுத்தி ஒதுக்கிவிடாமல்

விசாரணை நடத்தி; அதன் மீது தீர்ப்பும் வழங்கியது. நீதிபதிகள் மூவருமே நாட்டுக்கு அறிமுகமானவர்கள். அதிலும் குறிப்பாக வி.ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் மனித நேயப் பண்பு வளர வேண்டுமென்பதில் அக்கறை மிகக் கொண்டவர் என்பதையும், சின்னப்ப ரெட்டி அவர்கள் சமூக நீதிக் காவலர் என்பதையும் நாம் தெளிவாக அறிவோம்.

அந்த மூவரின் தீர்ப்பு சிறைக்கொடுமைக்கு முடிவு கட்டும் தீர்ப்பாக அமைந்தது.

நேர்காணலில் விதிக்கப்படும் தடைகள் குறித்து சுனில்பத்ரா எழுதியிருந்த கடிதம் பற்றிய விசாரணையின் தீர்ப்பு பின்வருமாறு:-

Visits to prisoners by family and friends are a solace nsulato and only a dehumaised system ca derve vcarous deligt deprvng priso mates of this uma ameity....

More over the whole aitatve purpose of sentecng is to softe ot to arde and this will be promoted by suc Meetings

அதாவது; சிறையில் உள்ளவர்களை பார்வையாளர்கள் நேர்காணல் என்பது குடும்பத்தினரும் நண்பர்களும் சந்திப்பதால் கைதிகளுக்கு மன ஆறுதல் ஏற்படுமென்பதற்காக அனுமதிக்கப்பட்டதாகும். மனிதாபிமானமற்றவர்கள்தான் இதனை மறுப்பார்கள் என்பதாகும். அதுமட்டுமல்ல; கைதியின் மனதை மென்மைப்படுத்தி ஒழுங்குறச் செய்யவே தண்டனை வழங்கப்படுகிறதே தவிர - முரட்டுத்தனமாக ஆக்குவதற்காக அல்ல என்றும் அந்தத் தீர்ப்பு சுட்டிக்காட்டுகிறது.

அடுத்து; விலங்கு பூட்டுவது பற்றியும் அதே தீர்ப்பில் குறிப்பிடும் வாசகம் வருமாறு:-

The Routne Resort to and cuffs and irons be speaks a barbarity ostile to our goal of uma digity and social justce.

விலங்கு மாட்டுவது என்பது மனித கௌரவத்தையும் சமூக நீதியையும் அடைய வேண்டுமென்ற குறிக்கோளை அடையவொட்டாமல் தடுத்திடும் காட்டுமிராண்டித்தனமான செயலாகும்.

உடன்பிறப்பே, 1980-ல் உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பின்படி மிக பயங்கரமானதும் - அயர்ந்தால் தப்பி ஓடிவிடக்கூடியதுமான - ஒரு சூழலில் மட்டுமல்லாமல் கைதிக்கு

விலங்கிட்டு அழைத்துச் செல்வது காட்டுமிராண்டிச் செயல் என்று திட்டவட்டமாகத் தெளிவாக்கப்பட்டுள்ளது.

நண்பர்களும் குடும்பத்தினரும் ஒரு கைதியை சிறையில் நேர்காணலில் சந்திப்பது; அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமை என்ற ஸ்தானத்தைப் பெற வேண்டிய ஒன்று என்றும் அந்த மூன்று நீதிபதிகளும் மேலும் குறிப்பிட்டுள்ளார்கள்.

அதற்கேற்பத்தான் இத்தனை ஆண்டுக்காலமாக The Tamil nadu prison Manual என்ற புத்தகத்தில் தமிழ்நாடு சிறை விதிகளில் 541-வது விதியாக;

Ucovcted crmnal prisoners and cvil prisoners shall be granted all reasonable facilities at proper tmes and under proper restrctons for nterviewng or otherwise commucatng eiter orally or writng, wit their relatves, friends, and legal advisers.

அதாவது; தண்டிக்கப்படாத கைதிகளுக்கு அவர்களது உறவினர், நண்பர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோரை நேர்காணலில் சந்திக்கலாம்.

என வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த அரசு; சில நாட்களுக்கு முன் அந்த விதியில் ஒரு திருத்தமே கொண்டுவந்து வழக்கறிஞர், மற்றும் நெருங்கிய உறவினர் தவிர - நண்பர்கள் யாரும் தடா கைதிகளை நேர்காணலில் சந்திக்க முடியாது என ஆணை பிறப்பித்துள்ளது.

1980-ல் சுனில்பத்ரா வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் தண்டனை பெற்ற கைதிகளுக்கு கூட நேர்காணலில் பாகுபாடு காட்டிடுவது மனிதாபிமானமற்ற காரியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இங்கே; தர்ம தேவதை (?) ஆட்சியில் - புதிதாக திருத்தம் செய்து, தண்டிக்கப்படாத கைதிகளாக இருக்கின்ற சுப்புலட்சுமி ஜெகதீசன், அவரது கணவர் ஜெகதீசன், நெல்லை தம்பி ரவிச்சந்திரன் ஆகியோரை நண்பர்கள் சந்திக்கக் கூடாதென்று ஆணை பிறப்பிக்கிறது - அதுவும் ஜூன் 11 அன்று நான் மதுரை நிகழ்ச்சிக்குப் போகிறேன் என்றதும் ஜூன் 8-லேயே மளமளவென்று சிறைச்சாலை விதி திருத்தப்படுகிறது. மதுரை சென்றதும் எனக்கு நேர்காணலுக்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

அதுமட்டுமா? அவர்களுக்குக் கை விலங்கும் மாட்டப்படுகிறது!

இவைகள் தவறல்ல என்று தாளம் போடும் தலைவர்கள் சிலரும் தமிழ் நிலத்தில் இருக்கிறார்கள்.

பாவம்; மனிதாபிமான உணர்வுகளையும், ஜனநாயக உணர்வுகளையும் பொதுவில் நின்று மதிக்கக் கற்காதவர்கள் அவர்கள்!

உடன்பிறப்பே, உனக்கு நினைவிருக்கிறதா?

எமர்ஜென்சியில் 1976 ஆம் ஆண்டு முழுதும் இந்திரா காந்தியினால் கொடுமையாகப் பழிவாங்கப்பட்டோம். அவரைக் கடுமையாக எதிர்த்தோம். கர்நாடக மாநிலத்தில் சிக்மகளூர் இடைத் தேர்தலில் இந்திரா காந்தி நின்றபோது அவருக்கு எதிராக இந்திரா காந்தி வேட்பாளர் வீரேந்திர படேலுக்கு ஹெக்டேயின் அழைப்பின் பேரில் தேர்தல் பிரச்சாரம் செய்யக் கூடச் சென்றேன். அந்த தேர்தலில் இந்திரா காந்தி வென்று நாடாளுமன்றம் சென்றதும், அன்றைய ஜனதா அரசு அவரை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றியது. அது ஜனநாயக விரோதச் செயல் என்று அறிக்கை விடுத்தேன்.

1976 முதல் 1979 முடிய இந்திரா காந்தியை எமர்ஜன்சி கொடுமைக்காக எதிர்த்துக் கொண்டிருந்த தி.மு.க.தான் 1977-ல் அதே இந்திரா காந்தி நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றப் பட்டபோது கண்டித்தது.

அதுதான் ஜனநாயகத்திலும் - மனித நேய உணர்விலும் கடைப்பிடிக்க வேண்டிய கட்சிச் சார்பற்ற பொதுநோக்கு!

குறுகிய தன்னல நோக்குடன் அரசியல் நடத்துகிறவர்களுக்கும் - கொடுங்கோலர்களுக்கும் அது இப்போது புரிவது சிரமம்!

சரித்திரம் திரும்பும்போதுதான்
ஒருவேளை புரியக்கூடும்.
சரித்திரம் திரும்பாமலா போய்விடும்;
திரும்பியே தீரும்!

அன்புடன்,

மு. க. (19-06-1992)

1917. நமது பாசறைகள் தயாராக இருக்கட்டும்!

உடன்பிறப்பே,

ஸ்பிக் உர ஆலையில் அரசு பங்குகளைத் தனியாருக்கு விற்க எடுக்கப்பட்ட முடிவும் - அதனால் பல கோடி ரூபாய்க்கும் மேல் அரசுக்குப் இப்போது இழப்பு என்பதும்; எதிர்காலத்தில் இந்த இழப்பு நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களாக ஆகி விடும் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற உண்மை.

அந்தத் தவறான முடிவுக்குத் தன்னை இந்த அரசு பலியாக்கி விடக் கூடாது என்பதற்காக ஒரு பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரி உறுதியாக நின்று போராடியதும் - அவர் அதன் காரணமாக வேறு துறைக்கு மாற்றப்பட்டதும் - ஒரு திங்களுக்கு முன்பு அந்தப் பெண் அதிகாரியின் மீது திராவக வீச்சு நடைபெற்றதும் - அதில் குற்றவாளிகள் பிடிபடாமல் அடை காக்கப்படுவதும் - ஸ்பிக் தொடர்பாக நடைபெற்ற இந்த அரசின் பங்கு விற்பனை ஊழலை பார் அறிய வெளிச்சம் போட்டுக் கொண்டிருக்கும் நிகழ்ச்சிகளாகும். பார் அறிய என்றால் உலகம் அறிய என்று பொருள். மதுவை ஒழிக்கப் பிறந்து பெண் மகாத்மா ஊருக்கு ஊர் அமைத்துக் கொடுக்கும் பார் அல்ல!

மேற்படி பங்கு பேரத்தில் தனியாருக்கு எதிர்காலத்தில் குவிய இருக்கும் கோடிக்கணக்கான ரூபாய் லாபத்தை முன்னிட்டு ஒன்பது கோடியை உடனடியாகக் கறுப்புக் கருவூலத்திற்கு சமர்ப்பணம் செய்து விட்டார்கள் என்பதும்; அதை அச்சாரமாகத்தான் ஏற்றுக் கொள்வேன் என்று ஆதி பராசக்தி அருள் பாலித்து விட்டதும் - ஊர் சிரிக்கும் உண்மைகளாகும்!

டெண்டர் தொகைக்குக் குறைவாக - விதிமுறைகளைக் கால் தூசாகக் கருதி - அரசு நிலத்தை அமைச்சர்கள் வாங்கக் கூடாது என்ற நெறிமுறை ஆணையின் மீது காறி உமிழ்ந்து விட்டு - நாலு

கோடி ரூபாய் டான்சி நிலத்தை சுமார் இரண்டு கோடி ரூபாய்க்கு ஏப்பம் விட்டுள்ளதை ஆமாம் என்று நாடாளும் காவல் தெய்வமே கடுப்பான தொனியில், கடுமையான மொழியில் ஒத்துக்கொண்டு அறிக்கையே விட்டாயிற்று!

பீர் தொழிற்சாலையை விற்ற கதையைக் கேட்கவே வேண்டாம். அதிகாரிகள் குழு அமைத்து விற்றார்களாம். அந்தக் குழு போட்ட கணக்குப்படி பதினாலு கோடிக்கு விற்க வேண்டிய தொழிற்சாலையை பத்தரை கோடிக்கு விற்றதாக கடந்த மார்ச் மாதம் சட்டப் பேரவையில் கொள்கை விளக்க அறிக்கை! இப்போது வினாக்குறிகள் விஸ்வரூபமெடுத்த பிறகு; சுமார் இரண்டரைக் கோடி ரூபாயை எங்கிருந்தோ கொண்டு வந்து புதிதாக சேர்க்கும் மாய்மாலம்! இது உண்மையானால் முதல்வர் தரும் ஒரு விளக்க அறிக்கை; அதுவும் சபையில் வைக்கும் அறிக்கை இரண்டரைக் கோடி ரூபாயை சுட்டிக் காட்டாமல் இருப்பது சாதாரண விஷயமா? கோடிகள், இப்போது குலமாதாவுக்கு குண்டுமணிகளாக இருக்கலாம் - ஆனால் அரசின் நிதி விவகாரமாயிற்றே!

• நிதியமைச்சரும் நிர்க்கதி - நிதித் துறையும் நிர்க்கதியில் நிற்கலாமா? விளக்கம் வேண்டாமா? அப்படியும் ஒரு கோடி குறைகிறதே! அது போகட்டும்; அரசு உடைமை விற்பதற்கு விளம்பரம் செய்ய வேண்டாமா? டெண்டர் கோர வேண்டாமா? இதிலும் சில கோடிகள் கைமாறிய காரணத்தால்தானே இந்த முறைகேடு!

வாய் பிளந்து இத்தனை ஊழல்களும் - இன்னும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வாட்ட சாட்டமாக வளர்ந்து வரும் ஊழல்களும்; இதற்கு மேலே வடக்கே இருப்பவர்களுக்குத் தெரியாதா?

பாவம்; தெரிந்து என்ன செய்ய முடியும்? அவர்கள் ஆளும் மாநிலங்களிலே என்ன வாழ்கிறது?

இங்கே சென்னை மாநகரம் கொஞ்சம் கொஞ்சமாக சீரணிக்கப்படுகிறது - தஞ்சைத் தரணியில் கபளீகரம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது! இதைச் சொன்னால் - கர்நாடகத்தில் காட்டுகிறார்கள்; ஐந்து கோடி ஆறு கோடி என்று

விலை கொடுத்து வாங்கியிருக்கும் திரையரங்கக் கட்டிடங்களை! அங்குள்ளவர்களால் அரங்கேற்றப்படும் புனிதராஜ்யம் நாடகம் அது! ஆந்திரம், கர்நாடகத்தை மிஞ்சுகிறதாம்! கப்பங்கள் போய்ச் சேர வேண்டிய இடத்துக்கு ஒழுங்காகப் போய்ச் சேருவதால்; கேள்வி கேட்பாரே இல்லை! மாறாக மகிழ்ச்சியும் பாராட்டும் கிடைக்கிறதாம்!

தமிழ்நாட்டைத் தட்டிக் கேட்டால் - அதோ ஆந்திரத்தைப் பார்! கர்நாடகத்தைப் பார் என்றல்லவா படபடவென பதில் வரும்!

கர்நாடகம் பிறந்த இடம் - ஆந்திரம் ஓய்வு ஸ்தலம் - தமிழகம் ஆளும் பூமி!

டெல்லியோ; இப்போது காக்கும் கடவுள்! எத்தனை நாளைக்கு என்று தெரியாது!

இந்த ஊர் நாறும் ஊழல்களை ஆதாரப் புள்ளி விபரங்களுடன் கழகத்தினர் தெரு முனைக்கு எடுத்துச் சென்றால்; ஆளுங்கட்சியின் பறக்கும் படை ஏவிவிடப்படுமாம். அது விமானப் படைபோல் பாய்ந்து சென்று மேடைகளில் பேசும் கழகத்தினரைத் தாக்குமாம். கூட்டங்களைக் கலைக்குமாம். அமைச்சர் ஒருவர் மிரட்டியிருக்கிறார்!

அடடா! எவ்வளவு அருமையாக சட்டம் ஒழுங்கை இந்த அமைச்சர்கள் பராமரிக்கத் துடிக்கிறார்கள்.

அமைச்சர்கள் அடிதொழுதிடும் அம்பாள் பெயரால் பேரவைகளாம்; அன்றைக்கே 1986-ல் அருமை நண்பர் எம்.ஜி.ஆரே அறிக்கை விட்டு எந்தப் பேரவைகளைக் கலைக்கச் சொன்னாரோ; அந்தப் பேரவைகள் இப்போது சிருஷ்டிக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல; அவைகள் சிறகு கட்டிக் கொண்டு தி.மு.க. கூட்டங்களைத் தாக்கித் தகர்க்குமாம்! அமைச்சரே அறைகூவல் விடுத்து விட்டபிறகு - உடன்பிறப்பே; உன்போன்ற உறுதி படைத்த இந்த கழகத்தின் வைரமணித் தூண்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்களா? அல்லது தாக்கியவர்களுக்குத் தண்டனிட்டுக் கொண்டு கிடப்பார்களா?

ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்களுடன் மறுப்பளிக்க வக்கற்று வகையற்றுப் போனவர்கள்; ஊரெல்லாம் கலகம்

விளைத்துத் திசை திருப்பத் திட்டமிடுகிறார்கள்! அந்த உண்மையைத்தான் கக்கியிருக்கிறார் ஓர் அமைச்சர்!

சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் பொறுப்பை காவல்துறையினர் ஏற்றுக் கொள்ளத் தயங்குவார்கள் - ஓராண்டு கால அனுபவத்தில் நாம் கண்டு கொண்ட நிலைமை இது!

எனில் பறக்கும் படை கொண்டு பாய்ந்து வரும் ஆளுங் கட்சிக் குண்டர்களைச் சந்திக்க நமது பாசறைகளும் தயாராகவே இருக்கட்டும்.

அன்புடன்,

மு. க.

(20-06-1992)

1918. ஜூலை 3 முதல் தொடங்கிடுக தொண்டினை!

உடன்பிறப்பே,

ஜூன் 2-ஆம் நாள் நடைபெற்ற கழகத்தின் புதிய பொதுக் குழுவின் தீர்மானங்களையொட்டி, ஜூன் 23ஆம் நாள் தலைமைக் கழக நிர்வாகக் குழுவிலும், 24-ஆம் நாள் கழக சொற்பொழிவாளர்கள் கலந்துரையாடல் கூட்டத்திலும், மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்திலும் விரைவில் நடைபெற இருக்கும் கழக மாநில மாநாடு குறித்தும் பேசப்பட்டது.

அராஜக, அடக்குமுறை, ஊழல் ஆட்சியான ஜெயலலிதா ஆட்சியிலிருந்து தமிழ் மக்களை விடுவிக்கும் தொடர் அறப் போராட்டத்திற்கான ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அதற்கு தொடக்கமாக ஜூலை 3, 4, 5 ஆகிய நாட்களில் இருந்து கழகப் பொதுக்கூட்டங்களை மாநில முழுதும் நடத்துவதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்களில்; கடந்த 13-ஆம் நாள் தி.மு.கழகம் நடத்திய விவசாய போராட்ட வெற்றியினையும் கொண்டாடுவதென்றும் - இலவச மின்சாரத்தை ரத்து செய்த அரசைக் கண்டித்து விவசாய வாகனப் பேரணிகளை ஒவ்வொரு வட்டத் தலைநகரிலும் நடத்தவேண்டுமென்று தலைமைக் கழகமும் - கழக விவசாய அணியும் விடுத்த வேண்டுகோளின்படி ஆங்காங்கு அந்தப் பேரணிகளை நடைபெற்றுள்ளதைப் பாராட்டியும்; பேரணிகளைத் தலைமை வகித்து நடத்தியவர்கள், பங்கேற்ற கழகக் கண்மணிகள் அனைவரையும் வாழ்த்தியும் - நாம் சற்றும் எதிர்பாராமல் இந்த அரசு பல இடங்களில் விவசாய வாகனப் பேரணிக்குத் தடைவிதித்து அந்தத் தடையை மீறி சிறைப்பட்டவர்களைப் போற்றியும் - விழாக்கள் எடுக்குமாறு மாவட்டச் செயலாளர்கள் தலைமைக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட

முடிவையும் சிறப்பாக நிறைவேற்றுமாறு நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் வேண்டுகோள் அறிக்கை வாயிலாகத் தெரிவித்துள்ளார்.

கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட இலவச மின்சார திட்டம்; பறிபோனதைப் போராடி மீட்டுக் கொணர்ந்த கழகச் செயல்வீரர்களைப் பாராட்டுவது மட்டுமல்லாமல் -

தமிழகத்தில் எதிர்காலத்தையே எல்லாத் துறைகளிலும் தரை மட்டமாக்க முனைந்து - அதற்குப் பாமர மக்களின் ஏமாளித்தனத்தைத் துணையாகக் கொண்டும் - கோடிக்கணக்கான ரூபாய் விளம்பரத் தொகை ஆதாயத்திற்காக ஒரு மாநிலத்தின் வருங்கால வளர்ச்சியே பலி கொடுக்கப்படுவதில் பங்கு பெற்றுள்ள பத்திரிகை தர்மவான்களின் பக்க பலத்தை அனுசரணையாகப் பெற்றும் - அட்டகாச, ஆடம்பர, அராஜக, ஊழல் ஆட்சி நடத்தும் கொடுமையிலிருந்து தமிழ் நாட்டு மக்களை விடுவிக்க தி.மு.க. நடத்த இருக்கும் தொடர் அறப்போருக்கு ஆதரவு திரட்டுவதும் - இந்தக் கூட்டங்களின் ஜனநாயக ரீதியான நோக்கமாக இருக்கவேண்டும்.

எல்லா மாவட்டங்களிலும் நமது கழகத்தின் முன்னணிப் பேச்சாளர்கள் அந்தத் தேதிகளில் முழங்கிட இருக்கிறார்கள்.

* **ஜூலை 3-ல் நான் விழுப்புரத்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறேன்.**
* **பொதுச் செயலாளர் பேராசிரியர் ஜூலை 3 திருவள்ளூரிலும், ஜூலை 6 கோவையிலும் பேசுகிறார்.**
* **துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சிலார் ஜூலை 3 சென்னை துறைமுகத்திலும் ஜூலை 5 அம்பேத்கர் மாவட்டத்திலும் பேசுகிறார்.**

ஆளுங் கட்சியினர் மதுரை மாநகரில் ஒரு மாநாட்டை நடத்தி - அதிகார துஷ்பிரயோகத்துக்கு வானம்கூட எல்லையில்லை என்பதை நிரூபித்துள்ளனர்! இதை நாம் மட்டும் சொல்லவில்லை! குமரி முதல் இமயம் வரையில் வெளிவருகிற முதுகெலும்புள்ள பத்திரிகைகள் அனைத்தும் பட்டவர்த்தனமாக ஆதாரபூர்வமாக எழுதிக் காட்டியுள்ளன!

வேறு சில ஏடுகளோ; மாநாட்டில் உடுத்திய பச்சைச் சேலையிலேயிருந்து - தும்மியது இருமியது உட்பட அனைத்தையும் பிரமாண்டமான செய்திகளாக்கியுள்ளன.

நமது கூட்டங்கள், மாநாடுகள், நிகழ்ச்சிகளின் செய்திகள் ஓரளவுக்கேனும் அந்த ஏடுகளில் வருவது குதிரைக் கொம்பேயாகும்!

எத்தனை ஆண்டுக் காலமாகவோ எதிரிகளின் இத்தகைய இருட்டடிப்பை மீறித்தான் இந்த இன எழுச்சி இயக்கத்தின் வலிமை காப்பாற்றப்பட்டு வருகிறது! கட்டுப்பாடாகச் செய்யப்படும் இருட்டுப் பிரச்சாரத்தைத் தூளாக்கி கழகக் கதிரொளி பிரகாசித்துக் கொண்டிருக்கிறது!

எனவே ஏடுகளில் நமது செய்திகள் வரும் என்று எதிர்பாராமல் - இருக்கின்ற சில ஏடுகளே நமக்குக் கேடயங்கள் என்ற ஆறுதலுடன்; நமது இடைவிடாத பிரச்சாரம் - அரசியல் தெளிவுண்டாக்கும் பிரச்சாரம் - ஊருக்கு ஊர் - வீதிக்கு வீதி - வீட்டுக்கு வீடு ஒலித்துக் கொண்டிருக்குமாறு செய்திட;

ஜூலை 3 ஆம் நாள் முதல் தொடங்கிடுக உன் தொண்டினை!

அன்புடன்,

மு. க.

(30-06-1992)

1919. துளைக்கிறது நெஞ்சை; துரைராசாவின் கடிதம்!

உடன்பிறப்பே,

இன்று நான் உனக்கு என் கைப்படக் கடிதம் எழுதவில்லை. ஆனால் ஒரு கண்ணீர் கொட்டும் கடிதத்தை இணைத்து அனுப்பியுள்ளேன். 1956-ஆம் ஆண்டு முதல் தி.மு.கழகம் இலங்கையில் ஈழத் தமிழர்களின் உரிமைகள் பறிபோவதைத் தடுத்து அவர்களுக்கு நிலையான நிம்மதியான வாழ்வு வழங்கப்பட வேண்டுமென்பதற்கான முயற்சிகளை இந்தியப் பேரரசு மேற்கொள்ள வேண்டுமென்று குரல் எழுப்பி வருகின்ற இயக்கமென்பதை இப்போது நான் புதிதாகச் சொல்ல வேண்டியதில்லை. ஈழத் தமிழர்களுக்காகப் பலமுறை பல்லாயிரக்கணக்கான கழக உடன்பிறப்புகள் சிறைப்பட்டிருக்கிறோம். சட்டமன்றப் பதவிகளைத் துறந்திருக்கிறோம். அவ்வளவு ஏன்; ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினையில் நாம் கொண்ட கவலையின் காரணமாகத்தான் இரண்டே ஆண்டுகளில் நமது ஆட்சியே கலைக்கப்பட்டது.

ஈழத்தமிழர் நலனுக்காக கழகம் நடத்திய அறப்போரில் இருபதுக்கு மேற்பட்ட கழகக் கண்மணிகள் தீக்குளித்து மடிந்தனர் - இன்னமும் தடா சட்டம் எனும் தணலின் கொடுமையைக் கழகம் அனுபவித்துக்கொண்டுதானிருக்கிறது.

ஆம்; அன்று அலைகளின் ஓரம் போராளிகள் உலவுகிறார்கள் என்று இங்குள்ள ஏடுகளும் அங்குள்ள மத்திய அரசு உளவு நிறுவன அதிகாரிகளும் சிறு கடுகைப் பெரும்பாறையாக்கிக் காட்டி நாள்தோறும் அதே வேலையாக இருந்து கழக ஆட்சி கலைக்கப்பட்டதால்தான் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு அமைதி காக்கப்படுமென வரிந்து கட்டிக்கொண்டு வரைந்து தள்ளினர்.

கழக ஆட்சி கலைக்கப்பட்டு நாலு மாதத்திற்குப் பிறகு கவர்னர் பீஷ்ம நாராயண் சி அவர்கள் காலையிலே நிருபர்களை சந்தித்து விடுதலைப் புலிகளை அறவே விரட்டி விட்டோம் - சட்டம் ஒழுங்கு இப்போது திருப்திகரம் என்று முழங்கினார். அன்றிரவுதான் ராஜீவ் காந்தி அவர்கள் தமிழகத்தில்; அதுவும் தலைநகருக்கு அருகாமையில் படுகொலை செய்யப்பட்டார்.

கழக ஆட்சியில் ராஜீவ் காந்தி எட்டுமுறை தமிழகம் வந்து சென்றார். கழக ஆட்சி அவரைப் பத்திரமாகப் பாதுகாத்து டெல்லிக்கு அனுப்பியது. ஆனால் கவர்னர் ஆட்சி; அதாவது ஜனாதிபதி ஆட்சி - குறிப்பாகச் சொல்லப்போனால் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு எனக் காரணம் காட்டிக் கழக ஆட்சியைக் கலைத்த ஜனாதிபதி ஆட்சி - அதுவும் கவர்னர் பர்னாலா அறிக்கை தர மறுத்த பிறகும் கழக ஆட்சியைக் கலைத்த நேர்மையாளரான (?) ஆர்.வி. அவர்களின் ஜனாதிபதி ஆட்சி - ராஜீவ்காந்தியின் சிதறுண்ட உடலைத்தான் சவப்பெட்டியில் வைத்து டெல்லிக்கு அனுப்பியது!

நடந்தவைகளை இப்போது நான் கோடிட்டு நினைவூட்டுவதற்குக் காரணம்; இப்போது நான் இந்தக் கடிதத்துடன் இணைத்துள்ளேனே ஒரு கடிதம்; அந்தக் கடிதம் என் நெஞ்சிலே எழுப்பியுள்ள நினைவலைகளின் விளைவு என்பதை சுட்டிக்காட்டுவதற்காகத்தான்!

அன்று அலைகளின் ஓரம் புலிகள் உலவுவதாகச் சொன்னார்கள் - ஓலமிட்டார்கள் - இன்று நீலகிரி மலைகளின் ஓரம் புலிகள் ஊடுருவியிருப்பதாக அறிவிக்கிறார்கள்!

கடந்த ஓராண்டு ஆட்சியில் எத்தனையோ விடுதலைப் புலிகள் தமிழக சிறைகளில் இருந்து தப்பியிருக்கிறார்கள்!

ஆனால்; உளவுத் துறைகளும் - சில பெரிய பத்திரிகைக்காரர்களும் - மத்திய அமைச்சர்களும் அன்று போட்ட சத்தம் இன்று போடவில்லை பார்த்தாயா?

ஏன்? ஏன்? காரணம் நான் சொல்லித்தான் நீ தெரிந்துகொள்ள வேண்டுமா?

போராளிகள் பிரச்சினை இருக்கட்டும்; ஈழத்தில் அப்பாவித் தமிழர்கள் இலங்கை இராணுவத் தாக்குதலுக்கு ஆளாகிச் செத்துக் கொண்டிருக்கிறார்கள் - இங்கு அகதிகளாக வந்துள்ள

ஈழத் தமிழர்களோ இருந்தும் இறந்தவர்களாக சீரழிந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையை விளக்கும் ஒரு கடிதம் சி.என். துரைராசா என்னும் ஒருவர் இலங்கைத் தமிழ் அகதிகள் சார்பில் எழுதப்பட்டது; இன்று தினமணி (10.7.92) சென்னைப் பதிப்பில் வெளிவந்துள்ளது. இந்தக் கடிதத்தைத்தான் இணைத்து அனுப்புவதாக கடிதத் தொடக்கத்தில் நான் குறிப்பிட்டிருந்தேன். நானொரு கடிதம் தனியாக எழுதவேண்டாமென்றுதான் நினைத்தேன். ஆனால் தினமணியில் வந்துள்ள துரைராசா கடிதத்தைப் படித்ததும் வழிந்த கண்ணீரில் என் பேனா நனைந்து விட்டது. அந்தக் கண்ணீரைக்கொண்டே இந்தக் கடிதத்தை எழுதிவிட்டேன்.

இதோ தினமணியில் சி.என். துரைராசா அவர்கள் எழுதியுள்ள கடிதம் :-

> தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு கடந்த காலங்களில் மத்திய - மாநில அரசுகளும் தமிழக மக்களும் அளித்த அன்பும், ஆதரவும் மறப்பதற்கில்லை. நாம் இலங்கையில் பட்ட துன்பங்களும், துயரங்களும் சொல்ல முடியாதவை. எத்தனையோ உயிர்களைப் பலி கொடுத்தோம். கடலிலும் எம்மை ஓடஓட விரட்டினார்களே மறக்க முடியுமா?
>
> இலங்கையின் வடகிழக்கு மாகாண மக்களின் உண்மையான பிரச்சினைகளை தீர்க்க இலங்கை அரசு முயல்வதில்லை. அதிபர் பிரேமதாசர் முன்னுக்குப் பின் முரணாகப் பேசி காலம் கடத்திக் கொண்டிருக்கிறார். அவர் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டினார். அதிலே தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்கலாமென்றார். அவர் விரும்பியிருந்தால் சர்வகட்சி மாநாட்டில் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கலாம். அரசியல் சதுரங்க விளையாட்டிலே இலங்கையின் முக்கிய சிங்கள அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசீயக்கட்சியும், சுதந்திரக் கட்சியும் ஏட்டிக்குப் போட்டியாக ஒன்றை ஒன்று குற்றம் சாட்டிக் கொள்கின்றன. ஆனால் தமிழர்கள் பிரச்சினையில் ஒத்த கருத்துக்கள் கொண்டவையாகவே இருக்கின்றன.

சர்வகட்சி மாநாட்டை சுதந்திரக் கட்சி பகிஷ்கரிப்பது ஏன் என்பதுதான் கேள்வி. அம் மாநாட்டில் அதுவும் கலந்துகொண்டு ஒரு தீர்மானம் எடுத்திருந்தால் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கும்.

தமிழ்மண்ணை மீட்கப் புறப்பட்ட போராளிகள் தமக்குள்ளே மோதிக் கொண்டனரேயன்றி கண்ட பலன்தான் என்ன? தமிழ் இளைஞர்களை வைத்தே அரசியல் ஆதாயம் தேட நினைத்தவர்கள் பலன் அடைந்தார்கள். நாம் அவர்களின் அரசியல் வலைக்குள் வீழ்ந்து சின்னாபின்னப்பட்டு அழிந்து கொண்டிருக்கிறோம்.

கடந்த சில நாள்களாக வடகிழக்கு மாகாணம் மீது இலங்கை அரசு ஏவிவிட்ட பயங்கர தாக்குதல் பொதுமக்களையும் சேர்த்தே காவு கொள்கிறது.

ஈழ அகதிகள் இங்கு நிரந்தரமாக இருக்க நினைக்கவில்லை. பிரச்சினையில் தீர்க்கமான முடிவையே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். தமிழகத்தில் அகதிகள் படும் வேதனைகள் சொல்லி மாளாது. உலகில் அகதியாக யாருமே வாழக்கூடாது என்று பிரார்த்திக்கிறேன். தமிழகத்தில் உள்ள அகதிகளை வெளியேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இன்றைய நிலையில் இலங்கைக்கு எந்த அகதியும் செல்லத்தான் முடியுமா? நாம் சுகபோகங்களை அனுபவிக்க இங்கு வரவில்லை. எமது உயிர்களைப் பாதுகாக்கவே வந்தோம். இப்பொழுது ஒன்று மட்டும் தெளிவாகப் புரிகின்றது.

இலங்கையில் மடியும் எமது மக்களுடன் நாமும் மடிந்திருக்கலாம். நாட்டைவிட்டு வெளியே வந்து இழிவுகளுக்கு ஆளாக வேண்டியுள்ளது.

அகதிகள் என்றால் போக்குவரத்து பஸ்களில், செயலகங்களில், அதிகாரிகளின் பார்வையில் அவமானத்துக்குரியவர்களாக ஆக்கப்பட்டுவிட்டோம். மத்திய - மாநில அரசுகள் எம்மை இங்கு வைத்திருக்க விரும்பவில்லையேல், எமது இலங்கைப் பிரச்சினையில்

முழு கவனம் எடுத்து முதலில் நல்ல விடிவு ஏற்படுத்த வேண்டும். இல்லையேல் அகதிகளை ஏற்கும் நாடுகளுக்கு எம்மை அனுப்பவேண்டும். இந்திய மக்களே, எம்மை அனுதாபத்துடன் மனித நேயத்துடன் பாருங்கள். நாங்களும் மனிதர்கள்தான். இலங்கை வட மாகாணத்துக்கு மக்கள் திரும்பிச் செல்லமுடியுமா என்பதை சிந்தித்துப் பாருங்கள். இக்கட்டான இவ்வேளையில் இலங்கைத் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வுக்கு ஒரு வழி காட்டுங்கள்.

- சி. என். துரைராசா

உடன்பிறப்பே,

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு கடந்த காலங்களில் மத்திய - மாநில அரசுகளும் தமிழக மக்களும் அளித்த அன்பும் ஆதரவும் மறப்பதற்கில்லை.

என்று துரைராசா; தினமணியில் எழுதியுள்ள தனது கடிதத் துவக்கத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆம்; அகதிகள் முகாம்களில் உள்ள ஈழத் தமிழர்கள் மட்டுமல்ல; கடந்த காலத்தில் ஈழத் தமிழ் மாணவர்களுக்கு தமிழகத்தில் வழங்கப்பட்ட சலுகைகளும் கூட இப்போது பறிக்கப்பட்டு விட்டன!

போராளிகள் பிரச்சினைகள் என்பது வேறு - ஈழத்து அப்பாவித் தமிழர்கள், அதேபோல இங்கு வந்துள்ள ஈழத்துத் தமிழ் அகதிகள் பிரச்சினை என்பது வேறு என்று மத்திய மாநில அரசுகள் எண்ணிச் செயல்பட முன்வராமைக்குக் காரணம் எதுவோ?

அன்புடன்,

மு. க.

(11-07-1992)

1920. இந்தியா எங்கே போய்க்கொண்டிருக்கிறது?

உடன்பிறப்பே,

ஒருமைப்பாடும் ஒற்றுமையும் வலிமையும் கட்டிக்காக்கப்பட்டு - நேர்மையின் இருப்பிடமாகவும், மனித நேயத்தின் உறைவிடமாகவும், ஒழுக்கத்தின் நிலைக்களனாகவும் எந்த இந்திய நாடு திகழ வேண்டுமென தியாகத் தலைவர்கள், அறிவுசான்ற ஆன்றோர்கள், சன்மார்க்க சான்றோர்கள் விரும்பினார்களோ; அதற்கெனத் திட்டமிட்டு உழைத்தார்களோ; அந்த இந்தியா நாடு இன்று எங்கே போய்க்கொண்டிருக்கிறது?

கேள்விக்கு விடை பெருமூச்சாகவன்றோ கிளம்புகின்றது!

எங்கோ ஒரு உறுப்பில் ஒரு பகுதி கெட்டிருக்கிறதென்றால்கூட சரிசெய்து விடக்கூடுமென்ற நம்பிக்கை பிறக்கலாம். ஆனால் இன்று அடி முதல் முடி வரையில் முழுமையும் சிதலமாகிச் சீரழிந்து விட்டதோ என்ற அச்சமன்றோ; சிந்திக்கக் கூடியவர்களின் கண்களில் கலக்கத்தையும் இதயத்தில் நடுக்கத்தையும் உருவாக்கி விட்டிருக்கிறது.

ஆம், இன்று உலகமுழுதும் இந்தியாவைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறது - இதன் கீர்த்தி குறித்து அல்ல! கீறல் விழுந்துவிட்டதே இந்தியாவின் பெருமையில் என்பது குறித்து! இந்தக் கீறல், சுவரின் வெடிப்பாக மாறி; கட்டிடமே தகர்ந்து விடுமோ என்ற அளவுக்கு மனக் கிலேசம் ஏற்பட்டுள்ளது!

காந்தியடிகளும் அவருடன் அணி வகுத்துக் களத்தில் நின்ற தியாகத் தலைவர்களும் - அந்தத் தலைவர்களின் பின்னால் அணி அணியாக உயிருக்குத் துணிந்து திரண்டெழுந்த தொண்டர்களும் - சுதந்திர இந்தியாவில் சுகவாழ்வு ஏழை எளியோர்க்குக் கிடைக்குமென்றே விடுதலைப் போர்க்கொடி உயர்த்தினர்.

ஆனால்? ஆனால்? நாற்பத்தி ஐந்து ஆண்டு காலச் சுதந்திர இந்தியாவில் இன்றைக்குள்ள நிலையில் மக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்டோர் இன்னமும் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்கின்றனர்! வாழ்கின்றனரா? இல்லை, இல்லை - வதங்குகின்றனர்!

இந்தப் பெரும் கேட்டினை அகற்றிட வழிகாணும் முயற்சியில் அக்கறையின்றி அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவதில் அல்லவா ஆர்வம் காட்டப்படுகிறது! அதன் நிமித்தம் இந்து முஸ்லிம் போராட்டமும் இரத்தக் களறியும் எழுவதற்கன்றோ ஆர்ப்பாட்டக் கொடி ஏற்றப்படுகின்றது! மதத்திலே அரசியல்; அரசியலிலே மதம் எனக் குழப்பம்! கோமாளித்தனம்! அதில் கிடைத்த வரையில் ஆதாயமென சுருட்டல்!

அயோத்திப் பிரச்சினை முடிவில்லாத அரசியலாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது!

பற்றியெரியத் தொடங்கிய பஞ்சாப்பில் பல்லாயிரம் உயிர்கள் பலியான பிறகும் தீர்வு இல்லை! தீ நின்றபாடில்லை!

காஷ்மீரத்துப் புகைச்சல்; தணிந்திடும் நிலையில் இல்லை; தணிப்பதற்கோர் வழியும் காணவில்லை!

ஏதோ - அதிகாரத்தில் இருந்தவரையில் இலாபம்; அதற்குள் பஞ்சாப் என்றும் காஷ்மீர் என்றும் வீணாக அலட்டிக் கொள்வானேன் என்று அனைத்துக்கட்சிக் கூட்டங்கள்! ஆலோசனைகள்! கருத்து மழைகள்! எல்லாமே நாடகங்களின் காட்சி மாற்றங்களாக அமைகின்றனவே தவிர உற்ற பயன் என்ன? வினா, விடையைத் தேடி அலைகிறது!

அன்று தொடங்கிய அகில உலகப் புகழ் போபர்ஸ் ஊழல் இன்னமும் ஆஸ்த்துமா வியாதி போல இழுத்துக் கொண்டே கிடக்கிறது. அதில் பெருந் தலைகளுக்கு தொடர்பு எனச் செய்திகள் வந்து, அது தொடர் கதையாகி - சோலங்கி கடித ஊழலும் அந்தப் பாரதக் கதையில் கிளைக் கதையாகி நாடும் நானிலமும் சிரிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

புதிய அரசு புதிய பொருளாதாரத்திட்ட அடிப்படையில் நிதிநிலை அறிக்கையை புது டெல்லி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது! அந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி

தொலைக்காட்சியில் கருத்தறிவித்த முக்கிய புள்ளிகளில் ஒருவர்.....யார்? யார்? அவர் யார்?

மூவாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் கபளீகரம் ஆன பங்குச் சந்தை மோசடியின் கதாநாயகன் அர்ஷத் மேத்தாதான் நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி தொலைக் காட்சியில் கருத்தறிவித்த கனவான்!

இதிலிருந்தே இந்தியாவின் புதிய பொருளாதார திட்டத்தின் மேன்மை புரிகிறதல்லவா?

ராஜீவ் பெயரால் சோனியா காந்தி அவர்கள் அமைத்துள்ள நினைவு நிறுவனத்துக்கு ஐம்பது லட்ச ரூபாய் நிதி வழங்கியிருப்பதும் இதே அர்ஷத் மேத்தாதான்!

அமைச்சர்கள் பலருக்கு இந்த மாபெரும் ஊழலில் மாட்டல் உண்டு என செய்திகள் வந்த வண்ணமிருக்கின்றன.

இவ்வளவு நாட்களுக்குப் பிறகு இப்போது தான் ஒருவர் பதவியிலிருந்து இறக்கப்பட்டிருக்கிறார்.

இன்னும் பலரின் பெயர்ப் பட்டியல் புதிய குடியரசுத் தலைவர் தேர்தல் முடிந்த பிறகு வரக்கூடும்.

பழைய குடியரசுத் தலைவரின் மாளிகை எதற்கெல்லாம் பயன்பட்டது என்பதை நாமல்ல; சுப்பிரமணியம் சுவாமியே பட்டவர்த்தனமாக பகிரங்கமாக வெளியிட்டிருக்கிறார். அரசியல் மாயாஜால வித்தைகளுக்காக பயன்பட்டது மட்டுமின்றி; குடியரசுத் தலைவரின் திருமுகனார் திரட்டுகிற அறக்கட்டளை நிதிக்கும் - பலகோடி ரூபாய் பெறுவதற்கும் மாளிகையின் அலுவலகமும், அதிகாரமும்; துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது என்று குற்றச்சாட்டு!

எவ்வளவு உச்சமான இடத்தைப் பற்றி; எத்துணை குமட்டல் எடுக்கும் ஊழல் செய்தி இது என்பதை தர்மவான்கள் தரம் பிரித்துப் பார்க்க வேண்டாமா?

அரசின் நெறிமுறை ஆணைகள் (Code of Conduct) இமயம் முதல் குமரி வரையில் மீறப்படுகின்றன! அநியாயமல்லவா?

ஆம்; இங்கு குமரியும் மீறியுள்ளதாகத்தானே குற்றச்சாட்டு! குமரி என்றால் செல்வி என்றும் பொருள் உண்டே! செல்வி

ஜெயலலிதா எனப்படும் முதலமைச்சரே அரசின் நெறிமுறை ஆணையை மீறிவிட்டு; அது ஒன்றும் தவறல்ல என சாதிக்கிறார்!

தவறு செய்வதை விடப் பெருந்தவறு; செய்யப்பட்ட தவறு; தவறே அல்ல என்று பம்மாத்துவது!

நாடாளுமன்ற அவைகளிலும், சட்டமன்ற அவைகளிலும் வலிமை வாய்ந்த எதிர்க்கட்சிகள் இல்லை - அதனால் கேட்பதற்கு ஆளில்லை; யாராவது விசும்பினால் விலை கொடுத்து வாங்கி விடலாம், அல்லது அதிகாரத்தைக் காட்டி மிரட்டி விடலாம் என்று இஷ்டத்துக்கு நடக்கிறது மேலேயும் கீழேயும் நிர்வாகம்!

அராஜகங்கள்
அடக்குமுறைகள்
சாதிமதக் கலவரத்துக்கு
வித்திடும் நிகழ்ச்சிகள்
வன்முறைகள்
வறுமையின் கொடுமைகள்
பாமாயில் வாங்குவது முதல்
படைக்கலன் வாங்குவது வரை
ஊழல்கள்!
கடுகு வாங்குவது முதல் கப்பல்
வாங்குவது வரை மோசடிகள்!
போபர்ஸ் போதாதென்று
பங்குச் சந்தை ஊழல்!
மயிலிறகு குட்டி போட்டது என்பது போல
மாநிலத்தில் டான்சி முதல்
ஸ்பிக் வரை
மாளாத ஊழல்கள்!

பக்கத்து காங்கிரஸ் மாநிலங்களில் பற்பல ஊழல்கள் - பத்திரிகைகள் பட்டியல் கட்டத் தொடங்கிவிட்டன!

இவற்றை ஏன் என்று கேட்க முடியாமல்; மேலே இருப்பவர்களுக்கு மெஜாரிட்டி பிரச்சினை!

இருக்கிற எண்ணிக்கைக்குள்ளே எத்தனையோ பிணக்கு!

பவார் ஒருபுறம்! அர்ஜுன் சிங் ஒருபுறம்!

இத்தனை நாள் தாங்கியதே பெரிதென்று மேலிடம் நிலையற்றுத் தடுமாறும் போது; மாநிலங்களில் நடக்கும்

விபரீதங்களின் கடிவாளத்தைப் பிடித்து இழுத்தால்; ஆட்சி வண்டியே கவிழ்ந்து விடுமோ என்ற பயம்!

இதையெல்லாம் பார்க்கும் போதுதான் இந்தியா எங்கே போய்க் கொண்டிருக்கிறது? என்ற கேள்வி தவிர்க்க முடியாததாகிவிடுகிறது!

பொறுத்திருப்போம்; இதற்கெல்லாம் ஒரு நல்ல தீர்வு வந்தே ஆகவேண்டும்! அந்த நாளை விரைவுபடுத்துவோம்!

அன்புடன்,

மு. க.

(13-07-1992)

1921. வேதனையின் விளிம்பில் விவசாயிகள்!

உடன்பிறப்பே,

ஜெயலலிதா தலைமையில் உள்ள அ.தி.மு.க. அரசு தமிழக விவசாயிகளின் தலையில் கை வைத்து அவர்களின் வாழ்வைத் தரை மட்டமாக்குவது என்று தீர்மானித்துக் கொண்டு செயல்படுவதாகவே தோன்றுகிறது.

விளை பொருள் உற்பத்திக்கான செலவு ஒவ்வோர் ஆண்டும் அதிகமாகிக் கொண்டே போகும் நிலையில் விவசாயிகளின் சுமையைப் பெருமளவு குறைப்பதற்காக கூடுதல் இழப்பாக முப்பது கோடி ரூபாய் ஆகுமென்பதையும் பொருட்படுத்தாமல் கழக ஆட்சியில் அவர்களின் பம்ப் செட்டுகளுக்கான மின் இணைப்புக்கு இலவசமாக மின்சாரம் வழங்கும் திட்டம் 1990-ல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

இரண்டாண்டு கால கழக ஆட்சியில் முதலாண்டு நாற்பதாயிரத்துக்கு மேற்பட்ட பம்ப் செட்டு மின் இணைப்புகள் அதிகமாக வழங்கப்பட்டன.

1991-ல் மேலும் நாற்பதாயிரம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு தரப்படுமென அறிவித்து அதற்கென எழுபது கோடி ரூபாயும் ஒதுக்கி வைக்கப்பட்டது.

ஆனால் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தவுடன் அந்த நாற்பதாயிரம் பம்ப் செட்டுகளின் மின் இணைப்பு என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை.

அதற்கு மாறாக இருபத்தி ஐயாயிர ரூபாய் முன்பணம் கட்டுபவருக்கே மின் இணைப்பில் முன்னுரிமை தரப்படுமென ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது விவசாயிகளின் தலையில் விழுந்த இடியாகும்!

இதனைத் தொடர்ந்து இலவச மின்சாரமும் ரத்து செய்யப்பட்டு தி.மு.கழகமும், பாட்டாளி மக்கள் கட்சியும் போராடியும்; விவசாய சங்கங்கள் கண்டனக் குரல் எழுப்பியும் - கழக ஆட்சியில் விவசாயிகள் பெற்ற அந்த இலவச மின்சார திட்டத்தை மீண்டும் நிலை நாட்ட வேண்டியதாயிற்று!

இதோ; மற்றொரு பேரிடி போன்ற விபரம்; விவசாயிகளை வாட்டி வதைக்கும் விவகாரம்! 1992-93 ஆம் ஆண்டுக்கான இந்த அரசின் நிதி நிலை அறிக்கையில் ஏக்கர் ஒன்றுக்கு ஏற்கெனவே உள்ள தல வரியை 45 காசிலிருந்து நூறு காசாகவும்; தல மேல் வரியை ரூ. 2.50லிருந்து ரூபாய் பத்து ஆகவும்; உயர்த்தி நில வரியை மிகவும் அதிகமாக்கியுள்ளது.

அதன்படி நெல்விளையும் நிலத்துக்கு ஏக்கர் ஒன்றுக்கு 1401வது பசலியில் ரூபாய் 65 வரி கட்டிய விவசாயி; அடுத்த 1402வது பசலிக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 202 வரி கட்ட வேண்டும்.

கரும்பு, வாழை, மஞ்சள் போன்ற வணிகப் பயிர்கள் விளையும் நிலத்துக்கும் நீண்ட காலப் பயிர் விளையும் நிலத்துக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 85 வரி கட்டிய விவசாயி; அடுத்த பசலிக்கு ரூபாய் 262 வரி கட்ட வேண்டும்.

கடலை, எள் விளையும் நிலத்துக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 45 வரி கட்டிய விவசாயி; அடுத்த 1402வது பசலிக்கு ரூபாய் 142 வரி கட்ட வேண்டும்.

கால்நடை தீவனப் பயிர்கள் உள்ளிட்ட சிறு தானியம் முதலிய புன்செய்ப் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 35 வரியாக 1401வது பசலியில் கட்டிய விவசாயி; அடுத்த பசலி முதல் ரூபாய் 112 வரியாகக் கட்ட வேண்டும்.

மொத்தத்தில் பார்த்தால் முன்பு இருந்த வரியை விட மூன்று மடங்கு அதிகமாக வரி விவசாயிகளின் தலையில் ஏற்றப்பட்டிருக்கிறது.

இவைமட்டுமல்ல; இன்னும் எத்தனையோ தொல்லைகள் விவசாயிகளுக்கு!

அவற்றை விவாதித்து ஏற்ற முடிவுகளை எடுத்து விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளுக்கு வெற்றி தேட

வேண்டுமென்ற நோக்குடன் ஆகஸ்டு திங்கள் இரண்டாம் நாளில் திண்டுக்கல்லில் கழக விவசாய அணியின் சார்பில் விவசாயிகள் கருத்தரங்கம் ஒன்று ஏற்பாடாகியுள்ளது.

அதுபற்றி மதுரை மாவட்டச் செயலாளரும், திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டச் செயலாளரும் விடுத்துள்ள அறிக்கை விளக்கமளிக்கிறது.

தலைமைக் கழக விவசாய அணிச் செயலாளரும், இணைச் செயலாளரும் கலந்துகொள்ளும் அந்தக் கருத்தரங்கில் விவசாயிகளின் பிரச்சினையில் எடுக்கப்படும் முடிவுகள் மிக முக்கியமானதாக இருக்கும் என்பதை மட்டும்; வேதனையின் விளிம்பில் நிற்கும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உன் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

மு. க.

(15-07-1992)

1922. பாலைவனத்தில் ஒரு பேரீச்சை மர நிழல்!

உடன்பிறப்பே,

தி.மு.க. ஆட்சியின் போது குமுறும் எரிமலையாக - கொந்தளிக்கும் கடலாக - சுழலும் சூறாவளியாக - காங்கிரஸ் கட்சி வரிசையிலிருந்து கனல் கக்கிக் கொண்டிருந்த நண்பர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்; திடீரென்று ஓராண்டு காலமாக எதிர்க் கட்சியின் தலைவர் பொறுப்பில் அமர்ந்த பிறகு, குளிர்ந்த தென்றலாக - அந்த தென்றல் கலந்து வீசும் வெண்சாமரமாக - கொலுமண்டபத்தில் குனிந்து நிமிரும் ஆலவட்டமாக மாறித் திகழ்ந்து; இப்போது ஆண்டுவிழா பூர்த்தியானதும் அ.தி.மு.க. ஆட்சி குறித்த விமர்சனங்களை வெளிப்படையாக செய்திட ஓரளவு துணிவை வரவழைத்துக் கொண்டிருக்கிறார். பாராட்டத்தான் வேண்டும்.

உடன்பிறப்பே, நீ கோபித்துக்கொண்டு முணுமுணுப்பது எனக்குத் தெரியாமல் இல்லை! எல்லோருக்கும் நீ பதில் சொல்லி எழுதிக் கொண்டிருக்க வேண்டுமா என்று என்னைக் கோபிப்பாய்!

என்ன செய்வது; சாணமாக இருந்தாலும் அதில் பிள்ளையார் என்று ஒன்றைப் பிடித்து வைத்து விட்டால் அப்போது சாணத்தின் மதிப்பு உயர்ந்து விடுகிறதல்லவா?

அதனால்தான் ஆட்கள் என்று பார்க்காமல்; அவர்கள் வகிக்கும் பொறுப்புகள் முக்கியமானவைகளாக இருக்கும்போது; அந்தப் பொறுப்பில் இருப்போர் உதிர்க்கும் கருத்துக்களை உதாசீனப்படுத்தாமல் உரிய விளக்கங்களை அளிக்க வேண்டியிருக்கிறது.

பார்கள் வைத்து மது வகையறாக்கள் வழங்கிடும் ஜெயலலிதா அரசைக் கண்டித்ததோடு பூரண மதுவிலக்கு கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தியுள்ள எதிர்க்கட்சித் தலைவர்,

மதுரை வெற்றி மாநாட்டில் ராஜீவ் காந்தியின் செல்வாக்கைக் குறைத்துக் கூறிய ஜெயலலிதாவின் போக்கும் தவறானது என்றும் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார். அதுமட்டுமா? அச்சமில்லை! அச்சமில்லை! என்ற பாரதியாரின் பாட்டை நினைத்துக் கொண்டாரோ என்னமோ - அ.தி.மு.க. அரசின் தவறுகளைத் தட்டிக் கேட்போம். ஊழல்களைச் சுட்டிக் காட்டுவோம் என்றும் முதுகெலும்பை நிமிர்த்திக்கொண்டு மார்தட்டியிருக்கிறார். இந்த வீர வாசகம் அப்படியே தினமலரில் வெளிவந்திருக்கிறது.

காங்கிரஸ், வரும் காலங்களில் பொறுப்புணர்வுடன் செயல்பட்டு, காங்கிரஸ் ஆட்சி அமையும் வகையில் பணியாற்றும் என்றும் சூளுரை மேற்கொண்டிருப்பதைப் பத்திரிகையாளர் கூட்டத்தில் பறை சாற்றியிருக்கிறார்! ஆம்; முரசு கொட்டி முழக்கியிருக்கிறார் என்றே கூற வேண்டும்!

சீசரின் உடலருகே நின்றுகொண்டு சீறிப் பாயும் சிங்கமென உரையாற்றி ரோமாபுரி மக்களை உருகிட வைத்த ஆண்டனி; இடையிடையே புரூடஸ் ஒரு நாணயமான மனிதன் என்று கூறிக்கொண்டே புரூடசை மக்கள் மன்றத்துக்கு குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தினானே - அதைப் போல, அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி தொடரும் என்று சொல்லிக்கொண்டே ஜெயலலிதா அரசின் போக்கு, ஜெயலலிதாவின் பேச்சு ஆகியவற்றை நண்பர் பாலசுப்பிரமணியம் கடுமையாக விமர்சித்திருக்கிறார்.

> தமிழக அரசு அனுமதித்து நடத்தப்படும் மதுபானக் கடைகளில் கள்ளச் சாராயமும் மற்றும் நம்பர் 2 எனப்படும் போலிச் சாராய மது பாட்டில்களும் விற்பனை செய்யப்படுகின்றன. கள்ளச் சாராயம் பெருமளவுக்கு அதிகரித்து விட்டது. மாநிலத்தில் பெரும் மோதல்கள் ஏற்படுவதற்குக் கள்ளச் சாராயமும் ஒரு காரணம். கிராமங்களில் உள்ள மதுபானக் கடைகளில் குறைந்த விலையில் கள்ளத்தனமானதும் போலியானதுமான மது வகையறாக்கள் விற்கப்படுகின்றன. அந்நிய மதுவினால் கிராம, நகர மக்களும் தொழிலாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதுவரையில் நான் குறிப்பிட்டவை எதிர்க்கட்சித் தலைவரது பேட்டியின் ஒருபக்கம்! இனி மற்றொரு பக்கத்தையும் பார்க்கலாம்.

ராஜினாமா செய்துள்ள மத்திய அமைச்சர் ப. சிதம்பரத்துக்கும் பங்கு மார்க்கெட் ஊழலுக்கும் தொடர்பு எதுவும் கிடையாது.

சென்னையில் இருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துள்ள இந்த உண்மை (?) டெல்லியில் சிதம்பரத்தை மிக அருகில் வைத்துக்கொண்டிருந்த பிரதமர் நரசிம்மராவுக்கு எப்படித் தெரியாமல் போயிற்று என்பதுதான் விந்தை! வேடிக்கை!

மிஸ்டர் சிதம்பரம் - நீங்கள் எதற்காக தேவையில்லாமல் ராஜினாமாக் கடிதம் அனுப்ப வேண்டும். உங்கள் மீது எந்தத் தவறும் இல்லை. நீங்கள் மிக அதிக விலையுள்ள ஷேர்களை குறைந்த விலை கொடுத்து வாங்கவுமில்லை. அதற்காக அந்த நிறுவனத்துக்கு முறைகேடான சலுகை எதையும் அளிக்கவுமில்லை. எனவே உங்களின் ராஜினாமா கடிதத்தை நான் ஏற்கவில்லை. ஜனாதிபதிக்கு அனுப்பவுமில்லை. கிழித்துக் கூரையில் போட்டுவிட்டேன்.

என்று பிரதமர் நரசிம்மராவ் தொலைபேசியில் திரு. சிதம்பரத்திடம் ஒருவேளை பேசியிருப்பாரோ என்னவோ! அப்படியென்றால் சிதம்பரம் ராஜினாமா பிரதமர் ஏற்பு என்றெல்லாம் ஏடுகளில் செய்தி இந்தியா முழுமையும்; ஏன் வெளிநாடுகளிலே கூட பிரசுரிக்கப்பட்டது ஒரு கனவாக இருக்குமோ என்ற சந்தேகம் நமக்கே எழுகிறது; நம்மூர் எதிர்க்கட்சித் தலைவரின் பேட்டியைப் படித்த பிறகு!

அது போகட்டும் டெல்லி விவகாரம்; இப்போது தமிழ்நாட்டு டான்சி விவகாரத்துக்கு வருவோம்.

நண்பர் பாலசுப்பிரமணியத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு; தினமணியிலும் வெளி வந்துள்ளது.

டான்சி நிலம் புகாரை கருணாநிதி நிரூபிக்க வேண்டும்

என்பது தினமணி செய்திக்கு தலைப்பு - இப்போது செய்தியைக் காண்போம்!

முதலமைச்சர் ஜெயலலிதா சென்னையில் டான்சி நிலம் வாங்கியதில் முறைகேடு நடந்திருப்பதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி சவால் விட்டுள்ளார். இதனால் புகாரை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு கருணாநிதிக்குத்தான் உள்ளது என்று சட்டப்

பேரவை எதிர்க் கட்சித் தலைவர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இதுதான் அந்த ஏட்டில் வந்துள்ள செய்தி! - எதிர்க்கட்சித் தலைவருக்கு ஓராண்டு சாதனை விழாவுக்குப் பிறகு கண்டிக்கும் தைரியம் வந்துள்ளது மட்டுமல்ல; கூடவே கொஞ்சம் குறும்பும் கிண்டலும் சேர்ந்துகொண்டிருக்கிறது என்பதும் புரிகிறது. அவரது குறும்பையும் கிண்டலையும் நான் ரசிக்கிறேன். என்ன இருந்தாலும், இங்கிருந்து சென்றவரல்லவா! பெருங்காயம் இருந்த பாண்டம்; அந்த மணம் போகுமா?

டான்சி ஊழல் என்னவென்று நான் நிரூபிக்க வேண்டும் என்கிறார்.

உடன்பிறப்பே; ஒரு எதிர்க்கட்சித் தலைவர் இத்தனை நாள் பத்திரிகைகளைப் படித்திருக்க மாட்டாரா? தமிழ் ஆங்கிலம் முதலிய எல்லா ஏடுகளில் டான்சி நிலம் பற்றிய விபரங்கள் விளக்கமாக வந்துள்ளனவே; அவற்றைக் கவனிக்காமல் விட்டிருப்பாரா? அவரது கட்சியின் அதாவது தமிழ்நாடு காங்கிரசின் தலைவர் கூட; டான்சி நில விவகாரத்தில் குறையிருக்கிறது என்றும் ஆனால் அதைக் கருணாநிதி காட்டக் கூடாது என்றும் தெரிவித்த செய்தியை எதிர்க்கட்சித் தலைவர் படிக்காமல் புறக்கணித்திருப்பார் என்று கருதுகிறாயா? அந்த ஊழல் பற்றி ஜெயலலிதா ஒரு மறுப்பு அறிக்கை விடுத்து; அதற்குப் பதில் அளித்து நான் புள்ளிவிபரங்களுடன் ஆதாரபூர்வமாக ஒரு அறிக்கை விடுத்ததை எதிர்க்கட்சித் தலைவர் பார்க்க முடியாத அளவுக்கு அயல் நாடுகள் எதற்கும் அவர் பயணம் சென்று விடவில்லையே!

அரசுக்குச் சொந்தமான டான்சி நிறுவன நிலம் 54 கிரவுண்ட்!

அரசு நிர்ணயித்த (Guide Line) விலை கிரவுண்டு ஏழு லட்ச ரூபாய்!

எனவே 54 கிரவுண்டுக்கு மொத்த விலை சுமார் 3 கோடியே எண்பது லட்ச ரூபாய்!

இதற்குக் குறைத்து யார் டெண்டர் கேட்டாலும் மறு டெண்டர் விட வேண்டும் என்பதே டெண்டர் விதிமுறை!

ஆனால் ஜெயலலிதா அந்த 54 கிரவுண்ட் டான்சி நிலத்தை சுமார் ஒரு கோடியே எண்பது லட்சத்துக்கு டெண்டர் கேட்டு அந்த விலைக்கே வாங்கியுள்ளார். (சுமார் இரண்டு கோடி குறைவாக)

இதில் மிக முக்கியமான விதிமுறை மீறல் என்னவென்றால் மத்திய மாநில அரசுகள் இணைந்து வகுத்துள்ள (Code of Conduct) அமைச்சருக்குரிய நெறிமுறை ஆணையின் படி அரசுக்குச் சொந்தமான நிலத்தை அமைச்சர்கள் வாங்கக் கூடாது என்பதை ஜெயலலிதா மீறியிருக்கிறார்.

இத்தனையும் பத்து தடவைக்கு மேல் சொல்லப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் எதிர்க் கட்சித் தலைவருக்குப் படிக்க நேரமில்லாவிட்டாலும்; யாராவது அவர் காதில் போட்டுக்கூட இருக்க மாட்டார்களா?

எல்லாம் தெரியும் அவருக்கு! தெரிந்தும் கருணாநிதி இந்த ஊழலை நிரூபிக்க வேண்டும் என்று அவர் சொல்வதற்குக் காரணம் என்ன? இங்கேதான் அவர் சரியான குறும்புக்கார மனிதர் என்பதைப் புரிந்து ரசிக்க முடிகிறது! பாராட்டவும் தோன்றுகிறது!

அதாவது டான்சி ஊழல் கிணற்றிலே போட்ட கல் போலக் கிடக்காமல் கிளம்பி வெளியே வரவேண்டுமென அவர் விரும்புகிறார்! துடிக்கிறார் என்று கூடச் சொல்லலாம்!

நிரூபிக்கும் பொறுப்பை என்னிடம் விடுகிறாரே; அதில் - மறைந்திருக்கும் மர்மம் புரிகிறதா?

நிரூபிக்க இரண்டு வழிகளே உள்ளன. ஒன்று முதலமைச்சர் ஜெயலலிதா என்மீது வழக்குப் போடவேண்டும். அப்போது டான்சி சம்பந்தமான ஆதாரக் கோப்புகள் நீதிமன்றத்துக்கு வரும்! நான் சாட்டிய குற்றச்சாட்டு அவதூறானது எனில் என்மீது வழக்குப் போடுவதுதானே முறை!

அவர் வழக்குத் தொடர தயாராக இல்லை - பார்த்தார் பாலசுப்பிரமணியம்; புகாரை நிரூபிப்பதற்குக் கருணாநிதியே வழக்குப் போடட்டுமே என்ற கருத்துப்பட இரண்டாவது வழியை நமக்கு நினைவூட்டியிருக்கிறார்!

முதல்வர் மீது வழக்குத் தொடருவதென்றால் கவர்னரிடம் ஒப்புதல் பெற வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவரின் பேட்டியைப் படிக்கும் போது; நாமே முன்வந்து முதல்வர் மீது டான்சி ஊழல், ஸ்பிக் ஷேர் ஊழல், பீர் தொழிற்சாலை டெண்டர் விடாமல் விற்ற ஊழல் இவை குறித்தெல்லாம் வழக்கு தொடர; கவர்னரிடம் அனுமதி கேட்டால், அனுமதி கட்டாயம் கிடைக்கும் போல் தெரிகிறது. அவரே அதற்கு கவர்னரிடம் பரிந்துரை செய்வார் என்ற நம்பிக்கையும் ஏற்படுகிறது!

அந்த வகையில் நண்பர் பாலசுப்பிரமணியத்தின் பேட்டி; பாலைவனத்தில் ஒரு பேரீச்சை மர நிழல் போல அமைந்துள்ளது கண்டு அதற்கேற்ற அளவு மகிழத்தானே வேண்டும்.

அன்புடன்,

மு. க.

(16-07-1992)

1923. இந்து கூட்டத்தாருக்கு எதிலே நாட்டம்?

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. ஆட்சி ஓராண்டு காலத்தில் ஓராயிரம் தவறுகளைச் செய்திருந்தாலும் - எண்ணற்ற ஊழல்களைப் புரிந்திருந்தாலும் - அளவற்ற ஜனநாயகப் விரோதப் போக்கினைக் கடைப்பிடித்திருந்தாலும் - எதிர்க்கருத்து சொல்லுவோர் யாராயினும் அவர்களைப் பழிவாங்கியே தீருவது என ஆத்திரவசப்பட்டு அத்துமீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாலும் - மகாமகத்தைக் கட்சி மாநாடாகவும் - மதுரை மாநாட்டை அரசுத் திருவிழாவாகவும் நடத்தி அதிகார துஷ்பிரயோகம் செய்திருந்தாலும்; அவற்றையெல்லாம் மூடிமறைக்க முடியாத நிலையில் வெளியிட்டே தீரவேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டாலும் கூட; அந்தக் குற்றங்கள் அனைத்தையும் குழந்தை செய்யும் குறும்பு என்ற அளவோடு ஒருசாரார் - ஒரு சார்புடைய ஏடுகள் தமது விமர்சனத்தை நிறுத்தி விடுகிறார்களே; அதனை கவனித்தாயா?

அந்தக் குறும்பை பாராட்டி மகிழும் தாயைப் போலவும் இந்த அரசைத் தழுவிக் கொஞ்சிக் கொண்டிருக்கிறார்களே; அதையும் பார்க்கிறாய் அல்லவா?

விலைவாசி ஏறுகிறதா? கொலை கொள்ளைகள் மலிந்து விட்டதா? கொடுத்த வாக்குறுதிகள் நூற்றுக்குத் தொண்ணூற்றி ஒன்பது குப்பைக் கூடையில் வீசப்பட்டு விட்டனவா? அதைப்பற்றியெல்லாம் அவர்கள் கவலைப்படமாட்டார்கள்!

பாவம், அவர்களது கவலையெல்லாம் தி.மு.கழகம் வளர்ந்து விடக்கூடாது; வலிவு பெற்று விடக்கூடாது என்பதிலேதான் படிந்து கிடக்கிறது!

திராவிட இயக்கம் என ஒன்று தோன்றியதே பிடிக்காதவர்கள் பட்டியலில் முன்னணியில் நின்று எதிர் முழக்கம் செய்த ஏடுகளில்

முதற் முழக்கம் செய்த ஏடுகளில் முதற் பரிசை பெறக் கூடியது இந்து ஏடு என்பதை நீ அறிவாய்!

திராவிட இயக்கத்தின் வலிவையும் வளர்ச்சியையும் இந்து போன்ற ஏடுகள் எத்தனையோ வழிகளில் தடுத்தும் கூட காரிருள்தான் சூரியனை மறைப்பதுண்டோ? பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ? எனும் புரட்சிக் கவிஞரின் கவிதைவீச்சுகேற்ப திராவிட இயக்கம், முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும் முழுமதியென எதிர்ப்புகளைக் கடந்து ஒளிவிடத் தொடங்கியது.

பெரியார் ஊட்டிய சுயமரியாதை உணர்வு - அண்ணா ஊட்டிய தமிழ் இன உணர்வு - இரண்டும் இணைந்து இணையற்ற வெற்றிகளை ஈட்டிய போதும்; அவர்கள் வழிநின்று தி.மு.கழகம் தமிழகத்தில் அசைக்க முடியாத சக்தியாக விளங்கிய போதும்; அந்தக் கழக ஆட்சியின் அடுக்கடுக்கான சாதனைகளை இந்து போன்ற ஏடுகள் பாராட்டி மகிழ்ந்ததில்லை! தப்பித்தவறி அவர்கள் பாராட்ட நேர்ந்தபோதும் அய்யோ! திராவிட இயக்கம் வளர்ந்து வலுப்பெற்று விட்டதே! என்றே மனதுக்குள் புலம்பித் தவித்தனர்!

திராவிட இயக்கத்தின் அரசியல் வாரிசாகத் திகழும் தி.மு.க.வின் வலிவை அழிக்க முடியாது என்றுணர்ந்த காரணத்தால் - அழிக்க முடியாவிட்டாலும் பிளந்து பார்ப்போம் என இந்து போன்றோரும் முன்வந்தனர். இந்திரா போன்றோரும் முன்வந்தனர்.

அதன் விளைவே; ஒரு பெரிய போலீஸ் அதிகாரி, அவர் எழுதிய கட்டுரைகளில் குறிப்பிட்டிருப்பது போலவும் - அவர் அண்மையில் வெளியிட்டுள்ள நூலில் குறிப்பிட்டுள்ளது போலவும் - அதிகாரிகள், உளவுத் துறையினர் ஆகியோரின் உதவியுடன்; வருமானவரி - அந்நிய செலாவணி மோசடி - என்ற புகார்களைக் காட்டி பயமுறுத்தி அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களை மிரட்டி 1972-ல் கழகத்தைப் பிளந்தனர்.

பிளக்கப்பட்டதில் ஒருபகுதி இன்றளவும் உண்மையான திராவிட இயக்கமாக; ஆம், தி.மு.கழகமாக நடைபோட்டு வருகிறது.

மற்றொரு பகுதியோ; புத்தரைக் கடவுளாக்கி அவரது கொள்கைகளை மறைத்தது போல; தி.மு.க. என்ற பெயருடன் அண்ணாவின் பெயரையும் இணைத்து - இன்று மகாமக விழா

கொண்டாடுகிற அளவுக்கு, வேதக் கல்லூரி தொடங்குகிற அளவுக்கு, நவோதயா பள்ளிகளுக்கு நடைபாவாடை விரிக்கிற அளவுக்கு மாறிவிட்டிருக்கிறது! அதாவது திராவிட இயக்கம்; ஒரு வித்தியாசமான - அல்ல! அல்ல! முரண்பாடு கொண்ட தலைமையின் கீழ் இன்றைக்கு இயங்குகிறது! திராவிட இயக்கம் பற்றியே தெரிந்து கொள்ளாத தலைமை - தன்னல உயர்வுக்காக மட்டுமே அந்தப் பெயரைப் பயன்படுத்திக் கொள்ளும் தலைமை - அந்தத் தலைமையை வைத்துக்கொண்டே திராவிட இயக்க உணர்வுகளை ஒழித்து விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிற ஒரு கூட்டம் - அது; காங்கிரசார் வடிவிலே! இந்து போன்ற ஏடுகளின் வடிவிலே!

ஆனால் இடையில் வரும் ஆட்சி மாற்றத்தால், அதிகாரத்தால் திராவிட இயக்க உணர்வுகளை அழித்துவிட முடியாது என்பதையும் - இந்த இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகள் இன்னும் எத்தனையோ ஆண்டுகளுக்கு இந்தச் சமுதாயம் சீர் பெறத் தேவை என்பதையும் - நாம் உணர்ந்து செயல்படுகிற காரணத்தால் -

தி.மு. கழகத்தை பயங்கர விரோதியாக, பைசாசமாக பூதமாக கற்பனை செய்து காட்டி மக்களை ஏமாற்றிடும் முயற்சியில் ஒரு கூட்டம் இறங்கியுள்ளது.

ஏ, அப்பா! அ.தி.மு.க. போனால் தி.மு.க. வந்துவிடும்! இப்படியொரு பூச்சாண்டி காட்டுகிறார்கள்! அதற்காகப் பொய்களைப் புனைந்துரைக்கிறார்கள்! அதாவது உடன்பிறப்பே, மயிலை மந்தி என்கிறார்கள்!

மந்தியை மயிலென ஒப்புக் கொள்ள வேண்டுமென்று மலை உச்சியேறி முழக்குகிறார்கள்!

அ.தி.மு.க. என்பது அவர்கள் இஷ்டத்துக்கு உரியது! அதை விடப் பெரியது அக்கட்சியின் தலைமை மீது அவர்களுக்கு அவ்வளவு பரிவு! பாசம்!

தி.மு.க. என்பது அவர்களைப் பொறுத்தவரையில் தீண்டத்தகாதது!

அதனால்தான் தி.மு.க. என்றதும் தீயை மிதித்தவர் போல் ஆகின்றனர்!

அ.தி.மு.க. எனிலோ, அதிரசமாக - அக்கார வடிசலாக எண்ணி இன்புறுகின்றனர்!

இப்படிச் சிலர் நாட்டிலே மிகத் திறமையாக சூதுவலை பின்னிக் கொண்டிருக்கும்பொழுது நமது கழகமாம்; உண்மையான திராவிட இயக்கத்தை (சதிக் குணத்தார் வெற்றி பெற இடந் தரமால்) எப்படிக் கட்டுக் கோப்பாக வளர்க்க வேண்டுமென்பதிலே நீ கவனம் செலுத்து! மற்ற உடன்பிறப்புகளுக்கும் கவனமூட்டு!

அன்புடன்,

மு. க.

(18-07-1992)

1924. கூட்டுறவுத் தேர்தலும் காட்டு தர்பாரும்!

உடன்பிறப்பே,

கூட்டுறவு சங்கங்களில் பெண்களுக்கு முப்பது சதவிகிதமும், ஆதி திராவிடர்களுக்கு பதினெட்டு சதவிகிதமும் பிரதிநிதித்துவம் அமையும் வகையில் சட்டத்திருத்தம் செய்யப்பட்டு கடந்த இரண்டாண்டு காலக் கழக ஆட்சியில் முதல் கட்டமாக தொடக்கக் கூட்டுறவு சங்கங்களில் தேர்தல்கள் நடைபெற்று அடுத்த கட்ட கூட்டுறவு சங்கங்களின் தேர்தல்கள் நடைபெறுவதற்கான ஆயத்தங்கள் விரைவுபடுத்தப்பட்ட போது; ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது.

ஆட்சியைக் கலைப்பதற்கு சகல கலைகளையும் பயன்படுத்தியவர்கள்; ராஜீவ்காந்தி படுகொலை அனுதாபத்தின் காரணமாக ஆட்சிக்கு வந்தவுடன்; கழக ஆட்சியில் தேர்தல் நடைபெற்று இயங்கிக் கொண்டிருந்த அத்தனை கூட்டுறவு சங்கங்களையும் கலைத்தனர்.

கலைத்தது குறித்து உயர்நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் நடந்த வழக்குகளின் தொடர்பாக ஜெயலலிதா அரசு, உயர் நீதிமன்றத்திலே ஒரு உறுதிமொழி வழங்கியது. என்ன உறுதிமொழி?

தி.மு.க. ஆட்சியில் கூட்டுறவு சங்கங்களில் பெண்கள் 30 சதவிகிதம், ஆதிதிராவிடர் 18 சதவிகிதம் பிரதிநிதித்துவம்தான் தரப்பட்டுள்ளது. எங்கள் ஆட்சியில் கூட்டுறவு சங்கங்களின் மொத்த உறுப்பினர்களிலேயே முப்பது சதவீதம் பெண்களுக்கும் பதினெட்டு சதவீதம் ஆதி திராவிடர்களுக்கும் வழங்குவோம்.

இதுதான் ஜெயலலிதா அரசு நீதிமன்றத்துக்கு அளித்த உறுதிமொழி!

அதாவது பிரதிநிதித்துவம் என்றால் கூட்டுறவு சங்கங்களில் நிர்வாகப் பொறுப்புகள்!

அதனால் அ.தி.மு.க. ஆட்சி, நீதிமன்றத்தில், சொன்னது; அந்த நிர்வாகப் பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கும் வாக்காளர்களான உறுப்பினர்களிலேயே முப்பது சதவீதம் பெண்களும், பதினெட்டு சதவீதம் ஆதிதிராவிடரும் இருப்பார்கள் என்பதாகும்!

இப்போது அந்த உறுதிமொழிப்படி இந்த அரசு உறுப்பினர்களை சேர்த்துவிட்டு, கூட்டுறவுத் தேர்தலை நடத்தப் போகிறதா என்பதுதான்

முக்கியமான கேள்வி!

நமக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி அப்படி உறுப்பினர்கள் சேர்க்கப்படவில்லை.

ஆனாலும் ஆகஸ்டு மாதம் 12-ஆம் நாள் தேர்தல் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் திட்டமிட்டு முறைகேடுகள் நடைபெற உள்ளன என்பதையும், கழகத்தினர் ஆங்காங்கு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்பதையும் சுட்டிக்காட்டி பொதுச் செயலாளர் பேராசிரியர் விடுத்த அறிக்கையை மறுத்து அரசின் சார்பில் தரப்பட்ட பதில் இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா? என்ற வாசகத்தை நினைவூட்டுவதாகத்தான் அமைந்திருந்தது.

30 சதவிகிதம் மகளிர் உறுப்பினர்களாக சேர்க்கப்படவில்லை - 18 சதவிகிதம் ஆதிதிராவிடர் உறுப்பினர்களாக சேர்க்கப்படவில்லை - அதற்கு மாறாக ஆங்காங்கு அ.தி.மு.க.வினர் போலி உறுப்பினர்களாக முற்றிலும் முறைகேடான வகையில் சேர்க்கப்படுகிறார்கள்.

ஒரு கூட்டுறவு சங்கம்கூட வேறு கட்சிக்காரர்களின் கைகளுக்குப் போய்விடக் கூடாது எனத் திட்டமிட்டுப் பெரும் சதியாலோசனையே நடத்தி அதற்கென ஆங்காங்கு அமைச்சர்கள் முகாமிட்டுப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அதிகாரிகள் கண்ணீர்விட்டுப் புலம்புகிறார்கள். 'நாங்கள் என்ன செய்வோம். ஆளுங்கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சியினரையும் உறுப்பினராகச் சேர்க்கக் கூடாது என்று அமைச்சர்கள் ஆணையிட்டபடி இருக்கிறார்கள். உறுப்பினர் சேர்த்திட வேறு எவரும் படிவங்கள் கேட்டால் கொடுக்கக் கூடாது என மிரட்டியுள்ளார்கள். இன்னும் சொல்லப்போனால் நிர்வாகப்

பொறுப்புக்குப் போட்டியிட விரும்பும் வேறு கட்சிக்காரர்களுக்கு வேட்பு மனுப் படிவம் கூடத் தரக் கூடாது என்று கண்டிப்பாகக் கட்டளையிடப்பட்டுள்ளது. மீறி யாராவது வேறு கட்சியினர் எங்காவது தேர்தலில் அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றாலும் - அதனை மாற்றி, ஆளுங் கட்சியினர் வெற்றி பெற்றதாக அறிவிக்க வேண்டுமென நாங்கள் வற்புறுத்தப் பட்டுள்ளோம்' என்று அதிகாரிகள் பல இடங்களில் கூறியுள்ள பதிலைப் பார்க்கும்போது - தமிழ் நாட்டில் இட்லர் ஆட்சி நடக்கிறதா? இடி அமீன் ஆட்சி நடக்கிறதா?

என்றுதான் வியக்க வேண்டியுள்ளது.

இட்லர், இடி அமீன் ஆட்சியிலேகூட இத்தனை அநாகரிக அராஜக தர்பார் நடந்திருக்க முடியுமா என்பது சந்தேகம்தான்!

தி.மு.கழகம் மட்டுமல்ல; மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பார்வார்டு பிளாக், பாட்டாளி மக்கள் கட்சி ஆகிய கட்சிகளும் இந்த ஆட்சியின் கூட்டுறவு சங்க முறைகேடுகளை விளக்கி அறிக்கைகள் வெளியிட்டுள்ளன! ஏன்; காங்கிரஸ் கட்சி தலைவர்களேகூட தங்களின் அதிருப்தியைத் தெரிவித்துப் பேசியுள்ளனர்.

நிலைமை என்ன இப்போது? கூட்டுறவு சங்கங்களுக்கான ஆவணங்கள் எதுவும் இப்போது அந்த சங்கங்களின் வசம் இல்லை!

புதிய உறுப்பினர்கள் சேர்ப்பதற்கான படிவங்கள் மாவட்ட பதிவாளர் வாயிலாக, அந்தந்த மாவட்ட அமைச்சர்களிடமும் - மாவட்ட ஆளுங்கட்சி நிர்வாகிகளிடமும்தான் அளிக்கப் பட்டுள்ளன.

மாவட்டங்களில் உள்ள அரசினர் தங்கும் விடுதிகளில் அமைச்சர்கள் முகாமிட்டுக் கொண்டு அதிகாரிகளை அழைத்து அச்சுறுத்துகின்றனர். வேலைக்கே சீட்டு கிழிக்கப்படுமென்று அமைச்சர்கள் மட்டுமல்ல; ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும், நிர்வாகிகளும் வசைமொழி கலந்து அதிகாரிகளுக்கு பயங்காட்டுகின்றனர்.

கத்தை கத்தையாக உறுப்பினர் சேர்க்கும் படிவங்கள் அமைச்சர்கள் வைத்துக் கொண்டு - உறுப்பினர்கள் சேர்வதற்கான மொத்த பணத்தையும் அவர்களே கட்டிவிட்டு ஆள் இருந்தாலும்

இல்லாவிட்டாலும் அவர்களை உறுப்பினர்கள் என அறிவித்து - அடிக்கும் கொட்டம் தாங்க முடியவில்லை.

ஆளுங்கட்சியல்லாதவர்கள் பழைய உறுப்பினர்களாக இருந்தால் எந்தவிதமான நியாயமான காரணமும் காட்டாமல் அவர்களை நீக்கும் கொடுமையும் அமைச்சர்களின் உத்திரவுபடி அதிகாரிகளால் நிகழ்த்தப்படுகிறது.

நமது கழகத்தினர் சில இடங்களில் நீதிமன்றங்களுக்குச் சென்றுள்ளனர். சில இடங்களில் அதிகாரிகளின் போக்கைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள், கண்டன ஊர்வலங்கள் நடத்தியுள்ளனர். கூட்டுறவுத் தேர்தலில் காட்டு தர்பாரா? என்ற கேள்வி மக்கள் மன்றத்தில் ஆவேசமாக எழுந்துள்ளது!

இத்தகைய ஜனநாயக விரோதச் செயல் புரிந்து தேர்தலை நடத்திவிட்டோம் என்று மனச்சாட்சியை விற்றுவிட்டு மார்தட்டிக் கொள்வதைவிட; அனைத்து கூட்டுறவு சங்கங்களுக்கும் ஆளுங் கட்சிக்காரர்களையே நிர்வாகப் பொறுப்புகளில் நியமித்துவிட்டுப் போகலாமே! தேர்தல் என்று ஒரு சடங்கு வீணாக எதற்காக; வெட்கங் கெட்ட வேலை?

உடன்பிறப்பே, எல்லாக் கட்சிகளும் காட்டுகிற நியாயமான எதிர்ப்பைத் துச்சமென மதித்து - முறைகேட்டின் மொத்த வடிவமாகத்தான் கூட்டுறவுத் தேர்தலை நடத்துவோம் என ஜெயலலிதா அரசு முனையுமேயானால் - அது குறித்து என்ன முடிவெடுப்பது என்பதைப் பற்றிக் கழகத் தலைமை சிந்தித்துக் கொண்டிருக்கிறது!

அதற்கிடையே ஆங்காங்கு நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டுவதற்காக நீயும் நமது உடன்பிறப்புகளும் பாதிக்கப்பட்டுள்ள மற்ற கட்சியினரும் இணைந்து இயன்ற வரையில் அறவழியில் உரிமைப் போரில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது என்பதை அரசுக்கும் கூட்டுறவுத்துறை அதிகாரிகளுக்கும் உணர்த்திடும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

அன்புடன்,

மு. க.

(20-07-1992)

1925. ஆகஸ்டு 7 - அணிவகுப்பு! ஆர்ப்பாட்டம்!

உடன்பிறப்பே,

ஆகஸ்டு 7ஆம் நாள் தி.மு.க., ஜனதா தளம், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சிகளின் சார்பில் மாபெரும் கறுப்புக் கொடி பேரணி சென்னையில் நடைபெற இருக்கிறது. தேசிய முன்னணி இடதுசாரிக் கட்சிகளின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

பேரணி, காலை 9 மணி அளவில் சைதாப்பேட்டை மறைமலை அடிகளார் பாலத்திலிருந்து புறப்பட்டு தேனாம்பேட்டை அண்ணா சாலையில் உள்ள மருத்துவத் துறை இயக்குநர் அலுவலகத்துக்கு முன்னால் அறவழியில் ஆர்ப்பாட்டம் நடத்துவதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏன்? எதற்காக? விளக்கம் அதிகமாகத் தேவையில்லை உனக்கு! காரணம்; விரிவான விளக்கங்களை நீயே மற்றவர்க்கு அளிக்கிற அளவுக்கு விபரங்களைத் தெரிந்து வைத்திருக்கிறாய்!

என்னதான் விளக்கினாலும் சிலபேர் விழிகளை மூடிக்கொண்டு தூங்குவது போல் பாசாங்கு செய்தால் அவர்களை எழுப்ப முடியாது! எழுப்பி நிறுத்தினாலும் தள்ளாடித் தடுமாறி விழுவது போல நடந்து ஒதுங்கிக் கொள்வர்! அல்லது இந்த அரசின் அடாவடித்தனங்களுக்கும் - ஊழல் மோசடிகளுக்கும் ஒத்து ஊதுவர்! காரணம்; அவர்களை அரசையல்ல; அமைச்சர்களை அண்டிப் பிழைக்க வேண்டியிருக்கும், சலுகைகள் பெறுவதற்காக - அல்லது பெற்ற சலுகைகளை இழக்காமல் இருப்பதற்காக; சலாமிட்டு வாழ வேண்டியிருக்கும். அவர்களைக் காலம் மன்னிக்கிறதோ இல்லையோ இப்போதைக்கு நாம் மன்னித்து விடுவோம்.

தனியார் சுயநிதிக் கல்லூரிகள் - அவற்றில் கல்வி ஒரு வியாபாரம் - அதுவும் லட்சக் கணக்கான தொகைக்குக் கொள்ளை

வியாபாரம் - அந்த அநியாய வியாபாரத்துக்கு அரசே நூற்றுக் கணக்கான ஏக்கரா நிலங்களை ஒதுக்கித் தந்து ஊக்குவிக்கும் உலக மகா மோசடி - இது தகாது! தர்மமாகாது! எனக் கூறியது கேட்டு; தி.மு.க. ஆட்சியிலே மூன்று ஆண்டுகளுக்கு முன்பு; தாமாகவே முன்வந்து தீர்மானம் நிறைவேற்றி இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை அரசிடம் ஒப்படைத்தவர்கள்; இன்று கோணிப் பைகளில் கோடிகளை நிரப்பிக் கொடுத்து-வழக்கு நாடகம் நடத்தி; அடிப்பது போல் அடி; அழுவது போல் அழுகிறேன் என்பது போல; மருத்துவக் கல்லூரியை மீண்டும் வளைத்து போட்டுக் கொண்டார்கள்.

உயர்நீதிமன்றத்தில் ஜெயலலிதா அரசு, உரிய முறையில் வழக்காடவுமில்லை - அப்பீல் செய்திட உச்சநீதிமன்றத்துக்குச் சென்றிடவுமில்லை.

அளித்த வாக்குறுதிகள் என்ன ஆயின? என்று அணிவகுத் துள்ளனர் மாணவர்கள்! மருத்துவர்கள்! தொழிலாளிகள்!

அவர்களுக்கு ஆதரவு தரவே ஆகஸ்டு 7 ஆம் நாள் கறுப்புக் கொடி பேரணி! அமைதி ஆர்ப்பாட்டம்! அனைத்துக் கட்சிகளின் சார்பில்!

இந்த நேரத்தில் தனியார் கல்லூரிகளின் அவசியம் குறித்து சில தர்க்கவாதங்கள்!

நாம் கேட்பது; இன்றுள்ள தனியார் கல்லூரிகள் பற்றியல்ல! தனியார் சுயநிதிக் கல்லூரிகள் கல்வியைக் கொள்ளை வியாபாரமாக ஆக்கி வருகின்றனவே; அதைப் பற்றித்தான்!

மாணவர்களும் மருத்துவர்களும் புத்தி சொல்லக் கிளம்பியுள்ளவர்கள் கூட; இந்தக் கல்வி வியாபாரக் கொள்கையை அனுமதிக்கலாம் எனக் கூறமாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு; ஜூலை இறுதி வாரத்தில் உச்சநீதிமன்றம் இந்தத் தனியார் சுயநிதிக் கல்லூரிகள் குறித்து வழங்கியுள்ள ஒரு தீர்ப்பு என்ன கூறுகிறது?

> "அரசியல் சட்டத்தின்படி ஒவ்வொரு குடிமகனுக்கும் கல்வி பெற உரிமை இருக்கிறது. இந்த உரிமையை மக்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் கல்வி நிறுவனங்களை அரசாங்கமே நிறுவ வேண்டும்.

அரசியல் சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள கல்வி உரிமைகளை அடிப்படையாகக் கொண்டுதான், அரசு கல்வி நிலையங்களிலோ அல்லது அரசின் அங்கீகாரம் பெற்ற கல்வி நிலையங்களிலோ மாணவர்கள் சேர அனுமதிக்கப்படுகிறது. கல்வி நிலையங்களில் சேர கட்டாய கட்டணம் வசூலிப்பது அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமையை அப்பட்டமாக மீறுவதாகும். கட்டாய கட்டணத்தால் ஒருசார்ர் மட்டுமே பயனடைவார்கள். பணம் படைத்தவர்கள் சேருவதற்கும், ஏழை எளியோர் சேர முடியாமைக்கும் இது வழிவகுக்கிறது. இந்தப் பாகுபாடு அர்த்தமற்றது - அநீதியானது"

இதுதான் உச்சநீதிமன்றம் அண்மையில் வழங்கியுள்ள தீர்ப்பு.

இந்தக் கொள்கையுடைய உச்சநீதிமன்றத்தில் அப்பீல் செய்து நீதியைப் பெற வாய்ப்பிருந்தும்; அந்த வாய்ப்பின் வாசலையே மூடிவிட்டு - அவசர அவசரமாக அமைச்சரவையை ஐந்துபத்து நிமிட நேரத்துக்குக் கூட்டி; அப்பீல் செய்ய மாட்டோம்! கல்லூரியை உடையாருக்கே தாரைவார்த்து விடுவோம்! என்று முடிவும் எடுத்து விட்டார்கள்!

இனி எந்த வழியிலோ - எந்தப் பெயரிலோ - மாணவர்களிடம் தலா பத்து லட்ச ரூபாய் பெற்றுத்தான்; அதன் மூலம் மட்டும் ஆண்டுக்கு பத்து கோடி ரூபாய் லாபத்தை அந்தத் தனியார் குவிக்கப் போகிறார்கள்.

அங்குள்ள மருத்துவமனையும் இனிப் பணம் படைத்தோர்க்கே!

அரசின் உரிமைகளைப் பெற்றிருந்த தொழிலாளிகளும் இனி அந்தரத்தில் நின்றிடுவர்!

இத்தனை கொடுமைகளையும் எதிர்த்துத்தான் - நியாயம் கோரி; மாணவர்களும் மருத்துவர்களும் போராடுகிறார்கள்.

அவர்களின் போராட்டத்துக்கு நாம் காட்டும் ஆதரவே;

ஆகஸ்டு 7-ல் கறுப்புக் கொடி பேரணி!

அமைதியான ஆர்ப்பாட்டம்!

அநீதி மாய்ந்திட - அறம் தழைத்திட - கல்வி நீரோடையில் திமிலங்கள் உலவிடாமல் தடுத்திட - வளரும் தலைமுறையின் வாழ்க்கையில் நெருப்பைக் கொட்டும் வஞ்சகத்தை வீழ்த்திட -

அணிவகுப்பு!

ஆர்ப்பாட்டம்!

ஆகஸ்டு 7!

அன்புடன்,

மு. க.

(05-08-1992)

1926. சேரன் செங்குட்டுவன் தீட்டும் சிலப்பதிகாரம்!

உடன்பிறப்பே,

முரசொலி ஏட்டுக்குப் பொன் விழா. ஆகஸ்டு 10 ஆம் நாள் திங்கள்கிழமை மாலை சென்னை அண்ணா அறிவாலயத்தில்!

விழா நடத்திடும் முரசொலி அலுவலகத்தின் சார்பில் முதலில் கலைவாணர் அரங்கத்திற்குத்தான் அனுமதி கேட்கப்பட்டிருந்தது. கடந்த திங்கள் 27 ஆம் தேதியே கலைவாணர் அரங்கத்திற்கான அனுமதி கோரி முறைப்படி தம்பி உசேன் நேரிலேயே சென்று தொடர்புடைய அலுவலரிடம் விண்ணப்பம் கொடுத்தபோது பத்தாம் தேதி அரங்கில் வேறு நிகழ்ச்சி எதுவும் இல்லை; எனவே நிச்சயம் கிடைக்குமென்று அந்த அலுவலர் கூறியிருந்தார். உசேன் இந்த மாதம் 4 ஆம் தேதி மாலை வரையில் அந்த அலுவலகத்திற்கு ஒரு நாளைக்கு மூன்று தடவை அலைந்ததுதான் மிச்சம். வேறு வழியின்றி; இனிமேல் அழைப்பிதழ்கள் அச்சிட வேண்டியிருப்பதால் இனியும் காத்திருக்க இயலாதென்று; அண்ணா அறிவாலயம் திருமண மண்டபத்திலேயே விழாவை நடத்திட முரசொலி அலுவலகத்தினர் முடிவு செய்து விட்டனர்.

கடந்த ஜூன் திங்கள் மூன்றாம் நாள் என் பிறந்த நாளையொட்டி கலைவாணர் அரங்கத்தை முன்கூட்டியே கேட்டிருந்தும் கூட; கடைசி வரையில் தருவதாகச் சொல்லிவிட்டு - இறுதியாக வேறு நிகழ்ச்சி இருப்பதாகக் கூறி; மறுத்து விட்டது தெரிந்திருந்தும் மீண்டும் முயற்சி மேற்கொண்டது வீண்தானே!

இந்த ஒரு காரணத்தால் முரசொலி பொன் விழாவுக்கான அழைப்பிதழ்கள் அச்சியற்றுவது தாமதமாகி - உன் போன்றோர் அனைவருக்கும் உரிய நேரத்தில் அனுப்பி வைக்க முடியாமற் போய்விட்டதே என்று முரசொலி அலுவலகத்தினர் முகம் வாடிப் போயினர்.

முரசொலியின் முன்னாள் ஆசிரியரும் நிறுவனரும் என்ற முறையில் இந்தக் கடித வாயிலாக நான் விடுக்கும் அழைப்பே; உனக்கு நேரிலே அனுப்பப்படும் அச்சியற்றப்பட்ட அழைப்பினும் இனிப்பானது என நீ கருதிடுவாய் என்பது எனக்குத் தெரியும்.

திராவிட இயக்கத்தின் தியாக வரலாற்றில் - போராட்ட வரலாற்றில் - களம் பல கண்ட வரலாற்றில் - கை, கால்கள், ரத்தம் சிந்திய வரலாற்றில் - காராக்கிரகங்களில் சித்திரவதைகளை ஏற்றுக்கொண்ட வரலாற்றில் கொள்கை உறுதி கொண்டு கோலோச்சிய வரலாற்றில் - குட்டை மனப்பான்மையினரின் சூது, சூழ்ச்சி, சதிகளுக்குத் தாக்குப்பிடித்து நின்றிடும் வரலாற்றில் - ஒரு ஐம்பது ஆண்டுக்காலம் முரசொலிக்கு மிகச் சிறப்பான பங்கு உண்டு என்பதை, நமது மாற்றாரும் உணருவர்!

ஒரு முறையல்ல; பலமுறை முரசொலி அலுவலகம் எதிர்க்கட்சி நண்பர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டதுண்டு! பல லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் எரிக்கப்பட்டுப் பாழாக்கப்பட்டதுண்டு!

எத்தனையோ முறை சிறை சென்ற நான்; முரசொலி எழுதியும் - அதனைப் பாசறையாக அமைத்துக்கொண்டும் 1965 ஆம் ஆண்டு மொழிப் புரட்சியைத் தூண்டினேன் என்பதற்காகவும் பாளையங்கோட்டைத் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டதும் உண்டு!

அங்கு என்னைக் காணவந்த அறிஞர் அண்ணா அவர்கள்; தம்பி முரசொலி மாறனையும் பிடித்து முரசொலியில் வந்த கட்டுரைக்காக - சென்னைச் சிறையில் அடைத்துள்ளனர் என்ற செய்தியைச் சொன்னதும் உண்டு!

இன்று ஆசிரியராக இருக்கும் தம்பி முரசொலி செல்வத்துக்கும் - எங்களுக்கெல்லாம் நீதிமன்றத்தில் கூண்டு என்றால்; அவருக்கு சட்டமன்றத்திலே கூண்டு எனக் கூறிக் கைது செய்யப்பட்டதும் உண்டு!

குவித்து விரிக்கப்பட்ட மலர்ப் பாதையில் மலரின் ஒரு காம்பு காலில் குத்தியதற்காக கோபக்கனல் தெறிக்கக் குதிப்போர்; அரசியலில் குதித்திருக்கும் இந்நாளில் - ஐம்பது ஆண்டுகளுக்கு

மேலாக முழுவதும் முள்ளால் ஆன பாதையில்; அங்கொன்றும் இங்கொன்றுமாக - அதுவும் அத்தி பூத்திருக்கிறது எனச் சொல்லக் கேட்கும் வாய்ப்பொன்றையே பெற்று; பெரியார் தந்த துணிவுடனும், அண்ணா கற்பித்த கனிவுடனும், பயணம் நடத்திடும் நாம்; முரசினைக் கீழே வைக்காமல் இலட்சிய முழக்கம் ஒலித்து வருகிறோம்! அந்த ஒலியின் உற்சாகத்தில் வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்! என உறுதி கொண்டு நடந்து கொண்டேயிருக்கின்றோம்!

நாமும் ஒரு ஏடு நடத்திடலாம் என்றோ; நமக்கு ஒரு தொழிலாக அது இருக்கட்டுமென்றோ; பொழுது போக்கவோ அல்லது பொருள் திரட்டவோ - முரசொலி தொடங்கப்படவில்லை!

அதனால் அறிஞர் அண்ணா அவர்கள் முரசொலியை; சேரன் செங்குட்டுவன் தீட்டும் சிலப்பதிகாரம் என்று தன் கையாலேயே கட்டுரைக்குத் தலைப்பிட்டு; முரசொலி மலர் ஒன்றுக்கு 1954 ஆம் ஆண்டு அனுப்பி வைத்தார்.

“களம் காணாமல் செய்திகளைச் சேகரித்துத் தொகுத்தளிக்கும் நிலையமல்ல முரசொலிக்கு!

அதன் ஆசிரியர் கல்லக்குடி போர்த்தளபதியாகப் பணியாற்றி சிறை சென்றவர்.

எனவே போர்பற்றிப் பெருமிதத்துடன் பேசிடும் உரிமை கொண்டவர்.

சேரன் செங்குட்டுவனே சிலப்பதிகாரம் தீட்டுவது போல களம் கண்ட கருணாநிதியே முரசொலியும் அதன் மலரும் தருகிறார்.”

இவ்வாறு அண்ணா அவர்கள் 16.7.1954 முரசொலி மலரில் எழுதினார்.

அந்த அண்ணனின் வாழ்த்தையும், அவர் தந்த ஊக்கத்தையும், உற்சாகத்தையும், அவரது அறிவுரைகளையும் பெற்று வளர்ந்த முரசொலி - இன்று உன்போன்ற உடன்பிறப்புகளின் படைக்கலனாகத் திகழுகிற முரசொலி - பொன்விழா கொண்டாடுகிறது எளிய முறையில்! ஆனால் எழுச்சி பொங்கும் நிலையில்!

நீ வந்திருந்து வாழ்த்தப் போகிறாய்; வர இயலாத நிலையில் தென்றலில் மிதந்து வரும் தேமதுர இசையென; வாழ்த்துக்களை எங்கிருந்தாலும் வழங்கப் போகிறாய்!

அந்தநாள் என் வாழ் நாளில்; ஒரு பொன்னாள்! முரசொலி என்றென்றும் களத்தில் ஒலித்திடுமென அறிவோம் எனினும்; அந்த ஒலியின் தடைபடா முழக்கத்திற்கு உன் போன்ற உடன்பிறப்புகளன்றோ தடந்தோள் கொடுத்திடல் வேண்டும்!

அன்புடன்,

மு. க.

(07-08-1992)

1927. நீரில் மிதந்த நீலோற்பலங்கள்!

உடன்பிறப்பே,

“மோவா அரும்பு
தாவாச் சிறுமான்
கூவத் தெரியா குயிலின் குஞ்சு”

பிள்ளைக் கனியமுதங்களை நமது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இப்படி வர்ணித்து மகிழ்வார்.

பிறந்தவுடன் குழந்தை ங்கா என்று அழுகிறதே; அதற்குக் கூட கவிஞர் கு.மா. பாலசுப்பிரமணியம் - அய்யோ இங்கா வந்து பிறந்தேன்? இங்கா? என்று அதிர்ச்சியுற்று அழுவதாகக் கற்பனை செய்து இந்த உலகில் மனித உருவில் மிருகங்கள் வாழ்வதைக் குத்திக் காட்டுவார்.

இந்த மோவா அரும்புகளும், தாவாச் சிறுமான்களும், கூவத் தெரியாத குயிலின் குஞ்சுகளும் இங்கா வந்து பிறந்தோம் என்று கேட்டனவோ இல்லையோ; நமக்குத் தெரியாது; ஆனால் இங்குதான் வந்து பிறந்துவிட்டன!

இரும்பால் வார்க்கப்பட்ட இதயம் கொண்ட இரக்கமற்ற வன்னெஞ்சர்கள் உலவும் காடனைய நாட்டில் வந்து பிறந்து விட்டன!

இங்குதான் வந்து பிறந்து விட்டன; பேசும் பொற்சித்திரங்களைத் தமது முரட்டுக் கரங் கொண்டும் அழித்தொழிக்கும் காட்டு மிராண்டிகள் இன்னமும் திரியும் இந்தப் பூமியில்தான் வந்து பிறந்து விட்டன!

கசக்கித் தூக்கி எறியப்பட்ட கண்மணிகளைக் கருவில் சுமந்த அன்புத் தாய்களின் வயிற்றை அக்கினிக் குண்டங்களாக்கி விட்டு; அந்தப் பொல்லாக் கொடுஞ் செயலை ஒரு பொழுதுபோக்காகக்

கருதும் புல்லர்கள், புனிதர்களாக வேடமிட்டு வாழும் இந்த மண்ணில்தான் இந்த மனோரஞ்சிதங்கள் மலர்ந்து கருகிவிட்டன!

பவானி,

ஜீடி

நளினி

ஸ்டெல்லா

முறையே பத்து வயதும், ஒன்பது வயதும், எட்டு வயதும், ஐந்து வயதும் கொண்ட நிலாப் பிறைக் கீற்றுகள்! மகிழம்பூக்கள்! மாணவச் செல்வங்கள்!

இதே நான்கு பிஞ்சுகளும் சென்னைக்கு அருகே தாம்பரம் சதானந்தபுரம் எனும் பகுதியைச் சேர்ந்தவர்கள்! இந்தச் சிட்டுக் குருவிகளைக் காணவில்லையென்று பெற்றோர் கலங்கினர் - எங்கெல்லாமோ தேடினர்!

பயனின்றிக் களைத்துப் போய் கண்ணீரும் கம்பலையுமாக காவல் நிலையத்துக்குச் சென்று முறையிட்டனர். அதற்கு அந்தக் காவலர்கள் கூறிய பதில் ஏடுகளில் வந்துள்ளது. காவலர்களா அவர்கள்? இல்லை காதகர்கள் என்பதை அந்தப் பதில் விளக்குகிறது!

ஏதாவது குளம் குட்டைகளில் போய்த் தேடுங்கள். அங்கு உங்கள் குழந்தைகள் கிடைக்கலாம்.

இது காவல்நிலையத்தில் கிடைத்த பதில், ஆம்! கண்ணீருக்கு வழங்கப்பட்ட ஆறுதல்!?

ஏடுகளில் செய்தி கண்டு, தமிழகத் தாய்க் குலமே பதைத்துப் பதறுகிறது!

ஆனால், இன்றைய அரசின் அலட்சியமும், காவல்துறையின் கவனமற்ற போக்கும் - இந்தப் பிஞ்சுக் குழந்தைகளின் கோர மரணம் கண்டு கூட மாறவில்லையே என்பதுதான் எல்லோரின் மனத்தையும் எரிமலையாக்குகிறது.

உடன்பிறப்பே, இதோ அந்தக் குழந்தைகளின் புன்னகை முத்தாரங்களையும் பார் - அந்த முத்தாரங்கள் அறுந்து சிதைந்து உடைந்த சிமிழ்களாக அடுக்கப்பட்டுக் கிடக்கும் அலங்கோலத்தையும் பார்!

எப்படி நடந்தது இந்தக் கொடுமை? ஏன் நடந்தது? ஏதாவது ஒழுங்கான விபரம் - தெளிவான காரணம் - இந்த அரசின் காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டதா? அல்லது கண்டு பிடிக்கும் முயற்சியாவது மேற்கொள்ளப்பட்டதா?

சிதம்பரம் அண்ணாமலை நகரில் பத்மினி கற்பழிக்கப்பட்டதும், அவள் கணவன் கொல்லப்பட்டதும் காவல்நிலையத்தில்! குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு எதிர்க் கட்சிகள் இடி முழக்கம் செய்தபிறகே; ஜெயலலிதா அரசின் செவிப்பறையில் சிறிது கேட்டது.

தர்மபுரி மாவட்டம் வாச்சாத்தி கிராமத்தில் தேடுதல் என்ற பெயரால் காவல் துறையினர் பதினேழு பெண்களைக் கற்பழித்தனர் என்ற செய்தி, காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல் வந்தது - மனம் நொந்து! அதையும் இந்த அரசின் அமைச்சர்களும், காவல்துறை அதிகாரிகளும் மூடி மறைக்கவே முயற்சி மேற்கொள்கின்றனரே அன்றி, முறையான புலன்விசாரணை நடத்தவில்லை! மூர்க்கர்களைப் பிடித்துக் கூண்டில் அடைக்கவில்லை! கொடியவரை விடுத்துக் கொள்கையாளர்களுக்குக் கூண்டு தயாரிக்கும் அரசல்லவா இது?

இதோ, நாலு மழலைகளின் மர்மச் சாவு - இது குறித்துக் காவல்துறை அதிகாரிகள் ஆளுக்கொரு கருத்து கூறுவதாக - நானல்ல, பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.

> செங்கை அண்ணா மாவட்ட காவல்துறை துணைத் தலைவர் ஆர்.வி. கோபால் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :-
>
> தாம்பரம் அருகே நான்கு பள்ளி சிறுமிகள் இறந்தது குறித்து தீர விசாரித்ததில், இவர்கள் கடத்திச் செல்லப்பட்டதற்கோ, கொலை செய்யப்பட்டதற்கோ, எந்த ஆதாரமும் இல்லை. பிரேத பரிசோதனையில் சிறுமிகள் நீரில் மூழ்கித்தான் இறந்துள்ளதாக திட்டவட்டமாக கூறப்பட்டுள்ளது. விஷம் கொடுத்ததற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை. பலாத்காரம் செய்யப்பட்டதற்கான எந்த தடயமும் இல்லை. உதடுகள், கண் இமைகளில் ஏற்பட்டுள்ள சிறு காயங்கள் நீர்வாழ் பூச்சிகளால் ஏற்பட்டிருக்கலாம் என்று

பிரேத பரிசோதனை செய்த டாக்டர் கருதுகிறார். இவர்கள் குளிக்கப் போகும் போது தவறி விழுந்திருக்கலாம்

இவ்வாறு கோபால் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

செங்கை அண்ணா மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் லட்சுமி பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த நான்கு சிறுமிகளும் விளையாடும் போது குட்டை நீரில் தவறி விழுந்துள்ளார்கள். விளையாடுவதற்கு முன்பாக தங்களது ஆடைகளை பாலீத்தின் பையில் ஒட்டு மொத்தமாக வைத்துள்ளனர். பிரேத பரிசோதனை செய்த டாக்டர் வடிவேல் சிறுமிகள் தண்ணீரில் மூழ்கித்தான் இறந்துள்ளனர் என்று கருத்து தெரிவித்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

செங்கற்பட்டு டி.எஸ்.பி. ஜோசப் நிருபர்களிடம் கூறியதாவது :-

சிறுமிகள் பிணமாக கிடந்தது பற்றி பல்வேறு கோணங்களில் விசாரித்து வருகிறோம். பிரேத பரிசோதனையில் சிறுசிறு காயங்கள் இருப்பது தெரிகிறது. ஆகையால் கொலை செய்யப்பட்டு இருக்கலாம். எங்களுக்கு மூன்று வகையான தகவல் கிடைத்துள்ளது. ஓரிரு நாளில் உண்மை தெரிந்து விடும்.

நான்கு சிறுமிகளின் உடலில் பலமான அடி எதுவும் இல்லை. மேலும் அவர்கள் வயிற்றில் பாதி ஜீரணமான உணவு இருக்கிறது. இதை வைத்துப் பார்க்கும்போது மதிய உணவு சாப்பிட்டு நான்கு மணி நேரத்தில் கொல்லப்பட்டிருக்கலாம்.

இவ்வாறு மாவட்ட காவல்துறைத் தலைவர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் (டி.ஐ.ஜி. - எஸ்.பி. - டி.எஸ்.பி.) ஆகியோர் தனித் தனிக் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்துக்களை அறிவித்துள்ளனர்.

ஒரு இடத்தில் ஒருவர் விபத்தில் இறந்தாலோ அல்லது கொலை செய்யப்பட்டாலோ அந்த இடத்தை எஸ்.பி. ஸ்பாட் இன்வெஸ்டிகேஷன் செய்ய வேண்டும். ஆனால் சம்பவம் நடந்து இரண்டு நாட்களாகியும் எஸ்.பி.யோ, டி.எஸ்.பி.யோ அந்த

இடத்திற்கு வரவில்லை. உயர் போலீஸ் அதிகாரியான டி.ஐ.ஜி. கோபால் நேற்றுதான் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டார். சிறுமிகள் சடலம் 12 மணி நேரம் நீரில் கிடந்திருக்கின்றன எனக் கூறப்படுகிறது. சாதாரணமாக இறந்து ஒரு மணி நேரத்தில் உடம்பு உப்பி விடும். வயிறு பெரிதாக இருக்கும். ஆனால் பிரேதங்களை பார்க்கும்போது அந்த மாதிரியான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை.

சிறுமிகள் உடல் நீலம் பாய்ந்து காணப்படுகிறது. மேலும் இருவரது கால் கைகள் மடக்கியபடியே உள்ளன. இவைகளுக்கு விளக்கம் சரிவர இல்லை.

உடன்பிறப்பே! நீரில் மிதந்த இந்த நீலோற்பலங்களின் உயிரற்ற உடல்களைக் கண்டபிறகாவது - நெஞ்சில் அலைமோதும் உண்மைகளை ஒளிக்க முயன்றிடாமல்; நேர்மையான முறையில் விசாரணை செய்து காரணத்தைக் கண்டுபிடிக்கக் காவல் துறையினர் முன்வருவார்களா? உண்மையான குற்றவாளிகளை உலகின் முன்னால் நிறுத்துவார்களா?

பொறுத்திருந்து பார்ப்போம்!

அன்புடன்,

மு. க.

(14-08-1992)

1928. கான இருக்கும் களங்களுக்கு இது பாசறை!

உடன்பிறப்பே,

தேர்தலில் ஏற்பட்ட தோல்வியைக் கொண்டே தி.மு.க. செத்துப் போய்விட்டது என்று பிரச்சாரம் செய்தவர்கள் அதே பிரச்சாரத்தை ஒன்றரை ஆண்டுக் காலத்திற்கு மேலாக இன்னமும் செய்து கொண்டுதானிருக்கிறார்கள். 1937-ல் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சியின் பெருந்தலைவர்களும்; ஏன் கட்சியின் பெரும்பாலான வேட்பாளர்களும் தோற்றுப் போனபோது கூட நீதிக் கட்சியை ஆயிரம் அடி ஆழக் குழி தோண்டிப் புதைத்து விட்டோம் என்றுதான் அந்தக் காலத்து வாழப்பாடிகள் சிலர் வாய் கிழியப் பேசிக்கொண்டிருந்தனர்.

ஆனால் அந்தக் கட்சிதான் திராவிடர் கழகமாக உருவெடுத்தும், பின்னர் திராவிட முன்னேற்றக் கழகமாக வளர்ச்சி பெற்றும்; தமிழ் மொழிக் காவலனாகவும் - இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போர் வீரனாகவும் - தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் ஏழை எளிய நடுத்தர வர்க்கத்தினரின் உரிமைப்போர் முரசமாகவும் - தமிழ் மக்களின் நலன் காக்கும் பேரரணாகவும் - பெரியார், அண்ணா இலட்சியங்களை நிறைவேற்றிடப் பேரிகை முழங்கும் பாடிவீடாகவும் இன்றளவும் விளங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த இயக்கம்தான் அழிந்து போய்விட்டதே; அவர்கள் கூற்றுப்படி இனிமேல் தலையெடுக்கவே முடியாமல் தரை மட்டமாகி, தவிடு பொடியாகி விட்டதே; அப்படியொரு முடிவுக்கு வந்த பிறகு ஆண்டாண்டு காலமாக - மேடைக்கு மேடை தி.மு.கழகத்தையே தாக்கிப் பேசிக் கொண்டிருக்கிறார்களே ஏன்? ஏடுகளில் சிலவற்றில் எரிச்சலைக் கொட்டிக் கொண்டிருக்கிறார்களே; ஏன்?

உடன்பிறப்பே! இதிலிருந்தே அவர்கள் திட்டமிட்டுப் பொய்சொல்லி மக்களைத் திசை திருப்பப் பார்க்கிறார்கள் என்பது உனக்கும் எனக்கும் தெளிவாகத் தெரிந்த ஒன்று!

மக்களும் இப்போது பேசத்தொடங்கி விட்டார்கள் - என்னய்யா இது; இவர்களே சொல்லுகிறார்கள் தி.மு.க. அடியோடு வீழ்ந்து விட்டது என்று! பிறகு இவர்களே பொழுது விடிந்து பொழுது போனால் தி.மு.க.வைப் பற்றியே திட்டித் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்தே தி.மு.க. ஆளுங்கட்சியாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அது மாபெரும் சக்தி என்பது உள்ளங்கை நெல்லிக் கனி போன்ற உண்மையாகிவிட்டது!

மக்களின் இந்தக் கருத்தை மெய்ப்பிக்கும் வண்ணம்; வலிமையான சக்தி வாய்ந்த நமது கழகம் மேலும் வலிவு பெற்று வளருகிறது! வளர்ந்து கொண்டே இருக்கிறது!

அதற்கு மாறாக ஊழல் சாக்கடையில் நெளியும் புழுவாக இன்றைய ஆட்சி மக்கள் மத்தியில் நிலை குலைந்து போய்க் கிடக்கிறது! அந்தப் புழுவுக்குப் பொன்னாடை போர்த்திக் கொண்டு, லஞ்ச லாவண்ய கதகதப்பில் சுகங்காணும் சில காங்கிரசாரின் கோஷ்டி கானம் அரசியல் ஞானமுள்ள நல்லோராம் நாட்டோர் பலருக்கும் கோட்டானின் சத்தமாக இருக்கிறது!

கோமான்கள், சீமான்கள், கோடீஸ்வரப் பிரபுக்கள் குறுக்கு வழியில் மேலும் பணம் குவிக்க, சகலவித அணுகுமுறைகளைக் கையாண்ட போதும் - நியாயத்தின் பக்கம் நின்று, நேர்மையைக் கடைப்பிடித்து, முறைகேடுகளுக்குத் துணை நிற்க முடியாதென்று முடிவெடுத்து நடைபெற்ற ஆட்சி தி.மு.க. ஆட்சி! அதனால் தான் பணம் படைத்த குபேரர்களின் பகையைக் கழக ஆட்சி தேடிக்கொண்டது என்பதை அனைவரும் அறிவர்! அரசின் நில புலங்களை சொத்துக்கள் ஆலைகளின் நிர்வாகங்கள் அனைத்தையும் அமோகமாகக் கொள்ளையடித்து வாயில் போட்டுக் கொண்டோரிடமிருந்து அரசின் சொத்துக்களையும் அரசுக்குரிய உரிமைகளையும் அரசுக்கே மீட்டுத்தந்து பல கோடி ரூபாய் கருவூலத்திற்கு வந்திட வழிவகுத்த ஆட்சி கழக ஆட்சி!

ஆனால் அதற்கு நேர் விரோதமாக - இன்று கோட்டைக்குள் நுழைந்ததே கொள்ளையடிக்கத்தான் எனும் குறிக்கோளுடன், அன்று கழக ஆட்சியில் அரசுக்கு மீட்கப்பட்ட சொத்துக்களையும், உரிமைகளையும் - கொழுத்த லஞ்சப் பணத்துக்காக கோடீஸ்வரப் பிரபுக்களிடமே திருப்பித் தந்து வரும் ஆட்சி இப்போது நடைபெறும் ஆட்சி! இதனிடம் மாமூல் பெற்று, பெற்றதற்கேற்ப தி.மு.கழகத்தின் மீது தினந்தோறும் அர்ச்சனை நடத்தும் ஒரு காங்கிரஸ் கோஷ்டி!

விடிய விடிய கட்டில் விருந்தளித்து வருவோரையெல்லாம் மகிழ்வித்துக் காசு குவிக்கும் ஒருத்தி, தங்கள் வீதியிலே குடியிருப்பதே கூடாதென்று, கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு தெருவில் உள்ளோர் அவளைத் துரத்திடக் கூட்டமாக வந்தபோது, அந்தக் கூட்டத்தில் இருந்த குடும்பப் பெண்களைப் பார்த்து அந்த நித்யகல்யாணி (அல்ல! அல்ல!) நிமிஷக்கல்யாணி சொன்னாளாம் நீங்கள் எல்லாம் வேசிகள் என்று!

அதற்கும் இப்போது அந்த அரசு நம்மீது விசாரணைக் கமிஷன் போட்டிருப்பதற்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும்!

இதுபற்றியும் இதைவிட முக்கியமாக சூதுமதியினரால் சூறையாடப்படும் தமிழ் மக்கள் நலன்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கவும். வரும் 22-ஆம் நாள் தலைமைச் செயற்குழு கூடுகிறது. பொதுச் செயலாளரின் அறிக்கையில் கண்டுள்ளபடி கழகத்தின் சொற்பொழிவாளர்களும் அந்தச் செயற்குழு கூட்டத்தில் கலந்து கொள்கிறார்கள்.

185 செயற்குழு உறுப்பினர்கள் - ஐம்பதுக்கு மேற்பட்ட முன்னணி சொற்பொழிவாளர்கள் - மற்றும் கழக அணிகளின் தலைமை நிர்வாகிகள் - சிறப்பு அழைப்பாளர்கள் என்று சுமார் 250 பேர் பங்கேற்கும் கூட்டம் அது!

இந்த எண்ணிக்கையை ஏன் சொல்கிறேன் என்று புரிகிறதா?

மக்கள் பிரச்சினைகளுக்காக அரசியல் ரீதியாக களங்களைக் கண்டு வருகிற கழகம்; அந்தப் பிரச்சினைகளுக்காக சட்டரீதியாகத் தீர்வு பெற நீதிமன்றங்களுக்கும் செல்ல வேண்டியிருக்கிறது.

அரசியல் நோக்குடன் கழகத்தினரைப் பழிவாங்கத் தொடரப்பட்டுள்ள தடா வழக்கு.

ராஜீவ் காந்தி கொலையை ஒட்டி நமது கழகத்தினர், தோழமை அணியினர், மற்றும் பொதுமக்கள் சொத்துக்கள் சூறையாடப்பட்டதையொட்டி இழப்பீடு தருமாறு அரசை வலியுறுத்தத் தொடர்ந்துள்ள வழக்கு.

பீர் தொழிற்சாலையை இந்த அரசு விற்றதில் நடைபெற்ற ஊழல் முறைகேடுகளை சுட்டிக் காட்டி அதிகாரிகள் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கு.

மகாமகப் படுகொலைக்கு நீதிவிசாரணை வேண்டுமென்று கோரி தொடரப்பட்டுள்ள வழக்கு.

கழக முன்னணி சொற்பொழிவாளர்கள் மீது இந்த அரசு தொடர்ந்துள்ள பல்வேறு வழக்கு.

இவைகளன்னியில் கூட்டுறவுத் தேர்தலை இந்த அரசு மோசடியாகவும், முறைகேடாகவும் ஜனநாயக விரோதமாகவும் நடத்திட சூழ்ச்சி செய்து வருவதை முறியடித்திட உயர்நீதிமன்றத்திலும் உச்ச நீதி மன்றத்திலும் வழக்கு. இந்த வழக்கில் மட்டும் எவ்வளவு முயற்சிகள் என்பதை நமது மாவட்டச் செயலாளர்கள் மட்டுமல்ல, குறிப்பாக இதற்காக சென்னையில் பல நாட்கள் தங்கி பணியாற்றியுள்ள தம்பிகள் கோ.சி. மணி, பொன். முத்துராமலிங்கம், வீரபாண்டி ஆறுமுகம் ஆகியோரைக் கேட்டுப் பார்த்தால் சிரமம் - செலவு எல்லாம் எவ்வளவு என்று தெரியும்.

இது போதாதென்று தன்மீது மலைபோல் குவிந்திருக்கும் ஊழல்களிலிருந்தும், நிர்வாகக் கோளாறுகளிலிருந்தும், சட்டம் ஒழுங்கு கெட்டுப்போன நிலையிலிருந்தும், மக்களின் அதிருப்தியிலிருந்தும் திசைதிருப்புவதற்காக; இதோ விசாரணைக் கமிஷன்! இதனை சந்திக்க வேண்டிய விதத்தில் சந்திப்போம் என்று உன்னை நம்பித்தான் சொல்லியிருக்கிறேன்.

இத்தனை வழக்குகளுக்கும், விசாரணைக் கமிஷனுக்கும் எத்தனை வழக்கறிஞர்கள் தேவையென்பதும்; உரிய செலவுகள் எவ்வளவு ஆகும் என்பதும் உனக்குத் தெரியாதா?

அதுமட்டுமல்ல உடன்பிறப்பே! போகிற போக்கைப் பார்த்தால் - விரைவில் ஒரு பொதுத் தேர்தலையும் சந்திக்க வேண்டியிருக்கும். சரித்திரம் திரும்பும் என்று நிருபர்களிடம் கூறியிருக்கிறதே, படித்திருப்பாயே!

சரித்திரம், விரைவாகவும் திரும்பலாம் - சற்றுத் தாமதமாகவும் திரும்பலாம்! ஆனால் நிச்சயம் திரும்பியே தீரும்!

எனவே அதற்கும் நாம் ஆயத்தமாக வேண்டாமா?

இப்போது சொல்கிறேன்; என்றைக்குமில்லாமல் இந்தச் செயற்குழுவுக்கு மட்டும் எத்தனை பேர் கலந்துகொள்வார்கள் என்று எண்ணிக்கையை ஏன் சொன்னேன் தெரியுமா?

அடடா; சுமார் ஆயிரம் பேர் கலந்து கொள்ளக் கூடிய பொதுக்குழுவைக் கூட்டாமல் விட்டோமே என்று ஒரு கவலை!

பரவாயில்லை; இந்தச் செயற்குழு ஒரு தொடக்கமாக இருக்கட்டும்.

சந்திக்க இருக்கும் பொதுத் தேர்தல், பல வழக்குகள், விசாரணைக் கமிஷன், இத்தனை செலவுக்கான நிதியை நான் யாரிடம் போய்க் கேட்பேன்! யாரிடம் போய்க் கேட்டிருக்கிறேன்! எமர்ஜன்சி நேரத்தில் எத்தனையோ தடைகளை கடந்து, பேருந்துகளில் ஏறிக்கொண்டு ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கானவர் வீடு தேடி வந்து நிதியை வாரி வழங்கினீர்களே; இன்னமும் நினைத்தால் என் நெஞ்சு நெகிழ்கிறது! கண்கள் பனிக்கின்றனவே!

உயிரினும் மேலான அந்த உடன்பிறப்பைப் பார்த்துத்துதான் கேட்கிறேன்!

ஏற்கெனவே சில மாவட்டங்களில் பொதுக் கூட்டங்களில் என்னிடம் கழக நிதி வழங்கியுள்ளனர்.

தொடர்ந்து; நான் குறிப்பிட்டுள்ள எல்லா செலவினங்களுக்கும் சேர்த்து கழக நிதி வழங்கிடும் கடமை உணர்வினை ஒவ்வொரு உடன்பிறப்பும் பெற்றாக வேண்டும்.

அதற்கோர் கட்டமாக; செயற்குழு கூட்டத்திற்கு வருவோர் கணிசமான நிதியை (சொற்பொழிவாளர் உட்பட) கூட்டத்திலேயே வழங்கிட வேண்டுகிறேன்.

வழங்கும் நிதி நூறு ரூபாய்க்குக் குறையாமல் இருக்கட்டும் - அதற்கு மேல் எவ்வளவு என்பது அவரவர் வசதியைப் பொறுத்தது!

அரசியல் ரீதியாகவும் - சட்டரீதியாகவும் நாம் காண இருக்கும் களங்களுக்கு; இந்தச் செயற்குழு ஒரு பாசறையாக அமையும்!

அன்புடன்,

மு. க.

(17-08-1992)

1929. ஊழல் அத்தியாயம் (1)
அலங்கோல ஆட்சியின் அநியாயக் கதை!

உடன்பிறப்பே,

இந்தியக் கடற்படையைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட குடிதண்ணீர் வரும் வழியில்; குழாயில் ஓட்டை விழுந்து கசிந்த நீரை இடையேயுள்ள கிராமத்தினர் எப்படிப் பயன்படுத்தலாம் என வெகுண்டு துப்பாக்கியால் சுட்டதில் மதுலமேரி என்ற பெண் மரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடையாதார் இருக்க முடியாது. இந்த நிகழ்ச்சியை முதலமைச்சர் ஜெயலலிதா மிகக் கடுமையாகக் கண்டித்து மத்திய பாதுகாப்பு அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறாராம்! அந்தக் கடிதத்தில் தவறு செய்த கடற்படையினர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறாராம்!

பாதுகாப்பு அமைச்சருக்கு எழுத வேண்டியதுதான்! அவரும் உடனடியாக நடவடிக்கை எடுத்துத் தனது கடமையைச் செய்ய வேண்டியதுதான்! ஒரு பெண்மணியைச் சுட்டுக் கொன்ற கடற்படைவீரன் யாராக இருப்பினும் தண்டனை வழங்க வேண்டியதுதான்! இதில் இருகருத்துகளுக்கே இடமில்லை. எல்லாக் கட்சிகளுமே; இந்த விஷயத்தில் உடனடி நடவடிக்கை தேவை என வலியுறுத்தியுள்ள நமது மாநில முதலமைச்சரின் கதை என்ன?

முதலமைச்சரின் கதையைத் தொடர்ந்து ஆராய்ந்திட என் கடிதங்கள் பயன்படும்! பழைய கதைதான்; இருப்பினும் அவ்வப்போது உன் போன்ற உடன்பிறப்புகளும் நினைவுபடுத்திக் கொண்டு ஊராருக்கும் நினைவுபடுத்திட பயன்படுமென்பதால் ஒவ்வொரு நாளும் அந்தக் கதையில் ஒவ்வொரு அத்தியாயத்தை எழுதுகிறேன்!

முதலமைச்சரின் கதை என்றதும்; சொந்தக் கதை என்று நினைத்து; கோர்ட்டில் தடைவாங்கி விடப் போகிறார்கள். ராஜரிஷி பத்திரிகைக்கு வாங்கியதைப் போல! இது சொந்தக் கதையல்ல; சொந்தக் கதையைத்தான் பத்து பனிரெண்டு வருடங்களுக்கு முன்பு அவரே குமுதம் இதழில் புகைப்படங்களுடன் விலாவரியாக எழுதி விட்டாரே! அதனால் இது அவரது ஓராண்டுக்கால ஆட்சியின் கதை!

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தவுடன் ஆகஸ்டு மாதம் 14-ஆம் தேதி மாலை எழும்பூர் சேட் காலனியில் உள்ள தராசு பத்திரிகை அலுவலகத்தை ஒரு கும்பல் ஆயுதங்களுடன் வந்து உள்ளே இருந்தவர்களைத் தாக்கியது. இதில் அங்கே வேலை செய்த ஊழியர்கள் சத்தியமூர்த்தி, சுப்பிரமணியம் இருவரும் மாடியிலிருந்து கீழே தள்ளப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். அலுவலகத்தில் ஆறு லட்ச ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் சேதப்படுத்தப் பட்டன.

பத்மநாபன், பாஸ்கரன், ராஜன், சேதுராமன், மூர்த்தி, ஆனந்தன் என்போர் உடனடியாக கைது செய்யப்பட்டனர். இவர்கள் வட சென்னை பகுதிகளைச் சேர்ந்தவர்கள், மற்றும் பாக்சர் வடிவேலுவும் இன்னும் சிலரும் தேடப்பட்டனர். நாகராஜன் ஐ.ஏ.எஸ். மீதும் புகார் செய்யப்பட்டதாகக் கூறி அவரையும் கைது செய்தனர். அதிகாரி நாகராஜனைத் தவிர மற்ற அனைவரும் அ.தி.மு.க. ஆதரவாளர்கள், அனுதாபிகள், அ.தி.மு.க. அமைச்சர்களின் ஆட்கள் என்று அன்றைக்கு சென்னை மாநகரமே பேசியது!

வட சென்னைப் பகுதி அ.தி.மு.க. ஆதரவாளர்களைக் கைது செய்ய உடனடி நடவடிக்கை எடுத்துத் துடிப்புடன் பணியாற்றிய ஒரு போலீஸ் அதிகாரி மிக மிக உடனடியாக வேறிடத்துக்கு மாற்றப்பட்டு விட்டார்.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் பாக்சர் வடிவேலு என்பவர் ராயபுரம் போன்ற வடசென்னைப் பகுதிகளில் அமைச்சர்கள் மதுசூதனனுக்கும் ஜெயகுமாருக்கும் மிக நெருங்கிய நண்பர் என்பதற்குப் பல ஆதாரங்கள் புகைப்பட வடிவத்தில் ஏடுகள் வெளியிடப்பட்டன.

அந்த அமைச்சர்கள் இருவரும் பதவிக்கு வருவதற்கு முன்பு 1991 பொதுத்தேர்தலில் வேட்பாளர்களாக நின்றபோது

- மிக உயரமான ஜெயலலிதா கட் அவுட்களை தேர்தல் பிரச்சாரத்திற்காக வைத்து; அந்தக் கட்அவுட்டுகளின் காலடியில் பாக்சர் வடிவேலுவின் பெயர் எழுதப்பட்டிருந்த படங்களை நீதிமன்றத்தின் பார்வைக்கே வைக்கப்பட்டதாக எனக்கு நினைவு! அந்தப் படங்கள் பத்திரிகைகளிலும் வெளிவந்தன!

கைதானவர்கள் ஜாமீனில் விடப்பட்டனர். நாகராஜன் திருநெல்வேலிக்கு அனுப்பப்பட்டார்; நிபந்தனை ஜாமீன் பேரில்!

மற்றவர்கள் கடலூருக்கு நிபந்தனை ஜாமீனில் அனுப்பப்பட்டனர்!

ஆனால் அவர்கள் யாரும் தொடர்ந்து கடலூரில் தங்கியிருக்கவில்லை - நிபந்தனை ஜாமீனில் இருந்தபோதும்; நிபந்தனை தளர்த்தப்பட்ட பிறகும் அமைச்சர்களின் வீடுகளிலும், கார்களிலும்தான் காணப்பட்டார்கள்!

இப்படியே ஓராண்டு காலம் கழிந்து விட்டது! - தராசு ஊழியர் இருவரின் கொலை சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவே இல்லை!

இதற்கிடையே தராசு ஆசிரியர் இந்தக் கொலை வழக்கு என்ன ஆயிற்று என்ற கவலையை வெளிப்படையாகவே பலமுறை தெரிவித்துக் கொண்டார்!

பத்திரிகைகளும் அந்த இரட்டைக் கொலை குறித்து இரட்டை இலை ஆட்சி மௌனம் சாதிப்பது ஏன்; என்று விமர்சித்துக் கொண்டே இருந்தன!

இப்போது மதுலமேரி கொலையில் உடனடி நடவடிக்கை தேவையென்று பாதுகாப்பு அமைச்சர் பவாருக்கு உடனடித் தபால் எழுதுகிற ஜெயலலிதா; தராசு ஊழியர் கொலையில் (உடனடியாக) ஓராண்டு கழித்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்கிற அளவுக்கு தனது அரசின் - தனது காவல் துறையின் அவசரத்தையும் ஆர்வத்தையும் காட்டிக் கொண்டிருக்கிறார்.

ஜெயலலிதா அரசு இந்த வழக்கில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ள அதே நாளில் தராசு இதழ் ஆசிரியர் ஷியாம் உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவின் சாராம்சம் பின்வருமாறு :-

"1991 ஆகஸ்டு 14-ந் தேதி பாக்சர் வடிவேலு என்பவர் தலைமையில் 20-க்கும் மேற்பட்டவர்கள் தராசு அலுவலகத்தை சூறையாடினர். ஊழியர் இருவர் கொலை செய்யப்பட்டு சுமார் 25 லட்சம் சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டன. தராசு அலுவலகத்தைத் தாக்கியவர்கள் முன்னாள் உள்துறை செயலர் நாகராஜன் அனுப்பியதாகக் கூறி தாக்குதல் நடத்தினர். அப்படிக் கூறியது வழக்கை திசை திருப்பும் முயற்சியாகும். நாகராஜனை இந்த வழக்கில் வேண்டுமென்றே சிக்க வைத்து அதை வைத்து பத்மநாபா கொலை வழக்கில் அவரை மிரட்டி வாக்குமூலம் வாங்கப்பட்டிருக்குமென்று சந்தேகப்படுகிறேன். தமிழக அரசு தராசு அலுவலகக் கொலை வழக்கு விசாரணையில் தீவிரம் காட்டவில்லை. இதை சி.பி.ஐ. விசாரணைக்கு அனுமதித்தால் உரிய நீதி கிடைக்கும்."

உடன்பிறப்பே; 25 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களை மட்டுமல்ல - தமது அலுவலக ஊழியர் இருவரையும் இழந்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளவரின் ரிட் மனு இவ்வாறு அமைந்திருக்கிறது. உடன்பிறப்பே, நான் கோடு கிழித்துக் காட்டியுள்ளது - அதாவது தராசு ஆசிரியர் உயர் நீதிமன்றத்தில் அளித்துள்ள ரிட் மனுவில் உள்ளதாக வந்துள்ள வாசகங்கள் தினமணியில் வெளியிடப்பட்டதாகும்.

ஆனால் அதே நாளில் தினமணி வளாகத்துக்குள்ளிருந்து வெளிவரும் எக்ஸ்பிரஸ் ஏட்டில் முதல்பக்கச் செய்தியாக விளிம்பு கட்டி பிரசுரிக்கப்பட்டுள்ளதை - அப்படியே ஆங்கிலத்திலும் தமிழிலும் தந்துள்ளேன். அதையும் படித்துப்பார்!

EXPRESS NEW SERVICE

MADRAS - Mr. Syam, editor of Tamil Weekly Tarasu, who ad earlier carged, former Home Secretary R. Nagaraja wit the attack and double murder is offce o Aug. 14 last year, as ow canged is stand.

I a petito filed before the Madras Hig Court o Tursday, e said it appears that one oxer Vadvelu and is associates ad committed the offeces wit the patronage of some of the canet misters of

the state Goverment. It appears that oxer Vadvelu and is me also belong to the rulng party the state. Tey are oldng out a reig of terror eve ow North Madras and elsewhere Madras, but still their freedom to commit offeces is ot arrested by the polce.

It appears that the vestigato (the case) revealed that very mportant persons, especially some of the canet misters of e goverment are behnd the real culprits. It appears that the vestigato is put to a alt because of the revelato that some misters were volved the commisso of the offece eiter as conspirators or abettors.

Eve after a year, vestigato ad ot bee conducted mpartially by the State polce. Tey were bunglng under the advce of the rulng party, e alleged, prayng for a directo to and over the case to the CBI for vestigato and to pay a compensato of Rs. 25 lakh.

இதன் தமிழாக்கமாவது :-

தராசு அலுவலகம் தாக்கப்பட்டதற்கும் - இரட்டைக் கொலைகள் நடைபெற்றதற்கும் முன்னாள் உள்துறை செயலாளர் ஆர். நாகராஜன்தான் காரணம் என்று புகார் கூறிய - தராசு ஆசிரியர் ஷியாம் இப்போது - தமது கருத்தை மாற்றிக் கொண்டிருக்கிறார்.

சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ள ரிட் மனு ஒன்றில் அவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழக அரசின் அமைச்சர்கள் சிலரின் தூண்டுதலின் பேரில் - பாக்சர் வடிவேலுவும் அவரது ஆட்களும்தான் தராசு அலுவலகத்தை தாக்கி இருக்கிறார்கள்; பாக்சர் வடிவேலுவும் அவரது ஆட்களும் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்களே!

இப்போதும் வட சென்னையின் பல பகுதிகளிலும் இவர்கள் தொடர்ந்து வன்முறைத் தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள்; எனினும் போலீஸ் இவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் - வன்முறை

நடத்திட இவர்களுக்கு சுதந்திரம் வழங்கி விட்டது போல நடந்து கொள்கிறது.

தராசு அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் பற்றிய விசாரணையில் - மிக மிக முக்கியமான புள்ளிகள் - சில அமைச்சர்கள் உட்பட - இந்தக் குற்றவாளிகளுக்குப் பின்னால் இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. விசாரணையே தொடர்ந்து நடத்தாமல் பாதியிலேயே கைவிட்டு விட்டார்கள்; காரணம் - இந்த வன்முறைத் தாக்குதலில் சில அமைச்சர்களும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான்! அமைச்சர்கள் சதி செய்திருக்கிறார்கள் அல்லது குற்றவாளிகளுக்கு புகலிடம் தந்திருக்கிறார்கள் என்பது தெரிய வந்ததும் விசாரணையையே பாதியில் நிறுத்தி விட்டார்கள்.

சம்பவம் நடந்து ஓராண்டு முடிந்து விட்டது. எனினும் போலீசாரால் இந்த வன்முறைத் தாக்குதல் பற்றி - பாரபட்சமற்ற விசாரணையைத் தொடர முடியவில்லை; ஆளும் கட்சியினரின் ஆலோசனை - தலையீடு - காரணமாக விசாரணையைத் தொடர முடியாமல் தடுமாறுகிறது போலீஸ்! ஆகவே - இந்த வழக்கை மத்திய புலனாய்வுக்குழு (சி.பி.ஐ.) விடம் ஒப்படைக்க உத்திரவிட வேண்டும் என்று வேண்டுகிறேன்; எனக்கு ஏற்பட்ட இழப்பிற்கு ஈடாக 25 லட்சம் ரூபாய் தந்திடவும் உத்திரவிட வேண்டுகிறேன் -

இவ்வாறு தராசு ஆசிரியர் ஷியாம் தமது மனுவில் குறிப்பிட்டிருக்கிறார்.

உடன்பிறப்பே,

எக்ஸ்பிரஸ் செய்திக்கும் தினமணி செய்திக்கும் ஏன் இவ்வளவு வித்தியாசம் என்று என்னைக் கேட்காதே!

அமைச்சர்களுக்கும் இந்த இரட்டைக் கொலைக்கும் தொடர்பு இருக்கலாம் என்று பாதிக்கப்பட்டவரின் ரிட் மனுவில் கூறப்பட்டிருக்கிறதே; அதனையொட்டி ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்கப்படுமா? அது ஒரு நீதிபதியின் தலைமையில் அமைக்கப்படுமா; அல்லது அரசாங்கத்தில் வழக்கறிஞராகப்

பணியாற்றும் ஒருவர் தலைமையில் அமைக்கப்படுமா? என்று கூட என்னைக் கேட்காதே!

உபதேசிகள் போல சிலர் புறப்பட்டு ஜெயலலிதா ஆட்சிக் கதையின் கயமைத்தனங்களை கண்ணாடி பீரோ வைத்து மறைக்கப் பார்க்கிறார்களே; அவர்களைப் பார்த்துக் கேள்! அப்போதுதான் அந்த உபதேசிகளின் உண்மை உருவம் உலகிற்குப் புரியும்!

அடுத்த ஊழல் அத்தியாயம் பற்றி அடுத்து வரும் கடிதத்தில்!

அன்புடன்,

மு. க.

(18-08-1992)

1930. ஊழல் அத்தியாயம் (2)
எம்.ஜி.ஆரின் பக்தனை; பழிவாங்கிய படலம்!

உடன்பிறப்பே,

இன்றைய அமைச்சர்கள் சிலர் கொலை வழக்கில் தொடர்புள்ளவர்களா யிருக்கிறார்கள். அவர்கள் கூண்டிலேற்றப்பட வேண்டுமேயானால் (சி.பி.ஐ.) மத்திய புலனாய்வுத் துறை மூலமே விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று இரட்டைக் கொலைக்கும் இரு ஊழியர்களைப் பலிகொடுத்துப் பாதிக்கப்பட்ட தராசு இதழின் ஆசிரியர் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளது பற்றியும் - மேலும் தராசு ஊழியர்கள் கொலை சம்பந்தமான பல விபரங்களையும் - அதில் ஜெயலலிதா அரசு நடத்திய அதிகார துஷ்பிரயோகத்தையும் - நேற்றைய கடிதத்தில் விரிவாகக் குறிப்பிட்டிருந்தேன்.

இன்று **"அலங்கோல ஆட்சியின் அநியாயக் கதை"**யின் **"ஊழல் அத்தியாயம்"** என்பதின் தொடர்ச்சியாக இந்தக் கடிதத்தை உனக்கு எழுதுகிறேன்.

இன்னும் கிளைமாக்ஸ் விஷயங்கள் அடங்கிய கடிதங்கள் சில உன் பார்வைக்கு வர இருக்கின்றன! இதை இப்போதே எழுதிவிடு என்று அவசரப்படாதே! சினிமாப் படங்களில் கூட தொடக்கம் முதல் இடைவேளை தாண்டியும் கூட கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற கதாபாத்திரங்கள் கிளைமாக்ஸ் காட்சியில்தானே தங்களின் வீழ்ச்சியை சந்திப்பார்கள்! கிளைமாக்ஸ் இல் தானே பொய்மையின் முகத்திரை கிழிக்கப்பட்டு; சூது, வாது, சூழ்ச்சிகளின் மாயாஜாலங்கள் சுக்குநூறாக்கப்பட்டு உண்மையின் தகத்தகாயமான ஒளி வெளிப்படும்!

அந்த கிளைமாக்ஸ் கடிதங்கள் தாமதமாக உன் கைக்குக் கிடைக்கும்! அதுவரையில் பொறுமையாக இந்த மலரும் நினைவுகள் போன்ற கடிதங்களைப் படித்துக்கொண்டிரு! மலரும் நினைவுகள் என்று மகிழ்ச்சியாகச் சொல்கிறேன் என்று கருதாதே!

மனத்தைத் துளைக்கும் நினைவுகள்தான் இவைகள்!

இந்த ஆண்டு பிப்ரவரி 15ஆம் நாள் சென்னை மாலை முரசு இதழில் ஒரு பேட்டி வெளியாகியிருந்தது. அந்தப் பேட்டியின் தலைப்பு - என்னை ஜெயலலிதா பழிவாங்கி விட்டார் என்பதாகும்!

பேட்டியளித்தவர் யார் தெரியுமா? சென்னையில் உள்ள எம்.ஜி.ஆர். நினைவு இல்லத்தின் நிர்வாகி முத்து!

இதோ 15.2.92 மாலை முரசு இதழில் வெளிவந்துள்ள அந்தச் செய்தியை அப்படியே தந்துள்ளேன்! இதோ எம்.ஜி.ஆர். அவர்களின் விசுவாசமிக்க ஊழியர் - முத்துவின் பேட்டி:-

ஜெயலலிதா பற்றிய ரகசியம் ஒன்றை ஒருமுறை எம்.ஜி.ஆரிடம் நான் கூறியதால் அது பெரிய பிரச்சினையாகி விட்டது. அதற்காக இப்போது என்னை ஜெயலலிதா பழி வாங்கி விட்டார் என்று எம்.ஜி.ஆர். நினைவு இல்ல நிர்வாகி முத்து வேதனையுடன் தெரிவித்தார்.

எம்.ஜி.ஆரின் உதவியாளரும், எம்.ஜி.ஆர். நினைவு இல்ல பொறுப்பாளருமான முத்து, கஞ்சா கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்டார் அல்லவா?

கஞ்சா கடத்தல் வழக்கில் தன்னை கைது செய்தது ஏன் என்பது குறித்து அவர் அளித்து உள்ள பேட்டி வருமாறு:-

சம்பவத்தன்று நான் படுத்து தூங்கிக் கொண்டு இருந்தேன். அப்போது கதவு தட்டப்பட்டது. நான் எழுந்து வந்து கதவை திறந்தேன். வெளியே ஒரு இன்ஸ்பெக்டரும், 2 போலீஸ்காரரும் நின்று கொண்டு இருந்தனர். என்ன விஷயம் என்றேன். ஏ.சி. அய்யா உங்களை பார்க்க வேண்டும் அழைத்து வாருங்கள் என்று சொன்னார்; அதனால் வந்தோம் என்றார்கள்.

நானும் அதை நம்பி வெளி கேட்டை மட்டும் பூட்டி விட்டு, அவர்களுடன் சென்றேன். போலீஸ் நிலையத்துக்கு சென்றால் அங்கு ஏ.சி. இல்லை, ஒரு போலீஸ்காரர் மட்டும் மப்டி உடையில் இருந்தார் - 90 நிமிடம் வரை அங்கேயே இருந்தேன்.

அப்போது நான் நீங்கள் கூப்பிட்டதும் வந்து விட்டேன். நினைவு இல்லம் கதவு கூட பூட்டவில்லை. பூட்டிவிட்டு வந்து விடுகிறேன் என்றேன்.

உடனே இன்ஸ்பெக்டர் இந்த ஜீப்பில் போய் வருவோம் என்று கூறினார். நானும் நம்பி ஜீப்பில் ஏறினேன். போய் கதவுகளை பூட்டி விட்டு ஜீப்பில் ஏறினேன். ஜீப் போலீஸ் நிலையம் செல்லாமல் சைதாப்பேட்டை கோர்ட்டுக்கு சென்றது.

உடனே நான் அங்கு என்ன வேலை? என்றேன். அதற்குள் ஜீப்பில் இருந்து ஒரு பொட்டலத்தை இன்ஸ்பெக்டர் எடுத்தார். இதை கையில் பிடி என்றார். நான் என்ன இது என்றேன்.

இதுவா? கஞ்சா நீ கடத்தி வந்தது என்று இன்ஸ்பெக்டர் கூறினார். எனக்கு தூக்கி வாரிப் போட்டது. இப்படியும் நடக்க வேண்டும் என்று இருந்துள்ளது. எல்லாம் ஜெயலலிதா வேலைதான் என்று நினைத்து வேதனைப்பட்டேன்.

ஜெயலலிதாவுக்கு என் மீது ஏன் கோபம் என்றால், அவருடைய ரகசியங்கள் எல்லாம் எனக்குத் தெரியும். அதில் ஒரு ரகசியம் எம்.ஜி.ஆர். காது வரை போய் பெரிய பிரச்சினையாகி விட்டது. அதை மனதில் வைத்து என்னை இப்போது பழி தீர்த்து உள்ளார். என்னை கைது செய்து சிறையில் வைத்ததை எம்.ஜி.ஆர். ஆத்மா கூட ஏற்காது. முன்னாள் அமைச்சர் காளிமுத்து ஒரு கூட்டத்தில் பேசும்போது, ஜெயலலிதா ரகசியங்களை எம்.ஜி.ஆரிடம் சொன்ன முத்து என்று கூறி உள்ளார். அது என்ன ரகசியம் என்பது காளிமுத்துக்கு நன்றாக தெரியும். அந்த பரம ரகசியத்தை அவரிடமே கேளுங்கள்; ஏனெனில் நான் எல்லா விவரங்களையும் ஒரு நாள் அவரிடம் மனம் விட்டு பேசி உள்ளேன்.

இந்த சம்பவம் நடந்த பிறகு ஜானகி அம்மையாரைப் போய் பார்த்தேன். என்னைப் பார்த்ததும் அவர் கண்ணீர் விட்டார். அந்த அம்மா கண்ணீரை பார்த்ததும் எனது வேதனை எல்லாம் பறந்து போய் விட்டது. ஜெயலலிதா

ஆட்சிக்கு, ஆணவத்துக்கு, அகம்பாவத்துக்கு அங்குசம் போட்டு அடக்க வேண்டும். ஜெயலலிதா ஆட்சிக்கு ஜன்னி வந்து விட்டது.

இவ்வாறு குமுறும் எரிமலையாக - கொந்தளிக்கும் கடலாகப் பேட்டியளித்த முத்து; உயர்நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்ட விபரம் குறித்து, 28.2.92 தினகரன் இதழ் வெளியிட்டுள்ள செய்தியை இந்த மலரும் நினைவில் இணைக்காவிட்டால்; ஜெயலலிதாவின் அதிகார துஷ்பிரயோகத்தைப் பற்றியும் - வஞ்சம் தீர்க்கும் எந்த வழியையும் கையாளுவார் என்கிற பழிவாங்கும் போக்கு பற்றியும் - முழுமையான வடிவம் கிடைக்காமல் போய் விடும். எனவே பழைய செய்தியாயினும்; நீயும் படித்து மற்றவர்களுக்கும் பரப்பிடவேண்டிய செய்தி என்பதற்காக, எம்.ஜி.ஆர். முத்துவின் மாலை முரசு பேட்டியையும், தினகரனில் வெளிவந்த அவரது வழக்குச் செய்தியையும் நினைவூட்டுகிறேன்.

இதோ; அந்த வழக்குச் செய்தி:-

கஞ்சா வைத்து இருந்ததாக கைது செய்யப்பட்ட எம்.ஜி.ஆர். உதவியாளர் முத்துவை விடுதலை செய்து ஐகோர்ட்டு உத்தரவிட்டது. அவரது காவலை நீடித்தது சட்ட விரோதம் என்று நீதிபதி கூறி உள்ளார்.

சென்னை தியாகராயநகரில் உள்ள எம்.ஜி.ஆர். நினைவு இல்லத்தின் நிர்வாகி பி.ஆர். முத்து எம்.ஜி.ஆரிடம் உதவியாளராக இருந்தவர். இவரை 4.2.92 அன்று கஞ்சா வைத்திருந்ததாக போலீசார் கைது செய்து காவலில் வைத்தனர். இவர் ஜாமீன் கேட்டு மாஜிஸ்திரேட் செசன்சு கோர்ட்டில் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே சென்னை ஐகோர்ட்டில் ஜாமீன் கேட்டு மனு தாக்கல் செய்தார். அதில் அவர் கூறி இருப்பதாவது:-

சென்னையில் உள்ள எம்.ஜி.ஆர். நினைவு இல்லத்தின் நிர்வாகியாக நான் பணி புரிந்து வந்தேன். மறைந்த முதல்வர் எம்.ஜி. ராமச்சந்திரனிடம் 30 ஆண்டுகளாக நேர்மையாக உண்மையான உதவியாளனாக பணிபுரிந்து வந்தேன்.

4.2.92 அன்று மாம்பலம் போலீசார் எம்.ஜி.ஆர். நினைவு இல்லத்திற்கு வந்தனர். மாம்பலம் காவல் நிலையத்திற்கு

என்னை அழைத்துச் சென்றனர். பின்னர் சைதாப்பேட்டை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் என்னை ஆஜர் படுத்தினர்.

750 கிராம் கஞ்சா வைத்திருந்ததாக போதை பொருள் தடுப்பு சட்டம் பிரிவு 20 (5) (1) - ன் கீழ் நான் கைது செய்யப்பட்டு இருப்பதாக மாஜிஸ்திரேட் என்னிடம் தெரிவித்தார். அதையடுத்து என்னை 15 நாள் காவலில் வைக்க உத்திரவிடப்பட்டது.

நான் நிரபராதி, எனக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. உள் நோக்கத்தோடு நான் கைது செய்யப்பட்டு உள்ளேன். எந்த குற்றமும் செய்யவில்லை. நான் இருதய நோயாளி. டாக்டரிடம் தவறாமல் மருத்துவ சிகிச்சை பெற வேண்டும் - எனவே என்னை கோர்ட்டு ஜாமீனில் விடுதலை செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் மனுவில் கூறி இருந்தார்.

இந்த மனு நீதிபதி ஜனார்த்தனம் முன்னிலையில் கடந்த வாரம் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் எம். கற்பக விநாயகம் ஆஜராகி முத்துவை ஜாமீனில் விடுதலை செய்யக் கோரி வாதாடினார்.

போலீஸ் தரப்பில் அரசு வழக்கறிஞர் ஐ. சுப்பிரமணியம் ஆஜராகி மனுதாரர் முத்துவை ஜாமீனில் விடுதலை செய்யக் கூடாது என்று கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து வாதாடினார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி எஸ். ஜனார்த்தனம் மனுதாரர் முத்துவை விடுதலை செய்ய உத்திரவிட்டார். மனுதாரருக்கு மேலும் 15 நாள் காவல் நீடித்தது சட்ட விரோதமானது என்றும் நீதிபதி தீர்ப்பில் கூறியுள்ளார்.

நீதிபதி தீர்ப்பில் மேலும் கூறி இருப்பதாவது:-

மனுதாரர் போதை பொருள் தடுப்பு சட்டத்தின் கீழ் 4.2.92 அன்று கைது செய்யப்பட்டு உள்ளார். 18.2.92 வரை காவலில் வைக்க சைதாப்பேட்டை மாஜிஸ்திரேட் உத்தரவிட்டு இருக்கிறார்.

பின்னர் மனுதாரருக்கு ஐகோர்ட்டு ஐந்து நாள் இடைக்கால ஜாமீன் கொடுத்தது. இதை தொடர்ந்து மனுதாரர் கோர்ட்டில் ஆஜரானார். சைதாப்பேட்டை மாஜிஸ்திரேட் மனுதாரரின் காவலை மேலும் 15 நாள் நீடித்துள்ளார். இது சட்ட விரோதமானது. போதை பொருள் தடுப்பு சட்டப்படி கைதானவர்கள் முதலில் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜர் படுத்தி 15 நாள் காவல் வைக்கப்படுவர்.

மாஜிஸ்திரேட் விதித்த 15 நாள் காவல் முடிந்ததும் மேலும் 15 நாள் காவலை நீடிக்க வேண்டுமானால் போதை பொருள் தடுப்பு சட்டத்தின் கீழ் கைதானவர்கள் மீது விசாரணை நடத்த அமைக்கப்பட்ட கோர்ட்டில்தான் ஆஜர்படுத்தப்பட வேண்டும். இல்லாவிடில் மனுதாரரை செசன்சு கோர்ட்டில் நீதிபதி முன்பு ஆஜர்படுத்தி மேலும் 15 நாள் காவலை நீடிக்க வேண்டும். ஆனால் இந்த வழக்கில் அப்படி செய்யப்படவில்லை.

மனுதாரரை போலீசார் 2-வது முறையாக மாஜிஸ்திரேட் மனுதாரரின் காவலை மேலும் 15 நாள் நீடித்து உள்ளார். இது சட்ட விரோதமானது. எனவே காவல் நீடிப்பு உத்தரவை ரத்து செய்கிறேன். மனுதாரரை விடுதலை செய்ய உத்தரவிடுகிறேன்.

போதை பொருள் தடுப்பு சட்டத்தின் கீழ் கைதானவர் மீது விசாரணை நடத்த தமிழ்நாட்டில் தனியாக ஒரு கோர்ட்டு இல்லை. எனவே மனுதாரரின் காவலை நீடிக்க மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு உள்ளார் என்று அரசு வழக்கறிஞர் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் போதை பொருள் தடுப்பு சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க தனியாக ஒரு கோர்ட்டு இல்லாவிட்டால் மனுதாரரை செசன்சு கோர்ட்டில்தான் ஆஜர்படுத்தி இருக்க வேண்டும்.

மனுதாரர் மீதான வழக்கில் போலீசார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து அந்த வழக்கு விசாரணை செசன்சு கோர்ட்டில் நடந்தால் அதில் மனுதாரர் ஆஜராக வேண்டும்.

இவ்வாறு நீதிபதி தனது தீர்ப்பில் கூறியுள்ளார்.

இது முக்கியமான வழக்கு என்பதால் தடா வழக்குகளில் போலீஸ் தரப்பில் ஆஜராகும் அரசு வழக்கறிஞர் ஐ. சுப்பிரமணியம் இந்த வழக்கில் ஆஜரானார். எம்.ஜி.ஆர். நினைவாலய நிர்வாகி முத்துவை ஜாமீனில் விடுதலை செய்யக் கூடாது என்று 4 நாட்களாக வாதாடினார். இரு தரப்பு வாதங்களும் கடந்த திங்கட்கிழமை முடிந்தது. இதுதான் தினகரன் வெளியிட்ட செய்தியாகும்.

உடன்பிறப்பே, பாவம்! பழிவாங்கப்பட்ட இந்த முத்துவின் விவகாரத்தில் அதிகார துஷ்பிரயோகம் - பொய்க் குற்றச்சாட்டு - அடக்கு முறை - சர்வாதிகாரக் கொடுங்கோல் - சட்ட விதிமுறைகளைக் காவல்துறையினர் மூலமாகத் தனது இஷ்டப்படி வளைத்துக்கொண்ட அநியாயம் - உயர்நீதிமன்றத்தில் கிடைத்த தீர்ப்பு - இத்தனையும் பார்க்கும்போது, இதற்கெல்லாம் விசாரணைக் கமிஷன் அமைக்கப்படுமா என்று உனக்குக் கேட்கத் தோன்றும்! என்னைக் கேட்டு என்ன பயன்? சரித்திரம் திரும்பும் என்று சொல்லியிருக்கிறாயே; என நீ என்னைக் குறும்பாகப் பார்ப்பதின் அர்த்தமும் புரிகிறது! சரித்திரம் திரும்பும் நிச்சயமாக! எப்போது? விரைவில்! அதற்குமுன் விசாரணைக் கமிஷன் உண்டா இதற்கு? என்ற கேள்வியை; அய்யோ! ஜெயலலிதாவுக்குப் பெரும் சரிவு ஏற்பட்டு வருகிறதே; அதனால் தி.மு.க. அல்லவா பலம் பெற்று விடும்! எனத் துடித்து - நம்மீது எரிச்சல் கொட்ட தொடங்கியுள்ளார்களே; அவர்களைப் பார்த்துக் கேள்! அந்த உபதேசிகளின் உண்மை உருவம் உலகிற்குத் தெரியட்டும்! எனவே உரத்த குரலில் கேள்!

அடுத்த ஊழல் அத்தியாயம் பற்றி அடுத்த கடிதத்தில்!

அன்புடன்,

மு. க.

(19-08-1992)

1931. ஊழல் அத்தியாயம் (3)
சொக்கலிங்க புராணம்

உடன்பிறப்பே,

இந்த ஆண்டு மார்ச் மாதம் 14-ந் தேதியன்று பத்திரிகைகளில் ஒரு பரபரப்பான செய்தி வெளி வந்தது. சட்டப் பேரவை நடந்து கொண்டிருக்கும் கால கட்டம் அது. பேரவை உறுப்பினர்கள் சட்டமன்ற வளாகத்தில் உள்ள விடுதிகளில் தங்கியுள்ளனர். அப்படித் தங்கியிருந்தவர்களில் ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வைச் சேர்ந்த மதுராந்தகம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சொக்கலிங்கம் என்பவரும் ஒருவர். தனது மனைவி மல்லிகாவின் அந்த விடுதி அறையில் தங்கியிருந்தார்.

இரவு நேரத்தில் சொக்கலிங்கம் கார் ஒன்றில் கடத்தப்பட்டார் என்றும், கடத்திப் போய் அவரை அடித்து உதைத்து படுகாயப்படுத்திக் காலை ஒடித்துப் போட்டு விட்டார்கள் என்றும் பத்திரிகைகள் பதறின.

ஆனால் ஆளுங்கட்சியினர் அவ்வளவாகப் பதறவில்லை! பரபரப்புக் காட்டவில்லை! இன்னும் சொல்லப்போனால் இப்படி நடக்கும் என்று தங்களுக்கு முன்கூட்டியே தெரியும் என்பது போல அவர்கள் காணப்பட்டனர்!

இந்தச் சந்தேகத்தை உறுதிப்படுத்துவது போல சொக்கலிங்கம் எம்.எல்.ஏ.வின் துணைவியார் மல்லிகா 15.3.92 அன்று மாலை முரசு நிருபருக்கு சென்னையில் அளித்த பேட்டி அமைந்திருந்தது. இதோ அந்தப் பெண்மணியின் பேட்டி:-

> இரவு 10.30 மணி இருக்கும். நான் கதவை மூடிவிட்டுச் சமையல் செய்து கொண்டிருந்தேன். எனது கணவர் படுத்தபடியே பேப்பர் படித்துக்கொண்டிருந்தார். பிறகு சாப்பிடாமல் அப்படியே தூங்கி விட்டார்.

அப்போது வெளியில் சப்தம் கேட்டது. திருச்சி எம்.எல்.ஏ. ஆரோக்கியசாமி அறையில் இருந்த ஒருவரிடம் சிலர் பேசிக் கொண்டு இருந்தார்கள். எனது கணவரைப் பற்றிக் கேட்டார்கள்.

அதற்கு அவர், 'இப்போது அவரைத் தொந்திரவு செய்யாதீர்கள். காலையில் வந்து பாருங்கள்' என்று சொல்லித் திருப்பியனுப்பினார்.

சிறிது நேரங் கழித்து மீண்டும் அதே ஆட்கள் பேச்சுக்குரல் கேட்டது. எங்கள் அறைக் கதவைத் தட்டினார்கள். 'நீங்கள் யார்?' என்று உள்ளே இருந்தபடியே கேட்டேன். அதற்கு, 'அண்ணி நாங்கள் தொகுதியிலிருந்து வந்திருக்கிறோம். அண்ணனிடம் முக்கியமான விஷயம் பேச வேண்டும்' என்றார்கள்.

'அவர் தூங்குகிறார். இப்போது பார்க்க முடியாது' என்றேன். அப்படியும் போகவில்லை. 'இந்த பணத்தை அவரிடம் கொடுத்து விட்டுப் போகிறோம்' என்றார்கள். எனக்கு சந்தேகம் வந்தது. 'எதுவானாலும் காலையில் வந்து பேசிக் கொள்ளுங்கள்' என்றேன். பிறகு அவர்கள் போய் விட்டார்கள்.

இரவு 11.30 மணி இருக்கும். அந்த ஆசாமிகள் 3-வது முறையாக வந்தார்கள். கதவை தட்டி, 'அண்ணி தொகுதியில் அவசரமான பிரச்சினை. அண்ணன் ஒரு போன் செய்தால் போதும். நேரில் கூட வர வேண்டாம்' என்று கெஞ்சினார்கள்.

இதற்குள் சத்தம் கேட்டு, எனது கணவர் விழித்துக் கொண்டார். கதவை திறக்கப் போனார். நான், 'சந்தேகமாக உள்ளது திறக்காதீர்கள்' என்று தடுத்தேன். அதையும் மீறி மெதுவாக கதவைத் திறந்து, யார் என்று பார்த்தார்; நானும் அருகில் நின்றேன். ஒருவர் முகம் மட்டும் தெரிந்தது. அதற்குள் ஒருவர் கத்தியை உள்ளே நீட்டினார். அதிர்ச்சி அடைந்த நாங்கள், முழு மூச்சுடன் கதவை மூட முயன்றோம்.

ஆனால் ஒரே நேரத்தில் ஏறத்தாழ 10 பேர் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தார்கள். கத்தி, கம்பு போன்ற

ஆயுதங்கள் வைத்து இருந்தார்கள். கதவை தள்ளிய வேகத்தில் நான் கீழே விழுந்தேன். அதற்குள், அந்த ஆசாமிகள் எனது கணவரை அமுக்கி, உதைத்து, தூக்கிச் சென்றார்கள். அவர் கத்தினார்.

'நான் ஒன்றும் தப்பு செய்யவில்லையே, என்னை ஏம்பா அடிக்கிறீங்க? என்னைவிட்டு விடுங்கப்பா' என்று கூச்சல் போட்டுக் கொண்டே இருந்தார்.

பக்கத்து அறையில் எல்லோரும் நன்றாக தூங்கி விட்டனர். நாங்கள் தங்கி இருந்த அறை, ஆள் நடமாட்டம் இல்லாத இடம். எனது கணவரை கறுப்பு நிற அம்பாசிடர் காரில் ஏற்றினார்கள். அதில் நம்பர் எதுவும் இல்லை. தொடர்ந்து சத்தம் போட்டுக் கொண்டே இருந்த அவரை, காருக்குள் தள்ளினார்கள். பிறகு வேகமாக கார் புறப்பட்டது.

திகைத்து நின்ற நான் உடனே அம்மா (ஜெயலலிதா) வீட்டுக்கு போன் செய்தேன். முதலில் ஒருவர் சரியாக பேசவில்லை. இன்னொரு நம்பருக்கு போன் செய்தேன். அவரிடம் விஷயத்தைச் சொன்னதும், 'பயப்படாதே. விடியற்காலை 4 மணிக்குள் உன் கணவர் வந்து விடுவார்' என்றார்.

அவ்வளவு உறுதியாக அவர் சொன்னதை கேட்டதும் எனக்கு சந்தேகம் வந்தது. அவர்களுக்கும் தெரிந்துதான் இந்த சம்பவம் நடந்து இருக்குமோ என்று நினைத்தேன். உடனே அம்மாவிடம் நேரடியாக சொல்ல வேண்டும் என்று மற்றொரு நம்பருக்கு போன் செய்தேன். ஆனால் அதே ஆள் வந்து பேசினார். 'இப்போதுதான் சொன்னேன். ஏன் அம்மாவை தொந்தரவு செய்கிறாய்? இப்போதுதான் தூங்கச் சென்றார்கள். உடனே எழுப்பினால் கோபப்படுவார்கள்' என்று சொல்லி விட்டார்.

இது சொக்கலிங்கத்தின் மனைவி அளித்த பேட்டி! கால் கைகள் முறிந்து மருத்துவமனையில் கிடத்தப்பட்டிருந்த சொக்கலிங்கத்தின் பேட்டியும் 15.3.92 மாலைமுரசில் வெளியாகியிருக்கிறது. அதில் அவர் என்ன சொல்கிறார்!

தூக்கத்தில் இருந்து எழுந்து கதவைத் திறந்ததும், 10 பேர் தள்ளிக் கொண்டு உள்ளே வந்து தாக்கினார்கள். என்ன

நடக்கிறது என்று நினைத்துப் பார்ப்பதற்குள், கழுத்தில் கத்தியை வைத்தபடியே என்னை தூக்கிச் சென்றார்கள். நான் கத்தினேன்; காரில் தள்ளி, சுற்றிலும் உட்கார்ந்து, முகத்தில் குத்தினார்கள்.

பிறகு நான் கத்தவில்லை. இவர்களிடம் முரட்டுத்தனம் செய்தால் உயிருக்கு ஆபத்து, அவர்கள் போக்கில் சென்று தந்திரமாக தப்பிக்க வேண்டும் என்று நினைத்தேன்.

அண்ணா மேம்பாலம் அருகில் திரும்பி, அம்மா வீட்டுக்கு செல்லும் வழியாக அடையாறு சென்று அங்கு ஒரு பங்களா அருகில் யாரையோ தேடினார்கள். அதன்பின் கார் தேனாம்பேட்டை வந்து பாண்டிபஜார், பனகல் பார்க், கோடம்பாக்கம், மேம்பாலம், பவர் ஹவுஸ் வழியாக அசோக் நகர் நோக்கிச் சென்றது.

அசோக் நகருக்கு செல்லும் முன், கள்ளிச் செடிகள் நிறைந்த, திறந்த வெளியில் என்னை இறக்கி உதைத்தார்கள். பிறகு ஒருவரைத் தவிர மற்ற 9 பேர், 'சரக்கு போட்டு விட்டு வருகிறோம். பார்த்துக் கொள்' என்று சொல்லி விட்டு சென்றார்கள்.

தனியாக இருந்த ஆள் திடீர் என்று பக்கத்தில் கிடந்த பெரிய கல்லை தூக்கி என் காலில் போட்டார். கால் முறிந்து ரத்தம் பாய்ந்தது. இனி தப்ப முடியாது என்று நினைத்து, 'இங்கேயே இரு. சரக்கு போட்டுவிட்டு வருகிறேன்' என்று அவரும் போய் விட்டார்.

கால் முறிந்ததால், வலி அதிகமாக இருந்தது எப்படியாவது தப்பி விடவேண்டும் என்று நினைத்து, மெதுவாக பாம்பு போல் ஊர்ந்தேன். வேட்டி செடியில் மாட்டிக் கொண்டது. அதை அப்படியே விட்டுவிட்டு ரத்தம் சொட்ட சொட்ட ஊர்ந்து சென்று பக்கத்து கட்டிடத்தில் உள்ள காவல்காரரிடம் விஷயத்தை சொன்னேன். அவர் நம்பவில்லை. பிறகு போலீசுக்கு போன் செய்தார்.

போலீஸ் அதிகாரிகள் வந்த பிறகுதான் நம்பினார்கள். என்னை ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள்.

என்னை ஏன் தூக்கி சென்றார்கள்? எதற்கு தாக்கினார்கள்? என்று தெரியவில்லை. ஆனால் அவர்கள் சென்னையைச்

சேர்ந்தவர்கள். ஏதோ பின்னணியுடன் என்னை திட்டமிட்டு தாக்கி இருக்கிறார்கள் என்பது மட்டும் புரிகிறது. அவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும்.

சொக்கலிங்கம் அளித்த இந்த பேட்டியைத் தொடர்ந்து ஏடுகளில் வந்த செய்திகளின்படி சொக்கலிங்கம், ஒரு கள்ளச் சாராயக் கோஷ்டி குறித்து புகார் செய்ததால் அவர் மீது தாக்குதல் நடைபெற்றதாக அறிய முடிந்தது.

தன்னைத் தாக்கியது குறித்து அவர் போலீசில் புகார் செய்ததையொட்டி, போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். மிகச் சிறிய விவகாரங்களுக்கெல்லாம் கொலை முயற்சிப் பிரிவைப் பயன்படுத்தி வழக்குப் போடக் கூடிய இந்த ஆட்சியில் ஒரு நூலிழையில் உயிர் தப்பிய இந்த நிகழ்ச்சியில் - கால் முறிகிற அளவுக்கு தாக்குதலுக்கு உள்ளான இந்த நிகழ்ச்சியில் - கடத்துதல், காயம் விளைவித்தல் என்பதற்கான சட்டப் பிரிவுகளில் மட்டுமே வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதைவிட வேடிக்கை என்ன தெரியுமா? சட்டப் பேரவை நடந்து கொண்டிருக்கும் போது; ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு இப்படியொரு நிலைமை ஏற்பட்டிருக்கும் போது; அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் - அந்த வன்முறைச் சம்பவம் குறித்துப் பேரவையில் பிரச்சினை எழுப்ப எந்தவொரு உறுப்பினருக்கும் உரிமை உண்டு!

அந்த உரிமையைப் பயன்படுத்திக்கொண்டு பேரவையில் 18.3.92 அன்று விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்த காவல்துறை மானியத்தின் மீது எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு பேசும் போது சொக்கலிங்கம் தாக்கப்பட்டது குறித்துச் சுட்டிக்காட்டினார்.

அப்போது சபாநாயகர் குறுக்கிட்டு, 'இந்தப் பிரச்சினை என் கவனத்திற்கு வராதது. எனவே அதுபற்றிப் பேச வேண்டாம்' என்றார்.

உடனே அமைச்சர் முத்துசாமி எழுந்து, 'அந்த உறுப்பினர் சபைக்கு வந்து பேசமுடியாது என்பதற்காக; இவர், அவரைப் பார்த்துவிட்டு வந்து பேசுகிறாரா?' என்றார் கேலியாக!

அதற்கு பதில் அளித்த திருநாவுக்கரசு, 'எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். இப்போது அவர் சட்டமன்ற விடுதியிலேயே தாக்கப்பட்டிருக்கிறார்' என்றார்.

அதாவது சொக்கலிங்கம் கடத்தப்பட்டு, கால் ஒடிக்கப்பட்டதாக எல்லா ஏடுகளிலும் வெளியான வந்த செய்திக்குப் பிறகும்; ஆதாரம் இருக்கிறதா அந்த நிகழ்ச்சிக்கு? என்று கேட்கப்பட்டது. ஒருவேளை சபாநாயகர் காதுக்கு அது எட்டாமல் இருந்திருக்கலாம்! அவரது கவனத்துக்கு அதுவரையில் யாரும் கொண்டு போகாமல் இருந்திருக்கலாம்!

ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு அதுபற்றிய முழு விபரமும் (?) தெரிந்திருக்கிறது. எனவே எழுந்து நின்று திருநாவுக்கரசுக்கு சுடச் சுட (?) பதில் என்ற வகையில்; சொக்கலிங்க புராணம் பாட ஆரம்பித்து விட்டார்.

வேறு கட்சியைச் சேர்ந்த உறுப்பினருக்கு எங்கள் கட்சி உறுப்பினரைப் பற்றி ஏன் இவ்வளவு அக்கறை?

என ஒரு கேள்வி கேட்டு; திருநாவுக்கரசை மட்டுமல்ல - மனிதாபிமானம் உள்ள அனைவரையும் ஒரு அசத்து அசத்திப் போட்டார்!

சொக்கலிங்கத்திற்காக மட்டுமல்ல; எந்த உறுப்பினருக்கும் இப்படி ஒரு நிலை வரக்கூடாது - அதிலும் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் தங்கியிருக்கும் போது கடத்தல், கால் ஒடித்தல் என்பதெல்லாம் பாதுகாப்பற்ற சூழல் இருக்கிறது என்பதற்கு அடையாளம் என்பதற்காகவே திருநாவுக்கரசு, சொக்கலிங்கம் விவகாரத்தைக் குறிப்பிட்டார்.

பதில் அளிக்க எழுந்த ஜெயலலிதா; உமக்கேன் இவ்வளவு அக்கறை? என்று பராசக்தி படத்தின் பாணியில் வினா எழுப்பியதோடு விளக்கவுரையும் ஆற்றி; சொக்கலிங்கம் விடுதியிலேயிருந்து கடத்தப்படவே இல்லை என்று ஒரு போடு போட்டார். இதோ அவரது விளக்கம்:-

வேறு கட்சியைச் சேர்ந்த உறுப்பினருக்கு, எங்கள் கட்சி உறுப்பினரைப் பற்றி இவ்வளவு அக்கறை ஏன்? மதுராந்தகம் உறுப்பினர் சொக்கலிங்கம் பற்றிய செய்தி பத்திரிகையில் வெளி வந்து உள்ளது. அது குடும்பத் தகராறு. அதற்கும், அரசியலுக்கும் சம்பந்தம் இல்லை.

உறுப்பினர் சொக்கலிங்கம் விடுதியில் இருந்து கடத்தப் பட்டார் என்பது உண்மை அல்ல. குடும்ப பிரச்சினைகளை எல்லாம் சொன்னால் ஆளுங்கட்சிக்கு கேவலம் என்று நினைத்தேன். ஆனால் இப்போது சொல்ல வேண்டியது இருக்கிறது.,

சொக்கலிங்கத்திற்கும், வேறு பெண்ணிற்கும் தொடர்பு உண்டு. இது அவருடைய மனைவிக்கும் மைத்துனருக்கும் பிடிக்கவில்லை. ஏற்கெனவே இது குறித்து தகராறு நடைபெற்று உள்ளது. அந்த பெண்ணின் பெயர் உஷா. அவருடன் சொக்கலிங்கம் கள்ளத் தொடர்பு வைத்து இருந்ததை அவருடைய மனைவியும், மைத்துனரும் விரும்பவில்லை. இருப்பினும் அந்த தொடர்பை அவர் விடவில்லை.

எனவே அவருடைய மைத்துனர் சில ஆட்களை அனுப்பி வைத்து இருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்குச் சென்று, யாருக்கும் தெரியாமல் கடத்திச் செல்வது என்பது இயலாது. தெரிந்தவர்கள் என்பதால்தான் அவர்களுடன் இவர் சென்றார்.

அவருடைய மைத்துனரின் தூண்டுதலின் பேரில்தான் அடித்துப் போடப்பட்டு உள்ளார். இவையெல்லாம் சொன்னால் நன்றாக இருக்காது என்பதால்தான் நான் முன்பு கூறவில்லை. உறுப்பினர் தாக்கப்பட்டது சொந்தப் பிரச்சினை என்பதால் இதை இத்துடன் விட்டு விடலாம்.

இப்படி ஜெயலலிதா விளக்கி முடித்ததும்; திருநாவுக்கரசு மீண்டும் கேட்டார் 'கதை நன்றாக இருக்கிறது. ஆனால் 307வது பிரிவின்படி கொலை முயற்சி வழக்கு போடவில்லையே? ஏன்?' என்று!

'இது சம்பந்தமாகக் காவல் துறையினர் விசாரித்து வருகிறார்கள். தேவையானால் அந்தப் பிரிவிலும் வழக்கு போடுவார்கள்.'

என்பதாக ஜெயலலிதா பதில் அளித்தார்!

உடன்பிறப்பே, சொக்கலிங்கத்தைக் கடத்திக் கொண்டுபோனார்கள் என்பது செய்தி! சொக்கலிங்கமும்

அவரது மனைவியுமே கொடுத்த புகார் - பேட்டி எல்லாம் அவ்வாறே! ஆனால் பேரவையில் ஜெயலலிதா, சொக்கலிங்கம் கடத்தப்படவில்லை யென்று கூறியுள்ளார்.

சொக்கலிங்கத்தின் மனைவி; தனது கணவர் கடத்தப்பட்டவுடன் முதலமைச்சர் ஜெயலலிதா வீட்டுக்குத் தொலை பேசியில் தொடர்பு கொண்டு; அங்கிருந்த ஒருவரிடம் தனது கணவர் கடத்தப்பட்ட செய்தியை உடனடியாகக் கூறியதாக பேட்டியளித்திருக்கிறார்.

ஜெயலலிதா கூறியதுபோல சொக்கலிங்கம் கடத்தப்படாமல்; தெரிந்தவர்கள் வந்து அழைத்துக் கொண்டு போயிருந்தால் மனைவி மல்லிகா அவ்வளவு பரபரப்புடன் முதலமைச்சர் வீட்டுக்கு போன் செய்ய வேண்டிய அவசியம் என்ன வந்தது?

உடன்பிறப்பே, சொக்கலிங்கம் மனைவி அப்போது மாலைமுரசுக்கு அளித்த பேட்டியில்; நான் கோடிட்டுள்ள பகுதியை மீண்டும் ஒருமுறை படித்துப்பார். சூட்சுமம் புரியும்!

இப்படித் திட்டமிட்ட வன்முறைகளை நடத்திவிட்டு; அதிகாரம், பதவி, பணம், அச்சுறுத்தல் என்ற திரைகளால் அவற்றை மறைத்து விடலாம் என்று மனப்பால் குடிப்பவர்களின் வேடம் கலைய இந்தச் சொக்கலிங்க புராணம் பயன்படுமல்லவா?

யார் கண்டது? ஊழல் சேட்டையால் இந்த அரசு உருவாக்கிய இந்தப் புராணத்தை; மற்றொரு ஊழல் சேட்டை புரிந்து இந்த அரசினரே மாற்றி எழுதி விடவும் கூடும்! அதையெல்லாம் கண்டுபிடிக்க சரித்திரம் திரும்பத்தானே போகிறது!

மனச்சாட்சியை விற்போர் சிலர்; காவல் துறையிலும் அதிகார வர்க்கத்திலும் கிடைத்தால்; அவர்களை வைத்துக்கொண்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆடித் தீர்க்கலாமல்லவா?

அடுத்த ஊழல் அத்தியாயம் பற்றி அடுத்து வரும் கடிதத்தில்!

அன்புடன்,

மு. க.

(20-08-1992)

1932. ஊழல் அத்தியாயம் (4)
உடையாரிடம் ஒப்படைத்த காண்டம்!

உடன்பிறப்பே,

தொழில் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு கழக அரசு, பொதுத்துறையை செம்மைப்படுத்தி வலுப்படுத்தவும் - கூட்டுத் துறையில் அரசுக்கு இழப்பு ஏற்படாமல்; அரசின் உரிமைகளை நிலைநாட்டிக்கொண்டு; அந்தத் துறைக்கு ஊக்கமளிக்கவும் - தனியார், தாங்களே முன் வந்து தொடங்கிடும் தொழில்களுக்கு ஆதரவளிக்கவும் அதே நேரத்தில் இந்த மூன்று துறைகளில் எந்தத் துறை வாயிலாகவும் பொது நன்மை பாதிக்கப்படாமல் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவும் சிறந்த வழிமுறைகளை வகுத்து அவற்றை நிறைவேற்றியதை நீ நன்கு அறிவாய்!

மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சி ஏற்படுவதின் மூலம் வேலை வாய்ப்புகள் பெருகிடவும் - அந்த வட்டாரத்தில் வளம் சேரவும் - வகையேற்படுமென்று கருதியதின் விளைவே இராணிப்பேட்டை, ஓசூர் போன்றவை என்பதையும் வரலாறு மறக்காது!

பின் தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சி என்பதுபோல் தமிழகத்தில் மிகப் பின் தங்கிய பகுதிகள் எனச் சில வட்டாரங்களை கழக அரசு பட்டியலிட்டது!

அப்படிப் பட்டியல் இடப்பட்ட வட்டாரங்களில் ஒன்று தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு வட்டமும் ஆகும்!

அங்கே ஒரு ரசாயனத் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கான அனுமதி கேட்டு; கழக ஆட்சியில் அந்த அனுமதி வழங்கப்பட்டது!

மருந்துகள் மற்றும் பல்வேறு தயாரிப்புகளுக்கான மூலப்பொருள்களை உற்பத்தி செய்யக் கூடியது அந்த ரசாயன தொழிற்சாலை!

தம்பி டி.ஆர். பாலு முன்னின்று சுமார் நாற்பதாயிரம் பங்குதாரர்களுடன் ஏறத்தாழ இருபத்தி ஐந்து கோடி ரூபாய் மூலதனத்தில் உருவாக்கியுள்ளதாகும் அந்தத் தொழிற்சாலை!

அறுநூறு தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மூலதனத்திற்காக வாங்கியுள்ள கடன்களுக்காக நாள் ஒன்றுக்கு செலுத்த வேண்டிய வட்டி மட்டும் சற்றொப்ப ஒரு லட்ச ரூபாய் ஆகிறது! ஆமாம்; ஒரு நாளைக்கு ஒரு லட்ச ரூபாய் வட்டி!

தொழிற்சாலை தஞ்சை மாவட்டம் வடசேரியில் அமைந்து; உற்பத்தி தொடங்குவதற்கான பணிகள் அனைத்தும் முடிவுறும் நேரத்தில் கழக ஆட்சி இல்லை! அதற்கு முன்பே கழக ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது.

ஜெயலலிதா ஆட்சி வந்ததும்; ஏதேதோ காரணங்களைச் சொல்லி அந்தத் தொழிற்சாலையை இயங்கவொட்டாமல் தடைகள் போடப்பட்டன! தாமதம் காட்டப்பட்டது!

தங்களின் சொந்த இடம் சுமார் இருபது ஏக்கர் நிலத்தில் தொழிற்சாலை அமைத்துக் கொண்டு; பல்வேறு நிதி நிறுவனங்களில் கடன் பெற்று; பெற்ற கடனுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு லட்ச ரூபாய் வட்டி கட்டிக்கொண்டு; அறுநூறு தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பும் வழங்கிக்கொண்டு - தொழிற்சாலை இயங்குவதற்கான மூலப் பொருள் அனுமதியைப் பெறுவதற்கு அதன் உரிமையாளர் அலையாக அலைந்தார்! ஆம்; நியாயம் கேட்டு அலைந்தார்!

நியாயத்தை உணர்ந்திருந்தும் அதனை வழங்க முடியாத அதிகாரிகள் - பாலுவிடம் சூசகமாகச் சொன்னார்கள்; பார்க்க வேண்டியவரைப் பார்க்க வேண்டிய முறைப்படிப் பார்! என்று!

அப்படி யாரையும் பார்க்க பாலு விரும்பவில்லை! அதனால் சட்ட ரீதியாக நியாயம் கேட்டு நீதி மன்றம் சென்றார்! பெட்டி ரீதியாக நியாயம் கேட்க அவர் விரும்பவில்லை!

நீதி மன்றத்தில் வடசேரி ரசாயனத் தொழிற்சாலைக்கு அனுமதி மறுக்கிற அடிப்படையில் அரசுத்துறை வழக்கறிஞர் கடுமையாக வாதாடினார். இறுதியில் உயர்நீதி மன்றம் அரசின் கருத்துக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியது. தொழிற்சாலையை

தொடங்க முடியாமல் இனியும் அரசு - தடங்கல் செய்யாது என்ற நிலையில் - அரசு; அந்தத் தீர்ப்புக்கு திடீரெனத் தடை ஆணை பெற்றது! அப்பீலும் செய்தது!

உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியும் மற்றொரு நீதிபதியும் அமர்ந்து நடத்திய அப்பீல் விசாரணையிலும் தொழிற்சாலையின் மூலப் பொருள் வழங்குவதற்கான அனுமதியை மறுக்காமல் அளித்திட வேண்டுமென்று; தம்பி பாலுவின் தொழிற்சாலைக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

உயர்நீதி மன்றத்தின் தனி நீதிபதி தீர்ப்பு - அதற்குப் பிறகு தலைமை நீதிபதியும் மற்றொரு நீதிபதியும் அமர்ந்து விசாரணை செய்து அளித்த தீர்ப்பு - இவற்றை ஏற்றுக் கொள்ளாமல் ஜெயலலிதா அரசு, இப்போது அந்தத் தொழிற்சாலையின் கோரிக்கைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்துக்கு அப்பீல் செய்கிறது! அதற்கான ஏற்பாடுகள் - கோப்புகள் - கையொப்பங்கள் - அனைத்தும் முழுமைப் பெற்று; சுப்ரீம் கோர்ட்டில் அரசு; அப்பீலுக்கு ஆயத்தமாக கச்சை கட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டது!

உடன்பிறப்பே, நினைவில் வைத்துக் கொள்க!

* இருபத்தி ஐந்து கோடி ரூபாய் முதலீடு.
* சுமார் நாற்பதாயிரம் பேர் பங்குதாரர்களைக் கொண்ட நிறுவனம்.
* அறுநூறு பேருக்கு தொடக்கத்தில் வேலை வாய்ப்பு.
* சொந்தமாக உள்ள நிலத்தில் தொழிற்சாலை.
* அதுவும் மிகப் பின்தங்கிய பகுதியில்; அதிலும் தொழிற்சாலை வளர்ச்சியில்லாத தஞ்சை மாவட்டத்தில், கிராமீயப் பகுதியில்!

இதற்கு மாநில அரசின் மறுப்பு! மத்திய அரசு தொழிற் துறையின் அனுமதிக் கடிதமும் பெற்றுள்ள தொழிற்சாலைக்கு இப்படியொரு மறுப்பு! தொழிற்சாலை நிர்வாகத்துக்கு தடை விலக்கி உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியே அமர்ந்து விசாரித்த தீர்ப்பை எதிர்த்து மாநில அரசு உச்ச நீதிமன்றத்துக்கு அப்பீலுக்குப் புறப்பட்டு விட்டது!

ஆனால்.... ஆனால்.... இதே ஜெயலலிதா அரசு ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி விவகாரத்தில் எப்படி நடந்துக்கொண்டிருக்கிறது?

மேலும் சில விபரங்களை உனக்கும், உன் வாயிலாக ஊராருக்கும் தெரிவிக்க விரும்புகிறேன்.

1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18-ந் தேதியன்று ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி அறக்கட்டளை தொடங்கப்பட்டது. அந்த அறக்கட்டளை பத்திரத்தில் ஸ்ரீராமச்சந்திரா கல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளை என்று இருக்கிறதே தவிர; எம்.ஜி.ஆர். பெயரால் அறக்கட்டளை அமைக்கப்பட்டதாக எந்த வாசகமும் இல்லை! அறக் கட்டளை பத்திரத்தில் முக்கியமாகக் குறிப்பிடப்படுகிற பெயர்கள் இராமசாமி உடையார், எத்திராஜன் என்ற இருவர் பெயர்களேதான்! மற்றும் அறக்கட்டளை உறுப்பினர்கள் குழுவில் நந்தகோபால், நாராயணசாமி உடையார், ரங்கசாமி, வெங்கடாசலம், சுந்தரேஸ்வரன் ஆகிய பெயர்கள் இடம் பெற்றுள்ளன. பத்திரத்தில் இறுதிப் பகுதியில் கையொப்பமிட்டிருப்பவர்கள் இராமசாமி உடையார், எத்திராஜன் ஆகிய இருவர் மட்டுமே! மற்றபடி சில சாட்சிகளின் கையொப்பங்கள் உண்டு!

இந்த அறக்கட்டளை பத்திரம் இணை உதவிப் பதிவாளர் (Joint Sub-Registrars) அலுவலகத்தில் 1985 மார்ச் 19-ந் தேதி பதிவு செய்யப்படுகிறது. ரிஜிஸ்டர் எண் 61 என்பதாகும்!

நினைவில் வைத்துக் கொள்ளவும்; 1985 மார்ச் 18-ந் தேதி அறக்கட்டளை நிறுவப்படுகிறது. மறு நாள் 19-ந் தேதி ரிஜிஸ்டர் செய்யப்படுகிறது - ஆனால் ரிஜிஸ்டர் செய்வதற்கு முன்பே மார்ச் 18-ந் தேதியே அன்றைய தமிழக முதலமைச்சருக்கு அந்த அறக்கட்டளை ஒரு வேண்டுகோள் கடிதம் எழுதுகிறது.

அந்த விண்ணப்பம் எப்படி ஆரம்பமாகிறது பார்!

Respected Sir,

The future of our Nation depends on the Health of our people, besides the material Resources. It is essential that the average person is provided the best health care, so that his contribution is adequate quantity and quality. It is therefore essential that we should have a strong educational foundation the field of Medical Sciences...

இப்படித்தான் வேண்டுகோள் மடல் ஆரம்பமாகிறது! அதாவது உடையார் அறக்கட்டளைக்கு இந்த தேசத்தின் எதிர்கால மக்களின் ஆரோக்கியத்தைக் குறித்து அவ்வளவு கவலையாம்! ஒரு சாதாரண சராசரி மனிதன் சிறந்த மருத்துவ பாதுகாப்பை பெற்றிடுவதற்கு வழி காணப்பட வேண்டுமாம்! இந்த அவசியத்தை கருதி அவர்கள் ஒரு பலமான அடிப்படையில் மருத்துவ விஞ்ஞானத்தை வளர்க்க முடிவு செய்துள்ளார்களாம்!

இப்படி முகப்புரை எழுதி விட்டு; அந்த விண்ணப்பத்திலேயே ஒரு சுயநிதி மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான வேண்டுகோளையும் முதல்வருக்கு விடுக்கிறார்கள். கல்லூரி அமைய நூறு ஏக்கர் நிலம் தேவை என்ற நிலையும் அதே விண்ணப்பத்திலே கோடிட்டு காட்டப்படுகிறது.

மீண்டும் குறிப்பிடுகிறேன்; ஞாபகம் வைத்துக்கொள்! மருத்துவ கல்லூரிக்கான அறக்கட்டளை 1985 மார்ச் 19-ந் தேதி ரிஜிஸ்டர் செய்யப்படுகிறது. ஆனால் மார்ச் 18-ந் தேதியே - அதாவது அறக்கட்டளை தொடங்கிய அடுத்த விநாடியே முதல்வருக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டு விடுகிறது. ஒருவேளை; முதல்வருக்கு விண்ணப்பத்தை அனுப்பி விட்டு அதற்குப் பிறகு அறக் கட்டளை பத்திரம் தயாரித்தார்களோ என்னவோ; அது அந்த 1985 மார்ச் 18-ந் தேதிக்குத்தான் வெளிச்சம்!

தேவைப்படும் நிலம் நூறு ஏக்கர் என்று முதல்வருக்கு எழுதிய விண்ணப்பத்தை தொடர்ந்து, செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கடிதம் எழுதுகிறார்கள்.

அரசின் சார்பில் - அதிகாரிகளின் சார்பில் - எழுதப்படுகிற பதில்களையோ எடுக்கப்படுகிற நடவடிக்கைகளையோ எதிர்பார்க்காமல் அறக்கட்டளையினர் மாநில அரசு நிலங்களையும், மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலையையும் ஆக்ரமித்துக் கொண்டு கல்லூரிக்கான கட்டிடங்களை கட்டி முடித்து விட்டனர்.

ஆக்ரமிக்கப்பட்ட அரசு நிலங்களைப் பற்றிய பிரச்சினைகள் தீராமலே 1989 ஆரம்பம் வரையிலே ஸ்ரீராமச்சந்திரா கல்லூரி; தனது போக்கில் நடந்து கொண்டிருந்தது!

இதற்கிடையே 1988 ஜூலை 14-ந் தேதி அறக்கட்டளை சார்பில் செங்கற்பட்டு கலெக்டருக்கு எழுதிய கடிதத்தில்;

மருத்துவ கல்லூரிக்கு மருத்துவமனைக்குமான கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ள 122 ஏக்கரா அரசு நிலத்தை எங்களுக்கு விலைக்குத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்

என்று உடையார் கையெழுத்திட்டுள்ளார்.

அதாவது; 1988 கவர்னர் அலெக்சாண்டர் ஆட்சிக் காலம் - அதனால் விலை கொடுத்து விட முன் வந்தார்கள் போலும்!

இதற்குப் பிறகு 1989-ல் கழகம் ஆட்சிக்கு வந்து விடுகிறது.

மருத்துவக் கல்லூரிக்கான அரசு நிலம் சம்பந்தமாக 1985 முதல் 1988 முடிய நடந்த கடிதப் போக்குவரத்துகளை ஆராய்ந்தறிந்த நிலையில்; கழக அரசின் வருவாய்த்துறை ஓர் உத்திரவை வெளியிடுகிறது.

While the request of Sri Ramachandra Educational and Health Trust, Madras for alienation of government land ad been under consideration, the trust had without obtaining the prior permission of the Government and their authorities entered upon the banned category of Government poramboke lands of its own accord wit impunity and put up permanent buildings thereon. Construction of buildings, for the Medical College was commenced without the approval of the Madras Metropolitan Development Authority.

அதில்; அந்த அறக் கட்டளை, அரசிடம் உரிய அனுமதிகளைப் பெறாமலே நிலங்களை ஆக்ரமித்துக் கொண்டதோடு - எம்.எம்.டி.ஏ. (M.M.D.A) வின் ஒப்புதலைப் பெறாமலே கட்டிடங்களையும் கட்டி முடித்துள்ள குற்றத்தை கழக அரசின் வருவாய்த் துறை சுட்டிக் காட்டியது.

(d) The Trust owns 133.68 acres of private patta land adjoining the Government land and running contiguous to it. Te Trust, instead of utilising the land owned by it, ad constructed a major portion of the main buildings to house the Medical College the Government land. The Trust had kept its own lands vacant. The action of the Trust is a clear indicator of its ulterior motive to utilise the Government land which is hoped to get at concessional prices while retaining, its own lands as a open space to be utilised profitably at a later date.

இப்போது கல்லூரி கட்டப்பட்டுள்ள அரசின் நிலங்களுக்கு அருகிலேயே இந்த அறக்கட்டளைக்குச் சொந்தமாக 133 ஏக்கரா நிலம் இருக்கும்போது; அதை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளாமல் - அரசு நிலத்தில் கட்டியது; அரசு நிலத்தை விலை மலிவாக வாங்கிக் கொண்டு; தங்களின் சொந்த நிலம் 133 ஏக்கரை எதிர் காலத்தில் அதிக விலைக்கு விற்கலாம் என்ற லாப நினைப்புடன்தான் என்பதையும் வருவாய்த் துறையின் உத்திரவு சுட்டிக் காட்டியது.

இத்தனை குற்றங்களையும், விதிமுறை மீறல்களையும் சுட்டிக் காட்டிய கழக அரசின் வருவாய்த்துறை உத்திரவு; ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி அறக் கட்டளையினருக்கு மறு சிந்தனையைத் தோற்றுவித்தது போலும்!

எனவே 16.6.89-ல் இந்த உத்திரவு பிறப்பிக்கப்பட்டது; 24.6.89-ல் அறக் கட்டளையின் உறுப்பினர் குழு கூடி, ராமசாமி உடையார், எத்திராஜ், ரங்கசாமி, வெங்கடாசலம், நந்தகோபால், சுந்தரேஸ்வரன், ஆகிய ஆறு பேரும் கையெழுத்திட்டு; கல்லூரியை அரசிடம் ஒப்படைப்பது எனத் தீர்மானம் நிறைவேற்றினர்.

அந்த முடிவை அரசுக்குக் கடிதம் மூலம் தெரிவித்தனர்.

அதன் படி கழக அரசு அந்தக் கல்லூரியை ஏற்றுக் கொண்டது,

இழப்பீடு கணக்கு பார்த்து அளித்திட ஒரு குழுவும் அமைக்கப்பட்டது.

1991 ஜனவரியில் கழக அரசு கலைக்கப்பட்டதும் உடையார்; கல்லூரியைத் திரும்பக் கேட்டு வழக்கு தொடர்ந்தார். உயர்நீதி மன்றத்தில் அவருக்கும் அவரது அறக் கட்டளைக்கும் சாதகமான தீர்ப்பு கிடைக்கவில்லை -

மீண்டும் உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்தார். அரசு; முன்கூட்டியே பேசி வைத்துக் கொண்டு - அக்கறையுடன் வாதாடவில்லை!

தீர்ப்பு உடையாருக்கு சாதகமாக அமைந்தது!

முறைப்படி வடசேரியில் தொழிற்சாலைக்கு அனுமதி பெற்றுள்ள பாலுவின் தொழில் நிறுவனத்துக்கு சாதகமாக உயர்நீதி மன்றத்தில் இரண்டு தீர்ப்புகள் கிடைத்தும்கூட;

அதை எதிர்த்து உச்ச நீதிமன்றம் செல்லும் ஜெயலலிதா அரசு - ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி விஷயத்தில் மட்டும்; உச்சநீதி மன்றத்தில் அப்பீல் செய்ய மறுத்து விட்டு - அவசர அவசரமாக அமைச்சரவையைக் கூட்டி மருத்துவக் கல்லூரியை உடையார் குழுவினரிடம் ஒப்படைத்த மர்மம் என்ன?

பாலுவின் நிறுவனம்; பணப் பெட்டி தரவில்லை - அதனால் நியாயம் புறக்கணிக்கப்படுகிறது!

இராமச்சந்திரா கல்லூரி விவகாரத்தில் நடந்தது என்ன? என்ன? என்ன? என்ன?

அடுத்த ஊழல் அத்தியாயம் பற்றி; அடுத்து வரும் கடிதத்தில்!

அன்புடன்,

மு. க.

(21-08-1992)

1933. ஊழல் அத்தியாயம் (5)
அமைச்சரின் சாபவிமோசனம்

உடன்பிறப்பே,

இளைய தலைமுறையினரைக் கல்வித் துறையில் ஊக்கப்படுத்தி அவர்களைப் பெரிய மருத்துவர்களாக - சிறந்த பொறியாளர்களாக - உயர்த்துகின்ற ஆர்வம்; ஒரு அரசுக்கு இருப்பதைவிடத் தங்களுக்கு அதிகமிருப்பதாக சில தனியார்கள் கூறிக் கொள்கிறார்கள். அப்படிக் கூறிக் கொண்டு சுயநிதிக் கல்வி நிலையங்களை அமைப்பவர்கள்; அந்தக் கல்வி நிலையங்களைத் தங்களது சொந்த நிலத்தில் உருவாக்கி, கல்வியை வியாபாரமாக மாற்றிக் கொள்ளை லாபம் அடிக்காதவர்களாக இருந்தால் அவர்களை ஊக்கப்படுத்தலாம். ஆனால் அதற்கு நேர்மாறாக; அரசு நிலங்களை வளைத்துப் போட்டுக் கொண்டு - பல நூறு ஏக்கரா நிலங்களுக்கு அடிமாட்டு விலை கூடக் கொடுக்காமல் தமதாக்கி கொள்ள முனைந்து; அந்த நிலத்தில் உரிய அனுமதி பெறாமலே கட்டிடங்களை எழுப்பிக் கல்வி வியாபாரத்தை மிக மிக அதிக விலைக்கு நடத்தி; ஆண்டுதோறும் பல கோடி கொள்ளையடிப்பதற்கு அரசாங்கத்தையும் துணைக்கு வைத்துக் கொள்கிறோம் என்பவர்களின் சுயநலப் போக்கிற்கு எப்படி இடந்தர இயலும்!

அடிக்கிற கொள்ளையில் அமைச்சர்களுக்குப் பாதி என்று பங்கிட்டுக் கொள்ளும் சர்க்காரில் வேண்டுமானால் கல்வியின் பெயரால் நடைபெறும் சமுதாயக் குற்றத்திற்கு ஆலவட்டம் சுழற்றப்படலாம்!

அந்த அநியாயத்தை அனுமதிக்க முடியாது என உறுதியெடுத்துச் செயல்பட்ட கழக ஆட்சி; 1989-ஆம் ஆண்டு சுயநிதிக் கல்லூரிகளை இனி அனுமதிப்பதில்லை என முடிவெடுத்து இருக்கிற கல்லூரிகளையும் அரசுடைமையாக்கிட முன் வந்தது.

அதன் முதற் கட்டம்தான் ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி அரசுடைமையான வரலாறு!

1987 - அ.தி.மு.க. ஆட்சியிலே வேலூரிலே ஒரு பொறி இயல் கல்லூரி தொடங்கப்பட்டது. வேலூர் பொறி இயல் கல்லூரி என்ற பெயருடன் சுயநிதிக் கல்லூரியொன்று தொடங்க அ.தி.மு.க. அரசிடம் அனுமதி கோரப்பட்டது. முத்தரசு குப்பம் கிராமத்தில் 79.2 ஏக்கர் நிலங்களை வாங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது எனக்கூறி அனுமதி கேட்கப்பட்டது. ஒரு சுயநிதி பொறி இயல் கல்லூரி தொடங்க 75 ஏக்கர் நிலம் முதலில் இருக்க வேண்டுமென்பதால், ஆணை வெளியிடப்பட்ட நாளில் இருந்து 15 நாட்களுக்குள் நிலத்தை வாங்கி, அதற்கான கிரயப் பத்திரத்தையும், உரிமைப் பத்திரத்தையும் பரிசீலனைக்கு அரசுக்கு அனுப்ப வேண்டுமென்ற நிபந்தனையுடன் 1984-ல் அ.தி.மு.க. அரசு அனுமதி வழங்கி விட்டது.

ஆனால் அந்தக் கல்லூரியின் அறக்கட்டளை உத்தேசிக்கப்பட்ட இடத்தின் நிலத்தை இதுவரை வாங்கவே இல்லை. அதற்கு மாறாக சென்னை அலாய் மற்றும் ஸ்டெயின்லஸ் லிமிடெட் தொழில் நிறுவனங்களுக்காக காங்கேய நல்லூர், காட்பாடி கிராமங்களில் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டிருந்த சுமார் நூறு ஏக்கர் நிலத்தை கல்லூரி அமைக்கத் தருமாறு கோரப்பட்டது. முறைப்படி ஒப்படைப்பு பற்றி முடிவு எடுப்பதற்கு முன்பு அந்தக் கல்லூரி அறக்கட்டளை அந்த நிலத்தில் பிரவேசிக்க அ.தி.மு.க. அரசு அனுமதி வழங்கியது.

அத்துடன் நில்லாமல் மேலும் காட்பாடி, காங்கேய நல்லூர் கிராமங்களில் உள்ள சுமார் ஐம்பது ஏக்கர் புறம்போக்கு நிலத்தையும் அந்தக் கல்லூரி நிறுவனம் ஆக்ரமிப்பு செய்து கொண்டு தமக்கே அந்நிலத்தையும் ஒப்படைப்பு செய்ய வேண்டுமெனக் கோரியது. ஆனால் அ.தி.மு.க. அரசில் மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தக் கோரிக்கையை ஏற்காமல், அந்த ஆக்ரமிப்பை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டது.

புறம்போக்கு நிலங்களையும் இந்தக் கல்லூரி நிறுவனம் பயன்படுத்திக் கொண்டதால் பொது மக்களிடமிருந்தும் - ஓடைப் புறம்போக்கு மூலம் பாசன வசதி பெற்று வந்த விவசாயிகளிடமிருந்தும் - பல முறையீடுகள் அரசுக்கு வந்தன.

ஒரு தனியார் அறக் கட்டளை என்ற முறையில் அந்தக் கல்லூரி நிறுவனம்; இத்தனை முறைகேடுகளுடன் மற்றொரு முறைகேடாக - அளவுக்கு அதிகமான நிலத்தை வைத்துக்கொள்ள நில உச்சவரம்பு விதிவிலக்கும் கோரிப் பெறவில்லை.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் அந்த நிலங்களில் பிரவேசிக்க, அந்த நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்ட முறையற்ற அனுமதியை ரத்து செய்திட நமது கழக அரசு முடிவெடுத்தது.

அந்தக் கல்லூரி மாணவர்கள் பாதிக்கப்படாமல் அதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் கழக அரசு எடுத்தது.

பல்லாயிரக்கணக்கான ரூபாய் கொட்டிக் கொடுக்காமல் பொறி இயல் கல்வி பயில; வேலூரிலேயே பெரியார் பொறி இயல் கல்லூரியும் மாணவர்கள் வசதிக்காக உடனடியாக தொடங்கப்பட்டது.

இக்கடிதத்தில் இணைத்திருப்பது ஒருவர் அனுப்பிய ஆங்கில மகஜரின் சில பகுதிகள். அதோடு அவர் தமிழ் மகஜரையும் அனுப்பியிருக்கிறார். இந்த இரண்டு மகஜர்களையும் அனுப்பியவர் 1987-ஆம் ஆண்டு அனுப்பியிருக்கிறார். யாருக்குத் தெரியுமா? தமிழ் மகஜரை, துணை ஆட்சியாளர், திருப்பத்தூர் வருவாய்க் கோட்டம், திருப்பத்தூர், வடஆற்காடு மாவட்டம். இவருடைய எல்லைக்குட்பட்டதுதான். அந்தக் கல்லூரி இருக்கும் இடம். ஆங்கில மகஜரை யாருக்கு அனுப்பியிருக்கிறார் தெரியுமா? திருமதி எஸ். மாலதி ஐ.ஏ.எஸ்., வடஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்.

அனுப்பியது யார் தெரியுமா? ஜி. ரகுபதி எம்.எல்.ஏ. காட்பாடி தொகுதி, காட்பாடி. இவர் எந்தக் கட்சிக்காரர் தெரியுமா? அ.தி.மு.க. வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர். 1987-ஆம் ஆண்டு சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் 18.8.87 அன்று மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த திருமதி. மாலதி ஐ.ஏ.எஸ். அவர்களுக்கு ஆங்கிலத்திலும், துணை ஆட்சியாளருக்கு தமிழிலும் கடிதம் அனுப்பியிருக்கிறார். அந்த மனுவிலே என்ன எழுதியிருக்கிறார் தெரியுமா?

Mr. G. Viswanatha, a former M.P., a fleet owner and a leading financier at Vellore is running an Engineering College titled Vellore Engineering College`` at Katpadi. In the guise of contributing to the growth of technical education in this educationally backward district, he has started the institution with the clear motive of commercialisation and is selling seats at the rate of Rs. 30,000 to 50,000 per seat. For establishing the said College he had obtained nearly 98.80 acres of land from the Government of Tamilnadu which is more than sufficient for the purpose. Out of this 98.80 acres of land only 2 acres is effective utilisation constructed area. The rest of the land that is 96.8 acres remain unused and undeveloped.

இதன் தமிழாக்கம் வருமாறு -

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பஸ் உரிமையாளரும், வேலூரில் பிரபல லேவாதேவிக்காரராக விளங்குபவருமான திரு. ஜி. விஸ்வநாதன் காட்பாடியில் வேலூர் இன்ஜினியரிங் காலேஜ் என்ற பெயரில் ஒரு பொறியியல் கல்லூரியை நடத்தி வருகிறார். கல்வித் துறையில் பின்தங்கிய நிலையில் இருந்து வரும் இந்த மாவட்டத்தில் தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபடுவதாகச் சொல்லிக்கொண்டு அவர் இந்த ஸ்தாபனத்தைத் தொடங்கி, மாணவர்களிடம் இடம் ஒன்றுக்கு ரூ. 30,000 லிருந்து ரூ. 50,000 வரை, கல்லூரி சீட்டுகளை விலைக்கு விற்று வருகிறார். மேற்படி கல்லூரியை நிறுவுவதற்காக; தமிழக அரசிடமிருந்து அவர் கிட்டதட்ட 98.80 ஏக்கர் நிலத்தைப் பெற்றிருக்கிறார். இது, இந்தக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கு தேவைப்படுவதை விட அதிகமாகும். இந்த 98.80 ஏக்கரில் 2 ஏக்கர் பரப்பில் மட்டுமே கட்டிடப் பகுதி உள்ளது. எஞ்சிய இடம், அதாவது 96.80 ஏக்கர் நிலம் பயன்படுத்தப்படாமலும், அபிவிருத்தி செய்யப்படாமலும் இருந்து வருகிறது.

என்று சொல்லி விட்டு கடைசியாக அந்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ. என்ன கோரிக்கை வைக்கிறார் தெரியுமா?

In this regard I request you to invoke the land ceiling act and reject his application for the issue of patta in respect of this 59.96 acres and issue necessary orders to restore this part of land to the original land holders. I also pray that this occupation of the 41.92 acres belonging to the North Arcot District Ex-Service men Co-operative Timber Society e declared illegal and void.

இதன் தமிழாக்கம் வருமாறு:-

இது சம்பந்தமாக, நில உச்ச வரம்புச் சட்டத்தைப் பயன்படுத்தி, 59.96 ஏக்கர் நிலத்துக்கு பட்டா வழங்கக் கோரி அவர் கொடுத்துள்ள மனுவை நிராகரிக்க வேண்டுமென்றும், நிலத்தின் இந்தப் பகுதி முதலில் யாரிடமிருந்ததோ அவர்களுக்கே மீட்டுத் தருவதற்கு வேண்டிய உத்திரவுகளைப் பிறப்பிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். தவிர, வட ஆற்காடு மாவட்ட முன்னாள் இராணுவத்தினர் கூட்டுறவு மர விற்பனை சங்கத்துக்குச் சொந்தமான 41.92 ஏக்கரை அவர் சுவாதீனப்படுத்திக் கொண்டிருப்பது சட்ட விரோதமானது, செல்லத்தக்கது அல்ல என்று அறிவிக்குமாறு வேண்டுகிறேன்.

உடன்பிறப்பே, இப்படியொரு அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் அ.தி.மு.க. ஆட்சியில் அன்றைக்கு அளித்த முறையீட்டின் அடிப்படையில்தான் கழக ஆட்சியில் 1989-90-ஆம் ஆண்டுகளில் அந்தக் கல்லூரி நிலத்தை அரசுக்கு மீட்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

பெரியார் பெயரில் அரசுப் பொறியியல் கல்லூரி ஒன்றும் தனியாக வேலூரில் தொடங்கப்பட்டது.

ஆனால் இன்று நிலைமை என்ன? அந்த தனியார் சுயநிதிக் கல்லூரி தொடங்கிட முன்நின்றவர் இப்போது அமைச்சராகி விட்டார். அரசு நிலங்களை ஏற்கெனவே ஆக்ரமித்துக் கொண்டது போதாதென்று மேலும் வளைத்துப் போடும் முயற்சிகளில் வெற்றி கண்டு வருகிறார்.

அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரே சுட்டிக்காட்டியும்கூட; விசுவநாதன் செய்தது ஊழல் என்று ஏற்றுக் கொள்ளாமல் -

ஏற்கெனவே கழக அரசு எடுத்த நடவடிக்கைகளையும் முடமாக்கி விட்டு - அந்த விசுவநாதனை அமைச்சராக்கிக் களிக்கிறது ஜெயலலிதா அரசு!

இராமனின் பாதம் பட்டு அகல்யா சாப விமோசனம் பெற்றாள் என்பார்களே, அது போல; இந்த அமைச்சர்களும் ஜெயலலிதாவின் பாதம் பட்டு புனிதர்களாக, புண்யாத்மாக்களாக ஆகிவிடுகிறார்கள்!

இனம், இனத்தோடு சேரும் என்பதற்கேற்ப ஊழல்கள்; ஊழல்களோடு சேர்ந்து விடுகின்றன! சிற்றாறுகள்; கடலில் கலப்பது மாதிரி!

அடுத்த ஊழல் அத்தியாயம்; அடுத்து வரும் கடிதத்தில்!

அன்புடன்,

மு. க.

(24-08-1992)

1934. ஊழல் அத்தியாயம் (6)
திராவக திருவிளையாடல் புராணம்!

உடன்பிறப்பே,

ஒரு பெண்ணின் முகத்தில் நெற்றியின் உச்சியிலிருந்து கழுத்தின் இறக்கம் வரையில்; அங்கிருந்து தாண்ட கையிலும் கூட ஒரு கத்தியால் இரண்டு மூன்று தடவை ஆழமான ரத்தக் கோடுகள் போட்டது போல விகாரமான ரேகைகள்! அந்தப் பெண்ணின் கண்களில் ஒன்றின் இமைகள் பிதுங்கிய நிலையில் - அந்த கண் மேலும் கீழுமாக அகன்றும், மற்றொரு கண்ணின் இமைகள் சுருங்கிய நிலையில் அந்தக் கண் வெகுவாக சிறுத்தும்; இப்படியொரு கொடுமையான தோற்றம்!

நான் இவ்வளவு எழுதிய பிறகும் அந்தப் பெண் யார் என்று விளக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்; சந்திரலேகா ஐ.ஏ.எஸ். தான் அந்தப் பெண்!

திராவகம் வீசப்பட்டு மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பியுள்ள அந்தப் பெண் அதிகாரியைப் பார்த்துவிட்டு அதிர்ச்சி அடைந்த நண்பர் ஒருவர்; என்னைச் சந்தித்தபோது அந்தப் பெண் அதிகாரியின் நிலைமையைப் பற்றிக் கூறியதைத்தான் முதலில் குறிப்பிட்டிருக்கிறேன்.

இந்தப் பயங்கரமான சம்பவத்திற்குக் காரணம் யார்? அவர்கள் அனைவரும் கண்டுபிடிக்கப்பட்டு விட்டார்களா? காவல் துறையினர் இந்த விவகாரத்தில் வேகம் காட்டுகிறார்களா? அல்லது நத்தைகளின் ஊர்வலம் தான் இன்னமும் தொடர்கிறதா? என்ன நடக்கிறது என்பதை மக்கள் மௌனமாகக் கவனித்துக் கொண்டுதானிருக்கிறார்கள்!

திராவகம் வீசி ஒரு பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரியைக் கொடுமைப்படுத்திய நபர்கள் யார் என்பதை விட; அந்தப் பழி தீர்க்கும் செயலுக்குப் பின்னணி என்ன என்பதைக் காவல் துறையினர் தயவு தாட்சண்யமின்றி நிமிர்ந்த நெஞ்சுடனும்,

நேர்மையான போக்குடனும் ஆராய்ந்திருப்பார்களேயானால் - அல்லது இனியாவது ஆராய்வார்களேயானால் - உண்மைக் குற்றவாளிகள் நிச்சயமாகப் பிடிபடுவார்கள்! அவர்கள் உச்சிக் கோபுரத்தின் கலசத்தில் ஒட்டிக் கொண்டிருப்பவர்களாக இருப்பினும், குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுவதுதான் நீதி இன்னமும் உயிரோடு இருக்கிறது என்பதை நிரூபிக்கும் பாணியாகும்.

ஆம், அந்தப் பின்னணி என்ன? இரண்டு மூன்று திரைகள் இழுக்கப்பட்டால்தான், இறுதியாக கோரவடிவம் கொண்ட கொள்ளிவாய் பிசாசுத் திட்டத்திற்கான சதியாலோசனை நடைபெற்ற மனிதநேயமற்றோர் உலவும் மண்டபம் நம் கண்ணுக்குத் தெளிவாகத் தெரியும்.

உடன்பிறப்பே! ஸ்பிக் - தமிழகத்தில் மிகப் பெரும் தொழில்களில் ஒன்று! அந்த உரத் தொழிற்சாலை தமிழகத்திற்கு வருவதற்குக் கால்கோள் விழா நடத்தியவர்கள் முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள்!

அண்ணா மறைவுக்குப் பிறகு அந்தக் கூட்டுத்துறைத் தொழிற்சாலை வேகமான வளர்ச்சியை எட்டியது என்பதில் ஐயம் சிறிதுமில்லை!

அந்தக் கூட்டுத்துறைத் தொழிலில் 1976 வரையில் தி.மு.க. ஆட்சியில் அரசின் மிகுந்த கண்காணிப்பும்; அரசுக்கென்ற உரிமைகளும் நிலை நிறுத்தப்பட்டிருந்தன.

1977 முதல் 1988 வரையில் சுமார் பதினோரு ஆண்டுகளில் அரசுக்கும் பிடிப்புள்ள அந்தக் கூட்டுத் துறைத் தொழிலில் கொஞ்சம் கொஞ்சமாகப் பிடிப்புக் குறைந்து கொண்டே வரத் தொடங்கியது.

1989-ல் மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் தொழில் வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் மேற்கொள்ளப்பட்டு, பொதுத் துறை விரிவாக்கம் பெறவும், தனியார் துறையும் அரசின் சலுகைகள் போன்ற தொழிலுக்குத் தேவையான வசதிகளைப் பெறவும், அரசும் தனியாரும் இணைந்து பொதுமக்களின் பங்குகளையும் கொண்டதான கூட்டுத் துறை அரசின் கண்காணிப்புடன் இயங்கவும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த அடிப்படையில்தான் ஸ்பிக்கில் திரு. எம்.ஏ. சிதம்பரம் அவர்கள் தலைவராகவும், அவரது மகன் திரு. ஏ.சி. முத்தையா அவர்கள் நிர்வாக இயக்குநராகவும் இருப்பது அவர்களுக்கு சுட்டிக்காட்டப்பட்டு அதுகுறித்து அவர்களை அழைத்து விவாதிக்கவும் பட்டது.

எம்.ஏ. சிதம்பரம் குழுவினரின் பங்கு அந்தத் தொழிற்சாலையில் 13 சதவீதமாகவும் - அரசின் பங்கு 26 சதவீதமாகவும் இருக்கும்போது, தலைவர் பொறுப்பு அல்லது நிர்வாக இயக்குநர் பொறுப்பு ஆகியவற்றில் இரண்டில் ஒன்றை அரசுக்கு அளிப்பதே நியாயமானதாக இருக்குமென்று எடுத்துரைக்கப்பட்டு, அதன் தொடர்பாக எழுந்த சிக்கல்களையெல்லாம் கலைந்து அரசின் தலைமைச் செயலாளர் ஸ்பிக் நிர்வாகக் குழுவின் தலைவராகவும், திரு. ஏ.சி. முத்தையா நிர்வாக இயக்குநராகவும் பொறுப்பேற்றுப் பணியாற்ற வழி காணப்பட்டது.

இதன் காரணமாக அந்தப் பெரிய தொழிற்சாலையில் அரசுக்கு ஒரு பிடிப்பு ஏற்படுத்தப்பட்டது.

1991 தொடக்கத்தில் கழக ஆட்சி கலைக்கப்பட்டது!

நியாயமான முறையில் ஆதாயம் திரட்டுவது என்ற கொள்கையிலேயிருந்து வெகு தூரம் விலகியிருந்த தொழில்துறைச் சீமான்கள் சிலர்; ஆட்சி கலைந்ததுதான் தாமதம்; அடுத்த கணமே தங்களின் அபரிமிதமான இலாப வேட்டைக்குத் தோதான அரசு வந்து விட்டது என்ற எக்களிப்புடன் வெற்றிக் கொடி ஏந்திப் புறப்பட்டு விட்டனர். அவர்களில் ஒருவராக திரு. ஏ.சி. முத்தையா அவர்கள்; தனது தந்தையிடமிருந்து கழக ஆட்சியில் பறிக்கப்பட்ட, ஸ்பிக் நிர்வாகக் குழுவின் தலைவர் பதவியை ஜெயலலிதாவிடமிருந்து மீண்டும் பெற்று; அவரைத் தலைவராக உட்கார வைத்தார்.

13 சதவீதப் பங்கு வைத்திருந்தவருக்கு தலைவர் பொறுப்பும் நிர்வாக இயக்குநர் பொறுப்புமாக தந்தைக்கும் மகனுக்கும் வழங்கி விட்டு 26 சதவீதம் பங்கு வைத்திருந்த அரசு; அவர்களுக்குச் சிவப்புக் கம்பள வரவேற்பு கொடுத்து பெறவேண்டியதைப் பெற்றுக் கொண்டது!

ஊழல் பூதம் இத்துடன் ஜாடிக்குள் போய்ப் புகுந்து கொண்டதா என்றால் அதுதான் இல்லை!

அந்த பூதம், ஸ்பிக் தொழிற்சாலையில் அரசாங்கத்தின் பங்குகளைக் குறைத்துக் கொண்டு - தனி அதிபர் பங்குகளை உயர்த்திக் கொள்ளவும் வழி வகுத்துக் கொடுத்தது.

எப்படி? எட்டு கோடி பத்து லஞ்ச தாண்டவம் என்றால் செப்படி வித்தைகள் எல்லாம் சர்வசாதாரணமாயிற்றே இந்த ஜகதல புரட்சியின் ஆட்சியிலே!

ஸ்பிக் நிறுவனம் புதிய பங்குகளை அரசு நிறுவனமான டிட்கோ நிறுவனத்துக்கு உபரியாக வழங்க வேண்டிய நிலையொன்று வந்தது.

ஸ்பிக் போன்ற நிறுவனத்தின் பங்குகளுக்கு பங்குச் சந்தையில் நல்ல விலை கிடைக்கும். ஆகையால் அந்த உபரிப்பங்குகளை அரசுத்துறை நிறுவனமான டிட்கோவே வாங்கியிருக்க வேண்டும்.

நிதிப்பற்றாக்குறை காரணமாக டிட்கோ நிறுவனம் அதை வாங்க முடியவில்லை என்ற கூற்றை நாம் நம்பாவிடினும்; வாதத்திற்காக ஏற்றுக் கொண்டால்கூட, யு.டி.ஐ. போன்ற நிதி நிறுவனங்கள் அந்தப் பங்குகளை வாங்கிக் கொள்ள முன்வரும். அவைகளும் முன்வரவில்லையென்றால் (Open Market) வெளிச்சந்தையில் விளம்பரம் செய்து விற்றிருந்தால் அந்த உபரிப் பங்குகள் நாற்பது கோடி ரூபாய் அளவுக்கு விற்கப்பட்டிருக்கும்.

ஆனால் அதற்கு மாறாக அரசு நிறுவனமான டிட்கோவுக்குரிய அந்தப் பங்குகளை, அந்தத் தனியார் தொழில் அதிபரே அடிமாட்டு விலை என்பார்களே; அதுபோல பனிரெண்டு கோடி ரூபாய்க்கு வாங்கிக் கொண்டிருக்கிறார்.

இதன் காரணமாக அவருக்கு ஸ்பிக் நிறுவனத்தில் 13 சதவீதமாக இருந்த பங்கு 27 சதவீதமாக உயர்ந்து, அரசாங்கத்தை விட அதிக பங்குக்கு சொந்தக்காரர் என்ற நிலையும் உருவாகியதோடு - 40 கோடிக்கு விற்க வேண்டிய பங்குகளை 12 கோடிக்கு அவருக்கு கொடுத்ததால், அரசு நிறுவனத்துக்கு 28 கோடி ரூபாய் நஷ்டமும் ஏற்பட்டுவிட்டது.

4.5.92 அன்று இந்து இதழில் வந்துள்ள செய்தியின்படி:-

புதிய பங்குகளை டிட்கோ விட்டுக்கொடுத்ததால் ஸ்பிக் நிறுவனத்தில் எம்.ஏ. சிதம்பரம் குழுவின் பங்குத்தொகை 27 சதவீதமாக உயர்ந்து டிட்கோவின் பங்கு 16 சதவீதமாகக் குறைந்தது.

உடன்பிறப்பே,

இந்த ஊழல் பின்னணியின் மப்பும் மந்தாரமுமான சூழலில்தான் பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரியின் சோகக்கதையும் சுழலுகிறது!

டிட்கோவின் பொறுப்பு வாய்ந்த பதவியில் பெண் அதிகாரி சந்திரலேகா இருந்தார்.

1992 ஏப்ரல் மாதத்திலேயே ஒரு பங்கு விலை 125 ரூபாய் என்றும் - அதற்குப் பிறகு சுமார் 200 ரூபாய் வரையில் உயர்ந்தும் விற்கப்படக்கூடிய அருமையான நேரத்தில், அந்த உபரிப்பங்குகளை சுமார் 55 ரூபாய் விலைக்கு எம்.ஏ.சி. குழுவுக்கு விற்பது சரியா? என்ற கேள்வி எல்லோருக்கும் தோன்றுவது போலவே சந்திரலேகாவுக்கும் தோன்றியிருக்கக்கூடும்.

டிட்கோ தனக்கு வரும் பங்குகளை வாங்காவிட்டால்; அந்தப் பங்குகளை லாபம் வரும்வகையில் யாருக்கும் விற்கலாம் என்பதற்கு ஸ்பிக் ஒப்பந்தம் எந்தத் தடையும் செய்யவில்லை! எனவே அந்த உபரிப்பங்குகளை அரசு நிறுவனத்துக்கு ஆதாயம் கிடைக்கும் வகையில் விற்றால் என்ன, என்ற சிந்தனை அதிகாரிகளுக்கு தோன்றுவது இயற்கையான ஒன்று!

எனவே அதிகாரி சந்திரலேகா ஐ.ஏ.எஸ். அரசிடம் சில விபர விளக்கங்களை கோரி ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் அதாவது (Clarification) விளக்கம் கோரிய கடிதத்தில்;

* பங்குகளை எம்.ஏ. சிதம்பரம் குழுவுக்குத்தான் தர வேண்டுமா?
* வேறு நிறுவனங்களுக்கு விற்கக்கூடாதா?
* நிர்ணயிக்கப்படும் விலை எவ்வளவு?
* எதுவாயினும் அரசே முடிவு செய்யட்டும்.

என்பன போன்ற கேள்விகளும் - சந்தேகங்களும் எழுப்பப்பட்டு, இறுதியில் தன்மீது பழிவிழ வேண்டாம் என்ற நினைப்பில், அரசே முடிவு செய்யட்டும் என்று சந்திரலேகா எழுதியுள்ளதாகத் தெரிகிறது.

இவ்வாறு சந்திரலேகா காட்டிய தயக்கத்தினால் அதிகாரியும் சேர்ந்து அரசுத்துறைக்கு 28 கோடி ரூபாய் இழப்பு ஏற்படக்கூடிய காரியத்துக்கு உடந்தையாக இருக்கவில்லை என்ற கோபம் கொப்பளிக்கிறது!

டிட்கோ நிறுவனப் பொறுப்பிலிருந்து அவர் வேறு துறைக்கு மாற்றப்படுகிறார்!

அதற்குப்பிறகு அவர் முகத்தில் திராவகச் சித்திரம் தீட்டப்படுகிறது! இல்லை; இல்லை - திராவகச் சித்திரவதை நடத்தப்படுகிறது!

இந்தப் பயங்கரமான சம்பவத்திற்கு காரணம் யார்? அவர்கள் அனைவரும் கண்டுபிடிக்கப்பட்டு விட்டார்களா? காவல் துறையினர் இந்த விவகாரத்தில் வேகம் காட்டுகிறார்களா? அல்லது நத்தைகளின் ஊர்வலம்தான் இன்னமும் தொடர்கிறதா? என்ன நடக்கிறது என்பதை மக்கள் மௌனமாக கவனித்துக் கொண்டுதானிருக்கிறார்கள்!

ஊழலுக்கு உடந்தையாக இல்லாவிட்டால் தெய்வம் - திராவக உருவத்திலே வந்து தண்டிக்கும் என்று மற்ற அதிகாரிகளுக்கு எச்சரிக்கை செய்வதற்கு; விகாரப்படுத்தப்பட்டு விட்ட பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரியின் முகமே போதும் என ஒரு பூரிப்பு! இறுமாப்பு! ஆணவச் சிரிப்பு!

எல்லாம் எத்தனை காலத்திற்கு?

அன்புடன்,

மு. க.

(25-08-1992)

1935. ஊழல் அத்தியாயம் (7)
ஆளுங்கட்சி ஆடிய ருத்ரதாண்டவம்

உடன்பிறப்பே,

ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் ஆடிய ருத்ரதாண்டவம் காட்சியை ஒரு இதழின் நிருபர் நேரிலேயே கண்டு; அதனை அவர் பணியாற்றும் அந்த வார இதழிலேயே ஒரு கண்ணீர்க் காவியமாக தீட்டிக் காட்டினார்.

தாண்டவம் நடைபெற்றது இந்த ஆண்டு மே மாதம்! இடம்; சென்னைக்கு அருகில் உள்ள ஆண்டார்குப்பம் அருள்மிகு பாலசுப்பிரமணியசாமி கோயில்!

ருத்ரதாண்டவம் உண்மை நாடகத்தின் கதாபாத்திரங்கள் - பொன்னேரி அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் ரவிக்குமார்! இவரை, கதாநாயகன் என்று வைத்துக் கொண்டாலும் சரி; வில்லன் பாத்திரம் என்று வைத்துக் கொண்டாலும் சரி! மற்றொரு முக்கிய பாத்திரம் அந்தக் கோயிலின் இ.ஓ. எனக் கூறப்படும் செயல் அலுவலர் மோகன்குமரன்! ஏழை படும்பாடு திரைப்படத்தில் சித்தூர் நாகையா ஏற்றது போன்ற ஒரு கதாபாத்திரம் என்று கற்பனை செய்து கொள்ளேன்!

அதிருக்கட்டும்; உண்மை நாடகம் என்கிறாயே; நாடகத்தில் போலி நாடகமும் உண்டா? என்று திடீரென்று கேட்டு விடாதே!

உண்மையில் நடந்த சம்பவங்களைக் கொண்டு தீட்டப்படும் நிகழ்ச்சி இது என்பதாலும்; பத்திரிகை ஒன்றின் நிருபரே நேரில் கண்டு பத்திரிகையில் எழுதியிருப்பதாலும் உண்மை நாடகம் இது என உரைத்திட்டேன்; அவ்வளவுதான்!

இதோ நிகழ்ச்சிகள் எவ்வளவு வேகமாக விறுவிறுப்பாக நடைபெற்று முடிகின்றன என்பதைக் கவனி!

ஆண்டார்குப்பம் பாலசுப்பிரமணியசாமி கோயிலில் சித்திரை மாதம் கிருத்திகைத் திருவிழா! பக்தர்கள் ஏராளமாகக் குழுமியிருக்கிறார்கள்! முருகா! முருகா! என்று பக்தி ரசம் சொட்டச் சொட்ட முருக பக்தர்கள் கரங்களைக் கூப்பியும், விரித்தும் தொழுது வணங்கித் துதிபாடிக் கொண்டிருக்கிறார்கள்!

அப்போது இளையராஜா பின்னணி இசையில்; இடியோசையும், புயலின் உறுமலும், சூறாவளிச் சுழற்சியும், பூகம்ப அதிர்ச்சியும் - இவையெல்லாம் ஒன்று சேர்ந்து ஒலிக்கும் திடீர்க் காட்சி; படம் பார்ப்போரை அதிர வைக்குமே - அதைப் போன்ற ஒரு மின்னல் வேக மாற்றம்! ஆம்; ருத்ரதாண்டவத்துக்குப் பொருத்தமான தொடக்கப் பின்னணி!

பரிவாரங்கள் புடைசூழ பொன்னேரியின் ஆளுங் கட்சி சட்டமன்ற உறுப்பினர் கோபுர வாசலுக்குள் நெருப்புக் குழம்பை வாரி இறைக்கும் எரிமலை போலப் பிரவேசித்தார்!

என்ன நடந்து விட்டது அந்த ஆலயத்திற்குள்! கோயிலுக்குள் களவு ஏதாவது நடந்து விட்டதா? அந்தத் திருட்டுக் கும்பல், உள்ளே பக்தர்கள் வேடத்தில் இருப்பதாகக் கேள்வியுற்று அந்த சட்டமன்ற உறுப்பினர் அவ்வளவு ஆவேசமாக வந்தாரா? அல்லது திருவட்டாறு கோயிலில் நடந்தது போல, சுவாமியின் மீது போர்த்தப் பட்டிருந்த தங்க அங்கியை தோலுரித்துவிட்டு, அதற்குப் பதிலாக தகரத்தால் ஆன அங்கியை யாராவது பாலசுப்ரமணியக் கடவுளுக்குப் போர்த்தியிருப்பதாகக் கேள்வியுற்று ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர், ஆகா! அடுக்குமா இந்த அநியாயம்! யார் செய்த வேலை இது? அவனைத் கண்டதுண்டமாக்குகிறேன் - கடவுளுக்கே துரோகம் செய்பவர்களை சும்மா விடமாட்டேன்! என்று அந்த ருத்ரதாண்டவத்தை ஆடினாரா?

இல்லை! இல்லை! அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை!

அந்தக் கோயில் கிருத்திகைத் திருவிழா துண்டு விளம்பர நோட்டீசில் அவர் பெயரைப் போடவில்லையாம்! எம்.எல்.ஏ. பெயரை எப்படிப் போடாமல் விடலாம் என்பதுதான் அந்தப் பிரளயத்துக்கே காரணம்!

எங்கே அந்த இ.ஓ?

எம்.எல்.ஏ.வின் ஓங்காரக் குரல் கோயில் கோபுரத்திலும், பிரகாரச் சுவர்களிலும் மோதி எதிரொலித்தது.

ஆலய உற்சவப் பணிகளை முடித்துவிட்டு அப்போது தான் அந்த (இ.ஓ.) கோயில் அலுவலர் மோகன்குமரன், சாப்பிடுவதற்காக இலையில் கைவைத்தார். பெரும் ஆத்திரமான சப்தத்தைக் கேட்டு அந்த அதிகாரி சாப்பாட்டை விட்டுவிட்டு அலறி அடித்துக்கொண்டு எழுந்து ஓடி வர - அதற்குள் எம்.எல்.ஏ. அவரை வேகமாக நெருங்கி;

'ஏண்டா நான் எம்.எல்.ஏ.ன்னு உனக்குத் தெரியும்லே! என் பெயரை ஏன் நோட்டீசிலே போடலே?'

என்று கேட்டுக்கொண்டே அந்த அலுவலரை, எம்.எல்.ஏ. அவர்கள், சட்டையின் காலரைப் பிடித்தவாறு தரதர என இழுத்துக்கொண்டு, கோயில் கொடிக் கம்பத்துக்கு அருகே வந்து விட்டார்.

முருகா! முருகா! என கூவிக்கொண்டிருந்த பக்தர்களின் முகங்களில் ஈ ஆடவில்லை. பதறிப் போய் அசையாமல் நின்றார்கள். கோயிலுக்குள் முருகனும் பக்தர்களைப் போலவே அப்படியே நின்றான்.

அதற்கிடையே பளார்! பளார்! என ஓசை - அந்த அதிகாரியின் கன்னத்தில் ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. அவர்களின் கரங்கள் விளையாடின! எம்.எல்.ஏ.வுடன் வந்திருந்த பரிவார தேவதைகளும் அந்த அதிகாரியைச் சூழ்ந்து கொண்டு அடியோ அடி என அடித்தனர்!

தாக்கப்பட்டுத் தளர்ந்து போய் தள்ளாடி நின்ற அதிகாரியிடம் மீண்டும் மாண்புமிகு எம்.எல்.ஏ. கேட்டார்;

ஏன், என் பெயர் போடலே? என்ற அதே கேள்வியை! மூச்சுத் திணறியவாறு அதிகாரி நடுங்கும் குரலில் பதில் அளித்தார்.

'அய்யனே! சில மாதங்களுக்கு முன்புதான் நான் இந்தக் கோயிலில் இ.ஓ.வாகப் பதவிக்கு வந்தேன். கடந்த வருடங்களில் எப்படி பிட் நோட்டீஸ் போட்டாங்களோ, அதைப் பார்த்துத்தான் இப்பவும் போட்டேன். பழைய நோட்டீஸ்களிலே எம்.எல்.ஏ. பெயர் கிடையாது - அதைப் பின்பற்றித்தான் இந்த நோட்டீஸ் போட்டேன்.'

அதிகாரியின் பதில் நியாயமானதாக இருந்தாலும் எம்.எல்.ஏ. திருப்தி அடையவில்லை.

'எல்லாக் கோயிலிலும் என் பேரைப் போடுறான். நீ மட்டும் போடலே. உன் குடும்பத்தையே காலி பண்ணிடுவேன்.'

என்று எச்சரித்துவிட்டு, தனது சேனையுடன், கோயில் உள்பிரகாரத்தில் நுழைந்தார். அதைக் கண்ட பக்தர்கள் சிதறி ஓடினர். ஆலயத்தின் கருவறையை நோக்கி நடந்த எம்.எல்.ஏ. வழியில் நின்ற கோயில் சேவகரைப் பிடித்து இரண்டு அடிகொடுத்தார்.

'உள்ளே இருந்து தேங்காய் பழம் எடுத்துவா!' என்று அவர் உறுமியதுதான் தாமதம்; கருவறையில் அர்ச்சனைத் தட்டுடன் நின்று கொண்டிருந்த ஒரு பக்தரிடமிருந்து தேங்காய் பிடுங்கப்பட்டு எம்.எல்.ஏ.யிடம் கொடுக்கப்பட்டது.

இதற்குள்ளாக அலுவலர் மோகன்குமரன் தாக்கப்பட்ட செய்தி, ஆண்டார்குப்பம் கிராமவாசிகளுக்குத் தெரிந்து - அவர்கள் அனைவரும் கோயில் வாசலில் கூடிவிட்டனர்.

போர் முரசு கொட்டப்பட்டு விட்டது. கிராம மக்களிடம் சிக்கிக்கொள்ளாதிருக்க எம்.எல்.ஏ.வும் அவரது தளநாயகர்களும் பின்புறக் கோபுர வாசல் வழியாகச் சென்று காரில் ஏறப்போகும் போது, ஒரு அப்பாவி இளைஞன் அந்தக் காரின் பானட் மீது உட்கார்ந்திருப்பதைப் பார்த்து வெகுண்டனர்.

இவனை இழுத்து வலுக்கட்டாயமாகக் காருக்குள் திணித்து சரமாரியாக அடித்து காரிலிருந்து வெளியே தூக்கி வீசினார்கள்.

அதற்குள் கிராம பொதுமக்கள் அந்தக் காரை சூழ்ந்து கொண்டு, எம்.எல்.ஏ.வுக்கு அர்ச்சனை நடத்தினர்.

கிருத்திகை விழா கொண்டாடிய முருகக் கடவுளுக்கு அவ்வளவு அர்ச்சனை நடந்ததோ என்னவோ தெரியாது; அதற்கு மேலாகப் பொதுமக்களின் வசை புராண அர்ச்சனை ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினருக்கு நடத்தப்பட்டது. கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு எம்.எல்.ஏ.யின் கார் புயல்வேகத்தில் சென்றுவிட்டது.

நிகழ்ச்சிகளை நேரில் கண்ட அந்த நிருபர், இரண்டு நாள் கழித்து ஆலய அதிகாரியின் வீட்டுக்குச்சென்று அவருடைய கருத்துக்களை அறிந்திட முயன்றிருக்கிறார்.

ஆனால்; பாவம் அந்த அதிகாரி வீட்டைக் காலி செய்துவிட்டுத் தனது குடும்பத்தாருடன் சொந்த ஊருக்கே போய்விட்டார் என்று பக்கத்து வீட்டுக்காரர்கள் நிருபரிடம் கூறியிருக்கிறார்கள்.

உடன்பிறப்பே, நான் விவரித்துள்ள இந்த ருத்ரதாண்டவ நிகழ்ச்சி இதே தலைப்பில் 19.5.92 எனத் தேதியிடப்பட்ட ஜூனியர் விகடன் இதழில் விரிவான செய்தியாக வெளியிடப்பட்டுள்ளது.

மோகன்குமரனுக்கு வீட்டைக் காலி செய்து விட்டு ஓடுவதைத் தவிர வேறு வழி என்ன? இந்தத் திராவகயுகத்தில் அவர் முகத்தையும் விகாரமாக்கிக் கொள்ள முடியுமா? அவரது குடும்பத்தாரையும் நொண்டி முடமாகப் பார்த்து சகித்துக் கொள்ள முடியுமா?

யாரிடம் போய் அவர் முறையிடுவார்? முறையிட்டால்; திருவெட்டாறு கோயில் சாமியின் தங்கத்தோலை உரித்ததுபோல, முறையிட்டவரின் தோலையல்லவா உரித்துவிடுவார்கள்!

ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.க்கள் அதிகாரிகளை அடிப்பது, தாக்குவது, ஆபாசமாக அர்ச்சிப்பது என்பது ஆண்டார் குப்பத்தில் மட்டும்தானா? அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் இந்த ஓராண்டு காலமாக நடைபெற்று வருகிற சம்பவங்கள் தானே!

என் செய்வது; சட்டம் ஒழுங்கு எனும் உடைவாள்கள்; ஊழல்கள் எனும் உறைகளில் அல்லவா உறங்கிக் கொண்டிருக்கின்றன!

ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கே பாதுகாப்பு இல்லை என்கிறபோது; ஒரு ஆலயத்தின் சாதாரண அதிகாரிக்கு என்ன பாதுகாப்பு? இந்த ஆட்சியில் அந்தப் பாதுகாப்பை எதிர்பார்ப்பது அறிவுடைமையாகுமா?

அன்புடன்,

மு. க.

(26-08-1992)

1936. ஊழல் அத்தியாயம் (8)
மதுவிலக்குச் சட்ட மகாத்மியம்

உடன்பிறப்பே,

இந்தியா முழுதும் மதுக் கடைகளும், மது அருந்தும் உரிமையும் இருந்தாலும் கூட தமிழ் நாட்டிலும் குஜராத்திலும் அந்த மது தலைகாட்டவே கூடாது என்று மதுவிலக்கு சட்டம் கடுமையாக அமல் படுத்தப்பட்டது.

அதன் விளைவு என்ன? வெற்றியா? தோல்வியா? இந்திரா காந்தி அம்மையார் நாடாளுமன்றத்திலே மதுவிலக்கு பற்றி பிரதமர் என்ற முறையிலே பேசியபோது நறுக்குத் தெறித்தாற்போல குறிப்பிட்டது என்ன வாசகம் தெரியுமா? மதுவிலக்கு என்பது நமது குறிக்கோளாக இருந்தாலும் அதனை சட்டபூர்வமாக நடைமுறைப்படுத்த இயலாது என்பதுதான்!

மதுவிலக்கு சட்டம் தீவிரமாக அமலில் இருக்கும் குஜராத் மாநிலத்தில் காந்தியடிகள் பிறந்த போர்பந்தர் என்னும் இடத்திலேயே, அவரது வீட்டுக்கு அருகிலேயே ஒரு பெட்ரோல் பங்கு போல கள்ளச் சாராயம் ஆழமான கிணற்றில் நிரப்பப்பட்டு; அங்கிருந்து குழாய்கள் மூலமாக விநியோகம் நடைபெறுகிறது என்ற செய்தி; பிரதமர் இந்திரா காந்தி ஆட்சியிலே நாடாளுமன்றத்திலேயே ஆதாரபூர்வமாகச் சொல்லப்பட்டு, அதனை இந்திரா காந்தியும் ஆமாம் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்.

தமிழ்நாட்டில் கள்ளச் சாராயம் காய்ச்சியவர்கள், விற்றவர்கள் என்ற கணக்கில் 1966-ஆம் ஆண்டு வாக்கில் சுமார் மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட வழக்குகள்! ஒரே நேரத்தில் தமிழகச் சிறைகளில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட கள்ளச் சாராய கைதிகள்; ஆண்களும் பெண்களுமாக!

எப்போது? 1966-ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சி நடந்தபோது! மதுவிலக்கு சட்டம் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டபோது!

இங்கே மது விலக்கு - அதனால் அண்டை மாநிலங்களான புதுவை, ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் மூலம் பலவகையிலும் நல்ல வருமானம்!

அஃதன்னியில் ஊருக்கு ஊர் - சந்துக்குச் சந்து கள்ளச் சாராயத் தொழில்; குடிசைத் தொழிலாக வளர்ந்து வளம் பெற்றுக் கொண்டிருந்தது.

இதையெல்லாம் எண்ணிப் பார்த்தும் - அரசின் நிதியாதாரம் மிகப் பலவீனமாகத் தேய்ந்து போயிருப்பதை சரிப்படுத்தவும் - 1971 ஆம் ஆண்டு தி.மு.க. பொதுக் குழுவில் மது விலக்கு சட்டத்தை சில காலம் ஒத்திப் போடலாம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனை வழிமொழிந்து பேசியும், தொடர்ந்து ஆனந்த விகடனில் தனது சுயசரிதையில் மதுவிலக்கு ஒத்திவைப்பு ஆதரித்து எழுதியும்; அந்த நேரத்தில் கழக ஆட்சிக்கு அதைத் தவிர வேறு வழியில்லை என்று திட்டவட்டமாகச் சுட்டிக் காட்டியவர் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களாவார்கள்.

ஒத்திவைக்கப்பட்ட மதுவிலக்கு சட்டம்; இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, திரும்பப் பெறப்பட்டு - மீண்டும் கழக ஆட்சியில் பூரண மதுவிலக்கு சட்டம் கொண்டு வரப்பட்டு, மிகக் கடுமையாக நடவடிக்கைகள் தொடர்ந்தன.

1977-ல் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்தபோது; தி.மு.க. ஆட்சியில் மீண்டும் மூடப்பட்ட மதுக்கடைகளை மீண்டும் திறக்க மாட்டோம் என்று உறுதியாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் அதே எம்.ஜி.ஆர். ஆட்சியில் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பீர், பிராந்தி, ஒயின் போன்ற அந்நிய மதுக் கடைகள் திறக்கப்பட்டன. அத்துடன் சாராயக் கடைகளும் மாநில முழுவதும் திறக்கப்பட்டன. சாராயக் கடைகளை ஏலம் விடாமல் நடைபெற்ற முறைகேடுகளை எதிர்த்துச் சிலர் உச்சநீதிமன்றம் சென்ற காரணத்தால்; உச்ச நீதிமன்றத் தீர்ப்பு எம்.ஜி.ஆர். அரசைக் கண்டிக்கும் வகையில் அமையக் கூடும் என முன்கூட்டியே சட்ட நிபுணர்கள் மூலம் அறிந்து; சாராயக் கடைகளை மூடுமாறு ஆணையிடப்பட்டது. அதே நேரம் இந்தியாவில் தயாராகும்

அந்நிய மதுக்களான பீர், பிராந்தி, விஸ்கி, ஒயின், ரம், ஜின் போன்ற சரக்குகள் விற்கும் கடைகள் பெருகின.

சாராயக் கடைகள் இல்லாததால்; கள்ளச் சாராய சாம்ராஜ்யாதிபதிகள் ஆங்காங்கு தோன்றினர். அந்நிய மது தயாரிப்பாளர்கள் என்ற பெயரால்; அரசின் பல்வேறு சலுகைகளால் பெற்ற கொள்ளை லாபத்தின் காரணமாக - ஆண்டுக்கு ஒன்றுக்கு நூறு முதல் இருநூறு கோடி ரூபாய் வரை அரசின் கஜானாவுக்கு வரவேண்டிய பணம் எங்கேயோ போய்கொண்டிருந்தது.

1989-ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் அந்த சாராய சாம்ராஜ்யத்தை உடைத்து நொறுக்கி, யார் யாருக்கோ பொதி பொதியாகப் போய்க் கொண்டிருந்த ஆதாயத்தை அரசுக்குக் கிடைக்குமாறு செய்து, நிதி ஆதாரத்தைப் பெருக்கியதோடு; கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்தவும்; எப்படியும் குடிப்பவர்கள் நல்ல சாராயத்தையாவது குடிக்கட்டுமென்று; பாக்கெட்டுகளில் மலிவு விலை மது அறிமுகப்படுத்தப்பட்டது.

மலிவு விலை மதுவை ஒழிப்பேன்! பூரண மதுவிலக்கு கொண்டு வருவேன்! என்று தேர்தல் நேரத்திலே அறிவித்துவிட்டு ஆட்சிக்கு வந்து - மலிவு விலை மதுவை ரத்து செய்தாரே தவிர; கள்ளச் சாராயம் ஊருக்கு ஊர் ஆறாகப் பெருகி வழிவதை நிறுத்தவும் முற்படவில்லை! இன்னும் சொல்லப் போனால் கள்ளச்சாராய சமஸ்தானாதிபதிகள் பலர் ஜெயலலிதாவின் கொலுமண்டபத்தில் அமர்ந்து கொட்டமடித்துக் கொண்டுமிருக்கிறார்கள்.

கள்ளச் சாராய வியாபாரிகளை, அதிபர்களை ஏன் கைது செய்யவில்லை? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? என்று காவல்துறை அதிகாரிகளைப் பார்த்துக் கேட்பதற்குப் பதிலாக; எதற்காக அந்த மது காய்ச்சும் மகுடபதியைப் பிடித்தாய்? என்று அதட்டும் அரசல்லவோ இன்று அமைந்துள்ளது! அதட்டுவதுடன் விட்டாலும் பரவாயில்லையே; அந்த நேர்மையான அதிகாரிகளுக்குத் தக்க பாடமும் அல்லவா போதிக்கிறது!

ஓராண்டுக்கு முன்பு ஆகஸ்டு மாதம் 19-ந் தேதி; கோவை ரூரல் காவல்துறை கண்காணிப்பாளரான முத்துக்கருப்பனுக்கு ஒரு தொலைபேசிச் செய்தி வந்தது. அவிநாசி அருகேயுள்ள தேவராயம்பாளையத்தில் பத்து டாங்க்கர் லாரிகளில் கள்ளச் சாராயம் இருக்கிறது என்பதுதான் அந்தச் செய்தி! காவல்துறை

கண்காணிப்பாளர் முத்துக்கருப்பன், போலீஸ் படையுடன் தேவராயம்பாளையத்துக்குப் புறப்பட்டார்.

அங்கே போனால் அந்த லாரிகள் மட்டுமல்ல; அவர்களே ஆச்சரியத்தால் அதிர்ச்சி அடையும் படியாக, இரண்டு கோடவுன்களில் குழாய்கள் பொருத்தப்பட்டு; மிகப் பெரிய - ஒவ்வொன்றும் பத்தாயிரம் லிட்டர் ஸ்பிரிட் கொள்ளக்கூடியதான பிளாஸ்டிக் டாங்குகள், ஜெனரேட்டர்கள், மின்சார மோட்டார்கள் என்று ஏராளமாகக் காணப்பட்டன. உடனே மாவட்ட ஆட்சித்தலைவர் கலைவாணனுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு அவரும் அந்த இடத்துக்கு விரைந்து வந்து விட்டார். அதே பகுதியிலிருந்து வேறு சிலவும் கைப்பற்றப்பட்டன.

* பதினைந்து லட்ச ரூபாய் பணம்
* முக்கியமான சில பத்திரங்கள்
* கைத்துப்பாக்கி
* தோட்டாக்கள்
* ஜெல்லட்டின் குச்சிகள்
* ஒரு கார்
* ஒரு ஜீப்

கடல் அளவு கள்ளச்சாராயம் - மற்றும் ஆபத்தான பொருள்கள்; கலெக்டர் ஆணையுடனும், காவல்துறை கண்காணிப்பாளர் முத்துக்கருப்பன் கட்டளையுடனும் ஆக்ரமிக்கப்பட்டவுடன்; அந்த சாம்ராஜ்யத்தின் மாமூல் பாளையக்காரர்களாக இருந்த இன்ஸ்பெக்டர்களும், ஆறு சப் இன்ஸ்பெக்டர்களும் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

இவ்வளவுக்கும் அந்த மதுராபுரியின் மாமன்னர் ஈஸ்வர மூர்த்தி என்பவர், அங்கிருந்து தப்பிச்சென்று பெங்களூரில் ஒளிந்து கொண்டு விட்டார். அங்கிருந்து சென்னைக்கு தொடர்பு கொண்டார் போலும். அருள்பாலிக்கப்பட்டு விட்டது. காணிக்கையால் களிப்புற்று கருணைக் கடைக்கண் காட்டப்பட்டுவிட்டது! பிறகு என்ன?

பெங்களூரிலிருந்து வந்த போலீசில் சரணடைந்தார். அன்றைக்கே ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டு விட்டார். ஜாமீனில் வெளிவந்த அவரை வாழ்த்தி வரவேற்றவர்கள் நீதிமன்ற

வாசலில் ஆவலுடன் காத்திருந்த அ.தி.மு.க.வினர் என்று ஏடுகள் செய்தி வெளியிட்டன.

ஈஸ்வரமூர்த்தி இப்படியொரு மறைமுகமான - மர்மமான - இரகசிய சாம்ராஜ்யம் நடத்துகிறார் என்பது அந்தப் பகுதி மக்கள் பலருக்குத் தெரியாது. ஏனெனில்; பல்வேறு பிரிவு மக்களுக்கும் அவர் நன்கொடைகள் அளித்து வள்ளல் என்ற பெருமை பெற்றிருந்ததுடன் காவல் துறையையும் கைக்குள் வைத்திருந்தார். அது மட்டுமல்லாமல் அவர் தெய்வபக்தி நிரம்பியவர் என்றும் பெயர் எடுத்துள்ளார். எரிந்து போன அவிநாசி தேரைப் புதுப்பிப்பதற்குக் கூட நன்கொடை வழங்கியிருக்கிறாராம்.

அதுபோகட்டும்; உடன்பிறப்பே! எண்ணிப் பார்த்தாயா? தமிழ்நாட்டில் பல்வேறு சிறைகளில் கள்ளச்சாராயக் கைதிகள் அடைபட்டிருக்கிறார்கள். கள்ளச்சாராய வழக்கில் பெண்களும் கூட அடைபட்டிருக்கிறார்கள். ஆண்களோ அல்லது பெண்களோ அவர்களில் பெரும்பாலோர் மிகச் சாதாரண குடும்பத்தினர் - குடிசை வாசிகள் - காலனிப் பகுதி மக்கள்!

அவர்கள் எல்லாம் விசாரணை எதுவுமில்லாமலே குண்டர்கள் சட்டப்படி சிறைகளில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பானை கள்ளச் சாராயம் காய்ச்சியது; அல்லது ஒரு கலயம் அளவு சாராயம் விற்க முயன்றது - விற்றது; இவற்றுக்காக ஏழை பாழைகள் குண்டர் சட்டத்தில் சிறையில் வதங்குகிறார்கள். அவர்களது பிள்ளை குட்டிகள் நடுத் தெருவில் நிற்கின்றன!

ஆனால்; மிகப் பிரமாண்டமான சாராயக் கோட்டையை உருவாக்கிக்கொண்டு, ஆயுதங்கள், துப்பாக்கிகள், தோட்டாக்கள், லட்சக்கணக்கில் கரன்சி நோட்டுகள், டாங்குகள், லாரிகள், கோடவுன்களில் கள்ளச்சாராயம், மற்றும் ஸ்பிரிட் - இத்யாதி இத்யாதிகளுடன் செங்கோல் (?) ஒச்சிக்கொண்டிருந்த ஈஸ்வர மூர்த்தியாரால் அடுத்தகணமே ஜாமீனில் விடுதலையாகி வெளியே வரமுடிகிறது!

இதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்து ஊழல் என்று உரைக்க முடியுமா?

இதைவிடு; இவரது கோட்டை கொள்ளங்களை முற்றுகையிட்டு - இவரையும் கைது செய்து சாராய ரெய்டு ஹீரோ என்று பத்திரிகைகளால் புகழப்பட்ட காவல்துறை கண்காணிப்பாளர்

முத்துக்கருப்பன் உடனடியாக கோவையிலிருந்து மாற்றப்பட்டு விட்டாரே; அதைத்தான் ஊழல் என்று கூறிவிடமுடியுமா? என்ன சிரிக்கிறாய்?

எதிர்க்கட்சிக்காரனாக இருந்தால்; ஆதாரம் இருக்கிறதோ இல்லையோ; அவன்மீது அதிகாரபலத்தைக் கொண்டு சேறு வாரி வீசி சிறையிலேகூட போடலாம்!

மாறாக அரசாங்கத்தையே விலை கொடுத்து வாங்கக் கூடியவர்கள்; சாராய சாம்ராஜ்யம் நடத்தினால் என்ன? சமூக விரோதக் காரியங்களில் ஈடுபட்டால்தான் என்ன? அவர்கள் விடுக்கும் காகித அம்புகளுக்கு முன்னால் சட்டமாவது, நியாயமாவது, விதியாவது, முறையாவது!

வெறும் காகித அம்புகளா என்ன; எல்லாம் கரன்சிக் காகிதங்களால் ஆன அம்புகளாக்கும்!

அந்த அம்புகளைக் கணக்கிடத்தானே ஆளவந்தார்களுக்கு நேரம்! பிறகென்ன ஆட்சி நடத்தவா நேரம் இருக்கிறது!

ஏழைகளை வதைத்து, ஏழடுக்கு மாளிகைச் சீமான்களை கள்ளச்சாராய வேந்தர்களாக மாற்றி;

ஊரெல்லாம் பிராந்திக்கடை திறந்து, அந்தக் கடைகளில் கள்ளச்சாராயம் வைத்து விற்கச்சொல்லி;

மேற்படி கடைகளுக்குப் பக்கதில் பார் அமைத்துக் குடிக்கும் வசதியும் செய்து கொடுத்து;

பூரண மதுவிலக்கைக் கொண்டு வந்து விட்டார் புண்ணியவதி.

அன்புடன்,

மு. க.

(27-08-1992)

1937. ஊழல் அத்தியாயம் (9)

ஆம்னிபஸ் பேரம் ஆரம்ப காண்டம்!

உடன்பிறப்பே,

திருமணங்கள் அல்லது திருவிழாக்கள் அல்லது தீர்த்தாடனங்கள் அல்லது சுற்றுலா என்று கூறிக் கொண்டு பெரியதோர் குடும்பத்தினர், அவர்களது சுற்றத்தார் பயணம் செய்வதற்காகவே பயன்படுத்தப்பட வேண்டியவை ஆம்னிபஸ்கள் என்பதை நீ அறிந்திருப்பாய்!

சென்னையிலிருந்து சிதம்பரத்திற்கோ; கோவை அல்லது குடந்தையிலிருந்து குற்றாலத்துக்கோ செல்கிற ஆம்னி பஸ்களில் ஏறிப் பயணம் செய்வோர் அனைவருக்கும் ஒட்டு மொத்தமாகத்தான் கட்டணம் வசூலிக்கப்படவும் வேண்டும். அதுதான் ஆம்னி பஸ்களுக்கான விதிமுறை! ஆனால் ஆம்னி பஸ்களை நடத்துவோர்; அந்த விதிமுறைகளை வீதியிலே போட்டு மிதித்து விட்டு, பேருந்துகளில் ஒவ்வொரு தனி பயணிக்கும் கட்டணம் வசூலிப்பதைப் போல வசூலித்துக்கொண்டு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் ஆதாயத்திற்கும் புகைவண்டிகளின் ஆதாயத்திற்கும் குறுக்கே நின்று கொண்டிருக்கிறார்கள் என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்திருக்கிறோம்.

ஆம்னி பஸ்கள் சுற்றுலா பஸ்களாக உபயோகப்படுவதற்கு மாறாக, போக்குவரத்து பஸ்களாக பயன்படுத்தப்பட்டு, இடையிடையே வரும் ஊர்களில், நகர்களில் பயணிகள் இறங்குவதும், புதிதாகப் பயணிகள் ஏறுவதுமான முறைகேடுகள் பெருகத் தொடங்கிவிட்டன.

1989-ல் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற போது நமது கழகம்; ஆம்னி பஸ்களின் அத்துமீறல்களையும், அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளுக்கு எதிராக வந்த ஆம்னி பஸ் அதிபர்கள்

கடைப்பிடிக்கும் தவறான காரியங்களையும் கட்டுப்படுத்த வேண்டுமென்று முடிவெடுத்தது.

அதன்படி ஆம்னி பஸ் இருக்கை (சீட்) ஒன்றுக்கு ஒவ்வொரு காலாண்டுக்கும் இரண்டாயிரம் ரூபாய் வரி என்று கழக அரசு அறிவித்தது.

அந்த வரி அதிகமானதென்றும், அதை முன் போலவே ஐநூறு ரூபாய் அளவுக்குக் குறைக்க வேண்டுமென்றும் ஆம்னி பஸ்காரர்கள், பரிந்துரையாளர்கள் பலபேரை அழைத்து வந்தனர். அனுப்பி வைத்தனர். ஆசை காட்டினர். கழக அரசு, அவர்களின் கோரிக்கையை காதில் போட்டுக்கொள்ளவே இல்லை.

தங்களின் எல்லாவிதமான முயற்சியிலும் பலிக்கவில்லை யென்றதும் ஆம்னி பஸ்காரர்கள் நீதிமன்றத்துக்கு சென்றார்கள். அவர்களின் வழக்கை விசாரித்த நீதிமன்றம் இடைக்காலத் தடையொன்றை விதித்ததோடு; விசாரணை முழுமையாக முடிவடையும் வரையில் - ஆம்னி பஸ்காரர்கள், அந்த பஸ்களின் இருக்கை (சீட்) ஒன்றுக்கு அரசு விதித்த வரியான இரண்டாயிர ரூபாய்க்கு பதிலாக, ஆயிரத்து ஐநூறு ரூபாய் வரி கட்ட வேண்டுமென்று அறிவித்தது.

அதன்படி கழக அரசு, ஆம்னி பஸ்காரர்களிடம் இருக்கை ஒன்றுக்கு ஆயிரத்து ஐநூறு ரூபாய் வரியை வசூலித்து வந்தது.

உடன்பிறப்பே, ஒரு ஆம்னி பஸ்ஸில் குறைந்தது நாற்பது இருக்கைகள் என்றால் - ஆயிரத்து ஐநூறு ரூபாய் வீதம் அறுபதாயிரம் ரூபாய் வரி!

இந்த வரி கால் ஆண்டுக்கு; அதாவது மூன்று மாதத்திற்கு!

எனவே ஒரு ஆண்டுக்கு இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் ஒரு ஆம்னி பஸ்ஸுக்கு வரி கட்ட வேண்டும். அவ்வாறே கட்டியும் வந்தார்கள்.

மொத்தம் தமிழ்நாட்டில் எத்தனை ஆம்னி பஸ்கள் என்ற கணக்கையும் மறந்துவிடக் கூடாதல்லவா?

ஆயிரம் ஆம்னி பஸ்கள் என்று தோராயமாக வைத்துக் கொள்வோம்.

ஒரு பஸ்ஸுக்கு ஆண்டு ஒன்றுக்கு இரண்டு லட்சத்து நாற்பதாயிரமென்றால் ஆயிரம் பஸ்களுக்கு இருபத்தி நான்கு கோடி ரூபாய் வரி மூலம் அரசுக்கு வருமானம்!

இந்த வருமானம் அரசுக்கு, கழக ஆட்சி கலைக்கப்படும் வரையில் வந்து கொண்டிருந்தது.

கழக ஆட்சி கலைக்கப்பட்டதும்; ஆம்னி பஸ் அதிபர்கள் பார்க்க வேண்டியவர்களைப் பார்க்க வேண்டிய முறைப்படி பணப் பெட்டிகளுடன் போய்ப் பார்த்தார்கள். ஊழலை உப்பக்கம் காணும் உத்தமியின் ஆட்சியல்லவா?

1500 ரூபாய் வரி கட்டுங்கள் என்று நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கும்போது; அதை மீறி நான் என்ன செய்ய முடியும்? என்று பதில் கூறித் தயக்கம் காட்டவில்லை!

நீதிமன்ற விசாரணை முடிந்து இறுதித் தீர்ப்பு வரும் வரையிலே கூட பொறுத்திருக்க வில்லை!

ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரிக்கு மட்டும்தான் உயர்நீதிமன்றத்தின் உத்திரவுக்கு அப்படியே அடங்கி நடந்துகொண்டது ஜெயலலிதா ஆட்சி!

ஆனால் ஆம்னி பஸ் வரி விவகாரத்தில் நீதிமன்றத்தின் உத்திரவைப் பொருட்படுத்தவே ஜெயலலிதா ஆட்சி நினைக்கவே இல்லை!

அதாவது; ராமச்சந்திரா கல்லூரி விவகாரத்தில் உயர்நீதிமன்ற உத்திரவுக்கு கட்டுப்பட்டு, நடந்துகொண்டதால் லஞ்ச வேட்டை!

ஆம்னி பஸ் விவகாரத்தில் நீதிமன்ற உத்திரவை ஒதுக்கிவைத்து நடவடிக்கை எடுத்ததால் லஞ்ச வேட்டை!

அப்படி என்ன நடவடிக்கை ஆம்னி பஸ் விஷயத்தில் எடுக்கப்பட்டது?

ஆயிரத்து ஐநூறு வரி கட்ட வேண்டுமென நீதிமன்றம் சொன்னதற்கு மாறாக; இருக்கை ஒன்றுக்கு ஐநூறு ரூபாய் வரி கட்டினால் போதுமென ஆம்னி பஸ் அதிபர்களுக்கு சலுகை வழங்கப்பட்டது.

அதுமட்டுமா? அவர்கள் ஏற்கெனவே கழக ஆட்சியில் கட்டியிருந்த வரியையும் இந்த சலுகைக்கேற்ப அவர்களுக்கே ஜெயலலிதா அரசு திருப்பியும் கொடுத்துவிட்டது!

எனவே ஆம்னி பஸ்களின் வாயிலாக கழக ஆட்சியில் ஓராண்டுக்கு இருபத்தி நான்கு கோடி ரூபாய் வருமானம் அரசுக்கு வந்தால்; இப்போது எட்டு கோடி ரூபாய்தான் வருமானம் வரமுடியும்!

ஒரு ஆம்னி பஸ்ஸில் 40 இருக்கைகளுக்கு ஆண்டுக்கு 80,000 ரூபாய் எனக் கணக்கிட்டால்; ஆயிரம் பஸ்களுக்கு எட்டு கோடி ரூபாய்தானே!

இந்தக் கணக்கின்படி; இருபத்து நான்கு கோடிக்கு பதிலாக எட்டுக்கோடி! எனவே அரசின் கருவூலத்துக்கு வரவேண்டிய பதினாறு கோடி ரூபாய் நஷ்டம்!

இஃதன்னியில் அவர்கள் கட்டிய வரி 1500-ல் ஆயிரத்தைத் திருப்பிக் கொடுத்த தொகையையும் சேர்த்துப் பார்த்தால்; ஏறத்தாழ இருபது கோடியை எட்டும்!

இந்தக் கணக்கில்; சற்று - கூடக் குறைய இருக்கலாம்! ஆனால் அடிப்படை உண்மையை மறைக்க முடியாது!

ஜெயலலிதா ஆட்சி அமைந்தவுடன் ஆரம்பமானதுதான் இந்த ஆம்னி பஸ் ஊழல்!

அரசுக்குத்தானே பதினாறு கோடி; ஆண்டுதோறும் இழப்பு!

அது, ஆம்னி பஸ்காரர்களுக்கு ஆதாயம் இல்லையா?

அந்த ஆதாயத்துக்காக அவர்கள் கொடுத்த லஞ்சம் - ஆறு கோடி ரூபாய்!

உடன்பிறப்பே; சரித்திரம் திரும்பும் என்று முன்பே சொன்னேன் அல்லவா - அப்படித் திரும்பும் போது இந்த ஊழல்கள், தங்கள் மீது வழங்கப்படப் போகிற தீர்ப்புக்காகக் காத்திருக்கும் காட்சியைக் காணத்தானே போகிறோம்!

அன்புடன்,

மு. க.

(28-08-1992)

1938. வீரத் திருவிளக்கே!
என் விழி நிறைந்த ஒளி விளக்கே!
வெற்றிச் சுடர் விளக்கு ஏந்திடப் புறப்படு!

உடன்பிறப்பே,

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை – எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை என்ற புரட்சிக் கவிஞரின் அழகுத் தமிழ் வரிகளில் வீணையின் நாதம் கலந்திருப்பினும்; அது முழுக்க முழுக்க வீரகீதமாகவன்றோ உன் நெஞ்சிலும் என் நெஞ்சிலும் என்றென்றும் இசைத்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பாடல் வரிகளை இதயத்தில் பதிய வைத்துக்கொண்டு சிறைக் கோட்டங்களில் அடைபட்டுக் கிடக்கும் உன் செவிகளில்; பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு திறந்தது சிறுத்தையே வெளியில் வா! எனும் கவிஞர் பெருமானின் கவிதையழைப்பின் கம்பீரத்தொனியும் கேட்கத்தான் போகிறது.

சிங்க இளைஞனே! திருப்புமுகம்! திற விழி! இங்குன் நாட்டுக்கு இழிகழுதை ஆட்சியா? வையம் ஆண்ட வண்டமிழ் மரபே கையிருப்பைக் காட்ட எழுந்திரு!

இதுவும் புரட்சிக் கவிஞரின் புயல் நடைக் கேள்வியும்; புலியின் உறுமலனைய அழைப்பும் தானே எனக் கிளர்ந்து எழுந்து, சிறைக்கோட்டங்களில் எஞ்சியுள்ள இடங்களையும் நிரப்புவதற்காகத் துடித்துக் கொண்டிருக்கும் உன் கரங்களில் இந்தக் கடிதம் சேரும்போது; இதை நீ படித்துவிட்டு – செப்டம்பர் முதல் நாள் நீ சிறைக்குள் நுழைந்ததும் நீ படித்த இக்கடிதத்தை அங்குள்ள உடன்பிறப்புகள் அனைவருக்கும் தெரிவித்திடுவாய் என்பது எனக்கு தெரியும்.

செப்டம்பர் முதல்நாள் நீ சிறைக்குள் செல்லும்போது என்று ஏன் குறிப்பிட்டிருக்கிறேன், புரிகிறதா?

இந்தக் கடிதம் நான் எழுதிக் கொண்டிருக்கும் போது வந்துள்ள சரியான தகவல்களின்படி உன்போன்ற உடன்பிறப்புகளும், தோழமைக் கட்சிகளின் முன்னோடிகள் மற்றும் செயல்வீரர்களுமாக இருபதாயிரம் பேர் இந்த அரசின் காவல்துறையினரால் மறியல் அறப்போருக்கு ஆறு நாட்களுக்கு முன்பே காராக்கிரகங்களில் அடைக்கப்பட்டுள்ளனர். சென்னையில் மட்டும் இதுவரை ஐநூறு பேர் கைது என எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது. அந்த ஏட்டின் நிருபர் நீதிமன்றங்களுக்கு சென்று செய்தி சேகரிக்காமல் உட்கார்ந்த இடத்திலேயே இருந்து ஏதோ தோராயமாக ஒரு எண்ணிக்கையைக் கொடுத்திருக்கிறார் போலும்!

28.8.92 ஒரு நாளில் மட்டும் சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் ரிமாண்டு செய்யப்பட்ட நமது அணியினரின் எண்ணிக்கை 358. எழும்பூர் நீதிமன்றத்தில் அதே நாளில் ரிமாண்டு செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 436. ஜார்ஜ் டவுன் நீதிமன்றத்தில் ரிமாண்டு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை, அதே 28-ந் தேதியின்று 140. இந்த எண்ணிக்கையே ஆயிரத்தைத் தாண்டுகிறது. ஆனால் எக்ஸ்பிரஸ் ஏட்டில் நிருபர் தந்த கணக்கோ அல்லது போலீஸ் தந்த கணக்கோ சென்னையில் 500 பேர் மட்டுமே என்பதாகும்.

இதேபோல ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஐநூறு பேர், எண்ணூறு பேர், ஆயிரம் பேர், ஆயிரத்துக்கு மேற்பட்டோர் என்று வந்துள்ள கணக்கு 27-ந் தேதி இரவு முதல் 28-ந் தேதி மாலை வரையில் மொத்தம் இருபதாயிரம் பேர்!

இன்னும் மூன்று இரவுகள் மிச்சமிருக்கின்றன. இரண்டு இரவுகளில் கைது செய்யப்பட்டோர் எண்ணிக்கை இருபதாயிர மெனில் எஞ்சியுள்ள மூன்று இரவுகளில் அந்த எண்ணிக்கை எப்படிப் பெருகும் என்பதை உன் முடிவுக்கே விட்டு விடுகிறேன்.

அதனால் குறிப்பிட்டுக் கோடிட்டுக் காட்டியுள்ளேன் செப்டம்பர் முதல் நாள் நீ சிறைக்குள் செல்லும்போது என்பதாக!

அந்த நாளில் கழகத்தினரும் தோழமைக் கட்சியினரும் அறிவித்துள்ள மறியல் அறப்போரில் கலந்துகொள்ள ஆட்களே இருக்கக்கூடாது என்ற கெடுநினைப்பிலேதான் நமது கட்சிகளின் முன்னோடிகளையும், செயல் வீரர்களையும் பல்லாயிரக் கணக்கில் சிறைச்சாலைகளில் முடக்கி வைத்திட, ஆறு நாட்களுக்கு முன்பே ஆரம்பித்துவிட்டனர்!

ஆட்சியாளரின் இந்த எண்ணமும், இதனை நிறைவேற்றக் கையாளும் தந்திரமும் பலிக்காமல் செய்ய வேண்டிய பொறுப்பு, இப்போது சிறைக்கு வெளியே இருக்கும் உன்போன்றோருக்கு இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது!

நமது அணியென்ன; ஏதாவது வன்முறைப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக முடிவு செய்து அறிவித்ததா? இல்லையே! மறியல் போராட்டம்தானே!

ஒவ்வொரு ஊரிலும் அரசு அலுவலகம் ஒன்றின் முன்னால் மொத்தமாகக் கூட்டமாகக் கூடச் செல்லாமல் - இருபது பேர், முப்பது பேர், நாற்பது பேர், ஐம்பது பேர் என்று நிலைமைக்கேற்ப ஒவ்வொரு அணியாகச் சென்று மறியல் நடத்த முற்படுவர். உடனே போலீசார் அவர்களைக் கைது செய்வர்.

தொடர்ந்து அடுத்த அணியினர் மறியலுக்கு வருவர். சிறைப்படுவர். இப்படி ஒருநாள் மட்டும் அறவழியில் அமைதி வழியில் மறியல் நடைபெறும் என்று தான் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஏன் இவ்வளவு சலசலப்புக் காட்டுகிறது போலீஸ்?

நூறு கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள அரசாங்க நிலம்! அரசின் சொத்து என்றால் அது பொது மக்களின் சொத்து அல்லவா? அதனை விதிமுறைகளுக்கு மாறாகப் பெற்று, விலை பேசி வாங்காமலும் - எம்.எம்.டி.ஏ.வின் ஒப்புதல் பெறாமலும்; தாமே தனி ராஜ்யம் நடத்துவது போல கல்லூரிக்கான கட்டிடங்களையும் அனுமதி யின்றியே மளமளவென உருவாக்கி, மாணவர்களைச் சேர்த்திட லட்சக் கணக்கில் பணமும் சுரண்டுகிற கொடுமையைத் தடுத்து கழக ஆட்சியில் அரசுடைமையாக்கப்பட்ட ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை, கொழுத்த பேரம் பேசிக்கொண்டு இன்றையக் கோலேந்திகள்; தனியாருக்குத் தாரை வார்த்தது மட்டுமின்றி, அதனைத் தட்டிக் கேட்கும் மாணவக் கண்மணிகளையும் - பெற்றோர்களையும் தாக்குகிறார்கள், சிறையில் தள்ளுகிறார்கள், சித்ரவதை செய்கிறார்கள் என்றால் அரசுடைமைகளுக்கும் மக்கள் நலன்களுக்கும் அரண்களாக இருந்து பாதுகாக்க வேண்டிய பொறுப்புள்ள எந்தவொரு கட்சியாவது வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

அதனால்தான் சுமார் முப்பது நாட்களுக்கு மேலாகப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து; வேறு வழியின்றி தி.மு.கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, ஜனதா தளம், அகில இந்திய பார்வார்டு பிளாக் ஆகிய கட்சிகள் அமைதி வழி மறியலுக்கு தேதி குறித்தன.

செப்டம்பர் முதல்நாள் மறியல் போராட்டத்துக்கு ஜெயலலிதா அரசு ஆறு நாட்களுக்கு முன்னதாகவே நல்ல விளம்பரம் தேடித்தரத் தொடங்கிவிட்டது குறித்து மகிழ்ச்சிதான் எனினும்; இப்படிப் பல்லாயிரம் பேரை ஒரு வாரத்துக்கு முன்பே சிறைபிடித்து, அதுவும் நள்ளிரவில் அவர்கள் தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது தட்டியெழுப்பி இட்டுச் சென்று கொட்டடிகளில் அடைத்துள்ளதோடு - சுமார் நாற்பது நாட்களாக அமைதியான முறையில் தங்களை வருத்திக்கொண்டு போராட்டம் நடத்தி வரும் மாணவச் செல்வங்களை மிரட்டுவதும்; நேற்றுக்கூட சென்னை வேப்பேரி காவல்நிலையத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களில் பெரும்பாலும் பெண்களை நள்ளிரவில் அடைத்துவைத்து, அவர்களைத் தாக்கியிருப்பதும் கேலிக்குரிய கேவலமான பொய் வழக்குகளை ஜோடிப்பதும் - பெருங்கண்டனத்திற்குரியவைகளாகும்.

ஒரு கோடி இரு கோடி கூட அல்ல; பல கோடி மதிப்புள்ள அரசாங்க நிலங்களையும், சொத்துக்களையும் தனியார்களுக்குத் தாரை வார்த்து; அதில் அந்தத் தனியார்கள் கல்வியையே ஒரு கொள்ளை வியாபாரமாக்கிக் கொள்ள வழிவகுத்து; அந்தக் கொள்ளையில் பங்குத் தொகை பெற்றுக் களிக்கும் அமைச்சர்களுக்கு எதிராக- அதிகாரிகளுக்கு எதிராகத்தான் மறியல் அறப்போர்!

இந்த மறியல் அறப்போர்

மாணவர்களுக்கு ஆதரவாக!

மாற்றுக் கருத்தை மதிக்க விரும்பாத
மகோன்மத்தர்களுக்கு எதிராக!

அரசு நில புலங்கள் நமது சொத்துக்கள் என்ற
நினைவோடு அவைகளைப் பாதுகாப்பதற்கு ஆதரவாக!

பாதுகாக்கப்பட்ட அரசின் சொத்துக்களை
பகற்கொள்ளையடிக்கும் பாதகர்க்கு எதிராக!

கல்விச் செல்வம் அனைவருக்கும் கிட்ட வேண்டும்
என்ற கொள்கைக்கு ஆதரவாக!

கல்வியை வியாபாரமாக்கிக் கோடிக்கணக்கில் ஊழல்
புரியும் உன்மத்தச் செயலுக்கு எதிராக!

உடன்பிறப்பே, நாட்டின் எதிர்காலத்தையே நாசமாக்கத் துணிந்துள்ள நச்சு நினைப்பாளர்களின் கொட்டம் அடங்க; கொடி இறங்க;

உன்போன்றோரின் குரல்; அதற்கோர் ஆரம்பக் கட்டமாக - செப்டம்பர் முதல் நாள் மறியல் களங்களில் ஒலித்திட வேண்டும்.

தோழமைக் கட்சிகளின் பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் ஏற்கெனவே ஆங்காங்கு கலந்து பேசி; மறியல், அமைதியாகவும் கட்டுப்பாடு குலையாமலும் நடந்திட வழிவகைகளை வகுத்துள்ளனர். அவர்களில் பலர் இன்று சிறைகளுக்குள் இருக்கக் கூடும்.

அவர்கள் வகுத்திட்ட பணிகளை; வெளியில் இருக்கும் உன்போன்றோர் செப்டம்பர் முதல் நாள் நிறைவேற்றிட வேண்டும்.

நிறைவேற்றுவாய் என்ற நம்பிக்கை எனக்கு மிக உண்டு!

அடடே! எங்கிருந்து வந்தார்கள் இவர்கள்? கண்ணில் படாமல் இருந்துவிட்டு, இப்போது கடல்மடை திறந்தாற்போல் மறியல்களம் வந்துள்ளனரே - இவர்கள் இருந்த இடம் நமக்குத் தெரியாமற் போய் விட்டதே!

என்று காவல் துறையினர் வியப்புறும் அளவுக்கு மறியல் அறப்போரை நீயும், நமது அணியினைச் சேர்ந்த செயல்வீரர்களும் வெற்றிகரமாக நடத்திட வேண்டுமென அழைக்கிறேன்.

கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு; இவைகளுக்குக் கடுகளவுச் சேதமும் விளையாமல்; வீரத்திருவிளக்கே! என் விழி நிறைந்த ஒளி விளக்கே! வெற்றிச் சுடர்விளக்கு ஏந்திடப் புறப்படுக!

அன்புடன்,

மு. க.

(30-08-1992)

1939. கடமையாற்றுவீர்! களம் காண்பீர்!

உடன்பிறப்பே,

நீதி கேட்டுப் போராடிக் கொண்டிருக்கிற மாணவர்களுக்கு ஆதரவாகவும் - அவர்கள் மீது அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டு நீதியைக் காலில் போட்டு மிதித்துக் கொண்டு ஊருக்கு உபதேசங்களை நீட்டி முழக்கிக் கொண்டிருக்கும் ஜெயலலிதா அரசுக்கு எதிராகவும், உன் போன்ற உடன்பிறப்புகளும், நமது தோழமை அணியின் கட்சிகளின் செயல்வீரர்களும் சிறைச்சாலைகளை நிரப்பிக் கொண்டிருக்கும்போது, எதைப் பற்றியும் கவலைப்படாமல் மாணவர்களை மேலும் மேலும் கொடுமைக்கு ஆளாக்கும் ஏதேச்சாதிகார தர்பாரின் வெறியாட்டமே மேலோங்கி நிற்பதைக் காண முடிகிறது.

இதோ மருத்துவ மாணவர்களின் பெற்றோர் புகார் எனும் தலைப்பிட்டு, சென்னை தினமணியில் வந்துள்ள செய்தியைப் படிக்கும் போதே இதயம் பதைக்கிறது. பெற்றோர் சங்கத்தின் அமைப்பாளர், ரவீந்திரதாஸ் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையைத்தான் தினமணி போன்ற ஏடுகள் வெளியிட்டுள்ளன.

முரசொலி, தினகரன், தமிழன், மாலைமுரசு போன்ற ஏடுகள் என்றால் அந்தச் செய்திகளுக்குச் சிலர் நோக்கம் கற்பிக்கக் கூடும் என்பதால்தான், தினமணியில் வந்துள்ள செய்தியை சுட்டிக் காட்டுகிறேன். செய்தி வருமாறு:-

மனித உரிமைகளை மீறும் விதத்தில் போலீசார் செயல்படுகிறார்கள். கைது செய்யப்பட்ட மாணவர்களைப் பார்ப்பதற்கு வழக்கறிஞர்கள் கூட அனுமதிக்கப்படவில்லை. காவல் நிலையத்துக்கு வந்த பெற்றோர்களை போலீசார் துரத்தியுள்ளனர். கைது செய்யப்பட்ட மாணவிகள் விதிமுறைகளுக்கு மாறாக, காவல் நிலையத்தில் இரவில் தங்க வைக்கப்பட்டனர். காயமடைந்த மாணவர்களுக்கு மருத்துவ வசதியும் தரப்படவில்லை. நீதிமன்றத்தில் மாணவர்கள் சென்னை மத்தியச் சிறைச்சாலையில்

அடைக்கப்படுவார்கள் என்று கூறப்பட்டது. அதற்கு மாறாக, மாணவிகளை வேலூர் சிறைச்சாலைக்குக் கொண்டு சென்றுள்ளார்கள்.

இச்செய்தி, மாணவர்களும், மாணவிகளும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பிறகு கொடுக்கப்பட்டதாகும்.

இதற்கு முன் அந்த மாணவர்கள் உண்ணாநோன்பு போராட்டத்தில் ஈடுபட்டபோது, எவ்வளவு குரூரமாகவும், மோசமாகவும் நடத்தப்பட்டார்கள் என்பதைப் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் கண்டனம் செய்து அறிக்கைகள் விடுத்துள்ளார்கள்.

28-ந் தேதி மாலை சென்னை உயர் நீதிமன்றத்துக்கு முன்பாக, அமைதியான முறையில் உண்ணா நோன்பு மேற்கொண்டிருந்த மாணவர்களைக் காவல்துறையினர் முரட்டுத்தனமாகத் தாக்கியுள்ளனர். அங்கு கூடியிருந்த பொது மக்களையும் கண்ணீர்ப்புகை வீசி விரட்டியுள்ளனர். கைது செய்யப்பட்ட மாணவ மாணவிகளை வேப்பேரி காவல் நிலையத்தில் வைத்து அவர்கள் காயமுற்றுச் சோர்வடைந்து விழும் அளவுக்கு அடித்துள்ளனர்.

வேப்பேரி காவல் நிலையத்துக்குள் மாணவமணிகள் தாக்கப் படும்போது, அவர்களின் பெற்றோர்கள் காவல்நிலையத்துக்கு வெளியே கூடி கதறி அழுதிருக்கின்றனர்.

அந்தப் பெற்றோர்களில் ஓரிருவர், அந்தக் கொடுமைகளைக் காணச் சகிக்காமல் நள்ளிரவு நேரத்தில் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வேதனைக்குரல் எழுப்பினர்.

பெரிய அதிகாரிகளுடன் தொலைபேசித் தொடர்பு கொள்ள நான் முயன்றும் முடியவில்லை! அவர்கள் தொலைபேசியில் கிடைத்திருந்தால்தான் என்ன? நாங்கள் என்ன சார் செய்வது? மே(லி)டத்தின், உத்தரவு! என்றுதான் சமாதானம் கூறப்போகிறார்கள்.

உடன்பிறப்பே, எவ்வளவு வேதனையான வேடிக்கை பார்த்தாயா?

விதிமுறைகளை மீறி, விலையே கொடுக்காமல் நூறு கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள அரசு நிலத்தை ஆக்ரமித்து, அனுமதியின்றிக் கல்லூரிக்கான கட்டிடங்களைக் கட்டிக்

கொண்ட தனியாரிடமிருந்து - தி.மு.க. அரசு, அந்தக் கல்லூரியை தர்மநியாயமாக அரசுடைமையாக்கியிருந்ததை மாற்றி, மீண்டும் அந்த தனியாருக்கே, தனிப்பட்ட லாபத்துக்காக, ஊழல் புரிந்து தாரை வார்த்துவிட்ட கல்லூரியை மறுபடியும் அரசே எடுத்துக்கொள்ள சட்டமியற்ற வேண்டும் என்று காங்கிரசைப் போன்ற ஒரு சில இயக்கங்கள் தவிர, மற்ற எல்லா அரசியல், சமுதாய இயக்கங்களும் - மாணவர் அமைப்புகளும், பெற்றோர் சங்கங்களும் வலியுறுத்தியும்கூட, இன்னமும் பேசா மடந்தையாக இந்த அரசு இருப்பது மட்டுமல்ல! இதைத் தவிர, வேறு எது எதையோ பேசிக்கொண்டு பொழுதைப்போக்கிக் கொண்டிருக்கிறதே! இந்த வேதனையான வேடிக்கையைப் பார்த்தாயா?

எனவே, மாணவர்களின் எதிர்காலத்தைக் காத்திடவும் - மக்களின் சொத்துக்களான அரசின் சொத்துக்களை கொள்ளை லாபக்காரர்களுடன் சேர்ந்து பங்கிட்டுக் கொள்ளும் லஞ்ச தேவதைக்குப் பாடம் புகட்டவும் - நாம் தொடங்கியுள்ள இந்தப் போராட்டத்திற்கான நாள், செப்டம்பர் முதல் நாள்தான் எனினும், அதற்குள்ளாக இதுவரை இருபதாயிரத்தையும் தாண்டிவிட்டது சிறைப்பட்டோர் எண்ணிக்கை!

இந்தக் கைது படலம், செப்டம்பர் முதல் நாள் மறியல் அறப்போருக்கான முன்னுரை எனக் கொண்டு,

கழக உடன்பிறப்பே, நீயும், நமது தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களும் தியாகவரலாறு தீட்டும் கடைமையாற்றிடக் களம் காண்பீராக!

அமைதி வழி! அறவழி!

அது நமது அண்ணா வழி!

அன்புடன்,

மு. க.

(31-08-1992)

1940. தீரர்களே! என் வீரவாழ்த்து ஏற்பீர்!

உடன்பிறப்பே,

நீயும், நானும், நமது கழகமும், நமது தோழமைக் கட்சிகளும் இருந்த இடம் புல் முளைத்துப் போய்விட்டது எனப் புலம்பினர்!

அந்தப் புலம்பலார் புதருக்குள் பதுங்கிடும் அளவுக்கு எழுந்து நிற்கிறது நமது அறப்போர் அணி!

ஐந்து நாட்களில் கைது செய்யப்பட்டோர், இன்று காலை வரையில் உள்ள எண்ணிக்கை இருபத்தி ஐயாயிரம் பேர்!

மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாத நிலையில், நடுநிலை ஆங்கில மற்றும் தமிழ் ஏடுகள்கூட கடுகு எழுத்துத் தலைப்புகளில், அணுவினும் சிறிய உருவில் செய்திகளை வெளியிட்டாலும், அவற்றாலும் பதினைந்தாயிரம் பேர், இருபதினாயிரம் பேர் கைது என்றுதான் போட முடிகிறதே தவிர, உண்மையை மறைக்க முடியவில்லை!

வானொலி, தொலைக்காட்சிகளின் வாய்களில், விநாயக சதுர்த்தி கொழுக்கட்டைகள் கரன்சி மாவுகளால் செய்யப்பட்டு அடைக்கப்பட்டுள்ளன!

பாவம்! மாணவர்கள் அடிபடுகிறார்கள் - சிறையில் அடைக்கப்படுகிறார்கள்! மாணவிகளை நள்ளிரவு நேரத்தில், விதிகளுக்கு மாறாக - காவல் நிலையங்களில் அடைத்து வைக்கிறார்கள்! அவர்தம் வேதனையைக் கேட்க மனமின்றி வேலூர் சிறைக்குக் கொண்டுபோய்ப் பூட்டுகின்றனர்!

இந்தச் செய்திகளை முழுமையாக வெளியிட்டால், எடுப்பாக வெளியிட்டால் - ஆட்சியாளருக்கு அபகீர்த்தி வருமேயென்று அடிவருடிகள் விலாங்குமீன் வேடம் தரித்துக் கொண்டு வியாபாரத்தில் மட்டுமே கவனம் செலுத்துகின்றனர்!

தமிழ்நாடு எப்படிக் குட்டிச் சுவராகப் போனால் அவர்களுக்கு என்ன வந்தது?

நாமென்ன ஆயிரம் ஆண்டுகளா ஆயுள் பெற்று வாழப்போகிறோம் - எதிர்காலத் தமிழகம் இருட்டுக் குகையாவதால் நமக்கென்ன கவலை? ஏதோ இன்னும் வாழுகிற சில ஆண்டுகள் வரையில், கோழை எனப் பெயர் எடுத்தாலும் சரி - மானமற்றவன் என்று ஊர் அழைத்தாலும் சரி - சந்தர்ப்பவாதி எனச் சமுதாயம் பழித்தாலும் சரி - சுகமாக வாழ்ந்துவிட்டுப் போவோம் என்பதாகச் சத்திய சபதம் செய்து கொண்டவர்களுக்கு,

இந்த மாநிலத்தில் நடைபெறும் மானக்கேடான காரியங்கள், மனித நேயத்துக்குச் சவால் விடும் செயல்கள், கோடி கோடி ரூபாய்களை லஞ்சமாகப் பெற்று குவிந்த வண்ணமிருக்கும் ஊழல்கள் பற்றியெல்லாம் கவலை எதற்காக? தேவையில்லை அல்லவா! அந்தத் திரவியம் தேடிகளுக்கு?

எனவேதான் சர்வாதிகாரத்தை வீழ்த்தவும், ஜனநாயகத்தைக் காத்திடவும், விரைவில் தமிழ்நாடே விலை பேசப்பட்டு விடுமோ? என்ற நிலையை மாற்றவும், மாணவச் செல்வங்கள் மீது பாயும் கணைகளைத் தடுக்கவும் - போர்வாட்களாக, கேடயங்களாக எதிர்க் கட்சிகள் இதோ அணி வகுத்து நிற்கின்றன!

அந்த அணியில் இதுவரை இருபத்தி ஐயாயிரம் பேர் சிறையில்! ஆம், நேற்றுவரை!

இன்று மறியல் அறப்போரில் எத்தனை ஆயிரம் பேரோ? இந்த மொத்தப் பட்டியலில் இடம் பெறும் கழகக் கண்மணிகளுக்கும், தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களுக்கும் என் வீர வாழ்த்துகள்!

அன்புடன்,

மு. க.

(01-09-1992)

1941. எழிலுக்கு எழில் சேர்க்க என் உயிரே! வா!

உடன்பிறப்பே,

நான் முந்தி, நீ முந்தி என்று பரபரப்புடன் துள்ளிக் குதித்து காவல்துறை வாகனங்களில் நீ ஏறத்துடித்தக் காட்சியை தினமணி படம் பிடித்துப்போட்டு, தனது வியப்பைத் தெரிவித்துக் கொண்டிருந்ததைப் படித்துப் பார்த்து என் சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்த்திட மெய்மறந்து போனேன். அந்தப் புகைப்படத்தை கண்ணில் ஒற்றிக்கொள்ள வேண்டும்போல் இருந்தது.

ஆட்சியாளரும், அதிகாரிகளும் மட்டுமல்ல. அனுபவம் நிறைந்த பத்திரிகையாளர்களும்கூட, எவ்வளவு தவறான கணக்குப் போட்டுக் கொண்டிருந்திருக்கிறார்கள் பார்த்தாயா?

தி.மு.க. மார்க்சிஸ்டு, ஜனதா தளம், இந்திய கம்யூனிஸ்டு, அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சிகளின் முன்னோடிகளையும், செயல்வீரர்களையும் இருபத்தி ஐயாயிரம் பேரை ஆறு நாட்களுக்கு முன்பே சிறைகளில் அடைத்து விட்டோம். இனி யாருளர் மறியல் அறப்போரில் கலந்துகொள்ள? மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு ஐயாயிரம், ஆறாயிரம் பேர் மாநிலமுழுதும் மறியலில் ஈடுபடுவார்கள். என்றுதான் அரசு இறுமாந்திருந்தது!

ஆனால் எங்கிருந்து வந்தது? இந்தப் பெருவெள்ளம்! எந்த அணையுடைத்துக் கிளம்பியது? அடேயப்பா! ஒரே நாளில் மேலும் ஐம்பதாயிரம் பேரா?

பூண்டற்றுப் போயிற்று எனப் பூரித்துக் கிடந்தோம். போராட்டம் என்றதும் புற்றீசல் கூட்டம் புறப்பட்டதுபோலப் பெருகி, புலிகளின் உறுமலாய் - சிங்கங்களின் கர்ச்சனையாய் - ஒலி முழக்கம் செய்துகொண்டு, வலிவு மிகுந்த யானைப்

பட்டாளமாய் பீடு நடை போட்டு வருகின்றனரே அணி அணியாய்! எனப் புலம்பித் தவித்தனர், பூரித்துக் கிடந்தவர்கள்!

சிறைகள் நிரம்பும் எனத்தான் தெரிவித்தேன் - நிரம்பி வழியும் என நினைக்கவில்லை - ஆனால் அதையும் மீறி, நமது படைக் கூட்டத்தை அடைப்பதற்குத் தமிழ்நாட்டுச் சிறைகளில் இடமே இல்லை என்றல்லவா ஆக்கிவிட்டாய். நீயும் நமது தோழமைக் கட்சி செயல்வீரர்களும் சேர்ந்து!

செப்டம்பர் முதல் நாள் காலை, மிகுந்த அலட்சியத்துடன் கண் விழித்த அரசினரும், அதிகாரிகளும் மாலைக்குள்ளாக மாநில முழுதுமிருந்து வந்த மறியல் அறப்போர் செய்தி கேட்டு, கண்களை அகலத் திறந்து கொண்டல்லவா ஆச்சரியத்தை வெளிப்படுத்தினர்.

ஒரு கல்லூரி விஷயத்திற்கா இவ்வளவு பெரிய பிரச்சினை? ஒரு கல்லூரி தனியாரிடமிருந்து, அவர் நடத்தினால் என்ன? இதை ஏன் பிரமாதப் படுத்தவேண்டும்? அரசு எடுப்பதென்றால், கோவை, சிதம்பரம், போரூர் ஆகிய மூன்று சுயநிதி மருத்துவக் கல்லூரிகளையுமல்லவா எடுத்திட வேண்டும்?

இப்படிச் சிலர் தெரியாமலும் கேட்கிறார்கள் - சிலர் விஷயம் விபரமாகத் தெரிந்தும்கூட, விஷமமாகக் கேட்கிறார்கள் - ஒருசிலர் விலை போன காரணத்தால் கேட்கிறார்கள்!

ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி விவகாரமே தனி!

அந்தக் கல்லூரி அறக்கட்டளைக்கு 135 ஏக்கரா நிலம் சொந்தமாக இருந்தும், அங்கே அந்தக் கல்லூரியைக் கட்டிக்கொள்ளாமல், அரசு நிலத்தைக் கேட்டு விண்ணப்பித்து - விண்ணப்பம் பரிசீலனையில் இருக்கும்போதே, கல்லூரிக்கானக் கட்டிடங்களை எழுப்பிவிட்டது.

எம்.எம்.டி.ஏ. அனுமதி பெற்ற பிறகே கட்டிட வேலைகள் தொடங்கியிருக்க வேண்டும். அதைப் பற்றியே உடையாரின் அறக்கட்டளை கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே எம்.எம்.டி.ஏ.வின் ஒப்புதல் இல்லாமலே கட்டிடங்கள் முழுமை பெற்று விட்டன.

விதிமுறைகளுக்கு மாறாக, விதிவிலக்குகள் பெற்று நிலத்தை கையகப்படுத்திக் கொண்டவர்கள், அந்த நிலத்திற்கான விலையும் கொடுக்கவில்லை!

1985-ல் அறக்கட்டளை தொடங்கி, அப்போதே கல்லூரிப் பணிகளைத் தொடங்கி விட்டவர்கள் - 1988ஆம் ஆண்டு கவர்னர் ஆட்சியில்தான், அந்த 122 ஏக்கராவைத் தங்களுக்குக் குறைந்த விலையில் மிக மலிவாகக் கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பம் அனுப்புகிறார்கள்.

கவர்னர் ஆட்சி முடிந்து நமது கழக ஆட்சி வந்ததும் - அந்த அறக்கட்டளையின் விண்ணப்பங்களைப் பரிசீலித்ததோடு, அரசு நிலம் மட்டுமின்றி, தேசிய நெடுஞ்சாலையில் ஒரு பகுதியும் எப்படி முறைகேடாக அந்த அறக்கட்டளையால் ஆக்ரமிக்கப்பட்டுள்ளது என்பது கண்டறியப்பட்டது. அதுவரையில் எம்.எம்.டி.ஏ. ஒப்புதலும் பெறவில்லை என்பது விதி மீறல் என்று உணரப்பட்டது. எனவே, உடையாரின் அறக்கட்டளை செய்து கொண்ட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. சொந்த நிலம் 135 ஏக்காவை எதிர் காலத்தில் மிக மிக அதிகமான விலைக்கு விற்கலாம் என்ற திட்டமுடன் அரசு நிலத்தை ஆக்ரமித்துக் கொண்டு கல்லூரி கட்டி, மாணவர்களிடம் பல லட்ச ரூபாய் அனுமதிக் கட்டணம் பெறுவதையும் அந்த நிராகரிப்பு உத்தரவு சுட்டிக் காட்டியது.

அடுத்த சில நாட்களில் உடையார் அறக்கட்டளையே ஒரு தீர்மானம் நிறைவேற்றி, ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை அரசிடம் ஒப்படைப்பதாகக் கடிதம் அனுப்பியது.

நஷ்டஈட்டைக் கணக்கிட அதிகாரிகள் குழு ஒன்றை நியமித்து, அறக்கட்டளையின் தீர்மானத்திற்கேற்ப அரசு அந்தக் கல்லூரியை ஏற்றுக் கொண்டது.

இப்போதுள்ள பிரச்சினையே, அரசு ஒரு தனியார் கல்லூரியை கையகப்படுத்திக் கொண்டதா என்பது அல்ல!

அது கொள்கைப் பிரச்சினை - பொதுவாக எடுக்கப்பட வேண்டிய முடிவு!

ஆனால் இந்தக் கல்லூரியைப் பொறுத்த வரையில், அறங்காவலர்கள் கூடி, அவர்களாகவே தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு ஒப்படைத்த ஒன்றாகும்!

காரணம், அவர்கள் முறைகேடாகவும், விதிமுறைகளுக்கு மாறாகவும் மாநில அரசு நிலம், மத்திய அரசு நிலம், குறைத்து மதிப்பிட்டாலும் நூறு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட

மதிப்புள்ளவற்றை அபகரித்துக் கொண்டதை, கழக அரசு ஏற்க மறுத்துவிட்டது. எம்.எம்.டி.ஏ. ஒப்புதலைப் பெறாமலே கட்டிடங்களை கட்டியது தவறு எனச் சுட்டிக் காட்டியது! அதனால் அவர்கள், மலிவு விலையில் நிலங்களைத் தந்திடுக என எழுதிய மனு கழக அரசினால் ஏற்கப்படாதது!

எனவே இப்போதுள்ள பிரச்சினை, தனியார் கல்லூரியை அரசு எடுக்கலாமா என்பதல்ல - அரசு நடத்திக் கொண்டிருந்த தொழில் கல்லூரியைத் தனியாருக்குத் தாரை வார்க்கலாமா என்பதுதான்!

சுயநிதிக் கல்லூரிகளை - அதிலும் குறிப்பாகத் தொழில் கல்வி சுயநிதிக் கல்லூரிகளை அரசு மட்டுமே நடத்த வேண்டுமென்ற கொள்கை ரீதியான முடிவு எடுப்பது என்பது வேறு விவகாரம்! அது தேவையானதும்கூட!

ஆனால், இப்போது அரசிடம் இருந்ததை தனியாரிடம் ஒப்படைத்தது சரியா என்பதுதானே பிரச்சினை!

உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்து விட்டதே என்று சாக்குபோக்குச் சொல்லிக்கொண்டு சிலர் புறப்படுவர், புறப்பட்டனர். எனக்கும் உனக்கும் தெரியும்!

உயர்நீதி மன்றத்தில் அ.தி.மு.க. அரசு வலிவோடு வழக்காடியதா? இல்லை! இல்லவே இல்லை! அடிப்பதுபோல அடி! அழுவதுபோல் அழுகிறேன்! என்ற பாணியில்தான் வழக்கு நடத்தப்பட்டது. பேரம் முன்பே முடிந்துவிட்டது பெருந்தொகைக்கு! அதனால் அரசின் வாதத்தில் சாரமுமில்லை! காரமுமில்லை!

உயர்நீதி மன்ற தீர்ப்பை ஏற்காமல், இந்த அரசு முக்கியமில்லாத பல வழக்குகளில் உச்சநீதி மன்றம் செல்லவில்லையா? அப்படி இருக்கும் போது மிக முக்கியமான இந்த வழக்கில் உச்சநீதி மன்றம் செல்லாதது மட்டுமல்ல. அவசர அவசரமாக அமைச்சரவை கூட்டப் பெற்று, உடையார் அறக்கட்டளையிடம் கல்லூரியை ஒப்படைத்தது ஏன்?

இந்த ஊழலைக் கண்டிக்காமல் இருக்க முடியுமா?

மாணவர்களின் எதிர்காலம் பாதுகாக்கப்பட வேண்டாமா?

சாதாரண குடும்பத்தில் பிறந்த - தகுதியுள்ள நூற்றுக் கணக்கான ஏழை எளிய மாணவர்களின் இடத்தையல்லவா

லட்சக்கணக்கில் பணம் கொடுக்கும் வசதி படைத்த மாணவர்கள் பறித்துக்கொள்கிறார்கள்!

எனவே நாம் நடத்திக் கொண்டிருக்கிற இந்தப் போராட்டம், ஒரு கல்லூரிப் பிரச்சினை மட்டுமல்ல - இன்றைக்கு ஒரு கல்லூரிப் பிரச்சினையாக இருந்தாலும், எதிர்காலத்தில் ஏழை எளிய, சாதாரண சாமான்ய குடும்பத்து மாணவர்களுக்கும், நடுத்தர வர்க்கத்து மாணவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கும் முன் எச்சரிக்கையான பெரிய பிரச்சினையாகும்.

அதுமட்டுமல்ல! நூறு கோடி இருநூறு கோடி பண மதிப்புள்ள அரசின் நிலபுலன்களை இப்படித் தனியாருக்கு தாரை வார்த்து அவர்களுடன் கூட்டுக் கொள்ளையடிப்பதற்கு கோலேந்திகள் முற்படுவார்களேயானால், அரசு சொத்து என்பது மக்கள் சொத்துத்தான் என்ற உரிமை உணர்வுடன் எழுந்துள்ள மகத்தான பிரச்சினையாகும்.

இந்த இன்றியமையாத பிரச்சினைகளில் அக்கறைகாட்டி, மாபெரும் எழுச்சியை இந்த மாநில அரசுக்கு எதிராகக் காட்டியுள்ள உனக்கும், நமது தோழமைக் கட்சி செயல்வீரர்களுக்கும் என் இதயமார்ந்த பாராட்டுகளை மீண்டும் மீண்டும் வழங்குவதுடன் - இந்தப் போராட்டம் தொடரும் என்பதை நமது அனைத்துக் கட்சிக் கூட்டம் அறிவித்திருப்பதையும் சுட்டிக் காட்டுகிறேன்.

அலைந்து திரிந்து அறப்போர் மிகப்பெரும் வெற்றியை இந்த முதற்கட்டத்தில் பெற்றிட அரும்பணியாற்றிய அடலேறே! அன்பு உடன்பிறப்பே!

உனக்கும் உன் போன்ற உடன்பிறப்புகளுக்கும் களைப்பு தீர்க்கும் மாமருந்தாக மட்டுமல்ல! களிப்பு தரும் அமிழ்தமாகவும், இதோ முப்பெரும் விழா அழைப்பை முன்கூட்டியே அனுப்பி வைக்கிறேன்.

தந்தை பெரியார் பிறந்த நாளையும், பேரறிஞர் அண்ணா பிறந்த நாளையும், நமது கழகம் பிறந்த நாளையும் முப்பெரும் விழாவாகத் தமிழகத் தலைநகர் சென்னையில் ஆண்டுதோறும் கொண்டாடுகிறோம் எனினும்,

ஒரு முப்பெரும் விழாவை அண்ணா அறிவாலயம் அமைத்து, அதனைத் திறந்துவைத்துக் கொண்டாடினோம்!

இந்த ஆண்டு முப்பெரும் விழா, அண்ணா அறிவாலயத்துக்கு முன்பு அண்ணாசிலையைத் திறந்து, கொண்டாட இருக்கின்றோம். அண்ணா அறிவாலயத்தின் முகப்பு எழிலை மறைத்துக் கொண்டிருந்த பெட்ரோல் நிலையம் நமது இருபதாண்டு கால முயற்சிக்குப் பிறகு இடம் பெயர்ந்து சென்றது.

இப்போது அண்ணா அறிவாலயத்தின் முகப்பின் எழிலுக்கு எழில் சேர்ப்பது போல், அண்ணாவின் சிலை! அண்ணா பிறந்த நாளில் திறக்கப்படுகிறது.

அந்த இனிய விழா நீ இல்லாமலா? எழிலுக்கு எழில் சேர்க்கும் விழாவுக்கு மேலும் எழில் சேர்க்க என்னுயிரே! நீ இருக்க வேண்டாமா என்னருகில்?

எனவே, செப்டம்பர் 15 சென்னைக்கு வா! செப்டம்பர் 16 அன்றும் உனக்கு சென்னையில் பணி இருக்கிறது! என்ன பணியென்றுதான் உனக்குத் தெரியுமே! பேரணி, உடன்பிறப்பே! பேரணி!

இரண்டு நாட்கள் சேர்ந்தாற்போல் என்னுடன் இருக்கக் கூடாதா?

அன்புடன்,

மு. க.

(05-09-1992)

1942. ஏழு கடல் இங்கே சங்கமமாகட்டும்!

உடன்பிறப்பே,

“பூவிதழின் மென்மையினும் மென்மையான
புனித உள்ளம்-அன்பு உள்ளம்
அரவணைக்கும் அன்னை உள்ளம்
மலர் இதழ்கள் தமிழ் பேசும்
மா, பலா, வாழை எனும் முக்கனியும் தோற்றுவிடும்
விழிமலர்கள் வேலாகும், வாளாகும்
தீங்கொன்று தமிழ்த்தாய்க்கு வருகுதென்றால்!
கால்மலர்கள் பிணைத்து நிற்கும், தம்பியரை, கழகத்தை!
அம்மலரே எதிரிகளை மன்னித்து நெற்கதிர்போல்
தலை நாணச் செய்து விடும்!
மக்களாட்சி மலர் குலுங்க
சமதர்மப் பூ மணக்க
தாய்மொழி தமிழே வாழ்வுப் பொழிலாக
ஆடிவரும் தென்றல்,
நாடிவரும் பூ முடியே! புகழ் முடியே! உனைத்
தேடிவரும் வாழ்த்துக் குவியலிலே – தினம்
பாடிவரும் வண்டாக நான் பறப்பேன்
உனைக்காக்க எனைத் துறப்பேன்; என
ஒரு கோடித் தமிழ் இளைஞர்
பாடிநின்ற பாட்டுக்குப் பெருந்தலைவன்

பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள்!

எரிமலையாய்ச் சுடுதழலாய்
இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்கவைக்கும் இடி ஒலியாய்

இன உணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக் கட்டும் கொடு வாளாய்
இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதென்சுநகர் சாக்ரடீசாய்
ஏன் என்று கேட்பதிலே வைரநெஞ்ச வால்டேராய்
என்றைக்கும் வாழ்கின்ற எம் தந்தை

பெரியாரின் பிறந்தநாள்

ஒடுக்கப்பட்டோர் நல உரிமை காத்திடவே
உதயமான நீதிக் கட்சியினை – அறவே
அழிக்கப் பார்த்தோர் சதி ஒடுங்க
அய்யாவும் அண்ணாவும் தீட்டிய திட்டத்தாலே
ஆயிரங்காலத்துப் பயிராய் வளர்ந்து – இன்று
அரசியலில் ஒளிக்கதிராய்
தன்மானப் போர் முரசு கொட்டுகின்ற
தமிழ்நிலத்துக் காவலனாய் இருக்கின்ற

நமது கழகத்துக்குப் பிறந்த நாள்!

உடன்பிறப்பே, ஒவ்வொரு ஆண்டும் உன்னை இந்த முப்பெரும் விழாவுக்கு அழைப்பதுபோல் இப்போதும் அழைக்கின்றேன். எனினும், எனக்கு சற்று சங்கடம்தான்! ஓராண்டு காலத்துக்குள் உனக்கு எத்தனைமுறைதான் தொல்லை கொடுப்பது? எவ்வளவு சிரமம் - எவ்வளவு செலவு - சென்னை வந்து போவதென்றால் எளிதான காரியமா?

எல்லாவற்றையும் எண்ணித்தான் பார்க்கிறேன். ஆனால், அனைத்தையும் மீறி ஒரு நம்பிக்கை, ஆயிரம் துன்பங்கள் இருப்பினும், என் அழைப்பு மடல் கண்டால் அந்தத் துன்பங்களை மின்னல் வேகத்தில் மறந்து விட்டு, கன்னல் சுவைத்தது போல் என் கடிதத்தில் உள்ள எழுத்துகளையும், எழுத்துகளுக்கிடையே ஊற்றுப் பெருக்கெனப் பொழியும் உனக்கும் எனக்குமிடையிலான அன்புப் பெருக்கையும் நினைந்தவாறு, இல்லை, இல்லை, அந்தப் பாசப் பிணைப்பில் நனைந்தவாறு நீ பயணம் கிளம்பி விடுவாய் என்ற நம்பிக்கை தான் அது!

முப்பெரும் விழாவில் அண்ணாவின் சிலை செப்டம்பர் 15-ம் நாள் திறக்கப்படுகிறது.

எங்கள் ஊரில் உள்ள அண்ணாவின் சிலைகளுக்கு, மாலை அணிவிக்க வேண்டாமா? அண்ணா விழாவுக்கென ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்த வேண்டாமா?

ஆர்வத்துடன் கூடிய இந்தக் கேள்விகள், பல கிராமங்கள், நகரங்களில் உள்ள கழக அமைப்புகளின் உடன்பிறப்புகளால் கேட்கப்படுகின்றன!

அவரவர் ஊர்களில் உள்ள அண்ணா சிலைகளை அண்ணா பிறந்தநாளன்று, அப்படியே விட்டுவிட்டுச் சென்னைக்கு வருமாறு நான் கூறவில்லை.

முடிந்தவரையில் அதற்கான ஏற்பாடுகளை செய்துவிட்டு, அந்தப் பொறுப்புக்கு பல உடன்பிறப்புகள் அவரவர் ஊர்களில் 15-ந் தேதியன்று தங்கிட வேண்டியிருந்தாலும் - எஞ்சியுள்ளோர் அந்த நாளில் அண்ணா அறிவாலயம் முகப்பில் நிகழ இருக்கும் சிலைதிறப்பு விழாவுக்கு வர முயற்சிக்கலாம்.

பெரியார், அண்ணா, கழகம் பிறந்த நாட்களைப் போற்றும் முப்பெரும் விழாவில் விருதுகள் வழங்குவது - பாராட்டுகள் வழங்குவது - இவையன்னியில் அறிவாலய முகப்பிலேயே, அண்ணனின் சிலைதிறப்பு விழா நடைபெறுவது இந்த ஆண்டு முப்பெரும் விழாவின் சிறப்பு!

அதற்கு மறுநாள் செப்டம்பர் 16-ஆம் நாள் அண்ணா பிறந்த நாளுக்கு நான் என் ஊரிலே இருக்க வேண்டுமே என்று சாக்குப் போக்குச் சொல்லவே இடமில்லை. வழக்கமாக செப்டம்பர் 15-ல் தமது ஊர்களில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து விழா எடுப்போர், அன்று ஒருநாள் சொந்த ஊர்களில் இருக்க வேண்டியிருப்பினும் - மறுநாள் 16-ந் தேதி மதியத்திற்குள் சென்னை வந்து சேர்ந்திட வேண்டும்.

அன்று மாலை 4 மணிக்கு மாபெரும் கழகப் பேரணி!

பேரணி புறப்படுமிடம் சென்னை அண்ணா சாலையில் உள்ள அண்ணா அறிவாலயம்! முதல்நாள் திறந்து வைக்கப்பட்ட அண்ணனின் சிலையையும் - அந்தச் சிலையுடன் சேர்ந்து அறிவாலயம் கொண்டுள்ள கம்பீரத்தையும் கண்டு களித்துவிட்டு, நீயும், நானும், மற்ற உடன்பிறப்புகளும் பேரணியில் கலந்து கொள்ளலாம்.

பேரணி ஆளுநர் மாளிகை நோக்கிச் சென்று, மறைமலையடிகளார் பாலத்துக்கருகே அமைதியாகக் கலைந்து - வேளச்சேரி சாலையில் நடைபெறும் பொதுக்கூட்டத்துடன் இரண்டாம் நாள் நிகழ்ச்சி நிறைவுபெறும்.

முதல் நாள் அண்ணா அறிவாலய வளாகத்திற்குள்ளேயே, சிலை திறப்பு விழாவும் - விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியும் - விருது பெற்றோருக்கு வாழ்த்தும் - அவர்களின் நன்றி உரையும்!

அன்று காலை முதல் அறிவாலயத்தில் உள்ள திருமண மண்டபத்தில் கவியரங்கு, கருத்தரங்குகள் நடைபெறவும் ஏற்பாடுகள்!

மறுநாள் பேரணி! தமிழகத்தில் நடைபெறும் ஊழல் ஆட்சி குறித்து ஆதாரபூர்வமானக் குற்றச்சாட்டுகளை ஆளுநரிடம் வழங்கி, இன்றுள்ள விதிமுறைப்படி, குற்றச்சாட்டுகளின் பேரில் வழக்கு தொடர, ஆளுநரிடம் அனுமதி கோருவதற்காக நடைபெற இருக்கிற பேரணியாகும்!

மகாமகத்தில் தொடங்கி, ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியை தனியாருக்குத் தாரை வார்த்த ஊழல்கள், முறைகேடுகள் அடங்கிய பட்டியல்களுடன் ஆளுநர் மாளிகைக்குச் செல்லும் அந்தப் பேரணி, இதுவரையில் சென்னையில் நடைபெற்ற எல்லாப் பேரணிகளையும் ஒன்றாகச் சேர்த்தது போன்ற மகத்தான பேரணியாக அமைந்திட வேண்டும்.

எனவே முதல் நாள் நிகழ்ச்சிக்கு, மூன்றில் இரண்டு பேர் வீதம் உள்ளூர் விழாக்களில் கலந்துகொண்டு - ஒருவர் சென்னைக்கு வந்தால் போதுமானது!

ஆனால் இரண்டாம் நாள் பேரணிக்கு, தமிழகமே - தலைநகர் சென்னையில்தானோ என எண்ணும் அளவுக்கு, வியப்புடன் விழிகளை அகல விரித்திடும் அளவுக்கு - நீயும் மற்ற உடன்பிறப்புகளும் சென்னையில் வந்து குவிந்திட வேண்டும்.

இந்தக் கடிதத விபரப்படி பயணத்திற்கான ஏற்பாடுகளைத் தொடங்கிடுக!

செப். 16 பேரணி நிறைவுற்ற பிறகு, வேளச்சேரி சாலையில் நடைபெறும் கூட்டம் பொதுக்கூட்டம் என்றில்லாமல், மாநாடாகவே அமையும் என்று எனக்குத் தெரியும்!

அந்தக் கூட்டத்தில் நானும், பொதுச் செயலாளர் பேராசிரியரும், பொருளாளர் சாதிக்கும், துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சிலாரும், கழக முன்னணியினரும் கலந்து கொண்டு பேசுகிறோம்!

அந்தக் காட்சி எப்படியிருக்க வேண்டும் என்று நான் கற்பனை செய்து பார்க்கிறேன் தெரியுமா?

கடல் நடுவே, நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப் பட்ட கப்பலில் மேல்தளத்திலிருந்து நாங்கள் பேசுவது போல் இருக்க வேண்டும்!

தரையிலா கப்பல் மிதக்கும்? தலைகள் எல்லாம் அலைகளாகக் காணுகின்ற கடலாகத் திகழ வேண்டும் அந்தக் கூட்டம்!

நங்கூரம் நகர்த்தப்பட்டு கழகமெனும் நாவாய், தனது இலட்சியப் பயணத்தைத் தொடர செப்டம்பர் 16 பேரணி - அமைதிப் பேரணியாக, அறவழிப் பேரணியாக, எழுச்சிப் பேரணியாக, எங்கெங்குக் காணினும் இருவண்ணக் கொடிகளடா! ஏழு கடல் இங்கே சங்கமமடா! என்று பீடு நடை போடும் பேரணியாக அமைந்திட, என் அன்பு உடன்பிறப்பே, அடலேறு என ஆர்த்தெழுந்து வந்திடுக!

அன்புடன்,

மு. க.

(09-09-1992)

1943. பேரணியை மட்டுமா? இந்தப் பேரியக்கத்தைக் கூடத்தான்!

உடன்பிறப்பே,

என் கடிதங்களை முந்திக்கொண்டு உன் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. படிக்கிறேன். பரவசமடைகிறேன். பக்கத்து மாநிலங்களில் இருந்து மட்டுமல்ல, பல நாடுகள் தாண்டி, தொலைநாடுகளில் வாழ்கின்ற வெளிநாட்டுத் தமிழ் உடன்பிறப்புகள்கூட, மடல்கள் வரைந்து முப்பெரும் விழா குறித்த மகிழ்ச்சியையும் - மறுநாள் செப்டம்பர் 16-ஆம் நாள் நடக்க இருக்கிற தமிழர் எழுச்சிப் பேரணியைப் பற்றிய ஆர்வப் பெருக்கினையும் பொழிந்து கொண்டிருக்கிறார்கள்.

தஞ்சையிலிருந்து ஓர் ஆசிரியர் - அவரது துணைமயிலுங்கூட ஆசிரியர்தான். பெயர்களைக் கூற நான் விரும்பவில்லை - அவர்களின் பாதுகாப்புக்காக! இருவருமே எழுதியிருக்கிறார்கள் பேரணியில் குடும்பத்துடன் வந்து கலந்துகொள்கிறோமென்று! இப்படி எழுதாத ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள் எத்தனையோ பேர் பேரணியில் பீடு நடை போட வருகிறார்கள்!

பாட்டாளிகளின் பாசறையாம் தி.மு.க. எனப் பார் புகழ முரசு கொட்ட, ஒவ்வொரு தொழிற்சாலையிலிருந்தும் பல்லாயிரம் தொழிலாளர் அணிவகுக்க இருக்கின்றனர்!

விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், தங்களின் நம்பிக்கை நட்சத்திரம் தி.மு.க. தான் என்ற உணர்வுடன் பேரணியில் குவிகிறார்கள்!

எதிர்க்கட்சிகள் அனுதாபத்தையும், ஆதரவையும் அரவணைப்பையும் பெற்ற அறப்போர் நடத்தும் மாணவர்கள், அடக்குமுறை ஊழல் ஆட்சியில் அவலங்களால் கொதித்துப் போய் பேரணியில் திரண்டு வருகிறார்கள்!

மங்கை நடத்தும் ஆட்சியிலே மங்கையர் மானம் தில்லையிலும் - வாச்சாத்தியிலும் பறிபோனது மட்டுமல்ல! நாளும் பறிபோவது கண்டு பதறித் துடிக்கும் மகளிர் குலத்தின் வீராங்கனைகளின் அணிவகுப்பும் அந்தப் பேரணியில் உண்டு!

எப்பக்கம் வந்து புகுந்துவிடும்? இந்தி எத்தனை பட்டாளம் கூட்டி வரும்? எனக்கேட்டு; 'ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள்! நீ தேடி வந்த கோழையுள்ள நாடு இஃதல்லவே!' என எச்சரித்து 1938 முதல் நடைபெறும் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில் தமிழ் காக்க - தமிழர் நலன் காக்க, தாளமுத்து, நடராசனில் தொடங்கி, பல்லாயிரவர் சிறை புகுந்து, பலர் தீக்குளித்து மடிந்து, 1965-ல் மொழிப்புரட்சியே நடத்தி, 1967-ல் இந்தித்திணிப்புக்குத் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இடமில்லையென விரட்டி; அதற்கு மேலும் ஒளிந்து, மறைந்து மறைந்து தாக்கவரும் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்த பேராசிரியர் உள்ளிட்ட பத்து பேர் சட்டமன்ற உறுப்பினர்களின் பதவி பறிக்கப்பட்டு, தமிழ்மொழி மட்டுமல்ல - தமிழர் எங்கு வாழ்பவராயினும் அவர்கேற்பட்ட தீங்கினைக் களைய முன்னின்று ஐம்பதினாயிரம் பேர் மும்முறை சிறைபுகுந்து, இருபது பேர் தீக்குளித்து மாண்டு, பேராசிரியரும், நானும் சட்டமன்ற உறுப்பினர் பதவிகளைத் துறந்து, ஈழத்துத் தமிழர் நிலையான உரிமைகளுடன், நிம்மதியாக வாழ வேண்டுமென்று நினைத்ததற்காக ஆட்சியையுமே இழந்து, என்றைக்கும் எங்குமுள தமிழர்களின் பாதுகாப்பு அரணாகக் கழகம் இருக்கிறது எனக் கருதுகிற தமிழ் உணர்வாளர், தமிழ் ஆர்வலர், தமிழ் அறிஞர், தமிழ்ப் புலவர், தமிழ்க் கவிஞர் அனைவருமே இலக்கிய அணியின் வரிசையிலே நடைபோடுவர் பேரணியில்!

என் தம்பி வெற்றிகொண்டான் மீது மட்டும் எட்டு வழக்காம்! மற்றுமுள்ள தம்பிகள், தங்கைகள் பலர் மீது எத்தனை எத்தனை வழக்குகள்... சுப்புலட்சுமி ஜெகதீசன் - ஜெகதீசன் - நெல்லை ரவிச்சந்திரன் மீது தடா வழக்குகள் - நாள்தோறும் வழக்குகளின் முகத்திலேயே விழிக்கின்ற சூழலில், மாநிலத் தலைநகரிலும், மாவட்டங்களிலும் வழக்குப் பணி நிகழ்த்துகின்ற வழக்கறிஞர்களின் படை வரிசையையும் பேரணியில் காணலாம்!

எழுச்சியுற்ற இளைஞர்கள்தான், ஏறு நடை சிங்கங்கள்தான், இனி, எதிரிகள் கொழித்து விட்ட உமிகள்தான்! என எக்கால

முழக்கமிட்டுப் பட்டாளத்து நடை பயின்று பேரணியில் வருகின்ற இளைஞர் அணியின் காட்சி நம் கழகத்தின் மாட்சி!

தொண்டர்களின்றித் தலைவர்களா?

கட்சியா? இல்லை! இல்லை!

நிச்சயமாக இல்லை! கச்சை கட்டிக் கொள்கைக் கட்கமேந்திச் செயலாற்றும் வீரர்கள் - உழைக்கும் சிப்பாய்கள் - ஆம்; கழகத்தைக் காக்கும் கரங்கள்! அந்தத் தொண்டர் அணியினர் தொகை தொகையாய் வந்து, பேரணியின் இருமருங்கிலும் கைகோத்து நடந்தவாறு அமைதியை நிலை நாட்டிடுவர்!

மற்றும் தலைமைக் கழக தளபதிகள், மாவட்டத் தளகர்த்தர்கள், கழகத்தின் இதயமாம் பொதுக் குழுவின் உறுப்பினர்கள், இன முரசொலிக்கும் எழுச்சி மிகு பேச்சாளர்கள், இசைவாணர்கள், கலைக்குழுவினர்கள், இவர்கள் அனைவருடனும் பேராசிரியர், சாதிக், நாஞ்சிலார் - முன்னிலை ஏற்றிட, பேரணிக்குத் தலைமை ஏற்கிறேன் நான்!

உடன்பிறப்பே! என் நெஞ்சில் நீ இருப்பதால் - உன் நெஞ்சில் நான் இருப்பதால் - நீ வழங்கியுள்ள அன்புப் பரிசுதானே இந்தத் தலைமைப் பொறுப்பு!

நான் மட்டுமா தலைமை வகிக்கிறேன்? பேரணியில் வரும் உன்போன்ற ஒவ்வொருவரும் தாங்களே தலைமை வகித்து நடத்துவதாக, அத்துணைப் பொறுப்புணர்வுடன் பேரணியை நடத்திச் செல்ல வேண்டும்!

பேரணியை மட்டுமா? இந்தப் பேரியக்கத்தைக் கூடத்தான்!

அன்புடன்,

மு. க.

(10-09-1992)

1944. அழைக்கின்றார்; அழைக்கின்றார் அண்ணா!

உடன்பிறப்பே,

“அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா
அருமை நம் தாயகத்தைக் காத்திடத்தான் இன்றே!”

இசை முரசு நாகூர் அனிபாவின் முழக்கம்! இதோ அண்ணா அறிவாலயத்தின் முன்னால் பெருமிதத்துடன் காட்சியளிக்கும் பேரறிஞர் பெருந்தகையின் சிலையைக் கண்டவுடன் காதுகளில் கம்பீரமாக ஒலிப்பது போல் கேட்கிறதல்லவா?

செப்டம்பர் 15 மாலையில் திறக்கப்பட இருக்கும் நமது அண்ணனின் சிலையை, முடிந்தால் அன்றைய தினமே - அல்லது கட்டாயம் 16-ந் தேதியன்று நீ கண்டு களிக்கத்தான் போகிறாய்!

பொதிகைமலைத் தென்றலாய் - போதாகி மலர்கின்ற தமிழ் உணர்வின் புது மணமாய் - பதிகத்துப் பொருளாய் - பழந்தமிழர் புறப்பாட்டாய் - வான் உதித்த கதிர் போல வந்துதித்த அண்ணாவின் சிலை திறக்கப்பட்ட அறிவாலயத்திலிருந்துதானே அலைகடலாய் கழகப் பேரணி! ஆளுநர் மாளிகை நோக்கிப் புறப்பட்டு - மறைமலை அடிகளார் பாலம்வரையில் சென்று, ஆங்கே நின்று - அதன்பிறகு வேளச்சேரி சாலையில் நடக்க இருக்கும் பேரணி விளக்கப் பொதுக் கூட்டம் எனும் மாநாட்டு வெள்ளத்தில் சங்கமம் ஆக இருக்கிறது!

இருபது ஆண்டு காலமாக இருந்த பெட்ரோல் நிலையம் ஒன்றின், உயர்ந்த கட்டிடச் சுவர்களால் மறைக்கப்பட்டிருந்த அண்ணா அறிவாலயத்தின் அழகுமிகு தோற்றம் - அதன் முகப்புக்கு நேரே விரிந்து பரந்த வளாகத்தில் அண்ணாவின் சிலையையும் வைத்தபிறகு, எத்துணை எழிலார்ந்ததும், எடுப்பானதுமான தோற்றத்தைப் பெற்றுள்ளது என்பதை நேர் நின்று நீ பார்க்கும்போதுதானே உணர்ந்து பூரிப்படையப் போகிறாய்!

புல்லரிக்கிறது உடன்பிறப்பே எனக்கு! தி.மு.க. சட்டமன்றக் கட்சி அலுவலகத்திலிருந்து நம்மை கைது செய்து, காவல்துறை வண்டிகளில் ஏற்றி, அந்த அலுவலகத்தைப் பூட்டிவிட்ட பிறகு, நீ எரிமலைப் பெருமூச்சு விட்டாய்! எக்காளக் குரல் எழுப்பினாய்! எதிர்க்கட்சியாய் இருக்கிறோம் என்று எண்ணாதே தலைவா! எங்களால் இயன்ற காணிக்கையை ஒவ்வொருவரும், வெறும் வாய்ப்பேச்சு என்றில்லாமல் செயலில் காட்டும் ஆர்வத்துடன், துடிப்புடன் இன்றுமுதல் வழங்குகிறோம் - அண்ணா அறிவாலயம் எழட்டும் உடனடியாக! என எனக்கு ஆணையிட்டாய்!

அடடா! மாவட்டக் கழகச் செயலாளர்களாம் நம் கழகத்தின் மாணிக்கங்கள் - உழைப்பதற்கென்றே உருவெடுத்தாற்போன்ற ஒன்றியக் கழக வைரங்கள் - கிளைக் கழகத் தங்கங்கள் அணிகள், அமைப்புகளின் அயரா உழைப்பு நல்கும் அரிய முத்துக்கள் - அத்தனை பேரும் அளிக்கிறோம் நிதி; வா! என்று அழைத்த இடத்திற்கெல்லாம் ஓடினேன்! அரைக்காசு, ஒரு காசு என சேர்த்து, சிறு துளிகள் பெருவெள்ளமாகி - அதன் அடையாளமாக எழுந்து நிற்பதே அண்ணா அறிவாலயம்!

அறிவாலயத்தின் ஒவ்வொரு செங்கல்லும், என் உடன் பிறப்பே! உன் போன்றோர் வியர்வைத் துளி என்பதை மறப்பவனல்ல நான்! கசங்கிய நிலையில் நீ தரும் ஒவ்வொரு ரூபாய் கரன்சி நோட்டும், நீ உழைத்துக் களைத்துப் பெற்ற ஊதியத்தில் ஒரு பகுதி என்பதை அறியாத அளவுக்கு இதயமற்றவனல்ல நான்!

நம்மிடமிருக்கும் மாணிக்கம், வைரம், தங்கம், முத்து, பச்சை பவளமெல்லாம் மாவட்டங்களில், ஒன்றியங்களில், கிளைகளில், பகுதிகளில், வட்டங்களில், பல்வேறு அணிகளில் ஓய்வு பாராது ஓடியாடி உழைக்கும் உடன்பிறப்புகள் என்பதால்தான், என் ஆசை தீர அப்படி அழைக்கிறேன்!

அண்ணா அறிவாலயத்தில் கட்டிடங்கள் மட்டுமா! இதோ இப்போது அமைகிற சிலை கூட செங்கை அண்ணா வடக்கு மாவட்டச் செயலாளர் வேணுவின் நிதி உதவியால்தான் அமைகிறது!

கோவையில் ஒரு லாரி மோதியதால் சேதமாகி விட்ட அண்ணாசிலைக்குப் பதிலாக, வேறோர் சிலை வைத்திட வேண்டுமென்று மாவட்டச் செயலாளர் கண்ணப்பன்,

சென்னைக்கு வந்தார். அப்போதுதான் ஆர்.டி. சீத்தாபதி சொன்னார். மீஞ்சூரில் தீனதயாளன் என்னும் சிற்பி, சிலை செய்வதில் திறன் வாய்ந்தவர் என்று!

சிற்பி அழைக்கப்பட்டார். கோவைக்குச் சிலை செய்யும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதற்குப் பிறகு அறிவாலயத்திற்கு முன்னால் இருந்த பெட்ரோல் நிலையமும் அங்கிருந்து இடம் பெயர்ந்தது. நீண்டகாலக் கனவாக இருந்த அண்ணா சிலை வைக்கும் திட்டம் நிறைவேறும் காலம் முகிழ்த்துவிட்டது எனும் களிப்பு மிகுந்தது.

சிலை உருவாக்கப்பட்ட மீஞ்சூருக்கு நானும், தலைமைக் கழகச் செயலாளர் ஆற்காடு வீராசாமியும், முன்னாள் அமைச்சர் சுந்தரமும், ஆர்.டி. சீதாபதியும், செங்கை அண்ணா வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் வேணுவும் சென்றோம்.

சிலை மிக அழகாக அமைந்திருக்கிறது என்று வேணு சொன்னதுதான் தாமதம், அப்படியானால் அறிவாலயத்தில் வைக்கும் சிலையின் செலவை நீயே ஏற்றுக்கொள் என்றேன். வேணு மறுக்காதது மட்டுமல்ல. மாவட்டத்தின் சார்பில் உடனடியாக வசூலைத் தொடங்கி தேவையான தொகையை தி.மு.க. அறக்கட்டளையில் ஒப்படைத்துவிட்டார். இது குறித்து அறிவாலயக் கழக அலுவலகத்தில் நானும், பேராசிரியரும் மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்தபோது, அங்கு வந்திருந்த தர்மபுரி மாவட்டச் செயலாளர் முல்லைவேந்தன் சிலையில் பீடத்தை அழகு படுத்தும் கற்களும், கருங்கல் பலகையும் எங்கள் மாவட்டச் சார்பில் வழங்கப்படும் என்றார்.

அறிவாலயத்திற்கு முன்பு, இடிந்த சுவர்கள் மண்டிகிடந்த புல் பூண்டுகள் - கரடு முரடான மேடு பள்ளங்கள் - அனைத்தையும் செம்மைப் படுத்தி, சமன்படுத்தி, இரும்புக் கம்பிகளால் ஆன சுற்றடைப்பும், சிலையைச் சுற்றி நேர்த்தியான புல் தரையும் உருவாக்கித் தரும் பொறுப்பை டாக்டர் அருள்பிச்சை வலுவில் வந்து ஏற்றுக் கொண்டுள்ளார்.

இப்படிப் பலருடைய ஆர்வம், அக்கறை, உதவி இவற்றால் உருவான அண்ணா அறிவாலயத்திலிருந்து - அங்கு அமைந்திருக்கும் நமது அருமை அண்ணனின் சிலையிலிருந்து செப்டம்பர் 16 - ஆம் நாள் பேரணி புறப்படும்போது,

"அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா
அருமை நம் தாயகத்தைக் காத்திடத்தான் இன்றே!"

என்று வீறுமிக்கஅந்தக் குரல் நம் செவிகளில் சங்கநாதமாக ஒலிக்குமன்றோ?

சிலை திறப்பு விழா, விருதுகள் வழங்கும் விழா ஏற்பாடுகளைத் தலைமைக் கழகம் செய்கிறது.

மறுநாள் பேரணிக்கான ஏற்பாடுகளையும், பொதுக்கூட்டத்திற்கான மகத்தான ஏற்பாடுகளையும் தென் சென்னை மாவட்டக் கழகமும், வடசென்னை மாவட்டக் கழகமும் கவனிக்கின்றன. மாவட்டச் செயலாளர்கள் கிட்டுவும், பலராமனும் ஒருவருக்கொருவர் இதில் போட்டி போட்டுக் கொள்கிறார்கள்.

செங்கை அண்ணா மாவட்டத்தில் எல்லா திசைகளிலும் நுழைந்து வந்து சென்னையைத் தொடும் சாலைகள் அனைத்திலும், கழகக் கொடிகள், தோரணங்கள், வரவேற்பு வளைவுகள் எளிமையாகவும், எழுச்சியாகவும் அமைத்திட மாவட்டச் செயலாளர்கள் மதுராந்தகம் ஆறுமுகம், வேணு இருவரும் போட்டி போட்டுக்கொண்டு பணியாற்றுகிறார்கள்.

இத்தகைய போட்டிகள்தான் எனக்குப் பிடித்தமானவை ஆயிற்றே!

இந்த மாவட்டங்கள் மட்டும் பணியாற்றினால் பேரணிக்குப் போதுமா? எல்லா மாவட்டங்களிலுமுள்ள கழகத்தின் தளகர்த்தர்கள், செயல்வீரர்கள், கழக அணிகளின் பொறுப்பேற்றிருப்போர் ஆற்றிடும் பணியில், உன் போன்ற அனைத்து உடன்பிறப்புகளும் - செப்டம்பர் 16-ந் தேதியன்று எல்லா வழிகளும் சென்னைக்கே என்கிற அளவுக்கு, பேரணியில் வந்து கலந்திட வேண்டாமோ!

"அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா
அருமை மிகு அன்பு உடன்பிறப்பே வா! வா!"

அன்புடன்,

மு. க.

(11-09-1992)

1945. அழைக்கின்றேன் உன்னை; புறப்படுக சென்னை!

உடன்பிறப்பே,

செப்டம்பர் 16-ஆம் நாள் பேரணி நிறைவுற்று, சென்னை வேளச்சேரி சாலையில் நடைபெறும் பொதுக்கூட்டம் குறித்து இரண்டு நாட்களுக்கு முன்பு நான் எழுதிய கடிதத்தில்,

அந்தக் காட்சி எப்படியிருக்க வேண்டும் என்று நான் கற்பனை செய்து பார்க்கிறேன் தெரியுமா?

கடல் நடுவே நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்ட கப்பலின் மேல் தளத்திலிருந்து, நாங்கள் பேசுவது போல இருக்க வேண்டும்?

தரையிலா கப்பல் மிதக்கும்? தலைகள் எல்லாம் அலைகளாகக் காணுகின்ற கடலாகத் திகழ வேண்டும் அந்தக் கூட்டம்!

என்று என் ஆசையை வெளியிட்டிருந்தேன்.

சென்னை மாவட்டக் கழகத்தினர், திடீரென ஒரு வண்ணம் தீட்டிய வரைபடத்துடன் வந்தனர்.

அண்ணே! நீ எழுதிய கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளவாறு கப்பல் நிற்பது போலவே மேடை அமைக்கிறோம். இதோ அதுதான் இப்படி அமையப்போகும் மேடையின் மாதிரிச் சித்திரம்! இவர்தான் இதனை வரைந்து கொடுத்த ஓவியர்! செலவு அதிகமாகும் எனினும், நீ ஆசைப்பட்டு விட்டாய், அதனால் நிறைவேற்றிக் காட்டுகிறோம்.

என்று அவர்கள் சொன்னபோது என் நெஞ்சின் ஆழத்திலிருந்து பீறிட்டுக் கிளம்பிய ஆனந்தக் கண்ணீரை கன்னங்களில் வழிய விடாமல், கண்ணிமைகளால் பொத்திக்கொள்ள மிகவும் சிரமப்பட்டுவிட்டேன்.

கப்பலை மட்டும் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தி விட்டால் போதுமா? அதன் மீது கடல் அலைகளின் கரங்கள் தழுவினால்தானே - கப்பலைச் சூழக் கடல் இருந்தால்தானே! காண்பதற்கு அது கவின்மிகு காட்சியாக இருக்கும்;

அதற்குத்தான் உன்னை அழைக்கிறேன். நான் அழைத்து அந்த அழைப்பை நீ தட்டிக் கழித்ததாக வரலாறு கிடையாதே!

பேரணிக்கும், பொதுக்கூட்டத்திற்கும், மாநாட்டுக்கும் மட்டுமல்ல! சென்னைக்கு மாத்திரமல்ல! சிறைக் கோட்டங்களை நிரப்பிட வருக - என அழைத்த போதே துள்ளி வரும் மான் கூட்டமெனக் குதூகலத்துடனும், சிங்கக் கூட்டமென சிரித்த முகத்துடனும் வந்திடும் உடன்பிறப்பாயிற்றே நீ!

கழனியில் பயிர், நீ ஆற்ற வேண்டிய கடமைக்காகக் காத்திருக்கும்! கவலைப் பட மாட்டாய்! கழகத்தின் கட்டளையை ஏற்றுக் களம் புகுத்திருக்கிறாய்!

மணவிழா முடிந்து நாட்கள் சிலவே ஓடியிருக்கும் - தொடக்கத்தில் நாட்கள் நகராதே! ஓடித் தொலையுமே! அந்த நேரத்தில் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போர் என அழைப்பு வரும்! இலங்கைத் தமிழரைக் காத்திட மறியல் அறப்போர் என ஆணை பிறக்கும் - கடவுள் சொல்லைத் தட்ட மாட்டேன் என்பார் பக்தர். நீயோ கழகத்தின் சொல்லைத் தட்ட மாட்டேன் என்று வாயால் சொல்வது மட்டுமல்ல - அதனைச் செயலிலும் காட்டும் என் உயிரினும் மேலான உடன்பிறப்பு அல்லவா?

அதனால் உன் துணைமயில் முகம் வாடி நின்ற போதும், உனைப் பெற்றோர், உற்றார் தடுத்திட முயன்றபோதும் - என் ஆவி நிகர் கழகத்தின் ஆணையைத் தட்ட மாட்டேன்! ஆருயிரே! அன்புப் பெற்றோரே! அனுமதி அளிப்பீர்! எனக் கேட்டு அனுமதி கிடைப்பதற்கு முன்பே, அறப்போர் வீரர்களின் அணியில் சேர்ந்து சிறைபுகுந்திடும் சிறுத்தைப் புலியாக என் முன் தோன்றி, என் சிந்தை அணு ஒவ்வொன்றையும் சிலிர்த்திட வைத்திட்ட உடன்பிறப்பன்றோ நீ!

விருப்பமுள்ளவராம் வெறும் பதவியில் பல பேர் அவர் வேண்டாம்! நெருப்பின் பொறிகளே! நீங்கள்தான் தேவை! என நான் அழைத்த போதும்,

“உரிமைகள் வேண்டா மெனும்
வெறும் உபதேசம்
நரிகளின் ஊளை! நாட்டு
வெறி பிடித்த காளைகளே!
கிலிபிடித்த மனிதர்களைக்
காரி உமிழுங்கள்!
புலிவாழ்வின் உச்சியிலே
புதுமைதனைப் பொறித்திடுவோம்”

என நான் குரல் கொடுத்தபோதும், இதோ வந்தேன் என்று சுடர்முகம் காட்டித் திண்தோள் தட்டிப் பாசறைக்கு ஓடோடி வந்து, என் பணியென்ன? இக்கணமே கூறுக!

எனக் கேட்டு, செயலாற்றிய உடன்பிறப்புகள் இந்தக் கழகத்தில் லட்சோப லட்சம்பேர்!

“மண்ணெல்லாம் வீரம் துள்ளும் - மாதர்
கண்ணெலாம் கற்பு சொல்லும்;
விண்ணிலே ஏறுகின்ற
கொடி நிழல் பகையை வெல்லும்; நாட்டுப்
பண்ணெலாம் மானம் காட்டும்
எண்ணிலாத் திறம் முகிழ்க்கும் மறவர் கோட்டம்“

என இராவணனின் இலங்கைத் திருநாடு குறித்து அன்று நான் தீட்டிய கவிதை வரிகள், இன்று நம் கழகத்திற்கும் பொருந்துமன்றோ!

இந்த மறவர் கோட்டத்தின் மானமிகு தமிழர்கள், தமிழ்நிலம் ஏமாந்தது போதும், தாழ்ந்து கிடப்பது போதும், தலை குனிந்து நிற்பது போதும், நமக்குள் இனி சாதி மதபேதம் இல்லை, சண்டை சச்சரவு இல்லை, எல்லாரும் தமிழரே என்ற உணர்வு கொள்வோம் - என முழங்கிப் பேரணி வடிவு கொள்ளும் நாள்தான் செப்டம்பர் பதினாறு!

“ஆம்; செப்டம்பர் பதினாறு!
காவிரி ஆறு, பெண்ணையாறு, தாமிரபரணியாறு,

கங்கை ஆறு, கோதாவரி ஆறு என அத்தனை
ஆறுகளும் பல்வேறு பகுதிகளிலிருந்து”

கரைபுரண்டு ஆனால் கட்டுப்பாட்டுடன் பெருகி வந்து, சென்னைக் கடலுடன் கலந்திடும் நாள் செப்டம்பர் பதினாறு!

நான் கற்பனை செய்து எழுதிய கப்பலும் கடலும் என்ற காட்சியை, நான் ஆசைப்பட்டதை நிறைவேற்ற வேண்டுமென்று - செயல்படுத்தப் போகிறார்கள் அவ்வாறே மேடை அமைத்து!

கருவுற்றிருக்கும் பெண்ணுக்கு, அவள் ஆசைப்பட்டதையெல்லாம் வாங்கித்தர வேண்டும் - இல்லாவிட்டால், பிறக்கும் குழந்தையின் காதில் சீழ்வடியும் என்று கிராமத்தில் கிழங்கள் பேசக் கேட்டிருக்கிறேன்.

அதைப்போல் அல்லவா நான் ஆசைப்பட்டதை, என் உடன் பிறப்புகளாகிய உன் போன்றோர் நிறைவேற்றிடப்போகிறார்களாம்!

உண்மைதான் நான் கருவுற்றுத்தான் இருக்கிறேன். உன் அன்பை, பாசத்தை, கொள்கைப் பற்றை, தியாக உணர்வை, எதையும் தாங்கும் துணிவை - அத்தனையும் சேர்த்து இலட்சியக் குழந்தையாக, வயிற்றில் அல்ல என் வைராக்கிய மிக்க நெஞ்சத்தில் கருவுற்றிருக்கிறேன். எனவே என் ஆசைகளை நிறைவேற்று!

தமிழ் வாழ வேண்டும் வளர வேண்டும் என்ற ஆசை!

தமிழ்மண் தன்மானத்துடன் நிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற ஆசை!

அண்ணா வழியில் அயராது உழைப்போம் என்ற ஆசை!

அண்ணா பெயர் கூறிக் கொண்டு, தமிழகத்தைச் சுரண்டல் பூமியாக்கிவிட்டோரை அவனிக்கு அடையாளம் காட்ட வேண்டுமென்ற ஆசை!

“வெள்ளம் போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால் ஒருவரே - மற்று
உடலினால் பலராய்க் காண்பார்
கள்ளத்தால் நெருங்கொணாதே
என வையம் கலங்கக் கண்டு

உள்ளம் துள்ளும் நாள்
எந்த நாளோ?”

என்று புரட்சிக்கவிஞர் கொண்டிருந்த அதே ஆசை!

இந்த ஆசைகள் எல்லாம் நிறைவேறத்தான் அழைக்கின்றேன் உன்னை! புறப்படுக சென்னை!

அனபுடன்,

மு. க.

(12-09-1992)

1946. கழகப் பேரணி;
கட்டுப்பாடு காத்திடும் பேரணி!

உடன்பிறப்பே,

இன்னும் இடையே இரண்டு மூன்று நாட்கள்தான்!

தி.மு.கழகம் தேய்ந்து மறைந்துபோய்விட்டது என்று திரும்பத் திரும்பக் கீறல் விழுந்த கிராம போன் தட்டுப்போல பேசித் திரிபவர்களுக்கு, செப்டம்பர் முதல்நாள் நாமும், நமது தோழமைக் கட்சியினரும் எழுபத்தி ஐயாயிரத்துக்கு மேற்பட்டோர் சிறை சென்ற பிறகும் - அந்த பழைய பல்லவியை விட்டு வெளியே வர முடியவில்லை! என் செய்வது? கீறலுக்குள் ஊசி சிக்கிக் கொண்டுவிட்டது! அதனால்தான் தி.மு.க. செத்துத் தொலைந்து போய்விட்டதே! மக்கள் அந்தக் கட்சியைத் துரத்தி அடித்து விட்டார்களே! இனி அந்த இயக்கம் தலை யெடுக்க முடியுமா? என்று மேடையைச் சுற்றி நாற்பது ஐம்பது பேரை உட்கார வைத்துக்கொண்டு ஆலாபனம் செய்து கொண்டிருக்கிறார்கள் இன்று நேற்றல்ல என்றுமே நம் மீது எரிச்சல் கொண்டவர்கள்!

பொய் சொல்வதே அவர்தம் பொழுதுபோக்கு - அவதூறு கூறுவதே அவர்தம் காலைக்கடனும், மாலைக் கடனும் - என்பதை உலகுக்கு உணர்த்த, உடன்பிறப்பே! நமக்கோர் வாய்ப்பு கிடைத்துள்ளது - அதுதான் செப்டம்பர் 16-ஆம் நாள் சென்னைப் பேரணியும் பொதுக்கூட்டமும்!

இப்போதுகூடப் பாரேன்! எண்ணூருக்கருகில் வெட்டப்பட்டும், சுடப்பட்டும் ஏழெட்டுப் பேர் மடிந்தனர் - பிள்ளையார் சிலை ஊர்வலத்துக்கு எட்டாயிரம் போலீசார் - அதேபோன்ற பாதுகாப்பு மீலாத் நபி ஊர்வலத்துக்கும் தரப்படாத காரணத்தால், சென்னையில் சில பகுதிகளில் அமளி! தீவைப்பு! சூறை! கொலை! திருச்சி அரியலூர் சாலையில் கீழப்பழுவூரில் குடி தண்ணீரும், பஸ் வசதியும் கேட்டதற்காக அந்தக் கிராமத்து மக்கள் மீது துப்பாக்கிச்

சூடு! ஒருவர் பலி! நால்வர் கவலைக்கிடம்! இவை சமீபத்திய செய்திகள்....

இவற்றைப்போல இந்த ஒன்றரை ஆண்டுக்கால ஆட்சியில் எத்தனையோ கொலைகள்! கொள்ளைகள்! கோயில் களவுகள்! பெண் அய்.ஏ.எஸ். அதிகாரி மீதே திராவக வீச்சு! இவைகளில் குற்றவாளிகளைக் கூண்டிலேற்ற முடியாமல் தவிக்கும் காவல்துறை, எப்போதோ இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றதாகக் கூறப்பட்ட ஒரு புகாரின் மீது, சேலம் நகரச் செயலாளர் சுபாஷின் மீது கொலை முயற்சி வழக்கு தொடர்ந்து அவரைக் கைது செய்கிறது!

அனுதினமும் ஆந்திர மாநிலச் சாராயம் இங்கே வந்து கொண்டே இருக்கிறதே என்று கேட்டால், நான் தமிழ்நாட்டு சாராயத்தைத் தானே ஒழிப்பதாகச் சொன்னேன் என்று ஜெயலலிதா சமாளிக்கிறார்! அதேநேரம் கழக ஆட்சியில் முடிவு கட்டப்பட்ட சாராய சாம்ராஜ்ய மன்னர்கள்தான் இன்றைக்கு, இந்த ஆட்சியையே நடத்துகிறார்கள் என்கிற அளவுக்கு அவர்கள் கோட்டையிலே கும்மாளம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய ஏடுகளில் ஒரு செய்தி படித்துச் சிரித்தேன். செட்டிகுளம் என்ற இடத்தில் நில அளவு வரைவாளர் கலியபெருமாள் என்பவர், இருநூற்றி இருபத்தி ஐந்து ரூபாய் லஞ்சம் வாங்கினார் என்று கைது செய்யப்பட்டிருக்கிறார்.

நான் அடிக்கடி சொல்லும் ஒரு கதை உன் நினைவில் இருக்கும். அரசனும், அரசியும் மாளிகையின் முகப்பில் அமர்ந்து ஆரஞ்சுப் பழத்தை உரித்து ஒருவருக்கொருவர் ஊட்டிக் கொண்டே, வீதியில் பழத்தின் தோல்களை வீசி எறிந்தனர். அந்தத் தோலை எடுத்து ஒரு பரதேசி சுவைத்தான். அதுகண்ட அரசனுக்கும், அரசிக்கும் ஆத்திரம் பொங்கியது. நாங்கள் சாப்பிட்ட பழத்தின் தோலை ஒரு சாமன்யன் தொட்டு எடுத்துச் சுவைப்பதா? அவனைச் சவுக்கு கொண்டு அடியுங்கள்! என்று காவலர்களுக்குக் கட்டளையிட்டனர் அவர்கள்!

காவலர்கள் அந்தப் பரதேசியை மிகக் கடுமையாக அடித்தனர். மிதித்தனர். பரதேசியோ கலகலவென சிரித்துக்கொண்டே இருந்தான். மேலும் சினங்கொண்ட அரசன் ஏனடா சிரிக்கிறாய்? என்று எக்காளக் குரலில் கேட்டான்.

பரதேசி சிரித்து முடித்துவிட்டுப் பதில் சொன்னான்.

அரசே! பழத்தின் தோலை சாப்பிட்ட எனக்கு இத்தனை அடி உதைகள் என்றால், பழத்தின் சுளைகளைச் சாப்பிட்ட உங்களுக்கு எத்தனை அடி உதை கிடைக்க வேண்டுமென எண்ணினேன்! அதனால் சிரித்தேன்.

பரதேசியின் பதிலைக்கேட்டு, அரசன் அரசியைப் பார்த்தான். அரசி தலைகுனிந்து பூமியைப் பார்த்தாள்.

நில அளவு வரைவாளர் கலியபெருமாள் இன்று தமிழ் நிலம் ஆளுகின்றவரைப் பார்த்து அப்படித்தானே சிரிப்பார்!

ஏ, அப்பா! எண்ணத் தொலையாத அளவுக்கு எல்லையற்ற ஊழல்கள்!

இவற்றை மக்கள் மன்றத்தில் நாம் எடுத்து வைத்தபோது, வழக்கு போடத் துணிவு உண்டா? என்று கேட்டனர்.

அடி முதல் நுனிவரையில் இந்த ஆட்சியில் எல்லாமே முறைகேடுகள், ஊழல்கள் என்பதற்கு அடுக்கடுக்கான ஆதாரங்கள் இருக்கின்றன.

ஒரு முதல்வர் மீது வழக்குத் தொடருவதென்றால், ஆளுநரிடம் அனுமதி பெற வேண்டியிருக்கிறதே!

அந்த அனுமதி கிடைக்குமென்பதாக முதல்வரும், நிதியமைச்சரும் இருவருமே தங்கள் பேட்டியின் மூலமும், பேச்சின் மூலமும் சாடை காட்டியுள்ளனர்.

அந்த அனுமதியை ஆளுநரிடம் பெறுவதற்காகவே, குற்றச்சாட்டுப் பட்டியல்களுடன் செப்டம்பர் 16-ஆம் நாள் பேரணி நடைபெற இருக்கிறது.

வேடிக்கையும் வேதனையும் என்னவென்றால், ஆளுங்கட்சியின் ஊழல்களையும், அடக்குமுறைகளையும், அடாவடித்தனங்களையும், ஆடம்பரங்களையும் கண்டிக்க வேண்டிய எதிர்க்கட்சிப் பொறுப்பில் உள்ள காங்கிரஸ் கட்சி, அ.தி.மு.க. துணையின்றி தனியாக நின்று காங்கிரஸ் ஜெயிக்க முடியாது என்று மேடை போட்டுப் பேச வேண்டிய நிலைமையில் தனது பலவீனத்தைப் பறைசாற்றிக் கொண்டு - வீண்பழி காரணமாக தோற்றுப்போன நிலையிலும், எழுபத்தி

ஐந்து லட்சம் வாக்குகளைப் பெற்ற நமது அணியைப் பார்த்து, இனி இவர்களுக்கு வாழ்வே இல்லை என்று மரத்தடி ஜோசியம் சொல்லிக் கொண்டிருக்கிறது!

வாழப்பாடி குழுவினர்தான் இப்படி என்றால், மூப்பனார் அவர்களோ - கருணாநிதி, ஜெயலலிதா மீது ஊழல் பட்டியல் தயாரித்து கவனர்னரிடம் கொடுக்க முன்வந்துள்ளார். ஆனால், மனு கொடுப்பாரா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். மனு கொடுக்காமல் திடீரெனப் பின்வாங்கிக் கொள்ளலாம் என மதுரையில் பேட்டி அளித்ததாக தினமலர் செய்தி வெளியிட்டுள்ளது. அவர் அப்படிச் சொன்னாரோ, இல்லையோ அல்லது என்ன சொன்னாரோ, என்ன காரணத்திற்காகச் சொன்னாரோ - ஒன்று புரிகிறது நமக்கு! அப்படியொரு மனு கொடுக்கக் கூடாது என்று அவர் சொல்லவில்லை - எங்கே கொடுக்காமலிருந்து விடப் போகிறோமோ என்ற கவலையில் கூட, அவர் அப்படி பேட்டி அளித்திருக்கக் கூடும்.

உடன்பிறப்பே, நாங்கள் சொல்லும் குற்றச்சாட்டுகள் அவதூறு என்றால் எங்கள் மீது வழக்குப் போடுக என்று கூறினோம். அல்லது நாங்கள் உங்கள் மீது வழக்குப் போட்டு உங்கள் ஊழல்களையும், முறைகேடுகளையும் நிரூபிக்கிறோம் என்று சொன்னோம்.

அவ்வாறு முதல்வர் மீதும், தொடர்புடைய அமைச்சர்கள் மீதும், குற்றங்களைப் பட்டியலிட்டு ஆளுநரிடம் தந்து வழக்கு தொடர அனுமதி கேட்போம்!

அதற்குத்தான் செப்டம்பர் 16 பேரணியும் - தொடர்ந்து அன்று மாலை பேரணி விளக்கப் பொதுக்கூட்டமும்!

* பேரணி மிகவும் கட்டுப்பாட்டுடன் நடைபெற வேண்டும்.

* வெளியூர்களில் இருந்து பேரணிக்கு வருவோர், இரவுப் பயணங்களைத் தவிர்த்தும் - வாகனங்களை வேகமாக ஓட்டுவதைத் தவிர்த்தும் - வந்திடல் வேண்டும்.

* அண்ணா அறிவாலயத்திலிருந்து பேரணி புறப்படும் மறைமலை அடிகளார் பாலம் வரை செல்லும் போது, பேரணி இரு மருங்கிலும்

தொண்டடர்கள் பாதுகாப்புக்காகவும், அமைதி, ஒழுங்கு கட்டுப்பாடு காத்திடவும் மோட்டார் சைக்கிள்களில் வந்துகொண்டிருப்பார்கள். கழக முண்ணனிச் செயல்வீரர்கள் ஆட்டோ போன்ற வாகனங்களில் பேரணியின் இருமருங்கிலும் வந்துகொண்டே எந்தவொரு அசம்பாவித நிகழ்ச்சிக்கும் இடம் தராமல் கண்காணிப்புடன் பணியாற்றுவார்கள்.

* பேரணியில் வரும் ஒவ்வொரு உடன்பிறப்பும் பேரணி மிக்க ஒழுங்குடனும், கட்டுப்பாட்டுடன் நடைபெறுவதற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

* விஷமிகள் பேரணிக்குள் நுழையவோ அல்லது ஏற்கெனவே நுழைந்திருந்து சலசலப்பு காட்டவோ முற்பட்டால், அவர்களைக் காவல் துறையினரிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும்.

போதுமான அளவுக்குக் காவல் துறையினரின் பாதுகாப்பும் இருக்குமென நம்புகிறேன்!

உடன்பிறப்பே, இந்தக் கடிதத்தில் துண்டு துண்டாகப் பலவற்றை எழுதியுள்ளேன் - காரணம், பேரணி நாளைக்குள் இனியும் கடிதங்கள் எழுதிட நேரமிருக்காது என்பதால் எல்லாவற்றையும் உனக்குச் சொல்லிவிட வேண்டுமென்ற துடிப்புதான்!

உன் வருகையை எதிர்பார்த்து வழிமேல் விழிவைத்து நிற்கிறேன்.

கழக மாமணியே! என் அன்புக் கண்மணியே! உயிரினும்மேலான உடன்பிறப்பே! இத்தனை கடிதங்களுக்குப் பிறகும்! நீ இன்னும் பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யாமலா இருப்பாய்!

அன்புடன்,

மு. க.

(13-09-1992)

1947. விடைபெறும்போது கிடைத்திடும் முத்தம்!

உடன்பிறப்பே,

மங்கையொருத்தியும், அவளின் மணவாளனும் இரவு முழுதும் இன்ப உலகத்தில் இருந்திருப்பர். ஊடலில் தோற்றவரே வெற்றி பெற்றவர் ஆவர் என்ற உண்மையை ஊடல் முடிந்தபின் கூடி மகிழும்போது உணரலாம் என வாழ்க்கை இலக்கணத்தையும் இலக்கியமாக வடித்தளித்த வள்ளுவன் சொல்லை மெய்ப்பிப்பது போல மெய் தழுவிக் கிடந்திருப்பர்.

அவசரக்கார இரவு அதற்குள் விடிந்து விட்டதே என வசை பாடிக் கொண்டே, இராக் காலம் இன்னும் நீடிப்பதாக! என வேண்டிக் கொள்ளுகின்ற நிலையில் வள்ளுவன் சித்தரிக்கிற அந்தக் காட்சிக்கும், அந்த மங்கையும், மணவாளனுமே பாத்திரங்களாக விளங்கியிருப்பர்.

இப்படி இன்பத் தேனருவியில் மிதந்த பிறகும், காலம், தனது கடமையை ஒழுங்குற நிறைவேற்றி வைகறையாக மலரும் போது - மணவாளனும் தனது வீட்டுக் கடமையையோ அல்லது நாட்டு கடமையையோ நிறைவேற்றிட அந்த மாசற்ற மங்கை நல்லாளிடம் விடை பெற்றுக்கொண்டு வீட்டு வாயிற்புறம் தாண்டும்போது ஒருவருக்கொருவர் வழங்கிக் கொள்ளும் முத்தம் குறுகிய கால அளவே உடையதாயினும், அதன் இன்பமே தனிச்சுவை! இரவு முழுதும் நீண்ட நேரம் அனுபவித்த இன்பத்தைப் புறங்காணக் கூடிய அன்பு முத்தமாகும் அது!

என்ன அண்ணே! ஒரு மாதிரியாக கடிதம் போய்க் கொண்டிருக்கிறது என வியப்புடன் எனைப் பார்க்கிறாயா? ஆம்! நீ பார்ப்பதுதான் எனக்குப் புரிகிறதே! இன்பத்துப்பாலில் மூத்தத் தமிழ் மகன் வள்ளுவப் பெரியோன் சொல்லாதது ஒன்றையும் நான் சொல்லிவிட வில்லையே.

மகிழ்ச்சியான நாளல்லவோ இன்று! அதனால் உடலால், உயிரால் கலந்த மங்கையும் மணாளனும் மடலில் வந்தனர் அவ்வளவுதான்!

இருப்பினும் காரணமில்லாமல் எழுத மாட்டேன் அல்லவா? ஏதோ ஓர் உவமை காட்டுவதற்காகத்தான் நம் உடன்பிறப்பு எழுதியிருப்பான் என்று நீ நிச்சயம் செய்து கொண்டுதான் கடிதத்தை மேலே படிப்பாய் என்பதும் எனக்குத் தெரியும்.

செப்டம்பர் 15, 16 முப்பெரும் விழாவுக்கும், கழகம் நடத்தும் பேரணிக்கும் எத்தனை அழைப்புக் கடிதங்கள் எழுதியுள்ளேன். உனக்காக எழுதும் போதே இன்பம்! அதனை நீ படிக்கும் போது உனக்கு இன்பம்! நீ படித்திருப்பாய் என நினைத்து எனக்கு மேலும் இன்பம்! இத்துணை இன்பமூட்டும் கடிதங்கள் உன்னையும் என்னையும் இணைத்து, இரவு முடிந்து வைகறை வருவது போல - சென்னை மாநகரில் கழக விழா நிகழ்ச்சிகளும் தொடங்கிவிட்ட நேரத்தில் இதோ ஒரு கடிதம்! ஆம்! விடைபெறும் போது கிடைத்திடும் முத்தம் போல இனிப்பு மிகவும் நிறைந்த கடிதம்!

கல்பாக்கத்தில் வேம்பையன் என்ற பெயருடைய ஓர் உடன்பிறப்பு! பெயர்தான் அப்படியே தவிர, வேம்புக்குள்ள மருத்துவக் குணம்போல தமிழுக்கு, தமிழர்க்குத் தொண்டாற்றக் கூடிய இனிய உள்ளம் கொண்டவர். நான் அவரை நேரில் கண்ட நினைவு இல்லை. அவர் ஒரு கடிதம் எழுதியுள்ளார். இதோ அந்தக் கடிதம் நீயும் படிப்பதற்காக!

தமிழினத்தின் தலைவரே, தலைதாழ் வணக்கம். அண்ணா அறிவாலயம் முன்பு நம் அண்ணா சிலை திறக்கவுள்ள செய்தி அறிந்து சிந்தை மகிழ்ந்தேன்.

அதன் திறப்பு விழாக் கல்வெட்டில் திருவள்ளுவர் ஆண்டு இடம் பெறுவதற்கு ஆவன செய்ய அன்புடன் வேண்டுகிறேன்.

முரசொலி இதழைத் தொடர்ந்து வாங்கிப் படித்து வருகிற வாசகன் நான். அய்யாவின் தொண்டன். அண்ணாவின் தம்பி. தங்களின் உடன்பிறப்பு.

திருவள்ளுவர் ஆண்டு, திருவள்ளுவர் நாள் இரண்டையும் அரசு ஏற்று ஆணை பிறப்பித்து நடைமுறைப்படுத்தியவர் தாங்களே.

முரசொலி, தமிழன் நாளிதழ்களில் திருவள்ளுவர் ஆண்டு நாள் தோறும் வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்தவரும் தாங்களே!.

பேருந்துகளில், அரசு விடுதிகளில், அலுவலகங்களில் திருவள்ளுவர் படம், திருக்குறள் இவற்றுடன் வள்ளுவர் கோட்டம் மறக்க முடியுமா?

நமது கழக நிகழ்ச்சிகளின் கல்வெட்டுகளிலும் திருவள்ளுவர் ஆண்டு இடம் பெறல் வரலாற்றில் கழகத்திற்கு நிலைத்த புகழ் அமைய ஏதுவாகும்.

ஆகையால் நமது அண்ணா சிலை திறப்பு விழாவில், அந்தக் கல்வெட்டில் திருவள்ளுவர் ஆண்டு 2023 என்ற குறிப்பு இடம் பெற தேவையான முயற்சிகளைச் செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

பல அலுவல் நெருக்கடியில் இருக்கும் தங்களுக்கு, நினைவு படுத்தும் பொருட்டே இந்த மடல் எழுதுகின்றேன். நனிநன்றி.

அன்பு மறவாத,

வ. வேம்பையன்

தொல்காப்பியர் இல்லம்

அணுமின் நகர், கல்பாக்கம்.

உடன்பிறப்பே, வேம்பையனின் இந்தக் கடிதம் கண்டவுடன், தலைமைக் கழகப் பத்மநாபனிடம் சொல்லி, கல்வெட்டு தயாரிக்கப்படும் இடத்துக்கு தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் உசேனையும், அறிவாலயத்தில் பணியாற்றும் சிவபூஷணத்தையும் உடனே விரைந்து போகச் சொல்லி, அண்ணா சிலையின் கல்வெட்டில் திருவள்ளுவர் ஆண்டு 2023 என்ற குறிப்பை இணைத்திடுமாறு செய்யப்பட்டாகிவிட்டது!

அந்தக் கல்வெட்டை நேற்று இரவு - அண்ணா சிலையின் பீடத்தில் பொருத்தும் போது எனக்கு நினைவூட்டிக் கடிதம் எழுதிய அந்த உடன்பிறப்பின் நினைவு வந்தது.

ஓர் உடன் பிறப்பின் நியாயமான அன்புக் கட்டளையை நிறைவேற்றி விட்ட அந்த இன்பமான உணர்வில் இந்தக் கடிதம் எழுதினேன்.

அதனால்தான் உவமையை முன்னுரையாகக் குறிப்பிட்டேன். விடை பெற்றுக்கொள்ளும் போது கிடைத்திடும் முத்தம் போன்றது இந்தக் கடிதம் என்பது பொருத்தம்தானே!

அடடா! எங்கெல்லாம் - நமது உடன்பிறப்புகள் கழகத்தின் தமிழ் உணர்வு, இன உணர்வு, இனமான உணர்வு, கொள்கை உணர்வு பெற்று உலவிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது எவ்வளவு இதமாக இருக்கிறது இதயத்திற்கு!

அன்புடன்,

மு. க.

(15-09-1992)

1948. மனிதச் சங்கிலி அறப் போராட்டம் ஏன்?

உடன்பிறப்பே,

கடல் அலையாய் நீயும், லட்சக்கணக்கான உடன்பிறப்புகளும் குழுமியிருந்த பேரணி விளக்கப் பொதுக் கூட்டத்தில் நேருக்கு நேராக வைத்த விழி வாங்காமல் உன்னையே பார்த்துக் கொண்டு என் பாச உணர்வுகளை, வார்த்தைகளாக்கி பாராட்டும், வாழ்த்தும், நன்றியும் தெரிவித்த பிறகு, அதைவிட அதிகமாகக் கடிதத்தில் என்ன எழுத முடியும் என்பதற்காக மலைத்துப் போயுள்ளேன்.

ஏ, அப்பா! எங்கிருந்து வந்தது இந்தப் பட்டாளம்! அம்மவோ! இவர்களை இப்படி வெள்ளமாகப் பெருக விடாமல், வரிசைப்படுத்தி பத்துபேர், இருபது பேராக வரச்சொல்லி, தலைவர்கள் ஒரு மேடையில் நின்று அந்தப் பேரணி ஊர்வலத்தைப் பார்த்திருந்தால், எத்தனை மணி நேரம் ஆகியிருக்கும் என்று எண்ணி எண்ணி இன்பப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறேன்.

நாலு மணிக்கு, அதாவது குறித்த நேரத்தில், அண்ணா அறிவாலயத்திற்கெதிரே பேரணிப் பெருவெள்ளம் அணையுடைப்பது போல் கிளம்பி விட்டது என்றாலும் கூட, அந்தப் பெரிய சாலையின் இரு மருங்கிலும் அந்த வெள்ளம் கரைபுரண்டாலும் கூட, ஆளுநர் அவர்களைச் சரியாக 5.30 மணிக்கு சந்திக்க நேரம் தரப்பட்டிருந்ததால் பேரணியில் கலந்துகொண்ட மகளிர் அணியின் தொண்டர்கள் உடையும், அந்த அணியிலேயே இளம் மகளிர் அணிக்கென தயாரிக்கப்பட்டிருந்த புதுமையான உடையும் - அவர்கள் நடையில் காட்டிய மிடுக்கும், அடடா! அந்தத் தாய்களும், தங்கைகளும் வாழ்க! வாழ்க! என உள்ளம் வாழ்த்திக்கொண்டே இருந்தது!

ஜீப்பில் வந்த எங்களைப் பார்த்து நீயும் உன்போன்ற உடன்பிறப்புகளும் கையசைத்து வாழ்த்தொலி முழங்கிய போது, தலைவா! நீ அழைத்தவாறு வந்துவிட்டேன் பார்! என என்னைப் பார்த்துக் கம்பீரமாகச் சொன்னது போல இருந்தது!

கூட்டத்தில் சொன்னேனே நினைவிருக்கும் உனக்கு! அந்தப் பெரும் வெள்ளத்தில் ஒருசிலர் முகத்தை நான் பார்க்கவில்லை. எனினும், வீட்டுக்குப் போனதும் நிலைகண்ணாடியைப் பார்ப்பேன். அதில் என் முகத்தில் உன் முகம் தெரியும் என்று நான் சொன்னபோது, நீ இளஞ்சிங்கமாய் எழுந்து குதித்தாய்! புலிப் போத்தாய் ஆரவாரம் செய்து மகிழ்ந்தாய்! என் குரலோ, என்னையும் மீறித் தழுதழுத்தது!

என் நெஞ்சில் குடியிருக்கும் உடன்பிறப்புத் தங்கமே! நீ இருக்கும் இந்தக் கழகத்தின் கதைதான், ஆம், உன்னைப்போல லட்சோப லட்சம் உடன்பிறப்புகள் எதையும் தாங்கத் தயாராக இருக்கும் இந்தக் கழகத்தின் கதை தான் முடிந்து விட்டதாம்! மாற்றார் சொல்வது மட்டுமல்ல! மாண்புமிகுக்களாகிவிட்டவர்களும் சொல்கிறார்கள்! தாங்களும் இருந்து வளர்த்த கழகம் என்பதையும் மறந்துவிட்டு, தங்களை வளர்த்த கழகம் என்பதையும் மறந்து விட்டு, இந்தக் கழகத்தின் கதை முடிந்து விட்டது என்கிறார்கள்! ஆயிரம் காலத்துப் பயிர் என அறிஞர் அண்ணா அவர்களால் கூறப்பட்ட இந்தக் கழகத்தின் கதை முடிந்து விட்டது என எங்கேயோ வீசப்படும் எலும்புத் துண்டுகளுக்காகப் பேசுகின்றனர்!

திராவிடர் கழகத்துக்கும், தி.மு.கழகத்துக்குமிடையே கருத்து மோதல்கள் ஏற்பட்ட கால கட்டங்களிலும் சரி! எப்போதும் சரி! இப்போதும் சரி! நமது தாய்க் கழகமாம் இந்த அமைப்பின் கதை முடிய வேண்டுமென்ற நெருப்பு நினைப்பை நாம் நெஞ்சில் கொண்டதுமில்லை. அதன் கதையை முடிப்பேன் என எவர் கிளம்பினும், அவர்களை விட்டதுமில்லை! காரணம் சமுதாயப் புரட்சிக்கு வித்திட்ட பெரியார் உருவாக்கிய கழகம் என்பதால்! தாய்க் கழகம் என்பதால்!

அதே போல் அரசியல் எழுச்சிக்கும், விழிப்பு உணர்ச்சிக்கும் வித்திட்டு அறிஞர் அண்ணா உருவாக்கிய இந்தக் கழகத்தை, அந்த அண்ணாவின் பெயரை உச்சரித்துக் கொண்டே அழிப்போம்! ஒழிப்போம்! அழித்தே விட்டோம்! ஒழித்தே விட்டோம்! கதை முடிந்தே விட்டது என்றெல்லாம் அலறுவோர், கதறுவோர் நிலை கண்டு நான் கழிவிரக்கம் கொள்ளுகிறேன். காரியம் ஆவதற்காக யார் காலையோ பிடிக்கிறார்கள் என்று!

ஆனால் நீயோ எரிமலையாகிறாய்! கனல் உன் கண்களில்! தணல் மயமாகிறது உன் நெஞ்சம்!

என் செய்வது? தமிழ் நாட்டில் பெரியாரும், அண்ணாவும், அண்ணன் அழகிரி போன்றவர்களும், புரட்சிக் கவிஞரும் வளர்த்த திராவிட இயக்கத்திற்கு உரிமை கொண்டாடவும், அந்த லட்சிய தீபம் தன் கையில்தான் இருக்கிறது என உரைத்திடவும், ஒரு பரிணாம வளர்ச்சிப் பாவைக்கு அன்றோ இன்று தைரியம் பிறந்திருக்கிறது!

அதனால்தானே, அன்று இந்தி ஆதிக்கத்தை எதிர்த்தமைக்காக எம்.ஜி.ஆர். காலத்தில் பேராசிரியர் உள்ளிட்ட பத்துக் கழக சட்டமன்ற உறுப்பினர்களின் பதவி பறிப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அருகிலிருந்து பழகியவரும், அண்ணாவின் தம்பியுமான அன்பழகனும் நாமும் ஒரே கொள்கையில் ஊறித் திளைத்தத்தவர்களாயிற்றே என்பதையும் மறந்து, அவையை விட்டு அறவே வெளியேற்றிய நாவலர் நெடுஞ்செழியன் 1943-ல் முரசொலியின் ஆண்டு விழாவில் ஆரூர் சென்று வாழ்த்திப் பேசியதை மறந்து விட்டு, அதே முரசொலியை சட்டசபைக் கூண்டில் ஏற்ற வேண்டும் என்ற தீர்மானத்தையும் முன்மொழிந்துள்ளார்!

அவர் முன்மொழிந்த தீர்மானத்தை நிறைவேற்றும் நாள்தான், செப்டம்பர் 21 முரசொலி ஆசிரியர் செல்வம் சட்டசபைக் கூண்டில் நிறுத்தப்படும் நாள்!

செப்டம்பர், வரலாற்றுப் பெருமைக்குரிய மாதங்களில் ஒன்றுதான்! பெரியார் பிறந்த மாதம், அண்ணா பிறந்த மாதம், கழகம் பிறந்த மாதம், முரசொலியின் பொன்விழா ஆண்டில் அது சட்டசபைக் கூண்டில் ஏற்றப்படும் மாதம்.

உச்சநீதி மன்றத்தில் முரசொலிக்கு மட்டும் இடைக் காலத் தடை கிடைக்கவில்லை! வீக்லி நிருபர் சுனிலும், கோவை மாலைமுரசு ஆசிரியர் சுந்தரும் உச்சநீதி மன்றத்தில் இடைக் காலத் தடை ஆணை பெற்றனர். சுப்ரீம் கோர்ட் ஆணை என்னைக் கட்டுப்படுத்தாது! சுந்தர், சுனில் கைது செய்யப்பட்டுக் கூண்டில் ஏற்றப்படுவர்! என்று சபாநாயகர் உறுதி தொனித்திட சங்கநாதம் செய்தார்! அந்த உறுதி என்ன ஆயிற்றோ தெரியவில்லை! சுப்ரீம் கோர்ட் ஆணைக்குக் கட்டுப்பட்டு விட்டார் என்பதைச் சொல்லாமற் சொல்வது போல், சுந்தரும் சுனிலும் கைது செய்யப்படவுமில்லை - கூண்டிலேற்றப்படவுமில்லை!

எனினும் அந்த அரிய வாய்ப்பை, ஐம்பது ஆண்டுக் காலமாக திராவிட இயக்க முரசமாக இருந்து வரும், முரசொலி பெறுகிறது! செப். 21-ல் சட்டசபைக் கூண்டில் ஏறுகிறது!

எனக்கு இது ஒரு வகையில் மகிழ்ச்சிதான்! சென்று வா மகனே! செரு முனை நோக்கி எனக் கூறிய புறநானூற்றுத் தாய் அடைந்திட்ட மகிழ்ச்சி போல!

ஆனால், பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்படுகிறேதே எனும் வேதனையை வெளிப்படுத்தக் கழகம் அந்த நாளை கறுப்பு நாளாகக் கடைப்பிடிக்க வேண்டுமென பொதுச் செயலாளர் பேராசிரியர் அறிவித்துள்ளார்.

செப். 1 மறியல் அறப்போரில் - செப். 16-ல் பேரணியில் - காட்டிய கட்டுப்பாட்டு உணர்வுடன் செப். 21 கறுப்பு நாள் கடைப்பிடிக்க நகர்தோறும் மனிதச் சங்கிலிப் போராட்டத்தை, போக்குவரத்துக்கு இடையூறின்றி, கறுப்புச் சின்னமோ, உடையோ அணிந்து, அமைதியாக நடத்திடுவாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!

அன்புடன்,

மு. க.

(20-09-1992)

1949. கூண்டு கண்டேன்; குதூகலம் கொண்டேன்!

உடன்பிறப்பே,

"சிங்கத்தை நரியடிக்கும் திறமில்லை யென்றாலும்
பொங்குற்றே சிங்கம் மடிந்ததென்றால் நரிமனம்
பூரிக்காதா?"

இப்படிப் புரட்சிக்கவிஞர் ஏக்கமுற்று இதயம் குமுறிக் கண்ணீர் சிந்தினார்.

தந்தை பெரியார் தவித்துப் போனார். கண்ணீர்க் கடலானார்.

அறிஞர் அண்ணா எழுத்திலே அவரது இதயத்திலிருந்து கசிந்த இரத்தக் கண்ணீரைக் கண்டோம்.

"கோமானே! யாம் அழுதழுது வடித்த கண்ணீர்
ஓமான் கடல் ஆயிரத்தை வெற்றி கொள்ளும்"

என நானும் இரங்கல் கவிதை வரிகளைத் தீட்டினேன்.

இந்தியாவின் ஆலோசகராக இங்கிலாந்து அரசின் வேண்டுகோளின்பேரில், இலண்டன் மாநகருக்குச் செல்ல அனிபால் எனும் விமானம் ஏறி, நீதிக்கட்சியின் தன்னேரில்லாத் தளபதி சர். ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்கள் பயணம் செய்தபோது, அவர் அமர்ந்திருந்த அந்த விமானம் ஓமான் கடலில் வீழ்ந்து, தமிழர்களின் செல்வத்தை - திராவிடர்களின் செல்வத்தை நம்மிடமிருந்து பிரித்துத் தொலைத்தது.

1940-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் நாள்தான் இந்தத் தாங்க முடியாத சோகம் தமிழ் மக்களை நிலைகுலையச் செய்தது. காணமற் போனதாகச் சொல்லப்பட்ட அனிபால் விமானம், எங்கேயாவது ஓரிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுப் பன்னீர்செல்வம் பத்திரமாக உயிரோடிருக்கிறார் எனச் செய்தி வராதா என்று,

வானொலிப் பெட்டிகள் இருக்குமிடங்களில் எல்லாம் செய்தியை எதிர்பார்த்து திரள் திரளாகக் காத்திருந்தவர்களில் நானும் ஒருவன்! தமிழ் நாட்டுக்குச் செல்வம் மட்டும் அல்லவே அவர்! எங்கள் திருவாரூருக்கு அடுத்த பெரும்பண்ணையூரில் பிறந்து வாழ்ந்த செல்வமும் ஆயிற்றே!

இலண்டன் பயணத்தை முன்னிட்டு, அவருக்கு ஆரூரில் தேநீர் விருந்தளித்து, அண்ணன் அழகிரிசாமி அவரைப் பாராட்டி வழியனுப்பி வைத்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு களிப்புற்ற இளைஞர்களில் நானும் ஒருவனாயிற்றே!

1940 மார்ச்சில் பன்னீர்செல்வம் மறைந்த சோக நிழல் இந்த மண்ணில் படிந்திருக்கும் போதுதான் அதே 1940 ஏப்ரல் திங்களில் என் சகோதரிக்கு ஒரு மகன் பிறந்தான். மறைந்தாலும், மனத்தில் நிறைந்திருக்கும் பன்னீர்செல்வத்தின் நினைவாக அவனுக்கு நான் பன்னீர்செல்வம் என்று பெயரிட்டேன்.

அந்தப் பன்னீர்செல்வம்தான் கடந்த 21-ஆம் நாள் சட்டப் பேரவைக் கூண்டிலே நிறுத்தப்பட்ட முரசொலி ஆசிரியர் செல்வம்!

செல்வம் பிறந்தபோதே, என் தாயார் என்னைப் பார்த்து, உனக்கு ஒரு பெண் பிறந்தால் அதற்குச் செல்வி என பெயரிட்டு செல்வத்துக்கே துணைவியாக்க வேண்டுமென்று அன்புக் கட்டளை பிறப்பித்தார்கள். பாட்டியின் ஆசை நிறைவேறியது. ஆனால் அதை, அந்த அன்புப் பாட்டியிருந்து பார்க்கவில்லை.

அண்ணா தலைமையில், தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி. காயிதே மில்லத் ஆகியோர் ஒரே மேடையில் தோன்றி மணமக்களை வாழ்த்தினர்.

அந்த மணக்கோலத்தில் செல்வத்தை நான் பார்த்தபோதுகூட, எனக்கு அத்தனை மகிழ்ச்சியில்லை!

புதுக்கோட்டை, திருச்சி நிகழ்ச்சிகளை முடித்துவிட்டுத் திரும்பும்போது தாம்பரம் ரயிலடியில் வாங்கிப் படித்த ஆங்கிலம், தமிழ் நாளேடுகள் அத்தனையிலும் செல்வம் சட்டபேரவைக் கூண்டில் சிரிப்பு தவழ நின்று கொண்டிருக்கும் படம் வெளிவந்துள்ளதைப் பார்த்தபோதுதான் எனக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

வாடிய முகத்துடன் அந்தக் கூண்டுக்குள் செல்வம் நின்றிருந்தால், என்னகம் வாடிப் போயிருக்கும்! அந்தச் செல்வத்தின் பெயரை இந்தச் செல்வத்துக்கு எத்துணைப் பொருத்தமாக அப்போதே வைத்தேன் என்று என்னையே நான் பாராட்டிக்கொண்டேன். படத்தில் செல்வத்தின் முகத்தில் அரும்பி நிற்கும் புன்முறுவல் கண்டு!

படத்தை அரசாங்க செய்தித் துறையே எடுத்து, அந்தத் துறையே அல்லவா எல்லா ஏடுகளுக்கும் அனுப்பி வைத்திருக்கிறது!

இது, மேலும் பூரிப்பு வழங்கும் தகவல் அல்லவா! உடன்பிறப்பே, அந்தப் படத்தை உற்றுப் பார்த்தேன். செல்வம் நிற்கும் கூண்டுக்கு அருகே அறிஞர் அண்ணாவின் படம், நான் முதல்வராக இருந்தபோது பிரதமர் அன்னை இந்திராகாந்தியை அழைத்து திறந்து வைக்கப்பட்ட படம்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற எழுத்துகள் ஒளி விடுகின்றன பார்த்தாயா!

உச்சநீதிமன்ற ஆணையை மதிக்கமாட்டேன் என்று ஆரவாரம் செய்யாமல், உச்சநீதி மன்றத் தீர்ப்பை ஏற்று - செல்வம், அந்தக் கூண்டுக்குள் நிற்கும்போது, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் அண்ணாவின் மொழிகள் செல்வத்தின் செயலைப் பாராட்டுவது போலவே அமைந்து ஒளிவிடுகின்றன அல்லவா?

அண்ணா செல்வத்தை - மிகச் செல்லமாக செல்வா என்றுதான் அன்பொழுக அழைத்து, முரசொலிக்குத் தேவையான அறிவுரைகளைச் சொல்லுவார்.

அடையாறு மருத்துவமனையில், அண்ணாவுக்கு இறுதியாக ஓர் அறுவை சிகிச்சை அவசியம் தேவை என முடிவு செய்யப்பட்டபோது கூட, அண்ணா அவர்கள் அந்த உடல் நலிவுடனும், செல்வா எங்கே? என அழைத்து, செல்வம் அவர் அருகில் சென்றதும், செல்வா! வீட்டில் உள்ள பிள்ளைகளை அழைத்துவா! நான் பார்க்க வேண்டும் என்று கூறியதை எப்படி மறக்க முடியும்.

அந்த பாசமுள்ள பெருந்தலைவனின் படத்தருகே கூண்டு! அதிலே செல்வம்! மன்றத்தில் ஜனநாயகம் போற்றிய பல தலைவர்களின் படங்கள்!

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்"

எனக் குறள் கூறிய வள்ளுவரின் படமும் கூட!

செல்வத்தை இன்று ஆசிரியராகப் பெற்றுள்ள முரசொலிக்கு வயது ஐம்பது!

இந்த முரசொலி 1942-ல் தொடங்கப் பெற்று 1943-ல் முதல் ஆண்டுவிழா கொண்டாடிய போது வருகை தந்து வாழ்த்தியவர்கள் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், பேராசிரியர் அன்பழகனார் அவர்களும்!

இன்று அந்த முரசொலியைக் கூண்டிலேற்றியது சரியென்று வாதாடுகிறார், பேரவையில் நாவலர் நெடுஞ்செழியன்!

இது பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் பழி வாங்கும் செயல் என்று கண்டித்துக் கறுப்புச் சட்டை அணிந்து திருச்சி வீதியிலே மனிதச் சங்கிலி அறப்போருக்குத் தலைமையேற்று கொளுத்தும் வெயிலில் நிற்கிறார் பேராசிரியர் அவர்கள்!

என்ன அரசியலின் விசித்திரம்!

எல்லோரையும் தாங்கிட ஒரு தாயின் வயிறு போதாத காரணத்தால், தனித்தனித் தாய்களின் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் நாம்!

எனப் பெருமையுடன் கூறிப் பெருமிதம் கொண்ட அண்ணா அவர்கள், இன்றில்லாதது அவர் வரையில் அவருக்குக் கிடைத்த பேறுதானே!

இல்லையா உடன்பிறப்பே! எப்படியோ கூண்டு கண்டேன்! நான் குதூகலம் கொண்டேன்!

அன்புடன்,

மு. க.

(23-09-1992)

1950. அதாகப்பட்டது, அந்தக் காலத்திலே ஒரு ராஜா!

உடன்பிறப்பே,

கடிதவாயிலாகவே ஓரங்க நாடகங்கள் அவ்வப்போது பல நேரங்களில் எழுதியிருக்கிறேன் அல்லவா! அதுபோல இன்று ஒரு நாடகக் காட்சி காண்போமா? அதாகப்பட்டது, அந்தக் காலத்திலே ஒரு ராஜா! என்பது நாடகத்தின் பெயர்!

டாண்! டாண்! டாண்!

அரங்கின் திரைமறைவில் ஒளிந்திருந்த மணி ஓங்கி ஒலிக்கிறது. திரை விலகுகிறது. கொலுமண்டபம் காட்சியாகிறது. சிம்மாசனம் காலியாக இருக்கிறது. அதன் இருமருங்கிலும், இருபது படிகளுக்குக் கீழே போடப்பட்டுள்ள முக்காலிகளில் சுமார் நூறு பேர் தலையில்லாத மனிதர்களாக உட்கார்ந்திருக்கிறார்கள்.

பராக்! பராக்!

என்ற காவலனின் பரபரப்பான குரல் கேட்கிறது. அந்தக் குரல் கேட்டவுடன், ஒரு பத்துப் பேர் தலையுள்ள மனிதர்கள் அவசரமாக உள்ளே நுழைந்து அவர்களுக்குரிய முக்காலிகளில் உட்காருகிறார்கள்.

பராக்! பராக்!

என்ற குரலைத் தொடர்ந்து இரண்டு பாதங்களைப் போன்ற சிற்பம் செதுக்கப்பட்ட ஒரு பித்தளைக் கிரீடத்தை தலையில் சுமந்தவாறு - மிகுந்த கம்பீரமான பார்வையுடன், மிடுக்காக நடந்து வந்த - ராஜாதி ராஜர் சுற்று முற்றும் கண்களைச் சுழலவிட்டு, மீசையைத் தடவி விட்டுக்கொண்டே சிம்மாசனத்தில் அமரப் போகிறார்.

தலையற்ற முண்டங்கள் நூறும், தலையுள்ளவர்கள் பத்து பேரும் எழுந்து நின்று மரியாதை செய்கிறார்கள்.

ஒரு பெரும் கனைப்புச் சத்தம்! ராஜாதி ராஜரின் கனைப்புத்தான்!

"எப்பொருள் யார் வாய்க் கேட்பினும்
அக் கணமே அவர் வாயடைப்போம் அறிவீர்!"

இப்படி அந்தக் கொலுமண்டபத்தில் உள்ள ஒலிபெருக்கிக் குழாயிலிருந்து ஒரு பாட்டு, தொகையறாவாக இசைக்கப்படுகிறது.

கொலு மண்டபத்து சிம்மாசனத்தில் அமர்ந்த ராஜாதி ராஜர் மண்டபத்தில் உள்ள தலையில்லா பிரதானியர்களையும், தலையுள்ள பத்து மனிதர்களையும் பார்த்து,

நமது மாநகர் தன்னில் மாதம் மும்மாரி
மழை பொழிகிறதா?

எனக் கேட்டுவிட்டுக் கலகலவெனச் சிரிக்கிறார். அந்தச் சிரிப்பில் மண்டபம் அதிர்ந்தது, உச்சியில் மாட்டியிருந்த ஒரு விளக்கு, கீழே விழுந்து உடைகிறது.

பராக் கூறிய காவலன் ஓடிவந்து உடைந்த விளக்கின் கண்ணாடித் துண்டுகளைப் பொறுக்கி, ஒரு கூடையில் போட்டுக்கொண்டு வெளியே ஓடுகிறான்.

அப்போது இன்னொரு காவலன் உள்ளே ஓடிவந்து ராஜாதி ராஜ மகாபிரபூ! நமது நாட்டுக்கு எதிராகப் படையெடுத்து வந்தவர்களை நமது படை சுற்றி வளைத்து சிறையில் போட்டு பூட்டிவைத்திருக்கிறது என்கிறான்.

அப்படியா சபாஷ்! அதோ வாரும் பிள்ளாய் காவலனே! அந்த எதிரிகளைச் சிறையில் சித்ரவதை செய்யச் சொல்லி நான் உத்திரவிட்டதாக ஓடிப் போய்ச் சொல்!

ராஜாதி ராஜர், பாதச் சின்னம் பொறித்த கிரீடத்தைச் சரி செய்துகொண்டே காவலனுக்கு ஆணையிடுகிறார்.

உடனே, தலையில்லாத பிரதானியர் அனைவரும், கைகள் இருக்கிற காரணத்தால் தங்கள் கைகளைத் தட்டி கரகோஷம் செய்கிறார்கள்.

தலையுள்ள பத்து பேரில் மூன்று, நான்கு பேர் எழுந்து சிம்மாசனத்தின் பக்கத்தில் சென்று நின்று,

ராஜாதி ராஜரே! காவலன் சொல்வது தவறு! அவர்கள் எதிரிகள் அல்ல! நமது நாட்டைப் பிடிக்க படையெடுத்து வந்தவர்கள் அல்ல! அவர்களைத் தவறாகக் கருதி, வீணாகச் சிறையில் அடைத்திருப்பது வேடிக்கையாக இருக்கிறது

என்கின்றனர். உடனே ராஜாதி ராஜருக்கு கோபம் கொந்தளிக்கிறது.

என்ன சொன்னீர்கள்? எதிரிகள் அல்லவா?

ஆமாம்! உண்மையைத்தான் சொல்லுகிறோம்!

தலையுள்ள காரணத்தால் அல்லவா, நீங்கள் என்னை எதிர்த்துப் பேசுகிறீர்கள்-?

நியாயத்தைப் பேசக்கூடாதா?

அப்போது கொலுமண்டபத்தில் ஒலிபெருக்கியில் அதே பழைய பாட்டு உரத்த குரலில் ஒலிக்கிறது.

"எப்பொருள் யார் வாய்க் கேட்பினும்
அக் கணமே அவர் வாயடைப்போம் அறிவீர்!"

பாட்டு முடிந்ததும், தலையுள்ளவர்களில் மூன்று நான்கு பேரும் அப்படியானால் நாங்கள் சொன்னதெல்லாம்... என்று ஆவலுடன் கேட்கின்றனர்.

நீங்கள் சொன்ன வாக்கியம், அந்த வாக்கியத்தில் உள்ள வார்த்தைகள், அந்த வார்த்தைகளில் உள்ள எழுத்துகள் எல்லாமே காற்றோடு கலந்து போனவையே தவிர, என் காதில் கடுகளவும் ஏறாது!

ராஜாதி ராஜரே! நாங்கள் என்ன சொல்கிறோமென்றால்...

மண்டபத்துக்குள் இருந்தால்தானே சொல்லுவீர்கள்! உங்களை வெளியே இழுத்துப் போகச் சொல்லிக் கட்டளையிட்டு விட்டேன்! வேலும் வாளும் தாங்கிய வீரர்கள் வரட்டும் - இந்தத் தலையுள்ளவர்களை வெளியே இழுத்துப் போகட்டும்.

அரசே! அவர்கள் நாட்டுக்கு எதிரிகள் அல்ல! நமது நாட்டுக்காரர்கள்தான்! நாட்டின் தலைநகரத்தைப் பார்ப்பதற்காக வந்தவர்கள்....

அதைச் சொல்ல நீங்கள் யார்? இதையும் நான் காதில் போட்டுக் கொள்ளவில்லை - இந்தக் கொலுமண்டபத்தில் ஏதாவது தெரிவிக்க வேண்டுமானால், தலையில்லாத நமது பிரதானியர் கைகளால் எழுதி, என் காலடியில் வைக்க வேண்டுமே தவிர, தலையிருக்கிறது என்ற காரணத்திற்காக நீங்கள் சில பேர் வாய் திறந்து பேசுவது, இந்தக் கொலுமண்டபத்தின் கௌரவத்தையே குலைப்பதாகும். எனவே, யாரங்கே? ஈட்டிக்காரா? வேல் அம்புக்காரா? வாள்காரா! எல்லா வீரர்களும் இதோ என்னை எதிர்த்துப் பேசுகிறவர்களை கொண்டுபோய் தலைநகருக்கு வெளியே விட்டு வாருங்கள்!

அரசே! நாங்கள் சொல்வதை சற்றுக் கேளுங்கள்! என்கின்றனர் தலையுள்ளவர்கள்.

முடியாது! முடியாது! ராஜாதிராஜர் சிம்மாசனத்தின் மீது ஏறிக் கொண்டு கத்துகிறார்.

வேறு வழியின்றி தலையுள்ளவர்கள் கொலு மண்டபத்திலிருந்து வெளியே செல்கிறார்கள்! அப்போது ராஜாதிராஜர் அவர்களைப் பார்த்து,

மறுபடியும் இந்தக் கொலுமண்டபத்துக்கு வருவதாக இருந்தால், தலையில்லாமல் வாருங்கள் - அப்போதுதான் உங்களுக்கு உள்ளே வர அனுமதி கிடைக்கும்.

தலையுள்ள சிலர் வெளியேறியது போக, எஞ்சியுள்ளவர்களில் தலையுள்ள ஐந்தாறு பேர் மட்டும் தங்கள் தலைகளை பீதியோடு தடவிப்பார்த்துக் கொண்டு, சூடாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டு கொலுமண்டபத்தில் அமர்ந்திருக்கிறார்கள்.

அவர்களை ராஜாதிராஜர் உற்றுப் பார்க்கிறார். அவர் முகத்தில் ஒரு வெற்றிப் புன்னகை. தலையிருந்து பேசத் தைரியமில்லையே என்று தலையுள்ளவர்களின் முகத்தில் அசட்டுப் புன்னகை.

தொடர்ந்து ஓர் அறிவிப்பு -

ராஜாதி ராஜர் இப்போது கறுப்பு மாளிகையின் இருட்டு அறைக்கு விஜயம் செய்யப் போகிறார். காரணம், கப்பம் கட்டும் சிற்றரசர்களும், பாளையக்காரர்களும் அங்கே காத்திருக்கிறார்கள்.

டாண்! டாண்! டாண்!

மணி ஒலிக்கிறது - கொலுமண்டபத்து ஒலிபெருக்கியில்,

"எப்பொருள் யார் வாய்க் கேட்பினும்
அக் கணமே அவர் வாயடைப்போம் அறிவீர்"

எனும் பாடல் முழங்க - ஓரங்கக் காட்சி முடிகிறது! திரை விழுகிறது!

அன்புடன்,

மு. க.

24-09-1992

1951. ஒரு பூதக்கண்ணாடியுடன் போய் வரவும்!

உடன்பிறப்பே,

தி.மு. கழகம் ஆட்சி நடத்தியபோது, பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நினைவைப் போற்றிட மறுத்தது போலவும் - அல்லது அவர் பெயரை மறைத்தது போலவும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி அவர்களும், வேறு சில காங்கிரஸ்காரர்களும் இன்னமும் பத்திரிகைகளில். அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் பலரின் நினைவாற்றலையே பரிகாசிப்பது போலத்தான் அவர்களின் அறிக்கைகள் இருக்கின்றன.

காமராஜர் மறைந்தபோது அரசு மரியாதையுடன் கழக ஆட்சியில் அவருக்கு நடத்தப்பட்ட இறுதி ஊர்வலத்தையும், அவரது உடலை எரியூட்ட இரவோடு இரவாக, கிண்டி காந்தி மண்டபத்துக்கு அருகிலேயே இடம் தேர்ந்தெடுக்கக் கொட்டும் மழையில் நான் உள்ளிட்ட அமைச்சரவையினரே சென்று பணியாற்றியதையும் காமராஜர் அவர்களின் வலது கரமாகத் திகழ்ந்த ராஜாராம் நாயுடு அவர்கள் சட்டமன்ற மேலவையில் குறிப்பிட்டு, காமராஜரின் உடன்பிறவா சகோதரர் இருந்தால் கூட, முதலமைச்சர் கருணாநிதி அவர்களைப் போல அவருக்கு இத்தனை கடமைகளைச் செய்திருப்பாரா என்று நினைக்கிற அளவுக்கு செய்துள்ளார் என்று கண்கலங்கப் பேசியது பேரவை நடவடிக்கைக் குறிப்பிலே இருக்கத்தான் செய்கிறது.

தொடர்ந்து பெருந்தலைவருக்கு அவரது எளிமையை எடுத்துக் காட்டுவது போல அழகிய மண்டபம், அதுவும் அவர் போற்றிய காந்தி நினைவு மண்டபத்துக்குப் பக்கத்தில் - முகப்பிலே அவர் சுழற்றிய இராட்டையை சிற்பமாக அமைத்தது, இத்தனையும் கழக ஆட்சியிலேதான்!

மெரினா கடற்கரைக் சாலைக்கு காமராஜர் சாலை எனப் பெயர் சூட்டப்பெற்றதும் கழக ஆட்சியிலேதான்! விருதுநகரில்

காமராஜர் பிறந்த இல்லம் நினைவு இல்லமாக ஆக்கப்பட்டது கழக ஆட்சியிலேதான்!

அடுத்து அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஆட்சியிலே, காமராஜர் மாவட்டம், காமராஜர் பல்கலைக்கழகம் - சட்டப்பேரவையில் காமராஜர் படம் -

மீண்டும் 1989-ல் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற போது, பிரதமர் வி.பி.சிங் அவர்கள் கலந்து கொண்ட சென்னை நிகழ்ச்சி ஒன்றில், முதல்வர் என்ற முறையில் நான் விடுத்த வேண்டுகோளை ஏற்று, அதே மேடையில் மீனம்பாக்கம் விமானநிலையத்தில் உள்ள வெளிநாட்டுப் போக்குவரத்துப் பகுதிக்கு அண்ணா விமான நிலையம் என்றும், உள்நாட்டுப் போக்குவரத்துப் பகுதிக்குக் காமராஜ் விமான நிலையம் என்றும் பெயர் சூட்டப் பெற்றதும் கழக ஆட்சியில்தான்!

காமராஜர் உயிரோடிருக்கும்போதே, முதலமைச்சர் காமராஜர் சிலையை பிரதமர் பண்டித நேருவை அழைத்துவந்து திறக்கச் செய்ததும் - நண்பர் முனுசாமி அவர்கள் மேயராக வீற்றிருந்த தி.மு.க. மாநகராட்சி மன்றம்தான்! காமராஜரின் சகோதரி நாகம்மாள் அவர்களின் காலம் முடியுமட்டும் கழகமும், கழக ஆட்சியும் அவருக்குத் துணையாக இருந்திருக்கிறது என்பதை இன்னமும் விருதுநகரில் உள்ள அவரது குடும்பத்தார் மறந்திருக்க மாட்டார்கள்.

காமராஜரின் விசுவாசமிக்க ஊழியராக இருந்த வைரவன் அவர்கள், 1975-ல் காமராஜர் மறைந்த பிறகு, 1988-ஆம் ஆண்டு வரையிலே யாராலும் கவனிக்கப்படாமலே இருந்ததை, 1989-ல் நண்பர் நாத்திகம் இராமசாமி அவர்கள் என்னிடம் நினைவுபடுத்தியதும், உடனடியாக வைரவனுக்கு சென்னை திருமலைப்பிள்ளைத் தெரு காமராஜர் நினைவகத்தில் பணியளித்து, மாதம் ஆயிர ரூபாய் ஊதியமும் பெற்றிட வகை செய்யப்பட்டது, அந்த ஊழியருக்கு வீடு வழங்கியது - அவரது மகள் திருமணத்துக்கு நானும், ஒரு சில காங்கிரஸ் நண்பர்களும் மட்டுமே சென்று வாழ்த்தியதும், கழக ஆட்சியிலேதான்! இன்று என்னைக் குறை கூறுவோர் யாரும், அந்த மணவிழா நிகழ்ச்சிக்கு வரவில்லை!

* காமராஜர் நினைவு மண்டபம்.

* காமராஜர் நினைவகம்.
* காமராஜர் சாலை.
* காமராஜர் மாவட்டம்.
* காமராஜர் பல்கலைக் கழகம்.
* காமராஜர் விமான நிலையம்.

இத்தனையும் அவர் பெயரால் அரசின் சார்பில் இருக்கும்போது, காமராஜர் பெயரால் இருந்த ஒரு ரயில்வே ஸ்டேஷன் பெயரை நான் மாற்றி மறைமலை நகர் ரயில்வே ஸ்டேஷன் என ஆக்கிவிட்டேன் என்று ஒரு பெரும் பொய்யையே திரும்பத் திரும்பச் சொல்லுகிறார்கள். அந்தப் பொய்யைப் பத்திரிகைகளும் வெளியிட்டு மகிழ்ந்து கொண்டிருக்கின்றன.

மறைமலை அடிகள் என்ற பெயர், இன்று சிலருக்கு பெரிதாகத் தோன்றாமல் இருக்கலாம்.

அவர் தமிழ்க்கடல் என்பதும், இன்றைய தினம் தமிழ் மக்களிடையே மொழி உணர்வு பட்டுப் போகாமலிருப்பதற்கும் - தமிழ் இன உணர்வு அறவே அழிந்து போய்விடாமல் இருப்பதற்கும் - மறைமலை அடிகளாரின் ஓயாப்பணியும், உறுதியும் ஓர் காரணம் என்பதை நன்றியுள்ள தமிழன் மறுக்க முடியுமா?

அதனால்தான் 1976-க்கு முன்பே கழக ஆட்சிக் காலத்தில், சென்னையிலிருந்து செங்கற்பட்டு செல்லும் வழியில் உருவாக்கத் தொடங்கிய பகுதிக்கு மறைமலை நகர் எனப் பெயர் சூட்டப்பட்டது.

வாழப்பாடி ராமமூர்த்தி அவர்கள் இன்று விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, சென்னைக்கு அடுத்த அதே மறைமலை நகரில் தான் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. மாநாட்டுக்கு ராஜீவ்காந்தி போன்ற தலைவர்கள் எளிதாக வந்து இறங்குவதற்கு தற்காலிகமாக ஒரு ரயில் நிலையம் அங்கே அமைக்கப்பட்டது.

இப்போதும் அந்த நிலையத்தைப் பார்த்தால் - ஒரு மைசூர்பாகுக் கட்டியைப் பெரிதாகப் புகைப்படம் எடுத்து வைத்தது போலத்தான் இருக்கும்.

மறைமலை நகரில் அமைந்துள்ள அந்த நிலையத்துக்கு, அது மறைமலை நகரில் இருப்பதால் மறைமலைநகர் ரயில் நிலையம் என்று பெயர் வைக்க வேண்டுமென்று அந்த ஊரையும்

- ஊரைச் சுற்றிய பகுதிகளையும் சேர்ந்த மக்கள் அரசுக்கு மனுக்கள் தந்திருந்தனர். அதுகுறித்து ரயில்வே இலாகா அதிகாரிகளும் கருத்து தெரிவித்திருந்தனர். அது சம்பந்தமான நடவடிக்கை எடுத்து இப்போது பார்த்தாலும் உண்மை விளங்கும்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன் முதல் வேலையாக காமராஜர் பெயரை நீக்கி விட்டு, மறைமலை நகர் ரயில் நிலையம் என்று பெயர் சூட்டினார் என்று வாழப்பாடி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையும், சாட்டியுள்ள குற்றச்சாட்டும் உண்மையல்ல - வழக்கம்போல அவர் கூறும் பொய்களில் ஒன்றுதான் இதுவும் என்பது அந்த ரயில் நிலையப் பெயர் சம்பந்தமான அதிகாரபூர்வமான கோப்புகளைப் பார்த்தால் மிகத் தெளிவாகப் புரிந்து விடும்! ஆனால் ஒன்று! அந்த உண்மையைப் புரிந்து கொண்டவர்கள் அதை மறைக்காமல் வெளியில் சொல்ல வேண்டும். அவ்வளவுதான்! என்னதான் மறைத்தாலும், யார்தான் மறைத்தாலும், கோப்புகள் கையெழுத்துகளுடன் இருக்கிற உண்மைகள் மறைந்து விடுமா?

உடன்பிறப்பே, காமராஜருக்கு நாடு முழுதும் - ஏன்? பல மாநிலங்களிலே கூட அவர் பெயரால் நினைவுச் சின்னங்கள் உருவாக்க முடியும்! உருவாகியிருக்கின்றன! மறைமலையடிகளார் பெயரால் ஒரே ஒரு சின்னஞ்சிறு கோழிக்கூண்டு போன்ற ரயில் நிலையம் - அதை எதிர்த்து வாழப்பாடி போராட்டம் நடத்தியபோது, நான் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் படித்துக் காட்டிய ஒரு கடிதம் உனக்கு நினைவிருக்குமெனக் கருதுகிறேன்.

அந்தக் கடிதம் அப்போது ரயில்வே இணை அமைச்சராக இருந்த மாதவராவ் சிந்தியா அவர்கள் 1989 அக்டோபர் 26- ஆம் தேதியிட்டு வாழப்பாடி ராமமூர்த்தி எம்.பி. அவர்களின் டெல்லி முகவரிக்கு எழுதிய கடிதமாகும். அது என்ன கடிதம்? எதைப் பற்றி எழுதிய கடிதம்? அக்டோபர் 20 -ஆம் தேதி வாழப்பாடி அவர்கள் மாதவராவ் சிந்தியாவுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதற்கு அமைச்சர் மாதவராவ் சிந்தியா அவர்கள் எழுதிய பதில் கடிதம் தான் அது!

ராமமூர்த்தி எழுதிய கடிதம் அந்த ரயில் நிலையத்தைப் பற்றியதுதான்! அப்படி யென்றால் காமராஜர் ரயில் நிலையம்

என்று பெயர் சூட்ட வேண்டுமென எழுதியிருப்பார் என்றுதானே நினைக்கிறாய்! அதுதான் இல்லை!

அமைச்சர் சிந்தியா எழுதிய பதில் கடிதத்தைப் பார்த்தாலே - ராமமூர்த்தி எழுதிய கடிதம் என்னவென்று புரிந்து கொள்ளலாமே!

ராமமூர்த்தி எம்.பி. அவர்களுக்கு, மாதவராவ் சிந்தியா கையெழுத்திட்டு எழுதியதில்,

உங்கள் 20 அக்டோபர் 1989 தேதியிட்ட கடிதம் கிடைத்தது. மறைமலை நகர் ரயில் நிலையத்தில் ரயில்கள் நிற்க வேண்டுமென்பது குறித்து எழுதியுள்ளீர்கள். அது குறித்து நான் கவனிக்கிறேன். உங்களுக்கு தீபாவளி வாழ்த்துக்கள்.

என்று குறிப்பிட்டிருப்பதிலிருந்தே வாழப்பாடி அந்த ரயில் நிலையத்தை 1989 அக்டோபர் 20-ந் தேதி வரையில், மறைமலை நகர் ரயில் நிலையம் என்றுதான் ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி போன்ற உண்மை!

அது மட்டுமல்ல! தினத்தந்தியில் 25.9.92-ல் வாழப்பாடி விடுத்துள்ள அறிக்கையில் மறைமலை நகரில் காங்கிரஸ் மாநாடு **1989 ஏப்ரல் மாதம் 24, 25** தேதிகளில் நடந்ததாகக் கூறியுள்ளார். ஆனால் நாமறிந்த வரையில், அந்த மாநாடு **1988 ஏப்ரல்** மாதம்தான் நடைபெற்றிருக்கிறது. அதுவும் 22, 23, 24 ஆகிய தேதிகளில்தான் நடைபெற்றிருக்கிறது! மாநாடு நடந்த ஆண்டும், தேதிகளும்கூட தமிழ்நாடு காங்கிரஸ் தலைவருக்கே மறந்து போய் விட்டது ஆச்சரியம்தான்!

1988-ல் ஏப்ரலில் மாநாடு நடந்து ராஜீவ்காந்தி அவர்கள், அந்த ரயில்நிலையத்துக்கு காமராஜர் பெயரை சூட்டியிருப்பாரேயானால், 1989-ல் தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு சுமார் பத்து மாதங்களுக்கு மேலாக அந்தப் பெயர் ஏன் அந்த நிலையத்துக்கு அதிகாரபூர்வமாகச் சூட்டப்படவில்லை?

அதுமட்டுமன்றி மாநாடு நடந்தது 1988-ல் என்கிறபோது, பிறகு 18 மாதம் கழித்து 1989 அக்டோபர் 20-ல், வாழப்பாடியார் மத்திய ரயில்வே இணை அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில், மறைமலைநகர் ரயில் நிலையம் பெயர் மாற்றப்பட்டு காமராஜர் பெயர் வைக்க வேண்டுமென்று கோரிக்கை ஒன்றும் வைக்காமல், மறைமலை நகர் ரயில் நிலையத்தில் ரயில்கள் நிற்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மாத்திரம் ஏன் எழுத வேண்டும்?

மாவட்டத்துக்கும், பல்கலைக் கழகத்துக்கும், விமான நிலையத்துக்கும், விரிந்து நீண்ட கடற்கரைச் சாலைக்கும் பெருந்தலைவரின் பெயர் இருக்கும்போது, கிராமங்களிலே உள்ள ஆடு மாடு அடைக்கும் பட்டி போல் உள்ள ஒரு ரயில் நிலையத்துக்குத் தமிழ்க்கடல் மறைமலை அடிகளார் பெயர் இருப்பதை மாற்றியோ அல்லது அதனுடன் இணைத்தோ காமராஜர் பெயரை வைப்பதில் என்னதான் அக்கறையோ தெரியவில்லை!

உடன்பிறப்பே, சென்னையிலிருந்து செங்கற்பட்டு செல்லும் வழியில் காட்டாங்குளத்தூர் ரயில் நிலையத்துக்கு அருகில் அடுத்து உள்ள பிரச்சனைக்குரிய இந்த ரயில் நிலையத்தை, ஆம்-பிரமாண்டமான ! இந்த ரயில் நிலையத்தை நீ ஒரு நாள் சென்று பார்த்து விட்டு வாயேன்!

உன்கூட ஒரு உண்மையான காங்கிரஸ்காரரையும் அழைத்துக் கொண்டு போய் அந்த மிகப் பெரிய மகத்தான ரயில் நிலையக் கட்டிடத்தை அவருக்கும் காட்டு!

மன்னிக்கவும்! மறந்து விடாமல் கையோடு ஒரு பூதக் கண்ணாடியையும் எடுத்துப்போ! அப்போதுதான் அந்தக் கட்டிடம் இருக்குமிடத்தைக் கண்டு பிடிக்க முடியும்!

அன்புடன்,

மு. க.

26-09-1992

1952. இதுதான் இன்றைய தமிழ்நாடு!

உடன்பிறப்பே,

பத்மநாபா கொலைக்குப் பிறகும்கூட ராஜீவ் காந்தி படுகொலைக்கு ஆளாகும் வரையில், ஜெயலலிதா விடுதலைப் புலிகளை ஆதரித்ததாகவும், ராஜீவ்காந்தி கொலைக்குப் பிறகும் - தேசவிரோத நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டபோதும் - அவர்களை எதிர்க்கத் தொடங்கியதாகவும் சட்டப் பேரவையில் 25.9.92 அன்று பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்களுடன் வாக்குவாதம் செய்தபோது ஜெயலலிதாவே கூறியிருக்கிறார்!

இந்த உண்மையைத்தான் இத்தனை நாள் ஒத்துக் கொள்ளாமல் மழுப்பிக் கொண்டேயிருந்தார். கழகச் சட்டமன்ற உறுப்பினர் பரிதி இளம்வழுதிக்குப் பதில் சொல்லி விளக்கமளித்த நிதி அமைச்சர் நாவலர் அவர்கள், கடந்த சட்டமன்றக் கூட்டம் ஒன்றில் என்ன கூறினார் தெரியுமா? 1987 வரையில் அ.தி.மு.க. கட்சியும், ஆட்சியும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்தது உண்மை. ஆனால் என்றைக்கு இந்திய ராணுவத்துடன் விடுதலைப் புலிகள் இலங்கையில் மோத ஆரம்பித்தார்களோ, அன்றுமுதல் விடுதலைப் புலிகளை அ.தி.மு.க. ஆதரிப்பதை விட்டுவிட்டது - என்று நாவலர் அவர்கள் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் தெரிவித்தார். ஆனால் அவர் அப்படிக் கூறியது உண்மைக்கு மாறானது என்பதை, 1988, 1989, 1990, 1991 ஆகிய ஆண்டுகளில் ஜெயலலிதா பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டிகளை ஆதாரமாகக் காட்டி பல அறிக்கைகள் வாயிலாகவும் கூட்டங்கள் வாயிலாகவும், நான் மக்கள் மன்றத்தில் எடுத்து வைத்திருக்கிறேன். நாவலர் கூற்றுப்படி, 1987 ஆம் ஆண்டுடன் அ.தி.மு.க. கட்சி விடுதலைப் புலிகளை அளித்த ஆதரவை நிறுத்திவிடவில்லை.

1988, 1989, 1990, 1991 ஆம் ஆண்டுகளில் ஜெயலலிதா, இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி உள்ளிட்ட பல ஏடுகளுக்கு

அளித்த பேட்டியில் ஈழத்தமிழர்களின் விடுதலைக்கும், உரிமை வாழ்வுக்கும், நலனுக்கும் விடுதலைப் புலிகளை விட்டால் வேறு வழியே இல்லை என்று கூறியது அந்த ஏடுகளில் அச்சாகியுள்ளதை நாவலரும் மறைக்க முடியாது. ஜெயலலிதாவும் மறைக்க முடியாது. இந்திய ராணுவத்தால் பிரபாகரனுக்கு ஏதாவது ஆபத்து நேருமானால், இங்கே தமிழகம் கொந்தளிக்கும் என்றும் எச்சரித்து ஜெயலலிதா பேட்டி கொடுத்திருக்கிறார். இந்திய ராணுவம் பங்களா தேஷ் அமைந்திட உதவியதுபோல, தமிழ் ஈழம் அமையவும் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தையும் அந்தப் பேட்டிகளில் ஜெயலலிதா கூறியிருக்கிறார்.

> ராஜீவ் காந்தி கொலைக்குப் பிறகு ஜெயலலிதா மட்டுமல்ல. தமிழக மக்களே, தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் வன்முறைச் செயல்களில் வெறுப்புற்று - இலங்கைத் தமிழர்களின் நலனும், இங்கு வந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் நலனும் காப்பாற்றப்பட வேண்டுமென்பதில் மட்டுமே அக்கறை காட்டி வருகின்றனர் என்பது தெளிவான உண்மை.

பத்மநாபா கொலைக்குப்பிறகும், விடுதலைப் புலிகளை ஆதரித்தீர்களா? இல்லையா? என்ற நமது கேள்விக்கு இதுவரையில் விளக்கமளிக்காமல் விளக்கெண்ணெய் சாப்பிட்டவர்போல இருந்த ஜெயலலிதா, கடந்த 25-ந் தேதி சட்டசபையில் பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் பத்மநாபா கொலைக்குப் பிறகும் விடுதலைப் புலிகளை முதலமைச்சர் ஆதரித்திருக்கிறார் என்று குறிப்பிடவும், ஜெயலலிதா எழுந்து ஏற்கெனவே நாவலர் கூறியதற்கு மாறாக, எம்.ஜி.ஆர். மறைந்த பிறகும் விடுதலைப் புலிகளைச் சில காலம் ஆதரித்தோம், இல்லையென்று சொல்லவில்லை என்று பதில் அளித்திருக்கிறார்.

அண்மையில் செப்டம்பர் 6 -ஆம் நாள் மயிலாடுதுறையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நான் பேசும்போது 1990 அக்டோபர் 4-ஆம் தேதி தினமணி இதழில் வெளிவந்திருந்த ஜெயலலிதாவின் பேட்டியைப் படித்துக் காட்டினேன். 1990 அக்டோபர் 4 என்றால் எப்போது தெரியுமா? 1990 ஜூன் மாதத்தில் பத்மநாபா படுகொலை நடைபெறுகிறது. அதன்பிறகு ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் ஆகிய மூன்று மாதம் கழித்து ஜெயலலிதா

அளித்த பேட்டிதான் 1990 அக்டோபர் 4- ஆம் தேதியிட்ட ஏடுகளில் வெளிவந்த பேட்டி!

அப்போது அவர் விடுதலைப் புலிகளைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறார்?

> கடந்த இரண்டு மாதங்களாக எந்தவிதமான புகாரும் இல்லாத வகையில், விடுதலைப் புலிகள் செயல்பட்டு வருகிறார்கள்.

இந்த நற்சான்று, பத்மநாபா கொலைக்குப் பிறகு அக்டோபர் 4- ஆம் நாள் ஜெயலலிதாவினால் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்டதாக இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி போன்ற ஏடுகளில் வெளி வந்ததாகும்.

அத்துடன் அந்த பேட்டி முடிந்ததா? அதுதான் இல்லை!

> விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டுவிட்டால், இலங்கையில் உள்ள தமிழ் இனம் முழுமையும் அழிக்கப்பட்டுவிடும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் பெருமையையும், அவசியத்தையும், கூறியதுடன் ஜெயலலிதா அந்தப் பேட்டியை முடிக்கவில்லை. தி.மு.கழக ஆட்சியையும் அந்தப் பேட்டியில் ஜெயலலிதா குறை கூறியிருக்கிறார். தேசிய முன்னணி ஆட்சியின் பிரதமர் வி.பி.சிங் அவர்களையும் ஜெயலலிதா விட்டு வைக்கவில்லை. அவரையும் விமர்சித்திருக்கிறார். அவையாவன:-

> விடுதலைப் புலிகளுக்கு உதவும் விதத்தில் எந்த ஒரு உதவியையும் தமிழக முதலமைச்சர் கருணாநிதி மேற்கொள்ளாமல், தனது பதவியை காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியில் கவனமாக இருக்கிறார். இந்த நிலையில் பிரதமர் வி.பி.சிங் வேறு விதமாக செயல்படுவார் என்று எதிர்பார்க்க முடியாது.

இப்படி என்னையும், வி.பி.சிங் அவர்களையும் விடுதலைப் புலிகளுக்கு உதவிடவில்லை என்று குறை கூறியதுடன் நிற்காமல் - அதே பேட்டியில் ஜெயலலிதா தமிழ் நாட்டு மக்களுக்கு ஒரு வேண்டுகோளையும் விடுத்துள்ளார்.

தற்போதுள்ள மாறுபட்ட சூழ்நிலையில், தமிழ் நாட்டு மக்களுக்குள்ள ஒரே வழி விடுதலைப் புலிகளை முழுக்க முழுக்க ஆதரிப்பதுதான்!

இத்தனை விமர்சனங்களும், விடுதலைப் புலிகளுக்கான நற்சான்றுகளும், தமிழ் நாட்டு மக்களுக்கான வேண்டுகோள்களும் - 1947 ஆம் ஆண்டுக்கு முன்பு அல்ல! இந்திய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் விரோத உணர்வு ஏற்படுவதற்கு முன்பு அல்ல! 1987-க்குப் பிறகு - அதாவது 1990 அக்டோபரில்! இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமேயானால், 1990 ஜூன் மாதம் பத்மநாபா படுகொலைக்குப் பிறகு!

தி.மு.க. ஆட்சி விடுதலைப்புலிகளுக்கு எந்த உதவியும் செய்யவில்லை என்று ஜெயலலிதா பேட்டி கொடுத்தது மட்டுமல்ல. 1991 பொதுத் தேர்தல் முதல் கட்டத்தில் - குறிப்பாகச் சொல்வதானால், ராஜீவ் காந்தி கொல்லப்படுவதற்கு முன்பு - அ.தி.மு.க. தேர்தல் பிரச்சாரத்திலும் சரி, அவர்கள் ஒட்டிய சுவரொட்டிகளிலும் சரி, விடுதலைப் புலிகளை தி.மு.க. ஆட்சி கவனிக்கவில்லை என்ற கருத்துகளையே வாசகங்களாக்கி, தாங்கள் மட்டுமே விடுதலைப்புலிகளின் காவலர்கள் எனக்கூறி, தமிழ் மக்களிடம் வாக்கு கேட்டார்கள்!

விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் தன்னைச் சந்தித்து பேசியுள்ளார்கள் என்றும், அந்தப் பேச்சின் விபரத்தை வெளியிட முடியாது என்றும் இதே ஜெயலலிதா பேட்டிகளில் கூறியிருக்கிறார்.

தேர்தலுக்கு முன்பு நடைபெற்ற எம்.ஜி.ஆர். சிலை திறப்பு விழா நிகழ்ச்சியில், ராஜீவ் காந்தியின் முன்னிலையிலேயே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு காட்டி ஜெயலலிதா பேசியிருக்கிறார். அதுமட்டுமா -

ராஜீவ்காந்தி கொலை செய்யப்படுவதற்கு 21 நாட்களுக்கு முன்புகூட, 1991-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ஆம் தேதி இந்து ஏட்டிற்கு ஜெயலலிதா அளித்த பேட்டியில்,

If the genocide continuous unabated, I think there will be nothing wrong if India thanks of a military operation as Indira Gandhi did the case of Bangladesh

ஈழத்தில் இனப் படுகொலை தங்கு தடை ஏதுமின்றி தொடருமேயானால், வங்க தேச விவகாரத்தில் இந்திரா காந்தி கைக்கொண்டதுபோல இராணுவ நடவடிக்கையை இந்திய அரசு இவ்விஷயத்தில் மேற்கொள்வதில் தவறு எதுவும் இல்லை என்று நான் நினைக்கிறேன். என்று குறிப்பிட்டிருந்தார்.

உடன்பிறப்பே, இவ்வளவும் பேசிவிட்டுத்தான் இப்படியெல்லாம் பேட்டி கொடுத்துவிட்டுத்தான் - தேர்தல் நேரத்தில், ஜனாதிபதி ஆட்சியில், ராஜீவ் காந்தி கொல்லப்பட்டவுடன், வீண் பழியைக் கழகத்தின் மீது சுமத்தி மத்திய மாநில அரசுகளின் பிரச்சார சாதனங்கள் அத்தனையையும் பயன்படுத்திக் கொண்டு - ஏற்கெனவே நம்மீது எரிச்சல் கொண்ட ஏடுகளின் பக்க பலத்துடன் - தமிழ்நாட்டு மக்களின் இரக்க உணர்வையும், ஏமாறும் குணத்தையும் மூலதனமாக வைத்து அ.தி.மு.க.வும், காங்கிரசும் அமோக வெற்றி பெற்றன!

இன்று பார்த்தாயா நான் உடனிருந்திருந்தால் ராஜீவ் கொலையுண்டிருக்க மாட்டார் என்று ப. சிதம்பரம் அவர்கள் பகருகின்றார்! ராஜீவ் காந்தியை அழைத்து வந்ததே சிதம்பரம்தானே! என்று வாழப்பாடி அவர்கள் பதறுகின்றார்!

அன்று விடுதலைப்புலிகளை ஆதரித்து வீராவேசமாக முழங்கிய ஜெயலலிதாவின் பேட்டிகளைப் பிரசுரித்த ஏடுகள், இன்று அதனைக் கண்டுகொள்வதேயில்லை பார்த்தாயா? ஆனால் அந்த ஏடு நடத்துவோரும் - அரசினரும் - அரசினரின் எடுபிடிகளும் இன்னமும் நம் மீது பாய்ந்து கொண்டு தானிருக்கிறார்கள்!

இதுதான் இன்றைய தமிழ் நாடு!

அனபுடன்,

மு. க.

27-09-1992

1953. அறப்போருக்கான கொடி உயரும்!

உடன்பிறப்பே,

இன்று உனக்கு எழுதும் கடிதத்தின் வாயிலாக நமது கழகத்தின் குறிக்கோள், கோட்பாடு என்னும் விளக்கம், நமது கழகத்தின் சட்ட திட்டப் புத்தகத்தில் எவ்வாறு குறிக்கப்பட்டுள்ளது என்பதைப் பொதுவாக எல்லோரும் தெரிந்து கொள்ள உதவும் எனக் கருதுகிறேன்.

1962 ஆம் ஆண்டு திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடுவதற்கான விளக்கங்களை அறிஞர் அண்ணா அவர்கள் பொதுக்குழுவில் வழங்கி, அந்தப் பொதுக்குழுவில் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடுவது என முடிவெடுக்கப்பட்டது.

அதனையொட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள், கோட்பாடு எனும் இரு பகுதிகளும் திருத்தம் பெற்று சட்டதிட்டப் புத்தகத்தில் இடம்பெற்றன.

- குறிக்கோள் -

* அறிஞர் அண்ணா வகுத்த குறிக்கோளுக்கு ஏற்ப தமிழகம், ஆந்திரா, கேரளம், கர்நாடகம் ஆகிய நான்கு மொழி மாநிலங்களிலும், இந்திய அரசுரிமை, ஒருமைத் தன்மை, அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்கு உட்பட்டு நெருங்கிய திராவிடக் கலாச்சாரக் கூட்டுறவு நிலவப் பாடுபடுவது என்பதே குறிக்கோளாகும்.

உடன்பிறப்பே, இரண்டு நாட்களுக்கு முன்பு கூட நீ நாளேடுகளில் செய்தி கண்டிருப்பாய். சித்தூர் மாவட்டத்தில் குப்பம் எனும் இடத்தில் திராவிடக் கலாச்சாரப் பல்கலைக்கழகம் ஒன்று உருவாகிறது என்பதையும், அந்தப் பல்கலைக் கழகம் தென் மாநிலங்களான தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகியவற்றில் வாழும் திராவிட மக்கள் மட்டுமின்றி - வட பகுதி

மாநிலங்களில் சிதறியுள்ள திராவிட மக்களிடையேயும், திராவிடக் கலாச்சார மேம்பாடு அமைவதற்காகத் தனி கவனம் செலுத்தும் என்பதையும் அந்தச் செய்தி தெரிவித்துள்ளது.

இந்த முயற்சி 1976-க்கு முன்பு கழக ஆட்சி நடைபெற்ற போதே முளைவிட்டு - தொடர்ந்து அதற்கானச் சிந்தனைகள் தொய்வின்றி ஒளிவிட்டு - மீண்டும் 1989-ல் கழக ஆட்சி அமைந்த நேரத்தில் ஆந்திர மாநிலத்தில் முதல்வராக இருந்த என்.டி.ஆர். அவர்களுடன் விவாதித்து, அது சம்பந்தமாக நிபுணர்கள், அறிஞர்கள், அதிகாரிகள் கொண்ட குழுவினருடன் சென்னையில் அரசு தலைமைச் செயலகத்திலும் நானும், கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் அவர்களும் பேசி, ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகளின் தொடர்ச்சியாக, இப்போது ஆந்திர முதல்வர் திரு. ஜனார்த்தன ரெட்டி அவர்கள் அந்தத் திராவிடக் கலாச்சார பல்கலைக் கழகத்துக்கு ஆயிரம் ஏக்கர் நிலமும், இருபது லட்ச ரூபாய் நிதியும் வழங்குகிற கோப்பில் கையெழுத்திட்டு விட்டார் எனும் செய்தியும் வந்துள்ளது.

திராவிடக் கலாச்சாரக் கூட்டுறவு என்று நமது கழகத்தின் குறிக்கோளாகச் சுட்டிக் காட்டப்படும் பகுதிக்கு அடுத்து, தி.மு. கழகத்தின் கோட்பாடாக நமது சட்டதிட்டப் புத்தகம் கோடிட்டுக் காட்டுவது என்ன என்பதும் முக்கியம்.

- கோட்பாடு -

* அறிஞர் அண்ணா அறிவுறுத்திய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அடிப்படையில், அரசியலில் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்து, ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்திடவும், பகுத்தறிவு அடிப்படையில் மறுமலர்ச்சிக்கான சீர்திருத்தப்பணி ஆற்றிடவும், பொருளாதாரத் துறையில் வறுமையை வென்று சமதர்ம அடிப்படையில் எல்லோரும் நல்வாழ்வு பெற வழி கண்டிடவும், பிற மொழி ஆதிக்கத்திற்கு இடம் கொடாமல் அந்தந்த மாநில மொழிகளை வளர்த்திடவும், அவைகளுக்கான உரிய இடத்தைப் பெற்றுத்தரவும், மத்திய அரசில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மாநிலங்களில் சுயாட்சியும் மத்தியில் கூட்டாட்சியும் Autonomy for States, Federation at Centre

உருவாகிடவும் தொண்டாற்றுவது என்பதே கழகத்தின் கோட்பாடு என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு, இந்தியாவின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, அரசுரிமை ஆகியவற்றுக்கு உட்பட்டு தி.மு.கழகம் சுமார் முப்பது ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிற இயக்கம் என்பதும், அதே நேரத்தில் இந்திய ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்பட்டபோது அதனைக் காத்திடவும், அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட குரல் கொடுத்திடவும் தயங்கியதில்லை என்பதும், இந்தி ஆதிக்கத்தால் தமிழர்கள் இரண்டாந்தர குடிமக்களாகிவிடாமல் தடுத்து நிறுத்த களம் பல கண்டது என்பதும், பல மொழிகள் பேசும் பல தேசிய இனங்களைக் கொண்ட இந்திய நாட்டில் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழ் இன மக்கள் தமிழகத்திலோ, பிற மாநிலங்களிலோ, பிற நாடுகளிலோ இன்னலுக்கு ஆட்படாது, உரிய உரிமைகளுடன் வாழக் குரல் கொடுத்து வருகிறது என்பதும் அனைவரும் அறிந்த உண்மைகளேயாகும். இவற்றையெல்லாம் தெரிந்தும் தெரியாதவர்களைப்போல, இன்று ஜெயலலிதா தலைமையில் உள்ள தமிழக ஆட்சியாளர்கள் தமிழ், தமிழர், தமிழ் இனம் என்ற சொற்களேகூட தேச விரோதமானவை எனக் கூறிக்கொண்டு தி.மு.கழகத்தின் கொள்கை விளக்க நிகழ்ச்சிகளை தடுத்திட முனைந்துள்ளனர்.

தந்தை பெரியார் தோன்றிய ஈரோடு நகரத்தில் செப்டம்பர் 26 ஆம் நாளன்று கழகச் சார்பில் ஒரு பட்டிமன்றம்!

பட்டி மன்றத்துக்கான தலைப்பு, தேச விரோதமானதோ அல்லது வன்முறைத் தீவிரவாதத்தை ஆதரிப்பதோ அல்லது இனக் கலவரம் மதக்கலவரம் போன்றவற்றைத் தூண்டுவதோ அல்ல!

தமிழ் இன வீழ்ச்சிக்குக் காரணம், தூய சக்திகளின் தளர்ச்சியா? அல்லது தீய சக்திகளின் வளர்ச்சியா? என்பதுதான் அந்தப் பட்டிமன்றத்தின் தலைப்பு!

பேரவையின் முன்னாள் தலைவர் டாக்டர் தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் அந்தப் பட்டிமன்றம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது. டாக்டர் காளிமுத்து, திருச்சி செல்வேந்திரன், வெற்றி கொண்டான், நாஞ்சில் சம்பத், மாவட்டக்

கழகச் செயலாளர் கணேச மூர்த்தி ஆகியோர் பேசுவதாக விளம்பரம் செய்யப்பட்டது.

அந்த நிகழ்ச்சிக்கு காவல் துறையினர் தடை விதித்து, மேலிடத்து ஆணைப்படி நடப்பதாகக் கூறியுள்ளனர். முன்கூட்டியே அந்தப் பகுதி கழகச் செயல் வீரர்களைக் கைதும் செய்துள்ளனர்.

அந்தத் தடை ஆணையைக் கண்டித்து மாவட்டக் காவல்துறை அலுவலகத்துக்கு முன்பாக மறியல் நடைபெறும் என அறிவித்து, கணேசமூர்த்தி தலைமையில் ஊர்வலமாகப் புறப்பட்ட போது, கணேசமூர்த்தி, கொடுமுடி ஒன்றிய செயலாளர் குழந்தைவேலு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எவரெஸ்ட் கணேசன், பவானி கிருட்டிணசாமி, இராதாருக்மணி, ஆர். சண்முகம் உள்ளிட்ட 125 பேர் கைது செய்யப்பட்டு - 15 நாள் ரிமாண்டு எனக் கூறப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் இனம் என்ற சொல்லைப் பயன்படுத்துவதே இந்த ஆட்சியில் தடை செய்யப்பட வேண்டிய ஒன்றாகி விட்டதா?

தலைமைச் செயலகக் கோட்டைக்கு அருகே, கழக ஆட்சியில் கட்டப்பட்டு நாமக்கல் கவிஞர் மாளிகை எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளதே! அந்தப் பெயருக்குரிய தேசியக் கவி நாமக்கல் இராமலிங்கனார் பாடிய,

"தமிழன் என்றோர் இனம் உண்டு
தனியே அவர்க்கோர் குணம் உண்டு"

எனும் பாடல் இடம் பெற்றுள்ள நூலையும் இந்த அரசு தடை செய்து விடுமோ?

"விதியே! விதியே! தமிழ்ச் சாதியை
என் செய நினைத்தாய் எனக் குரையாயோ?"

எனத் தமிழரின் வீழ்ச்சி குறித்து வெந்து நொந்த உள்ளத்துடன் பாரதியார் பாடியுள்ள பாட்டு இடம் பெற்ற நூலுக்கும் இனி மேல் தடைதானா?

தமிழ் இனம் என்னும் தமிழ்ச்சாதி என்றும் முறையே நாமக்கல்லாரும், பாரதியாரும் சொல்லலாம். நமது கழகத்தினர் மட்டும் அந்தச் சொல்லைப் பயன்படுத்தலாகாது - தடுப்போம் - சிறையில் அடைப்போம் - என்று தடி தூக்கும் தர்பார் நடத்துகிறார்களே! என்ன காரணம்? இந்திய நாட்டில் உள்ள பல்வேறு மொழி பேசும் தேசிய இனங்களில் தமிழ் இனமும் ஒன்று!

தமிழ் இனம் எனக் கூறி, அந்த இனம் இந்திய நாட்டிலிருந்து பிரிந்து போக வேண்டுமென்று கூறுவதற்காக ஈரோடு நகரில் பட்டிமன்றம் நடத்திட முனையவில்லையே! பிறகு ஏன் தடை?

தமிழ் மொழி என்று கூறலாம் - தமிழ்நாடு என்று கூறலாம் - தமிழரைக் குறித்திடத் தமிழ் இனம் எனக் கூறலாகாதாம்! இனிப் போகப் போகத் தமிழ்மொழி, தமிழ்நாடு என்ற பெயர்களுக்கே தடை விதித்து விடுவர் போலும்! இவர்கள் சுரண்டுகிற சுரண்டலில், சுருட்டுகிற சுருட்டலில் தமிழ்நாடேதான் காணாமற் போய்விடும் போலிருக்கிறதே! பிறகு தமிழ் இன வளர்ச்சியாவது, மண்ணாங்கட்டியாவது, வீழ்ச்சிதான்!

"தமிழனுக்கு வீழ்ச்சியில்லை;
தமிழன் கீர்த்தி தாழ்வதில்லை!"

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியதெல்லாம் பழங்கதையாய்ப் போயிற்றே! ஆமாம்! அதனால்தான், தமிழின வீழ்ச்சிக்குக் காரணம் தேடி, பெரியார் பிறந்த ஈரோடு நகரில் பட்டிமன்றம் ஏற்பாடு செய்தனர்.

அந்தப் பெரியாரிடம், பேரறிஞர் அண்ணாவிடம் தமிழ் இன உணர்வு பற்றிப் பாடங்கற்று, பட்டி தொட்டியெல்லாம் பறை சாற்றியவர்கள் சிலர் இன்று பதவியே பெரிதென நாற்காலியில் ஒட்டிக்கொண்டு, தமிழ்இனம் என்ற சொல்லுக்கே தடைவிதிக்கின்றனர்! என் செய்வது?

"தன்னினம் மாய்க்கும் தறுதலை ஆட்சி
சற்றும் நிலைக்காது! மாளும்!"

என்று புரட்சிக் கவிஞர் உறுதி பொங்கிடக் கூறியுள்ளார்.

அந்த நம்பிக்கையை நாமும் பெற்று, எழுத்துரிமைக்கும் - பேச்சுரிமைக்கும் இந்த இருட்டு ஆட்சியில் விதிக்கப்படும் தடைகளுக்கு எதிராக அறைகூவல் விடுப்போம்!

ஈரோடு கண்ட இந்தத் தடை தொடருமானால், அதனை எதிர்த்துப் போராடுவதற்குக் கழகம் தயங்காது! அறப்போர்க் கொடி உயரும்!

அன்புடன்,

மு. க.

28-09-1992

1954. தி.மு. கழகம் ஏந்திய தீபச் சுடர்!

உடன்பிறப்பே,

சில விவரங்கெட்டதுகளும், கொள்கையற்றதுகளும் பதவிப் பொறுப்பில், அதுவும் அமைச்சர் பொறுப்பில் அமர்ந்து விடுவதாலேயே தி.மு.கழகத்தைப் பற்றி அவதூறாக எதை வேண்டுமானாலும் சொல்லிவிடலாம், எழுதி விடலாம் என்று எண்ணிக் கொண்டு செயல்படுகின்றன.

இதற்கோர் எடுத்துக்காட்டாக, இந்த வாரம் வெளிவந்துள்ள ராணி வாரப் பத்திரிகையில் - ஏற்கெனவே அந்தப் பத்திரிகையில் வெளிவந்துள்ள ஒரு கட்டுரைக்கு மறுப்பு விளக்கம் என்ற முறையில் தமிழ்நாடு சட்ட அமைச்சர் கே.ஏ. கிருஷ்ணசாமி, புதிய மொந்தையில் பழைய கள்ளு என்ற தலைப்பில் ஒரு பக்கம் எழுதியுள்ளார்.

> “தமிழர்களுடைய நலம் காக்க அறிஞர் அண்ணா அவர்கள் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டார்கள். இந்திய ஒற்றுமையை ஏற்றுக் கொண்டார்கள். அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு வந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி அவர்கள், தமிழர்களுடைய பிரச்சினைகளை குறுகிய கண்ணோட்டத்தோடு ஒரு முரட்டுத்தனமான பிரச்சினையாக ஆக்கினார். மத்தியில் கூட்டாட்சி - மாநிலத்தில் சுயாட்சி என்ற ஒரு பரபரப்பான விளம்பர நோக்கோடு சொல்லப்பட்ட விளக்கம், தமிழர்களுடைய நலனுக்கு எவ்வளவு பாதகத்தை உண்டாக்கியது என்பதற்குக் கடந்த காலத்தில் நடைபெற்ற அரசியல் நிகழ்வுகள் சாட்சியங்களாக விளங்குகின்றன.”

என்று சட்ட அமைச்சர் அவர்கள், தனது மேதா விலாசத்தைக் காட்டிக் கொண்டுள்ளார்.

இவருக்கும் நீ பதில் எழுத வேண்டுமா? என்று நீ என்னைக் கேட்கக் கூடும்! கேட்பாய்! அமைச்சர் என்னும் பொறுப்பில் - அதுவும் சட்ட அமைச்சர் என்னும் பொறுப்பில் இருப்பவராயிற்றே! அண்ணாவின் பெயரை இழுத்தல்லவா மாநில சுயாட்சி என்ற கோரிக்கை தீமை தரக்கூடியது என அவர் எழுதியுள்ளார்.

இவர் சொல்லித்தான் நாங்கள் அண்ணாவின் கொள்கையைத் தெரிந்து கொள்ள வேண்டுமா? எங்களுக்குத் தெரியாதா? அண்ணாவின் எழுத்துக்களை, பேச்சுக்களை நாங்கள் படித்தது இல்லையா? என்றும் உன்போன்ற உடன்பிறப்புகள் என்னிடம் வம்புக்கு வரக்கூடும். உன்னோடு வம்பு என்றால் நான் ஒதுங்கிக்கொள்ளவும் தயாராக இருப்பவன்.

ஆனால்! நமது கொள்கையே கோணல்! அண்ணாவே ஏற்றுக்கொள்ளாத கொள்கை என்று ஒரு பிரபலமான வார இதழில் திராவிட இயக்கத்தில் இளமைக்காலந்தொட்டு இடம் பெற்று வளர்ந்து வருகிற ஒருவர், என்மீதும், கழகத்தின் மீதும் காழ்ப்பு கொட்டுவதற்காக வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்ற பழமொழிக்கேற்ப பேசிவிடுவதையோ, எழுதி விடுவதையோ மறுக்காமல் - மக்களுக்கு விளக்காமல் எப்படி இருந்து விட முடியும்!

1974 - ஆம் ஆண்டு தமிழகச் சட்டமன்றத்தில், தி.மு.க. அரசின் சார்பில் மாநில சுயாட்சி தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றப் பட்டபோது, எதிர்தரப்பில் அமர்ந்திருந்த அ.தி.மு.க. உறுப்பினர்கள் மாநில சுயாட்சி என்பது அண்ணா ஏற்றுக்கொள்ளாத ஒன்று என வாதிட்டது உண்டு. அப்போது நான் பேரவையில் 1965-ஆம் ஆண்டு வெளிவந்த இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆங்கில இதழில் அறிஞர் அண்ணாவின் பேட்டி பிரசுரிக்கப் பட்டிருந்தது.

அந்த ஆங்கில இதழின் நிருபரின் கேள்விகளும், அண்ணாவின் பதில்களும் வருமாறு :-

நிருபர் :-

தி.மு.கழகத்தின் இன்றைய முக்கிய குறிக்கோள்கள் யாவை?

அண்ணா :-

1 உண்மையான கூட்டாட்சி மலர இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தி அமைத்தல்.

2 மாநிலங்களுக்கு மேலும் கூடுதலான சுயாட்சி உரிமை பெறுதல்.

3 சிறுபான்மை வகுப்பினரின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் சரிசம விகிதப் பிரதிநிதித்துவ முறைக்காகப் பாடுபடுதல்.

4 ஜனநாயக சோஷலிசம் அடைதல்

5 சாதியை ஒழித்தல்

நிருபர் :-

தி.மு.கழகம் எந்தவொரு நிலையான கோட்பாடும் கொண்டதல்ல என நான் எண்ணுவது சரியான கருத்தா?

அண்ணா :-

உங்கள் கருத்து தவறானது. கூட்டாட்சி முறை - மாநிலங்களுக்கு முழு சுயாட்சி உரிமை, சமதர்மக் குறிக்கோள் இவைகள் கோட்பாடுகள் அல்லவா?

உடன் பிறப்பே, 1965 ஆம் ஆண்டு அண்ணா தந்த பேட்டியைப் பேரவையில் 1974 ஆம் ஆண்டு படித்துக் காட்டியது மட்டுமல்ல. 1968 ஆம் ஆண்டு சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் முன்னின்று நடத்திய மாநில சுயாட்சி மாநாட்டில், முதலமைச்சர் என்ற பொறுப்புடன் கலந்து கொண்ட அண்ணா அவர்களின் பேருரையின் சில பகுதிகளையும் கூட படித்துக் காட்டினேன். இதோ அந்தப் பகுதி! அண்ணா பேசுகிறார் - கேட்போம்! அமைச்சராகி விட்டதால் கிருஷ்ணசாமியின் காதில் ஒருவேளை இப்போது விழாமல் போகலாம். நாம் கேட்போம்!

மாநில சுயாட்சி வேண்டும் என்று நாம் கேட்கிறபோது, இப்படிப் பேசுவது மத்திய அரசைக் குலைப்பதாகும். நாட்டுக்குப் பெருத்த ஆபத்து வரும் என்று கூறுகின்றனர். நாட்டை வலிவுள்ளதாக ஆக்கும் உரிமையும், ஆபத்து வருமென்று

தெரிந்து கூறும் திறமையும் இவர்களைத் தவிர வேறு யாருக்கும் இல்லையென்று நினைத்துப் பேசிடும் முழு உரிமையும் யாரால் - எந்தக் காரணத்தால் - எப்போது இவர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டது? எனக் கேட்க விரும்புகிறேன். மாநில சுயாட்சி தருவதற்குத் தயக்கம் காட்டுவார்களேயானால், அளவுக்கு மீறிய அதிகாரங்களைத் தாங்கித்தாங்கிப் பாதுகாப்பு போன்ற பெரிய விஷயங்களில் சோடை போய் விடுவார்களோ என்பதுதான் எங்கள் சந்தேகம். மேல்அதிகாரம் அனைத்தும் டெல்லியில் இருப்பதை மாற்றிடத்தான், மாநில சுயாட்சித் தத்துவம் பிறந்துள்ளது.

1968 ஜூலை 28 ஆம் நாள் முதலமைச்சர் அண்ணா அவர்கள், ஆற்றிய உரை இது!

மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்பதை நான் ஒரு முரட்டுத்தனமான பிரச்சினையாகக் குறுகிய கண்ணோட்டத்துடன் விளம்பர நோக்குடன் ஆக்கிவிட்டதாகவும் - அது பழைய கள் என்றும், அந்தப் பழைய கள்ளை இன்று சிலர் புதிய மொந்தையில் ஊற்றித் தருவதாகவும் கிருஷ்ணசாமி எழுதியிருக்கிறார்.

உடன்பிறப்பே, நான் என்றைக்கும் நமது கருத்து களை முரட்டுத்தனமாக யார் மீதும் திணிப்பவனல்ல! தி.மு. கழகத்திலிருந்து அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் தன்னை விடுவித்துக் கொள்வதற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு மதுரையில் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டில் மாநில சுயாட்சி தராவிட்டால் இராணுவத்தைச் சந்திப்போம் என்று முரட்டுத்தனமாகவும் - கழகத்தின் அணுகு முறைக்கு முற்றிலும் முரண்பாடாகவும், கழகத்தைச் சிக்கவைக்கும் தர்மசங்கடமான வகையில் ஆவேசமாகவும் பேசியது யார்? கிருஷ்ணசாமி அவர்கள் பின்னர் தலைவராக ஏற்றுக் கொண்ட எம்.ஜி.ஆர். தான் என்பதை வரலாறு மறைத்து விடுமா என்ன?

மாநில சுயாட்சிக்காக இராணுவத்தைச் சந்திப்போம் என்ற எம்.ஜி.ஆர். அவர்கள், அண்ணாவின் பெயரால் கட்சி ஆரம்பித்த பிறகு - உடனடியாக மாநில சுயாட்சியை மறுத்துப் பேசவும் தொடங்கினார்!

1971 ஆம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அறிக்கையிலேயே இடம் பெற்ற மாநில சுயாட்சிக் கோரிக்கையையொட்டி, ஏற்கெனவே

கழக அரசு அமைத்திருந்த ராஜமன்னார் குழுவின் மத்திய மாநில உறவுகள் என்ற அறிக்கை வெளிவந்ததும், 1971 ஜூன் 15ஆம் நாள் அந்த அறிக்கையையும், அதையொட்டிய என் கடிதமும் பிரதமர் இந்திராகாந்திக்கு அனுப்பிவைக்கப்பட்டன. அதற்கு 1971 ஜூன் 22 ஆம் நாள் எனக்குப்பதில் எழுதிய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், இது முக்கியமான பிரச்சினை என்பதால் இது குறித்து எல்லா முதலமைச்சர்களுடனும் கலந்து ஆய்வு செய்ய எண்ணியுள்ளோம் என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

1972 ஆம் ஆண்டு மே திங்கள் 30 ஆம் நாள், டெல்லியில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நான் பேசும்போது,

> நமது நாடு போன்ற பெரிய நாட்டின் எதிர்காலப் பொருளாதாரச் சிக்கல்களைச் சமாளிப்பதெனில், அதிகாரங்கள் பரவலாக இருப்பது அத்தியாவசியமானது. நாங்கள் எழுப்பியுள்ள மாநில சுயாட்சி கோரிக்கையின் நியாயத்தினை இக்கோணத்திலிருந்து காண வேண்டும்

என்று குறிப்பிட்டு, அந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளேன்.

பின்னர் 1974 ஆம் ஆண்டு, தமிழகச் சட்டப் பேரவையில் மாநில சுயாட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொடக்கத்தில் அ.தி.மு.க.வும், அதன் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் அண்ணாவின் மாநில சுயாட்சிக் கொள்கைக்கு ஆதரவு தர முன் வராவிட்டாலும் - அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்து சில ஆண்டுகளுக்குப் பிறகு, 1983-84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே மாநில சுயாட்சி State Autonomy என்ற சொல்லுக்குச் சரியான தனித் தமிழ்ச் சொல்லாக மாநிலத் தன்னாட்சி என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டு, தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேரா வண்ணம் போதிய அதிகாரங்களுடன் கூடிய தன்னாட்சி உரிமையை மாநிலங்கள் பெற வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தப் பட்டு - அந்த நிதிநிலை அறிக்கையை நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பேரவையில் படித்துள்ளார். ஆதாரம்:- 1983 மார்ச் 5 ஆம் நாள், நிதிநிலை அறிக்கை - பக்கம் 7 - பகுதி 8

உடன்பிறப்பே, மாநில சுயாட்சியைத்தான் மாநிலத் தன்னாட்சி என்று நாவலர் குறிப்பிட்டுள்ளார். தன்னாட்சி வேறு, தனியாட்சி வேறு! சுயாட்சி வேறு, சுதந்திர ஆட்சி வேறு! மாநில சுயாட்சி என்பதும், மாநிலத் தன்னாட்சி என்பதும் மத்தியில் ஒரு கூட்டாட்சி முறை அமைந்து - அதன் வழி இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலும் அமைவதாகும். இந்தக் கருத்தைத்தான் நாம், நிறுத்தி நிதானமாக - அனைவருக்கும் புரியும் வண்ணம் தெளிவாக - ஏடுகள் மூலமும், மேடைகள் மூலமும், மக்கள் மன்றத்திலும், ஆட்சி மன்றத்திலும், வாய்ப்பு கிடைக்கும் எல்லா இடங்களிலும் எடுத்து வைத்து வருகிறோம்.

ஆனால் சட்ட அமைச்சர் கிருஷ்ணசாமிக்கு, அவரது கட்சி ஆட்சியே மாநில சுயாட்சியை அதாவது மாநில தன்னாட்சியை வலியுறுத்தி நிதிநிலை அறிக்கை வைத்தது என்ன காரணத்தினாலோ மறந்து போய் விட்டது. 1983 என்பதால் ஒன்பது ஆண்டு கால இடைவெளியில் மறந்து விட்டது என்று அவர் சமாளிக்கலாம்.

வேடிக்கை என்னவென்றால், 1992-93 இந்த ஆட்சிக்கான நிதிநிலை அறிக்கை 1992 மார்ச் 6 ஆம் நாள் நிதியமைச்சர் நாவலர் அவர்களால் பேரவையில் வைக்கப்பட்டதிலும் மாநில சுயாட்சி இடம் பெற்றுள்ளது.

சட்ட அமைச்சருக்கு தமிழில் இருப்பதைச் சுட்டிக்காட்டினால் புரிகிறதோ இல்லையோ என்பதற்காக, முதலில் ஆங்கிலத்தில் உள்ளதை அப்படியே தருகிறேன்.

Consistent with the Philosophy of a strong on and prosperous autonomous states, the constitution would need changes.....

ஆதாரம்; பக்கம் 4 - பகுதி 6

இதே நிதிநிலை அறிக்கை பக்கம் 5 - பகுதி 6-ல் - தமிழில் மத்தியில் வலிவான கூட்டாட்சி, மாநிலத்தில் வளமான தன்னாட்சி என்ற தத்துவத்துக்கு ஏற்ப, இந்தியாவைக் காப்பாற்றுவதற்கு ஏற்ற அதிகாரங்கள் மத்திய அரசிடமும், மக்களை வாழ வைப்பதற்கேற்ற அதிகாரங்கள் அனைத்தும் மாநில அரசுகளிடமும் அமைய அரசமைப்புச் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என நிதியமைச்சர் நாவலர் குறிப்பிட்டிருக்கிறார்.

அண்ணா அவர்களுக்குப் பிறகு வந்த தி.மு.க. தலைவர் கருணாநிதிதான், மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்று கூறி தமிழர் நலனுக்குப் பாதகத்தை உண்டாக்கினார் என்று இன்றைய மாநில சட்ட அமைச்சர் கூறுகிறார் என்றால் - அவர் அங்கம் வகிக்கும் ஆட்சியில் உள்ள நிதி அமைச்சர் அவையில் படித்துள்ள நிதி நிலை அறிக்கையைக் கூட, படிப்பதற்கு முடியாத அளவுக்கு எல்லையற்ற பெரும்பணிகளில் ஈடுபட்டிருக்கிறார் போலும்!

> "பல்வேறு மொழி, நாகரிகம், பண்பாடு ஆகியவைகளைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக் காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்களிடம் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும், மத்தியில் கூட்டாட்சி மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில் அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டுமென்று இப்பேரவை முடிவு செய்கிறது".

எனப்படும் இந்த தீர்மானத்தைத்தான் 16.4.1974 ஆம் ஆண்டு பேரவையில் நான் முன்மொழிந்து, விவாதம் நடைபெற்று - இறுதியாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை அன்று ஆதரிக்க முன் வராத அ.தி.மு.க. - ஆட்சிக்கு வந்த பின்னர் மெல்ல மெல்ல ஆதரிக்க முன்வந்தபோதும், பிறகு எம்.ஜி.ஆர். ஆட்சியில் நிதி நிலை அறிக்கையிலேயே மாநில சுயாட்சி எனப்படும் மாநில தன்னாட்சிக்காக அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென சுட்டிக் காட்டிய போதும், நான் பேரவையிலும், மேலவையிலும் அந்த புதிய மாற்றத்தை வரவேற்று பாராட்டிப் பேசியிருக்கிறேன். ஆதாரம் வேண்டுமெனில், 3.4.1986 தேதியில் நான் மேலவையில் ஆற்றிய உரை அச்சாகியுள்ள சட்டமன்ற மேலவை நடவடிக்கை புத்தகத்தில் காணலாம்.

மாநில சுயாட்சி என்ற சொற்றொடர் அறிஞர் அண்ணா அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றல்ல என்ற கருத்து இன்றைய ஆளுங் கட்சி உறுப்பினர்களால் 1974-ல் சட்டப் பேரவையில் முதல் தொடர்ந்து சொல்லப்பட்டு 1974-ல்

சட்டப் பேரவையில் மாநில சுயாட்சி தீர்மானம் கொண்டு வரப்பட்டபோதுகூட, ஏற்றுக் கொள்ளாமல் இருந்த அந்தக் கொள்கையை இன்றைக்கு நிதி அமைச்சர் அவர்கள் வைத்துள்ள அறிக்கையின் வாயிலாக, அண்ணா அவர்களின் அந்தக் கருத்து தொடர்ந்து வலியுறுத்தப்படும் என்று கூறியிருப்பது வரவேற்கத்தக்கது. பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது நான் 1986 ஏப்ரல் 3 - ஆம் நாள் சட்டமன்ற மேலவையில் நிதி நிலை அறிக்கையின் மீது ஆற்றிய உரையில் ஒரு பகுதி!

இவற்றையெல்லாம் மறந்து விட்டு, அண்ணா மறைவுக்குப் பிறகு தலைவராக வந்த கருணாநிதி - மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி எனக் கூறியதால் தமிழர்களுடைய நலனுக்கு பாதகம் ஏற்பட்டு விட்டது என்று விவரங்கெட்டத்தனமாகவும், தனது கட்சி ஆட்சியின் நிதிநிலை அறிக்கையில் உள்ள வாசகங்களையே புரிந்துகொள்ளாத நிலையிலும் உளறிக் கொட்டியிருப்பது அவருக்கும், அவரது கூட்டத்தினருக்கும் தி.மு.க. மீதுள்ள காழ்ப்புணர்வுக்கு அடையாளமே தவிர வேறென்ன?

மாநில சுயாட்சி தத்துவத்திற்கு அண்ணா விளக்கமளித்தார். விதையூன்றினார். அண்ணாவுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட நான் அந்தத் தத்துவத்துக்கு வடிவம் அமைத்திட நீதிபதி ராஜமன்னார், துணைவேந்தர் லட்சுமணசாமி முதலியார். நீதிபதி சந்திரா ரெட்டி ஆகிய மூதறிஞர்கள் கொண்ட குழுவை அமைத்தேன். அந்தக் குழுவின் அறிக்கையை தி.மு.க. சார்பில் முரசொலி மாறன், இரா. செழியன் குழுவினர் அறிக்கை அளித்தனர். அந்தக் குழுவில் இதே கே.ஏ. கிருஷ்ணசாமியும் ஒரு உறுப்பினராக இருந்தார். ஒருவேளை அதையும்கூட அவர் மறந்து விட்டாரோ; என்னவோ!

இந்த இரு அறிக்கைகளின் அடிப்படையில் அமைச்சரவை கூடி விவாதித்தது, அதன்பிறகு இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாட்டில்தான், தி.மு.க. ஆட்சியில் நீண்ட விவாதத்துக்குப் பிறகு 1974- ல் மாநில சுயாட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இன்று இந்திய நாடு முழுமையும் அரசியல் அரங்கில் மத்திய மாநில உறவுகள் பற்றியும் - அதிகாரப் பகிர்வு பற்றியும் - மாநில

உரிமைகள் பற்றியும் பேசப்படுவதற்குக் காரணமான முதல் தீபச் சுடரை ஏந்திய பெருமை தி.மு.கழகத்திற்கும் - குறிப்பாக தி.மு.க. ஆட்சிக்கும் உண்டு!

எனவே மாநில சுயாட்சி - அல்லது மாநில தன்னாட்சி எனும் கோரிக்கை, அண்ணாவின் எண்ணத்துக்கு மாறாக, என் விருப்பத்துக்கு ஏற்ப முரட்டுத்தனமாக நாட்டு மக்களின் முன்னால் வைக்கப்பட்ட ஒன்று எனக் கூறும் அமைச்சர், மீண்டும் ஒருமுறை நான் தந்துள்ள இந்த ஆதாரங்களைத் தேடிப்பிடித்துப் படிப்பது நல்லது!

உடன்பிறப்பே! அவர் படிக்கிறாரோ இல்லையோ, நீ மக்களிடம் விளக்கிட இவை பயன்படும் என்பதற்காக இந்தக் கடிதம் எழுதினேன்.

அன்புடன்,

மு. க.

30-09-1992

1955. முகமூடிகளும் - மொட்டைக் கடிதாசுகளும்!

உடன்பிறப்பே,

ஜெயலலிதா மீது 18 கிரிமினல் குற்றச்சாட்டுகளைப் பட்டியலிட்டு, அவர் மீதும், சில அமைச்சர்கள் மீதும், ஒரு சில அய்.ஏ.எஸ். அதிகாரிகள் மீதும் கிரிமினல் வழக்கு தொடருவதற்கு அனுமதி அளிக்குமாறு ஆளுநரிடம் தி.மு.க. சார்பில் விண்ணப்பம் வழங்கிய போதும் - அடுத்த நாளே எக்ஸ்பிரஸ், தினமணி, இந்து ஆகிய ஏடுகள் வரிந்து கட்டிக்கொண்டு, அடடா! எவ்வளவு மொட்டைக் கடிதாசு விஷயங்களை நாள்தோறும் எழுத ஆரம்பித்து விட்டன பார்த்தாயா?

மொட்டைக் கடிதாசு என்றால் நீ எழுதா விட்டாலும் கேள்விப்பட்டிருப்பாயே! பிடிக்காதவர்களைப் பற்றி அவதூறுச் செய்திகளை எழுதி, கையெழுத்தோ, முகவரியோ இல்லாமல் அனுப்புவதற்கு அல்லது வெளியிடுவதற்குப் பெயர்தான் மொட்டைக் கடிதாசு என்பதாகும்.

ஜெயலலிதா மீது ஒரு தும்புதூசி படாமல் காப்பாற்ற வேண்டுமென்பதில் இந்த மூன்று ஏடுகள் மட்டுமல்ல, ஆட்சி மாற்றத்துக்குத் தக்கவாறு நிறத்தை மாற்றிக் கொள்ளும் சில பச்சோந்தி ஏடுகளும்கூட, கண்ணில் விளக்கெண்ணை ஊற்றிக்கொண்டு நிற்கின்றன என்பதை நான் கவனித்துக் கொண்டு தானிருக்கிறேன்.

இமாலய ஊழல்களால் ஜெயலலிதாவின் ஆட்சிக்கு ஏற்பட்டுள்ள சரிவை, நாள்தோறும் நெருக்கிடும் நலிவை - இந்த ஏடுகள் தடுத்து நிறுத்த முடியும் என நினைப்பது, மணலைக் கயிறாகத் திரித்து வானவில்லில் நாணாகக் கட்டுவது போன்ற கற்பனைதான்!

ஆனால் ஒன்று! நீயும், மற்றவர்களும் அவர்களின் உணர்வைப் புரிந்து கொள்ள வேண்டும். மக்கள் மன்றத்தில் இருளின்

கட்டுக் குலைந்து வைகறைக் கருக்கல் தோன்றி, தெளிவுக்கதிர் உதயமாகிக் கொண்டிருப்பதை, இனியும் இந்த ஏடுகள் கருமுகில்களாகி மறைத்துக் கொண்டிருக்க முடியாது! காரிருள்தான் சூரியனை மறைப்பதுண்டோ? எனப் புரட்சிக்கவிஞரின் பாடலுக்கு பதில் அளிப்பது போல கதிரோதயம் ஆகித்தான் தீரும்!

என்ன பரபரப்பு பாரேன்? ஜெயலலிதா மீது ஆதாரபூர்வமான முறையில் நாம் சாட்டியுள்ள குற்றச்சாட்டுகளில் இது சோடை, இது சொத்தை என்று இந்துவினால் இயம்பிட இயலவில்லை! எக்ஸ்பிரஸ் எடுத்துக்கூற வக்கு வகையில்லை! தினமணியும் திகைத்துப் போய் நிற்கிறது! பச்சோந்தி ஏடுகளோ, கிழிந்த படுதாக்களால் மூடப்பார்த்து முடியாமல் முடங்கிக் கிடக்கின்றன!

நாலு கோடி ரூபாய் மதிப்புள்ள டான்சி நிலத்தை இரண்டு கோடி ரூபாய் அளவுக்கு மோசடி செய்து ஜெயலலிதா பங்குதாரராக உள்ள நிறுவனம் வாங்கியுள்ளதை இல்லையென மறுக்க முடியுமா? எக்ஸ்பிரசால்! இந்துவால்! தினமணியால்!

அரசு நிலத்தை அமைச்சர்கள் வாங்கக் கூடாது என்ற நெறிமுறை மீறப்பட்டுள்ளதையோ அரசுப் பொது ஊழியர் Public Servant எவரும் அரசு நிலத்தை வாங்கலாகாது என்ற சட்டம் மீறப்பட்டுள்ளதையோ - இல்லை என நிரூபித்திட இந்துவினால் முடியுமா? எக்ஸ்பிரஸ் தயாரா? தினமணி இந்த அறைகூவலை ஏற்கிறதா?

இந்த நிலத்தை வாங்கியதே தவறு என்கிற போது, மேலும் தவறுக்கு மேல் தவறாக - 52 லட்சம் ரூபாய் ஸ்டாம்பு கட்டணம் செலுத்தியிருக்க வேண்டியதற்கு மாறாக, 26 லட்ச ரூபாய் மட்டுமே செலுத்தி அரசாங்கத்தை மோசடி செய்துள்ளது நியாயந்தான் என இந்த ஏடுகள் வாதிடுகின்றனவா?

18 குற்றச்சாட்டுகளில் இந்த ஒரு குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லட்டுமே! இந்தப் பத்திரிகா தர்மம் பயின்ற ஏடுகள்!

டெண்டர் கோராமலே - பீர் தொழிற்சாலை விற்பனை, நேரு விளையாட்டு அரங்கம் 30 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தப் பணி - இப்படி ஆதாரங்களுடன் தரப்பட்டுள்ள கிரிமினல் மோசடிகளுக்கும், பொது மக்களின் பணம் போயஸ் தோட்டத்துக்குப் பெருவெள்ளமாகப் பாய்ந்தோடி, அதில்

ஜெயலலிதா உல்லாசத் தோணி ஓட்டுவதற்கும் - இந்த ஏடுகள் உடந்தையா எனக் கேட்கத்தானே தோன்றுகிறது!

அதனால்தானே அய்.ஏ.எஸ். அதிகாரிகள் மீது குற்றச்சாட்டு கொடுக்கலாமா? என்ற கேள்வித் திரைக்குள் தங்கள் முகங்களை மறைத்துக் கொண்டு - முகவரியில்லாத, பெயரில்லாத மொட்டைக் கடிதாசுச் செய்திகளைப் பிரசுரித்து வருகின்றன.

முதல் நாள் இந்துவில், அய்.ஏ.எஸ். அதிகாரிகள் அனைவருமே கொதித்துப் போய், தமது சங்கக் கூட்டத்தில் ஆக்ரோஷமாக கர்ச்சனை செய்து, நம்மீது வழக்குத் தொடரப் போவதாக செய்தி வெளியிடப்பட்டது.

அப்படியொரு கூட்டமே நடைபெறவில்லையென்றும் - அய்.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் மீது கொலை வழக்கு போட்ட போதும், மற்றொரு அய்.ஏ.எஸ். அதிகாரி மீது திராவகம் வீசிய போதும் - எச்.எம். பட்டேல் என்ற அய்.சி.எஸ். அதிகாரி மீதே முந்திரா ஊழல் விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டது என்றும் - அதற்காக அவர் பத்திரிகைகளில் நிருபர்களை நாடிப் போகவில்லையென்றும், நான் திருச்சி நிருபர்கள் கூட்டத்தில் அளித்த மறுப்பை இந்து முழுமையாக வெளியிட்டிருந்தது. எக்ஸ்பிரஸ் ஏடு ஏனோதானோவென வெளியிட்டிருந்தது.

அடுத்து சில நாட்களுக்குப் பிறகு அய்.ஏ.எஸ். அதிகாரிகளின் சங்கக் கூட்டம் நடைபெற்றதாக இந்துவும், எக்ஸ்பிரசும் வெளியிட்ட செய்தியில், அய்.ஏ.எஸ். அதிகாரிகள் வழக்கு போடப் போவதில்லை என்பதோடு நிறுத்தாமல் - என்னைப் பற்றி சில அதிகாரிகள் தரக்குறைவாகவும், தந்திரக்கார நரி என்று குறிப்பிட்டதாகவும் கூறியிருந்தன.

அய்.ஏ.எஸ். அதிகாரிகள் வழக்கு போட வேண்டும் என ஆவலுடன் எதிர்பார்த்த எனக்கு அது ஒரு ஏமாற்றம்தான்! அவர்கள் வழக்கு போட்டிருந்தால் 18 குற்றச்சாட்டுகளில் உள்ள கதாபாத்திரங்கள் செய்துள்ள மோசடிகள் நீதிமன்றத்தின் மூலம் அம்பலத்துக்கு வந்திருக்குமல்லவா?

இரண்டாவதாக இந்த ஏடுகள் வெளியிட்ட செய்திகளின்படி, அந்த சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களில் 13 பேரில் மூன்று

பேர்தான் அந்தக் கூட்டத்திற்கே வந்திருக்கிறார்கள். அவர்களும் யார் என்றால் குற்றச்சாட்டுப் பட்டியலில் இருப்பவர்கள்!

இன்றைக்கு மீண்டும் அய்.ஏ.எஸ். அதிகாரிகளின் முகாம் எடுத்துள்ள முடிவு குறித்து, எக்ஸ்பிரஸ் ஏட்டில் முதற்பக்கப் பெட்டிச் செய்தியொன்று!

கருணாநிதி மீது வழக்குப் போடுவதாக இருந்த அய்.ஏ.எஸ். அதிகாரிகள் முடிவு கைவிடப்பட்டது என்ற செய்தியை மறுமுறையும் அறிவித்ததோடு நில்லாத எக்ஸ்பிரஸ் இதழ், அந்த அதிகாரிகள் பேசியதாக சில விமர்சனங்களையும் வெளியிட்டிருக்கிறது.

ஒரு அய்.ஏ.எஸ். அதிகாரி கோபத்துடன் இந்தக் குற்றச்சாட்டுப் பட்டியலில் ஒரு ஆதி திராவிட அதிகாரியோ அல்லது மலைவாழ் மக்கள் வகுப்பு அதிகாரியோ இடம்பெற வில்லையே ஏன்? அவர்களில் ஒரு லஞ்ச ஊழல் அய்.ஏ.எஸ். அதிகாரியை கண்டுபிடிப்பது அவ்வளவு கடினமா? என்று கேட்டாராம்! எக்ஸ்பிரஸ் தெரிவிக்கிறது.

முதலில் அந்த அதிகாரி அல்லது எக்ஸ்பிரஸ் ஏடு ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். தி.மு.க. சார்பில் எடுத்து வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் ஜெயலலிதாவும், அவரது அமைச்சர்களும் நடத்தியுள்ள ஊழல்களைப் பற்றியவை! அந்த இலாக்காக்களுக்கு தொடர்புடையவர்களாகவும், உடந்தையாக இருந்தவர்களுமான அதிகாரிகள் பெயர்கள் மட்டுமே இந்தக் குற்றச்சாட்டுப்பட்டியலில் இடம் பெற முடியும்! பால்ராஜ் என்கிற அய்.ஏ.எஸ். அதிகாரியின் பெயர் புகார்ப்பட்டியலில் இடம் பெற்றிருப்பது - இந்தக் கோபக்காரர் கண்ணில் படாமல் போய்விட்டதே! எப்படி? இத்தனைக்கும் திரு. பால்ராஜ்தான் அய்.ஏ.எஸ். அதிகாரிகள் சங்கத்தின் துணைத்தலைவர் என்று கூறப்படுகிறது.

எக்ஸ்பிரசில் குறிப்பிடப்படும் அந்த அரூப அதிகாரியின் கூற்றுப்படி, எந்த சாதியோ, எந்த வகுப்போ என்றில்லை - அய்.ஏ.எஸ். அதிகாரிகளில் லஞ்ச ஊழல் அதிகாரிகளைக் கண்டுபிடிப்பது கடினமான விஷயமல்ல எனத் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இதற்கு பதிலோ, விளக்கமோ அளிக்கும் பொறுப்பை அய்.ஏ.எஸ். சங்கத்துக்கே விட்டு விடுகிறேன்.

இன்னொரு அதிகாரி சொன்னாராம். கருணாநிதி காட்டிய பாதையில்தான் ஜெயலலிதா செல்கிறார்! ஆனால் ஜெயலலிதா, கருணாநிதியை மிஞ்சிவிட்டார் என்று! யார் அந்த அதிகாரி? அப்படிச் சொன்ன அதிகாரியின் பெயர் என்ன? குறிப்பிடப்படவில்லை!

தொடக்கத்திலிருந்தே அய்.ஏ.எஸ். அதிகாரிகளின் சங்கமென்றும், சங்கத்தினர் என்றும், ஒரு அதிகாரி என்றும்தான் இந்த ஏடுகள் குறிப்பிடுகின்றனவே தவிர, ஒரு செய்தியிலாவது அந்த அய்.ஏ.எஸ். அதிகாரியின் பெயரை வெளியிடவே இல்லை!

கருணாநிதி காட்டிய பாதை என்று கூறிய அந்த கனவான் பெயர் என்ன? உயிரோடு இருக்கிறாரா? இந்த உலகில் பிறந்தாரா? அல்லது எக்ஸ்பிரஸ் எழுத்தாளரின் கற்பனைப் பாத்திரமா? எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். கருணாநிதி காட்டிய பாதை என்ன? இப்போதும் அவரை அழைக்கிறேன். ஆண்மையிருந்தால் ஆதாரத்துடன் நிரூபிக்க நீதிமன்றம் வரட்டுமே!

சேறுவாரி வீசுவதற்காக சர்க்காரியா கமிஷன் என்றும், வழக்கு என்றும் எமர்ஜன்சி நேரத்தில் கொடுத்த தொல்லைகள் நிரூபிக்கப் பட்டனவா? தொடர் நடவடிக்கை எடுப்பதற்கான உண்மையான ஆதாரங்கள், சான்றுகள் காட்டப்பட்டனவா?

குற்றச்சாட்டு பட்டியல் கொடுத்த எம்.ஜி.ஆர். அவர்களே, இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து தனக்கு ஒன்றும் தெரியாது என்றுதானே விசாரணைக் கமிஷன் முன்பு வாக்குமூலம் கொடுத்தார்.

இப்போது நானும், பேராசிரியரும், சாதிக்கும், நாஞ்சிலாரும், முரசொலி மாறனும் ஆளுநருக்கு எழுதியுள்ள விண்ணப்பத்தில் என்ன கூறியிருக்கிறோம்.

விசாரணையின்போது குற்றச்சாட்டுகளை நிரூபிக்க ஆவணங்களையும், சாட்சியங்களையும் வழங்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றல்லவா கூறியிருக்கிறோம்! எங்கள் மீது அப்போது புகார்களைக் கொடுத்துவிட்டு, இவைகளைப் பற்றித் தனக்கு ஒன்றுமே தெரியாது எனக் கைவிரித்துவிட்ட எம்.ஜி.ஆர். அவர்களைப்போல அல்லவே!

அய்.ஏ.எஸ். அதிகாரிகளை தூக்கி வைத்துக் கொண்டு இந்தப் பத்திரிகைகள் ஏன் இப்படிக் குதிக்கின்றன?

தி.மு.கழகம் ஜெயலலிதா மீது அளித்துள்ள ஊழல் குற்றச்சாட்டுகளையும், சுப்பிரமணியம் சுவாமி அவர்கள் புதிதாகக் கொடுத்துள்ள பதவி நீக்கத்துக்குரிய குற்றச்சாட்டையும் திசை திருப்புவதற்காக, இந்த தந்திரத்தைக் கையாளுகிறார்களோ என்றுதான் சந்தேகிக்க வேண்டியுள்ளது! சந்தேகமேயில்லை! உண்மையே அதுதான்!

தி.மு.க. அமைச்சரவை மீது எம்.ஜி.ஆர். அவர்கள் ஜனாதிபதியிடம் புகார் பட்டியல் கொடுத்தபோது வைத்தியலிங்கம் அய்.ஏ.எஸ்., அரிபாஸ்கர் அய்.ஏ.எஸ்., வேதநாராயணன் அய்.ஏ.எஸ். ஆகிய அதிகாரிகள் பெயர்களும் அந்தப் பட்டியலில் இடம் பெற்றதே? அப்போது இந்த அய்.ஏ.எஸ். அதிகாரிகளும் சங்கமும் எங்கே போனார்கள்?

ஒருவேளை ஜனாதிபதியிடம் கொடுத்தால் பரவாயில்லை! கவர்னரிடம் எப்படிக் கொடுக்கலாம் என்று கேட்கிறார்களோ அய்.ஏ.எஸ். அதிகாரிகள்?

இறுதியாக ஒன்று! இந்துவோ, எக்ஸ்பிரசோ, வேறு எந்த ஏடோ - இப்படி முகமூடி போட்டுக்கொண்டு பேட்டிகள் கொடுக்கும் மொட்டைக் கடிதாசு அதிகாரிகளை அரவணைக்க ஆரம்பித்தாலோ - அல்லது அப்படிச் சில அதிகாரிகளை கற்பனையில் சிருஷ்டிக்க ஆரம்பித்தாலோ - அவற்றுக்குப் பதிலாக ஊகத்தின் அடிப்படையில் மொட்டைக் கடிதாசு விஷயங்களை தயாரித்து வெளியிடுவது என்பது எல்லோருக்கும் எளிதான காரியமாகிவிடுமென்பதை எச்சரிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அன்புடன்,

மு. க.

01-10-1992

1956. இன்னும் இந்த ஆட்சி எத்தனை நாளைக்கு?

உடன் பிறப்பே,

இப்பொழுதெல்லாம் மிகப் பரவலாகப் பெரும்பாலான இடங்களில் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது, என்ன சௌக்கியமா? என்று கேட்பது மாறிப்போய் - இன்னும் இந்த ஆட்சி எத்தனை நாளைக்கு? என்று பெருமூச்சுடன் கேட்டுக்கொள்கிற நிலைமை, ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பேற்ற ஓராண்டு காலத்திற்குள்ளேயே வந்து விட்டது.

அனைத்துப் பிரிவு மக்களையும் அல்லலுக்கு ஆளாக்கி அவதியுறச் செய்யும் ஓர் ஆட்சியாக இது உருவெடுக்கும் என்று தெரியாமல் - வீண்பழி தூற்றுதலுக்கும், விஷமப் பிரச்சாரத்துக்கும் தங்கள் பத்திரிகைகளில் அதிகப் பக்கங்களை ஒதுக்கித் தந்து, ஜெயலலிதாவை சிம்மாசனத்தில் உட்கார வைத்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பது என கச்சை கட்டிக்கொண்டு வேலை செய்த பத்திராதிபதிகள், பத்திரிகை ஆசிரியர்கள் கூட நடக்கும் அக்கிரமங்களையும், அநியாயங்களையும் வெளியே சொல்லவும் முடியாமல், சொல்லாமல் இருப்பதால் மனதுக்குள் பொங்கிக் குமுறிக் கொந்தளித்துப் பீறிட்டு வெளிக் கிளம்பத் துடிக்கும் கோபத்தையும், வேதனையையும் அடக்கவும் முடியாமல் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் தீட்டும் கட்டுரைகளால், குறிப்புகளால், கேலிச் சித்திரங்களால் உணர முடிகிறது.

அவர்களுக்கு என்ன ஒரு சங்கடம் என்றால், ஜெயலலிதாவின் ஆட்சி அலங்கோலத்தையும், ஊழல்களையும், அனைத்துப் பிரிவு மக்களுக்கும் ஏற்பட்டுள்ள இன்னல்களையும் பட்டவர்த்தனமாகக் கண்டித்துக் குரல் கொடுப்பதால், அது தி.மு.க.வுக்குத்தானே ஆதாயமாகிவிடும் என யோசிக்கிறார்கள். தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்து விடுமே - அப்படி வந்து விடக் கூடாதே என்றும் எழுதுகிறார்கள்! பேசுகிறார்கள்!

தி.மு.க. என்ன தேளா? பாம்பா? தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தீட்டப்பட்ட திட்டங்கள் - அவை நிறைவேற்றப்பட்ட முறைகள் - அவையெல்லாம் நாளொரு திட்டம் பொழுதொரு சாதனை என்ற தலைப்பில் 1991 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட 125 பக்கங்கள் கொண்ட அரசு செய்தித்துறை ஏட்டிலே மட்டும் எழுத்துக்களாக இல்லை. நாட்டிலும் மக்களிடம் போய்ச்சேர்ந்த சரித்திரத்திற்கு உரியவைகளாகத்தான் இருந்தன.

இருபது ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியின் சாதனைகளைத் தொடர்ந்து மட்டுமல்ல, அவற்றை இரண்டு மடங்கு, மூன்று மடங்கு அதிகமாக விரிவு படுத்திக் காட்டிய பெருமையும் முதல் ஒன்பது ஆண்டுகால தி.மு.க. ஆட்சிக்கு உண்டு என்பது வாய்ச்சொல் அல்ல! ஆதாரபூர்வமானது!

இந்தியாவிலேயே முதன் முதலாகக் குடிசை மாற்று வாரியம் அமைத்து, ஏழைகளுக்கு அடுக்குமாடி வீடு கட்டியது தமிழ்நாட்டில், தி.மு.க. ஆட்சியில்தான்! இதை யாராவது மறுக்கிறார்களா?

ஆதி திராவிட மக்களுக்கு இலவசமாக காங்கிரீட் வீடுகளைக் கட்டுகிற திட்டத்தை அறிவித்து, அதனை உடனடியாக நடைமுறைக்குக்கொண்டு வந்ததும் - இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ்நாட்டில், தி.மு.க. ஆட்சியில்தான்!

30 ஸ்டான்டர்டு ஏக்கரா உச்ச வரம்பு, காங்கிரஸ் ஆட்சியின் ரகசிய முன்னறிவிப்புடன் கொண்டு வரப்பட்டபோது, ஏழை விவசாயிகளுக்கு விநியோகிக்க கடுகளவு நிலம்கூடக் கையகப்படுத்தாத நிலையிருந்ததை மாற்றி, 15 ஸ்டான்டர்டு ஏக்கரா உச்சவரம்புச் சட்டத்தை முன்னறிவிப்புச் செய்யாமல் திடீரெனக் கொண்டு வந்து சுமார் இரண்டு லட்சம் ஏக்கரா நிலத்தை எடுத்து ஏழை விவசாயிகளுக்கு வழங்கியது தி.மு.க. ஆட்சி அல்லவா?

பல லட்சம் விவசாயத் தொழிலாளிகள் பயனடைய குடியிருப்புமனைச் சட்டம் இயற்றியதும் தி.மு.க. ஆட்சி தானே!

மனிதனை வைத்து மனிதன் இழுக்கும் மனிதாபிமானமும், சுயமரியாதையுமற்ற - இழிவை அகற்ற, கைரிக்ஷாக்களை ஒழித்து விட்டு, அந்த ரிக்ஷா தொழிலாளிகளுக்கு சைக்கிள் ரிக்ஷா இலவசமாக வழங்கியது தி.மு.க. ஆட்சிதானே!

மத்திய அரசு ஊழியர்களுக்கு ஒப்பான ஊதியம் மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் என்ற வாக்குறுதியை நடைமுறைப்படுத்தியதும் தி.மு.க. ஆட்சிதானே!

வேலைவாய்ப்புகளிலும் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் பிரதிநிதித்துவத்திலும் பெண்களுக்கு முப்பது சதவிகிதம், ஆதி திராவிடர்களுக்கு 18 சதவிகிதம் நிச்சயம் என நிர்ணயித்தது தி.மு.க. ஆட்சியல்லவா?

கூட்டுறவுச் சங்கங்களில் பெண்களுக்கு 30 சதவிகித பிரதிநிதித்துவம், ஆதிதிராவிடர்க்கு 18 சதவித பிரதிநிதித்துவம் அளித்து கூட்டுறவுச் சங்க முதற்கட்டத் தேர்தலை நடத்தி முடித்தது தி.மு.க. ஆட்சியல்லவா?

பெண்களுக்குப் பெற்றோர் சொத்தில் ஆண்களைப்போல சம உரிமை என்று சட்டம் செய்ததும் தி.மு.க. ஆட்சிதானே!

1977 முதல் 1988 வரையிலான அ.தி.மு.க. ஆட்சியில் அரசின் விலை உயர்ந்த சொத்துக்களும் - நிலங்களும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பு உடையவைகளை, தனியார் வசப்படுத்திக் கொண்டதை மீட்டு அரசுக்கே மீண்டும் உடைமையாக்கிட ஆணை பிறப்பித்தது தி.மு.க. ஆட்சிதான் என்பதை, எவரேனும் மறுத்திட இயலுமோ?

பேருந்துகள் தேசியமயம் என்ற சோஷலிசக் கொள்கையை படிப்படியாக நடைமுறைப்படுத்தி, தனியாருக்குச் சொந்தமாக இருந்த மிகப்பெரும் பஸ் கம்பெனிகளையெல்லாம் - தமிழக அரசின் போக்குவரத்துக் கழகங்களாக ஆக்கிய ஆட்சி தி.மு.க. ஆட்சிதானே!

அரசு ஊழியர், பணிக்காலத்தில் இறந்துவிட்டால் அவர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதியாக முதன் முதலில் பத்தாயிரம் ரூபாய் வழங்கியது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியில்தானே! அதுதானே படிப்படியாகப் பெருகிப்பெருகி, இன்றும் வளர்ந்து கொண்டே இருக்கிற அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்பு நிதியாக திகழ்கிறது என்ற உண்மையை வரலாறு மறைத்து விடுமா?

தொழில்துறையில் எத்தனை முன்னேற்றங்கள்! கழக ஆட்சி மட்டும் 1989-ல் அமைந்திராவிட்டால், வடசென்னை அனல் மின்சார நிலையம் உருவாகியிருக்க முடியுமா?

சாராய சாம்ராஜ்யக் கோட்டையைத் தூள் தூளாக்கியதோடு, தனிப்பட்ட யார் யாருக்கோ ஆண்டுதோறும் பங்கிட்டுப் போய்கொண்டிருந்த நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை, அரசாங்கக் கருவூலத்திற்கு திருப்பியது தி.மு.க. ஆட்சியல்லவா?

காங்கிரஸ் கட்சி, ஆட்சிக்கு வருவதற்கு முன்பே 1933-ல் தமிழ்நாட்டுக்கு மின்சாரம் வந்தது - 1967 வரையில் அதாவது காங்கிரஸ் ஆட்சியிருந்த வரையில், சுமார் இரண்டரை லட்சம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டிருந்தது! 1976-ல் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட போது, அந்த பம்ப் செட்டுகளின் எண்ணிக்கை சுமார் எட்டு லட்சம் என்பது ஆதாரபூர்வமான புள்ளி விபரமாகும்! 1933 முதல் 1967 வரை 34 ஆண்டு காலத்தில் தமிழகத்தில் மொத்தமிருந்த சுமார் இருபதாயிரம் ஆதிதிராவிடர் காலனிகளில் இரண்டாயிரம் காலனிகளுக்கு மட்டுமே மின்விளக்கு - ஆனால் தி.மு.க. ஆட்சியில், 1976-ல் இருபதாயிரம் ஆதி திராவிடர் காலனிகளுக்கும் மின்விளக்கு! ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் மின்விளக்கு வசதி இல்லாத கிராமங்களே இருக்கக்கூடாது எனச் சூளுரை ஏற்று, 1976-ல் ஒரு ஐநூறு கிராமங்கள் தவிர எல்லா கிராமங்களுக்கும் மின்விளக்கு வசதி செய்ததும் கழக ஆட்சிதான்!

உடன்பிறப்பே, எழுதிக் கொண்டேயிருக்கலாம். ஏடு இடம் தராது என்பதால் இத்துடன் - நிறுத்துகிறேன்! உன் கையிலும், உன்போன்ற உடன்பிறப்புகளாம் கழகச் சொற்பொழிவாளர்கள் கையிலும் கழக அரசின் சாதனைப் புத்தகம் இருப்பதால்; விட்டுப் போனதையும் - விரிவாகச் சொல்ல வேண்டியவைகளையும் நீ மக்கள் மன்றத்தில் எடுத்துச் சொல்வாய், சொல்லிக் கொண்டிருக்கிறாய் என்று நம்புகிறேன்!

சாதனைகளையே சொல்லிக் கொண்டிருந்தால் அலுப்பு தட்டுமே - கைதட்டல் வராதே என்பதற்காக கண்டதையும் பேசக்கூடிய நிலைக்கு நீ ஆளாகக் கூடாது என்பது என் வேண்டுகோள்!

அதற்காக மாற்றாருக்கு பதில் கூறவோ, மக்களுக்கு வேறுபல அரசியல் விளக்கங்கள் அளிக்கவோ கூடாது என வாதிடுபவனல்ல நான்!

எத்தனை அணைக்கட்டுகள், எத்தனை நெடிய பாலங்கள், எத்தனை நீர்த்தேக்கங்கள் - எத்தனை புதிய கல்லூரிகள் - ஏழை எளியோர்க்கு எத்தனை எத்தனை சலுகைகள், உதவிகள்!

இந்த ஆட்சிதான் மீண்டும் வந்துவிடக் கூடாது என்றும், அதனால் ஜெயலலிதா ஆட்சியின் எல்லைகடந்த ஊழல்களை, லஞ்சங்களை, நிர்வாகச் சீர்கேடுகளை, ஊதாரிச் செலவுகளை, உருப்படாத திட்டங்களை - விமர்சிப்பதில் அடக்கி வாசிக்க வேண்டுமென்பதில் பத்திரிகை உலகில் ஒருசாராரும், காங்கிரசில் ஒரு சாராரும், இன்னமுங்கூட கண்ணும் கருத்துமாகத்தான் இருக்கிறார்கள்.

நியாய விலைக் கடைகளில் பொது விநியோக முறையில் கொள்ளையோ கொள்ளை - ஒரு கழிவறை கட்டுகிற பணியேயாயினும், 10 பர்சன்ட் கீழேயிருந்து, மேலே அமைச்சர்கள் வரையில் பங்கு போக வேண்டுமெனில், பெரிய திட்ட ஒப்பந்தங்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? பிறகு எப்படி திட்டங்கள் மக்களைப் போய்ச் சேரும்! திட்டங்களின் பயனை எப்படி மக்கள் அனுபவிக்க முடியும்?

நூறு நாட்களில் விலைவாசியைக் குறைப்போம் என அ.தி.மு.க. தலைவர்களும், காங்கிரஸ் தலைவர்களும் அளித்த தேர்தல் வாக்குறுதி - கனவாய், பொய்யாய், கற்பனையாய், பழங்கதையாய் போய், எல்லா விலைகளும் உயர்ந்து கொண்டே போகின்றன! அண்மையில் விவசாயிகளுக்கு அத்யாவசியமான உரத்தின் விலையும் உச்சாணிக் கொப்பில் ஏறிக்கொண்டது! பெட்ரோல், டீசல், சமையல் கிளாஸ் போன்ற விலைகள் தாறுமாறாக உயர்த்தப்பட்டு நடுத்தர மக்களும், ஏழைப் பாட்டாளிகளும் நடுத்தெருப் போராட்டம் நடத்திட முனைந்து விட்டனர்.

ஏற்கெனவே மத்திய அரசு ரயில் கட்டணத்தையும், மாநில அரசு பஸ் கட்டணத்தையும் உயர்த்தி விட்டது -

மாநில அரசு, கழக அரசு காலத்தில் தரப்பட்ட ரேஷன் அரிசி அளவைக் குறைத்தது மட்டுமல்ல. விலையையும் உயர்த்திவிட்டது!

கேட்டால், மதுவிலக்குக் கொள்கையினால் அரசு வருமானம் குறைகிறது என்கிறார்கள்.

எங்கே இருக்கிறது மதுவிலக்குக் கொள்கை - கள்ளச் சாராயம் வெள்ளமாகவன்றோ பெருக்கெடுத்து கோட்டையையே மூழ்கடித்து விடும்போல் தெரிகிறது!

சாராயம் தாராளமாகத் தமிழ்நாட்டில் ஆறாக ஓடுகிறது என ஒரு காங்கிரஸ் உறுப்பினர் சொன்னார். செல்வக்குமார் அவர் பெயர். அமைச்சர்கள் அவரைக் குடைந்தெடுத்து, ஆதாரம் எங்கே என வினாக்கணைகள் தொடுத்து, தமிழ்நாட்டில் மதுவிலக்குக் கொள்கை மகத்தான வெற்றி பெற்றிருப்பதாக நிலைநாட்ட முயற்சித்தார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர் பழனிச்சாமி, தனது தொகுதியில் சாராயக் குட்டி ராஜாக்கள் ஏராளமிருப்பதை எடுத்துரைத்தார் பேரவையில்!

அதற்கு அரசு எடுத்த அருமையான நடவடிக்கை, அவர் வீட்டிலேயே இருபது போலீசாரை விட்டு, இரவு நேரத்தில் - அவர் இல்லாத சமயத்தில் சோதனை என்ற பெயரால் லூட்டி நடத்தியதுதான்! கழுத்துமணி அறுக்கும் கூட்டம் பெருகிவிட்டது - கன்னக் களவுகள் எங்கெங்கும்! - கொலை, கொள்ளை, கோவில் சிலைகளுக்கும், நகைகளுக்கும் ஆபத்து - இவற்றில் எல்லாம் நாட்டம் செலுத்தி சட்டம் அமைதி ஒழுங்க காத்திடுவதற்குக் காவல்துறையைப் பயன்படுத்தாமல் - மாற்றுக் கட்சிகளைப் பழிவாங்குவதற்கும், அடக்குமுறைகளை அவிழ்த்து விடுவதற்கும், பிடிக்காத கட்சித் தொண்டர்களின் வீடுகளில் புகுந்து சூறையாடுவதற்கும் பயன்படுத்துகிற ஓர் அரசு நடைபெறுகிறது!

வாச்சாத்தி எனுமிடத்தில் நேரிலேயே சென்று விசாரித்தறிந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர், ஒரு நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் நல்லசிவன் அவர்கள் அறிக்கை விடுகிறார் என்றால், அதற்கு உரிய விளக்கமளிக்க முன்வராமல் அவரை இழிவாகவும், மரியாதைக் குறைவாகவும் ஏசுகிறார்கள் அமைச்சாகள்.

தி.மு. கழகச் சார்பில் பட்டிமன்றம் நடத்தினால் தடை! கைது!

சகட்டுமேனிக்கு எல்லாவற்றையும் தேச விரோதம் எனக் கூறிக்கொண்டு, தமிழின வளர்ச்சி அல்லது தமிழின வீழ்ச்சி எனக் குறிப்பிட்டாலே தடைபோடு எனக் குதிக்கும் தர்பார்!

இவ்வளவுக்கு மத்தியில் கோடி கோடியாகக் கொள்ளையடித்துக் கொண்டு - அரசியல் வட்டத்தில், அதிகாரிகள் பகுதியில் - உள்ள ஒரு காக்காய்க் கூட்டத்தைக் கையில்

வைத்துக் கொண்டு, கட்டுங்கள் கட் அவுட்டை! அடுக்கடுக்காக கட்டுங்கள்! ஆகாயத்தைத் தொடுமளவுக்குக் கட்டுங்கள்! அம்பாளின் அவதாரம் எனப் பாடுங்கள்! உங்களாலும் முடிந்த வரையில் ஊழலில் ஒரு கைபாருங்கள்! என்று உசுப்பி விட்டுக் கொண்டு, ஜெயலலிதா மிச்சமிருக்கும் ஆட்சிக் காலத்தை ஓட்ட நினைக்கிறார்!

மக்கள் நிலையோ அவ்வளவுக்குத் தாங்குவதாகத் தெரியவில்லை!

முட்டுக் கொடுப்போர் என்னதான் தமது முழு வலிவையும் பயன்படுத்தி முட்டுக் கொடுத்தாலும் - அவர்களது மூட்டுகளுக்குத்தான் கேடே தவிர - எண்ணெய்ச் செலவுதான் மிச்சம்! பிள்ளை பிழைக்காது! என்ற பழமொழியைப் போல, இந்த நலிந்து நொந்துபோன ஆட்சி நிலைப்பது என்பது கடினமே! கனவே!

உடன்பிறப்பே, கட்டுமரம் முக்கால்பகுதி கடலிலும், கால்பகுதி மட்டுமே கரையிலும் இருக்கிறது!

ஒரு தள்ளு தள்ளினால் போதும் - கடலில் முழுமையாக மிதக்கும்!

வேகமாகத் தள்ளுவதில்தான் உறுதியும், ஒற்றுமையும் உன் போன்றோர்க்கு வேண்டும்!

அன்புடன்,

மு. க.

02-10-1992



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

முதற்பதிப்பு 2022